JL 1886
Qr6 m241,M86
M86
161281

# நற்போதகம்.

க. ஜனுவரிமீ. ௲அஅக௬.
1886

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணுக்கன்.

மத்தேயு எழுதுகிற வாக்கியத்தில்: "நான் எடுத்து" என்பதற்குப் பதிலாக, "அவர்கள் எடுத்து" என்றும்; "நான் கொடுத்தேன்" என்பதற்குப் பதிலாக, "அவர்கள் கொடுத்தார்கள்" என்றும் கண்டிருக்கிறது. பொருள் விளங்கும்படியாகத்தான் இப்படி மாற்றிக்கொண்டார். மூல வாக்கியத்தின் பொதுவான அர்த்தமென்னவென்றால், தேவாலய உபயோகத்துக்காக மண்பாண்டங்கள் செய்யும்படி குயவனிடத்தில் கொடுத்த கிரயத்தொகை மிகவும் ஈனக்கிரயம் என்பதுதான். குயவன் மண்பாண்டம் வனைகிற இடத்துக்குச் சமீபமாய்த்தான் குடியிருப்பான். அந்த இடம் நாம் மேலே சொன்னபடி, அக்கெல்தமாவில் அல்லது அதற்குச் சமீபத்திலிருந்தது. இப்படியாக மூலவாக்கியங்களுக்கும், மத்தேயுவின் வாக்கியங்களுக்குமிருக்கிற ஒற்றுமைகளாவன: இரண்டிலும் ஒரே கிரயம்; கிரயத்துக்குச் சம்பந்தப்பட்ட ஆட்கள் ஒரே ஆட்கள்; கிரயத்தைக் கொடுத்தவர்கள் ஜனங்களின் பிரதிநிதிகள்; தீர்க்கதரிசிக்காக அந்தக் கிரயம் கொடுக்கப்பட்டது; விசேஷமான கருத்துப்படி தீர்க்கதரிசி, யெகோவாவின் ஸ்தானுபதியாயிருந்தார். அந்தக் கிரயம் தேவாலயத்தில் எறிந்துவிடப்பட்டது. அந்தக் கிரயம் கொடுக்கப்பட்ட நோக்கமும், உபயோகிக்கப்பட்ட வகையுமெல்லாம் ஒற்றுமையாய்த்தானிருக்கிறது. மூலவாக்கியங்களில் மிகவும் மறைவாயிருந்த கருத்தைப் பரிசுத்தஆவியினால் போதிக்கப்பட்ட சுவிசேஷகன் வெளிப்படுத்தியிருக்கிறான்.

**426.** யூதர்கள் ஸ்தேவானைப் பலவந்தமாய்க் கொலைசெய்தார்களே. கிறிஸ்துநாதரை அப்படிச்செய்யாமல் ஏன் ரோமஅதிபதியிடத்திற்குக் கொண்டுபோய் அவனுடைய சம்மதத்தின்பேரில் கொலைசெய்தார்கள்?

ஏனென்றால் அநேகம் யூதர்கள் கர்த்தா பட்சத்திலிருந்தார்கள். அவர் எருசலேமுக்குப் பவனிபோனபோது, திரளான யூதர்கள் ஆரவாரத்துடன்

அவருக்கு ஓசன்னா பாடி, அவரைப்பற்றி நல்லெண்ணமுடையவர்களாயிருந்தார்கள். ஆதலால் ரோமஅதிபதிக்குத் தெரியாமல் அவரைக் கொலைசெய்தால், பொதுவான யூதர் எப்படியும் பெரிய கலகஞ்செய்வார்கள். ஆகையால் அவரை ரகசியமாய்க் கொலைசெய்வது கூடாதகாரியமாயிருந்தது.

கர்த்தரைக் கொலைசெய்ய இப்பொழுது பிரதானஆசாரியருக்கு இரண்டு வழிவகைகளிருந்தன. (1) சனகிரீம் சங்கத்தில் தாங்கள் செய்த தீர்ப்பை ரோமஅதிபதி உறுதிப்படுத்தும்படி கேட்கலாம். (2) கர்த்தர் ரோமசட்டத்தை மீறினதாக அவர்மேல் குற்றஞ்சாட்டி, ஒழுங்குப்படி பிராதை நடத்தலாம். இந்த இரண்டில் முதல்வகையை விட்டுவிட்டார்கள். ஏனென்றால் யூதர்கள் சனகிரீம் சங்கத்தில் செய்த தீர்ப்பு, யூதருடைய சட்டத்திற்கே விரோதமாயிருந்தது (கேள்வி 389). அந்தத் தீர்ப்பை ரோமஅதிபதி பார்வையிட்டால், அது நியாயவிரோதமென்று லேசாய்க் கண்டுபிடித்துக்கொள்ளுவான். மேலும் மார்க்காசாரக் குற்றத்துக்காக ரோமஅதிபதி மரணதண்டனை செய்யமாட்டான். ஆகையினாலேதான் இரண்டாம் வகையை அநுசரித்து, ரோமசட்டத்துக்கு விரோதமாக ராஜதுரோகமென்னும் குற்றத்தை ஏற்படுத்தி, அவ்வகையாய்க் காரியத்தை முடிந்துக்கொண்டார்கள்.

**427**. ஏரோது அந்திப்பாஸ் (லூக் 3: 1) முன்புக்கு நடந்த விசாரணையைப்பற்றிச் சொல்லு?

இந்தச் சங்கதி: மத் 27: 14க்கும் 15க்கும் இடையில் வரவேண்டும். 14ல் "மிகவும் ஆச்சரியப்பட்டான்" என்ற வார்த்தைகளோடு விசாரணையை நிறுத்தி, "கலிலேயாநாடு தொடங்கி" (லூக் 23: 5) என்று பிராது சொல்லப்பட்டதால், அதைப் பிடித்துக்கொண்டு ஏரோதினிடத்திற்கு அனுப்பினான். இப்பொழுது ஏரோது சயிஸ்ற்றஸ் (Xystus)க்குப் பக்கத்திலிருந்த பழய அஸ்மோனியர் அரமனையில் வந்திருந்தான். வா 17ல் "கூடியிருக்கையில்" என்ற வார்த்தைகள்: இதற்கு முந்திக் கொஞ்சநேரம் கூட்டங் கலைந்திருந்ததென்பதைக் காட்டுகின்றன (லூக் 23: 13 வாசி). இவன் முன்புக்கு நடந்த விசாரணை, ஒழுங்குப்படி நடந்த தேசாசார விசாரணையல்லாததினாலே, முதல் இரண்டு சுவிசேஷகரும் அதைப்பற்றி எழுதவில்லை. பரி. லூக்கா மாத்திரம் எழுதுகிறார். இவனைப்பற்றிய சங்கதிகளை அவர் அடிக்கடி எழுதுவதால், இந்தச் சங்கதியையும் எழுதுகிறார் (லூக் 23: 5—12; கேள்வி 407).

இப்பொழுது பிலாத்து ஒரு சங்கடத்தில் அகப்பட்டிருக்கிறான். என்னவென்றால் யூதரை விசனப்படுத்தவும் அவனுக்கு மனமில்லை; குற்ற

161281



மில்லாதவரைக் (வா 4) கொல்லவும் அவனுக்கு மனமில்லை. ஆகையால் இப்பொழுது தன்மேலிருக்கிற பொறுப்பை (ஏரோது கலிலேயாவுக்கு அதிகாரியாயிருந்தபடியினாலே) அவன்மேல் போட்டுவிட்டு, தன்னைக் கடத்திக்கொள்ளப் பார்த்தான். அத்தோடுகூட கர்த்தரை அவனிடத்தில் அனுப்புவதால், அவனோடு சமாதானமாகும்படி நினைத்ததாகவுந் தோன்றும் (வா 12). இரண்டு பேருடைய அதிகாரவரம்பைப்பற்றி இருவருக்கும் விரோதமுண்டாயிருக்கலாம் (லூக் 13: 1).

மத் 27: 15முதல் 26வரை, ஏரோது கர்த்தரைத் திரும்ப பிலாத்தினிடத்திற்கு அனுப்பினபிற்பாடு நடந்த சம்பவங்கள் அடங்கியிருக்கின்றன.

**428** பரபாசின் சரித்திரமென்ன?

பரி. மத்தேயு சங்கதிகளைச் சுருக்கமாய் எழுதுகிற வழக்கத்தின்படி, அவனைப் பேர்போன குற்றவாளி என்று மாத்திரம் சொல்லுகிறார். பரி. மாற்கு: "கலகம்பண்ணி அந்தக் கலகத்தில் கொலைசெய்து அதற்காகக் காவல்பண்ணப்பட்டவர்களில் ஒருவன்" என்கிறார் (15: 7); இதில் ஒரு விசேஷித்த கலகத்தைக் குறிப்பிடுகிறார். அந்தக் கலகத்தில் சம்பந்தப்பட்ட மற்றக் கலகக்காரரோடுகூட இவனுங் காவலில் வைக்கப்பட்டிருந்தான். பரி. லூக்கா புறஜாதியாருக்கு எழுதுவதால்; "ஒரு கலகத்தினிமித்தமும், கொலைபாதகத்தினிமித்தமும் காவலில் வைக்கப்பட்டிருந்தான்" (23: 19) என்று பொதுவுரையாய்ச் சொல்லுகிறார். பரி. யோவான்: "அவன் கள்ளனாயிருந்தான்" என்று வற்புறுத்திச்சொல்லுகிறார். அந்தக் காலத்தில், கலகங்கள் அதிகம். எருசலேமையடுத்த பக்கங்கள் கள்ளர்கூட்டங்களால் நிறைந்திருந்தன. இவர்கள் அடிக்கடி கூட்டக்கொள்ளைசெய்வது வழக்கம். ரோமருடைய ஆளுகையின் காலத்தில் இவர்கள் கூட்டம் மிகுதி. வேறெந்தக் காலத்திலும் அத்தனை திரளாயிருந்ததில்லை. இவர்களுக்குத் தலைவர்களாயிருந்தவர்கள், எல்லாருக்கும் தெரிந்தவர்களும் பிரபலமானவர்களுமாயிருந்தார்கள். யோசேப்புஸ் இவர்களுக்குக் குறிப்பான பேர் சொல்லுகிறார். அவர்களுடைய பேர்கள், ஒரு குடும்பப் பேர்கள்போல சாதாரணமாய் எல்லாருக்கும் பழக்கமான பேர்களாயிருந்தன. அவர்களில் ஹன்னிபால் (Hannibal), தோலமி (Ptolemy), அமராம் (Amaram), எலியேசர் (Eliezer) பிரபலமானவர்கள். ஆனால் பரபாசே மிகவும் பிரபலமானவன். செலோத்தியரும் (Zealots), இன்னும் சில கூட்டத்தாரும் இவனுக்குத் துணையாயிருந்திருக்கலாம்.

சில பிரதிகளில் இவனுக்கு ஏசு என்னப்பட்ட பரபாஸ் என்று பேரிடப்பட்டிருக்கிறது. இது சரியென்றால், பிலாத்து யூதரைப் பார்த்து, பரபாஸ் என்னப்பட்ட ஏசுவையோ, கிறிஸ்து என்னப்பட்ட ஏசுவையோ என்று கேட்டிருக்கவேண்டும்.

**429.** பிலாத்துமனைவியின் சொப்பனத்தைப்பற்றி என்ன தெரியும்?

இந்த இடைப்பிறவரலாற்றைப்பற்றி பரி. மத்தேயு மாத்திரம் எழுதுகிறார். இது யோவான் 18: 29ஐ உறுதிப்படுத்துகிறது. அந்தக் காலத்தில் ரோம தேசாதிபதிகள் தாங்கள் போகுமிடங்களுக்குத் தங்கள் மனைவிகளைக் கூடக் கூட்டிக்கொண்டுபோகலாமென்று சட்டமிருந்தது. ஆனால் அகுஸ்துவும், திபேரியசும் இந்த வழக்கத்துக்கு விரோதமானசட்டம் பிறப்பித்தார்கள். ஸ்திரீகள் இளக்கநெஞ்சுடையவர்களானதால், நீதிக்குப் பிசகிப் பரிதாபத்தினால் குற்றவாளிகளுக்குத் தயவுபாராட்டுவார்களென்றெண்ணி, அப்படிப்பட்ட உத்தரவுசெய்தார்கள். சில வருஷங்களுக்குப் பின் நடந்த ஒரு திருஷ்டாந்தம் தல்மூத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, செசரியாவிலுள்ள ஒரு பிரபுஸ்திரீ: ஜூலியன் (Julian), பாப்பஸ் (Pappus), என்ற இரண்டு யூதருடைய ஜீவனைத் தப்புவித்தாளாம். ஒரு பழைய பாரம்பரைப்படி, பிலாத்துமனைவியின் பேர், புராக்லா (Procla), அல்லது கிளவுதியாபுராக்கியுலா (Claudia Procula). இந்தப் பேரைப் பார்க்கும்போது, இவள் திபேரியசின் வம்சமான கிளவுதியுவம்சத்தைச் சேர்ந்த பெருமாட்டியாயிருந்தாள் என்று நினைக்கலாம். ஆனாலும் முன் ராயனுக்கு அடிமையாயிருந்து பின்பு சுயாதீனமடைந்த ஒருவனுடைய மகளாயிருந்தாளென்றும், அவளுடைய புருஷனும் அதே அந்தஸ்துடையவனாயிருந்தானென்றும் பெருமபாலும் நினைக்கப்படுகிறது. கிரேக்கச் சபையார், அவளைப் பரிசுத்தவான்கள் வகுப்பில் சேர்த்திருக்கிறார்கள். "பிலாத்துவின் நடபடிகள்" என்று ஒரு கட்டுக்கதை உண்டு. அதில் அவன் மனைவி பக்தியுள்ள ஸ்திரீ அல்லது யூதமார்க்கப் புரோசலூத்தாயிருந்தாள் என்று சொல்லியிருக்கிறது. ரோமஸ்திரீகள் யூதர்களுக்கு அடிக்கடி பிரியங் காட்டிவந்ததினாலேதான் அப்படிச் சொல்லியிருக்கிறது. சில வருஷங்களுக்குப்பின் உயர்ந்த அந்தஸ்துள்ள சிலர் கிறிஸ்தவர்களாயிருந்தார்கள். பிலாத்துமனைவி கண்ட சொப்பனம் இயல்பானதாயிருக்கலாம். ஆனால் ஓரிஜன், அதனேசியஸ், இல்லரி, கிறிசொஸ்தம், அகுஸ்தீன், தியோபிலாக்ட் முதலான ஆதிக்கிறிஸ்தவர்கள், அது தெய்வச்செயலாலுண்டானதென்று எப்போதும் எண்ணிவந்தார்கள். கிறிஸ்தவர்களில் அநேகம் பேர், தேவன் தம்முடைய சித்தத்தை அந்தச் சொப்பனத்தின் மூலமாய்த் தெரியப்படுத்தினாரென்று நம்பினார்கள். கர்த்தர் சிலுவையிலறையப்படுவதைத் தடுக்கும்படி இது சாத்தானாலுண்டானதென்று இன்னசி முதலான சிலர் சொன்னது, மூடப்பக்தியான அபிப்பிராயந்தான். இந்தப் பிந்தின அபிப்பிராயம் யூதருக்குள்ளுமிருந்ததென்று மேலே சொன்ன பிலாத்துவின் நடபடிகளில் காட்டியிருக்கிறது. பிலாத்து இந்தச் சொப்பனத்தை அலட்சியம்செய்ததாய்த் தோன்றவில்லை ஜூலியஸ் சீசர்முதலாய் தான் சாகப்போகிற நாளில், தன் பெண்சாதியின் சொப்பனத்தால் தடைப்பட்டு வீட்டிலிருக்கப் பார்த்தான். டெசிமஸ்புருட்டஸ் (Decimus Brutus) சொன்ன ஆலோசனையைக் கேட்டுத்தான் வெளியே புறப்பட்டான்.



**430.** 27: 24ன் கருத்தென்ன?

கர்த்தருக்கு மரணத்தீர்ப்பிடுவது, நியாயத்திற்கும் சட்டத்துக்கும் விரோதமென்று, பிலாத்து தன் கைகளைக் கழுவினதால் ரூபகாரப்படுத்தினான். ஆகையால் குற்றமில்லாத இந்த ரத்தத்தைச் சிந்துகிற பொறுப்பை, அவன் யூதர்மேல் போட்டுவிட்டுத், தான் அந்தப் பழிக்கு நீங்கலானவனென்று சொல்லுகிறான். யூதர்களோ, அந்தப் பொறுப்பை (உபா 22: 6, 7ஐ ஆதாரமாய் வைத்து) தங்கள்மேல் எற்றுக்கொண்டார்கள்! அஞ்ஞான அதிபதி: ஒருவனுக்கு மரணத்தீர்ப்பைச் சொல்லுமுன், அந்த இரத்தப்பழிக்குத் தான் நீங்கலானவனென்று காட்டும்படி, இப்படித் தன் கைகளைக் கழுவுவது வழக்கமாயிருந்தது. பெரும்பாலும் அவன் கிழக்கு முகமாய்த் திரும்பி அல்லது சூரியனைச் சாட்சியாகக் கூப்பிட்டுக்கொண்டு இப்படிச்செய்வான்.

---

**431.** இப்போ கொல்கொதா பாதைக்குப் புறப்படக்கடவோம். கொல்கொதாப் பாதையின் சரித்திரமென்ன?

தற்காலத்தில் பரிசுத்த கல்லறைக்கோவில் இருக்கிற இடத்தில் கொல்கொதா இருந்தது. கொல்கொதா என்பதற்கும், கல்வாரி அல்லது கல்வாரியா என்பதற்கும் அர்த்தம் ஒன்றுதான். கல்வா (Calva) என்பதற்கு வெறுமண்டையோடு என்றர்த்தம். சிலுவையில் அறையப்பட்டவர்களுடைய மண்டையோடுகள் அவ்விடத்தில் கிடந்ததினாலே, அந்த இடத்துக்கு இந்தப் பேர் வந்ததென்று லூதர் (Luther) முதலான சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் நகரத்துக்குச் சமீபமாய் மண்டையோடுகள் அங்குமிங்கும் சிதறிக்கிடந்ததென்று நினைக்க ஏதுவில்லை. அந்த இடம், மண்டையோடுபோல் எப்பக்கமும் சரிவாயும், நடுமையத்தில் உயரமாயும், வடிவத்தில் மண்டையோடுபோல குவிந்திருந்ததினாலே இந்தப் பேர் வந்ததென்று பெரும்பாலும் தற்காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற வியாக்கியானம் சரியான வியாக்கியானமாம்.

அந்தோனியாக் கோட்டையிலிருந்து கொல்கொதாவுக்கு, டாலரோசா (Dolorosa) வழியே கிழமேலாய் மேற்கை நோக்கிப்போகவேண்டும். பிலாத்து இப்பொழுது யோப்பா (Jaffa) வாசலுக்குச் சமீபமாயிருந்த அரமனையில் வாசம்பண்ணினானென்றால், அந்த வாசலிலிருந்து 500 அல்லது 600 கெஜதூரம் கிழக்குமுகமாய் கென்னெத் (Gennath) வாசலுக்

குப் போய், பிற்பாடு மதிலுக்கு வெளியே அதற்கு இரட்டிப்புத் தூரம் வடக்கை நோக்கிச்சென்று, கொல்கொதாவில் சேரவேண்டும். ஆக அரமனைக்கும், கொல்கொதாவுக்கும் இடையிலுள்ள தூரம், ஒரு மைலில் மூன்றிலொரு பங்குக்குள்ளாயிருக்கும். அந்தோனியாக் கோட்டைக்கும் (கேள்வி 395), கொல்கொதாவுக்கும் இடையிலுள்ள தூரமும் அவ்வளவுதான். அந்தோனியாக் கோட்டையிலிருந்து நகரவாசல்வரையும் கர்த்தர் தமது சிலுவையைத் தாமே சுமந்துகொண்டுபோனார். (இந்தக் கொடிய வழக்கத்தைக் கொஞ்சக்காலத்துக்குமுன் ரோமர் ஏற்படுத்தினார்கள்) சிலுவையின்மேல் போடப்பட்ட மேல்விலாசம், அவருக்கு முன்னே போனது. இந்த ஊர்கோலத்துக்கு, நூற்றுக்கதிபதி முதலாளியாயிருந்தான். ஆக்கினையை நிறைவேற்றுகிற பொறுப்புதார் இவன்தான். ஆக்கினையை நிறைவேற்றுகிறவர்கள், போர்ச்சேவகர். ஒரு சிலுவைக்கு நாலு போர்ச்சேவகரிருப்பார்கள். ஆகவே இப்பொழுது 12 போர்ச்சேவகரிருந்தார்கள். கிறிஸ்துநாதரைச் சிலுவையில் அறையவேண்டுமென்று வாதாடின திரளான யூதரும் கூடப்போனார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இவர்களில் பிரதானஆசாரியரும, சனகிரீம சங்கத்தைச் சேர்ந்தவர்களும் முன்னுக்கு நின்றார்கள். (இவர்களைப்பற்றிப் பினனுக வா 41ல் வாசிக்கிறோம்). இந்த நடபடிகளைப் பரிதாபத்துடன் பார்த்துக்கொண்டிருந்த சிலரும் கூடப் போனார்கள் (லூக் 23: 27).

**432** மத் 27: 32. மாற் 15: 20. "வெளியே" என்றால் அர்த்தமென்ன?

பிலாத்து இப்பொழுதிருந்த கோட்டைக்கு அல்லது அரமனைக்கு வெளியே என்றர்த்தமில்லை. ஏனென்றால் "நாட்டிலிருந்து சீமோன் அவ்வழியே வருகையில்" என்று சொல்லியிருக்கிறது. நமது கர்த்தர் "நகரவாசலுக்குப் புறம்பே" வருகிறவரையும் (எபி 13: 12), தமது சிலுவையைத் தாமே சுமந்துகொண்டுபோனார்.

**433** மத் 27: 32. மாற் 15: 21. சிரேனேஊர் சீமோன் சரித்திரமென்ன?

சிரேனேஊரில் அநேகம் யூதர்கள் வாசம்பண்ணி வந்தார்கள். சீமோன் அவ்விடத்திலுள்ள ஒரு வியாபாரியாயிருந்தானென்று தோன்றும். இவன் இப்பொழுது பண்டிகைக்கு வந்ததில், வழக்கப்படி பக்கத்து நாட்டில் இராத்தங்கினான். அவன் குமாரருடைய பேரை மாற்கு சொல்வதினாலே, மாற்கு தன் சுவிசேஷத்தை எழுதின இடமாகிய ரோமாபுரியில் அவர்களோடு பழக்கமானவனாயிருந்தானென்று நினைக்கலாம். ரூபுவின் பேரை பரி. பவுல் சொல்லுகிறார் (ரோ 16: 13). ரூபும் அவன் தாயும், அப்போஸ்தலனுக்கு மிகவும் பிரியமானவர்களாயிருந்தார்கள். ரூபு என்ற பேருடைய ஒருவன் பேர்போன இரத்தச்சாட்சியானதாகப் போலிக்கார்ப் சொல்லு



கிறார். சீமோன் என்பவன் கூடியமட்டும் பணக்காரனாயிருந்தானென்றும், பரி. மாற்குக்கு அறிமுகமானவனாயிருந்தானென்றும் அநுமானிக்கலாம். எருசலேமில் அல்லது ரோமாபுரியில் மாற்கு அவனைக் கண்டுபழகியிருக்கலாம். மேற்காட்டிய சங்கதிகளை வைத்துக்கொண்டு, பரி. மாற்கு அவனைக் கிறிஸ்தவனாக்கினானென்று ஒரிஜன் உத்தேசிக்கிறார். இயேசுவின் பிறகாலே சிலுவையைச் சுமக்கும்படி பலவந்தம்செய்தார்களே (லூக் 23: 26); அந்தச் சிலுவையை அவன் தன் இருதயத்திலேயும் வைத்துக்கொண்டான். இந்தச் செய்கை அவனுக்கு எக்காலமும் நற்கீர்த்தியாயிற்று.

நகரவாசலுக்கு வெளியே வந்தவுடன் சிலுவையின் பாரத்தைக் கர்த்தர் தாங்கமாட்டாமல் விழுந்துவிட்டாரென்பது தெளிவாம். இதினாலேதான் பரி. மாற்கு இதைப்பற்றிய வெவ்வேறே வார்த்தைகளை வழங்குகிறார். மாற்கு 15: 22ல் "கொண்டுபோய்" என்ற மூலவார்த்தையைத் திட்டமாய் மொழிபெயர்த்தால், "சுமந்துகொண்டுபோய்" எனறர்த்தங்கொள்ளும். இந்தக் கிரேக்வார்த்தை, நடத்திக்கொண்டுபோய் என்ற வார்த்தைக்குக் கிட்டத்தட்டச் சரியானதுதான். ஆனால் இந்தச் சுவிசேஷத்திலுள்ள மற்ற வாக்கியங்களில், பலவீனத்தை அல்லது கொண்டுபோகிற மனுஷன் மேல் சார்ந்துகொள்ளுதலைக் குறிக்கும்படி இந்த வார்த்தை பெரும்பாலும் வழங்கியிருக்கிறது. விசேஷமாய் பரி. மாற்கு 15: 20ல் "வெளியே நடத்திக்கொண்டுபோனார்கள்" ("They led him out") என்ற வார்த்தைகளை வழங்கியிருக்க, 22ல் "அவரைச் சுமந்துகொண்டுபோனார்கள்" ("They bear him") என்று நடையை மாற்றி வித்தியாசமாய் வழங்கியிருப்பதால் தெளிவாகிறது.

**434.** மத் 27: 34ல் கவனிக்கத்தக்கதென்ன?

வேதனை தோன்றாமலிருக்கத்தக்கதாகப் புத்தியை மந்தப்படுத்தும்படி கசப்புக்கலந்த காடியைக் கொடுப்பார்கள். இப்படிச்செய்யும்படி போர்ச்சேவகருக்குப் பரிதானம்கொடுப்பது வழக்கம். ஆனால் இந்தச் சமயத்தில் பிலாத்துமனைவியின் அபிப்பிராயத்தையும், தங்கள் தலைவனான நூற்றுக்கதிபதியின் நல்லெண்ணத்தையும் பார்த்து, அதைக் கர்த்தருக்குக் கொடுத்தார்கள். ஆனால் கலக்கமும் குளப்பமுமற்ற ஸ்திரமான மனதோடு மரணத்தை அடைய கர்த்தர் விருப்பமுற்றிருந்தாராதலால், அவர் அதைக் குடிக்கவில்லை. அவருடைய ஜீவனை மனதாரச் சுகந்தவாசனையான பலியாய் ஒப்புக்கொடுக்கச் சித்தமானார்.

**435.** சிலுவைப்பாடுகளில் ஒன்றை நம்முடைய கர்த்தருக்குச் செய்யாமல் சத்துருக்கள் விட்டுவிட்டார்கள். அதென்ன?

சிலவேளை நடந்துவந்தபடி, அவருடைய முகத்துக்கு முக்காடிடவில்லை, அவருடைய வாயைக் கட்டவுமில்லை. இப்படிச்செய்யாதது,

அவர்கள் பரிதாபப்பட்டதினாலல்ல. அவரைக் கொலைசெய்தவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்த்துக்கொண்டு, அவருடைய மரணவியாகுலத்தைக் குறித்துச் சாட்சியிடும்படி நோக்கமாயிருந்ததினாலேதான் விட்டுவிட்டார்கள்.

**436.** கர்த்தருடைய பாடுகளின் கடைசிக் காட்சியைப்பற்றிய விபரங்களை பரி. யோவான் மாத்திரம் எழுதுகிறார். அவைகளெவை?

1. மேல்விலாசத்தைப்பற்றி வீம்புபாராட்டினது (யோ 19: 20—22).
2. கிறிஸ்துவின் தாயார் (25—27).
3. இரண்டு வார்த்தைகள் (28—30).
4. விலாவிற் குத்துண்டது (31—37).
5. நிக்கொதேமுவின் ஊழியம் (39).
6. சில சமயங்களில் யோவான் கண்கண்ட சாட்சி (26, 35).

**437.** இந்தச் சரித்திரத்தை நாலு பிரிவாக வகுக்கலாம். அவைகளெவை?

I. சிலுவையிலறைதல் (17—22).
II. பார்த்துக்கொண்டிருந்த இரண்டு கூட்டத்தார் (23—27).
III. வேதவாக்கியம் நிறைவேறுதல் (28—30).
IV. இரண்டு மன்றாட்டுகள் (31—42).

**438.** இவற்றின்பேரில் பொதுவாய்க் கவனிக்கவேண்டிய மூன்று குறிப்புகளைச் சொல்லு?

1. பழயஉடன்படிக்கையின் தீர்க்கதரிசனங்களும் முன்னடையாளங்களும் (வ 24, 28, 36, 37) நிறைவேறினதைப்பற்றியும்;

2. கர்த்தர் பாடுபடும்போது அவர் காட்டின மகத்துவத்தைப்பற்றியும்;

3. தேவனுடைய சித்தம் என்ன உண்டோ அதையெல்லாம் கிறிஸ்துநாதர் நிறைவேற்றுகிற காட்சியைப்பற்றியும் பரி. யோவான் அதிகமாய் விவரித்து எழுதுகிறார்.

பஸ்காஆட்டுக்குட்டி கொல்லப்பட்ட வகையிலும், பொரிக்கப்பட்ட வகையிலும் கிறிஸ்துநாதருக்கு விசேஷித்த முன்குறிப்பாயிருந்ததென்பதை பரி. யோவான் விவரித்து அழுத்திப்பேசுகிறார் (வ 29).

---



# II. நாளாகமம்.

(தொடர்ச்சி.)

## 1. ரெகொபெயாம். (ஜனங்களை விடுதலையாக்குகிறவன்.)

சாலொமோன் இராஜா இறந்தபின்பு அவருடைய மகன் ரெகொபெயாம் 41 வயதில் இராஜாவானான். இஸ்ரவேலரில் முதல் இராஜா தோன்றின காலமுதல் 120வருஷவரையும் ஒரே இராஜ்யமாயிருக்க சாலொமோனின் இராஜாவுடைய பாவங்களினால் அவன் காலத்திலேயே இராஜ்யம் இரண்டாகப் பிரிந்துபோவதை தேவன் முன்னறக் காட்டியிருந்தார். அந்தப்படி பிரிந்துபோன யூத இராஜ்யத்துக்கு கி. மு. 975ல் ரெகொபெயாம் முதல் இராஜாவானார். 2 நாளா. 10 அதி.

எப்போதும் கசப்பும் மூர்க்கமுமான எப்பிராயீம் கோத்திரத்தார் (நியாயாதி. 18 அதி.) தங்கள் நியாயங்களைத் தாராளமாய்ப் பேசவேணுமென்றோ, எரோபெயாமுடைய தந்திரமான ஆலோசனையைக் கேட்டோ, துரோகியான அபிமேலேக்கைத் தங்களுக்கு இராஜாவாக்கின சீகேம் பட்டணத்தைத் தெரிந்துகொண்டு ரெகொபெயாமை அங்கே வரவழைத்து அவனை இராஜாவாக்க யோசனையாய், தந்திரமாய்ப் பேசினார்கள். இவர்கள் சாலொமோன் இராஜா செய்த தயவையும் நன்மைகளையும் எண்ணாமல், அவர் தமது அரண்மனைகளைக் கட்டினதிலும் விசேஷமாய்த் தமது பெண்களுக்கு உதவியாகவும், ஜனங்களிடத்தில் அதிகக் கடினமான இறைவரிகளை வாங்கியிருந்தபடியால், அதை நிறுத்தும்படி கேட்டார்கள். இதற்கு ரெகொபெயாம் ஞானமும், தாழ்மையும், அன்புமான மாறுத்தரஞ் சொல்லாதபடியால், தேவதீர்மானப்படி 10 கோத்திரத்தாரும் பிரிந்துபோனார்கள். தேவன் யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்துப்போட்டதால் காரியம் சம்பவித்தது. (சங். 78: 67.) இப்படியே தாவீது இராஜா காலத்திலும் கலகஞ்செய்தார்கள். (2 சாமு. 20: 1.) இவர்கள் தேவனையல்லாமல் தங்களுக்கு இராஜாவைத் தெரிந்துகொண்டார்கள். (ஓசே. 8: 4.) இது பெரிய பாவமென்று அபியா சொல்லுகிறார். 2 நாளா. 13: 5—8.

ரெகொபெயாம் இஸ்ரவேலை ஜெயிக்க சேனையைக் கூட்டும்போது செமாயா தீர்க்கதரிசியினால் தடுக்கப்பட்டார். 2 நாளா. 11: 1—5. வாலிபருடைய ஆலோசனையின்படி யுத்தத்துக்குப் போகவே, தடுக்கப்பட்டபோது தேவகட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்.-முதியோர் ஆலோசனைப்படி தன் எல்லைப் பட்டணங்களை அரணாக்கினார். 2 நாளா. 11: 11, 12. எகிப்தியர் ஏதோமியர் தன் தேசத்துக்குள் வராதபடி பட்டணங்களைக் கட்டி அங்கங்கே தன் குமாரரைப் பிரித்துவைத்தான். 2 நாளா. 11: 23.

எரோபெயாமோ எப்பிராயீம் கோத்திரத்தில் சீகேமைத் தனக்கு இராஜ நகரியாக்கினான். இது அபிமேலக்கால் அழிக்கப்பட்டு 220வருஷமாயிருந்தது. அது முன்னும் கலகமுள்ள பட்டணமாம்.

யோர்தானுக்கு அக்கரையில் காத்கோத்திர நாட்டில் சூரியர் வராதபடி பேனுவேலையும் கட்டினான். இஸ்ரவேலர் எருசலேம் தேவாலயத்துக்குத் தேவனை வணங்கப்போகவிடுகிறதானால் அந்த இராஜனோடே சேர்ந்துபோவார்களென்று பயந்து, 1 இரா. 11: 38ல் சொல்லிய தேவகட்

டளையும் நம்பாமல், ஆரோன் வனாந்தரத்தில் செய்த கன்றுக்குட்டிக் கொப்பான சொரூபங்களைச்செய்து தாணிலும், பேத்தேலிலும் வைத்தான். 1 இரா. 12, 13 அதி. இவன் பேத்தேலில் ஒரு ஆலயத்தைக்கட்டி, (ஆமோ. 7: 13.) மோசேயின் பிரமாணங்களுக்கிசைவாய் ஆசாரியரல்லாதவர்களை அதற்கு ஆசாரியராக்கி, அதற்குப் பண்டிகையையும் ஏற்படுத்தினான். இந்த ஆலயத்தைப் பிரதிஷ்டைசெய்கையில் தேவன் ஒரு தீர்க்கதரிசியைக் கொண்டு அதைச் சபித்தார். அந்தச் சாபத்தை யோசியா இராஜா நிறைவேற்றினார். 2 இரா. 13 அதி. 1—4. 2 இரா. 23: 15, 16.

கி. மு. 974 ல் ஆசாரியர்களும், லேவியர்களும், இஸ்ருவேலரில் தேவபயமுள்ளவர்களும் இஸ்ரவேல் இராஜ்யத்தை விட்டுவிட்டு யூதாவில் குடியேறி, ரெகொபெயாமின் முதல் மூன்று வருஷங்களாய் அவன் தேவபக்தியுள்ளவனாய் நடக்கவும் ஏவி, யூதஇராஜ்யத்தைப் பெலப்படுத்தினார்கள். இவர்கள் தங்கள் தொகையினால் மாத்திரமல்ல, தங்களுடைய பக்தியினாலும் ஜெபத்தினாலும் அந்த இராஜ்யத்துக்கு ஆசீர்வாதமாயிருந்தார்கள். சகரி. 12: 5. பக்தியும், ஜெபமுமுள்ளவர்கள் அதிகமாயிருப்பதே எந்த இராஜ்யத்துக்கும் பெலனாம்.

கி. மு. 972ல் ரெகொபெயாம் அநேகம் பெண்களைத் தனக்குப் படைத்துக்கொண்டதால் தன்னைப் பெலவீனப்படுத்திக்கொண்டான். இவனுக்கு 18 மனைவிகளும், 60 மறுமனையாட்டிகளுமுண்டு. இவன் தன் தகப்பன் சாலொமோனைப்போல அந்நிய ஜாதியானவர்களையுமல்ல, இஸ்ருவேலரிலுமல்ல, தாவீதின் வம்சத்திலே பெண்களைத் தெரிந்துகொண்டார். (2) சாலொமோன் அநேக மனைவிகளைப் படைத்திருந்தும் ஒரே மகன் தானிருந்ததாக வாசிக்கிறோம். இவனுக்கோ அநேக மக்களிருந்தார்கள். இவர்களால் தேசத்துக்குச் சமாதானமும் பாதுசாப்புமுண்டாயிருக்கும்படிக்கும், அபியாவுக்குத் துன்பமாயிராதபடிக்கும் யூதாவிலும் பென்யமீனிலுமுள்ள சகல அரணான பட்டணங்களிலும் தன் மக்களைப் பலதிசையிலும் பிரித்துவைத்தான். 2 நாளா. 11: 18—23.

கி. மு. 971ல் இராஜ்யம் திடப்பட்டபின் ரெகொபெயாமும் அவன் ஜனமும், கர்த்தரைவிட்டு பக்தியற்றவர்களாயிருந்தார்கள். 2 நாளா. 12: 1. இவன் தன் தகப்பன், பேரனுடைய பக்தியுள்ள மாதிரிப்படி நடந்த காலத்திலே 2 நாளா. 11: 17. தேசம் பாக்கியமுள்ள நிலைமையிலிருந்தது. இப்போதோ அவர்கள் கர்த்தரைவிட்டுவிட்டார்கள்; எகிப்தின் இராஜாவாகிய சீஷாக்கின் சகோதரி சாலொமோனுக்கு மனைவியாயிருந்தும் அவளோடேகூட வேறே அநேகம் ஸ்திரீகளையும் சாலொமோன் தனக்கு மனைவிகளாகப் படைத்துக்கொண்ட பகை தனக்குள் இருந்ததினாலே, சீஷாக் என்பவன் எகிப்தின் பக்கத்திலிருக்கிற லூபியரையும், 2 நாளா. 16: 8. தானி. 11: 43. ஆபிரிக்காவிலும் அரபியாவிலும் கூடாரங்களில் வாசம்பண்ணுகிற சூக்கியரையும், எகிப்துக்கப்பாலிருக்கிற எத்தியோப்பியரையும் திரட்டி; அரணான பட்டணங்களைப் பிடித்து எருசலேமுக்கு விரோதமாக வரவே, செமாயா தீர்க்கதரிசியின் போதனையினால் தேவனுக்கு முன்பாக ரெகொபெயாம் தன்னைத் தாழ்த்தவே, சீஷாக் யூதாவை முற்றும் பாழாக்காமல் அரண்மனையிலும் ஆலயத்திலும் பொக்கிஷங்களை யெடுத்தும், தனக்கு ரெகொபெயாம் கப்பங்கொடுக்கும்படிசெய்தும் போனான். 2 காளா. 12: 2—12. யூதாவில் இஸ்ருவேலைப் பார்க்கிலும் சில காரியங்கள் அதாவது, மெய்த்தேவ ஆராதனை, கர்த்தருடைய தீர்க்கதரிசிகளின் போதனைகள் மெய்பக்தரின், பெருக்கம் சீராயிருந்தது.



ரெகொபெயாம் சாலொமோனைப்போல தேவகிருபையையும், ஞானத்தையும் தேடவுமில்லை, ஜெபிக்கவுமில்லை, தேவஆலோசனைப்படி நடக்கவுமில்லை, பக்தியற்றவராய் நடந்தார். தற்காலத்துக்குத் தன்னைத் தாழ்த்திக் குணப்பட்டவராகக் காட்டினாலும் அதில் நிலைத்திருக்கவில்லை. இவன் 17 வருஷம் எருசலேமில் ஆண்டு தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான். 2 நாளா. 12: 13—16.

### 2. அபியா. (கடவின் தகப்பன்.) கி. மு. 958. ஆண்டது 3 ௵.

இஸ்ருவேலின் இராஜாவாகிய எரோபெயாம், தன் பெருமையினால் ரெகொபெயாம் இறந்துபோனவுடன், யூதஇராஜ்யத்தைத் தன் வசமாக்கிக்கொள்ள வலியவந்தபோது (ரெகொபெயாம் தடுக்கப்பட்டதுபோல தடுக்கப்படாமல்) அபியா தைரியமாய் எரோபெயாமோடே சண்டைசெய்து ஜெயித்தான் 2 நாளா. 13 அதி. அபியா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்து அவருடைய ஒத்தாசையைத் தேடினதால் ஜெயமடைந்தார். 2 இரா. 18: 5. 2 நாளா. 20: 20. சங். 22: 4. தானி. 3: 28. 8 லட்சம் பேரோடே வந்த எரோபெயாமை, 4 லட்சம் பேரோடே வந்த அபியா மேற்கொண்டு இஸ்ருவேலரில் 5 லட்சம்பேரைக் கொன்றான்.

## கேள்விகள்.

1. ரெகொபெயாமுடைய குணகுணங்களென்ன? அவர் தீர்க்கதரிசியால் எந்தெந்த சமயங்களில் கண்டிக்கப்பட்டார்?

2. பெத்லகேம், தெக்கோபா, லாகீஸ், எப்ரோன், சீப், ஆயிலோன், அதல்லாம் என்ற பட்டணங்களைப்பற்றி தெரிந்தவைகளை எழுதும்?

3. ஆசாரியர், லேவியர் இஸ்ருவேலிலுள்ள தங்கள் காணியாட்சிகளை விட்டுவந்த முகாந்தரமென்ன? அவர்கள் வந்ததினால் யூதஇராஜ்யத்துக்குக் கிடைத்த நன்மையென்ன?

4. எப்பிராயீமர் எப்போதும் கலகக்காரரென்று ரூபித்து அவர்கள் பிரிந்துபோனது பாவமென்று காண்பியும்?

5. சீஷாக் என்பவனார்? அவன் செய்த கொடுமையென்ன? தேவன் என்ன நோக்கத்துக்காக அவனை எழுப்பினார்?

6. அபியாவுடைய பக்தியுள்ள வார்த்தைகளென்ன? அதினால் அவனுக்குக் கிடைத்த நன்மையென்ன? இதைப்போல வேறு உதாரணங் காட்டவும்?

### 3. ஆசா. (பூமி.) கி. பி. 955—915. (2 நாளா. 14—16 அதி.)

ஆசா பக்தியுள்ளவனானதால் தேசம் 10௵ யுத்தமில்லாமல் அமரிக்கையாயிருந்தது. இவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தபடியால், அவன் செய்த வேலைகள் யாவற்றையும் தேவன் வாய்க்கச்செய்தார். கி. மு. 951ல் சாலொமோன் காலமுதல் செய்யப்பட்டிருந்த அந்நிய தேவர்களின் பலிபீடங்களையும் சிலைகளையும் உடைத்து, மெய்மார்க்கத்தைப் புதுப்பித்து அதை உறுதிப்படுத்தினான். 2 நாளா. 14 அதி. சோதோமியரையும் அகற்றினான். 1 இரா. 15: 12. தன் தாயாகிய மாகாள் விக்கிரகாராதனைக்காரியானதால் இராஜாத்திக்குரிய கனம், மேன்மை, வருமானம், மெய்காவல் எல்லாம் இழக்கவும், இராஜாத்தியாயிராதபடிக்கும் செய்தான். 1 இரா. 15: 13. மேடைகள் தகர்க்கப்படவில்லை. 2 நாளா.

14: 3. அந்நிய தேவர்களை அகற்றிப்போட்டான். மேடைகள் தாவீதும் சாலொமோனும் மெய்த்தேவனை வணங்கிவந்த இடமானதால் அவைகளைத் தகர்க்கப் பயந்தான். எருசலேமுக்குப் போகக்கூடாதவர்கள் மெய்த்தேவனை வணங்கவும், ஆண்கள் எருசலேமுக்குப் போனாலும், பெண்கள் தேவனை வணங்கவும், பொதுப்பட ஜனங்கள் அதில் சார்பாயிருந்தபடியாலும் தகர்க்கவில்லை. அபியா தன் அவபக்தியினாலோ, சோம்பலினாலோ (2 நா. 13 அதி.) எரோபெயாம் சேனையில் தான் கொள்ளையடித்ததில பரிசுத்தம்பண்ணின பொன்வெள்ளி முதலான தட்டுமுட்டுகளை கர்த்தருடைய ஆலயத்தில் சேர்த்தான். 1 இரா. 15: 15.

கி. மு. 941ல் எகிப்தின் இராஜாவால் ஏவப்பட்டு எத்தியோப்பியனாகிய சேரா 10 லட்சம் பேரோடே யூதாவுக்கு விரோதமாய் மரேசாவுக்கடுத்த செப்பத்தாவில் அணிவகுத்து நிற்க, ஆசா தேவனை நோக்கி பண்ணின ஜெபத்தினால் அவர்களை மேற்கொண்டு துரத்தி அவர்களைக் கொள்ளையிட்டான். ஆசா சமாதானமுள்ள காலத்தில் மாத்திரமல்ல, துன்பமுள்ள காலத்திலும் தேவனைத் தேடினான் 2 நாளா. 14: 9–15. இது மிகவும் விசுவாசமுள்ள ஜெபம். 1 சாமு. 14: 6. யாத். 14: 10. சங். 22: 5. 1 சா. 17: 45.

ஆசா ஜெயங்கொண்டு திரும்பிவந்தபின்பு அசரியாவின் தீர்க்கதரிசனத்தினாலே ஏவப்பட்டு, யூதரையும் இஸ்ரவேலரில் அநேகரையும் தேவனோடே உடன்படிக்கைபண்ணச் செய்தான். 2 நாளா. 15: 1—15. இஸ்ரவேலிலே மெய்த்தேவனுமில்லை, ஆசாரியனுமில்லை, வேதமுமில்லை. ஆகையால் எரோபெயாமின் கலகத்துக்குப்பின், சண்டைகளும், யுத்தங்களும், நிர்ப்பாக்கியங்களுமிருந்தது. நியாயாதிபதிகள் காலத்திலும் இஸ்ரவேலர் தேவனை வணங்காததால் சத்துருக்களால் இடுக்கண் அடைந்தார்கள். நியாயாதி. 2 அதி. 3: 9, 15 10: 10. ஜாதிக்கு விரோதமாய் ஜாதி எழும்பி நொறுக்கினது. நியாயாதி. 9: 23. 12: 1. ஆதி. 17: 4. அப். 4: 27. 2 நாளா. 15: 3ல் சொல்லிய சங்கதி. முதலாவது, பொதுவாய் நியாயாதிபதி காலத்தைக் குறிக்கும். இரண்டாவது, குறிப்பாய் 10 கோத்திரமடங்கிய இஸ்ரவேலை குறிக்கும். அவர்கள் கன்றுக்குட்டி ஆராதனைசெய்கிறபடியால், அவர்களுக்குள் மெய்த்தேவனில்லை. எரோபெயாமுடைய ஆசாரியரும் போதிக்கிறவர்களல்லாததால் அவர்களுக்குள் வேதமுமில்லை. மூன்றாவது, இனி இஸ்ரவேலருக்குள் மெய்த்தேவனும், வேதமும் இல்லாமல்போவதால் அதினால் தேவதண்டனைகளும், நிர்ப்பாக்கியங்களும் சம்பவித்திருப்பதால் வருங்காலமாயிருக்கவேணுமென்பார்கள் ஓசே. 3: 4.

யூதேயாவில் தீர்க்கதரிசிகளிருப்பதால் விக்கிரகாராதனைக்கு ஏதுவில்லை. தீர்க்கதரிசன ஆவி நின்றுபோனபின்பும், இரண்டாம் தேவாலயமிருந்த காலத்திலே பழைய ஏற்பாடு ஜுனகோகில் வாசிக்கப்பட்டு வந்ததினாலே யூதர்களுக்குள் விக்கிரகாராதனையேயில்லை. இந்தச் சமயத்திலும் அசரியா தைரியமாய்ச் சீர்திருத்தம் நடத்த ஏவுகிறார். 2 நாளா. 15: 7 அந்தப்படி ஓதேதின் மகன் அசரியாவின் பிரசங்கத்தினால் ஆசா சீர்ப்படுத்தினான். 2 நாளா. 16: 8—15. ஆசா ஜெயங்கொண்டு வந்தபின்பு, அநேகர் எப்பிராயீம், மனாசே, சிமியோன் கோத்திரங்களிலுமிருந்து ஆசாவுடன் சேர்ந்திருப்பார்கள். இவர்களும் தேவனுக்கே ஆராதனைசெய்வோமென்று உடன்படிக்கைசெய்தார்கள். 2 இரா. 23: 3. 34: 31. நெகேமி. 10: 29. எல்லாரும் உண்மையாயும் சந்தோஷமாயும் தேவனைச் சேவிக்க ஆணையிட்டுக்கொடுத்தபடியால் 35 வருஷம்வரையும் யுத்தமில்லை.

---



# மோட்ச லோகம்.

எபி. 11: 16.

*"தேவன் அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே."*

பிதாக்கள் பிள்ளைகளுக்கு வீட்டை ஆஸ்தியைச் சுதந்தரமாக வைத்துப்போவார்கள். அப்படியே நம்முடைய பரமபிதாவாகிய அன்பு நிறைந்த தேவன் கிறிஸ்துவின் திருஉதிரத்தினாலே தமக்குப் பிள்ளைகளாக்கிக்கொண்ட விசுவாச சந்ததியாருக்கு பரமகானான் தேசத்தையும் மோக்ஷ இராஜ்யத்தையும் பரம எருசலேம் நகரத்தையும் சுதந்தரமாகக கட்டி ஆயத்தம்பண்ணியிருக்கிறார். இதினிமித்தம் தங்களுக்குமுன் வைத்திருக்கிற ஜீவகிரீடத்தைப் பெற அவமானத்தை எண்ணாமல், துன்பத்தைச் சகித்து நீடிய பொறுமையோடே விசுவாசத்தைக் காத்துக்கொண்டு அன்பிலே வேரூன்றி ஆவியிலே கனிதந்து பசுமையும் புஷ்டியுமாயிருக்கிறவர்கள் அப்பாபிதாவே! என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப்பெற்று தேவனுக்குப் பிள்ளைகளும் கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாகிறார்கள். இப்படிப்பட்ட மகாத்துமாக்களுக்கு தேவன் ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். இதினால்தான் மெய்விசுவாசிகள் இதிலும் மேலான பரமதேசத்தையே விரும்பினார்களென்று சொல்லியிருக்கிறது

சங். 31: 19. தேவனே உமக்குப் பயப்படுகிறவர்களுக்கு நீர் உண்டுபண்ணிவைத்திருக்கிற நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது.

1. இந்நகரத்தை தேவன் ஆயத்தம்பண்ணின காலம்.

உலகத்தோற்றமுதல் இது ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களுண்டு. மத். 25: 34. என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகமுண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ள வாருங்கள் என்கிறார் இந்நகரத்தை தூதர் கைகளாவது, மனுஷ கைகளாவது, பெசலெயேலின் கைகளாவது, வேறெந்த சிற்பாசாரியின் கைகளாவது சிருஷ்டியாமல் தேவனுடைய வல்லமையுள்ள கரமே இதை உருவாக்கிற்று. இதின் கோடிக்கல்லை வைத்தபோது யோபு 38: 7. விடியற்காலத்து நக்ஷத்திரங்கள் ஏகமாய்ப் பாடி தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்கள். பரலோகம் எங்கும் தேவஎக்காளம் பெருந்தொனியாய் முழங்க தேவதூதர் உன்னதத்திலே ஓசன்னாவென்று ஆர்ப்பரித்தார்கள். இந்நகரத்தைக் கட்டின தேவன் மிகவும் நன்றாயிருக்கிறதென்று கண்டு ஆவியிலே களிகூர்ந்து மனம் மகிழ்ந்தார்.

2. இந்நகரத்தின் சிறப்பு.

அதின் பிரகாசம் விலைஉயர்ந்த இரத்தினக் கல்லைப்போலவும் பளிங்கொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருக்கிறது. அதின் அஸ்திபாரக் கல்வில் ஆட்டுக்குட்டியானவரின் 12 அப்போஸ்தலரின் நாமங்களும் வரையப்பட்டிருக்கின்றன. அதின் அலங்கத்தில் தீர்க்கதரிசிகள் இரத்தச் சாக்ஷிகள் மீட்கப்பட்ட மகாத்துமாக்களின் நாமங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் சிவப்பெழுத்தாய் எழுதப்பட்டிருக்கிறது இந்நகரத்துக்கு 12 வாசல்களுண்டு. ஒவ்வொன்றும் ஒரு முத்தாயிருக்கிறது. அங்கே இராக்கால

மில்லாதபடியால் அவ்வாசல்கள் பூட்டப்படுகிறதில்லை. ஆட்டுக்குட்டியானவரே அதற்குப் பிரகாசமாயிருக்கிறார். அந்நகர வீதி சுத்தப்பொன்னாயிருக்கிறது. நகரத்தின் மத்தியில் ஜீவநதி ஓடுகிறது. நகரத்தின் மத்தியிலும் நதியின் இருகரையிலும் மாதந்தோறும் புதுக்கனிகளைத் தருகிற 12 விதமான ஜீவவிருக்ஷமுண்டு. அதின் இலைகள் ஆரோக்கியம் தருகிறதற்கேதுவானவைகள். அது தன் மணவாளனுக்கு ஆயத்தமாக்கப்பட்ட மணவாட்டியைப்போல அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அது நித்திய கனமும் மகிமையுமுள்ளது. தேவன் 1 கொரி. 2: 9. தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. ஆ! எத்தனை மேன்மை! எத்தனை சிறப்பு! ஆயிரம் நாவு ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலும் அதின் மேன்மை மகத்துவங்களைச் சொல்லமுடியாத மாசிறந்த சீயோன் நகரமாம்.

3 இந்நகரத்தில் வசிக்கிறவர்கள்.

பரிசுத்தம் நிறைந்த பிதா குமாரன் பரிசுத்தஆவியாகிய திரியேகர் ஏகத்துவ தேவனாக ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசமாயிருக்கிறார். பரிசுத்தமுள்ள தேவதூதர்கள், வல்லமைகள், அதிகாரங்கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், கேருபீன்கள், சேராபீன்கள், காபிரியேல், மிகாவேல், பரிசுத்தவான்களின் சங்கம், இரத்தச்சாக்ஷிகளின் தைரிய சேனை அங்கே வாசமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கர்த்தருடைய இராஜ்யத்துக்குட்பட்டு மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்தான்.

எமதன் என்ற பரதீஸ் நிலைகுலைந்ததுபோல இது நிலைகுலையாது. இதை முற்றிக்கைசெய்யவும், பிடுங்கவும், இடிக்கவும் கூடாத திடஅஸ்திபாரமுள்ள நித்தியவாசஸ்தலமாக இதைச் செய்துமுடித்திருக்கிறார். "அங்கே சங். 85: 10 கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும். நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்திசெய்யும்." பரிசுத்தமும் அன்பும் ஒன்றையொன்று மினவிக்கொள்ளும்.

4. இந்நகரவாசிகளின் பாக்கியம்.

அங்கே பாவம், சாபம் இல்லை. சாத்தான் இல்லை. பசி, தாகம் இல்லை. வியாதி, துன்பம் இல்லை. மரணம் இல்லை. துக்கம், கண்ணீர் இல்லை. சண்டை, கூக்குரல் இல்லை. இரவு இல்லை. வெயில் இல்லை. அசுத்தம் இல்லை. இந்நகரவாசிகள் பேதையராயும், திசைகெட்டுப்போகிறவர்களாயுமிருக்கமாட்டார்கள். அதின் மதிலை ஏசா. 60: 19 இரக்ஷிப்பென்றும் அதின் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய். கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும், உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார். ஏசா. 33: 24. வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை. அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும். வெள்ளை அங்கிகளைத் தரித்து குருத்தோலைகளைக் கையில் பிடித்து ஆட்டுக்குட்டியானவரின் புதுப்பாட்டையே பாடுவார்கள். இப்படிப்பட்ட மகத்துவ சிருஷ்டிகரா சர்வ சிருஷ்டிகளே, சம்மனசுகளே, என் ஆத்துமாவே, அனனியா, அசரியா, மிகாவேலே கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து ஸ்தோத்திரியுங்கள்.

---



# இரக்ஷண்ய யாத்திரிகம்.

## அழிம்பன் தோல்விப் படலம்.

சித்தமுற நன்கறிவல் நீயெனது ஜென்ம
சத்துரு வெனக்குதவு சார்புரிமை வாழ்வென்
றத்தனையும் நித்திய அனத்தமெனு மாற்றால்
இத்தகைய நூனெறி பிடித்திவ ணிறுத்தேன். 41

மாயமுறு மின்பநலம் வாழ்வுசுக மாதி
ஆயவை தரத்துணிதி அம்மஅழ கிற்றால்
மேயமனை தோறுமெறி மிச்சில்விழை நாய்கொல்
சீயமுடி பெற்றரசு செய்யும்வகை செய்யும். 42

கோடுமதி படைத்துலவு கோழைநர மல்லால்
நடுமதி படைத்தவருன் நச்சுமதி கொள்ளார்
அடுமதி படைத்திழி யழிம்ப அழிவெய்தும்
கெடுமதி படைத்தனை கெடாப்பழி படைத்தோய். 43

விள்ளரிய பாதக வினைச்சுமை விழுத்த
வள்ளலருள் சிற்சுருதி வாய்மைமதி யொன்றே
கொள்ளுவல் புறத்துமதி கொள்ளமன முள்ளேன்
தெள்ளமு துகுத்துவிட முண்பதுகொல் சீர்மை. 44

மேதகைய தொண்டரை விரோதிகள் செருக்கும்
போதிறைவ கை விட்டன ரெனப்புகறி பொங்கும்
காதலின் இகத்திடர் களைந்துமதி யுய்க்கும்
மாதயையின மாட்சியென வெண்ணுகிலை மாற்றோய். 45

மார்க்கவயி ராகருடல் வார்குருதி யென்றும்
பார்க்கனுல வாக்கரி பகர்ந்திடலில் மேலாஞ்
சீர்க்கதியின் மேயபர சிற்சுகம் விளங்கித்
தீர்க்கமுறு மென்பது மகேசபதி சித்தம். 46

பாவநர ஜீவதிர ணம்பரம ராஜன்
கோவஅனல் பற்றியெரி யாவகை குறித்த
ஆவிவளி வீசியரு ளாழியின் மடுக்கும்
ஜீவநதி யுய்க்கவினை தீர்ந்துகதி சேரும். 47

கேட்டியுன நாட்டிடை கெழீஇயபல வீனக்
கோட்டிமக வாயெனை வளர்த்தனள் குயப்பால்
ஊட்டிநனி யாதலி னுஞற்றுபல தீமை
ஏட்டினி லடங்குகில எண்ணிமுடி யாதால். 48

எண்ணரிய தீவினை யியற்றியுள னேனும்
நண்ணிய மனத்துயரு நாடுபெரு மூச்சும்
கண்ணருவி நீர்சொரி கருத்தும்நனி கண்டு
புண்ணியர் பொறுத்தருள் அளிக்கமகிழ் பூத்தேன். 49

இம்மகிழ் வளித்தெனை யீடேற்றுசரு வேசன்
செம்மலொரு நட்பிடை திரிக்கமுயல் கிற்றி
அம்மகெடு வாய்முடிவ தாங்கொல் இஃதன்றல்
மும்மையுல குக்கெனினு மொய்ம்பிலது காண்டி. 50

மற்றினி யுரைப்பதெவன் வந்தவழி யின்னே
பற்றுதி யணுத்துணை பயனபடுத லில்லாச்
செற்றமொ டெதிர்ந்தமர் செயத்துணிதி யாயில்
வெற்றிபெறு வாயலை விரைந்திடுதி யென்றான். 51

செய்பமறை யோனுரை செவிப்பட அழிம்பன்
நெய்யுறு மழற்சிகை யெனச்சின நிமிர்ந்து
கையொடுகை யெற்றியிரு கண்குருதி காட்ட
வெய்பஉரு மேறென வெடித்தநகை செய்தே. 52

மூத்தியர சற்குமவர் மொய்ம்பின் மகிமைக்கும்
நித்தபுர சாட்சிமுறை மைக்கும்நெறி நிற்கும்
பத்தஜன ருக்குமதி கேடுகள் படுக்கும்
சத்துரு எனக்கெதிர் தருக்குவை கொலாம்நீ. 53

நீதியர சன்சொலை நினைத்துமில வாயிப்
பூதலமெ லாமெமது புத்துரையில் நிற்ப
ஆதிமுத லாயுல கடக்கியர சாள்வேம்
பேதையொரு நீதனி பிணங்கி லடரோங்கொல். 54

அடாசிறிய பையல்மச கத்துணையு மல்லாய்
கெடாமுத லருட்டுணை கிடைக்குமென நம்பிக்
கடாசல மொடேயமர் கலக்கவரு கின்றாய்
படாதுபடு வாயொரு கணத்திலது பார்த்தி. 55

என்றெயி றதுக்கியட எங்ககறி யென்னுக்
கொன்றுயிர் குடிக்கவரு கூற்றென மறித்துக்
குன்றென நிமிர்ந்ததிர டோள்முருடு கொட்டி
வன்றிறல்கொள் வெங்கத மடங்கலென வார்த்தான். 56

ஆர்த்தரறி நின்றனன் அடித்துணைகள் மாறிப்
பேர்த்தனன் விரைந்துபல சாரிபெயர் பெட்பிற்
பார்த்திடர் பிதிர்ந்தன பரந்தபடு தூளி
போர்த்தன விசும்பிரவி பொங்குகதிர் நுங்கி. 57

மறங்கிளரும் வன்சிற கடித்துயர வாவிக்
கறங்கென உழன்றுகக னத்திடை கரப்பன்
இறங்குவன் நிலங்கிழிய எட்டியடி கிட்டி
அறங்கிளரு நெஞ்சனை யடுப்பனறை கூவி. 58

வாவென விளிப்பன்முழை வாய்மிடறு காறித்
தூவென வுமிழ்ந்துபழி தூற்றியிகழ் வன்மெய்த்
தேவென நினைக்கவொரு செந்துமில வென்றுப்
பூவுலகை யின்றொடுபுதுக்கிடுவ னென்பான். 59

சேத்தபிண நுங்குகழு கிற்சிதட மார்க்கப்
பித்துறு பிணங்களை நுகர்ந்துழல் பிசாசன்



இத்திற மனேகவித கோரணி யியற்றி
வித்தகனொ டேயமர் விளைத்திடுவ தானான். 60

ஆத்தும விசாரியு மருட்கடவுள் வேந்தன்
மாத்தகைய சேவடி மனத்திடை யிருத்தித்
தீத்தொழி லரக்கனுயிர் சிந்தவதிர் தும்பைப்
பூத்தொடை புனைந்தமர் புரிந்திடுவ தானான். 61

நன்மைபர ஞானமொளிர் நல்லற மிவற்றைத்
தின்மையறி யாமையிருள் தீமற மடர்த்து
வன்மைமிகு வெஞ்சம மலைத்திடுதல் போலாம்
தொன்மறை வலானொடு பசாசமர் தொடுத்தல். 62

ஆயிடை நிசாசரன் அறக்கொடுமை பூண்ட
மாயமுறு வெஞ்சிலை வளைத்துமற மல்கும்
காயெரி முகத்தன கடுத்துறு நுனித்த
சாயக சதம்பல தருக்கொடு விடுத்தான். 63

மற்றிணி தடம்புய மறைக்கிழவன் வல்லே
செற்றமொ டரக்கன்விடு தீப்பகழி தீந்து
முற்றுமவை யிற்றுக முரண்கொள்விசு வாசப்
பற்றெனு மிரும்பரிசை யாற்பொடி படுத்தான். 64

தூக்கிய வழற்பகழி சாம்பருறல் கண்டே
மீக்கிளர் சினத்தவுணன் வெய்யவசை யென்னும்
தீக்கிளர் சகத்திர சிலீமுகம் விடுத்தான்
காக்குதி கொலோவறிவல் என்றொரு கணத்தில். 65

அங்கவை விசைத்தணுகி ஆத்தும விசாரன்
செங்கையுறு கேடக மறிந்திடை சிதைந்து
பங்கமுற லாயின பழிப்பிலற வோர்பால்
வெங்கணவர் சூழ்வினை விளிந்தொழியு மாபோல். 66

நன்முறை யொரீஇயகெடு தோஷிநனி பொங்கித்
தொன்முறை வடிக்கணை கணிப்பில துரப்பப்
பன்முறையு நுண்டுகள் படப்பரிசை கொண்டே
சொன்முறை யறிந்தவ னெதிர்ந்தவை தொலைத்தான். 67

வேறு.

விஞ்சவிடுத்த நஞ்சுகுவெங்கோல் விறலின்றி
எஞ்சுதல்கண்டே நெஞ்சழிவுற்றங் கிகல்வெய்யோன்
பஞ்சைமுனிற்காய் செஞ்சிலைபற்றாய் பரிசைக்குள்
அஞ்சியொளிப்பாய் வெஞ்சமருக்கீ தறமேயோ. 68

மூந்தெதிரிக்கொத் தேதிவழங்கல் முகமாறு
வெந்திறலாண்மை நிராயுதனோடமர் வெஃகாமை
நொந்தவருக்குத வுந்திறன்மற்றின நூலோதும்
விந்தையுறும்புய வீரஇலக்கண விதியாமால். 69

விற்றொழிலாதி படைக்கலவித்தைகள் வேறொன்றும்
கற்றிலையுத்த களத்திலும்வந்தெதிர் கால்வைத்தாய்
மற்றெதுசெய்குதி மற்கடவன்பிடி மானக்கை
பற்றியகேடக மொன்றிறில்வளிபடு பஞ்சாவாம். 70

என்றிவைவஞ்சனை யாகஅழிம்பன் எடுத்தோத
ஒன்றியகேடக நெஞ்சுளடக்கி யுரத்தொல்லை
வென்றிகொள்மானத வெஞ்சிலைவாகை மிலைந்தேற்றி
நன்றறிவேதியன் நாணொலிகாட்டினன் நவையெஞ்ச. 71

நாணொலி விஞ்சலு நெஞ்சுதுணுக்கென நாஜீவர்
நீணிரை யச்சிறை யூடடையச்செயு நீசப்பேய்
பேணிய கார்முக வெஞ்சர மாமழை பெய்தார்த்தான்
மாணொளி மங்கி மறைந்தது தாழ்மையின் வைப்பெங்கும். 72

அக்கணம் வேதிய ஞான மந்திர அழல்தோய்ந்த
செக்கர் பொரும்பக ழித்திர ளெய்து செறுத்தொல்லை
மைக்கரு வண்ணன் விடுத்த சரக்குவை மாய்வித்தான்
கக்கு மழைத்திரள் சிந்த மடுத்தெறி கால்போலே. 73

நச்சரவிற்சினமீறி நராந்தக னன்றென்னுக்
குச்சித மாய கொடுஞ்சொன் முகக்கணை கோத்தெய்யச்
சிச்சியெனப்பொறி வாயில் செறித்தொரு செயலின்றி
வச்சை யிலானெதிர் நிற்க மறைந்தன வானோடி. 74

நீச னினைந்துபல் சாபவடிக்கணை நின்றேவ
ஆசி யெனுங்கணை வீசி யழித்தனன் அறவோனும்
மூசிய பாச முகக்கணை மூடன் முனிந்தெய்ய
ஈசுரநேச சரங்கொடறுத்தன னெதிரில்லான். 75

பன்முகமாக விரிந்தடு கோல்பல பைசாசன்
வின்முகநின்று துரந்திட அங்கவை வேதாந்த
உன்முக ஞானி விடுத்த சினக்குறி யூடாடிச்
சென்முக வெங்கணை யிற்சிதை வுற்றன தீங்கெல்லாம். 76

எய்த கொடுங்கணை யெத்தனை கோடிக ளெல்லாமும்
வைது குறைத்தன னென்பதை யல்லது வரிவில்லால்
கொய்து குறைத்தன னென்பதென் னென்று கொடும்பேயன்
செய்திறம் யாதினி யென்றுதிகைத்தொரு தெளிவுற்றான். 77

சுத்திர மாப்படை கொண்டிவனோடு சமராடும்
சித்திரம் வெற்றி தரும்பரிசன்றது சீர்கேடாம்
அத்திரமாய வரும்படை கொண்டிங் கமராடிக்
குத்திரவாகை மிலைச்சுவ லென்று குறிக்கொண்டான். 78

சூழ்மையுறு பொய்மைத் தூணியுள் மண்டித் தொகுமாறு
சமைய முகங்கொள் அத்திரம் வாங்கித் தநுநாணிட்
டிமயமுதற்றக் கணவலா வென்றதிதுகாணென்
றமைய விடுத்தான் வஞ்சவழிம்ப அசுரேசன். 79

வேறு.

விடுத்தவெம்படை முகந்தொறும் பேய்க்குறிமிளிர்வ
கடுத்துறும் புழைவிழிதொறுஞ் சினக்கனல்கஞல்வ
மடுத்தவாய்தொறும் புலைப்படுமொழிப் புகைமலிவ
வடுத்தழைந்த மெய்மயிர்தொறுங் கூளிகள்வதிவ. 80

---



## சமாசாரத்திரட்டு.

பர்மா. [illegible]ம்பர்ஸ்ரீ 30௳ தந்தி. ப்ளாடில்லா கம்பெனிக்கப்பல்
நவம்பர்ஸ்ரீ 27௳ காலமே ஸாமேய்டன் என்னும் பட்டணத்திற்கு வந்து
சேர்ந்ததும் அவ்விடத்தில் பகைவர்கள் இருக்கிறதாக நினைப்பதற்கு ஹே
துவான அடையாளங்கள் ஒன்றும் காணப்படவில்லை. சாயந்தரம் 3½ மணி
க்கு தீபா அரசனுடைய படவுகளில் ஒன்று சமாதானக்கொடியைக் காட்
டிக்கொண்டு ஆற்றோடுவரக் காணப்பட்டது. அதில் இங்கிலீஷ் பேசத்
தெரிந்தவரான பர்மாதேசத்து உள்நாட்டு மந்திரியும் இன்னொரு தூதரும்
சண்டையை நிறுத்திவைக்கவேணுமென்றும், இப்பொழுது இங்கிலீஷ்
காரர் படையெடுத்துச் செல்வதை நிறுத்துவார்களானால் எந்த நிபந்தனை
கள் கேட்கப்பட்டபோதிலும் ஏற்றுக்கொள்ளப்படுமென்றும் சொல்லி
தீபாவின் பிரதான மந்திரியினிடத்திலிருந்து ஒரு கடிதம்கொண்டு வந்
தார்கள். அதற்குப் பதிலாக ஜெனரல் ப்ரொண்டர் காஸ்ட் அவர்கள் தாம்
இராஜபிரதிநிதியினுடைய உத்தரவின்படி காரியம் நடத்திவருகிறதாகவும்
அவருடைய சைனியங்கள் முன்னேக்கிச் செல்வதற்குத் தடங்கல் நேரி
டும்படியான எந்த ஆலோசனைக்கும் செவிகொடுப்பது அவரால் கூடா
தென்றும், ஆனால் தீபா அரசன் தன்னையும் தன்னுடைய சைனியங்களை
யும் தன் தலைநகரத்தையும் இங்கிலீஷ்காரர்கள் வசம் ஒப்பிவித்துவிட சம்
மதிப்பட்டு மண்டலேயிலுள்ள ஐரோப்பியர்களுக்கும் அவர்களுடைய
சொத்துகளுக்கும் எவ்விதக் கெடுதியும் நேரிடாமலிருக்கிறதாகக் காணப்
பட்டால் தாம் அரசனைக் காப்பாற்றுவதாக வாக்குறுதி செய்வதாகவும்
விடைகொடுத்தனுப்பப்பட்டது. இத்தோடு மண்டலேயை இங்கிலீஷ் சை
னியங்களைக்கொண்டு வசப்படுத்திக்கொள்வதைவிட வேறு எவ்வேலையும்
நடத்தவில்லையென்று ஒப்புக்கொண்டு சச்சரவிலிருக்கும் சங்கதிகளைப்
பற்றி சமாதானப் பேச்சு நடவடிக்கைகள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டா
ருடைய உத்தரவுப்படி நடத்தப்படவேணுமென்றும் சொல்லியிருக்கி
றார். இதற்கு காலமே 4 மணிக்குள் பதில் வரவேணுமென்றும் இல்லா
விட்டால் சைனியங்கள் முன்னேக்கி நடத்தப்படுமென்றும் ஜெனரல்
ப்ரொண்டர் காஸ்ட் அவர்கள் தெரியப்படுத்தியிருக்கிறார். டிசம்பர்ஸ்ரீ 2௳
தந்தி. மண்டலே பிடித்துக்கொள்ளப்பட்டதாக இன்றையத்தினம் 5 மணி
க்கு சமாசாரம் வந்துசேர்ந்ததும், ஐராவதி நதியிலிருந்த எல்லாப் போர்க்
கப்பல்களும் அந்த சமாசாரம் வந்ததற்கு அடையாளமாக வெடிகள் தீர்க்க
ஆரம்பித்தன. கடைசியில் பாண்டு வாத்தியங்கள் முழங்கின. இந்த சமா
சாரம் வந்ததினால் ரங்கூனில் உண்டான கொண்டாட்டம் மிகவும் கனத்
ததாயிருந்தது. ஆற்றங்கரை யோரத்தில் எல்லா மதங்களையும் சேர்ந்த ஜனங்
கள் ஒரே கும்பலாய்க் கூடிக்கிடந்தார்கள். பின்னுமொரு தடவை உபசார
வெடி தீர்க்கும் பீரங்கி ஸ்தானத்திலிருந்து வெடிகள் தீர்க்கப்பட்டன.
எல்லாப் போர்க்கப்பல்களிலும் மகாராணியின் கொடி பறந்துகொண்டி
ருந்தது. தீபா அரசனும் அவருடைய மனைவியும் மாமியாரும் இன்னும்
73 பர்மிய உத்தியோகஸ்தர்களும் இன்றையத்தினம் 3 மணிக்கு தயிட்மெ
யொ வந்துசேர்ந்த தொரியா என்னும் கப்பலில் கைதிகளாகக் கொண்டு
வரப்பட்டிருக்கிறார்களென்று தந்திசமாசாரம் வந்திருக்கிறது.

(சு.—ன். டிசம்பர்ஸ்ரீ 7௳)

**ஜனுவரி௴ நாள்-31. மார்கழி௴ 19உ முதல், தை௴ 20உ வரை**

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | ககூ | கர்த்தருக்குப் பரிசுத்தம். யாத். 28:36. |
| ச | 2 | உ0 | அங்கே இஸ்ரவேல் புத்திரரைச் சந்திப்பேன். 29:43. |
| ஞா | 3 | உக | இரத்தத்தினாலே...பிராயசித்தம் பண்ணுவானாக. 30:10. |
| தி | 4 | உஉ | ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக. 31:14. |
| செ | 5 | உ௩ | கர்த்தருக்கு உங்களைப் பிரதிஷ்டை பண்ணுங்கள். 32:29. |
| பு | 6 | உச | உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும். 33:18. |
| வி | 7 | உ௫ | அவன் (மோசே) முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டார்கள். 34:35. |
| வெ | 8 | உசு | கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டு. 35:29. |
| ச | 9 | உஎ | யாவரும் வாசஸ்தலத்தை உண்டாக்கினார்கள். 36:8. |
| ஞா | 10 | உஅ | மேசையையும் சித்தீம் மரத்தால் பண்ணினான். 37:10. |
| தி | 11 | உகூ | வெண்கலத் தொட்டியையும்...உண்டாக்கினான். 38:8. (39:6.) |
| செ | 12 | க | இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை...குவளைகளில் பதித்தார்கள். |
| பு | 13 | உ | கர்த்தருடைய மேகம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருந்தது: 40:38. |
| வி | 14 | ௩ | கர்த்தருடைய சந்நிதியில்தான் அங்கிகரிக்கப். லேவி. 1:3. |
| வெ | 15 | ச | பலிபீடத்தின்மேல் ஞாபகக்குறியாகத் தகனிக்கக்கடவன். 2:2. |
| ச | 16 | ௫ | இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக். 3:13. |
| ஞா | 17 | சு | ஆசாரியன... பாவநிவிர்த்திசெய்யக் கடவன். 4:26. |
| தி | 18 | எ | அவனுக்கு மன்னிக்கப்படும். 5:10. (லெண்டும். 6:9. |
| செ | 19 | அ | பலிபீடத்தின்மேலுள்ள அக்கினி எரிந்துகொண்டேயிருக்க |
| பு | 20 | கூ | இரத்தத்தை.. புசிக்கலாகாது. 7:26. |
| வி | 21 | கய | அந்த மாம்சத்தை...புசிப்பார்களாக. 8:31. |
| வெ | 22 | கக | இன்று கர்த்தர் உங்களுக்குத் தரிசனமாவார். 9:4. (10:1. |
| ச | 23 | கஉ | அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். |
| ஞா | 24 | க௩ | உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராக. 11:44. |
| தி | 25 | கச | கர்த்தருடைய சந்நிதியில் பலியிட்டு,...பாவநிவிர்த்தி. 12:7. |
| செ | 26 | க௫ | குஷ்டம்; அது திட்டாயிருக்கும். 13:51. |
| பு | 27 | கசு | பிராயச்சித்தஞ்செய்யக்கடவன்...சுத்தமாயிருக்கும். 14:53. (15:31. |
| வி | 28 | கஎ | அவர்கள் தீட்டுகளுக்கு அவர்களை விலக்கிவைக்கக்கடவர்கள். |
| வெ | 29 | கஅ | அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு. 16:21. |
| ச | 30 | ககூ | ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்திசெய்கிறது இரத்தமே. 17:11. |
| ஞா | 31 | உ0 | என்னுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள். 18:4. |

## விசேஷ நாட்கள்.

1. கிறிஸ்து விருத்தசேதனத் திருநாள்.
3. கிறிஸ்து ஜநநத்திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு.
5. அமாவாசை.
6. பிரசன்னத் திருநாள்.
10. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 1-ம் ஞாயிறு.
17. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு.
20. பௌர்ணமி.
24. பிரசன்னத்திருநாளுக்குப் பின்வரும் 3-ம் ஞாயிறு.
25. பரி பவுல் குணப்பட்ட திருநாள்.
31. பிரசன்னத்திருநாளுக்குப் பின்வரும் 4-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

உ. பெபுருவரி௴. ௲அஅகூ௵.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணக்கன்.

**440.** 19:18. "நடுவில்" என்ற வார்த்தையில் கவனிக்கவேண்டியதென்ன?

இந்த வார்த்தையை பரி. யோவான் கூட்டி எழுதுகிறார். நிந்தையிலும் முதன்மையைக் குறித்தார்கள். கிறிஸ்துநாதர் தமது பாடுகளின் மத்தியிலும் ராஜாவாக விளங்குகிறார். நடுவில் என்பதை மற்றச் சுவிசேஷகர் குறிப்பிடுகிறார்கள் (மத் 27:38. மாற் 15:27. லூக் 23:33).

19. மேல்விலாசம் அப்பொழுது வழங்கிவந்த மூன்று பாஷைகளில் எழுதப்பட்டதே. அதில் கிரேக் பாஷையில் எழுதப்பட்ட வக்கணையை பரி. யோவான் திட்டமாய் எழுதுவதாகக் காணப்படுகிறது. மேல்விலாசத்தைப் பிலாத்துதானே எழுதிப்போடுவித்தானென்பதை பரி. யோவான் மாத்திரம் எழுதுகிறார்.

20. மேல்விலாசம் எபிரேயு, கிரேக்கு, லத்தீன் என்னும் மூன்று பாஷைகளில் எழுதப்பட்ட விபரத்தை, பரி. யோவான் மாத்திரம் எழுதுகிறார். யூதருடைய தேசபாஷை எபிரேயு.– தேசாடபடிகள் எழுதப்பட்ட பாஷை கிரேக்.–நாடோடிய பாஷை லத்தீன். இப்படியாக மார்க்காசாரத்தின்படியும், தேசாசாரத்தின்படியும், நாகரீகத்தின்படியும் கிறிஸ்துவின் உத்தியோகம் சாக்ஷியிடப்பட்டது.

**441.** சிலுவையில் அறையப்படப்போகிறவர்களுக்கு உடுத்துகிற வஸ்திரமென்ன?

அங்கியையும் உள்சட்டையையும் முந்தியே களைந்துவிடுவார்கள். முற்றிலும் நிர்வாணமாக்குவது யூதருக்குள்ளாவது ரோமருக்குள்ளாவது

வழக்கமில்லை. யூதர்கள் ஒருவனைக் கல்லெறிந்து கொல்லும்போது, அவனுக்குச் சணல்நூல் அரைக்கச்சையைக் கட்டுவார்கள். சிலுவையிலறையும்போதோ, பிரதானஆசாரியன் தரித்துக்கொள்ளும் அரைச்சட்டைமாதிரி தளர்த்தியான ஒரு மேல்கச்சையை (Apron) அவனுக்குத் தரிப்பார்கள். கர்த்தருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டதும், அங்கியைக் குறித்துச் சீட்டுப்போட்டதுமாகிய இவ்விரண்டு காரியங்களையும்பற்றி நாலுசுவிசேஷகரும் எழுதுகிறார்கள். இவ்விரண்டில் ஒன்றைச் சொன்னால் போதுமானதாயிருக்க, இரண்டையும் சொல்வதற்கு முகாந்தரமின்னதென்று பரி. யோவான் மாத்திரம் சொல்லுகிறார் (19: 23). ரோமருடைய வழக்கப்படி, சிலுவையிலறையுண்டவர்களுடைய வஸ்திரங்கள் ஆக்கினையை நிறைவேற்றுகிறவர்களைச் சேரும். அப்படியே கர்த்தருடைய வஸ்திரங்கள் அவரைச் சிலுவையிலறைந்த நாலு போர்ச்சேவகருக்கும் பாத்தியப்பட்டவை. சீட்டுப்போடுதல் எத்தேசத்தாருக்குள்ளும் வழக்கம். நம்முடைய வேதமும் இதைத் தடுக்கிறதில்லை. ரோம போர்ச்சேவகர் இதை முக்கியமாய் வழங்கினார்கள்.

36. சிலுவையிலறையப்படுகிறவர்கள் எவ்விதமாயாவது தப்பிப்போகிறதாயிருந்தால், போர்ச்சேவகருக்கு மரணதண்டனை விதிக்கப்படுமாதலால், மற்றொருவரும் கிட்ட அணுகாதபடி, போர்ச்சேவகர் சிலுவையினருகில் எப்போதும் காவல்காத்துக்கொண்டிருப்பார்கள். மூன்றுமணி நேரத்துக்கு ஒருவிசை போர்ச்சேவகர் மாறிமாறி வரும்படி சிலவேளைகளில், நான்கு வகுப்புப் போர்ச்சேவகரை நியமிப்பார்கள்(அப் 12: 4). நூற்றுக்கதிபதி நாள்முழுதும் அங்கேயிருப்பான்.

**442.** கர்த்தர் சிலுவையிலிருந்து சொன்ன 1ம் வசனத்தைப்பற்றிச் சொல்லு?

“பிதாவே! இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” (லூக் 23: 34. கேள்வி 354 வாசி).

இது ஒரு ஜெபம். கர்த்தர் சிலுவையிலிருக்கும்போது செய்த முதல் ஜெபமும், கடைசி ஜெபமும் “பிதாவே” என்று ஆரம்பித்தன (வா 46). யாருக்காக ஜெபித்தார் என்ற கேள்வி வரும். இந்த ஜெபத்தின் பிந்தின வார்த்தைகளை வைத்துக்கொண்டு, ரோமப் போர்ச்சேவகருக்காகக் கர்த்தர் ஜெபித்தாரென்று பெங்கெல், குய்னோல், ஈவல்ட் முதலான அநேக வியாக்கியானிகள் சொல்லுகிறார்கள். அவருடைய சத்துராதிகளுக்காக விசேஷமாய் யூதர்களுக்காக ஜெபித்தாரென்று மேயர் சொல்லுகிறார். பரி. பேதுரு(அப் 3: 17), பரி. பவுல்(1 கொரி 2: 8) ஆகிய இவர்களுடைய வார்த்தைகள், மேயருடைய அபிப்பிராயத்துக்கு அநுசரணையாயிருக்கின்றன. கர்த்தர் சொன்ன வார்த்தைகளைக் (லூக் 23: 34) குறித்தே இந்த இரண்டு



வாக்கியங்களும் பேசுகிறதென்று தெளிவாய்த் தோன்றும்.—நம்முடைய பாவம்போக்கும் பலி, சிலுவையாகிய பலிபீடத்திலேறினவுடனே பாவமன்னிப்புப் பிறந்துவிட்டது!

**443.** கர்த்தர் சொன்ன 2ம் வசனத்தைப்பற்றிச் சொல்லு?

“இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” (லூக் 23: 43).

“ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்” என்று கள்ளன் விண்ணப்பம்பண்ணினான். ஆகையால் இயேசுவை மேசியா என்று கள்ளன் நம்பினான்; ஏனென்றால் சிலுவையிலிருக்கிறவரை, “ஆண்டவரே ழி” என்று சொல்லுகிறான். மேசியாவுக்கு ஒரு ராஜ்யம் இருக்கிறதாகவும் நம்பினான்; “உம்முடைய” ராஜ்யம் என்கிறான். அந்த ராஜ்யம், அவருடைய மரணத்துக்குப் பிற்பாடுமிருக்கிற ராஜ்யம் என்று நம்பினான்; ஏனென்றால் இப்பொழுது மரணத்தறுவாயிலிருக்கிறவரை அந்த ராஜ்யத்தின் ராஜா என்று கூறுகிறான். அந்த ராஜ்யம், பூமியில் இருக்குமென்று நம்பினான்; ஏனென்றால் தம்முடைய ராஜ்யத்திலிருக்கிறவரைப் பார்த்து, “உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது என்று சொல்லுகிறான். அந்த ராஜ்யத்திலே மேசியா, ராஜமகிமைபொருந்தினவராய் வருவாரென்று நம்பினான். “ராஜ்யத்தில் வரும்போது” என்கிறான். அப்படியே மத் 25: 31ல் “மகிமைபொருந்தினவராய்” வரும் மனுஷகுமாரனை, 34ல் “ராஜா” என்று சொல்லியிருக்கிறது. அந்த இராஜா, கொல்லவும் உயிர்ப்பிக்கவுந்தக்க சர்வவல்லமையுள்ள தெய்வீகமானவரென்று நம்பினான்; “அடியேனை நினைத்தருளும் என்றான்.” இப்படியாகக் கள்ளனுடைய விசுவாசம், அபூர்வ விசுவாசமாயிருந்தது. கிறிஸ்து தமது இரண்டாம் வருகையைப்பற்றிச் சொன்ன தீர்க்கதரிசனங்களை இந்தக் கள்ளன் கேட்டிருக்கலாம். இந்தத் தீர்க்கதரிசனங்களைப்பற்றி, எருசலேமில் பெரும்பேச்சுண்டாயிருந்ததாகத் தோன்றும்.

“இன்றைக்கு”. இந்த வாக்கியத்தில் இதுதான் முக்கிய வார்த்தை. இது பிந்திய வார்த்தைகளுக்குப் பிரியாச்சம்பந்தமுள்ளது. “நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாயென்று மெய்யாகவே உனக்கு இன்றைக்குச் சொல்லுகிறேன்” என்று திருப்புவதில் பொருளில்லை. நம்முடைய வாக்கியத்திலிருக்கிறபடி, இன்றைக்கு இருப்பாய் என்று திருப்பியிருப்பதே முன்பின் சம்பந்தத்திற்குப் பொருந்திய சரியான பொருளுள்ளது.—ஆகையால் உத்தரிக்கும் ஸ்தலத்துக்கு ஆதாரமில்லை.

“பரதீசு”. பாரசீக மூலத்திலிருந்து (Persian origiu) பிறந்த இந்த வார்த்தைக்கு, சிங்காரவனம் அல்லது தோட்டம் என்பது சரியான அர்த்தம். செப்ற்றியுஜின்ட் திருப்புதலைச் செய்தவர்கள், ஆதி 2: 8ல் ஏதேன்

தோட்டத்திற்கு, பரதீசு என்ற பேரை வழங்கியிருக்கிறார்கள். 2 கொரி 12: 4ல் வருகிற பரதீசு என்ற வார்த்தை, மூன்றும் வானத்தைக் குறிக்கிறது (2 கொரி 12: 2 வாசி). வெளி 2: 7ல் "ஜீவவிருட்சத்தைப்பற்றிப் பேசியிருப்பதால், அதில் வருகிற பரதீசு என்ற வார்த்தை: வெளி 21ம் 22ம் அதிகாரங்களில், புதிய எருசலேமென்று உவமிக்கப்பட்டிருக்கிற புதிய ஏதேனைக் குறிக்கிறது. நமது கர்த்தருடைய வார்த்தைகள், உபமானக் கருத்துள்ள பொது வார்த்தைகளாயிருந்தாலும், காணப்படாத உலகத்தைப்பற்றிய சத்தியத்திற்கு நன்றாய்ப் பொருந்தியவைகள்தான். கள்ளனுக்குச் சொல்லப்பட்ட பரதீசு, மேற்காட்டிய (2 கொரி 12: 4. வெளி 2: 7) பரலோக பரதீசு அல்ல. ஆனால் அது (லூக் 23: 43), கிஹென்னவுக்கு (Gehenna) எதிரடையான ஷியோலின் (Sheol) ஒரு பாகத்தைக் குறிக்கும். (ஆனால் இந்தப் பாகம்: பரதீசென்றும, "ஆபிரகாமுடைய மடி" என்றும் நிதானமில்லாமல் வழங்கப்பட்டது). நல்லோர் தீயோருடைய ஆவிகள் மரணத்தில் சரீரத்தைவிட்டுப் பிரிந்தவுடன் போய்ச் சேருகிற இடத்திற்கு, கிரேக்கில் ஆதேஸ் (Hades) என்றும், எபிரேயுவில் ஷியோல் என்றும் பேர். இந்த இடமானது, கடக்கக்கூடாததும் (Impassable) மாறாததும்("Fixed" i-e irremovable லூக் 16: 23, 26) ஆன ஒரு பெரும்பிளப்பினால் இரண்டு பங்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வாக்கைக் கேட்ட கள்ளன், பரதீசு என்றதை, "ஆபிரகாமுடைய மடி" என்றுதான் அர்த்தம்பண்ணுவான். தாம் மரித்த க்ஷணமுதல் உயிர்த்தெழுந்ததுவரையும் ஒரு பிரத்தியேகமான நிலைமையிலிருந்த கர்த்தர், ("இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" என்று சொன்னபோது), தாமிருந்த இடத்தையல்லாது வேறே இடத்தைக் குறிப்பிட்டிருக்கமாட்டார்.

ஆண்டவரே! உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது,
அடியேனை நினைத்தருளும்!
என்மூச்சொடுங்கும் அந்தக் கடைஇக்கட்டிலும்
நீர்எனக்காயிறந்த கோலத்தைக் காண்பியும்;
அப்போநான் உம்மைப்பார்த்துக் கண்ணேக்கி நெஞ்சிலே
நினைக்க, ஓடிவந்து ரட்சிப்பீர் யேசுவே!

**444.** கர்த்தர் சொன்ன 3ம் வசனத்தைப்பற்றிச் சொல்லு?

"ஸ்திரீயே அதோ, உன் மகன்!...அதோ, உன் தாய்" (யோ 19: 27).

சிலுவைக்காட்சியைப் பார்க்கக் கூடினவர்களெல்லாரும், தம்தம் சுபாவப்படியே செய்தார்கள். பிரதானஆசாரியர் (யோவா 19: 21);-போர்ச்சேவகர்(யோவா 19: 23, 24);-யூதர்கள் (வா 31). அப்படியே கிறிஸ்துநாதரும் தாம் பிள்ளைப் பக்தியாய்ச் செய்யவேண்டிய கடைசிக் கடமையை இப்பொழுது நிறைவேற்றினார். கர்த்தர் மரிக்காததற்கு முன்னும், மரித்துப்போனவரைப்போல் போர்ச்சேவகர் பாவித்து, அவருடைய வஸ்திரங்களைப்பற்றிச் சீட்டுப்போட்டார்கள் (வா 24). அவரோ மனுஷருடைய ஆத்துமாக்களின்பேரில் இந்தச் சமயத்திலும் தமது ராஜஅதிகாரத்தைச் செலுத்துகிறார்.



"ஸ்திரீயே" என்றதில், மூலபாஷையின் கருத்துப்படி, எவ்வளவேனும் மரியாதைக்குறைவில்லை(யோவா 2: 4. 4: 21. 20: 13, 15). பூமிக்குரிய விசேஷமான இனசம்பந்தம், இப்பொழுது முடிவடைகிறது. தாயார் என்ற பட்டப்பேர், ஸ்திரீயே என்ற கண்யமான பேராக மாறினது. மேலும் கிறிஸ்துவின் "சகோதரர்" (மத் 12: 46. 13: 55. யோ 7: 3. கலா. 1: 19) என்னப்பட்டவர்கள், யோசேப்பின் முந்தின தாரத்துப் பிள்ளைகளென்று அநேக வியாக்கியானிகள் சொல்லுகிறார்கள் ஆனால் ஷெயார் ஒன்றைவிட்ட சகோதரராயிருந்தார்களென்பது ஆதிச்சபையாருடைய பொதுவான கொள்கை (கேள்வி 172). கர்த்தருடைய தாயாருக்கு யோவான், சகோதரிமகனாயிருந்தானென்று பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையினாலேதான் (அந்தச் "சகோதரர்" ஆதி விசுவாசிகளாயிருந்தாலும் அப் 1: 14), அவர்கள் வசத்தில் கர்த்தர் தமது தாயாரை ஒப்புவியாமல், பரி. யோவானிடத்தில் ஒப்புவித்தார்.

மத்தேயு 27: 56. மாற்கு 15: 40. யோவான் 19: 25 வாசி.-யோ 19: 25ல் சொல்லிய ஸ்திரீகள் எத்தனை பேர் என்பதைக்குறித்துச் சந்தேகமுண்டு. ஒரு திருப்புதலின்படி, "அவருடைய தாயின் சகோதரியான குலோப்பாசின் மனைவி" என்றாகும். அப்படியாகிற பட்சத்தில், அங்கே நின்றவர்கள் மூன்று பேராகும். இன்னொரு திருப்புதலின்படி, இரண்டு ஜோடியான ஸ்திரீகள் பிரத்தியேகமாய்ச் சொல்லப்படுகிறதாகும். அப்படியாகிற பட்சத்தில், முதல் இருவருடைய பேரைச் சொல்லாமல் "அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரியும்" என்று மாத்திரம் குறிப்பிட்டிருக்கிறது. மற்ற இருவருடைய பேரை, "குலோப்பாசின் மனைவி மரியாளும், மகதலேனா மரியாளும்" என்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. முதல் திருப்புதல் நிதானமானதாய்த் தோன்றவில்லை. ஏனென்றால் இரண்டு சகோதரிகளுக்கு ஒரே பேரிருந்ததென்று நினைக்க ஏதுவில்லை. பிந்திச் சொல்லிய திருப்புதல் நிதானமானதாய்த் தோன்றுகிறது. ஏனென்றால் பேர்களை இப்படி ஜோடிஜோடியாய் எழுதுவது யோவானுடைய பாஷை நடைக்கு ஒத்திருக்கிறதுமல்லாமல், மற்றச் சுவிசேஷங்களுக்கும் ஒத்துவருகிறது. மாற்கு 15: 40ல் "மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமேயும்" என்று சொல்லியிருக்கிறது(மத்தேயு 27: 56 ஒத்துப்பார்). "குலோப்பாசின் மனைவி

மரியாளும்,'' "சின்ன யாக்கோபின் தாயாகிய மரியாளும்'' ஒன்றுதான் என்பதற்குச் சந்தேகமில்லையே (கேள்வி 128). ஆகையால் இங்கே இரண்டு ஜோடியான ஸ்திரீகளிருந்தார்களென்று இயல்பாய் விளங்கும். ஆகவே யோவான் 19: 25ல் "அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரியும்; குலோப்பாசின் மனைவி மரியாளும், மகதலேனா மரியாளும் (ஆக 4 பேர்) நின்றுகொண்டிருந்தார்கள்'' என்று திருப்பப்பட்டிருப்பது சரி (இங்கிலிஷ் புதுத்திருப்புதல் பார்). இப்படியாக செபெதேயுவின் குமாரருடைய தாய், கர்த்தருடைய தாயின் சகோதரியான சலோமேயாகிறாள். கர்த்தருடைய தாயாருக்கு யோவான் அப்போஸ்தலன் கிட்டின இனத்தானாகிறான். பரி. யோவான் தன் பேரையும், தன் சகோதரன் பேரையும் சொல்லாததுபோலவே, தன் தாயின் பேரையும் சொல்லவில்லை. மேலும் பெஷிற்றோ (Peshito சீரியா பாஷை) திருப்புதலில், "குலோப்பாசின் மனைவி மரியாள்'' என்ற வார்த்தைகளுக்குமுன் and (உம்) போட்டிருப்பதால் ஷை திருப்புதலைச் செய்தவர்கள், இந்த அபிப்பிராயம்கொண்டிருந்தார்களென்பது தெளிவாம்.

கன்னிமரியம்மாளின் பிற்காலச் சரித்திரத்தைப்பற்றிய உத்தேச சங்கதிகள் காலஞ் செல்லச் செல்ல, நடந்தசங்கதிகள்போல் மாறின. கர்த்தர் மரித்தபின் பரி. யோவானோடுகூட கன்னிமரியம்மாள் எருசலேமில் 11 வருஷம் உயிரோடிருந்தாளென்றும், அவ்விடத்தில் 59 வயதுள்ளவளாய் மரித்தாளென்றும் நிக்காபோரஸ் கேலிஸ்ற்றி (Nicaphorus Callisti) சொல்லுகிறார். கெத்செமனே தோட்டத்தின் வடஅருகில் அவளுடைய கல்லறை இருந்ததென்பதைப்பற்றி முதல் ஆறு நூற்றாண்டுகளிலிருந்த எந்தப் பிரயாணியாவது சொல்லவில்லை. பிற்காலத்தில் வழங்கின ஒரு பாரம்பரைப்படி, அவ்விடத்தில் கட்டப்பட்ட கோவில் எல்லேனாள் (Helena) கட்டினதாகச் சொல்லப்படுவது மெய்யல்ல என்பது தெளிவாம். கி. பி. 431ல் எபேசு பட்டணத்தில் கூடின சங்கத்தார் எழுதின ஒரு கடிதத்தில்: கர்த்தருடைய தாயார் பரி. யோவானோடுகூட எபேசுவுக்குப் போய், அவ்விடத்தில் மரித்து அடக்கம்பண்ணப்பட்டாளென்று சொல்லியிருக்கிறதாக இன்னொரு பாரம்பரை உண்டு. கன்னிமரியம்மாளைப் பற்றி வேதத்தில் கடைசியாக வருகிற இடம், அப் 1: 14. அவளைத் தன்னிடத்தில் ஒப்புவித்ததைப்பற்றி பரி யோவான் தன் நிருபங்களில் ஒன்றும் சொல்லவில்லை. பரி. ஸ்தேவான், பரி. யாக்கோபு ஆகிய இவர்களுடைய மரணத்தையும், பரி. பவுலின் பாடுகளையும்பற்றி வேதத்தில் ஒருவாறு எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் கன்னிமரியம்மாளின் பிற்காலச் சரித்திரத்தைப்பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லை கி. பி. 540ல் வெளிப்படுத்தின விசேஷத்துக்கு வியாக்கியானம் எழுதின அரேத்தாஸ் (Arethas) அவள் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லவில்லை. பரி. கிறிசொஸ்தம் ஜெபமுறையில்: அவள் பூரணபதவிக்கு எடுத்துக்



கொள்ளப்படாமல், மற்றப் பரிசுத்தவான்களோடேகூட அதற்காகப் பரதீசில் இன்னம் காத்துக்கொண்டிருக்கிறதாகச் சொல்லியிருக்கிறது.

**445.** கர்த்தர் சொன்ன 4ம் வசனத்தைப்பற்றிச் சொல்லு ?

"என் தேவனே ! என் தேவனே ! ஏன் என்னைக் கைவிட்டீர்'' (மத் 27: 46. மாற் 15: 34).

இந்த வார்த்தைகள், அந்தகாரமிருக்கையில் அந்தகாரம் நீங்கச் சற்று முன், 22ம் சங்கீதத்திலிருந்தெடுத்துச் சொல்லப்பட்டன. இந்தச் சங்கீதம், மேசியாவின் பாடுகளைத் தெளிவாய்க் காட்டுகிறதென்பதற்கும், இந்தச் சங்கீதத்தின் முதல் வார்த்தைகளைக் கர்த்தர் உச்சரித்ததினால், அதில் அடங்கிய மகத்தான தீர்க்கதரிசனங்களெல்லாம், அவர் மனதிலிருந்ததென்பதற்கும் சந்தேகமில்லை. இந்த வார்த்தைகள் (மத் 27: 46), மகா ஆழமான கருத்துள்ளவை. பரி. மாற்கு: "எலோயீ ! எலோயீ ! லாமா, சபக்தானி'' என்று சீரியாகல்தேய பாஷையின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தருடைய வாயிலிருந்து பிறந்த அதே வார்த்தைகளை பரி. மாற்கு எழுதுகிறார். இதுபோலொத்த விசேஷ சந்தர்ப்பங்களில், கர்த்தர் சொன்ன வார்த்தைகளையே எழுதுவது அவருக்கு வழக்கம்.

"ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்ற கேள்விக்கு, கெத்செமனே தோட்டத்தில் அவர் சொன்ன ஜெபவார்த்தைகளே உத்தரவாயிருக்கிறது (262 கேள்வி); அதாவது பாவத்துக்குப் போந்த தண்டனையைத் தேவகுமாரன் தம்மேல் ஏற்றுக்கொண்டு, தேவசித்தத்தைக் குறையற நிறைவேற்றினாலன்றி பிராயச்சித்தம் முடியாதென்பதாம்.

சங்கீதத்திலும், அதிலிருந்து கர்த்தர் எடுத்துச்சொன்ன வசனத்திலும், கைவிடுதலைப்பற்றிச் சொல்லிய வார்த்தையே அவருக்கும் பிதாவுக்குமிருந்த ஐக்கியம் பிரியவில்லை என்ற நிச்சயத்தைக் காட்டுகிறது. எப்படியென்றால் "கைவிட்டீர்'' (Didst Thou), என்ற வார்த்தை, கடந்த காலமாயிருக்கிறது ( "My God, My God, why **DIDST** thou **FORSAKE** me''). ஆகவே அவருக்கு அகோர வாதையும் கஸ்தியும் பெருகியிருந்த இதற்கு முந்தின சமயத்தைப்பற்றிச் சொன்னதால், ஷை கஸ்தியின் அகோரத்தைப் பற்றித்தான் "கைவிட்டீர்'' என்று சொன்னதாகிறது. அப்படியே இதைப் பற்றி கல்வீன் (Calvin) சொல்லுகிறதாவது: "கர்த்தருக்கு அவநம்பிக்கையாவது திகைப்பாவது இருந்ததில்லை. ஆனால் அவருக்கு அகோர கஸ்தியிருந்தது. எவ்வளவும் மாசில்லாத அவர், மனுஷனாகவும் குமாரனாகவும் பிதாவை முற்றிலுமாய்ச் சார்ந்திருந்தது எவ்வளவோ, அவ்வளவாய் அவருடைய கஸ்தியின் அகோரமுமிருந்தது''என்பதே. வழக்கமாய் ஆழ்ந்த கருத்துச் சொல்லுகிற பெங்கெல் (Bengel) இதற்குப் பண்ணுகிற வியாக்கியானமாவது: "கைவிட்டீர் என்ற வார்த்தை நிகழ்காலத்தைக் குறியா

மல் கடந்த காலத்தைக் குறிக்கிறது. அவர் வாய்விடாமல் மௌனமாய்ச் சகித்த போராட்டம் முடிந்தபொழுது இந்த வார்த்தைகளைச் சொன்னார்" என்பதே. இப்படியாகக் கர்த்தர் உத்தரித்த மகா வேதனையும் அடைந்த அகோர கஸ்தியுந்தான் இந்த வசனத்தின் பொருள் என்றறிக. (10ம் பக்கம் சேர்த்து வாசி).

"பரிசுத்தமும் இரக்கமுமுள்ள இரக்ஷகரே, எங்கள் அந்தியகாலத்தில் நேரிடும் எந்த வேதனைகளினாலும் நாங்கள் உம்மைவிட்டுப் பிரியாதபடி செய்தருளும்". (செபபுத். மரி. அட. முறைமை).

**446.** கர்த்தர் சொன்ன 5ம் வசனத்தைப்பற்றிச் சொல்லு?

"தாகமாயிருக்கிறேன்" (யோ 19: 28).

நம்முடைய கர்த்தர் பலியாகிறவேளை கிட்ட நெருங்கிவிட்டது. அவருடைய சரீரபலமெல்லாம் போயிற்று. அவருடைய மரணபாதைகளில் இதுவும் ஒன்றாகச் சொல்லப்படுகிறது. பாவத்திற்காக வரவேண்டிய ஆக்கினையின் பாத்திரத்திலுள்ள கடைசி அடிமண்டியையும் பானம் பண்ணினார். கர்த்தர் தமது சரீரப்பாடுகளைப்பற்றி வாய்விட்டது, "தாகமாயிருக்கிறேன்" என்ற இதொன்றுதான். "வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக" அப்படி வாய்விட்டதாகச் சொல்லியிருக்கிறது. மேசியா பூரணராவதற்கு (எபி 2: 10. 5: 9) வேண்டிய கடைசிக்காரியமாக அவர் இப்படி வாய்விடவேண்டிய அவசியமிருந்தது. ஒரு குறிப்பான தீர்க்கதரிசனத்தைப்பற்றியல்ல, பழயஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் தம்மில் நிறைவேறியிருக்கிறதென்று காட்டும்படி "தாகமாயிருக்கிறேன்" என்றார்; அதாவது தாம் பூரணமாக்க அல்லது செய்துமுடிக்க (யோ 4: 34. 17: 4) வந்த கிரியையை "தாகமாயிருக்கிறேன்" என்ற வார்த்தையோடு முடித்தார். ஆகவே அந்தக் கிரியை முற்றுப்பெற்றதோடு, தீர்க்கதரிசனங்களெல்லாம் முற்றுப்பெற்றன. இப்படியாகத் தீர்க்கதரிசனங்களும், பூமியிலே செய்யும்படி பிதா அவருக்கு நியமித்த கிரியையும் (யோ 17: 4) பூரணமாயின; அவர் தாமும் பூரணரானார் (எபி 5: 7).

**447.** கர்த்தர் சொன்ன 6ம் வசனத்தைப்பற்றிச் சொல்லு?

"முடிந்தது" (யோ 19: 30).

அவருடைய பூமிக்குரிய ஜீவனைப் பிதாவிடத்தில் ஒப்புக்கொடுக்கத்தக்கதாகச் சகலமும் முடிந்தது. பழயஏற்பாட்டில் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள், முன்குறிப்புகள், பலிகள் ஆகிய யாவும் முடிந்தது. பாவத்திற்காகப் படவேண்டிய கடைசிப்பாடு முடிந்தது. அவர் உலகத்தில் வந்த நோக்கமெல்லாம் சித்தியாகி முடிந்தது. பிராயச்சித்தத்திற்காக அவர் நிறைவேற்றவேண்டிய ஒவ்வொரு கிரியையும், அவர் படவேண்டிய ஒவ்வொரு பாடும் பாக்கியில்லாமல் முடிந்தது. எல்லாம் முடிந்தது. இரக்ஷிப்பு முடிந்தது. (லூக் 18: 31. 22: 37. 2 தீமோ 4: 7. மத் 27: 50).

---

## II. நாளாகமம்.

(தொடர்ச்சி.)

ஆசாவுக்கும் இஸ்ரவேலின் இராஜாவாகிய பாஷாவுக்கும் அவர்களுடைய நாட்களில் எல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தாலும் 1 இரா. 15: 16. பொதுவான பெரிய யுத்தம் நடக்கவில்லை. கி. மு. 940ல் அதாவது இராஜ்யம் இரண்டாகப் பிரிந்தபின், (ரெகொபெயாம் 17௵ 12 அதி: 13. அபியா 3௵ 13 அதி: 2. ஆசா 15௵ 15: 10.) 35௵வரை தேசம் அமரிக்கையாயிருந்தபின்பு, ஆசாவின் 36ம் வருஷத்தில் இஸ்ரவேலின் இராஜாவாகிய பாஷா யுத்தத்துக்கு வந்தான். 1 இராஜா 16: 8ல் ஆசாவின் 26ம் வருஷத்தில் பாஷா இறந்துபோனதாகவும், அவன் வம்சம் அழிந்துபோய் உம்றி இராஜாவாயுமிருக்க, இதெப்படியாகும். ஆகையால் ஆசாவின் 15ம் வருஷத்திற்குபின் யுத்தம் நடந்திருக்கும். யோசேப்புஸ் ஆசாவின் 26ம் வருஷத்திலென்கிறான். பாஷா தன் ஜனம் ஆசாவண்டை போகாதபடிக்கு ராமாவைக் கட்டினான்.

இதற்குத் தானும் தன் தகப்பனும் தேவாலயத்தில் பிரதிஷ்டையாகக் கொடுத்திருந்த கொள்ளைப்பொருள்களையெல்லாம் எடுத்து சூரியாவின் இராஜாவுக்கு லஞ்சக்கமாகவும், பாஷாவை ஒடுக்கவும், ராமாவைக் கட்டாதபடிக்கு நிறுத்தவும், வெள்ளியையும், பொன்னையுங் கொடுத்து அனுப்பினான் இது ஆசாவின்மேல் பெரிய குற்றம். (1) தேவனுக்கென்று கொடுக்கப்பட்ட பொருள்களை அவசரமின்றி பெனாதாத்துக்குக் கொடுத்தது குற்றம். (2) தேவனுடைய வல்லமையையும் நன்மையையும் முந்தின யுத்தத்தில், நன்றாய் அறிந்திருந்தும் இப்போது தேவனைப்பற்றிய நம்பிக்கையுமில்லாமல், வீண்பயத்தினாலே செய்ததும் குற்றம். (3) பாஷாவோடே செய்திருக்கிற உடன்படிக்கையை மீறும்படிக்கு நோக்கமாகக் கொடுத்ததாலும் குற்றம். (4) அந்தப்படி தேவனால் இஸ்ரவேலருக்குக் கொடுத்த பட்டணங்களை அபகரிக்கச் செய்ததும் குற்றம். தனக்கும் பின்பு தன் பின்சந்ததிக்கும் துன்பத்தை சூரிய இராஜனால் வருவிக்க ஏதுவானதால் ஆசாவின்மேல் இது குற்றம்தான். (5) குற்றமில்லாத அநேக இரத்தஞ் சிந்தப்படக் காரணமானதாலும் குற்றமே.

இந்தக் குற்றத்துக்காக ஆசா கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய அனானியாவினாலே கடிந்துகொள்ளப்பட்டார். 2 நாளா. 16: 7—11. இந்த அனானி 1 இரா. 16: 1லும் 2 நாளா. 19: 2லும் சொல்லப்படுகிற ஏகூவின் தகப்பன். ஆசா பெனாதாத்தோடே உடன்படிக்கைசெய்தது, தன்னுடைய முந்தின அனுபோகத்துக்கு விரோதமாகவும் தேவச்செயலுக்கு விரோதமாகவும், தன் சுயநயத்துக்கு விரோதமாகவும் 2 நாளா. 16: 7—9. நடந்துகொண்டதை தேவவாக்காக அனானி சொல்ல ஆசா புத்தியீனமாய் அவனைக் காவலில்போட்டான். தீர்க்கதரிசியின்பட்சமானஜனங்களையும் துன்பப்படுத்தினான். இப்படியே மிகாயாவும் 2 நாளா. 18: 26. எரேமியாவும் 20: 2. யோவான்ஸ்நானகனும் மத். 14: 3. காவலில்போடப்பட்டார்கள்.

கி. மு. 916ல் அவனுடைய 39ம் வருஷத்தில் தன் காலில் வியாதியுண்டாகி ஆசா அதிகமாய் வருத்தப்பட்டான். ஆசா தீர்க்கதரிசியை விலங்கடித்தான். தேவன் ஆசாவை விலங்கடித்தார். இது அவன் பாவத்

துக்கு வந்த சரியான தண்டனை. இந்தக்காலத்தில் தேவனையல்ல பரிகாரிகளைத் தேடினதும் குற்றம். இவர்கள் அஞ்ஞானிகளான வைத்தியரானதால் அதிகக் குற்றம்.

கி. மு. 914ல் தன் 41ம் வருஷத்தில் ஆசா மரித்தான். இவன் யூதனைப்போல அல்ல புறஜாதியானைப்போல அடக்கம்பண்ணப்பட்டான். ஆதி. 50: 2. 2 நாளா. 21: 19. மாற். 16: 1.

## கேள்விகள்.

1. ஆசா கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தது எப்படி? அதினால் அவனுக்கு வந்த பலனென்ன?

2. "நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார்" இதைச் சொன்னதார்? இந்தச் சத்தியத்தைப் பல உதாரணங்களால் ரூபியும்.

3. கேபா, மிஸ்பா, ராமா, மாரேசா இந்த இடங்களில் நடந்த விசேஷங்களென்ன?

4. ஆசாவுடைய தப்பிதங்களென்ன? அதற்கு எப்படித் தண்டிக்கப்பட்டான்?

5. சத்தியத்தைச்சொல்லித் துன்பப்பட்ட தீர்க்கதரிசிகளார்?

## 4. யோசபாத்து. (கர்த்தர் நியாயந்தீர்க்கிறார்.) கி. மு 914. 2 நாளா. 17—22 அதி.

இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபின் 4ம் வருஷத்திலே யூதேயாவிலே யோசபாத்து தன் 35ம் வயதிலே இராஜாவாய் 29 வருஷம் அரசாண்டான். இவன் காலத்திலே (2 நாளா. 16: 2.) இஸ்ரவேலர் சற்று பெலங்கொண்டு மேற்கொண்டிருந்தபடியால் யோசபாத் இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பலப்பட்டான். இரத்தஞ்சிந்தாமல் யோசபாத் அமரிக்கையாய், தன் தகப்பன் செய்தபடி அந்நிய இராஜாக்களின் ஒத்தாசையைத் தேடாமல் தன் இராஜ்யத்தின் வட எல்லையை அரண்படுத்தினான். இதினால் ஆகாப் அவனை உறவுபண்ணினான்.

இவர் நல்ல இராஜா. தாவீது இராஜாவின் வழிகளில் நடந்தார். இதுவே அவருக்குச் சட்டம். 1 இரா. 15: 3, 11. 2 இரா. 14: 3. 16: 2. 18: 3. தாவீது இராஜாவுடைய பிற்காலத்து நடபடி 1 இரா. 15: 5. குற்றின்பமும் பெருமையுமுள்ளதானதால், தாவீது இராஜா முந்தி நடந்த பரிசுத்த நல்ல வழிகளில் தேவனுக்குப் பிரியமாய் நடந்துவந்தான். தாவீது கர்த்தரைத் தேடி அவரைப் பின்பற்றினதுபோல யோசபாத்தும் நடந்தார். 1 கொரி. 11: 1. செபத்துவகென்றில் தாவீதுக்குப் பதிலாக, ஆசாவென்று கண்டிருக்கிறது. (2) இவன் தேவனுடைய கற்பனைப்படி நடந்துகொண்டான், இவன் இஸ்ரவேல் இராஜாவோடே கூட்டுறவுகளிருந்தாலும், கன்றுக்குட்டி ஆராதனையிலும் அவர்கள் செய்கைகளின்படி நடக்கவில்லை. (3) கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகங்கொண்டிருந்தது. (6 வச.) விக்கிரகங்கள் வைக்கப்பட்டு ஆராதனைசெய்த மேடைகளையும், தோப்புகளையும் அகற்றிப்போட்டான். ஆசாவின் பின்னாட்களில் அவை எழும்பியிருக்கும்.

யோசபாத் நல்லவராகவும் தன் சந்தியாருக்கும் பிரயோசனமுள்ளவராயுமிருந்தார். எப்படியெனில்,



1. கி. மு. 912ல் யோசபாத்தின் 3ம் வருஷத்தில் விக்கிரகங்களை அகற்றியபின் நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும்படி (5) பிரபுக்களையும், (2) ஆசாரியர்களையும், (9) லேவியரையும் யூதேயாவெங்கும் அனுப்பினான். இந்தப் பிரபுக்கள் நியாதிபதிகளாகத் தீமைசெய்தவர்களைத் தண்டிக்கும்படிக்கல்ல அவர்கள் நடக்கவேண்டிய பாதையைப் போதிக்க அனுப்பப்பட்டார்கள். ஜனங்கள் லேவியர் போதிப்பைக் காதுகொடுத்து கேட்க மனமில்லாத பட்சத்தில் அதிகாரத்தோடே அவர்களைக் கேட்கச் செய்யும்படி அவர்களோடுகூட பிரபுக்களும் அனுப்பப்பட்டிருப்பார்கள். 2 நாளா. 17 அதி. 7—9

2. இவர் தேவதயவைப் பெற்றுப் பாக்கியசாலியாயிருந்தார். தேவன் யோசபாத்தோடிருந்தார். (3) வச. தேவன் அவன் இராஜ்யத்தைத் திடப்படுத்தினார். (5) வச. யூதர் அவருக்குக் கனமாகக் காணிக்கைகளைக் கொடுத்தார்கள். 1 சாமு. 10: 27. 1 இரா. 10: 25. 2 நாளா. 32: 23. இவருக்குக் கனமும் ஐசுவரியமுமிருந்தது. யூத ஜனங்கள் தங்களுக்குப் போதிக்கும்படி போதகன்மாரை அனுப்பினதற்கு, நன்றியறிதலாகக் காணிக்கைகளைக் கொடுத்தார்கள்.

3. யூதேயாவைச் சுற்றியிருக்கிற தேசத்தார்மேல் கர்த்தராலுண்டான பயங்கரம் வந்ததினால் யோசபாத்தோடு யுத்தமில்லை. 2 நாளா. 17: 10. இவர் தாவீதைப்போல வீரனுமல்ல, சாலொமோனைப்போல ஞானியுமல்ல. அப்படியிருக்க எல்லாரும் அவரைக் கனஞ்செய்ய தேவன் வகைசெய்தார். யோசபாத் ஜனங்களுக்குப் போதிக்கும்படி போதகன்மாரை அனுப்ப, அந்த வேலைக்குத் தடைவராதபடி செய்தார். யாக்கோபின் மக்கள் பேத்தேலில் தேவனை ஆராதிப்பதற்குப் போகையில் தேவன் அவர்களுக்குத் தீமைசெய்யாதபடி சூழவிருக்கிற ஜனங்களுக்குப் பயத்தைப் போட்டதுபோல ஆதி. 35: 5. யாத். 34: 24.

4. பெலிஸ்தரும் அரபியரும் அவருக்குக் கீழடங்கி, அவருடைய தயவைப் பெறும்படி காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள். பெலிஸ்தர் தாவீதின் காலத்தில் கீழ்ப்படுத்தப்பட்டார்கள். 2 சாமு. 8: 2. ஆசாவின் காலத்தில் ஜெயிக்கப்பட்டிருந்தார்கள். 2 நாளா. 14: 14, 15. சங் 72: 10.

5. யூதாவின் பட்டணங்களில் ரஸ்துக்களைச் சேர்த்துவைத்தான். களஞ்சியங்களை இடித்துப் பெரிதாகக் கட்டினான். 2 நாளா. 17: 12 சமாதானத்தைக் காக்கவென்றும், யுத்தஞ்செய்யும்படிக்கென்றும், சேனைகளுக்குக் கோட்டைகளைக் கட்டினான்.

6. இவருக்குப் பலமான சேனையுண்டு யூதாவில் 3. பென்யமீனில் 2. ஆக 5. ஜெனரல்களுண்டு. இவர்களுக்குள் 1160,000 சிப்பாயிகளுண்டு. அபியா (4) லட்சம் ஜனங்களை மாத்திரம் படைக்குச் சேர்த்திருந்தான். 2 நாளா. 13: 3. ஆசாவுக்கு 6 லட்சம் சேனை. 2 நாளா. 14: 8. யோசபாத்துக்கு இரட்டிப்பான சேனையிருந்தது. ஏனென்றால் (1) ஆபிரகாமின் வித்தை அதிகமாய்ப் பெருகப்பண்ணினார். (2) அதிகச் சமாதானமிருந்தது. (3) எருசலேம் பட்டணம் முன்னிலும் அதிகமாய் விஸ்தாரமாக்கப்பட்டது. (4) அநேகர் இஸ்ரவேல் இராஜ்யத்திலிருந்து வந்தார்கள். 15: 9. (5) யோசபாத் தேவனால் விசேஷித்த ஆசீர்வாதம்பெற்றிருந்தபடியால் தேவன் அவரைப் பெரியவராக்கினார். (6) எல்லாவற்றிலும் முக்கியமாக யோசபாத்து தேவபக்தியுள்ளவராய் ஜனங்களுக்குப் போதிக்கும்படி போதகன்மாரை நியமித்தபடியால், தேவன் சுற்றுத்தேசத்தாருக்குப் பயத்தைப் போட்டதினால் இவர் பெரியவரானார்.

கி. மு. 908ல் யோசபாத்து தன் குமாரன் யோராமுக்கு, ஆகாப்பின் மகள் அத்தாலியாளை விவாகம்பண்ணுவித்தான். இரண்டு இராஜ்யத்தையும் ஒன்றாக்கிப்போடலாமென்றுதானோ அவன் ஞானமற்றவனாய் விக்கிரகாராதனைக்காரனோடே சம்பந்தம்பண்ணினது. இச்சம்பந்தம் யோசபாத்துக்கும் அவன் இராஜ்யத்துக்கும் பெரிய தீமையை வருவித்துப்போட்டது.

கி. மு. 907ல் ஆகாப் ராமோத் கிலேயாத்தைச் சுதந்தரிக்க சூரியரோடே சண்டைக்குப்போகையில் யோசபாத்துங் கூடப்போனது அவர் மேலுள்ள பெரிய குற்றம். அது லேவியருக்குக் கொடுக்கப்பட்ட அடைக்கலப் பட்டணங்களிலொன்று. யோசு. 21: 38. பெனாதாத் விட்டுவிடுவதாகச் சொன்ன பட்டணம் இதுவே. 1 இரா. 20: 31. அந்த உடன்படிக்கையின்படி பெனாதாத் நடந்துகொள்ளாததால் யுத்தம் நேர்ந்தது. பக்தியுள்ள யோசபாத்தின் ஒத்தாசையையும் விரும்புகிறான். இஸ்ரவேலுக்கு விரோதமாய்த் தன் தகப்பன் செய்த குற்றத்தை நிவாரணஞ்செய்ய (1 இரா. 15: 19, 20.) சூரியருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யச் சம்மதித்தான். 1 இரா. 22 அதி. 2 நாளா. 18 அதி.

யோசபாத்து யுத்த விஷயத்தில் கர்த்தருடைய வார்த்தையை அறியும்படி விரும்பினபோது, யோசபாத்து யுத்தத்தைப்பற்றி நல்லெண்ணங் கொள்ளும்படிக்கும் அவனை வஞ்சிக்கும்படிக்கும் ஆகாப் தன்னுடைய பாகாலின் 400 தீர்க்கதரிசிகளை, தேவனுடைய நாமத்தின்பேரில் பேசும்படி தந்திரமாய்ப் பயிற்றுவித்தான். இவர்சள் கள்ளத்தீர்க்கதரிசிகளாகவிருந்தும், (எரே. 23: 30.) நல்லவர்கள் பாஷையாகப் பேசுகிறார்கள். இவர்களுடைய பொய்யை யோசபாத் குறிப்பாய் அறிந்துகொண்டு கர்த்தருடைய தீர்க்கதரிசியை விசாரிக்கிறான். இஸ்ரவேல் இராஜ்யத்திலே எலியா, எலிசா என்ற தீர்க்கதரிசிகளிருந்தாலும் சமீபத்திலில்லாததால் மிகாயா ஒருவனை மாத்திரம் சமாரியாவிலிருந்து வருத்தி விசாரித்தான். 1 இரா. 20: 38ல் ஆகாபைக் கடிந்துகொண்ட தீர்க்கதரிசி இவராயிருக்கலாம். இதினிமித்தமே அவரைச் சிறைச்சாலையில் போட்டுமிருப்பான். (2 நாளா. 18: 25, 26.) அதினால்தான் ஆகாப் அவனைப் பகைத்தான். 2 நாளா. 18: 7. அவனைத் திரும்பவும் சிறைச்சாலையில் போடச்செய்தான். மிகாயாவிருந்த இடமும் சல்தியாய் அவனுக்குத் தெரிந்துமிருந்தது. 2 நாளா. 18: 8.

இரண்டு இராஜாக்களும் இராஜவஸ்திரம் தரித்து, ஒலிமுகவாசலிலிருக்கையில் 400 தீர்க்கதரிசிகளுக்குத் தலைவனான சிதேக்கியா தாங்கள் சொல்வதை உறுதிப்படுத்த, கனத்துக்கும் வல்லமைக்கும் அடையாளமாக இருப்புக்கொம்புகளை உண்டாக்கி, தேவவாக்குப்போல பொய்யாய் நீர் சீரியரை முட்டிப்போடுவீரென்று தீர்க்கதரிசனம் சொன்னான். எசா. 20: 2. எரேமி. 27: 2. இவர்களுக்கொத்தபடியே மிகாயாவும் பேசும்படி பயிற்றுவிக்கப்பட்டான். அதற்கு அவர் "என தேவன் சொல்வதையே சொல்வேனென்றான்." அப்படியே பீலேயாம் சொன்னான். 2 நாளா. 18: 13. எண். 22: 38. மிகாயா துவக்கத்தில் பொய்த் தீர்க்கதரிசிகள் சொன்னதுபோல, பரிகாசமாகவோ ஈரர்த்தங்கொண்டதாகவோ சுய வார்த்தைகளாய்ச் சொன்னான். 2 நாளா. 18: 14. "தீர்க்கதரிசிகள் பொதுவாய்ச் சொல்லுகிறபடி கர்த்தர் இப்படிச் சொல்லுகிறார்" என்றாவது, "இது கர்த்தருடைய வார்த்தை" என்றாவது சொல்லவில்லை (2) ஆகாபும் உடனே அவன் கேலியாயும், தந்திரமாயும் பேசின சாடையை அறிந்துகொண்டான். 2 நாளா. 18: 15. ஆதி. 3: 22. நியாயாதி. 10: 14. 1 இரா.



18: 27. பிர. 11: 9. எசே. 20: 39. ஆமோ. 4: 5. இதெல்லாம் (Ironical) எதிர்பொருள்படுகின்ற வாசகம்.

மிகாயா கண்டிப்பாய்க் கேட்கப்பட்டபின்பு, இராஜன் யுத்தத்தில் மரித்துப்போவதாகவும், சேனை சிதறிப்போவதாகவும் ஆவியிலே, அல்லது தரிசனையில் சொன்னார். 2 நாளா. 18: 16. இராஜாவாகிய மேய்ப்பனை இழந்த ஆடுகள்போல் ஜனங்களுக்குள் சேதமில்லாமல் கிலேயாத்தின் மலைகளில் சிதறிப்போவதாகச் சொன்னார். சகரி. 13: 7. எண். 27: 17. எசா. 40: 11. 44: 28. எசே. 34: 23

இதுவுமல்லாமல் மிகாயா அந்த 400 தீர்க்கதரிசிகளும் சாத்தானாலே போதிக்கப்பட்டு, துஷ்ட பெனாதாத்தைக் கொன்றுபோடாமல் விட்ட குற்றத்துக்கு ஆகாப் அவனும் சூரியராலும் கொல்லப்படும்படி பொய்யான தீர்க்கதரிசனஞ்சொல்ல தேவன் இடங்கொடுத்ததாகச் சொல்லுகிறார். இந்தத் தரிசனையில்; (1) கர்த்தர் இராஜாவாய் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறதைக் கண்டார். எசா. 6: 1. தானி. 7: 9. யோபு 1: 6. சகரி 1: 10. மத். 18: 10. (2) தேவதூதரின் எண்ணிறந்த சேனைகள் அவருக்குச் சூழநிற்கிறதையுங் கண்டார். இரக்கத்தை நடப்பிக்க அனுப்பப்படும் தூதர்கள் வலதுபக்கத்திலும் கோபத்தை நடப்பிக்கக் கற்பிக்கப்படுகிறவர்கள் இடதுபக்கத்திலும் நின்றார்கள் (3) இராஜாக்களை எழுப்புவதும், விழுத்துவதுமான வேலையும், யுத்தம் முதலிய இராஜ்யபார காரியங்களையும் தேவன் தமது சித்தப்படி நடத்துகிறார். (4) தேவன் பாவிகளைத் தண்டிப்பதற்கு எந்தவகையையும் கையாடுகிறார். (5) பொய்யான ஆவிகளும் ஒருவனுடைய அழிவுக்கு பொய்களைப் பயிற்றுவிக்கிறார்கள். (6) இப்படி பொய்களைச்சொல்லி மனிதரை எத்துகிறது தேவகட்டளைப்படியல்ல, பசாசுகளின் இயல்பான தன்மையாம். தேவன் தமது ஆலோசனையின்படி அவர்களுக்குத் தண்டனையாகவிடுகிறார். யோபு 12: 16. அறி. 20: 7, 8. 2 தெச. 2 தெச. 2: 11, 12. இப்படியாக மிகாயா யுத்தத்தின் மோசத்தையும், ஆகாபை தைரியப்படுத்தின கள்ளத் தீர்க்கதரிசிகளின் வாக்கை நம்பினதினாலுண்டான மோசத்தையும் காட்டினார்.

பசாசுகளை பரமசேனையென்றழைப்பது ஆச்சரியமல்லவா? (1) பசாசுகளின் முந்தின இருப்பிடம் பரமண்டலமே. மனிதர் அவைகள் வந்த இடத்தைப்பற்றி அப்படி அழைப்பதால் ஆச்சரியமல்ல. (2) பரமண்டலமென்பது பசாசுகளின் இருப்பிடமாகிய ஆகாயத்தையும் சொல்லலாமே. ஆதி. 1: 20. 7: 11. 8: 2. 27: 28. உபா. 4: 11. 11: 11. எபே. 2: 2. அங்கேதான் மிகாவேலுக்கும் வலுசர்ப்பத்துக்கும் சண்டை. அறி. 12: 7.

அளவற்ற ஞானமும் அறிவுமுள்ள தேவன் தமது சிருட்டிகளிடத்தில் ஆலோசனைக் கேட்டதாகச் சொல்வது ஆச்சரியமல்லவா? இது மனிதர் பாஷையாய், சிற்றறிவுள்ளவர்களுக்கு தேவகாரியம் விளங்கச்செய்ய இப்படிச் சொல்லியிருக்கிறது.

பசாசுகளைப் பொய்யின் ஆவியாகப் பேசவிட்டது சரியா? தேவன் கட்டளையாக அனுப்பாமல், அந்த ஆவிகளுக்கிடங் கொடுத்தார். அப்படியே 1 சாமு. 16: 10ல் சவுலைத் தண்டிக்கவும், மத். 8: 31ல் பன்றிகளை அழிக்கவும், யூதாசைத் துரோகம்பண்ணவும், யோவா. 13: 27. தேவன் பசாசுக்கு இடங்கொடுத்தார். தடுக்காதபடிக்குத் தமது கிருபையை அவர்களிலிருந்தெடுத்துப் போட்டார் என்பதாய்ப் பொருள்கொள்ளும்.

சத்தியத்தைப் பேசின மிகாயாவை சிதேக்கியா அடித்தான். 2 நாளா. 18: 23, 24. கன்னத்தில் அடிப்பது நிந்தைக்கு அடையாளம். மாற். 14: 65.

எரே. 20: 2. யோபு 16: 10. இதற்காக அவனுக்குச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி யுத்தத்துக்குப் போனதில் சிதறி பயத்தினால் பீலேயாம் செய்ததுபோல எண். 31: 8 ஒளித்தான். மிகாயாவும் சிறைச்சாலையில் போடப்பட்டான். உபா. 16: 3. ஏசா. 30: 20. 2 நாளா. 18: 25. 25: 16

மீகாயா சொன்ன வெளிப்படுத்தலினால் உண்டான பலன் என்னவென்றால் ஆகாப் அவர் வார்த்தைகளை நம்பாததால் யுத்தத்துக்குப் புறப்பட்டுப்போனான். பக்தியுள்ள யோசபாத்து போனதுதான் ஆச்சரியம். இவர் ஆகாபினால் வஞ்சிக்கப்பட்டோ, 400 தீர்க்கதரிசிகளும், ஏகவாக்காய்த் தந்திரமாய்த் தேவநாமத்தினால் பேசினதை நம்பியோ, மிகாயாவும் போகவேண்டாமென்று சொல்லாததினாலோ—ஆகாபின்மேலுள்ள பட்சத்தினாலோ—யுத்தம்செய்வது நியாயமென்ற எண்ணத்தினாலோ—ஆகாபோடேகூடப் போனான். ஆகாப், சூரியருடைய கோபத்தைத் தணிக்கவோ, தீர்க்கதரிசியின் வார்த்தையைப் பொய்யாக்கவோ வேஷமாறிப்போனான். ஆனாலும் தேவதீர்மானப்படி அவன் காயப்பட்டுச் செத்தான். யோசபாத்து (2 நாளா. 18: 31.) தன் தப்பிதத்தினாலே மோசத்துக்குள்பட்டும் பின் கர்த்தரை நோக்கி வேண்டுதல்செய்ததினால் காக்கப்பட்டான். அவனவன் தன் தன் பட்டணத்துக்கு ஓடிப்போக யோசபாத்தினால் இராணுவத்தில் பறைசாற்றப்பட்டது.

இந்தக் குற்றத்துக்காக யோசபாத் ஏகூ தீர்க்கதரிசியால் கண்டிக்கப்பட்டார். மோசமில்லாமல் சுகத்தோடே யோசபாத்து எருசலேமுக்கு வந்தது தேவதயவுதான். 2 நாளா. 19: 1—3. அவருக்கும் மரணத்துக்கும் ஒரு அடிமாத்திரம் வித்தியாசம். அவர் தமது குற்றத்தை உணரும்படி தீர்க்கதரிசியைவிட்டுக் கண்டித்ததும் தேவதயவே. ஏகூவுடைய தகப்பன் ஆசாவைக் கண்டிக்கஆசா அவனைச் சிறைச்சாலையில் போட்டான். யோசபாத்தோ தன் குற்றத்தை ஒத்துக்கொண்டு சீர்ப்பட்டார்—இந்தப் பாவத்தினிமித்தம் தேவனுடைய கடுங்கோபமும் வந்தது அவன் தேசத்துக்கு விரோதமாய் மோவாபியரை வரச்செய்ததாலும் 2 நாளா. 20 அதி. இவருடைய மூத்த மகன் யோராம் தன் மக்களைக் கொலைசெய்யும்படி விட்டதினாலும் 21: 4. ஏகூ இராஜனால் தன் பேரப்பிள்ளைகள் சாகும்படி செய்ததாலும் 2 இரா. 9: 27. 10: 13, 14. தேவன் தமது கோபத்தைக் காட்டினார். அவருடைய மனந்திரும்புதலினால் தேவனுடைய கோபம் மாறிற்று. இவரிடத்தில் நன்மையான காரியங்களிருந்தபடியால், விக்கிரகாராதனையை அழித்து தேவனைத் தேடினபடியால் அவரை முழுவதுமாய்த் தள்ளிப்போடவில்லை. இவர் தேவனைத் தேட தமது இருதயத்தை நேராக்கினதாக நல்ல சாட்சியிருக்கிறது. நீதி. 16: 1 பிலி. 2: 13.

கி. மு. 896ல் இவர் தேவனால் கடிந்துகொள்ளப்பட்டபின்பு,

1. எருசலேமில் வாசமாயிருந்தான். 2 நாளா. 19: 4. அவன் ஆகாபிடத்தில் திரும்பப்போகாமல் தன் சொந்தக் காரியத்தைப்பற்றிக் கவலையாயிருந்தான. “ஞானமுள்ளவனைக் கடிந்துகொள், அவன் ஞானத்தில் தேறுவான்.” நீதி. 9: 8, 9

2. இவர் ஒருதரம் தமது உத்தியோகஸ்தர்மூலமாய் (17: 7.) ஜனத்துக்குள் நன்மைசெய்யப்போனவர் இப்போது தாமாகவே வடக்கேயும், தெற்கேயுமான எல்லா இடங்களுக்கும், லேவியர்முதலான அரண்மனை உத்தியோகஸ்தரோடே போய் எல்லா ஜனங்களையும் கர்த்தரிடமாய்த் திரும்பினார். தீர்க்கதரிசியினால் தான் முன்செய்த மார்க்கச் சீர்திருத்தம் புகழப்பட்டும், அதினால் தேவகோபத்துக்குத் தப்பினதுமான



நல்ல செய்தியைக் கேள்விப்பட்டபின் எழுப்புதலடைந்து தாமாகவே போய் அதிபதிகளுடன ஜனங்களைப் போதித்துத் திருப்பினார். இவர் இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபோடே உறவாடினதைக் கண்ட விக்கிரகபத்திக்கேதுவான யூதர் மருளவிழுந்து துரோகஞ்செய்ததால் தன்னால் கெட்டுப்போனதை அறிந்து வெகு முயற்சியோடேபோய்ச் சீர்ப்படுத்தினார்.

# மோட்ச லோகம்.

எபி. 11: 16.

“தேவன் அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே.”

(தொடர்ச்சி.)

5. இந்நகர் யாருக்கென்று ஆயத்தமாக்கப்பட்டது.

ஆதாமே! ஆதாமின் மகனே! பாவியே! தேவதுரோகியே! நீ பரமசீயோனைச் சுற்றி அதின் கொத்தளங்களை எண்ணினாயே, தேவன் தமது மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருக்ஷங்களைக் கண்டாயே. தேவன் தாமே ஆயத்தம்பண்ணின மோக்ஷ சந்தோஷங்களைக் கேட்டும், வாசித்தும் அறிந்திருக்கிறாயே. இதினால் உனக்குப் பலனென்ன? இந்நகரத்தில் திரியேக தேவனிருக்கிறார், தேவதூதாட்களிருக்கிறார்கள், பரிசுத்தவான்களின் சங்கமிருக்கிறது; சீவஅப்பம், சீவதண்ணீர், சீவவிருக்ஷக்கனி இருக்கிறது; மெய்தான் உனக்குக் காரியமென்ன? பரிசுத்தமற்ற ஒருவனும் தேவனை தரிசிக்கமாட்டானே. பாவிக்கு, சாபம்பெற்றவனுக்கு மோக்ஷதேசத்தில் பங்கேது என்று திகைக்கிறாயா? பயப்படுகிறாயா? ஓ பாவியே, நீ திகைக்கவேண்டாம். இதோ கொல்கதாவின் மேட்டிலே சிலுவையில் தொங்கின கிறிஸ்து தமதுகாயங்களைக்காட்டி, வருத்தப்பட்டுப்பாரஞ்சுமக்கிற நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலமுண்டு என்று அழைக்கிறார். இந்நகரத்தின் வாசல்களில் எல்லாம் குற்றமற்ற மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற திருஇரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்களுக்கென்று எழுதியிருக்கிறது. இதின் உள்ளறைகளெங்கும் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து உடுத்தவர்களின் வாசஸ்தலம் என்று வரைந்திருக்கிறது. பிதாவாகிய தேவசமுகத்தில் குமாரனாகிய இயேசுமேசியா பாவிகளுக்காகத் தமது திரு உதிரத்தைக் கையிலேந்தி நமது பெலவீனங்களுக்காகப் பரிதபிக்கிற இரக்கமுள்ள பிரதானஆசாரியராக மத்தியஸ்தஞ்செய்கிறார். தேவன் தம்மில் அன்புகூருகிற மனுமக்களுக்கென்று இதை ஆயத்தம்பண்ணினார். ஆகையால் பாவியே! உன் ஆவியின் அரையைக் கட்டி உன் ஆத்துமாவைப் பரவசப்படுத்தி, மோக்ஷ பாக்கியங்களைச் சுதந்தர பாத்தியமாகப் பெற்றுக்கொள்ள கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்தொடருவாயாக. தேவன் அவர்களுக்கு, (பாவிகளுக்கு,) ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே. ஆ! எத்தனை சந்தோஷம். எத்தனை அறிவுக்கெட்டாத உன்னத அன்பு. எபே. 3: 18. இந்த அன்பை அறிந்த எபே. 10: 10.

ஆபிரகாம் தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரமுள்ள இந்நகரத்துக்குக் காத்திருந்தான். 2 கொரி. 5: 1. பரி. பவுல் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே தமக்குண்டென்று அறிந்தார். விசுவாச குடும்பத்தாரும் இதிலும் மேலான அந்தப் பரமதேசத்தையே நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்தினார்கள். ஆதலால் மெய் விசுவாசிகளின் சங்கமே இந்நகரம் எவாளின் பிள்ளைகளுக்கு ஆயத்தமாக்கப்பட்டதென்பதால், கர்த்தருடைய கிருபை என்றுமுள்ளதென்று கைகொட்டி ஆர்ப்பரியுங்கள். எசா. 35: 10. "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள். நித்தியமகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஒடிப்போம்."

திருச்சபையாகிய ஞானமணவாட்டியே! உனக்கு ஞானமணவாளன் வேண்டுமோ? பாவமன்னிப்பு, பரிசுத்தவானாகுதல், நீதிமானாகுதல், புத்திரசுவிகாரம், மெய்ச்சமாதானம் முதலிய ஞானாபரணம் வேண்டுமோ? எசா. 61: 10. இரக்ஷிப்பின் வஸ்திரம், நீதியின் சால்வை வேண்டுமோ? மோக்ஷவாசஸ்தலம்; நித்தியஜீவன் வேண்டுமோ? ஜீவஅப்பம், ஜீவதண்ணீர், ஜீவவிருக்ஷக்கனி வேண்டுமோ? பொன்னான வீதியில் உலாவவேண்டுமோ? தேவசமுக தரிசனை, ஆசாரியத்துவம், இராஜரீகம், அதிகாரம் வேண்டுமோ? இவையெல்லாம் என் தேவன் உனக்கு ஆயத்தம்பண்ணியிருக்கிறார் இன்னும் உனக்கு வேண்டியவைகளைச் சிருட்டித்துத் தரவும் வல்லவராயிருக்கிறார். ஆகையால் சகோதரரே எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள். என் பரம எஜமான் உங்களை வருந்தி அழைத்துக்கொண்டு வரச்சொல்லியிருக்கிறார். "வாருங்கள்."

இன்னும் மாட்டோமென்று தாமதிப்பாயேயாகில் அக்கினிக்கும், நரகத்திக்கும், பசாசுக்குமே இரையாவாய். பின்நோக்கிப் பார்ப்பாயேயாகில் நரகசுவாலையால் அக்கினிஸ்தம்பமாய்ப் போவாய். ஆதலால் விசுவாசிகளின் திரள்கும்போடு உங்களுக்கு ஆயத்தஞ்செய்திருக்கிற இரக்ஷிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி கொல்கதாவில் பிராணத்தியாகஞ்செய்த கிருபாதார பலியாகிய இயேசுவண்டை வந்து அவர் பாதம் பணிந்துகொள்.

இந்த வாக்குதத்ததேசத்துக்கும் இந்த உலகத்துக்கும் எஜமான் தம்முடையவர்களைச் சேர்க்கும் ஊழியத்துக்கென்று மிகுந்த இரக்கமாய் இதைவாசிக்கிறஉங்களைத்தெரிந்துகொண்டிருக்கிறாரே. உங்களுக்குஇந்தச் சிறந்த தேசத்திலே வாசஸ்தலம் உண்டா? இந்தக் கூடாரத்தைவிட்டுப் பிரிந்து இந்தச் சந்தோஷத்துக்குள் பிரவேசிக்க வாஞ்சிக்கிறீர்களா? இந்த இராஜ்யத்துக்கு, யாதாமொருவரை ஆளாக்கியிருக்கிறீர்களா என்று உங்களை நீங்களே உற்றுராயுங்கள்.

உலகம் எங்கும்போய் சர்வசிருடிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற உங்கள் பரம எஜமான் உங்களிடத்தில் உக்கிராணக் கணக்கைக் கேட்கிறார்.

பிரதான மேய்ப்பர் வரும்போது மகிமையுள்ள வாடாத ஜீவகிரீடத்தைப் பெறத்தக்கதாக, மனப்பூர்வமாகவும், உற்சாகமாகவும், மந்தைக்கு மாதிரியாகவும் நடந்து, உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையைப் போஷியுங்கள். இப்படிச்செய்தால் இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளிகளாவீர்கள்.

அநேகரை நீதிக்குட்படுத்தினவர்கள் வானமண்டலத்திலுள்ள நக்ஷத்திரங்களைப்போல சதாகாலமும் பிரகாசிப்பார்கள். அல்லேலூயா?



1 தீமோ. 1: 17. "நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமும் உள்ள இராஜனுமாய் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்குக் கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக." ஆமென்.

---

## 1886 ௵ ஜனுவரி௴ 10உயில் கனம் உவால்க்கர் ஐயரவர்கள் மெய்ஞ்ஞானபுரம் பரிசுத்த பவுலின் ஆலயத்தில் செய்த பிரசங்கம்.

---

சங். 51: 7.

"நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன."

ஓங்கிவளர்ந்த கிச்சிலிமரமொன்றிருந்தது. அதின் உச்சிக்கொப்புகளில் அநேக பழங்களிருந்தன. அதன் பழங்களை வளர்ந்த மனுஷரும் தங்கள் பெருவிரல் ஊன்றிநின்றுதான பறிக்கக்கூடும். அநேகம் சிறுபிள்ளைகள்போய் அந்த மரத்தடியில் நின்று தங்கள் கைகளை நீட்டி எட்டிப்பறிக்கப் பார்த்தாலும், பழங்களெல்லாம் உச்சிக்கொப்புகளிலிருந்ததால் கூடாமற்போயிற்று. இதுபோலவே அநேக பிரசங்கங்களுமிருக்கின்றன. கற்றோர் மாத்திரம் இவைகளை அறியக்கூடியதாயிருக்கிறது. சிறுபிள்ளைகளுக்கு அதின் போதனைகள் விளங்கக்கூடியதல்ல. ஆனால் நான் இப்போது பண்ணப்போகிற பிரசங்கமோ சிறுபிள்ளைகளும் பேதையரும் அறியக்கூடியது. பெரியோர் இது சிறுபிள்ளைகளுக்குத்தானேயென்று இராமல் குனிந்து இதின பழங்களைப் பறிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த வாக்கியத்தால் நாம் அடையும் முதற்போதனை.

நாமெல்லாரும் கழுவப்படவேண்டியவர்கள்.

ஒரு வஸ்திரம் சகதியில் விழுந்து அழுக்கானால் மனுஷர் அதை எடுத்துக் கழுவுவார்கள். நம்முடைய இருதயமும் அழுக்காய்த்தானிருக்கிறது. அது கேடுபாடுள்ளது. அது பாவத்தால் கறைபட்டதாயிருக்கிறது. ஆதலால் நாம் கழுவப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்படியே ஏசாயா நம்முடைய பாவநிலைமையைப்பற்றிச் சொல்லுகிறார். "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போலிருக்கிறோம். எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோலிருக்கிறது." எசா. 64: 6. எல்லாருடைய இருதயமும் பாவத்தால் நிறைந்ததாய்த் தானிருக்கிறது. ஆதலால் எல்லாரும் கழுவப்படவேண்டியது அவசியம்.

சிலர் தாங்கள் கழுவப்படவேண்டியது அவசியமல்ல என்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வஸ்திரம் உண்டாம். அவர்கள் ஜெபம்பண்ணுகிறார்களாம். தேவாலயத்துக்குப் போகிறார்களாம். கிருபையின் எத்தனங்களைத் தவறாமல் அநுஷ்டிக்கிறார்களாம். இவையெல்லாம் நல்லதுதான். என்றாலும இவை இருதயம் கழுவப்பட்டதற்கு அத்தாட்சியல்ல. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் "நீர் என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்" என்று ஜெபம்பண்ணவேண்டும்.

சீமைதேசத்தில் ஐசுவரியவான்களின் கல்லறைகளின்மேல் கீர்த்தியான பால்வெள்ளைப்பட்டறைக்கல் வைக்கப்பட்டிருக்கும். அக்கற்கள்

மேல் தங்களெழுத்துகள் எழுதி பார்வைக்கு மிகவும் அழகாயும் அலங்காரமாயும் தோன்றும். உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளும் சகல அசுத்தமும் நிறைந்திருக்கின்றன. அதுபோலதான் சில மனுஷர் இருக்கிறார்கள் மனுஷருக்குமுன் நீதிமான்களாய்க் காணப்படுகிறார்கள். உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறார்கள். மனுஷன் பார்க்கிறபடி கர்த்தர் பார்க்கிறவரல்ல. மனுஷனை முகத்தின் வெளித்தோற்றத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். நம்முடைய இருதயம் கர்த்தருடைய பார்வையில் அசுத்தம் நிறைந்ததாயிருக்கிறபடியால் நாம் கழுவப்படவேண்டியது ஆதலால் "என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்" என்று ஜெபம்பண்ணவேண்டும்.

இரண்டாவது. நாம் நம்மைநாமே கழுவுவது கூடாத காரியம்.

லண்டன் பட்டணத்தில் விருசாவேலையென்று விலாசமிட்ட ஒரு படம் இருக்கிறது. அதிலே கன்னங்கறேலென்றிருக்கும் ஒரு காப்பிரிப் பெண் தண்ணீர் நிறைந்த தொட்டியிலே நின்று தன் கையில் ஒரு சவர்க்காரக்கட்டி வைத்துக்கொண்டு தன்னை வெள்ளையாக்க நன்றாய்த் தேய்ப்பதாகக் காட்டியிருக்கிறது. அவள் எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டாலும் அவள் கறுப்பு நீங்காமல் அவள் முன்னெப்படியிருந்தாளோ, அப்படியே இருக்கிறாள். இது வீண் வேலையல்லவா? அநேகர் இப்பிள்ளையைப்போலவே பாவமும் அசுத்தமும் துற்சந்தமும் நிறைந்ததும் பாவத்தால் கறைப்பட்டதுமான தங்கள இருதயத்தை, தான தர்மங்களாலும் ஜெபங்களாலும் கழுவப்பார்த்து தாங்கள் கழுவப்பட்டதாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆனால் தீர்க்கதரிசியானவர் சொல்லுகிறபடி "எத்தியோப்பியன் தன் தோலையும் சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால் தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்." எரே. 13: 23. நாமொருவராவது நம்மை நாமே கழுவக்கூடாது. நாம் எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டாலும் கூடாது. ஒருவன் ஒருநாளில் 50 தரம் கோவிலுக்குப்போய் ஜெபம்பண்ணிலும், பாவத்தால் கறைப்பட்ட தன் இருதயத்தை வெண்மையாக்கக் கூடாது. ஆகையால் நாம் "என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்" என்று ஜெபம்பண்ணவேண்டும்.

மூன்றாவது. நம்மைக் கழுவுகிற ஒருவர் உண்டு.

அவர் யார்? கர்த்தராகிய இயேசு. கர்த்தராகிய இயேசுவே "என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்." கர்த்தரும் அப்படியே வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார். எசா. 1: 18. "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்."



## சமாசாரத்திரட்டு.

பர்மா தேசத்து அரசனாயிருந்து தள்ளப்பட்ட தீபாவும், அவருடைய இரண்டு மனையாட்டிகளும், தன் மாமியும், தன் இரண்டு குமாரத்திகளும், குசினிவேலைசெய்யும் பன்னிரண்டு மாதர்களும், இராஜ பரிவாரமடங்கிய வேறு பன்னிருவருமாக முப்பதுபேர் சென்னை துறைமுகத்தில் கரை இறங்கவே அங்கிருந்து நுங்கம்பாக்கத்திலுள்ள ராஜ கஜபதிராவ் அவர்களுடைய அரண்மனைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். பின்பு அவரை வேலூருக்கடுத்த ராணிப்பேட்டைக்குக் கொண்டுபோய்க் காவல்படுத்தி வைக்கும்படியாய்த் தீர்மானித்து சென்னைக் கவர்ன்மெண்டார் அவ்விடத்தில் இடிந்துபோய்க் கிடக்கும் சில பழைய கோட்டைகளை தீபாவுடைய உபயோகத்துக்காகச் சீர்திருத்தி ஒழுங்குப்படுத்தும்படி உத்தரவுசெய்திருக்கிறார்கள். தீபா தோற்றத்தில் மந்தம்பிடித்தவன், பெலவீனதேகன், சுருட்டுக்குடியில் மிஞ்சினவன். தீபாவே உன் முடி எங்கே? உன் சிங்காசனம் எங்கே? பெண்டுகள் பேச்சைக்கேட்டு என் இக்கோலமானாய். சமாரியாவின் எசபேல் ஆகாபின் குடும்பத்துக்கு முடிவடையச் செய்ததுபோல பர்மாவின் எசபேலும் தன் கணவன் தீபாவின் அரசு முடிவுக்குக் காரணமாயிருந்திருக்கிறாள். (தி.—னி)

நீண்ட ஆயுள்.—எகிப்தின் பிரதான பட்டணமாகிய கேயிரோ நகரில் நடைபெறும் ஒரு சுதேச பாஷைப் பத்திரிகையானது, லிப்தாவுக்கு அயலில் 120 வயதுடன் ஷேக் என்பவர் சீவித்திருப்பதாகவும், தொண்ணூறு வருடகாலமாய் அவர் உத்தியோகஞ்செய்திருப்பதாகவும் சொல்லுகிறது.

தீபாவுக்குமுன் பர்மாவின் அரசனாக இருந்த மின்டோன் அரசனுடைய சந்ததியார்களில் மூத்தவரான மிங்கூன் இராஜகுமாரன் இப்பொழுது அரசனற்றிருக்கும் பர்மா இராஜ்ஜியத்தின் பட்டத்துக்கு நியமிக்கப்படுவதற்குத் தனக்குள்ள பாத்தியதையை எடுத்துக்காட்டி, இராஜபிரதிநிதியவர்கள் தன்னைப் பட்டத்துக்கு நியமிக்கத் தயவுசெய்வாரானால்தான் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடைய ஆதரவுக்குட்பட்டு அவர்களால் நியமிக்கப்படும் ரெசிடெண்ட் அல்லது கமிஷனருடைய ஆலோசனைப்படி அரசுசெலுத்தி வருவதாயும், இங்கிலிஷ் வர்த்தக விர்த்திக்கு வேண்டிய எல்லா அனுகூலங்களையும் தாமே மனசாரச் செய்துவருவதாயும் சொல்லி, இன்னும் மற்ற விஷயங்களுக்கு இராஜபிரதிநிதியவர்கள் அவரை ஒருதரம் நேரில் கண்டுபேச இடங்கொடுப்பாரானால் உடனே அவர் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுவந்து இராஜபிரதிநிதியவர்களுடைய இஷ்டப்படி நடந்துகொள்ளத் தயாராயிருப்பதாயும் ஒரு விண்ணப்பம் எழுதி அவருடைய அந்தரங்க காரியதரிசியாகிய மிஸ்டர் ஸி. எஸ். கிளார்க் என்பவர்மூலமாய் இராஜபிரதிநிதி அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்.

(தி.—னி.)

பெபுருவரிமீ நாள்-28. தைமீ 21உ முதல், மாசிமீ 18உ வரை

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | உக | நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். லேவி |
| செ | 2 | உஉ | (பிதசத்து) ஜனத்திலுடைய வழிபாடுகளில் நடவாதிருங்கள். (19: |
| பு | 3 | உங | நீ அவனைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். 21: 8. (20: 23. |
| வி | 4 | உச | என பரிசுத்தநாமத்தைப் பரிசுத்தகுலைச்சலாக்காதிருப்பீர்களாக. |
| வெ | 5 | உரு | உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துங்கள் 23: 27. (22: 32. |
| ச | 6 | உசு | கர்த்தருடையநாமத்தை நிந்திக்கிறவன் கொலைசெய்யப்படவேண். |
| ஞா | 7 | உஎ | அது உங்களுக்கு யூபிலி வருஷம். 25: 10. (லேவி 24: 16. |
| தி | 8 | உஅ | தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன். 26: 6. (27 28 |
| செ | 9 | உகூ | நேர்ந்துகொள்ளப்பட்டவைகளெல்லாம் ... பரிசுத்தமாயிருக்கும். |
| பு | 10 | ஙூ | லேவியர் சாட்சியின வாசஸ்தலத்தைக் காவல் காப்பார்களாக. |
| வி | 11 | க | (யூதா) மூதற்பாளயமாய்ப் போகக்கடவர்கள். 2: 9. (எண். 1: 53. |
| வெ | 12 | உ | லேவியர் என்னுடையவர்களாயிருப்பார்கள். 3: 14. |
| ச | 13 | ங | எலெயாசார்...பரிசுத்தஸ்தலத்தை...விசாரிக்கக்கடவன். 4: 16. |
| ஞா | 14 | ச | ஒருவன் ஆசாரியனுக்குக் கொடுக்கிறதெதுவும் அவனுக்கே உரி |
| தி | 15 | ரு | கர்த்தர்...உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். 6: 25. (யதா. 5: 10. |
| செ | 16 | சு | (கிருபாசனம்) அங்கே இருந்து அவனோடே பேசுவார். 7: 8. |
| பு | 17 | எ | இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர்மேல் வைக்கக்கடவ |
| வி | 18 | அ | மேகம் தங்குமிடத்தில் இஸ்ரவேலபுத்திரர் பாளயமிறங்குவார்கள். |
| வெ | 19 | கூ | உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக. 10: 35. (9: 17. |
| ச | 20 | ய | உங்களுக்குள்ளே இருக்கிற கர்த்தனை அசட்டைபண்ணினீர்கள். |
| ஞா | 21 | கக | மோசே...சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தா |
| தி | 22 | கஉ | தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பித்தார்கள். 13: 26. |
| செ | 23 | கங | கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள். 14: 9. |
| பு | 24 | கச | துணிகரமாய் யாதொன்றைச் செய்தால், அவன் கர்த்தரை நிந்தி |
| வி | 25 | கரு | கர்த்தர் எவனைத் தெரிந்துகொள்வாரோ, அவன் பரிசுத்தவான். |
| வெ | 26 | கசு | நான் தெரிந்துகொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும் 17: 5. |
| ச | 27 | கஎ | நீங்கள் சாகாதிருக்கும்படிக்கு...பரிசுத்தமானவைகளைத் தீட்டுப் |
| ஞா | 28 | கஅ | தன்னைச் சுத்திகரிக்காமலிருப்பானெனில் சுத்தமாகான். 19: 12. |

## விசேஷ நாட்கள்.

2. பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்பு திருநாள்.
4. அமாவாசை.
7. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 5-ம் ஞாயிறு.
14. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 6-ம் ஞாயிறு.
19. பௌரணமி.
21. செப்துவ கெசிமா ஞாயிறு.
24. பரி அப். மத்தியாவின் திருநாள்.
28. செக்ச கெசிமா ஞாயிறு.

# நற்போதகம்.

௩. மார்ச்சுமீ. ௲அஅகூ வநப.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

இரக்ஷகர் மரித்தவுடனே சம்பவித்த அடையாளங்கள் (மத் 27: 51-56) எதைக் குறிக்கிறதென்று வேதசாஸ்திரிகளெல்லாரும் ஒத்துச்சொல்லுகிறார்கள். தேவாலயம், பூமி, ஆதேஸ் (Hades), மனுஷருடைய ஆவி ஆகிய இவற்றின்பேரில் தேவகுமாரன் அடைந்த பூரணவெற்றியை அந்த அடையாளங்கள் காட்டுகின்றன.

உமது சிலுவைப்பாடுகளினிமித்தமும்,
உமது அருமையான மரணத்தினிமித்தமும்,
எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.

II. பக்கத்தில் நின்றவர்கள்: கிறிஸ்துவின் தாயார் (25—27).

**449.** 19: 24ல் கவனிக்கத்தக்கதென்ன?

யோவான் கண்கண்ட சாட்சியாக போர்ச்சேவகர் தங்களுக்குள் பேசிக்கொண்ட வார்த்தைகளையும் மகா திட்பநுட்பமாய்க் கவனித்தெழுதுகிறார்.

**450.** 19: 25. சிலுவையின் அருகே இயேசுவின் தாயார் நின்றிருந்ததை பரி. யோவான் மாத்திரம் எழுதுகிறார். இதை ஏன் மற்றச் சுவிசேஷகர் எழுதவில்லை?

இயேசுவின் தாயார் எவ்விதத்திலும் அங்கே நிற்பது இயல்புதானே. அதை எல்லாரும் அறிந்துகொள்வார்களென்றுதான் விட்டுவிட்டார்கள்

கிறிஸ்து தமது தாயாரை ஒப்புவித்ததைப்பற்றி பரி. யோவான் எழுதுவதால் சற்றுவிபரம் சொல்லுகிறார்.

**451.** 19: 27. இந்த அதிகாரத்தில் நாலு ஆச்சரியக் குறிப்புகள் வருகின்றன. அவைகள் எவை?

இதோ இந்த மனுஷன்! (5).
இதோ உங்கள் ராஜா! (14).
அதோ உன் மகன்! (26).
அதோ உன் தாய்! (27).

கிறிஸ்துநாதர் இன்னாரென்பதையும், மனுஷர் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைப்பற்றி அவருடைய சித்தமின்னதென்பதையும் இந்த நாலு ஆச்சரியக் குறிப்புகளும் சேர்ந்து ஒரு படம்போல் நமக்குக் காட்டுகின்றன?

### III. இரக்ஷண்யக் கிரியை முடிந்தது. கிறிஸ்துநாதர் மனதார மரித்தது (28—30).

**452.** மூன்று மணிநேரம் அந்தகாரமுண்டாயிருந்ததை (மத் 27: 45. மாற் 15: 33) பரி. யோவான் எழுதவில்லை ஏன் விட்டுவிட்டார்?

பரி. யோவானுடைய எண்ணம் சிந்தையெல்லாம் கர்த்தர்பேரிலும், அவருடைய வார்த்தைகள், கிரியைகள் ஆகிய இவற்றின்பேரிலும் முக்கியமாய்ச் சென்றதால், அந்தகாரமுண்டானதைப்பற்றி யாதொன்றும் சொல்லவில்லையென்று தோன்றும்.

**453.** யோவான் 19: 29. காடிகொடுத்த சரித்திரமென்ன?

இங்கே காடி என்பது, போர்ச்சேவகர் வழக்கமாய்ச் சாப்பிடுகிற லேசானபுளிப்புள்ள ரசமாம். இவர்கள் நெடுநேரம் காத்திருக்கவேண்டியவர்களானதால், தங்கள் சொந்த உபயோகத்துக்காக இதைக்கொண்டு வந்திருக்கலாம். "பாத்திரம் வைக்கப்பட்டிருந்ததைப்"பற்றி, பரி. யோவான் மாத்திரம் எழுதுகிறார்.

கர்த்தருக்குக் காடிகொடுத்தது இன்னாரென்று பரி யோவான் நேராய்ச் சொல்லாமல், "அவர்கள்" என்று மாத்திரம் சொல்லுகிறார். அப்படியே பரி. மத்தேயும் (27: 48), பரி. மாற்கும் (15: 36) பொதுவாகத்தான் சொல்லுகிறார்கள். ஆனால் முதலில் அவருக்குக் காடிகொடுத்தது "போர்ச்சேவகர்" என்று பரி. லூக்கா (23: 36) சொல்வதால், போர்ச்சேவகரில ஒருவன்தான் இப்பொழுது நடந்த சம்பவங்களைப் பார்த்து,



பயத்தினாலும் பரிதாபத்தினாலும் ஏவப்பட்டுக் காடியைக் கொடுத்தான் என்று தோன்றும்.

28, 30. இந்த வாக்கியங்களைப்பற்றி, (மேலே பார்).

அடக்கம்.

### IV. யூதருடைய மன்றாட்டும், யோசேப்பின் மன்றாட்டும். (31—42).

**454.** 31. "பெரிய ஓய்வுநாள்" எது? "ஆயத்தநாள்" எது?

பெரிய ஓய்வுநாள் என்பது, புளியாத அப்பநாள்களில் முதல்நாளான (யாத்தி 12: 16. லேவி 23: 3) சனிக்கிழமையாம். இந்தச் சமயத்தில் அந்த ஓய்வுநாளும், வாரத்தின் ஓய்வுநாளும் சேர்ந்து ஒன்றாக ஒரு தினத்தில் வந்ததென்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது (கேள்வி 318 வாசி). ஆகையால் அந்த முதல்நாள்தானே பெரியநாளாயிருந்ததுமல்லாமல், இரண்டு ஓய்வுநாட்கள் அந்நாளில் ஒன்றாக வந்ததினாலும் பெரியநாளாயிருந்தது. "ஆயத்தநாள்" என்பது, கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட நாளாகிய வெள்ளிக்கிழமையாம்.

எசமானற்ற அடிமைகளுடைய காலெலும்புகளைத்தான் முறிக்கலாம். இந்தக் குரூரதண்டனை, சிலுவைமரணத்துக்குச் சம்பந்தப்பட்டதல்ல. ஆனால் இந்தச் சமயத்தில் சீக்கிரம் உயிர்போகும்படி காலெலும்புகளை முறித்தார்கள். இந்தக் குரூரதண்டனையையும், சிலுவையில் அறையும் வழக்கத்தையும் முதலாம் கிறிஸ்தமான ராயனாகிய கொன்ஸ்தந்தீன் நீக்கிப்போட்டான்.

34. கர்த்தர் மரித்துப்போனாரா இல்லையா என்ற நிச்சயத்தை அறியும்படி "போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்". உடனே இரத்தமும் ஜலமும் புறப்பட்டது. இது அவருடைய மனுஷத்தன்மையைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டுகிறது.

37. அவர்கள் என்பது யூதராம் (யோவா 19: 16).

மாற்கு 15: 43ல் "கனம்பொருந்திய ஆலோசனைக்காரன்" என்பது சனகிரீம் சங்கத்தாரிலொருவன் என்றர்த்தம்.

**455.** 38. யோசேப்பு உத்தரவு கேட்ட சமயம் என்ன?

கர்த்தர் மரித்ததற்குப் பின்னாகவும் (மாற் 15: 44), சிலுவையில் மரித்தவர்களுடைய பிரேதங்களை வழக்கப்படி எடுத்தெறிந்துபோடுவதற்கு

மூன்றாகவும், யோசேப்பு பிலாத்தினிடத்திற் போய் உத்தரவுகேட்டான். இவன் ஐசுவரியவானாயிருந்ததினாலே தனக்காகக் கல்லறைவெட்டிவைத்திருந்தான். அதினாலேதான் இப்பொழுது பிலாத்தினிடத்தில் போகவும் இடம்பெற்றான். இதற்குமுன்னதாக இவனுடைய ஐசுவரியத்தினால் என்னென்ன தடைகள் நேரிட்டிருந்தாலும், கர்த்தர் செய்த கடைசிக் கிரியைகளும் அவர் சொன்ன கடைசி வார்த்தைகளும், அவனை அதிகமாய் உணர்த்தி அந்தத் தடைகளை எல்லாம் நீக்கிவிட்டன. இந்தச் சமயத்தில் அவன் காட்டின அன்பானது, மரணத்தைப் பார்க்கிலும் வல்லமையுள்ளதாயிருந்தது. சமாதிச் சடங்குகளைப்பற்றி பக்தியுள்ள யூதர் அதிகமான மதிப்புக்கொண்டிருந்தார்கள் (யோவா 8: 21).

யோசேப்பு உத்தமனும் நீதிமானுமாயிருந்தான் என்று லூக்கா (23: 50) சொல்வது, கிறிஸ்துநாதரை ஆக்கினைக்குட்படுத்த அவன் கொஞ்சமென்கிலும் சம்மதியாதிருந்தான் என்றர்த்தம். "கனம்பொருந்திய" என்று பரி. மாற்கு (15: 43) சொல்வது, சனகிரீம் சங்கத்தில் முதன்மையானவர்களிலொருவன் என்றர்த்தம்.

456. சிலுவையில் அறையப்பட்டவர்களுடைய பிரேதங்களை என்ன செய்வார்கள்?

அந்தப் பிரேதங்களை வழக்கமாய் ஒரு பொதுவான குழியிலே எறிந்துவிடுவார்கள். பிலாத்து பிரேதங்களை அடக்கம்செய்ய உத்தரவுகொடுக்கிறதற்காகப் பரிதானம் வாங்குவது வழக்கம். இந்தச் சமயத்தில் அவன் பரிதானம் வாங்கவில்லை. மாற்கு 15: 43ல் "கேட்டான்" என்றும், 45ல் "கொடுத்தான்" என்றும் சொல்லியிருப்பதினாலே இது தெரியும். கொடுத்தான் என்றால், தன் வழக்கத்துக்கு விரோதமாகச் சும்மா கொடுத்தான் என்றர்த்தம். கேட்டான், கொடுத்தான் என்ற இந்த இரண்டு வார்த்தைகள், கிரேக் பாஷையில் மிகவும் கவனிக்கப்படத்தக்க வார்த்தைகளாய் வருகின்றன.

457. நிக்கொதேமுவின் ஊழியத்தைப்பற்றி என்ன தெரியும்?

நிக்கொதேமு செய்த ஊழியத்தைப்பற்றி பரி. யோவான் மாத்திரம் எழுதுகிறார் (யோவா 19: 39). இப்பொழுது பகல்நேரத்தில் அவன் காண்பித்த தைரியத்தைக் காட்டும்படி, "ராத்திரியில்" என்று சொல்லுகிறார். அவன் மற்றும் சமயங்களிலும் இராத்திரிவேளைகளில் வந்தானென்று காட்டும்படி, "ஆரம்பத்திலே" என்று சொல்லுகிறார்.

அவன் பேர் வருகிற மூன்று இடங்களிலும், அவனுடைய பயங்காளித்தனமும் விளங்குகிறது. எப்படியென்றால் (1) இராக்காலத்தில் வந்தான் (யோவா 3: 1). (2) கிறிஸ்துநாதருடைய பேரைச் சொல்லாமல், 



ஒரு மனுஷன் என்று மாத்திரம் பொதுவுவாயாய்ப் பேசினான் (யோவா 7: 50, 51). (3) அரிமத்தியா ஊர் யோசேப்பு, கர்த்தருடைய சரீரத்துக்காக உத்தரவுகேட்டுப் பெற்றுக்கொண்ட பிற்பாடுதான் தன் காணிக்கையைக் கொண்டு வந்தான் (யோவா 19: 30).

458. நிக்கொதேமு கொண்டுவந்த காணிக்கையைக்குறித்து என்ன தெரியும்?

வெள்ளைப்போள மரத்தின் பிசினும் (மத் 2: 1), வாசனையான கரியபோளக் கட்டையின் தூளும் கலந்த சுகந்தவர்க்கத்தைக் கொண்டுவந்தான். "வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து" என்ற வார்த்தைகளை, "வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்த வஸ்திரச்சுருளை" என்றும் திருப்பலாம் (சங் 45: 8 ஒத்துப்பார்). இங்கே "ராத்தல்" என்பது, ரோமருக்குள் வழங்கின ராத்தலாம். அந்த ராத்தல் ஒன்று 12 அவுன்சுக்கு (Ounce) சமம். நம்முடைய நாட்டு முத்திரிப்படிக்கு, உத்தேசம் 5¼ துலாமிருக்கும். இவ்வளவு என்னத்திற்கு என்ற கேள்வி வரும். ஆசா ராஜாவுக்குச் செய்ததுபோல (2 நாளா 16: 14), சுகந்தவர்க்கங்களினாலும் பரிமளங்களினாலும் நிறைந்த துப்பட்டியின்மேல் கர்த்தருடைய திருச்சரீரத்தை வளர்த்தி, சுகந்தவர்க்கங்களினால் அவர் தேகமுழுவதையும் பொதிந்துவிடவேண்டுமென்பது நிக்கொதேமுவின் நோக்கமென்பதற்குச் சந்தேகமில்லை.

459. 19: 40. "யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமை" என்றால் அர்த்தமென்ன?

எகிப்தியர் செய்துவந்த முறைமைப்படி, பிரேதங்களுக்குச் சுகந்தவர்க்கமிடுமுன், தேகத்தின் சில பாகங்களை எடுத்துப்போடாமல் என்றர்த்தம். ஆகிலும் இந்த வார்த்தைகள்: பிரேதங்களைச் சுட்டெரிக்கிற வழக்கத்துக்கு எதிரிடையாக, யூதர் சுகந்தவர்க்கமிடும் முறைமைப்படி என்றும் அர்த்தம்கொள்ளும்.

460. 19: 41. "தோட்டம்" என்றதில் கவனிக்கவேண்டியதென்ன?

கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இடமும், வெற்றிவேந்தராக அவர் இளைப்பாறின இடமும் தோட்டம். இந்த விபரத்தை பரி. யோவான் மாத்திரம் எழுதுகிறார். கர்த்தருடைய கல்லறைத்தோட்டம், அவர் மரித்த இடத்திற்குச் சமீபத்தில் 200 கெஜத்துக்குள்ளாயிருந்தது.

உசியா, மனாசே இந்த ராஜாக்கள் தம்தம் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டதாக யோசேப்புஸ் சொல்லுகிறார்.

**461.** கர்த்தர் வைக்கப்பட்ட கல்லறையைப்பற்றித் தெரிந்ததைச் சொல்லு?

இது யோசேப்புடைய கல்லறை என்று பரி. மத்தேயு சொல்லுகிறார் (மத் 27: 60). அது கன்மலையில் வெட்டியிருந்த கல்லறை என்று, முதல் மூன்று சுவிசேஷகரும் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய சரீரம் அழிவடையவில்லை என்பதை வற்புறுத்திக் காட்டும்படி, "ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததாயிருந்த" கல்லறை என்று பரி. லூக்கா (23: 53) சொல்லுகிறார்.

சமாதிச்சடங்குகளெல்லாம் முடிந்து, கர்த்தருடைய தாயாரும் கிட்டின இனத்தாரும், அவருடைய பரிசுத்த உதடுகளில் கடைசியாய் முத்தமிட்டபிற்பாடு, அவருடைய தலையை லேஞ்சியினால் சுற்றிக்கட்டினார்கள். அவருடைய திருச்சரீரத்தைத் "துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி" ஷை புதிய கல்லறையிலே வைத்தார்கள். கல்லறையின் வாசலில் புரட்டிவைத்த பெரிய கல், யோசேப்பு பணிப்படுத்திவைத்திருந்த கல்தான். அது இப்பொழுது கல்லறையின் வாசலில் வைக்கப்பட்டிராமல், பக்கத்தில் கிடந்தது. அது ஏறக்குறைய 6 அடி அகலமும் 3 அடி உயரமுமாயிருந்தது.

**462.** மாற்கு 15: 44. பிலாத்து ஆச்சரியப்பட்ட முகாந்தரமென்ன?

சிலுவையில் அறையப்பட்டவர்களுடைய காலெலும்புகளை முறிக்குமுன், ஜீவன்போகாதென்று அவன் நினைத்திருந்ததினாலே ஆச்சரியப்பட்டான். அதினாலேதான் நூற்றுக்கதிபதியை அழைப்பித்து, "அவர் இதற்குள்ளே மரித்தது நிச்சயமா" என்பதை அறிந்துகொண்டபின்பு, சரீரத்தை யோசேப்பினிடத்தில் கொடுத்தான். இந்த விபரங்களை பரி. மாற்கு மாத்திரம் எழுதுகிறார். பிலாத்து இப்பொழுது இருந்த இடம், மேலே சொன்ன இரண்டு இடங்களில் எதாயிருந்தாலும், அதற்கும் கர்த்தர் மரித்த இடத்துக்குமுள்ள தூரம், ஒரு மைலில் மூன்றிலொரு பங்குக்கு உள்ளாய்த்தானிருந்தது (கேள்வி 431).

**463.** யோவா 19: 42ன் தாற்பரியமென்ன?

தாமதமில்லாமல் சுகந்தவர்க்கமிடவேண்டுமென்பது இவர்களுடைய எண்ணம். இதற்காக அநேக சம்பாரங்கள் சேர்க்கப்பட்டன. கர்த்தர் வைக்கப்பட்ட கல்லறையானது, அவர் எப்பொழுதுமிருக்கும்படி முடிவாக நினைத்துவைத்த இடமாயிராமல், ஓய்வுநாள் ஊடேவந்ததினாலே, தற்சமயத்துக்காக மாத்திரம் வைத்த இடமாயிருந்ததென்ற கருத்து, இந்த வாக்கியத்தில் அடங்கியிருக்கிறது.



**464.** யோவான் 19: 42ஐயும் அப் 13: 29ஐயும் சமாதானப்படுத்து?

யோசேப்பும் அவன் வகையறாவும் பக்தியின் அன்பினாலே ஏவப்பட்டுக் கர்த்தனைக் கல்லறையிலே வைத்தார்கள். ஆனால் யூதரும் யூதருடைய தலைவரும், விரோதத்தினால் ஏவப்பட்டு, இந்தக் கல்லறையிலே வைக்கும்படி செய்ததுமல்லாமல், கல்லறையைப் பலவந்தமாய்த் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டு, கல்லுக்கு முத்திரைபோட்டு," ரோமருடைய காவலை வைத்துக், "கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்" (மத் 27: 66). மேலும் கர்த்தருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் ருசுப்படுத்த வேண்டுமென்பதுதான் (அப் 13: 29ல்) பரி. பவுலின் நோக்கம். கர்த்தர் மெய்யாகவே மரித்தாரென்று ருசுப்படுத்தத்தான் அவர் அடக்கம்பண்ணப்பட்டதை பரி. பவுல் அங்கே சொல்லுகிறார். தாம் எழுதின நிருபங்களிலும் இந்தச் சத்தியத்தைக் குறிப்பாய்க் காட்டுகிறார் (ரோ 6: 4. 1 கொரி 15: 4. கொலோ 2: 12).

நீர் அடக்கம்பண்ணப்பட்டதினிமித்தமும்,
எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.

## உயிர்த்தெழுதல்.

**465.** வாரத்தின் முதல்நாளை எபிரேயர் மிகவும் விசேஷமான பரிசுத்த நாளாக எண்ணிவந்தார்கள். என்னத்தினாலே?

அந்தநாளுக்குப் பத்துக் கிரீடங்களுண்டென்று ஒரு சாஸ்திரியார் சொல்லுகிறார்.

1. அது சிருஷ்டிப்பில் முதல்நாள்.
2. தேவாலயத்தைப் பிரதிஷ்டைசெய்யும்படி, ஜனங்களின் பிரபுக்கள் இந்தநாளில்தான் முதலாவது கூடினார்கள்.
3. ஆசாரிய முறைக்கு முதல்நாள்.
4. லேவியருடைய ஊழியத்துக்கு முதல்நாள்.
5. இந்தநாளில்தான் வானத்திலிருந்து முதல்விசையாக அக்கினி இறங்கி பலியைப் பட்சித்தது.
6. தேவாலயத்தில் செக்கினா வந்து இறங்கின முதல்நாள்.
7. இஸ்ரவேலர் முதலாவதாக இந்தநாளில்தான் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்கள்.
8. மாசங்களின் வரிசைக்கு முதல்நாள்.
9. (கிறிஸ்தவர்களுக்கு) புதுச்சிருஷ்டிப்பில் முதல்நாள்.
10. பரலோக வாசலைத் திறந்தநாள், புதியஏற்பாட்டின் முதல்நாள்.

**466.** யோவான் 20: 1. "கல்லறையை அடைத்திருந்த கல்"–"எடுத்துப்போட்டிருக்க," இந்த வார்த்தைகள் எதைக் காட்டுகின்றன?

கல்லறையின் வாசலைப் பிடிக்கத்தக்கவிதமாய் ஒரு கல்லை வெட்டிச் சேர்த்திருந்ததென்பதைக் காட்டுகின்றன. கல்லைப் புரட்டித் தள்ளினதாக மாத்திரம் மற்றச் சுவிசேஷகர் சொல்லுகிறார்கள்.

**467.** மத் 28: 6. "தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்". இந்த வார்த்தைகளில் அடங்கியிருக்கிற சத்தியமென்ன?

பரிசுத்த ஸ்திரீகள் கல்லறையினிடத்திற்கு வந்து சேருமுன்னதாகவும், பெரும்பாலும் ஒப்புக்கொண்டிருக்கிறபடி, தேவதூதன் வானத்திலிருந்து இறங்குமுன்னதாகவும் கர்த்தர் உயிர்த்தெழுந்தார் என்ற சத்தியமாம். ஆகையால் நமது கர்த்தர் கல்லறையைவிட்டு வெளியேறினதற்கும், கல்லைப் புரட்டித் தள்ளினதற்கும் சம்பந்தமில்லை. கிறிஸ்துவின் அன்பர்கள் கல்லறைக்குள் பிரவேசித்துப் பார்க்கிறதற்காகத்தான் கல் புரட்டித் தள்ளப்பட்டதேயன்றி வேறில்லை. இதைப்பற்றி பரி. மத்தேயும் மாற்கும் ஒத்துச்சொல்லுகிறார்கள். ஆனால் இதற்கு முந்தி மகதலேனா மரியாள் வந்துவிட்டுத் திரும்பின சங்கதியை இவ்விருவரும் சொல்லவில்லை.—கூசாவின் மனைவியான யோவன்னாளோடுகூடக் கல்லறையினிடத்துக்குப் பிந்திவந்த இன்னொரு கூட்டமான ஸ்திரீகளைப்பற்றி பரி. லூக்கா சொல்கிறார்.

மத்தேயு 27: 61ன் சம்பந்தத்தில், மகதலேனா மரியாளையும், யாக்கோபின் தாயாகிய மரியாளையும்பற்றி, பரி. மத்தேயு பிரத்தியேகமாய்ச் சொல்லுகிறார். இவர்களோடுகூட சலோமேயும் வந்தாள். இவர்கள் (சனிக்கிழமையாகிய முந்தினநாள்) "ஓய்வுநாள்" முடிந்தபின் சாயங்காலத்தில் கந்தவர்க்கங்களை வாங்கினார்கள்.

"கர்த்தரை வைத்த இடத்தை வந்துபாருங்கள்" என்று சொல்வதினால், (யாக்கோபின் தாயாகிய) மற்ற மரியாளும் சலோமேயும் தேவதூதன் சொன்னதைக்கேட்டு, கல்லறையின் இடுக்கமான வாசல்வழியாய் பிரவேசித்து, தாங்கள் கூட இருக்கும்போது, திருச்சரீரத்தை யோசேப்பு வைத்த கல்லறைக்குழி இப்பொழுது வெறுமையாயிருக்கக் கண்டார்கள். இவ்விடத்தில் அவர்களுக்குத் தேவதூதன் வேறே செய்தியும் சொல்லியனுப்பினான். மத்தேயு சுருக்கமாயெழுதுகிற வழக்கப்படி, அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்ததை எழுதாமல் விட்டுவிட்டார். (ஆனால் வா. 8ல் குறிப்பிடுகிறார்). அவர்கள் கல்லறைக்குள் கண்டதையும் எழுதாமல் விட்டுவிட்டார். பிற்பாடு மகதலேனா மரியாளுக்குக் காணப்பட்ட இரண்டு தூதர் இந்தச் சமயத்தில் காணப்பட்டார்களென்று நினைக்க முகாந்தரமில்லை.

---



## II. நாளாகமம்.

(தொடர்ச்சி.)

(3) முன் போதகன்மாரை அனுப்பினதில் அது நன்மையென்று கண்டதினால், எல்லா ஜனங்களும் எருசலேமுக்குப்போக வருத்தப்படாதபடிக்கு யூதாவின் அரணான பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் முனிசீப் கோர்டுகளை நியமித்து, குற்றஞ்செய்தவர்களைத் தண்டிக்கவும், நியாயப் பிரமாணத்தைப் படிப்பிக்கவுமாக நியாயாதிபதிகளை ஏற்படுத்தினான். 2 நாளா. 19: 5—7. இவர்கள் மனிதனாலல்ல, தேவனால் நியமிக்கப்பட்ட அதிபதிகளானதால் மனிதருக்கு நன்மையாக மாத்திரமல்ல, தேவநாமத்துக்குக் கனமுண்டாகவும் பயபக்தியோடே நடக்க எச்சரிக்கையாயிருக்கவேணும். யோபு 31: 23. ஆதி. 42: 18. நெகே. 5: 15. பாரபட்சமிருக்கப்படாது. உபா. 10: 17. யோபு 34: 39. அப். 10: 34. பரிதானம் வாங்கப்படாது. யாத். 23: 8. உபா. 16: 19. நீதி. 17: 23. இதற்குப் பேர் (Inferior courts of justice) இன்பீரியர் கோர்ட்.

(4) எருசலேமில் (Supreme court) சூப்பிரீம் கோர்ட்டை ஸ்தாபித்தார். 2 நாளா. 19: 8—11. இது இரண்டு பிரிவு. நியாயப்பிரமாணம், தெய்வாராதனைமுதலிய கர்த்தருக்கடுத்த நியாயங்களை விசாரிக்கும்படி லேவியரையும் ஆசாரியரையும் ஏற்படுத்தினான். இதற்கு (Ecclesiastical court) சபைசங்கமென்று பேர். இதற்குத் தலைவன் பிரதான ஆசாரியனாகிய அமரியா. விவாத விஷயங்களையும், இரத்தப்பழிச் சங்கதிகளையும், நானாவித வழக்குகளும், விசாரிக்கும்படி சிவில் கோர்டு–(Civil court) என்று பேர். இந்த இராஜாவுக்கடுத்த நியாயங்களில் வயதும், அனுபோகமும், சமர்த்துமுள்ள இஸ்ரவேல் வம்சத்தலைவரை நியாயாதிபதிகளாக ஏற்படுத்தினார். இவர்களுக்குத் தலைவன் செபதியா. இது ஒரு சனகிரீம் சங்கம். நியாயாதிபதிகளல்லாத லேவியர் கோர்ட்டாருக்குச் சங்கதிகளைக் கொண்டுவரவும், கோர்ட்டுத் தீர்ப்புகளை நிறைவேற்றவுந்தக்க இவர்கள் கைக்குள்ளான உத்தியோகஸ்தராம்.

இந்த வருஷத்திலே யோசபாத் ஆகாப்போடே உறவுசெய்ததால் அவன்மேல் தேவன் கோபங்கொண்டிருக்கிறானென்பதைக் கேள்விப்பட்டோ, ஆகாப்போடே சூரியருக்கு விரோதமாய்ச் சண்டைக்குப்போனதால், சூரியரால் ஏவப்பட்டோ, மோவாபியரும், அம்மோனியரும், அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள சேயீர் மலையிலுள்ள ஏதோம் புத்திரரும் (10, 22, 23 வச.) அல்லது 2 நாளா. 26: 7ல் சொல்லிய மெகுனியரும் யோசபாத்தோடே யுத்தஞ்செய்ய வந்தார்கள். (சங். 83: 6—8.) சிலர் வந்து, சேயீர் மலைக்கப்புறத்தில் சவக்கடலுக்கு அக்கரையிலிருக்கிற சூரியாவிலிருந்து, அல்லது அவர்களால் ஏவப்பட்டு ஏராளமான ஜனங்கள் எங்கேதியிலிருக்கிறதாக வந்து சொன்னார்கள். 2 நாளா. 20: 1—13. இந்த இடத்தில் கெதார்லாகோமேர் சண்டைசெய்தான். ஆதி. 14: 7. எங்கேதிக்கு வேறே பேர் ஆத்சோன் தாமார்.

இதுவொன்று யோசபாத் இந்தச் செய்தி கேட்டவுடனே தன் பாவத்தை நினைத்தும், தன் பாவத்தினால் (19: 2ல்) தனக்குச் சொல்லப்பட்ட தேவகோபத்தையும் நினைத்தும் பயந்தான். (2) மனிதனிடத்தில் அல்ல

தேவஒத்தாசைக்காகக் கர்த்தரைத் தேடினன். (3) தேவஒத்தாசையை எல்லாரும் ஒருமித்துத் தேடும்படி உபவாசம் கூறினன். எஸ். 8: 21. எரேமி. 36: 9. யோனா. 3: 5. நியாயாதிபதிகளால் எல்லாரும் ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் எருசலேமில் கூட்டப்பட்டார்கள். (4) தேவாலயப் பிரகாரத்தில் எல்லாரும் ஜெபத்துக்கு வந்து கூடினர்கள். பலிபீடம் புதுப்பிக்கப்பட்ட (15: 8) புதுப்பிரகாரத்தில் சாலொமோன் இதற்கென்று கட்டின 2 நாளா. 6: 13. பிரசங்கப் பீடத்தில் நின்று யோசபாத் ஜெபம்பண்ணினர். 2 நாளா. 20: 5—12.

இந்த முக்கிய ஜெபத்தில் கவனிக்கவேண்டியது. (1) தேவனுடைய சர்வவல்லமையை நம்பி அறிக்கையிடுகிறர். (2) உடன்படிக்கையினல் தாமும் தமது ஜனமும் தேவனுக்குச் சொந்தமென்பதைப் பாராட்டிப் பேசுகிறர். (3) தேவனுடைய சிநேகிதனுகிய (யாக். 2: 23. எசா. 41: 8.) ஆபிரகாமின் வித்தாகிய யூதருக்கே இந்தத் தேசம் பாத்தியமானதென்கிறர். (4) எப்போதும் உமது ஜனங்களுடைய ஜெபத்தைக் கேட்டு மறுஉத்தரவுசெய்யத்தக்கதும், தேவன் வாசம்பண்ணுகிறதுமான பரிசுத்த ஆலயமிருக்கிறதாலும், ஆபத்துக்காலத்தில் வேண்டுதல்செய்ய 1 இரா. 8: 36, 37. அதைக் கேட்பதாக தேவன் சொன்ன வாக்கைப் பாராட்டிப் பேசுகிறர். (5) சத்துருக்களுடைய நன்றிகேட்டையும் துரோகத்தையும் எடுத்துக் காண்பிக்கிறர். பூர்வீகத்தில் இஸ்ரவேலர் செய்த நன்மையை நினைக்கவில்லை. உபா. 2: 5, 9, 19. (6) விடுதலைக்காக தேவன்மேல் முழு நம்பிக்கையோடே ஜெபிக்கிறர். எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறதென்கிறர். சங். 25: 13, 15. 121: 1, 2. 123: 1, 2. 141: 8.

யோசபாத்துடைய ஜெபத்துக்கு தேவன் கிருபையாய் ஜனங்கள் சிதறிப்போகுமுன், ஜெயத்துக்குரிய தீர்க்கதரிசனமாய், பாடகரின் தலைவனுகிய ஆசாபின் புத்திரரில் யகாசியேல் மூலமாய்ச் சொன்னதை, இராஜாவும் ஜனங்களும் விசுவாசித்து, தேவனுக்கு வெகு தாழ்மையோடே தோத்திரஞ்செலுத்தினர்கள். 2 நாளா. 20: 13—19. இராஜாவும் ஜனங்களும் தேவாலயத்தில் வழக்கமாய்ப் பாடுகிற துதிகளை 2 நாளா. 5: 13. 7: 3—6.–லேவியரைப் பாடும்படிக்குத் திட்டஞ்செய்து (1 நாளா. 16: 41.) யுத்தஆயுதங்களொன்றுமில்லாமல், நம்பிக்கையோடும், கெம்பீரமான ஆடல்பாடலோடும் யுத்தத்துக்குப் போனர்கள். தேவன் தமது மனித ரூபமெடுத்த தேவதூதனைக்கொண்டோ, சத்துருக்களுக்குள் பகையை வரச்செய்தோ, ஒருவனைஒருவர் வெட்டிச் சாகச்செய்தார். அப்படியே கிதேயோனுக்கும் (நியாயா. 7: 22.) யோனத்தானுக்கும் (1 சாமு. 14: 20.) ஜெயத்தைக் கொடுத்தார். (2 நாளா. 20: 20—30.) இந்த ஜெயத்துக்காக எல்லாரும் தேவனைத் துதித்தார்கள். ஆகையால் அந்த இடத்துக்கு ஸ்தோத்திரப் பள்ளதாக்கென்று அருத்தமுள்ள பேராக்காவென்று பேரிட்டார்கள். இதினல் யோசபாத்தின் இராஜ்யம் மேன்மையடைந்தது. தேவனே அவனுக்காக யுத்தஞ்செய்தாரென்ற அறிவு வந்தபடியால், சுற்றுப்புறத்திலுள்ளவர்கள் யோசபாத்துக்குப் பயந்து யுத்தமில்லாமல் அமரிக்கையாயிருந்தார்கள். யாத். 14: 13, 14. ஜெயம் கர்த்தருடையது.

கி. மு. 895ல் யோசபாத் எருசலேமின் இராஜாவாகிய யோராமோடே இஸ்ரவேலில் மோவாபியருக்கு விரோதமாய் யுத்தத்துக்குப்போனதில் அதிசயமாய் ஜெயம் கிடைத்தது. 1 இரா 3: 6-27.–இதற்கு முந்தின வருஷத்தில் இஸ்ரவேலின் இராஜாவாகிய அகசியாவோடே எசியோன் கேபாரிலே கப்பல்களைச்செய்து வியாபாரஞ்செய்வதில் ஆகாபின் குடும்பத்தோடே உறவாடினதினலே, தேவன் அவன் கிரியைகளை முறித்துப் போட்டார். அவனுடைய பாவத்தினிமித்தம் எலியேசரைக்கொண்டு கண்டித்தார். கப்பல்கள் உடைந்தபின்பு அகசியா தன்னேடே வியாபாரஞ்செய்ய யோசபாத்தைக் கட்டாயமாய் இழுத்தும் அவன் போகவில்லை 1 இரா. 22: 49. இவர் எச்சரிக்கப்படுமுன் கூட்டுவியாபாரஞ்செய்தார் ஆகாதவர்களின கூட்டத்தில் சேரப்படாது. சங். 1: 1—7.



## கேள்விகள்.

1. யோசபாத் எந்தெந்தச் சங்கதிகளுக்காக யார் யாரால் கண்டிக்கப்பட்டார்? கண்டிக்கப்படுவது நன்மையென்று ரூபியுங்கள்?

2. ஆசாவுடைய நடபடிக்கைக்கும் யோசபாத்தின் நடபடிக்கைக்கும் வித்தியாசங்களென்ன?

3. ஆசா, யோசபாத் எனபவர்களுடைய குற்றங்களென்ன? அதற்கெப்படி தண்டிக்கப்பட்டார்கள்?

4. "கர்த்தாவே எங்களுக்குத் துணைநில்லும்." "உத்தமனுக்குக் கர்த்தர் துணை." "உம்முடைய சிநேகிதனுகிய ஆபிரகாமுடைய சந்ததி." இந்த வாக்கியங்கள் யார் யாராலே எந்தெந்தச் சமயங்களில் சொல்லப்பட்டது.

5. யோசபாத்தில் காணப்பட்ட நன்மையான காரியங்களென்ன? அதினல் அவனுக்குக் கிடைத்த நன்மைகளென்ன?

6. கானனியா, எலியேசர், அனனி, மிகாயா என்பவர்களார்?

7. சூரியர், அம்மோனியர், யோவாபியர், ஏதோமியர், எத்தியோப்பியர் யார்?

8. ராமோத் கிலேயாத்–ராமா, பெராக்கா, தர்சீஸ், எசியோன் கேபேர் என்ற விடங்களுக்கு அர்த்தமென்ன? அந்த இடங்களில் நடந்த சம்பவங்களென்ன?

### 5. யோராம் (கர்த்தர் உயர்த்துகிறர்.) கி மு 892. 2 நாளா. 21 அதி.

தன் மூத்த மகனுகிய யோராம் துஷ்டனுயிருந்தாலும், யோசபாத்துக்குப் பக்தியுள்ள நல்ல சகோதரர் இருந்தார்கள். 2, 13 வச. ஆபிரகாம், ஈசாக்கைத்தவிர மற்றப் பிள்ளைகளுக்கு நன்கொடை கொடுத்ததுபோல, யோசபாத் யோராமுக்கு முதற்பிறப்புச் சுதந்தரத்தைக் கொடுத்து, மற்றவர்களுக்கு நன்கொடைகளைக் கொடுத்தான்.

2 வச. இங்கே யோசபாத்தை இஸ்ரவேலின் இராஜாவென்று சொல்லியிருப்பதேன்? (1) சுதந்தர வீசப்படி அவன் இஸ்ரவேலின் இராஜாவாகையாலும். (2) இவர் யூதா, பென்யமீனுக்கு மாத்திரமல்ல இவன் காலதிலும் ஆசா காலத்திலும், மருளவிழுந்த இஸ்ரவேலரைவிட்டுப் பிரிந்த பக்தியுள்ள இஸ்ரவேலரில் அநேகர் இவன் இராஜ்யத்தில் குடியேறியிருந்தபடியாலும், (3) பொதுப்பட அவன் குடிகள் யாவரும் இஸ்ரவேலராயிருந்தபடியாலும், (4) இவன் ஆகாபோடே உறவுசெய்து, அவனுக்காக யுத்தஞ்செய்யப்போனதாலும் இவன் இஸ்ரவேலின் இராஜாவென்று அழைக்கப்பட்டான்.–இந்த யோராமை யோசபாத் தான் சாகிறதற்கு சில

வருஷத்துக்குமுன்னே (கி. மு. 892.) தன்னோடே அரசாள நியமித்தி
ருந்தான். (2 இரா. 8: 16.) இவன் இராஜாவாகிறபோது (32) வயதாயி
ருந்து (8) வருஷம் எருசலேமில் அரசாண்டான்.–யோசபாத் ராமோத்
கிலேயாத்துக்கு யுத்தத்துக்குப் போகையில் தன் மகனாகிய யோராமை
தேசத்தில் குழப்பம் வராதபடிக்கு இராஜாவாக்கினான். இப்படியே தாவீ
தும் தாம் உயிரோடிருக்கும்போதே தன் மகன் சாலொமோனை இராஜா
வாக்கினார். 1 நாளா. 29: 22. உசியா (2 நாளா. 26: 21 )

யோராம் தன் இராஜ்யத்தில் பலப்பட்டு, தன் இருதயத்தைக் கடினப்
படுத்திக்கொண்டான். இவன் தன் சகோதரனை காயீனைப்போல் பொறா
மையினாலோ, பயத்தினாலோ கொன்றுபோட்டான். தன் பொல்லாத
செய்கைகளுக்கு எதிர்த்துத் தடுப்பார்களென்று நினைத்தும், தன் குடிகள்
தன்னை வெறுத்து அவர்களிலொருவனை இராஜாவாக்காதபடிக்கும் கொன்
றுபோட்டான். (2) இவன் ஆகாபின் மகள் அத்தாலியாளைக் கலியாணம்
செய்திருந்தபடியால், அவளால் ஏவப்பட்டுத் தன் தகப்பனையும், பாகால்
ஆராதனையையும் வெறுத்து யூதாவில் குடியேறியிருந்த இஸ்ரவேலின்
பிரபுக்களையும் கொன்றுபோட்டான். இந்தப் பிரபுக்கள் மெய்மார்க்கத்
தைப்பற்றியிருந்தபடியால் தங்கள் துன்மார்க்கத்துக்கு விரோதிகளாயிருப்
பார்களென்றும் நினைத்துக் கொன்றிருப்பான். 2 வசனத்தில் சொல்லியபடி
யூத பிரபுக்களையும் இஸ்ரவேலின் பிரபுக்களென்கலாமே. 2 நாளா. 21: 4.
இவர்கள் 19: 8ல் இஸ்ரவேலின் பிதாக்களென்னப்படுகிறார்கள். (3) தன்
தகப்பனும், பாட்டனும் செய்த மார்க்கச்சீர்திருத்தத்தைக் கெடுத்து, ஆகாப்
பின் வீட்டாரைப்போல பாகால் விக்கிரகாராதனைசெய்தான். 6 வச. எரு
சலேமின் குடிகளையும் விக்கிரகாராதனைக் கேவிவிட்டான். 11 வச.

யோசபாத் இஸ்ரவேல் இராஜ்யத்தை ஒன்றாக்கிப்போடலாமென்
றும் எல்லாரையும் மெய்மார்க்கத்தாராக்கலாமென்றும் யோசித்து, அத்தாலி
யாளைத் தன் மகனுக்கு விவாகஞ்செய்தது பெரிய தீமைகளுக்கு ஏதுவா
யிற்று. யோராமை தேவன் முழுவதும் அழித்துப்போட நியாயமிருந்தும்,
தாவீதோடே செய்த உடன்படிக்கையினிமித்தம் (2 சாமு. 7: 13. 1 இரா.
11: 36. 15: 4.) மேசியா தாவீதின் வித்தில் தோன்றும்படி ஒரு விளக்கை
அல்லது ஒரு குமாரனை 1 இரா. 11: 36 கொடுக்கச் சித்தமானார். மகிமைக்
காகவும், ஜனங்களை ஆறுதல்படுத்துகிறதற்காகவும் இராஜாக்களும் விளக்
குகள் என்னப்படுவார்கள். 2 சாமு. 21: 17. சங். 132: 17. "சகலநா
ளும்" 2 நாளா. 21: 7. 2 இரா. 8: 19. எருசலேமில் மேசியா வரும்வரை
அந்த உடன்படிக்கையின்படி தேவனே அந்த இராஜாக்களைக் காக்கத்தக்
கவராயிருக்கிறார்.

யோராம் கர்த்தரையும் அவருடைய ஆராதனையையும் வெறுத்துவிட்
டபடியினாலே (1) ஏதோமியர் கலகஞ்செய்து பிரிந்துபோனார்கள். 2 நா.
21: 8—10. இவர்கள் தாவீதின் காலமுதல் யூதாவுக்குக் கீழ்ப்பட்டவர்கள்
2 சாமு. 8: 14. முன் அங்கே இராஜாவில்லை. (1 இராஜா 22: 47.)–யூத
இராசாக்களே தங்கள் பிரபுக்களால் ஆண்டார்கள். ஈசாக் தன் மகன்
ஏசாவுக்குச் சொன்ன தீர்க்கதரிசனம் இப்போது நிறைவேறிற்று. (ஆதி. 17:
40.) யோராம் ஏதோமியரை முறியடித்தாலும் ஜெயிக்கவில்லை. (2) லீப்னா
பட்டணத்தாரும் கலகஞ்செய்தார்கள். இது ஆசாரியர்களின் பட்டணம்.
யோசு. 15: 42. 21: 13. யோராம் கர்த்தரைவிட்டுப் பாகாலை வணங்கினதி
னாலே அப்பட்டணத்தார் கலகஞ்செய்தார்கள். 2 நாளா. 21: 10. (3) எலி
யாவின் சாபமும் ஆக்கினையுமுள்ள நிருபத்தில் கண்டபடி அவன் வாதிக்



கப்பட்டான். 2 நாளா. 21: 11—15. எலியா யோசபாத்தின் காலத்திலே
யே பரத்துக்குப்போனவர் யோராமுக்கு எப்படிக் காகிதமெழுதக்கூடும்.–
எலிசாவானாலும் அல்லது எலியாவென்று பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி
யாகிலும் இந்த நிருபத்தை எழுதியனுப்பியிருக்கலாம். யோசியாவைப்
பற்றி அவன் பிறக்குமுன்னும் 1 இரா 13: 2. கோரேஸ் பிறக்குமுன்
ஏசாயாவும் (45: 3.) தீர்க்கதரிசனமாய் எழுதிவைத்ததுபோல, எலியாவும்
யோராமைப்பற்றி முன்னற எழுதி எலிசாவின் கையில் கொடுத்துப்போ
யிருப்பார். அவனால் அவன் ஜனங்களும் விக்கிரகாராதனைசெய்தபடி
யால் வாதிக்கப்பட்டார்கள். உபா. 31: 16. அவனே நாளுக்குநாள் அதா
வது 2 வருஷமாய் (யாத். 13: 10. எண். 9: 22. 2 சா. 1: 3. ஆமோஸ் 4:
4.) கொடிய வியாதியினால் வாதிக்கப்பட்டான். (4) பெலிஸ்தரும் அரபி
யரும் வந்து தீர்க்கதரிசனப்படி அவன் மனைவிகளையும் பிள்ளைகளையும்
சிறையாக்கி அவன் பொருள்களையும் கொள்ளையடித்துப்போனார்கள்.
2 நாளா. 21: 16, 17. கி. மு. 887, (5) கி. மு. 885ல் அவன் செத்தான்.
அவனுக்கு மகிமையாக கந்தவர்க்கங்களைக் கொளுத்தவுமில்லை. 2 நாளா.
16: 14. இராஜாக்களின் கல்லறையில் அடக்கஞ்செய்யப்படவுமில்லை.
2 நாளா. 21: 20.

### (6) அகசியா. (கர்த்தரால் காக்கப்பட்டவன்) கி. மு. 885.
### 2 நாளா 22 அதி 2 இராஜா 8—10 அதி

அரபியர் அநேகரைச் சிறைபிடித்துப்போக அவர்களோடேகூட
வந்த கொடும்பாதகரோ, 21, 16ல் சொல்லப்பட்ட பெலிஸ்தரோ இராஜ
வம்சமுழுவதையும் அழித்துப்போட்டார்கள். அகசியா மாத்திரம் தப்பி
னான். இவனுக்கு யோவாகாஸ் என்றும் பேர். 2 நாளா. 21: 17. அசரியா
வென்றும் பேர். (2 நாளா. 22: 6 ) இவன் இராஜாவாகிறபோது (22) வய
தாயிருந்து எருசலேமில் ஒரு வருஷம் அரசாண்டான்.

சில திருப்புதல்களில் அவன் 42 வயதாயிருக்கையில் அவன் அர
சாளத் துவக்கினானென்றிருக்கிறது. (2 நாளா. 22: 2.) இங்கிலீஷ் பை
பில் பார். 2 நாளா. 21: 5, 20ல் இவனுடைய தகப்பன் யோராமே வய
துள்ளவனாய் மரித்திருக்க இவனுக்கெப்படி அவன் அரசாளும்போது 42
வயதிருக்கும். இது கூடாது காரியம். (1) 2 இரா. 8: 26ல் 22 வயதென்
றிருக்கிறது. (2) 42 என்பது அத்தாலியாள் வயது. எபிரேய மூலத்தில்
42 வருஷங்களின் குமாரனென்றிருக்கிறது என்பார்கள். பொல்லாத அவ
பக்தியான அவன் தாயால் நடத்தப்பட்டு ஆண்டதால் நிந்தைக்குரிய
வசனமாயிருக்கிறதென்பார்கள். (3) அகசியா ஆண்ட உம்ரியின் இராஜ்
யத்துக்குரிய வயதைக் காட்டுகிறது. 4ம் உம்ரி 6 வருஷமாண்டான்.
(1 இரா. 16: 23 ) ஆகாப் 22 வருஷம் (1 இரா. 16: 29.) அகசியா 2 வரு
ஷம் (1 இரா. 22: 51 ) யோராம் 12 வருஷம் (2 இரா. 3: 1.) இந்த வரு
ஷங்களெல்லாம் கூட்டினால் 42 ஆகும். அகசியா யோராமின் 12ம் வரு
ஷத்தில் ஆளத்துவக்கினான். (2 இரா. 8: 25.) ஆகையால் அகசியாவின்
வயதைப்பற்றியல்ல, அவனுடைய ஆளுகையைப்பற்றிய வயது (42).
(4) கையெழுத்துப் பிரதிகளில் கைப்பிசகு என்றும் (5) எபிரேய மூலத்
தில் 42க்கும் 22க்கும் எழுத்துச் சற்று ஒன்றுபோலிருப்பதால் இந்தப்
பிசகு உண்டாயிருக்கிறதென்றும் சொல்வார்கள்.

அகசியாவின் தாயின் பேர் அத்தாலியாள். இவள் ஆகாப்பின் மகளும்
உம்ரியின் பேத்தியுமாயிருந்தாலும், உம்ரியின் வம்சத்தாரை அவன் மக

னென்றும் மகனென்றும் அழைப்பது எபிரேய பாஷை நடையே. மத். 1: 1. லூக். 3: 26.

1. அகசியா துன்மார்க்கமாய் நடந்தான். 2 நாளா. 22: 3 வச. இவன் சகோதரரெல்லாரும் அழிக்கப்பட்டபோது இவன் தேவசெயலாய்க் காக்கப்பட்டதை நினையாமலும், எருசலேமின் குடிகள் அவன் தகப்பன் ஆகாப்பின் வழியில் நடந்தபடியால் அவன் மரியாதையாய் அடக்கம் பண்ணப்படாததைக் கண்டும் எச்சரிக்கப்படாமலும், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். பாகாலையும் ஆஸ்தரோத்தையும் வணங்கினான்.

2. அத்தாலியாளும் ஆகாப்பின் குடும்பத்தாரும் அவனுக்கு ஆலோசனைக்காரராயிருந்தார்கள். அகசியாவின் தகப்பன் நிர்ப்பாக்கியமாய் மரித்தபடியால், இவன் விக்கிரகாராதனையை வெறுத்துத் தள்ளிப்போடாதபடி இவர்கள் துர்ஆலோசனைக்காரராயிருந்தார்கள். தேவனை அறியப்படிப்பிக்கும்படி இவன் பேரன் காலத்தில் நியமிக்கப்பட்ட லேவியர், நியாயாதிபதிகள் இவர்களுடைய ஆலோசனையைக்கேளாமல், தனக்குக் கேடாக ஆகாப்பின் குடும்பத்தாருடைய ஆலோசனையின்படி நடந்தான்.

3. அகசியா யோராமோடே சேர்ந்து, சீரியருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப்போனான். 2 இரா. 8: 28, 29. 9: 21, 27. இந்தக் காலத்தில் ஆகாப்பின் வீட்டாரை அழிக்கும்படி தேவன் ஏகூவை எழுப்பியிருந்தார். யோராமும் அந்த யுத்தத்தில் காயப்பட்டவனாய் எஸ்ரூயேலில் வந்திருந்தான். (2 நாளா. 22: 7—9) ஏகூ யோராமைக் கொன்றதுபோல், அவனைப் பார்க்கவந்த அகசியாவும் எஸ்ரூயேலில் காயப்பட்டாலும் மெகிதோவுக்கு ஓடிப்போனான். எருசலேமுக்கு ஓடிப்போனாலும் யோசபாத்தின் பேரனென்று தப்பிக்கொள்வான். இவனோ மெகிதோவுக்கு ஓடிப்போக அங்கேயிருந்து சமாரியாவுக்குக் கொண்டுவரப்பட்டு ஏகூவால் கொல்லப்பட்டான். அகசியா ஏகூவின் கட்டளையினால் சமாரியாவின் இராஜ்யத்தில் ஓடிப்போனவனை மெகிதோவுக்கு வரச்செய்து மரணத்தீர்ப்புச்செய்தான். 2 இரா, 9: 27. அவனோடேகூடப்போன அவன் சகோதரர் மக்களான 42 பேர் ஆகாபபின் வீட்டாரானதால் அவர்களும் கொல்லப்பட்டார்கள். 2 இரா 10: 13, 14. அகசியாவின் குடிகள் யோசபாத்தினிமித்தம் எருசலேமுக்கு அவனைக் கொண்டுபோய் அவனை அடக்கம்பண்ணினார்கள். யோராமோ நாபோத்தின் தோட்டத்தில் எறியப்பட்டான். 2 இரா. 9: 26. நீதிமானின் பேர் ஆசீர்வதிக்கப்பட்டது. துன்மார்க்கரின் பேரோ அழிவு என்று அறிகிறோம. 2 நாளா. 22: 9.

அகசியாவின குடும்பத்தில் ஆளப் பிள்ளையில்லை. எல்லாரும் இளமையும் பெலவீனமுமாயிருந்தார்கள். இவர்களும் இரண்டு பெரிய வந்திரக் கற்களுக்கு ஊடே தப்பவும் வழியில்லை. ஏகூ. பெலங்கொண்டு ஆகாப்பின் வீட்டை அழிக்கிறான். அத்தாலியாளும் இராஜ வங்கிஷத்தாரை அழிக்கிறாள். 10, 11 வச அத்தாலியாள் யூதஇராஜா வம்சத்தார் அனைவரையும் கொன்றாள். தன் குடும்பத்தார் இஸ்ரூயேலில் ஏகூவினால் கொல்லப்பட்டதால் யூதாவின் சிம்மாசனத்தை மாற்றிக்கொள்ளவேணுமென்றோ, யூதாவில் தன் இராஜ்யத்தை உறுதிப்படுத்தவோ, தன்னைக் கொல்லும்படி ஏகூவுக்குக் காட்டிக்கொடுக்காதபடிக்கோ, பாகாலின் ஆராதனையை நிலைப்படுத்தவோ அவர்களைக் கொன்றாள்.

அத்தாலியாள் யூதஇராஜ வம்சத்தாரைக் கொல்லும்போது, பிரதான ஆசாரியனாகிய யோய்தாவின் பெண்சாதி யோசேபியாத் அகசியாவின்



மகன் யோவாசை மறைவாய் எடுத்துக் கர்த்தருடைய ஆலயத்தில் வளர்த்தாள். இந்த யோசேபியாத் யோராமுக்கு அத்தாலியாளால் அல்ல வேறு மனைவியால் பிறந்தவள். விக்கிரகபக்திக்காரியுடைய மகளைப் பக்தியுள்ள ஆசாரியன் விவாகஞ்செய்திருக்கமாட்டான். இப்படியாக யோவாசு ஆசாரியர் பிரகாரத்தில் (6) வருஷமாகக் காக்கப்பட்டான். யோசபாத்துக்குப்பின் இஸ்ரூவேல் இராஜாக்களின் நாமங்களும், யூதஇராஜாக்களின் நாமங்களும் கெட்ட ஐக்கியத்தினாலே ஒன்றுபோல வருகிறதைக் கவனிக்க வேண்டும்.

---

## 1886 ஹு ஜனுவரி மீ 10வ யில் கனம் உவால்க்கர் ஐயரவர்கள் மெய்ஞ்ஞானபுரம் பரிசுத்த பவுலின் ஆலயத்தில் செய்த பிரசங்கம்.

சங். 51: 7.

(தொடர்ச்சி.)

ஒரு ஓய்வுநாள் பள்ளிக்கூடத்தில் ஒரு சின்னப்பையனிருந்தான். அவன் மிகவுந் தொந்தரவுக்காரன். ஒரு துடுக்கன். உபாத்தியாயருக்கு மிகவும் தொந்தரவுசெய்துகொண்டிருப்பான். படிக்கும் மற்றும் பிள்ளைகளை நகைத்தும் தள்ளியும் இடையூறுசெய்வான். உபாத்தியாயரோ இவனைச் சீர்ப்படுத்த, அவனுக்காக ஜெபம்பண்ணிவந்தார். "சின்னப்பையனே கிறிஸ்து உன்னை நேசிக்கிறார்" என்று அடிக்கடி பட்சமாய் அவனிடத்தில் சொல்லுவார். உபாத்தியாயர் செய்ததெல்லாம் வீணும் விருதாவாகவும், அவன் சீர்ப்படுவது அசாத்தியமாகவும் தோன்றிற்று. ஒருநாள் கொழுப்பு மலமலவென்று கொதித்துக்கொண்டிருக்கும் கொப்பரையண்டை நின்று பார்த்துக்கொண்டிருக்கையில், அவன் கிட்டநின்ற ஒருவன் அவனை அதற்குள் பிடித்துத் தள்ளிவிட்டான். அவனைத் தூக்கியெடுத்தபோது அவன் தோல் சட்டையாக உரிந்துவிட்டது. அவன் மிகவும் மோசமும் சங்கடமுமான நிலைமையிலிருந்தான். அவனை ஒரு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். சிலநாளுக்குப்பின் அவன் பிழைப்பானோ சாவானோ என்பதைப்பற்றிச் சந்தேகமுண்டாயிற்று. டாக்ற்றர்மார் கூடி ஆலோசித்ததில் அவன் மரித்தேபோவான் என்று தீர்த்தார்கள். தாய்தகப்பன்மாருக்கு ஆளனுப்பி வரவழைத்தார்கள். ஆனால் அவன் இன்னொரு ஆளையும் பார்க்க விரும்பினான். அது யார் என்று உங்களுக்குத் தெரியுமா? ஓய்வுநாள் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர். ஆம் இவரே அவனுக்குக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன்னை நேசிக்கிறார் என்று போதித்தவர். உபாத்தியாயர் இச்சமாசாரம் கேள்விப்பட்டபோது நடுஇராத்திரி மிகவும் இருட்டாயிருந்தாலும் உடனே போனார். அவர் போகையில் அவன் படுக்கையில் கிடந்தான். உபாத்தியாயர் அவனை இனம் அறிவது கூடாததாயிருந்தது. அவர் அவன் படுக்கையண்டை முழங்காற்படியிட்டு, மோட்சத்தைப்பற்றிப் பேசினார். மோட்சம் பரிசுத்தமானது. தேவன் பரிசுத்தர். தேவதூதர் பரிசுத்தமுள்ளவர்கள். மோட்சத்திலுள்ள எல்லாரும் பரிசுத்தவான்கள். இப்படி மோட்சலோகம் பரிசுத்தமானதால் நாலும்

நீயும் அங்கே போவது எப்படி என்று கேட்டார். அந்தப் பையன் உத்தரவுசொல்வானென்று அவர் ஒருபோதும் எண்ணவில்லை. அவன் முகத்தில் சந்தோஷம் இலங்கிற்று. அவன் வானத்துக்கு நேராகத் தன் கண்களை யேறெடுத்து “விலையுயர்ந்த இரத்தத்தினாலே, விலையுயர்ந்த இரத்தத்தினாலே” என்றான். இந்த விலையுயர்ந்த இரத்தம் எது? தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே.

அவன் தன் இருதயம் கெட்டதாயிருந்தது, அக்கிரமம் நிறைந்ததாயிருந்தது, பாவத்தால் கறைப்பட்டதாயிருந்தது என்று அறிந்து, இப்படி ஜெபம்பண்ணினான். கிறிஸ்து இயேசுவின் இரத்தம், சகல பாவங்களுமற அவனைக் கழுவிவிட்டது. அவன் இப்போது பரலோகத்திலிருக்கிறான்.

பரலோகம் பாக்கியமுள்ளது. அங்கேயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பரிசுத்தமுள்ளவர்கள். அவர்கள் சந்தோஷமுள்ளவர்கள். அவர்கள் அங்கே எப்படிப்போனார்கள்? இவர்கள் எல்லாரும் தங்கள் அங்கியை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தபடியினாலே இவர்களெல்லாரும் நீர் “என்னைக் கழுவியருளும் அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன் என்ற இந்தச் சிறு ஜெபத்தைப்பண்ணினவர்கள்.

அந்த மூன்று காரியமென்ன?

முதலாவது. நாமெல்லாரும் கழுவப்படவேண்டியவர்கள்.
இரண்டாவது. நம்மைநாமே கழுவுவது கூடாத காரியம்.
மூன்றாவது. நம்மைக் கழுவுகிறவர் ஒருவர் உண்டு.

இந்த மூன்றையும் நாம் நம்முடைய மனதில் நன்றாய்ப் பத்திரப்படுத்திக்கொள்ளவேண்டும்.

இயேசுவே நம்மைப் பரிசுத்தமாக்கக் கூடியவர். நம்மைப் பரிசுத்தமாக்குகிறவரும் அவர்தான். ஒருதரம் ஒரு போதகர் ஒரு சிறுபிள்ளையண்டை வந்து “கிறிஸ்து உனக்கு என்னசெய்தார்” என்று கேட்டார். அதற்கு அந்தப் பிள்ளை “அவர் என் இருதயத்தைக் கழுவியிருக்கிறார்” என்று மாறுத்தரம் சொன்னது. சிறுபெண்ணே கிறிஸ்து உன்னைக் கழுவியிருக்கிறாரா? சிறுபையனே கிறிஸ்து உன்னைக் கழுவியிருக்கிறாரா? இல்லையென்றால் நீயும், “என்னைக் கழுவியருளும் அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்” என்ற இந்த ஜெபத்தைப்பண்ணு. அப்படியானால் அவர் குஷ்டரோகியைப் பார்த்துச் சொன்னதுபோல உன்னைப் பார்த்தும் “எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு” என்பார்.

---

1885௵ சூலாய்௴ 14௳ மகாகனம்பொருந்திய டாக்ற்றர் சார்ஜென்று அத்தியக்ஷரவர்களுடைய திவ்வியபணிவிடை ஜூபிலி உற்சவம்கொண்டாடினபோது வாசிக்கப்பட்ட

## திருநெல்வேலிச் சபையின் விர்த்தாந்தம்.

இந்தச் சமயம் சர்ச்சுமிஷியோனைச் சேர்ந்த திருநெல்வேலிச் சபைக்குச் சிறந்த இன்பந்தரும் தருணமாயிருக்கிறது. நம்முடைய அருமையான அத்தியக்ஷரவர்கள் திருநெல்வேலிச் சபையில் திவ்வியபணிவிடையை நிறைவேற்றின ஜூபிலி உற்சவத்தைக் கொண்டாடும்படி நாமெல்லாரும்



இப்போது கூடிவந்திருக்கிறோம். சென்ற ஐம்பது வருடக்காலங்களில் நடந்த சம்பவங்களைத் தெரிவிக்குமுன், இந்த நாட்டில் கிறிஸ்துமார்க்கம் ஆரம்பமான சரித்திரத்தை இங்ஙனம் சுருக்கிச்சொல்லுகிறேன். பாளையங்கோட்டையில் முதலாவது சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது, லூத்தர் சபையைச் சேர்ந்த சவரிமுத்து என்ற ஒரு சுதேசி. பின்பு தஞ்சாவூர் மகா ராஜாவினிடத்தில் உத்தியோகமாயிருந்த விற்றில்றன் துரை, பாளையங்கோட்டையில் வந்திருந்து தம்மைச் சுற்றிலுமிருந்த அஞ்ஞானிகளுக்கு வெகு ஆவலோடே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். 1778௵ கனம் சுவார்ச்சு ஐயர் முதல் தடவையாகச் சபை விசாரணைசெய்யும்படி பாளையங்கோட்டைக்கு வந்தார். 1780௵ பாளையங்கோட்டையில் 40 கிறிஸ்தவர்களிருந்தார்கள். 1784௵ 130 கிறிஸ்தவர்கள் பாளையங்கோட்டையிலும் அதற்கடுத்த பல ஊர்களிலும் பட்டிகளிலும் சிதறியிருந்தார்கள். இவர்களுக்குள் இரண்டு குடும்பத்தார் சாணார். அவர்கள் வெளித்தரையில் குடியிருந்தார்கள். தற்காலத்தில் திரளாய்க் கிறிஸ்துமார்க்கத்தில் அமைந்திருக்கிற சாணாருக்குள் இவர்களே முந்தினவர்கள். 1785௵ கனம் சுவார்ச்சு ஐயர் இரண்டாவதாய்க் கடைசிவிசையாகத் திருநெல்வேலிக்கு வந்து, மூன்று வாரமிருந்து சபைகளை விசாரித்ததுடன், மராஷ்டிகப் பிராமண ஸ்திரீயாகிய குலோரிந்தாள் என்ற கிறிஸ்தவள் கோட்டைக்குள் கட்டியிருந்த கோவிலைப் பிரதிஷ்டைபண்ணினார். இந்தச் சம்பவம் நடந்து இப்போது சரியாய் 100௵ ஆகிறது. 1790௵ பத்தியில் சிறந்தவரும் திவ்விய வைராக்கியமுள்ளவருமான சத்தியநாதன் உபதேசியார் பட்டாபிஷேகம் பெற்று, திருநெல்வேலிச் சபைமுழுமையையும் விசாரித்து வந்தார். 1791௵ கனம் ஜெனிக் ஐயர் சபை விசாரணையை ஒப்புக்கொண்டார். அவர் காலத்திலும் அவருக்குப் பின்வந்த கனம் கெரிக் ஐயர் காலத்திலும் சபை செழித்தோங்கி வந்தது. ஆகவே, இந்த நூற்றாண்டின் துவக்கத்தில், 4000 கிறிஸ்தவர்களிருந்ததாகச் சபை டாப்பில் கண்டிருந்தது. காரியம் இப்படி அநுகூலமாய் நடந்தேறி வருகையில், சபையின் விர்த்திக்கும் தேர்ச்சிக்கும் இடையூறாக மூன்று விஷயங்கள் சம்பவித்தன. முதலாவது, கிறிஸ்துமார்க்க அறிவு விர்த்தி சங்கத்தார் தங்களுடைய வருமானத்தில் இந்துதேசத்துக்கு அதிகமாய்ச் செலவிட ஏதுவில்லாமல், தங்கள் வேலையைச் சுருக்கவேண்டியதாய் நேரிட்டது; இரண்டாவது, கும்பினியார், மிஷனெரிமார்கள் இத்தேசத்திற்கு வரக்கூடாதென்று தடைசெய்தார்கள்; மூன்றாவது, பெருவாரி விஷச்சுரம் தேசத்தைப் பாழாக்கினது. அதால் அநேக கிறிஸ்தவர்கள் மரணமடைந்தார்கள். பின்னும் அநேகர் மருள விழுந்தார்கள். 1816௵ பாளையங்கோட்டையில் வந்திருந்த கவர்ன்மென்று சாப்ளன் கனம் ஹௌவ் ஐயர். தாம் ஐரோப்பிய துரைமார்களுக்குச் செய்துவந்த பணிவிடையோடு, அஞ்ஞானக் கிராமங்களில் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து, அநேக இடங்களில் ஆலயங்களைக் கட்டி, சபையை மேல்விசாரித்து வந்தார். அவர் சென்னபட்டணம் சர்ச்சுமிஷியோன் கமிற்றிமாருக்குக் காகிதம் எழுதி, மிஷியோன் வேலையை நடத்துவதற்காக ஒருவரை அனுப்பவேண்டும் என்று கேட்டதற்கு, கமிற்றிமார் கனம் ரேனியூஸ் ஐயரவர்களை திருநெல்வேலிக்கு அனுப்பினார்கள். கனம் ரேனியூஸ் ஐயர் விசேஷித்த வரம்பெற்றவர். மகா வைராக்கியமுள்ளவர். இளைப்பற்ற உழைப்பாளி. அவர் 1820௵ தமது வேலையைத் துவக்கினார். தேவன் அவர் வேலையை விசேஷித்த வகையாய் ஆசீர்வதித்தார். அவர் 15 வருஷம் வேலைசெய்தபின்பு, சர்ச்சுமிஷியோன் சங்கத்தாரின் கோட்-

பாட்டுக்கு விபரீதமான கொள்கைகொண்டதால், அவர் அவர்களைவிட்டுப் பிரிந்துவிட நேரிட்டது. அப்புறம் அவர் சிறிதுகாலம் ஆர்க்காட்டில் தமது பணிவிடையைச் செய்துவந்தார். 1829௵ சுவிசேஷ அபிவிர்த்தி சங்கத்தார் தங்களுக்குக் கிறிஸ்துமார்க்கக் கல்விவிர்த்தி சங்கத்தார் கையளித்திருந்த சபைகளை விசாரிக்கும் கனம் ரோசன் ஐயரை இந்நாட்டுக்கு அனுப்பினார்கள். அதுமுதல் இங்கிலாந்து சபையைச் சேர்ந்த இரண்டு பெரிய சங்கத்தாரான சர்ச்சுமிஷியோன் சங்கத்தாரும் சுவிசேஷ அபிவிர்த்தி சங்தாரும் திவ்விய பணிவிடையை இந்நாட்டில் நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். கனம் ரேனியூஸ் ஐயருக்குப்பின்பு, கனம் பெற்றிற் ஐயரவர்கள் 1835௵ வந்தார்கள். அவர் காரியங்களைக் கிரமப்படுத்தி, சிறந்தவிதமாய் அவைகளை நிர்வகிக்கத்தக்க சக்தியுடையவராயிருந்து 1847௵வரையும் சித்தி உண்டாக உழைத்துவந்தார்.

இப்போது சென்ற ஐம்பது வருஷங்களில் நமது அத்தியக்ஷரவர்கள் நிறைவேற்றின கிரியைகளுக்குச் சம்பந்தப்பட்ட சரித்திரத்தைப் பார்ப்போமாக. அவர்கள் 1835௵ ஜூலை௴ 7௳ பாளையங்கோட்டைக்கு நல்ல வாலிபப்பிராய பலத்தோடே வந்துசேர்ந்தார்கள். அப்போது சென்னபட்டணம் செக்ரற்றெரியாகிய கனம் ஜெ. றக்கர் ஐயரவர்களும் ஒரு வாரத்துக்குமுன் வந்திருந்த கனம் பெற்றிற் ஐயரவர்களும் அவர்களைச் சந்தோஷத்தோடே உபசரித்தார்கள். கனம் றக்கர் ஐயரவர்கள் கர்த்தர் அவர்களைத் தமது ஊழியத்தில் பலப்படுத்தவும், இந்த மிஷியோனுக்கு அவர்களை ஆசீர்வாதமாய் வைக்கவும்தக்கதாய் அவர்களுக்காய் ஜெபித்தார்கள். அந்த ஜெபம் நமது அத்தியக்ஷரவர்கள் விஷயத்தில் சிறந்த வகையாய் அங்கீகரிக்கப்பட்டதென்பதை நாம் பிரத்தியட்சமாய் அறிந்திருக்கிறோம். அவர்கள் நமது தேசத்துக்கு வந்தபோது ஏறக்குறைய 20 வயசாயிருந்தார்கள். சாஸ்திரப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கவும் மாதந்தோறும் திருநெல்வேலியில் எங்குமுள்ள பள்ளிக்கூடங்களை விசாரிக்கவும் அப்போது ஏற்படுத்தப்பட்டார்கள்.

1836௵ கனம் தோமாஸ் ஐயரவர்கள் வந்து, மெஞ்ஞானபுரத்தில் வாசஞ்செய்து, நமது அத்தியக்ஷரவர்களோடே பிரியாச்சிநேகமாயிருந்து, பூரண முயற்சியோடு 33 வருஷம் உழைத்து 1870௵ மார்ச்சு௴ 28௳ இளைப்பாறுதலுக்குட்பிரவேசித்தார்கள். அந்தவேளையிலே அவர்களுடைய சிநேகிதராகிய நமது அத்தியக்ஷரவர்களும் தோமாஸ் ஐயரவர்களுடைய மூத்த குமாரரும் கூடவே இருந்து அவர்களுக்குக் கடைசியாகச் செய்யவேண்டிய உத்தம கடமைகளைச்செய்து முடித்தார்கள்.

1841௵ அநேகர் கிறிஸ்துமார்க்கத்தை அநுசரித்ததினிமித்தமாய், அஞ்ஞானிகள் ஏகமாய்ச் சேர்ந்து, "விபூதிச் சங்கம்" ஒன்றை ஸ்தாபித்து, தங்கள் ஆட்களைக்கொண்டு புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்தில் அமைந்தவர்களுக்கு நிஷ்டூரம்செய்து, அநேகருடைய வீடுகளைக் கொள்ளையடித்து, அநேக ஜெபவீடுகளையும் இடித்துப்போட்டார்கள்.

இதற்குமுன் 1839௵ நமது அத்தியக்ஷரவர்கள் இங்கிலாந்துக்குப் போய் 1841—42௵ கனம். J. T. றக்கர் ஐயரவர்கள் கனம் செப்றிமிஸ் ஹாப்ஸ் ஐயரவர்களுடன் உதவிக்குருப்பட்டமும் குருப்பட்டமும் பெற்றுத் திரும்பிவந்தார்கள். கனம் றக்கர் ஐயரவர்கள் பண்ணைவிளையில் யாவருக்கும் பிரயோஜனமுண்டாகும் வண்ணமாய் உழைத்தார்கள். கனம் ஹாப்ஸ் ஐயரவர்கள் முதலாவது பாளையங்கோட்டை சாஸ்திரப் பள்ளிக்கூடத்திலும், பின்பு பாவூர்ச் சேகரத்திலும் பிரயாசத்தைச் செலுத்திவந்தார்கள்.



# சமாசாரத்திரட்டு.

பர்மாவின் மாஜீ அரசனான தீபா சென்னை நுங்கம்பாக்கத்தில் ஒரு பெரிய மாளிகையில் தனது பத்தினிகளோடும் சொற்ப ஊழியக்காரர்களோடும், கட்டுக்காவலோடும், அதிகாரமற்று கவலையற்ற சிந்தையோடும் வசித்துக்கொண்டிருக்கிறார். இவரைப் பேட்டிசெய்ய எவர் விரும்பினாலும் கிடையாது. சென்றதற்கு முன்வாரத்தில் மங்கலாயிருந்து சில மாசங்களுக்குமுன் பாரீசு நகரத்துக்குப்போயிருந்த பர்மிய மந்திரி பாரீசிலிருந்து திரும்பி பர்மாவுக்குப்போக கடல்மார்க்கமாய்க் கப்பல்யாத்திரை செய்து வந்தவர் சென்னையிலிறங்கி தீபாவைக் காணவேண்டுமென்று வேணவாவினால் நுங்கம்பாக்கத்தில் தீபா வசிக்கும் மாளிகைக்குப்போய் உள்ளே போகவேண்டுமென்று கேட்டுக்கொள்ள போலீசு சேவகர் உத்தரவுகொடுக்கவில்லை. இன்ஸ்பெக்டர் போலீஸ் கமிஷனர் இவர்களுக்கு மனுச்செய்தார். உத்தரவு கிடைக்கவில்லை. கவர்ன்மெண்டு ஆபீசுக்குப் போய்த் தீபாவைப் பேட்டிசெய்ய உத்தரவுகொடுக்கவேண்டுமென்று கெஞ்சிப்பார்த்தும் தன் எண்ணம் பலியாமல் அன்று மாலையிலேயே கப்பலேறி பர்மாவுக்குப் போய்விட்டார்.

பிராஞ்சுதேசத்தில் இருக்கும் டாக்டர் ஸ்பெர்ட் என்பவர் ஓர்விதமான நேத்திர அமைப்பைக் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது சாதாரணமாக மனிதர்களுக்கு கண் பழுதுபட்டுப்போனால், கிளாஸ் கண்ணென்னும் பொய்க்கண்களை வைத்துப் பொருத்திவருவது அங்கிலேயர்களால் இப்போது வழக்கமாயிருக்கிறது. ஆனால் இக்கண்கள் பார்வைக்கு மாத்திரம் கண்களைப்போல தோன்றுமேயன்றி திருஷ்டிக்குப் பிரயோஜனப்படுகிறதில்லை. ஷை ஸ்பெர்ட்டென்னும் பிராஞ்சு டாக்டர் இப்பொது கண்டுபிடித்திருக்கிறது இப்படியல்ல. இவர் செய்வது எப்படியெனில், மிருகங்களுடைய கண்களை எடுத்து மனிதர்களுடைய கெட்டுப்போன கண்களின் குழியிலே பொருத்துகிறார். இதை இவர் கடந்த மேமாசமுதல் தகுதியாக பரீக்ஷை பார்த்தாராம். பரீக்ஷையில் தன்னுடைய பிரயாசம் சித்தியாச்சுது. அதாவது முயலினுடைய கண்களை எடுத்து மனிதர் கண்களில் பொருத்தினாராம். பொருத்தின கண்கள் மனிதர் கண்களைப்போலவே விளங்கினதோடு இயல்பான கண் நெசவைப்போன்ற நெசைவு, கண்சுழலல், ஒளி யூடுருவல் முதலானவைகளெல்லாம் ஜன்ம அமைப்பைப்போலவே உண்டாயினவாம். இதனால் எண்ணிய காரியம் ஜெயம்பெறவே, இப்போது அத்தொழிலை உலகமெல்லாம் பிரசித்தமாக்கவேண்டி ஷை டாக்டர் அனேக முயல்களைச் சேகரஞ்செய்து வருகிறார். இனி இந்தக் கண்ணமைப்புவைத்தியம் இந்தப் பக்கமெல்லாம் வந்து மனிதர்களுக்கு மெத்த அனுகூலமாகுமென்று நினைக்கிறோம். இது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருப்பதோடு மனிதர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கிறதே!

வெறும் சுருட்டுப் பிடிப்பதினால் புகையிலையின் காரம் வாய்க்குள்ளும் தேகத்துக்குள்ளும் ஏறுகின்றது. புகையிலை உக்காவில் போட்டுப் பிடிப்பதினால் அதன் காரம் நீரில் தங்கிப்போவதினால் இந்தியாதேசத்தில் பிடிக்கும் உக்கா சீமையிலும் பிடிக்கும் வாடிக்கையுண்டாகில் உத்தமமென்று பாக்ஸ் என்னும் பண்டிதர் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனராம்.

(திரு.—னி. மார்ச்சு௴ 1௳.)

மார்ச்சுமீ நாள்-31. மாசிமீ 19உ முதல், பங்குனிமீ 19உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | ௧௯ | கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள். எண். 20: 8. |
| செ | 2 | ௨௰ | இஸ்ரவேல் புத்திரர்...ஓபேத்தில் பாளயமிறங்கினார்கள். 21: 10. |
| பு | 3 | ௨௧ | அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். 22: 12. |
| வி | 4 | ௨௨ | நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக. 23: 10. |
| வெ | 5 | ௨௩ | யாக்கோபிலிருந்து தோன்றும் ஒருவர் ஆளுகைசெய்வார். 24: 19. |
| ச | 6 | ௨௪ | என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன். |
| ஞா | 7 | ௨௫ | தேசம் இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிடப்படவேண்டும். 26: |
| தி | 8 | ௨௬ | நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே என்றார் 27: 14. |
| செ | 9 | ௨௭ | கர்த்தருக்குச் சுகந்தவாசனையான தகனபலிசெலுத்தக்கடவீர்கள். |
| பு | 10 | ௨௮ | உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துங்கள். 29: 7. (28: 24. |
| வி | 11 | ௨௯ | பொருத்தனைபண்ணினால்...செய்யக்கடவன். 30: 2. |
| வெ | 12 | ௩௰ | பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்றுபோட்டார்கள். 31: 8. |
| ச | 13 | ௧ | உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும். 32: 23. |
| ஞா | 14 | ௨ | ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரணமடைந்தான். 33: 39. |
| தி | 15 | ௩ | கானான்தேசம்...உங்களுக்குச் சுதந்தரமாகக்கிடைக்கப்போகிறது. |
| செ | 16 | ௪ | நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே வாசம்பண்ணுகிறேன். 35: 34. |
| பு | 17 | ௫ | கர்த்தர்...விதித்த கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே. 36: 13 |
| வி | 18 | ௬ | மோசே கர்த்தர் விதித்த யாவையும் அவர்களுக்குச் சொன்னான். |
| வெ | 19 | ௭ | உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார். உபா. 2: 7. |
| ச | 20 | ௮ | உம்முடைய வல்லமைகளுக்கும் ஒப்பாகச் செய்யத்தக்க தேவன் |
| ஞா | 21 | ௯ | அவரைத் தேடும்போது அவரைக் கண்டடைவாய். 4: 29. (யார் ? |
| தி | 22 | ௰ | பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக. 5: 21. |
| செ | 23 | ௧௧ | இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. 6: 6. |
| பு | 24 | ௧௨ | நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம். 7: 6. |
| வி | 25 | ௧௩ | உன்னை...நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக. 8: 2. |
| வெ | 26 | ௧௪ | உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். 9: 12: |
| ச | 27 | ௧௫ | அந்நியனைச் சிநேகிப்பீர்களாக. 10: 19. (றேன். 11: 26. |
| ஞா | 28 | ௧௬ | உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கி |
| தி | 29 | ௧௭ | கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய். |
| செ | 30 | ௧௮ | தீமையை உங்களிடத்திலிருந்து விலக்குவீர்களாக. 13: 5. (12: 28. |
| பு | 31 | ௧௯ | நீங்கள்...கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள். 14: 2. |

## விசேஷ நாட்கள்.

5. அமாவாசை.
7. கின்னுவ செசிமா ஞாயிறு.
10. லெந்தென்னும் முதல்நாளாகிய சாம்பற் புதன்கிழமை.
14. லெந்தென்னும் நாட்களில் 1-ம் ஞாயிறு.
20. பௌரணமி.
21. லெந்தென்னும் நாட்களில் 2-ம் ஞாயிறு.
25. டசி கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள்.
29. லெந்தென்னும் நாட்களில் 3-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௪. ஏப்பிரல்மீ. ௲அகூ வரு.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

**468.** கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்ததைப்பற்றிய முதல் குறிப்புகளெவை ?

(1) கல்லறை திறக்கப்பட்டிருந்தது.

(2) கல்லறை வெறுமையாயிருந்தது.

(3) கல்லறைக்குள் வஸ்திரங்கள் ஒழுங்காயிருந்தது. முதல் அடையாளத்தைப்பற்றி மகதலேனா மரியாளும், மற்ற இரண்டு அடையாளங்களையும்பற்றி, பேதுரு யோவான் ஆக இந்த இரண்டுபேரும் சாக்ஷியிடுகிறார்கள் (மத் 28: 1. மாற் 16: 1. லூக் 24: 10—12). கர்த்தருடைய பாடுகளின் சரித்திரத்தைச் சொல்லும் முன்னதாக, மகதலேனா மரியாளைப் பற்றி பரி. லூக்கா மாத்திரம் சொல்லுகிறார் (லூக் 8: 1).

**469.** மத் 28: 1ஐயும், மாற் 16: 2ஐயும், லூக் 23: 54. 24: 10ஐயும் ஒற்றுமைப்படுத்து ?

மகதலேனா மரியாள் தன் தோழிகளுக்கு முந்திக் கல்லறையினிடத்துக்கு வந்துசேர்ந்ததாகத் தோன்றுகிறது (மத் 28: 1. மாற். 16: 2). பரி லூக்காவோ, மொத்தத்தில் எல்லா ஸ்திரீகளும் செய்த ஊழியங்களையும், சொன்ன சாக்ஷியங்களையும் ஒருமிக்கச் சொல்லுகிறார்.

**470.** யோவான் 20: 2ஐ விஸ்தரி ?

கல்லறையை அடைத்திருந்த கல் தள்ளப்பட்டிருந்ததை மகதலேனா மரியாள் தூரத்தில் கண்ட மாத்திரத்தில், கல்லறை வெறுமையாயிருக்கிற

தென்றும், திருச்சரீரத்தை எடுத்துக்கொண்டுபோகிறதற்காகத்தான் மேற்படி கல்லைத் தள்ளியிருக்கிறதென்றும், முன்பின் யோசியாமல் திடீரென்று தீர்மானித்து உடனே திரும்பிவிட்டாள். ஆகையால் அவள் கல்லறையினிடத்திற்கு வந்து அதைச் சுற்றிப்பார்க்கவில்லை என்பது தெளிவாம். இவளோடேகூடக் கல்லறைக்கு வந்ததாக, பரி. மாற்கும் (16: 1) பரி. மத்தேயும் (28: 1) சொல்லுகிற ஸ்திரீகளுக்குத் தேவதூதன் காணப்பட்டுச் செய்திசொல்லி அனுப்பினதுபோல, மகதலேனா மரியாளுக்கு, அவன் மேற்காட்டியபடி திரும்புமுன் தேவதூதன் காணப்படவுமில்லை, செய்தி சொல்லி அனுப்பவுமில்லை என்பது தெளிவாயிருக்கிறது.

471. யோவான் 20: 2. "சீமோன் பேதுருவினிடத்திலும், மற்றச் சீஷனிடத்திலும் போய்" என்ற வார்த்தைகளினால் என்னத்தை அநுமானிக்கலாம்?

இந்த இரண்டு சீஷர்களும் வெவ்வேறே இடத்தில் குடியிருந்தார்களென்று அநுமானிக்கலாம். கர்த்தருடைய தாயார், இப்பொழுது பரி. யோவான் வசமாயிருக்கிறாள் என்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

472. "எங்களுக்கு" என்ற வார்த்தையில் கவனிக்கவேண்டியதென்ன?

இத்தப் பன்மை மொழியினால், மகதலேனா மரியாள் தன்னோடேகூடவந்த ஸ்திரீகளைக் குறிப்பிடுகிறாள் என்பதைக் கவனிக்கவேண்டும்.

5. தலைக்குட்டை "தனியே ஒரு இடத்தில் சுருட்டிவைத்திருக்கிறதை" பரி. யோவான் காணவில்லை. ஏனென்றால் அவன் கல்லறைக்குள் பிரவேசியாமல், கல்லறைக்கு வெளியே தத்தளித்துக்கொண்டு நின்றான்.

473. 20: 7ல் கவனிக்கவேண்டியதென்ன?

பிரேதச்சீலைகள் பதஷ்டத்தினால் தள்ளப்பட்டுக் கிடவாமல், சாவகாசத்தோடு, யாதொரு பதஷ்டமில்லாமல் ஷை சீலைகள் இரண்டு வெவ்வேறான இடங்களில் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறதை பரி. பேதுரு கண்டான். ஆகையால் கர்த்தருடைய சரீரத்தை விரோதிகள் களவாய்க் கொண்டுபோகவுமில்லை, சிநேகிதர்கள் எடுத்துக்கொள்ளவுமில்லை என்பது தெளிவாம்.

474. 20: 8. பரி. யோவான் கண்டதென்ன? விசுவாசித்ததென்ன?

கர்த்தருடைய சரீரம் கல்லறையில் இல்லை என்பதற்கு அடையாளமாக, பரி. பேதுரு கண்டவைகளை பரி. யோவானும் கண்டான். என்னத்தை விசுவாசித்தானென்றால், மகதலேனா மரியாள் சொன்னபடி, கர்த்தருடைய சரீரம் கல்லறையில் இல்லை என்பதை மாத்திரம் விசுவாசித்தா



னென்று அவ்வளவாய் அர்த்தம்பண்ண ஏதுவில்லை. கல் தள்ளப்பட்டுக் கிடந்ததும், கல்லறைக்குள்ளே கர்த்தருடைய சரீரம் இல்லாமல் வெறுமையாயிருந்ததும், பிரேதச்சீலைகளைச் சாவகாசத்துடன் ஒழுங்காய் வைத்திருந்ததும் ஆக இந்த மூன்று அடையாளங்களையும் பரி. யோவான் பார்த்ததினால், கர்த்தர் எவ்விதமாயோ உயிரோடிருக்கிறாரென்று நம்பினான் என்ற அர்த்தம், "விசுவாசித்தான்" என்ற வார்த்தையிலடங்கியிருக்கிறதாகப் பெரும்பாலும் சொல்லப்படும்.

475. 20: 9. வேதவாக்கியம் எது?

சங்கீதம் 16: 10 என்று தோன்றும். அப் 2: 24. 13: 35 ஒத்துப்பார்.

கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலை முந்தியே போதித்திருந்தார். லூக் 24: 21. மாற் 16: 14. மத் 26: 54. மாற் 8: 31. லூக் 9: 22. 17: 25. 22: 37. 24: 7, 26, 44, 46. யோவா 3: 14. 12: 34. அப் 1: 16. 2: 4.

476. 20: 10. கர்த்தர் முதல் முதல் யாருக்குத் தரிசனமானார்?

மாற் 16: 9.—பக்தியுள்ள அன்பினாலே பொறுமையுடன் காத்திருந்த ஆத்துமாவுக்குக் கர்த்தர் முதல்முதல் தரிசனமானார். கர்த்தர் தமது தாயாருக்கு முதல்முதல் தரிசனமானாரென்று பிற்காலத்துப் பாரம்பரை சொல்லுகிறது: ஆனால் இதற்கு ஆதாரமில்லை.

யோவான் 20: 10—18வரை அடங்கிய சங்கதிகளை பரி. யோவான் மாத்திரம் எழுதுகிறார்.

கல்லறையில் இதற்கு அதிகமாய் ஒன்றும் தெரியவராததினாலே, சீஷர்கள் தம்தம் இடத்துக்குத் திரும்பிப்போனார்கள். ஸ்திரீகளுக்குக் காட்சியளித்த தேவதூதர்கள், இந்த அப்போஸ்தலன்மாருக்குக் காணப்படவில்லை.

477. 20: 11ல் கவனிக்கவேண்டியதென்ன?

அப்போஸ்தலன்மாருக்குச் செய்திசொல்லப்போன மகதலேனா மரியாள் திரும்பிக் கல்லறைக்கு வந்ததை பரி. யோவான் எழுதவில்லை. ஆனால் அந்த விபரம் இந்த வாக்கியத்தில் தற்செயலாய் வெளியாகிறது. ஷை அப்போஸ்தலன்மார் கல்லறைக்குள் பிரவேசித்த பின்பாவது, மகதலேனா மரியாள் கல்லறைக்குட்பிரவேசிக்க தைரியம் அடையாமல், "வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்". அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்தது, பரி. யோவான் பார்த்ததுபோல என்றறிக (20: 5).

478. 20: 12. "தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனும்" என்ற வார்த்தைகளினால் அறியவேண்டியதென்ன?

கிருபாசனத்தின்மேல் இரண்டு கேருபீன்களிருந்த வண்ணமாய் இவர்களிருந்தார்கள் என்றறியவேண்டும். அந்தக் கேருபீன்கள் நடுவில்

“சேனைகளின் கர்த்தர்” வாசம்பண்ணினார் (யாத்தி 25: 22. 1 சாமு 4: 4. 2 சாமு 6: 2. சங் 80: 1. 99: 1).

“இரண்டு தூதர்கள்”. யோவான் சுவிசேஷத்தில் தேவதூதர்கள் வந்ததாக இந்த ஒரு இடத்தில்தான் சொல்லியிருக்கிறது. 1: 52. 12: 29 ஒத்துப்பார். (5: 4 ஆதியிலே நுழைத்து எழுதினது).

“வெள்ளுடை”. மத் 28: 3. மாற் 16: 5. அப் 1: 10. வெளி 3: 4. மத் 17: 2. வெளி 3: 5, 18. 4: 4. 6: 11. 7: 9, 13. 19: 14.

16. “ரபூனி” என்பது எபிரேய வார்த்தை.

**479**. 20: 17. “என்னைத் தொடாதே” என்று கர்த்தர் சொன்ன காரணமென்ன?

கர்த்தரிடத்திற்கு மரியாள் இப்பொழுது ஓடியிருக்கவேண்டும். ஒருவேளை அவருடைய பாதங்களைத் தழுவ ஓடியிருப்பாள் (மத் 28: 9 ஒத்துப்பார்). இந்தக் கருத்து வாக்கியத்தில் அடங்கியிருக்கிறது. சில பிரதிகளில், மரியாள் இப்படிச் செய்ததாக நுழைத்தெழுதியுமிருக்கிறது.

கிறிஸ்துநாதருடைய தன்மையைக்குறித்து மகதலேனா மரியாளுக்குப் போதுமான தெளிவில்லை. இப்பொழுது உயிர்த்தெழுந்த இரக்ஷகரை அவள் கண்டதோடு, மரணத்தை ஜெயித்து வெற்றிவேந்தராய் வந்துவிட்டாரென்றும்; அவருடைய சமுகத்தில் இப்படியே எப்பொழுதுமிருக்கலாமென்றும், இம்மட்டோடே எல்லாம் முடிந்ததென்றும் அவள் நினைத்தாள். ஆகையால் இயேசு அவளை நோக்கி, என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை என்றார்”; அதாவது நான் உயிர்த்தெழுந்த தன்மையோடு பரலோகத்துக்கு ஏறிப்போய் பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தபின்புதான், நீ நினைத்திருக்கிற பூரண ஜெயம் உண்டாகும்; அந்தக் கடைசி ஜெயம் உண்டாகிறவரை, நிலையான இராஜ்யம் ஸ்தாபகமாகாது; ஆனால் அந்த மகிமையான சம்பவம் நடக்குமுன், நீ இப்பொழுது உடனே செய்யவேண்டிய வேறே அன்பின் கிரியை உண்டு; என்னவென்றால், “நீ என் சகோதரரிடத்திற்குப்போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்”.

“தொடாதே”. இந்த வார்த்தை: கர்த்தருக்கு மாம்சதேகம் இருக்கிறதா இல்லையா என்று சோதிக்கும்படி அவரைத் தொட்டுப் பார்க்கிறதைக் குறியாமல், அவருடைய கைகளையும் கால்களையும் தழுவிப்பிடிக்கிறதைக் குறிக்கும். ஆனால் மற்றச் சமயங்களில் (யோவா 20: 27. லூக் 24: 39. 1 யோவா 1: 1), “என்னைத் தொட்டுப் பாருங்கள்” என்று கர்த்தர்



சொன்னபோது, அவருக்கு மாம்சதேகமிருக்கிறது என்பதை, சீஷர்கள் சோதித்து அறிந்துகொள்ளும்படியாகத்தான் அப்படிச் சொன்னார்.

“என் பிதா”. மிகவும் பூர்வீக நகல்களில் “என்” என்ற பிரதிப்பேர் இல்லை. ஆகவே தேவன் பொதுவாய் எல்லாருக்கும் பிதாவாயிருக்கிறதை முதலில் சொல்லி, பிற்பாடு அதை விளக்கி வித்தியாசப்படுத்திக் காட்டுகிறார்.

“பிதா” என்று சொன்ன சம்பந்தத்தில், “சகோதரர்” என்ற புதிய நாமம் (மத் 23: 10) பிறந்தது. இயல்பான சம்பந்த முறைக்குப் பதிலாக, ஆவிக்குரிய சம்பந்த முறை வழங்கியது (யோவா 19: 26. மத் 12: 48) “சகோதரர்” என்ற நாமம், ஆதிகிறிஸ்தவர்களுக்குள் மிகவும் விசேஷமான கருத்தோடு வழங்கினது (அப் 1: 15).

“என் பிதா” “உங்கள் பிதா”. கிறிஸ்துவுக்குத் தேவன், தன்மையின்படி பிதாவாயிருக்கிறார். மனுஷருக்கோ, பலவகையாய்க் கிருபையினாலே பிதாவாயிருக்கிறார். இப்படியாகக் கர்த்தர் தமக்கும் விசுவாசிகளுக்கும் தேவன் பிதாவாயிருக்கிற விதத்தை வித்தியாசப்படுத்திக் காட்டுகிறார் (எபி 2: 21. ரோ 7: 29). எதுபோலென்றால் அவர் தம்மை “மனுஷகுமாரன்” என்று சொன்னபோது, தமது மெய்யான மனுஷத்தன்மையைத் தெளிவாய்க் காட்டும்படி அப்படிச் சொன்னாரேயல்லாது, தன்மையின்படி அவர் மனுஷகுமாரன் அல்லவே. அப்படித்தான் விசுவாசிகள் மெய்யாகவே தேவபுத்திரராயிருந்தாலும், தன்மையின்படியல்ல என்ற சத்தியத்தை இந்த வார்த்தைகளினால் காட்டினார்.

“என் தேவன்”. தமது பூரண மனுஷத்தன்மையின்படி தமது பிதாவை என் தேவன் என்று பேசுகிறார் (மத் 27: 46. வெளி 3: 2, 12). (ரோ 15: 6. 2 கொரி 1: 3. 11: 31. எபே 1: 3. 1 கொரி 15: 24).

**480**. யோவா 20: 19—23 சொல்லிய சங்கதிகளில், பரி. யோவான் மாத்திரம் எழுதுகிறவைகளெவை?

கதவு பூட்டியிருந்தது. யூதருக்குச் சீஷர் பயந்திருந்தது. தோமா இல்லாதிருந்தது. அப்போஸ்தலன்மாருக்கு அதிகாரம்கொடுத்தனுப்பினது. வாக்குத்தத்தம்.

முதல் ஈஸ்தர் நாளின் சாயங்காலத்தில் கூடியிருந்த சீஷருக்குக் கர்த்தர் காட்சியளித்ததைப்பற்றி, பரி. லூக்காவும் (24: 36) பரி. மாற்கும் (16: 14) சொல்லுகிறார்கள்.

பரி. யோவான் எழுதிய வார்த்தைகளை லூக்கா சுவிசேஷத்தில் காணலாம் (லூக் 24: 36, 40). இந்த வார்த்தைகள் அப்போஸ்தலன்மார் காலத்திலேயே லூக்கா எழுதிய மூலவாக்கியத்தோடு கூட்டப்பட்டவைகளென்று தோன்றும்.

**481**. 20: 19. கூடியிருந்த இடமெது?

கர்த்தர் இராப்போஜனம்பண்ணின "மேல்வீட்டறை" என்று நினைக்கப்படுகிறது. சாயங்காலமென்பது, இராத்திரி உத்தேசம் 8 மணியாம் (லூக் 24: 29, 33, 36 ஒத்துப்பார்). எம்மாவூருக்குப்போன சீஷர் திரும்பிவர நேரம் செல்லும். அவர்கள் சாயங்கால ஜெபத்துக்கு (அப் 3: 1) முந்தி எருசலேமைவிட்டுப் புறப்பட்டிருக்கமாட்டார்கள்.

**482**. கதவுகள் பூட்டியிருக்க இயேசு எப்படி உள்ளே வந்தார்?

இயல்பான வகையாய் அவர் வராமல் (லூக் 24: 31), அற்புதமாய் உள்ளே வந்தார். "யூதருக்குப் பயந்ததினால்" என்ற வார்த்தைகள், அவர்கள் கதவை ஒருச்சாய்த்திராமல் நன்றாய்ப் பூட்டியிருந்தார்களென்பதைக் காட்டுகின்றன.

"உங்களுக்குச் சமாதானம்". இது வழக்கமான வாழ்த்தல் (லூக் 10: 5). இது தற்காலத்திலும் வழங்குகிறது. ஆனால் இந்த வாக்கியத்தில், விசேஷித்த வகையாய்ச் சொல்லப்பட்டது. நடுங்கித் தத்தளித்துக்கொண்டிருந்த சீஷருக்கு (லூக் 24: 37), உயிர்த்தெழுந்த கர்த்தர், தமது சமுகத்தைக் காட்டி, தைரியத்தையும் ஜெயத்தையும் கூறினார். யோவான் 14: 27ன் வார்த்தைகள், கர்த்தர் பாடுபடப் புறப்பட்டதற்கு முந்திச் சொல்லப்பட்டன.

20: 20. தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தாரென்று பரி. லூக்கா (24: 40) சொல்லுகிறார். கர்த்தருடைய திருவிலாக் குத்தப்பட்டதை, பரி. யோவான் மிகவும் விசேஷமாய்ச் சொல்வதினாலே, அந்தச் சம்பந்தமாய் கைகளையும் விலாவையும் காண்பித்ததை இயல்பாய்ச் சொல்ல நேரிட்டது.

20: 21. இங்கே சொல்லிய "சமாதானம்," சீஷர் செய்யவேண்டிய வேலைக்கடுத்ததாகச் சொல்லப்பட்டது.

**483**. "பிதா என்னை அனுப்பினதுபோல" என்ற வார்த்தைகளில் கவனிக்கவேண்டியதென்ன?

கிறிஸ்துநாதர் செய்யும்படி பிதா அவருக்குக் கொடுத்த வேலையை கிறிஸ்துநாதர் தாமே நிறைவேற்றினதுமல்லாமல், அந்த வேலையை இது முதல் சீஷர்மூலமாய் நிறைவேற்றுவதை இங்கே காட்டுகிறார். அந்த வேலை இடையில் நின்றுபோகாமல் எப்போதும் நடந்தேறிவருமென்பதும், எப்போதும் பயனுள்ளதாயிருக்குமென்பதும் இந்த வாக்கியத்தின் தாற்பரியமாம். அப்போஸ்தலன்மார் ஒரு நூதன வேலையைச்செய்ய ஆரம்பிக்கவில்லை. எந்த வேலையைச் செய்யும்படி பிதா கிறிஸ்துநாதரை அனுப்பினாரோ, அந்த வேலையை நடத்தும்படியாகத்தான் சீஷர்களை அனுப்புகிறார்.



**484**. 20: 22. "அவர்கள்மேல் ஊதி" என்பதில் கவனிக்கவேண்டியதென்ன?

மனுஷனுக்கு இயல்பான ஜீவன் அருளப்பட்டதை எந்த அடையாளத்தினால் காட்டியிருக்கிறதோ, அதே அடையாளத்தினால் ஆவிக்குரிய புதிய ஜீவன் அருளப்பட்டதையும் காட்டியிருக்கிறது.

காற்றானது ஆவிக்கு அடையாளம் (யோவா 3: 8). அகுஸ்தீன் சொல்லியபடி, கர்த்தர் அவர்கள்மேல் ஊதினதினால், பரிசுத்தஆவியானவர் பிதாவின் ஆவியாயிருக்கிறதுமல்லாமல், தமது சொந்த ஆவியாயுமிருக்கிறதைக் காட்டினார்.

ஒரே தடவை ஊதினதினால், இந்த வரம் மொத்தத்தில் எல்லாருக்காகவும் இப்பொழுது கொடுக்கப்பட்டதென்றும், எப்பொழுதும் நிலைத்திருக்கிற கூட்டத்தாருக்குக் கொடுக்கப்பட்டதென்றும் விளங்குகிறது.

"அவர்களை நோக்கி...அவர்கள்மேல்". இந்தப் பிரதிப்பேர்கள் 10 அப்போஸ்தலன்மாரை மட்டுந்தான் குறிக்குமென்பதற்கு யாதொரு ஆதாரமில்லை; பரி. லூக்கா 24: 33னால் எருசலேமில் அப்போஸ்தலன்மாரும் அவர்களோடுகூட மற்ற விசுவாசிகளும் சேர்ந்து பொதுவான கூட்டமாய்க் கூடியிருந்தார்களென்று காணப்படுகிறது. எப்படித் தெரியுமென்றால், லூக் 24: 33ல் "பதினொருவரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கக் கண்டு" என்று சொல்லியிருப்பதினாலும், யோவா 20: 24ல் "பன்னிருவரை" மற்றச் சீஷர்களிலிருந்து பிரத்தியக்ஷமாய்ப் பிரித்துக் காட்டியிருப்பதினாலும் தெரியும்.

"பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்". சீஷர்களுக்குக் கர்த்தர் அருளின ஆவி, அவருடைய ஆவி அல்லது அவரிடத்தில் வாசமாயிருந்த பரிசுத்தஆவியாம்; இந்த ஆவியினாலே அவர் அவர்களை முதலில் உயிர்ப்பித்தார். பிற்பாடு தாம் வாக்கருளியிருந்தபடி, அவர்களோடேகூட இருக்கிற தேற்றரவாளனாகவும், அவர்களுடைய வேலைகளை நிறைவேற்ற அவர்களுக்கு வல்லமை அருளுகிறவராகவும் அவரை அனுப்பினார்; ஆகவே பஸ்காநாளின் வரம், உயிர்ப்பிக்கிறதாயும்; பெந்தெகொஸ்தேநாளின் வரம், வல்லமை யளித்து நடத்துகிறதாயும் இருந்தது. ஒன்று உயிர்த்தெழுதலுக்கும், மற்றது பரமேறுதலுக்கும் சம்பந்தப்பட்டது. ஒன்று வெற்றிக்கும், மற்றது இராஜரீகத்திற்கும் அடுத்தது. இந்த வாக்கியத்தில் கர்த்தர் சொன்ன வரமும் ஊதின செய்கையும், இனிமேல் பெந்தெகொஸ்தேநாளில் வெளிப்படப்போகிற வரத்திற்கு, வாக்குத்தத்தமாயும் அடையாளமாயும் மாத்திரமிருந்ததே அல்லாது, உள்ளபடி பரிசுத்தஆவியானவர்

இந்நாளில் அருளப்படவில்லை என்று சிலர் அர்த்தம்பண்ணுவார்கள்; ஆனால் அது இயல்பான வியாக்கியானமல்ல; அதற்கு ஆதாரமுமில்லை.

485. 20: 23ஐ விஸ்தரி?

மேலே காட்டியபடி அப்போஸ்தலன்மாருக்கு அல்லது அவர்களைப் போலொத்த ஒரு விசேஷமான கூட்டத்தாருக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்படாமல், இந்த அதிகாரம் பொதுவாக சபைக்குக் கொடுக்கப்பட்டதென்று முன்பின் சம்பந்தத்தால் தெரியவருகிறது. ஆகையால் இந்த வாக்கியத்தில் "நீங்கள்" என்ற வார்த்தையை ஊன்றிப்பேசக் கூடாது. இந்த அதிகாரம் கிறிஸ்தமான போதகஊழியத்துக்கல்ல, கிறிஸ்தவக் கூட்டத்துக்கு அளிக்கப்பட்டது (மத் 5: 14, 15 ஒத்துப்பார்). பாவத்தினின்று இரக்ஷிப்புஉண்டுபண்ண, கிறிஸ்துநாதர் உலகத்துக்கு வந்தார். அவர் சம்பாதித்த இந்த இரக்ஷிப்பை, எல்லாருக்கும் செலுத்துவது அவருடைய சபையின் வேலையாம். பாவம் நிவர்த்தியானதற்கும், மரணம் பூரணமாய் ஜெயிக்கப்பட்டதற்கும், உயிர்த்தெழுந்த இரக்ஷகரே அடையாளம். அவர் உயிர்த்தெழுந்ததோடு, அவரடைந்த வெற்றியின் பலனும் கூட வந்தது.

இந்த வாக்குத்தத்தம், தனித்தனிப் பேருக்குக் கொடுக்கப்படாமல், கூட்டத்தாருக்குக் கொடுக்கப்பட்டதினால், அந்தக் கூட்டத்தார் என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்கள் என்ற கருத்தும் இதில் அடங்கியிருக்கிறது. இந்தக் கூட்டம் ஒருபோதும் இடையில் நின்றுபோகாது (வா 21). இந்த விஷயத்தில் இந்த வாக்குத்தத்தம், பரி. பேதுருவுக்கு மாத்திரம் சொல்லப்பட்ட வாக்குத்தத்திற்கு (மத் 16: 18) வித்தியாசப்படுகிறது. மேலும் இந்த வாக்குத்தத்தின் நோக்கம், முந்திய கூட்டத்தாருக்கு (மத் 18: 18) கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தின் நோக்கத்திற்கு வித்தியாசமானது. எப்படியென்றால், முந்திய கூட்டத்தாருக்கு (மத் 18: 18), சட்டங்களை ஏற்படுத்தும் அதிகாரம் கொடுக்கப்பட்டதேயல்லாது, ஆவிக்குரிய காரியங்களை நடத்திப் பரிபாலனம்செய்ய உத்தரவு அருளப்படவில்லை; முந்திய வாக்குத்தத்தம், ஐக்கியத்தின் ஏற்பாடுகள் இன்னின்னதென்று சட்டம்கட்ட அதிகாரம் கொடுத்தது. இந்த வாக்குத்தத்தமோ, பாவமன்னிப்புண்டென்பதையும், அதைப் பெறுவதற்கடுத்த நிபந்தனைகளையும் கூறுகிறதற்கு, உயிருள்ள நிலையான அதிகாரத்தைக் கொடுக்கிறது. இந்த நிபந்தனைகள் இன்னதென்று அக்காலத்தில் அப்போஸ்தலன்மார் அர்த்தம்பண்ணினதைப் பற்றி, லூக்கா 24: 47 பார்.



## II. நாளாகமம்.

(தொடர்ச்சி.)

### 7. அத்தாலியாள். (கர்த்தரால் எடுபட்டவள்.) கி. மு. 884. 2 நாளா. 22: 10—12. 24: 7.

அத்தாலியாள் யூத இராஜாக்களின் வம்சத்தாரைக் கொன்று அந்த இராஜ்யத்தை அபகரித்துக்கொண்டாள். இவள் இதற்கு முன்னும் தன் புருஷன், ராமோத் கிலேயாத்துக்குப் போனபோதும் ஆண்டுவந்தாள். இவள் எசபேலின் மகளானதால் அவளுடைய நடத்தைகளின்படி கொடுமையும் அருவருப்புமான பாவங்களைச்செய்து வந்தாள். இவள் பாகாலின் ஆராதனையை யூத இராஜ்யத்தில் காத்துக்கொண்டாள். கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பொன்வெள்ளி தட்டுமுட்டுகளையெல்லாம் பாகாலுக்குச் செலவுபண்ணிப்போட்டாள். 2 நாளா. 24: 7. இவள் 6 வருஷம் ஆண்டாள்.

### 8. யோவகாஸ் அல்லது யோவாஸ். (கர்த்தர் கொடுத்தார்.) கி. மு. 878. 2 நாளா. 23—24 அதி. 2 இரா. 11: 1—21.

அகசியா இறந்தபின்பு இராஜபட்டம், அவன் சகோதரியும் பிரதானஆசாரியனின் மனைவியுமாகிய யோசேபாளுக்குரியது. சங். 89: 16ல் தேவன் தமது பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டபடி தாவீதின் வம்சம் ஒழிந்துபோகாதபடி, அதிசயமாய் தேவன் யோவாசைக் காத்தார். யோராம், தன் சகோதரரையெல்லாம் கொலைசெய்தான். 2 நாளா. 21: 4. அரபியர் அகசியாதவிர, யோராமின் மக்களை எல்லாம் கொன்றார்கள். 2 நாளா. 22: 1. ஏகூ அவர்களுடைய மக்களையெல்லாம் கொலைசெய்தான். 2 நாளா. 22: 8. மீதியானவர்களை அத்தாலியாள் கொன்றாள். ஏகூ தன் வம்சத்தாரை அழிக்கும்போது இவள் மூர்க்கங்கொண்டு தேவனுக்கு விரோதமாக யூத இராஜ வம்சத்தை அழித்தாள்.

இப்படிப்பட்ட அவபக்தியுள்ள காலத்தில் தேவன் தமது மார்க்கத்தைக் காத்துக்கொள்ள ஒரு பக்திமானை எழுப்பினார். அவர் பேர் யோய்தா. (கர்த்தர் அறிகிறார்.) இந்தக்காலத்தில் சரியான இராஜாவில்லாததால், யோய்தாவே இராஜ அதிகாரம்பெற்றவரானதால் எல்லாரும் அவருக்குக் கீழ்ப்படிந்தார்கள். உபா. 17: 12. யோய்தா என்பவர் தீர்க்கதரிசிகளைக்கொண்டோ, ஊரீம் தும்மிம் என்ற வெளிச்சத்தால் தேவஉத்தரவு பெற்றோ யோவாசை இராஜாவாக்கினார். இவர் லௌகீக வைதீக, யுத்த உத்தியோகஸ்தர்களையெல்லாம் தன் வசமாக்கிக்கொண்டு விசுவாசத்தோடும் பக்தியோடும் அதிபதிகளோடும் ஜனங்களோடும் உடன்படிக்கை செய்துகொண்டு யோவாசை இராஜாவாக்கினார். நூறுபேருக்கு அதிபதிகள் (5) பேர் யோய்தாவுக்கிணங்கினார்கள். மற்றவர்களோ இராஜபட்சமாயும், விக்கிரகாராதனைக்குச் சார்பாயுமிருந்திருப்பார்கள். இவர்கள் தேவாலயத்தில் கூடிவந்தபோது, தாவீது தன் சத்துராதிகளிடத்தில் பறித்தும், தான் செய்ததுமான ஆயுதங்களை ஒவ்வொருவருக்கும் கொடுத்து, இளைஞனை யோவாசைக் காக்கும்படிக்கும், இச்சமயத்தில் கூடிவருகிற

கும்புகளால் தேவாலயம் இடிக்கப்படாதபடிக்கும் காபந்துசெய்துகொண்டு யோவாசை இராஜாவாக்கினார்.

கர்த்தர் தாவீதின் குமாரனைக்குறித்துச் சொன்னபடியே 2 சாமு. 7: 12. 1 இரா. 2: 4. 9: 5. 6: 16. 7: 18. 21: 7.

(1) யோவாசை இராஜாவாக்க, அவன் தலையில் கிரீடம் வைக்கப்பட்டது. இந்தக் கிரீடம் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

(2) அவன் வேதப்பிரமாணத்தின்படி ஆளவேண்டுமென்பதற்குக் குறிப்பாக சாக்ஷியின் ஆகமம் அவன் கையில் கொடுக்கப்பட்டது. உபா. 17: 18. தன்னையும் தன் இராஜ்யத்தை ஆளவுமாக வேதபுஸ்தகமாகிய சாக்ஷியினாகமம் கொடுக்கப்பட்டது. சங். 98: 5. 132: 12. ஏசா. 8: 16, 20. 2 இரா. 23: 3. தேவசித்தத்துக்கும் மனிதர் கடமைக்கும் சாக்ஷி பகருவதால் இதற்கு அந்தப் பேருண்டாயிருக்கிறது.

(3) இராஜ மேன்மைக்குத் தகுதியுள்ளவனாயிருக்கும்படி ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு அபிஷேகம்பண்ணப்பட்டான்.

(4) ஜனங்கள் இவரை இராஜாவென்று ஒப்புக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிவோமென்பதற்கு அடையாளமாக "இராஜாவே வாழ்க" என்றார்கள்.

அத்தாலியாள் விக்கிரகாராதனைக்காரியும், இராஜ்யத்தைத் துரோகமாய்ப் பறித்தவளும், சமாதானக்கேடுசெய்தவளுமானதால் யோய்தாவின் உத்தரவுப்படி லேவியர் அவளைக் கொன்றுபோட்டார்கள்.

விக்கிரகாராதனையைத் தள்ளி மெய்த்தேவாராதனையைப் புதுப்பிக்கும்படிக்கும் கர்த்தருடைய ஜனமாயிருக்கும்படிக்கும் தானும் இராஜாவும் ஜனங்களும் உடன்படிக்கைசெய்துகொள்ளச் செய்தான்.

யோவாகாஸ் இராஜாவாகும்போது 7 வயதாயிருந்து 40 வருஷம் அரசாண்டான். யோய்தாவின் நாட்களில் கர்த்தரின் பார்வையில் செம்மையானதைச் செய்தான். அவனுடைய ஏவுதலின்படியே தேவாலயத்தைப் புதுப்பித்தான். 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேவாலயத்துக்கு (இ) ஷேக்கல் கொடுக்கவேண்டிய கட்டளைப்படி (யாத். 30: 13. லேவி. 27: 2. யாத். 25: 2. 35: 5.) திரளான பணம் சேர்ந்தது. இந்த இராஜாவின் காலத்தில்தான் உண்டியல்பெட்டியும் செய்யப்பட்டது.

யோய்தா 130 வயதுள்ளவனாய் மரித்தான். இதுவரையும் கி. மு. 840வரையும் யோவாஸ் நல்லவனாகக் காணப்பட்டான். பின்பு யூதாவின் பிரபுக்கள் பேச்சைக்கேட்டு, மெய்த்தேவனை விட்டுவிட்டு விக்கிரகங்களை வணங்கினான். அதினிமித்தம் தேவகோபம் வந்தது. (நியாயாதி. 5: 8. 19: 2. 28: 13. 29: 8.) சகரியாமுதலிய தீர்க்கதரிசிகளை அனுப்பி எச்சரித்தும் சீரடையவில்லை. சகரியாவைக் கல்லெறிந்து கொலைசெய்தான். (மத். 23: 35. அப். 7: 58.) இந்த 840ம் வருஷத்தின் கடைசியிலே யோவாசைத் தண்டிக்கும்படி சூரியனாகிய ஆசகேலை அனுப்பினார். 2 நாளா. 24: 15—27. ஆசகேல் வந்து பிரபுக்களை அழித்து எருசலேமைக் கொள்ளையிட்டான். தன்னை விட்டுப்போகும்படி தேவாலயப் பொக்கிஷங்களை யோவாஸ் கொள்ளையடித்துக் கொடுத்தான். (2 இரா. 12: 18.) சகரியா சாகிறபோது, கர்த்தர் பார்ப்பார் கர்த்தர் கேட்பார் என்றபடி யோவாசுடைய ஊழியக்காரர் அவனைக் கொன்றுபோட்டார்கள். இந்தவகையாய் யோவாஸ் தன் துவக்கத்தை ஆவியில் துவக்கி, தன் முடிவை மாம்சத்தில் முடித்தான்.



## 9. அமத்சியா. (கர்த்தரால் கொண்டுவரப்பட்டவர்.) கி. மு. 839.

இந்த அமத்சியா கி. மு. 864ல் பிறந்தவரானதால், இப்போது அவருக்கு 25 வயது. 29 வருஷம் எருசலேமில் அரசாண்டார். இவர் காலத்தில் இஸ்ரவேலில் யோவாகாசின் மகன் யோவாசும்; சூரியாவில் ஆசகேலின் மகன் III. பெனாதாத்தும் இராஜாக்களாயும், யோனா தீர்க்கதரிசியாயுமிருந்தார். (2 நாளா. 25 அதி. 2 இரா. 14 அதி.)

1. அமத்சியா முழு மனதோடேயல்ல, கொஞ்சக்காலம் மாத்திரம் கர்த்தரைச் சேவித்து பின்பு விக்கிரகாராதனைசெய்தான். (2 நாளா. 25: 14.) இவனும் தன் தகப்பனைப்போலவே நடந்தான். (2 இரா. 12: 3.)

2. தன் தகப்பனைக் கொன்றவர்களை மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே (உபா. 24: 16. எசே. 18: 4.) கொலைசெய்தான்.

3. யோராமின் காலத்தில் மருளவிழுந்த ஏதோமியரை ஜெயித்தான். (2 இரா. 8: 20.) அதற்கு யொக்தியேலென்று பேரிட்டான். (2 இராஜா 14: 7.) 2 நாளா. 25: 8, 9ல் தீர்க்கதரிசியால் சொல்லப்பட்ட தேவஉத்தரவுக்குக் கீழ்ப்படிந்ததற்குப் பலனாக தேவன் அவனுக்கு ஜெயத்தைக் கொடுத்ததற்கு அந்தப் பேர் வந்தது. அதற்கு தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்றருத்தம். விக்கிரகாராதனைக்காரரான எப்பிராயீமரோடே தேவன் வெறுப்பானதாலும், தேவனை நம்பும்படிக்கும், கூலிக்குவந்த லட்சம் எப்பிராயீமரை தன்னைவிட்டுப்போகச் சொன்னான். அவர்கள் விக்கிரகாராதனைக்காரரான யூதாவின் எல்லையிலுள்ளவர்களைக் கொள்ளையடித்து: எதிர்த்த 3000 பேரைக் கொன்றார்கள்.

கி. மு. 827. ஏதோமின் விக்கிரகங்களை வணங்கினான். ஆகாசும் தான் ஜெயித்த தேசங்களின் விக்கிரகங்களை வணங்கினான். 2 நாளா 28: 23.

கி. மு. 826ல் இஸ்ரவேலர் தன் ஜனங்களுக்குச் செய்த கொடுமைக்குப் பழிவாங்கவோ, பெருமைக்கென்றோ வலிய யோவாசை சண்டைக்கு வரச்செய்து மிகவும் தாழ்த்தப்பட்டான். இதினால் சாலொமோனுடைய இரண்டு நீதிமொழி வசனம் உறுதிப்படுகிறது. (நீதி. 29: 20. 25: 8.) யோவாஸ் சொன்ன உவமைபோல (2 இரா. 14: 9.) யோத்தாமும் (நியாயாதி. 9: ×.) தெக்கோவாவின் ஸ்திரீயும், (2 சாமு. 14.) நாத்தானும் (2 சாமு. 12.) ஏசாவும் 5 அதி. உவமைகளாய்ப் பேசினார்கள்.

அமத்சியா கி. மு. 810ல் எருசலேம் பட்டணத்தாருடைய கட்டுப்பாட்டினால் லாகீசில் கொல்லப்பட்டு தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான்.

## கேள்விகள்.

1. வசனத்தை அசட்டைபண்ணுகிறவன் தன்னாலே கெட்டுப்போகிறான் என்ற சத்தியத்தை யூத இராஜாக்களின் சரித்திரத்தில் ரூபியும்.

2. அத்தாலியாளை யோராம் விவாகஞ்செய்ததால் யூத இராஜ்யத்துக்கு வந்த நஷ்டங்களும் தீமைகளுமென்ன? ஏசபேலும், அத்தாலியாளும் தங்கள் செய்கைகளில் ஒன்றுபோலிருந்தவர்களென்று காட்டும்.

3. மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும். "வழக்காடப் பதஷ்டமாய்ப் போகாதே." இந்தச் சத்தியங்களுக்கு உதாரணஞ்சொல்லும்?

4. ஆகாப்பின் வீட்டார் ஏகூவால் முற்றும் அழிக்கப்பட்டபோது, யூத இராஜ்யத்திலுள்ள அவனைச் சேர்ந்தவர்கள் எப்படித் தண்டிக்கப்பட்டார்கள்? சருவசங்காரமாய் அழிக்கப்படாத முகாந்தரமென்ன?

5. 1. "கர்த்தர் அதைப் பார்ப்பார், அதைக் கேட்பார்."

2. "அதைப் பார்க்கிலும் அதிகமாய்க் கர்த்தர் உமக்குக் கொடுக்கக் கூடும்."

3. "துரோகம். துரோகம்" இவ்வசனங்களை உரைத்தவர்களார்? ஏன்?

6. மாத்தான், சகரியா, யோய்தா, இவர்களைப்பற்றித் தெரிந்ததை எழுதும்.

7. பழையஏற்பாட்டில் சொல்லியிருக்கிற உவமைகளெவை? அதில் யோவாஸ் இராஜா சொன்ன உவமையின் பொருளை விஸ்தரி?

8. லாகீஸ், எஸ்ரூயேல், சமாரியா, மெகித்தோ என்ற பட்டணங்களில் நடந்த விசேஷங்களெவை?

9. மோசேயின் நியாயப்பிரமாணம் காக்கப்பட்டு வந்ததற்குக் குறிப்புகளென்ன? யூத இராஜாக்களின் சரித்திரத்தில் ஆதியோடந்தமாய் விபரமாய் எழுதவேணும்.

## 10. உசியா அல்லது அசரியா. (தேவபலம்.) கி. மு 810.
## 2 நாளா. 26 அதி. 2 நாளா. 15 அதி.

இதையும் 2 இரா. 15: 1யும் ஒத்துப்பார்க்கும்போது, அசரியாவின் தகப்பன் அமத்சியா எரோபெயாமின் 15ம் வருஷம்வரை ஜீவித்திருப்பதெப்படி? 2 இரா. 14: 2, 23. எரோபெயாம் தன் தகப்பனோடே 11, 12 வருஷமாய்க் கூட ஆண்டிருப்பானதலால் அதுமுதல் 27ஆ அல்லது தனிமையாய் ஆண்ட 15 வருஷமென்று வைத்துக்கொள்ளவேணும். அமத்சியாக் கொல்லப்படும்போது அசரியா இளைஞனாயிருந்தபடியால் அவனுக்கு 16 வயது வரும்வரை அவனை இராஜாவாக்காமலிருந்தபடியால் இடையில் 11, 12 வருஷங்கள் இராஜாவில்லாமலிருந்திருக்கலாம். அசரியா 16 வயதில் இராஜாவாகி 52 வருஷம் அரசாண்டான்.

1. உசியா, பக்தியுள்ளவன். தகப்பனைப்போல வைராக்கியமாயல்ல, மெய்த்தேவ ஆராதனையை ஒருவாறு காத்துக்கொண்டான். யோவாஸ் கொன்ற சகரியா தீர்க்கதரிசியின் பேரன் இவருக்குப் படிப்பித்துவந்த உபாத்தியாரானதால் அவன் நாட்களில் தேவனைத் தேடினான். 1—5.

2. தேவன் அவனுக்கு ஐசுவரியத்தையும் கனத்தையும் கொடுத்தார்.

(a) பெலிஸ்தரையும், அரபியரையும், அம்மோனியரையும் ஜெயித்தான். 6, 7.

(b) அவனுடைய கீர்த்தி எகிப்தின் எல்லைமட்டும் எட்டினது. 8 வச.

(c) அவன தகப்பன் காலத்தில் (25: 23.) தாழ்த்தப்பட்ட எருசலேமின் மதில்களையும், கோபுரங்களையும் கொள்ளைக்காரர் தேசத்துக்குள் வராதபடிக்கு (21: 16.) வனாந்தரத்திலும் கோபுரங்களைக் கட்டினான். 9, 10.

(d) இவர் வேளாண்மைப பிரியன். 10 வச.

(e) இவனுக்கு யுத்தவீரரின் சேனையுமிருந்தது. 307500 சேனை. 11—15.

3. கி. மு. 765ல் அசரியா தன் ஆஸ்தியினாலும் வல்லமையினாலும் பெருமைகொண்டு கோராகைப்போல ஆசாரிய வேலையையும் அபகரிக்



கத் துணிந்தான். (ஏசா. 2: 7—16. 2 நாளா. 26: 16—18 ஆசாரியர் எண். 18: 7. யாத். 30: 7.) தடுத்தும் துணிந்து பரிசுத்தஸ்தலத்துக்குட் போனதால் குஷ்டரோகம் வந்தது. (2 இரா. 5: 27. எண். 12: 10.) இது தேவனால் வந்ததென்று அறிந்துகொள்ளும்படி தூபபீடத்திலிருந்து அதரிசனமான கையினால் குஷ்டம் தோன்றிற்று. இவனுடைய முற்பிதாக்களின் பாவம், விக்கிரகாராதனை, விபசாரம், கொடுமை, விக்கிரக பலிபீடத்தின் முன் தூபங்காட்டுதலே இவனோ பெருமையினால் தூபங்காட்டப்போனான். ஆசாரியர்தவிர அந்நியர் தூபங்காட்டக் கூடாது. (உபா. 33: 10. எண். 3: 10. 18: 7. 16: 35) ஆசாரியர் தடுத்தபோது புத்தியடைந்துபோயிருப்பானென்றால் அந்தக் குஷ்டம் வராது. யோசேப்பு சொல்லுகிறபடி தடுத்த ஆசாரியரை மரணதண்டனைசெய்வதாக மூர்க்கம்பண்ணினதினாலே பூமியதிர்ந்து தேவாலய முகடு திறவுண்டு, சூரிய கதிர் அந்தத் திறப்பின் வழியாய் இராஜனுடைய முகத்தில் அடிக்கக் குஷ்டம் தோன்றியிருக்கலாம். அப்படியே அவன் காலத்தில் பூமியதிர்ச்சியிருந்ததாக வாசிக்கிறோம். (ஆமோஸ். 1: 1. சகரி. 14: 5.) தேவன் அவனை அடித்தபடியால் அவன் தன குற்றத்தை உணர்ந்தவனாய்ப்போய் மரணநாள்மட்டும் குஷ்டரோகியாய்த் தனித்த வீட்டில் வாசம்பண்ணினான். (லேவி. 13: 46.) அவன் திரும்ப ஆலயத்துக்குப்போக ஏதுவில்லை. கி. மு. 758ல் உசியா மரிக்கும்வரை அவன் மகன் யோத்தாம் 7ம் வருஷம ஆண்டான். இந்த உசியாவின் காலத்தில் ஏசாயா, ஆமோஸ், ஓசேயா என்ற தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்கள். உசியாவின் மரணகாலத்தில் ஏசாயா பரமதரிசனையடைந்தார். ஏசா. 6 அதி.

## 11. யோதாம் (கர்த்தர் நீதிமான்.) கி. மு. 758.
## 2 நாளா. 27. 2 இராஜா 15: 3—35.

யோதாம் இராஜாவாகிறபோது, 25 வயதாயிருந்து 16 வருஷம் அரசாண்டான்.

1. இவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச்செய்தான்.

2. இவன் தகப்பனைப்போல தூபங்காட்ட தேவாலயத்தில் பிரவேசிக்கவில்லை. 2 வச.

3. ஜனங்களுக்குள் சீர்திருத்தஞ்செய்யவில்லை. அவர்கள் மேடைகளில் தூபங்காட்டி வந்தார்கள். 2 இரா. 15: 35.

4. எருசலேமில் மதில்களையும், தேசத்தை அரணாக்கும்படி அநேக கட்டிடங்களையும் கட்டினான். 3 வச.

5. யோசபாத்தின் காலத்தில் யூதேயாவைக் கொள்ளையடித்த அம்மோனியரை (20: 1.) ஜெயித்து கப்பங்கொடுக்கச் செய்தான். 5 வச.

6. யோத்தாம் ஐசுவரியத்திலும் பலத்திலும் வல்லவனான். 6 வச. யோதாம் 41 வயதில் மரித்தான். இவன் காலத்தில் ஏசாயாவும் 2—5 அதி. மீகாவும் 19: 13. 6: 16. யூதருடைய மாய்மாலம், விக்கிரகாராதனை, அநியாயங்கள், கொடுமைகள், சிற்றின்பங்கள் முதலிய பாவங்களுக்காக அவர்களைக் கண்டித்தார்கள்.

## 12 ஆகாஸ். (கர்த்தர் பிடிக்கிறார்) கி மு 742
## 2 நாளா 28 அதி. 2 இராசா 16.

ஆகாஸ் இராஜாவாகிறபோது 20 வயதாயிருந்து 16 வருஷம் அரசாண்டான். இவன் மிகவும் பெலவீனமும் அவபக்தியுமுள்ள இராஜன்,

(ஏசா. 3: 12.) இஸ்ரவேலின் இராஜாக்களைப்போல பாகால்களுக்கும், காஞனியனைப்போல மோளோகுக்கும் (1 இரா. 11: 7.) ஆராதனைசெய்தான். (மீகா. 6: 7.)

கி. மு. 741ல் தாவீதின் சிம்மாசனத்தில் கலகக்காரர் யூசனை தாபியேலின் குமாரனை வைக்கும்படிக்கு, (ஏசா. 7 அதி.) நோக்கமாக சூரியாவின் இராஜரவாகிய ரேத்சீனையும், இஸ்ரவேலின் இராஜாவாகிய பெக்காவையும், ஆகாசுக்கு விரோதமாய் வர தேவனே எழுப்பினார். தாவீதின் வம்சத்தை முற்றிலும் அழிக்கும்படிக்கல்ல துன்மார்க்கமான ஆகாஸைக் கண்டிக்கவே தேவன் இப்படிச்செய்ய விருப்பமானார். அந்த இரண்டு இராஜாக்களும் சிறைகளைப் பிடித்து தங்கள் தங்கள் தலைப்பட்டணங்களுக்குக் கொண்டுபோனார்கள். பெக்கா ஒரேநாளில் 1,20,000 பேரைக் கொன்று, 200000 பேரைச் சிறைப்பிடித்துப்போனான். ஒதேத் தீர்க்கதரிசியின் பிரசங்கத்தினால் அவ்வளவு சிறைகளும் திரும்ப தங்கள் இடங்களுக்குப் போகவிடப்பட்டார்கள். (28: 0—15.)

முந்தின (2) இராஜாக்களும் எருசலேமை முற்றிக்கைபோட்டிருக்கையில் தேவன் ஆகாஸை தைரியப்படுத்தும்படி ஏசாயாவைக்கொண்டு (2) அடையாளங்களைக் காட்டினார். ஏசா. 7: 8 அதி. அந்தத் தீர்க்கதரிசனத்தின்படியே பின்வாங்கிப்போனார்கள். (3) எப்பிராயீமனாகிய சிக்ரியும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து இராஜாவின் குடும்பத்தில் அநேகரைக் கொன்றுபோட்டான்.

---

## A FUNERAL SERMON.

---

### கனம் தே. வீரவாகு ஐயரவர்களுடைய ஜீவியம்.

மெஞ்ஞானபுரம் சேகரத்தை விசாரித்துவந்த கனம்பொருந்திய தெய்வநாயகம் வீரவாகு ஐயரவர்கள் சிறுவயதில் இந்துமார்க்கத்திலிருந்து குணப்பட்டு கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்து மிஷியோனில் நிறைய 50வரு உழைத்து 1886வரு பெபுருவரிமீ 25உ மெஞ்ஞானபுரத்தில் பரம இளைப்பாறுதலிற் சேர்ந்தார்கள்.

சகரியா 11: 2.

"தேவதாரு விருக்ஷங்களே, புலம்புங்கள்; கேதுருமரங்கள் விழுந்ததே."

மரங்களடர்ந்த சோலையில் ஓர் சிறு கன்றை வெட்டும்பொழுது அது விழுகிறதினாலுண்டாகும் சத்தம் அவ்வளவாய் கேட்கப்படமாட்டாது. ஆனால் அச்சோலையின்கண் வெகுகாலமாய் நிலைபெற்றிருந்த ஆலவிருக்ஷம் ஒன்றைத் தறித்துக் கீழே விழுத்தும்போது, அது தரையிற் சாய்வதாற் கேட்கும் சத்தம் காடெங்கும் எதிரொலியுண்டாகத்தக்க பேரிடிபோல் கேட்கும். மரணமானது 6000 வருஷங்களாக இவ்வுலகமாகிய வனத்திற் பிரவேசித்துச் சிறியோரையும் பெரியோரையும் வெட்டிக்கொண்டு போ



கிறது. கேதுருபோன்ற உயர்ந்த விருக்ஷங்கள் தறிபட்டு அல்லது அவற்றின் அடிகள் வேரற்றுக் கீழே விழுகையில் அவைகளின் கிளைகளிலிருந்த பறவைகள் தங்கள் இல்லிடம் இழந்து பறந்துவிடும். அம்மரங்களின் நிழலில் ஒதுங்கியிருந்த மான்முதலிய விலங்குகள் வேறு அடைக்கலம் தேடிக்கொள்ளும். வெகுகாலமாய் நம்முடைய நடுவில் இருந்த நமது போதகராகிய கனம் தெய்வநாயகம் ஐயரவர்கள் கடந்த வாரத்தில் இறந்துபோனார்கள். அவர் ஓர் சாமானிய ஆள் அல்ல. இந்தச் சேகரத்தில் ஒரு பிரபுவும் பெரிய மனுஷனுமானவர். அவர் மரித்த அன்றையத்தினத்தில் கொத்துவேலைக்காரன் தன் மண்வெட்டியையும், உழுகிறவன் தன் கலப்பையையும் போட்டுவிட்டான். எழுதுகோல் பிடித்திருந்தவர்கள் அச்செய்தி கேள்விப்பட்டு மெய்மறந்தவர்களாய் அப்புறம் எழுதாமல் அம்மட்டில் இருந்தனர். பாடசாலை வேலை நடக்கவில்லை. கடைகள் பூட்டப்பட்டன. ராட்டினத்தின் முன்னிருந்த பெண்கள் கதிர்களைக் கழற்றிவிட்டார்கள். மற்றும் தொழிலாளிகள் தங்கள் ஆயுதங்களையும் தற்சமயத்திற்குத் தூர வைத்துவிட்டார்கள். கேதுருமரம் விழுந்தது. தேவதாரு விருக்ஷங்களே புலம்புங்கள்.

இம்மையைவிட்டுப்போன நமது அன்புள்ள போதகருடைய ஜீவியத்தை முன்னிட்டு நமக்குப் பிரயோஜனமாகச் சில காரியங்களைச் சிந்திப்போம்.

1. கனம் தெய்வநாயகம் ஐயரவர்களுடைய சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்க்கையில் நாம் கவனிக்கிற காரியம், 'முயற்சி மேன்மைக்கு வரும்வழி,' என்பதே. அவர் 1818வரு இடையின்குடியில் அஞ்ஞானப் பெற்றோரிடத்தில் பிறந்தவர். இளம்பிராயத்திலேயே பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்போது அவர் புத்தி, பக்திமுதலிய சுகுணங்களுள்ளவராயிருந்தார் என்று சிறுவயதுமுதல் அவரை அறிந்திருக்கிற அவருடைய சிநேகிதர் சொன்னார். விக்கிரகத்தொழும்பரான அவருடைய தகப்பனுருடைய குடும்பத்தில் இவரே முதன் முதல் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார். அவர் தகப்பனார் மரித்தபின்பு, தமது சகோதரர் சகோதரிகளும் கிறிஸ்துமார்க்கத்தை அநுசரிக்கக் கருவியாயும் இருந்தார். பின் அவர் மிஷன் வேலையில் அமர்ந்து முதலாவது நல்லம்மாள்புரத்தில் சட்டம்பிள்ளை அலுவல் பார்த்தார். பிள்ளைகளைச் சேர்ப்பதிலும் அவர்களுக்குப் பாடம்சொல்லிக்கொடுப்பதிலும் சுறுசுறுப்புள்ளவராயிருந்தார். இதிலிருந்தே படிப்படியாய் உயர்ந்தார். மேலும் 'செய்வனதிருந்தச் செய்' என்ற பழமொழிப்படி எந்த வேலையையும் வெகு திட்டவட்டமாயும் நுட்பமாகவும் செய்வார். அப்புறம் அவர் உபாத்தியாராகி சீக்கிரத்திற்குள்ளாக கனம் ஜாண் தேவசகாயம் ஐயரவர்களுடைய சிபாரிசியின்மூலமாய் உபதேசியாராகி பள்ளிக்கூடமேயில்லாத ஒரு ஊருக்கு அனுப்பப்பட்டார். அங்கே தமக்குக் குறிக்கப்பட்ட வேலையோடே பள்ளிப்பிள்ளைகளையும் சேர்த்துப் படிப்பித்தார். மேற்படி ஐயரவர்கள் இந்த ஊருக்குப்போனபோது பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் ஒழுங்காய் வந்து படித்திருந்ததையும் தினசரி ரிப்போர்ட்டு கிரமமாய் எழுதப்பட்டிருந்ததையும் பார்த்து "வாலிபனே, நீ முன்னுக்குப் போவாய்" என்று சொல்லிப்போனாராம். 1849வருஷத்தில் மெஞ்ஞானபுரத்தில் கனம்பொருந்திய ஜான் தோமாஸ் ஐயரவர்களின் கைக்குள் எலியற்று தக்ஸ்போர்ட் பள்ளிக்கூடத்திற்கு கனம் பிளாக்மன் ஐயரவர்களால் உபாத்தியாயராக அனுப்பப்பட்டார். அதிலிருந்த ஏறக்குறைய 4வருஷமாக பள்ளிக்கூடத்திற்குரிய வேலைகளை மாத்திரமல்ல, மிஷன் சம்பந்தமான

மற்றும் கடமைகளையும் வெகு சிரத்தையோடும் சர்வஜாக்கிரதையோடும் செய்துவந்தார் என்று அவரை அறிந்த யாவரும் சாட்சிபகரக் கூடும். அப்புறம் உதவி விசாரணை உபதேசியாரானார். பின்பு 1859ஆம் உதவிக்குருப் பட்டம்பெற்று அக்காலங்களில் கனம் ஜான் தோமாஸ் ஐயரவர்களுக்கு மிகுந்த உதவியாயிருந்தார். பின்னர் மேல்விசாரணை குரு ஆனார். இப்போது ஏழு, எட்டு வருஷங்களாய் இச்சேகரத்தின் வைஸ்பிரசிடென்டாயிருந்து மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள் விசாரணையின் கீழ் அவ்வேலைக்குரிய முழுப் பாரமும் தாங்கினார். "தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல் ராஜாக்களுக்குமுன் நிற்பான்."

2. நாம் அவரில் பின்பற்றத்தக்க நற்குணங்களில் ஒன்றை யோசிப்போம். அது கணக்கில் உண்மை. அவர் ஒரு குற்றமும் இல்லாதவர் என்று நாம் சொல்லுகிறதில்லை. பாடுள்ள எல்லா மனுஷரையும்போலவே அவரும் மாம்ச பலவீனங்களுக்குட்பட்டிருந்தார் என்பது மெய். சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும் மோக்ஷத்தையேற விரும்பும் எந்தப் பாவியையும்போலவே அவரும் கரையேற விரும்பினார் என்று நாம் சந்தேகமின்றி நம்பலாம். "வேறெந்த விஷயத்தில் அவரைக் குற்றம்பிடித்தாலும், மிஷியோன் கணக்கில் அவரிடத்தில் குற்றம்பிடிக்கப் பார்ப்பது அசாத்தியம்" என்பது பொதுவாக எல்லாருடைய வாய்ச்சொல்லாம். தாம் உயிரோடிருக்கையில் ஒருவரோடே பேசிக்கொண்டிருந்த சமயத்தில் 'நான் பணங்களை வட்டிவாசிக்குப் போட்டு கருப்புக்கட்டி வியாபாரம்பண்ணி, விளை வயல்களை வாங்கியிருந்தேனானல் இந்த நிலைமைக்கு வந்திருக்கமாட்டேன். அதே ஊருக்கு அருகாண்மையாய் இருக்கிறதும், இப்பொழுது 1000, 2000 ரூ பெறுமானதுமான பனம் சொத்துக்கள் முற்காலத்தில் 50 ரூ 40 ரூக்கும் கூடத்தேடுவாரற்ற தேரி நிலமாயிருந்தது. ஆகிலும் இவைகளில் பிரவேசியாதிருந்தது என்னால் அல்ல. தேவகிருபையினாலே' என்றார். நமது அருமையுள்ள அத்தியக்ஷரவர்கள் கடந்த வருஷத்தில் மெஞ்ஞானபுரம் பெரிய தேவாலயத்தின் குறைவேலையை முடித்து அதற்குக் கூரைபோடுவித்தார்களே! அப்பொழுது கணக்குப்பாரம் முழுமையையும் தெய்வநாயகம் வீரவாகு ஐயரவர்களிடத்தில் ஒப்புவித்தார்கள். மேற்படி ஆலயப் பிரதிஷ்டையைப் பற்றி நமது அத்தியக்ஷரவர்கள் எழுதுகையில் சொல்லுகிறதாவது: "வேலை முழுவதும் மொத்தத்தில் சகாயந்தான். அதை மேற்பார்த்து வேலையாட்களுக்குப் பணம் பட்டுவாடாச்செய்த வீரவாகு ஐயர் மிகவும் புகழ்ந்துகொள்ளப்படத்தக்க விவேகத்தோடும் உண்மையோடும் அதை நடப்பித்தார். வேலைக்காரரை ஒடுக்கினார் என்றாவது அவர்களில் எவர்களுக்கும் அநியாயம்செய்தார் என்றாவது ஒரு அற்பப் பிரியாதும் வரவில்லை" என்பதே. மேலும் அவர் சங்கப்பண வரவு கணக்கிலும் ஆசாமிகளின் சம்பளச் செலவு பணத்தைப்பற்றிய கணக்கிலும், வெகு கராராயிருந்தார். அவர் சென்றுபோன பின்னும் அந்தந்தக் கணக்கும் அததற்குரிய பணமும் சரியாயிருந்தது.

3. பெரியோருக்கு இணங்கி நடப்பதில் அவரைப்போல சிலர் மாத்திரமிருப்பார்களென நினைக்கலாம். இதில் அவர் வெகு சிரேஷ்டராயிருந்தமையால்தான், தம் விசாரணைக்குட்பட்டவர்களைச் சற்று மிதமிஞ்சிக் கண்டிப்பாக நடத்தவேண்டுமென்ற எண்ணம் உடையவராக இருந்தார். ஆள விரும்புகிறவன் முதலில் கீழ்ப்படியப் படிக்கவேண்டுமென்பது



இவர் விஷயத்தில் மிகலாஸ்தவம். இதைப்பற்றி விவரமாய்ச் சொல்லலாம். விவரிக்கில் பெருகும். ஒரு உதாரணம் போதும். போர்டிங் ஆண் பள்ளிப்பிள்ளைகளைப்பற்றிச் சொன்னதில்: பையன்கள் இப்பொழுதே கீழ்ப்படியப் படிக்கவேண்டும். அவர்கள் கல்விச்சாலையிற் படித்தபின் திரும்பவும் இவ்விடத்தில்தானே வேலைக்கு வருவார்கள். இவ்விடத்திலேயே கீழ்ப்படியப் படித்துக்கொண்டார்களானால் அவர்கள் அலுவல்பார்க்கிற மற்றிடங்களிலும் மேலதிகாரிகளால் ஒப்புக்கொள்ளப்படுவார்கள் என்று அவர் பலதரம் சொல்வார். பிள்ளைகளே! உங்கள் நன்மையை விரும்பின அந்நெடிதும் வைரமுமான கேதுருமரம் விழுந்தது. ஆ, சிறுவரே! வாலிபரே! தேவதாரு விருக்ஷங்களே அலறுங்கள். கேதுருமரம் விழுந்ததே. அவர் தம்முடைய மேல்அதிகாரிகள் யாவருக்கும் பெரியோருக்கும் மிகவும் பணிவாய் நடந்துவந்ததில் நாம் அவரைப் பின்பற்றுவது உசிதம்.

4. கடைசியாக அவருடைய அந்தியநேர சம்பவத்தைக்கொண்டு நாம் அறிகிறதென்னவென்றால், ஒருவனுடைய கடைசிநேரம் அவனை நித்தியத்துக்கு ஆயத்தப்படுத்திக்கொள்ள ஏற்றகாலம் அல்ல என்பதே. காலம்சென்ற நமது போதகருக்கு முகத்தில் கன்னப்பிளவை உண்டாகி ஏறக்குறைய மூன்றுவாரம் வருத்தப்பட்டார். டாக்டர்களுடைய எந்தச் சாந்தமுள்ள சிகிச்சையையும் பொறுக்க ஏலாதிருந்தார். அவர் ஏற்கெனவே மிகவும் பலட்சயமாயிருந்தபடியினாலும், அப்பொழுது போசனத்தின்மேல் பிரியமில்லாமற்போனபடியாலும் அதிகமாய்ப் பேசக்கூடாத நிலைமையில் ஆனார்கள். இப்படியிருந்தும் அவர் மரித்த அன்றுகாலையில் அவருடைய நம்பிக்கையைப்பற்றிக் கேட்கப்பட்டபோது "நான் இம்மைக்கும் மறுமைக்கும் இயேசுவில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்" என்றார். இந்தவேளையில் மாத்திரம் அல்ல, தம் ஜீவியகாலத்திலே மரணத்துக்கு ஆயத்தமாயிருந்தாரென்று பல குறிப்புகளால் அறியலாம். தினமும் காலை 8 மணிக்கு வேதம் வாசித்து தனித்தியானம்செய்யும் பழக்கமுடையவராயிருந்தார். எந்த ஏழைக்கும் அவர் கொடுக்கும் உபகாரம் பெரும்பாலும் பிறர் அறியாமல் கொடுக்கப்பட்டது. மேலும் தாம்சுகமாயிருந்த காலத்தில் 'இன்னும் கொஞ்சநாள் மாத்திரம் உங்களோடிருப்பேன், அப்புறம் நான் இம்மையின் தொல்லையினின்று இளைப்பாறுவேன்' என்று அடிக்கடி சொல்லிவந்தார். ஆகையால் எவரும் தங்கள் ரக்ஷண்ய காரியத்தைப் பற்றிக் கடைசிநேரத்தில் பார்த்துக்கொள்ளலாமென்று நினையாமல் இப்போதே கவலைகொள்ளக்கடவர்கள்.

தோழனே உன்ஜீவன் இங்கே
என்றென்றைக்கும் நிற்குமா?
தோன்றிப்போகும் புகைபோலே
அதிருக்கும் அல்லவா?
ஆகையாலே
ஜீவநாளை மீட்டுக்கொள்.

அவர் வியாதிப்படுக்கையிற் காட்டின சொல்லற்கரிய பொறுமையைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லி முடிக்கிறேன். வியாதிகாலத்தில் அவரைச் சந்திக்கப்போனவர்கள் இதை நன்றாய்க் கவனித்தார்கள். அவர் சகோதரராகிய கனம் வேதநாயகம் ஐயரவர்களாலும் தலத்திலுள்ள கனம் யோசேப்பு தாவீது ஐயரவர்களாலும் டை ஐயரவர்களுடைய தேகம் அடக்கம்பண்ணப்பட்ட இடத்தில் வெள்ளாளன்விளை கனம் T. வேதநாயகம் ஐயரவர்கள் அங்குகூடிவந்த ஜனங்களுக்குப் பண்ணிய சுருக்கப் பிரசங்

கத்திற் பேசின வார்த்தைகள் மேற்காட்டியபடி அவருடைய பொறுமையை விளக்குகிறது. அதாவது: சகோதரரே! நம்மைவிட்டுப் பிரிந்துபோன அருமைப் போதகர் கொடிய வருத்தப்பட்டும் தேவசித்தத்துக்கு விரோதமாய் ஒரு வார்த்தையும் பேசாமல், வெகு தைரியமாய்ச் சகல வருத்தங்களையும் சகித்து கர்த்தருக்குத் தன்னை ஒப்புவித்ததிலும் நமக்கு மாதிரியாயிருந்தார். அவரால் அநேகர் நன்மைபெற்றார்கள் என்பதற்கு இங்கே நிற்கிற நாமே உதாரணங்களாக இருக்கிறோம் என்றார்கள். தேவதாரு மரங்களே அலறுங்கள்.

பிரியமானவர்களே! இங்ஙனம் நமது அன்புள்ள போதகருடைய சரித்திரத்தைச் சிந்தித்தோம். இது நமக்கு மிகுந்த பிரயோஜனத்தைக் கொடுக்கிறது அல்லவா? நாம் அவரை நினைப்பது நியாயம். அவர் சர்ச்சுமிஷியோனில் 50வருஷம் உழைத்தார். இதில் குருவாக இருந்த காலம் கிட்டத்தட்ட 30வருஷம் மெஞ்ஞானபுரத்தில் மாத்திரம் 40 வருஷத்துக்கு அதிகம் வசித்தார். அவர் மரணத்தின் கூரால் கடைசியாய் விழுந்தபோது தாம் நேசித்ததும் அதிகமாகச் சிறப்பிக்கக் கருதினதுமான மேற்படி ஊர்த்தெருவின் வழியாய் மிஷன் ஆசாமிகளும் சபையாரும் அவர் தேகத்தைச் சுமந்து போனார்கள். பள்ளிப்பிள்ளைகள் அவர் பாடைமுன் நடந்து ஞானப்பாட்டுகளையும் துயர கீர்த்தனைகளையும் பாடிப்போயினர். ஸ்திரீகள் யாவரும் அவருக்காக அழுதுபுலம்பி சிந்தின கண்ணீர் ஆறாய்ப்பெருகின. சேதரு மரங்கள் விழுந்தது. தேவதாரு விருக்ஷங்களே அலறுங்கள். இதை நாம் வாசிக்கையில நமக்குமுன் போனவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுவோமாக. மேலும் கர்த்தருடைய கிரியையிலே பெருகுகிறவர்களாயும் இருப்போமாக.

ஆ! என் சகோதரரே, கருத்தக்கொடி பிடியுங்கள். துய்யவெள்ளைக் கொடியையும் உயர்த்துங்கள். துக்கத்துக்கடையாளமாகக் கருத்தக்கொடியையும் இனி உயிர்த்தெழுதலுண்டாகும் என்கிற நம்பிக்கைக்குக் குறிப்பாக வெள்ளைக்கொடியையும் பிடியுங்கள். அவர் பிரேதப்பெட்டியின் மேல் நாம் சில இலைகளையாவது புஷ்பங்களையாவது போடவில்லை. ஆனால் அவர் கல்லறையின் பக்கங்களில் பின்வரும் வசனப்படலங்களைப் பதித்துவைப்போமாக. அவையாவன: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்." "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்." "நீ உத்தமனை நோக்கி செம்மையானவனைப் பார்த்திரு. அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்." "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" "ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரவேசிப்பார்கள்."

கர்த்தர் தமது நாமத்தின் மகிமைக்காகவும் திருச்சபையின் நன்மைக்காகவும் அவர்களைப்போல இன்னும் அநேகம் பேரை எழுப்புவாராக. ஆமென்.



## சமாசாரத்திரட்டு.

மே. ஜே. ஹெச். காரிஸ்டின் துரையைக் கொல்ல எத்தனித்து அடித்துக் கொள்ளைசெய்தது. இவர் ரிவினியுபோர்ட் 2வது மெம்பர். இவர் மதுரைக்குப் போயிருந்தார். அவ்விடத்தில் கள்ளர்களால் தடியடி வேண்டிய மட்டில் பட்டார். அவர் தன்னைக் காப்பாற்றிக்கொண்ட விதமாவது, பெரியகுளத்தைவிட்டு புறப்பட்டதும், இராத்திரி 9 மணிக்கு இவருடைய வண்டியைக் கள்ளர் மடக்கி வழிபறிக்க ஆரம்பித்து வண்டியில் கல்களை விட்டெறிந்தார்கள். தடியால் இரண்டு பக்கமுமிருந்து குத்தினார்கள். அப்பொழுது இருட்டுவேளை. வண்டிக்காரன் உட்காருகிற இடத்தில் ஓர் லாந்தர் கொளுத்தி வைத்துக்கொண்டிருந்தான். விளக்கிருந்தால் சங்கடமென்று லாந்தலை ஒடித்தெறிந்துவிட்டார்கள். காரிஸ்டின் துரை அவ்வண்டியின் கதவைத் திறப்பதற்காகக் கையை வெளியில் விடவே கள்ளர்கள் அந்தக் கையை தடியால் அடித்தார்கள். அடி தாங்கமாட்டாமல் அந்தக் கையை உள்ளுக்கு வாங்கிகொண்டு இன்னொரு கையால் திறக்க ஆரம்பித்தார். அந்தக் கையிலும் பலமான அடி விழவே, அப்பப்பா போதும்! இம்மட்டில் நிறுத்து! உங்களுக்கு என்னவேண்டியது என்று கேட்டார். கள்ளர்களில் ஒருவன் வண்டியின் அருகே வந்து "ரூபாய்" வேணுமென்றான். ரூபாயில்லையென்று சொல்லி, 6, 7, நோட்டுகளைக் கொடுத்தார். போலீசில் நோட்டு நம்பர்களை எழுதிவைத்தால் பணம் வந்துவிடுமென்று நினைத்தார். இவரைவிட அவர்கள் பள்ளிக்கூடத்தில் நன்றாய்ப் படித்தவர்களாகையால் அந்த நோட்டுகளை வாங்கி முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்து கீழே எறிந்துவிட்டார்கள். கார்ஸ்டின் துரை வண்டியைவிட்டு கீழே இறங்கினார். உடனே கல்லுகளும் தடிகளும் இவரைத் தேடிக்கொண்டது. அவர் ரோட்டு ஓரத்தில் போய் உட்கார்ந்தார். திருடர்கள் வண்டியை நாட்டி, ஒரு மாட்டை அடித்து துரத்திவிட்டு வண்டியிலுள்ளவைகளை சோதிக்க ஆரம்பித்தார்கள். இப்படி இவர்களிருக்கையில் கார்ஸ்டின் துரை ஓடிவந்து வெகு தைரியத்துடன் தன் கையிலிருந்த தடியால் ஒருவனை ஓங்கி அடிக்க, அனைவரும் ஓடியொளித்தார்கள். சிலநேரங் கழிந்தபிறகு ஒருவன் வந்து இவர் கையிலிருந்த தடியைக்கொடு என்று கேட்டான. அவர் மறுத்தார். அப்பொழுதே பின்புறமாய் கழுத்தின்மேல் ஓங்கி ஒரு குத்து வைத்தான். அந்த அசதியில் தடியைப் பிடுங்கிக்கொண்டான். மற்றத் திருடர்களும் ஓடிவந்து தங்களுக்குத் திருப்தியுண்டாகிறவரையில் நன்றாய் அடித்து அவரை அசைத்துப்பார்த்து கால் கை ஒன்றும் சலியாமல் பிணம்போல கிடந்ததால் செத்துப்போனானென்று நினைத்து, "வாருங்கடா, நமது வேலை முடிந்தது," என்று சொல்லிப்போய்விட்டார்கள். கார்ஸ்டின் துரை சிலநேரம் படுத்திருந்து திருடர்கள் போய்விட்டார்களென்று கண்டு எழுந்து ஒற்றைமாட்டைக் கட்டி வண்டியை ஓட்டிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் பிராது எழுதிவைத்தார். இந்தக் கள்ளர்கள் பண ஆசையினால் வரவில்லை, காரிஸ்டனுடைய உயிரின்பேரில் ஆசைவைத்து அதைக் கொண்டுபோக நினைத்தார்கள் என்பது ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. கைதிகள், இந்தியன் பினல்கோட். 395, 397, 109, 111, இந்த செக்ஷன்களின்படி செஷனுக்கு கமிட்செய்யப்பட்டார்கள்;

(திரு.—னி. எப்பிரல்மீ 1உ)

ஏப்ரல்ᵐ நாள்-30. பங்குனிᵐ 20உ முதல், சித்திரைᵐ 18உ வரை.

| வாரம். | ஏப்ரல் தேதி. | பங்குனி சித்திரை. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௨0 | கர்த்தர்...உன்னை மெய்ம்மையும் ஆசீர்வதிப்பார். உபா. 15: 5. |
| வெ | 2 | ௨௧ | கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கக் கடவாய். 16: 1. |
| ச | 3 | ௨௨ | அவன் இருதயம் பின்வாங்கிப்போகாதபடி. 17: 17. (ன் 18: 19. |
| ஞா | 4 | ௨௩ | என் வார்த்தைகளுக்குச் செவிகொடாத...வனை நான் விசாரிப்பே |
| தி | 5 | ௨௪ | பிறனுடைய எல்லையை ஒற்றிப்போடாயாக. 19: 14. |
| செ | 6 | ௨௫ | கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாமலும் இருங்கள். 20: |
| பு | 7 | ௨௬ | தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன். 21: 23. |
| வி | 8 | ௨௭ | மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக. 22: 10 |
| வெ | 9 | ௨௮ | சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார். 23: 5. |
| ச | 10 | ௨௯ | குஷ்டரோகத்தைக்குறித்து... மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். |
| ஞா | 11 | ௩௰ | போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக. 25: 4. (24: 8. |
| தி | 12 | ௩௧ | எங்களுக்குக் கொடுத்த...தேசத்தையும் ஆசீர்வதியும். 26: 15. |
| செ | 13 | ௧ | குருடனை வழிதப்பச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன். 27: 18. |
| பு | 14 | ௨ | கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது ...ஆசீர்வாதம் |
| வி | 15 | ௩ | எட்டியையும் முளைப்பிக்கிற யாதொருவேர் உங்களிலிராதபடிக்கு |
| வெ | 16 | ௪ | உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர். 30: 20. (பாருங்கள். 29: 18. |
| ச | 17 | ௫ | கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர். 31: 8. (18. |
| ஞா | 18 | ௬ | ஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள். 32: |
| தி | 19 | ௭ | உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும். 33: 24. |
| செ | 20 | ௮ | மோசேயைப்போல ஒரு தீர்க்கதரிசியும்.. எழும்பினதில்லை. 34: |
| பு | 21 | ௯ | நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன் |
| வி | 22 | ௰ | இரத்தச் சிவப்புநூல் கயிற்றை எங்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே |
| வெ | 23 | ௰௧ | உங்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளுங்கள். 3: 5. (கட்டு. 2: 17 |
| ச | 24 | ௰௨ | யோர்தானின் தண்ணீர் பிரிந்துபோயிற்று. யோசு. 4: 7 |
| ஞா | 25 | ௰௩ | நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தே |
| தி | 26 | ௰௪ | (எரிகோ) பட்டணத்தைக் கர்த்தர் உங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் |
| செ | 27 | ௰௫ | சாபத்தீடானது உங்கள் நடுவே இருக்கிறது. 7: 13. (6: 16 |
| பு | 28 | ௰௬ | கர்த்தருடைய சொற்படி செய்யுங்கள். 8: 8. (யும். 9: 25. |
| வி | 29 | ௰௭ | நலமும் நியாயமுமாய்த் தோன்றுகிறபடி எங்களுக்குச் செய் |
| வெ | 30 | ௰௮ | நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது |

## விசேஷ நாட்கள்.

4. லெந்தென்னும் நாட்களில் 4—ம் ஞாயிறு. [illegible]
11. லெந்தென்னும் நாட்களில் 5—ம் ஞாயிறு.
18. உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் ஞாயிறு. பௌர்ணமி.
23. கிறிஸ்து பாடுபட்ட திருநாளாகிய பெரிய வெள்ளிக்கிழமை.
25. கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளாகிய ஈஸ்தர் பண்டிகை. பரி. மாற்கு சுவிசேஷகன் திருநாள்.

# நற்போதகம்.

௪. ஏப்ரல்ᵐ. ௲௮௮௯ ௵.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

**488.** 20: 28. "என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்". இந்த வார்த்தைகளில் கவனிக்கவேண்டியதென்ன?

கிறிஸ்துநாதரைப் பார்த்துத் தோமா இந்த வார்த்தைகளைப் பேசுகிறான். அவரைத்தான் என் ஆண்டவரே! என் தேவனே! என்று சொன்னான். அவன் ஆச்சரியப்பிரமைகொண்டு, கிறிஸ்துநாதரையல்ல, தெய்வத்தை நோக்கி இப்படிச் சொன்னானென்று அர்த்தம்பண்ண இடமில்லை. தோமா தம்மைத் தெய்வம் என்றறிக்கையிட்டதை, கிறிஸ்துநாதர் ஏற்றுக்கொண்டார்.

பாக்கியவான்கள் இன்னுமொன்று கர்த்தர் மலைப்பிரசங்கத்தில் முன்னமே போதித்திருந்தார். பெரிதும் கடைசியுமான பாக்கியத்தை பிற்காலத்துச் சபைக்குச் சுதந்தர பாக்கியமாக கர்த்தர் இங்கே சொல்லிமுடித்தார்.

**489.** 20: 31ஐ விஸ்தரி?

மனுஷாவதாரமான இயேசு இஸ்ரவேலருக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தங்களையும், அவர்கள் நம்பிக்கைகளையும் (மத் 1: 16), நிறைவேற்றுகிற கிறிஸ்துவாயும், மனுஷரை இரக்ஷிக்கவந்த தேவகுமாரனாகவும் விளங்கினார் (லூக் 3: 23, 38). இந்தச் சத்தியத்தை விசுவாசிக்கவும், விசுவாசித்து, அவருடைய இருதன்மையினாலுண்டான புண்ணிய பலன்களைப் பெறவும், அவருடைய சமூகத்தில் என்றும் வாழவுமே சுவிசேஷம் எழுதப்பட்டிருக்கிறது.

**490.** *யோவான் சுவிசேஷத்துக்கும் யோவான் எழுதின நிருபத்துக்கும் (1 யோ 5: 13), இருக்கிற சம்பந்தாசம்பந்தமென்ன?*

சுவிசேஷத்தில், இயேசுவின் சரித்திரத்தைச் சொல்லி, அந்தச் சரித்திரத்தில் காட்டிய இயேசுதான் தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று படிப்படியாய் விளக்கியிருக்கிறது. நிருபத்தில், தேவகுமாரனாகிய கிறிஸ்து, மெய்மனுஷனாகவுமிருந்தாரென்று நிலைமாறிச் சொல்லியிருக்கிறது. சுவிசேஷத்தில், இயேசு வெறும் மனுஷனாக மாத்திரமிருந்தவரல்ல என்றும், நிருபத்தில், கிறிஸ்து வெறும் ஆவியாய் மாத்திரமிருந்தவரல்ல (1 யோவா 4: 8) என்றும் காட்டியிருக்கிறது. இந்தச் சம்பந்தாசம்பந்தங்கள் ஒன்றுபோல முக்கியமுள்ளவை.

**491.** *யோவான் 21ம் அதிகாரத்தின் குறிப்புகளைச் சொல்லு?*

21ம் அதிகாரம், யோவான் சுவிசேஷத்துக்கு முடிவுரையாயிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. சுவிசேஷமானது இருபதாம் அதிகாரத்தோடு முற்றுப்பெற்றது. 20: 30க்குப் பிற்பாடு, 21ம் அதிகாரத்தின் சங்கதிகளைக் கூட்டவேண்டுமென்பது, யோவான் தன் சுவிசேஷத்தை எழுத ஆரம்பித்தபோது நினைத்த காரியமல்ல. 21ல் கர்த்தர் காட்சியளித்த விபரம், அவருடைய உயிர்த்தெழுதலை ரூபிக்கும் நோக்கமாயெழுதப்பட்டதுமல்ல. 21: 1—23 வாக்கியங்களை பரி. யோவான் எழுதினனென்பதற்குச் சந்தேகமில்லை. பாஷை நடையும் சரித்திரப்போக்கும் அப்படியே சாக்ஷியிடுகின்றன. இந்த முடிவுரை எழுதப்படும் முன்னதாக இந்தச் சுவிசேஷம் பிரசித்தமாக்கப்பட்டதென்பதற்கு அத்தாக்ஷியே இல்லை. ஆனால் பரி. யோவானைப்பற்றி, கர்த்தர் சொல்லிய வார்த்தைகளை (21: 23), சுவிசேஷத்தோடேகூடப் பிரசித்தமாக்கவேண்டுமென்பது, அவனுடைய நோக்கமாயிருந்ததென்று தோன்றுகிறது. அதற்காக ஷை வார்த்தைகள் சொல்லப்பட்ட சம்பந்தத்தை விபரமாய் எழுதுகிறார்.

இந்த அதிகாரம் இரண்டு பிரிவுள்ளது. (1) கர்த்தரும் கூட்டமான சீஷரும் (21: 1—14). (2) கர்த்தரும் தனித்தனிச் சீஷரும் (21: 15-23).

இந்தச் சுவிசேஷத்தை எழுதினவர், பரி. யோவான்தான் என்று காட்டும்படி, கடைசி இரண்டு வாக்கியங்களாகிய 24, 25, எபேசு பட்டணத்து மூப்பர் எழுதிக்கூட்டினார்களென்று தோன்றும்.

21: 1. "திபேரியா". சுவிசேஷங்களில் இந்தப் பேர் இந்த ஒரு இடத்தில்தான் வருகிறது. சீஷர்கள் கலிலேயாவுக்கு வந்ததைப்பற்றி மத் 28: 7. மாற் 16: 7 ஆகிய இந்த வாக்கியங்களில் குறிப்பிட்டிருக்கிறது. கர்த்தர் பரத்துக்கேறுமுன்னதாக, சீஷர்கள் மறுபடியும் எருசலேமுக்குத் திரும்பிவந்து, பெந்தெகொஸ்தேநாள்வரையும் அவ்விடத்திலிருந்தார்கள் (அப் 1: 4).–லூக் 24: 44ன் வார்த்தைகள், இந்த நாற்பது நாட்களாய்ப் பல



சமயங்களில் கர்த்தர் போதித்த உபதேசங்களின் சுருக்கமென்று காணப்படுகிறது. உயிர்த்தெழுந்த கர்த்தர், இரண்டு சமயங்களில் கூட்டமான பேருக்குக் காணப்பட்டதையும், பரி. யோவான் சொல்லுகிறார் என்பதைக் கவனித்துக்கொள்ளவேண்டும். கலிலேயாவில் பதினொருவருக்குக் காணப்பட்டதை மாத்திரம் பரி. மத்தேயு சொல்லுகிறார். கர்த்தர் எருசலேமில் அளித்த காட்சிகளை மாத்திரம் பரி. லூக்கா சொல்லுகிறார்.

21: 2. இப்பொழுது கூடியிருந்த சீஷரெல்லாரும் ஒரே திசையிலுள்ளவர்களென்று காணப்படுகிறது.

தோமா. அப் 1: 13ல், தோமாவை பிலிப்புடன் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. ஆகையால் தோமா பெத்சாயிதா ஊரானாயிருக்கலாம் (யோ 1: 44).

நாத்தான்வேல். (1: 45 வாசி). "கானாவூரான்" என்ற விபரம் 1: 45. 2: 1 வாக்கியங்களை விளக்குகிறது.

"சேபெதேயுவின் குமாரரும்". மத் 20: 20. 26: 37. 27: 56.

"வேறு இரண்டுபேரும்". முதலாம் அதிகாரத்தை வாசித்தால், இந்த இரண்டுபேரும் அந்திரேயாவும்(1: 41)–பிலிப்பும் (1: 43) ஆயிருக்கலாமென்று தோன்றும். ஆனால் இந்த வாக்கியத்திற் சொல்லிய இரண்டுபேரும், கர்த்தருடைய "சீஷரில்" (அப்போஸ்தலன்மாரில்) இருவராயிருந்தார்களென்று பெரும்பாலும் நினைக்கப்படுகிறது. இந்தச் சுவிசேஷத்தை யோவான் எழுதினபடியினாலே, தன் பேரையும் தன் சகோதரன் பேரையும் கடைசியில் சொல்லுகிறான்.

21: 3. அப்போஸ்தலன்மார் தங்களுடைய பிற்கால ஸ்திதியைக்குறித்துத் தீர்மானமில்லாதவர்களாய், தங்களுடைய பழய வேலையை மறுபடியும் செய்துவந்ததாகக் காணப்படுகிறது (லூக் 22: 36. 2 தெச 3: 8. அப் 18: 3).

"புறப்பட்டு", என்றால் வீட்டைவிட்டு புறப்பட்டு என்று அர்த்தம். இப்பொழுது இவர்கள் கப்பர்நகூமில் அல்லது பெத்சாயிதாவில் வாசம்பண்ணினதாகத் தோன்றும் (21: 4). சீஷர்கள் தங்கள் வேலையின் பேரில் கவனமாயிருந்ததினாலே, இயேசுவை இன்னாரென்று அறியவில்லை (யோவா 20: 14).

21: 5. தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்த நோக்கமாய் இந்தக் கேள்வியைக் கேட்டார். அவர்களிடத்திலிருந்த மீனைக் கிரயத்துக்கு வாங்கும்படி விரும்புகிற ஒருவர்போல் கேட்கிறதாக அர்த்தம்பண்ணலாம். "பிள்ளைகளே" என்ற மூல வார்த்தை, இனமுறை சம்பந்தத்தைக் குறியாமல், வயசு அல்லது அந்தஸ்தின் தாரதம்மியத்தைக் குறிக்கும் (13: 33.

1 யோ 2: 13, 18. 2: 1, 12, 28. 3: 7, 18. 4: 4. 5: 21). இந்த வாக்கியத்தில் இந்த வார்த்தை, பழக்கமானவர்களைக் கூப்பிடுகிற வக்கணை என்று தெரியவரும்.

9. இது அற்புதமாய் நடந்தது.

11. மீன்கள் அற்புதமாய் அகப்பட்ட முகாந்தரத்தினாலே, அவற்றை எண்ணினார்களென்று நினைக்கலாம்.

**492**. கர்த்தருடைய ஊழியத்தின் துவக்கத்தில் நடந்த லூக்கா 5: 1ன் அற்புதத்திற்கும், அவர் உயிர்த்தெழுந்தபின் நடந்த இந்த அற்புதத்திற்கும் இருக்கிற வித்தியாசங்களை, அகுஸ்தீன் நன்றாய் எடுத்துக்காட்டுகிறார். அவைகளெவை?

1. முந்தின அற்புதம், இம்மையிலிருக்கிற திருச்சபைக்கும், பிந்தினது, வெற்றிசிறந்த திருச்சபைக்கும் அடையாளமாயிருந்தது.

2. அதில், நல்லவைகளும் பொல்லாதவைகளுமிருந்தன. இதில், நல்ல மீன்கள் மாத்திரமிருந்தன.

3. அங்கே, கிறிஸ்துநாதர் தண்ணீருக்குள்ளே இருந்தார். இங்கே, கரையிலே நின்றார்.

4. அங்கே, மீன்கள் படவிலே இருந்தன. இங்கே, கரைசேர்ந்தன.

5. அங்கே, வலைகளைப் போனபோக்குக்கெல்லாம் விட்டார்கள், இங்கே ஒரு குறிப்பான இடத்திலே போட்டார்கள்.

6. அங்கே, வலை கிழிந்தது, இங்கே, கிழியவில்லை.

7. அங்கே, படவுகள் பாரம் தாங்கமாட்டாமல் அமிழத்தக்கவைகளாயிருந்தன. இங்கே, அவற்றில் பாரமில்லை.

8. அங்கே, மீன்கள் எண்ணப்படவில்லை. இங்கே, திட்டமாய் எண்ணப்பட்டன.

**493**. 21: 13ல் கவனிக்கவேண்டியதென்ன?

இப்பொழுது பிடிபட்ட மீன்களை, உபயோகப்படுத்தின வகையைப் பற்றியாவது, கர்த்தர் அவற்றைப் புசித்தாரா? இல்லையா? என்பதைப் பற்றியாவது, யாதொன்றும் சொல்லப்படவில்லை. தாம் கொண்டுவந்ததைக் கொடுக்கிறவராக மாத்திரம் விளங்குகிறார். அதினாலேதான் கர்த்தர் வழக்கமாய்ச் செய்துவந்தபடி, ஆசீர்வதிக்க அல்லது ஸ்தோத்திரம்பண்ணவில்லையென்று தோன்றுகிறது.



**494**. 21: 14. எப்படி "மூன்றாவது" தரிசனம்?

கூட்டமான சீஷருக்குக் காணப்பட்ட தரிசனங்களில், இது மூன்றாவதென்று பெரும்பாலும் சொல்லப்படும். பரி. யோவான் தாமே இதற்குமுன் (மகதலேனாளுக்குக் கொடுத்த தரிசனத்தைக் கூட்டி) மூன்று தரிசனங்களைச் சொல்லுகிறாரே.

**495**. 21: 15. "யோனாவின் குமாரனாகிய சீமோனே" என்று அவனுடைய பழயபேரைச் சொல்லிக் கூப்பிட்டதில் கவனிக்கவேண்டியதென்ன?

அப்போஸ்தலனாக அவனுக்கிருக்கிற குணங்களையல்ல, சாதாரண மனுஷனாக அவனுக்கிருக்கிற குணங்களைக் காட்டுகிற வகையாய் இப்படி அழைத்தானென்று தோன்றும்.

**496**. "இவர்களிலும்" என்பது யாரைக் குறிக்கும்?

மற்ற அப்போஸ்தலன்மாரைக் குறிக்கும். 13: 37. 26: 33ஐப் பிடித்து இப்படிக் கேட்டானென்று தோன்றும். "இவர்களிலும்" என்ற வார்த்தையை, இவைகளிலும் என்று திருப்பி, இந்த வார்த்தை மீன்பிடிக்கிற தளவாடங்களை அல்லது மீன்களைக் குறிக்குமென்று அர்த்தம்பண்ணுவது இயல்பான வியாக்கியானமல்ல.

**497**. "அன்பாயிருக்கிறாயா" என்பதில், கவனிக்கவேண்டியதென்ன?

அப்போஸ்தல ஊழியத்துக்கு அஸ்திபாரம், விசுவாசமல்ல, அன்பு என்று சொல்லுகிறார். மெய்யான அன்பில், விசுவாசம் அடங்கியிருக்கிறது (1 கொரி 13: 13).

**498**. பேதுரு சொன்ன உத்தரவின் தாற்பரியமென்ன?

கர்த்தர்பேரில் பேதுரு பக்ஷமுடையவன் என்பதைச் சாதித்து, அதற்கு கர்த்தருடைய அறிவைச் சாக்ஷியாக கோருகிறான். ஆனால் பேதுருவினிடத்தில் கேட்ட கேள்விக்கு அவன் சொன்ன உத்தரவு, இரண்டு முக்கிய விஷயங்களில் வித்தியாசப்படுகிறது. (1) மற்றவர்களைப் பார்க்கிலும் தனக்குச் சிரேஷ்டத்தன்மையிருக்கிறதாகச் சொல்லவில்லை. மற்றவர்களிலும் என்ற வார்த்தையை விட்டுவிட்டு, தனக்குள்ளிருக்கிற உணர்வைப்பற்றி மட்டும் பேசுகிறான். (2) கிறிஸ்துமார்க்க ஜீவியத்துக்கு ஊற்றாகிய (13: 34. 14: 15, 21, 28) மேலான அன்பைத்தான் அடைந்திருக்கிறதாக அவன் சொல்லத் துணியவில்லை. மேலும் வருங்காலச் சம்பவங்களைப்பற்றியாவது, இனிமேல் அவனுடைய அன்பு வெளிப்படும் விதத்தைப்பற்றியாவது, (13: 37), அவன் யாதொன்றும் சொல்லவில்லை.

**499**. "நீர்" என்ற வார்த்தையில் அடங்கியிருக்கிறதென்ன?

தன சுயபலத்தை நம்புவதில் பிரயோஜனமில்லை என்று, இப்பொழுது அவன் பரீக்ஷையினாலே அறிந்துகொண்டான்.

**500**. "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்பதில் கவனிக்கவேண்டியதென்ன?

பேதுரு செய்த அறிக்கைக்கு உத்தரவாக, கர்த்தர் அவனுக்கு ஒரு உத்தியோகத்தைக் கட்டளையிட்டதால், அவன் செய்த அறிக்கையைத் தாம் ஒப்புக்கொண்டதாகக் காட்டினார். இங்கே "ஆட்டுக்குட்டிகள்" என்பது, பிள்ளைகளையும், தாழ்மையும் பெலவீனமுமுள்ள விசுவாசிகளையும் குறிக்கும்.

**501**. 20: 17ல் கவனிக்கவேண்டியதென்ன?

பேதுரு வழங்கின வார்த்தையையே மூன்றாம் விசை கர்த்தர் வழங்கினார். இந்த 3 கேள்விகளும், பேதுரு 3 முறை மறுதலித்ததை ஞாபகப்படுத்துகிறவைகளாயிருந்தன. கேள்வி மூன்றுதரம் கேட்கப்பட்டதினால் மாத்திரமல்ல, மூன்றாந்தரம் பேதுரு சொன்ன வார்த்தையைப் பிடித்து, "நேசிக்கிறாயா" என்று கேட்டதினாலும் அவன் துக்கப்பட்டான். மூன்றாந்தரம், "ஆம் ஆண்டவரே" என்ற வார்த்தைகளைப் பேதுரு விட்டுவிட்டு, தன்னை முழுவதுமாய்க் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டான்.

**502**. 20: 18ஐ விஸ்தரி?

"மெய்யாக மெய்யாகவே" என்று வழக்கமாய் வழங்குகிற வார்த்தைகளைக், கர்த்தர் உயிர்த்தெழுந்தபிற்பாடு இன்னொரு முறை வழங்குகிறார்.

"நீ முதிர்வயதுள்ளவனாகும்போது". பரி. பேதுரு கி. பி. 64ல் இரத்தச்சாக்ஷியானான்.* இப்பொழுது அவன் நடுப்பிராயமுள்ளவன் (மத் 8: 14).

"கட்டி". தண்டனைக்கைதியைக் கட்டுவதுபோல. "இஷ்டமில்லாத இடம்". கொலைக்களத்துக்குப் போகும் வழி.

**503**. 21: 19ஐ விஸ்தரி?

பரி. பேதுரு ரோமாபுரியில் சிலுவையில் அறையப்பட்டதை தெர்த்துல்லியான் (Tertullian) சொல்லுகிறார். பேதுரு கேட்டுக்கொண்டதின் பேரில் அவனைத் தலைகீழாகச் சிலுவையில் அறைந்தார்களென்று ஓரிஜன் (Origen) சொல்லுகிறார்.–பேதுரு இரத்தச்சாக்ஷியாய் மரிப்பதைக் கர்த்தருடைய வார்த்தைகள் நேராய்க் குறித்தாலும், அவன் சிலுவையில் அறையப்படுவதை நேராய்க் குறித்ததென்று அவ்வளவாய் அர்த்தம்பண்ண ஏதுவில்லை. "உன் கைகளை நீட்டுவாய்" என்ற வார்த்தைகள் வாக்கியத்தின் முதலில் வருவதினாலே, சிலுவையில் அறையப்படுகிற விதத்தை இந்த வார்த்தைகள் முதற்கருத்தாய்க் குறித்ததென்று அர்த்தம்பண்ண ஏதுவில்லை.



**504**. 21: 22. "நான் வருமளவும்". இந்த வருகை எது?

முதற்கருத்தாக இந்த வருகை, கிறிஸ்துநாதருடைய 2வது வருகையைக் குறிக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை (1 யோவா 2: 28). எருசலேமின் அழிவும் கிறிஸ்துவின் வருகை என்று சொல்லப்படுகிறது (கேள்வி 211, 212).

**505**. கடைசி 2 வாக்கியங்களைப்பற்றி என்ன தெரியும்?

இந்த இரண்டு வாக்கியங்களும் இந்தச் சுவிசேஷத்துக்கு அலாதியான குறிப்புகளடங்கியவைகளாம். இந்தச் சுவிசேஷம் பிரசித்தமாகு முன், இந்த வாக்கியங்கள் சுவிசேஷத்தோடே கூட்டப்பட்டன என்று தோன்றும்.

24ம் வாக்கியத்தின் நடையை 19: 35ஓடு ஒத்துப்பார்த்தால், 24ம் வாக்கியத்தைச் சுவிசேஷகன் எழுதவில்லை என்பது பிரத்தியக்ஷமாகும். இவ்விரண்டு வாக்கியங்களையும், எபேசுப் பட்டணத்து மூப்பர் எழுதிக் கூட்டினார்கள் என்று தோன்றும். அவர்களுக்குத்தான் இந்தச் சுவிசேஷம் வாய்மொழியாயும், எழுத்துமூலமாயும் ஒப்புவிக்கப்பட்டது. 24ல் "அறிந்திருக்கிறோம்" என்று பன்மையாயும், 25ல் "எண்ணுகிறேன்" என்று ஒருமையாயும் வருவது, எழுதினவர்கள் வெவ்வேறே பேர் என்று காட்டுகிறதே என்று சொல்வாருண்டு. ஆனால் பரி. யோவான் சொன்ன வார்த்தைகளையே (20: 30 ஒத்துப்பார்) ஷை மூப்பர் 25ல் எழுதியிருக்கக் கூடியதுதானே.

"இவைகளை" என்பது, இந்தச் சுவிசேஷத்தில் அடங்கிய எல்லாச் சங்கதிகளையுமாவது (20: 31), 21ம் அதிகாரத்துச் சங்கதிகளையாவது குறிக்கும். ஆமென் என்ற வார்த்தை மூலத்தில் இல்லை.

**506**. எருசலேமில் கர்த்தர் அளித்த மற்றக் காக்ஷிகளை எல்லாம் பரி. மத்தேயு எழுதாமல் விட்டுவிட்டதற்கு முகாந்தரமென்ன?

பரி. மத்தேயு இந்தச் சுவிசேஷத்தின் கடைசியில் வருகிற விசேஷமான விளம்பரத்தை எழுத முக்கிய நோக்கம்கொண்டவரானதால் மற்றவைகளை விட்டுவிட்டார்.

**507.** மத் 28: 9ல் கவனிக்கவேண்டிய 3 காரியங்களெவை?

(1) ஸ்திரீகள் கிட்டவந்தார்கள்.

(2) அவர்கள் அவருடைய பாதங்களைத் தழுவினார்கள். இதிலிருந்த தாழ்மைக்கும் பக்தியுள்ள அன்புக்கும் அடையாளமான செய்கையாம். தமது கால்களைத் தழுவிப் பிடிக்க கர்த்தர் இப்பொழுது இடங்கொடுத்தது முதல் விசையாம். கடைசி விசையும் இதுதான் என்று காணப்படும்.

(3) அவர்கள் அவரைப் பணிந்துகொண்டார்கள்.

28: 10. "சகோதரர்". கர்த்தருடைய சீஷருக்கு இந்த வார்த்தை முதல் விசையாக இந்த வாக்கியத்தில்தான் வழங்கியிருக்கிறது.

**508.** 28: 15. கவனிக்கவேண்டியதென்ன?

இந்தச் சங்கதி நடந்து (30) வருஷங்களுக்குப் பிற்பாடு இந்தச் சுவிசேஷம் இப்பொழுதிருக்கிறபடி எழுதப்பட்டது. கர்த்தருடைய சரீரம் கல்லறையில் இல்லாததற்கு, இந்த 30 வருஷக்காலங்களில் பிரதானஆசாரியர் வேறே முகாந்தரம் சொல்லக்கூடவில்லை.

கலிலேயாவில் காக்ஷியளித்தது (மத் 28: 16—20).

மத் 28: 16. மத்தேயு காலகுறிப்புச் சொல்லவில்லை. தோமா உணர்த்தப்பட்டபின் 8 நாளைக்கு அதிகமாய்ச் சீஷர் எருசலேமிலிருந்திருக்கிறார்கள். இயேசு குறித்திருந்த மலை அவர் முன்னமே பிரசங்கித்த மலையென்று தோன்றும். சீஷர் கலிலேயாவுக்கு வந்தவுடனே இந்தக் காக்ஷியளிக்கப்பட்டதென்பது சந்தேகம்.-பரி. யோவான் சொல்லுகிறபடி, அநேக சீஷர்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்பிவிட்டார்கள். சிலகாலம் தங்கள் சொந்த வேலையைப்பார்க்கவும் போயிருக்கிறார்கள். உத்தம பக்தர்களெல்லாரும் அழைக்கப்பட்டுக் கூடிவருகிறதற்குக் கொஞ்சக்காலம் பிடிக்கும். மும்முறை பேதுருவை உணர்த்தினது, இதற்குமுந்தி நடந்ததாகவும் தோன்றும். ஆகையால் கர்த்தர் பரமேறினதற்கு அநேக நாட்களுக்கு முந்தி இந்தப் பெருங்கூட்டம் கூடியிருக்கவேண்டும். இப்பொழுது அவர் கொடுத்த கட்டளை அங்கே கூடின எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டது.

28: 27. இங்கே கூடின எல்லாரும் கர்த்தரை இதுவரையும் கண்டதில்லை. இப்போது 500 பேருக்கு அதிகமான பேர் முதல் விசையாகக் கூடி அவரைக் கண்டார்கள்.



## II. நாளாகமம்.

(தொடர்ச்சி.)

தேவன் ஆகாசுக்குச் செய்த நன்மைகளை அவன் நினையாமல், தன் இருதயத்தைக் கடினப்படுத்தினதால் மறுபடியும் சத்துருக்களால் நெருக்கப்பட்டான். (1) ஏதோமியர் யூதாவை முறியடித்து அநேகரைச் சிறைப்பிடித்துப்போனார்கள். (2) பெலிஸ்தரும் தெற்கிலுள்ள பட்டணங்களைப் பிடித்து அங்கே குடியேறினார்கள். (3) அசூரியரும், வியாபாரப்பட்டணமாகிய ஏலோத்தையும் பிடித்துக்கொண்டார்கள். (4) தனக்கு உதவிக்கு வருவித்த அசூரின் இராஜாவாகிய திக்லாத்பிலேசரும், சாலொமோன் காலத்தில் ரேத்சீனால் ஆரம்பித்து, 10 தலைமுறைகளாய் அரசாளப்பட்டுவந்த சூரியா இராஜ்பதனை முடிவடையச்செய்து, யோர்தானுக்கப்பாலுள்ள இஸ்ரவேல் இராஜ்யத்தையும் அபகரித்து, எருசலேமை முற்றிக்கைபோட்டான். தேவாலயத்திலும், அரண்மனையிலும், பிரபுக்கள் கையிலும் ஒவ்வொரு பங்கெடுத்து அசூரியா இராஜாவுக்கு லஞ்சக்கம் கொடுத்தும் அவனுக்கு உதவியில்லை.

740ல் திக்லாத்பிலேசர் இஸ்ரவேலரில் அநேகரை முதலாவதாகச் சிறைபிடித்துப்போனான். ஆமோ. 1: 5. 5: 26, 27. 2 இரா. 16: 9. அப். 7: 43.

ஆகாஸ் இப்படி நெருக்கப்பட்டாலும், தமஸ்குவில் காணப்பட்ட பலிபீடத்து மாதிரிப்படி ஒன்றைச் செய்யும்படி பிரதானஆசாரியனாகிய உரியாவுக்குக் கட்டளை அனுப்பி, கர்த்தருடைய பலிபீடத்தை அப்புறப்படுத்தி, தமஸ்குவின் தெய்வங்களையும் அந்நிய ஜாதியாரின் தெய்வங்களையும் வணங்கி தனக்கு நாசத்தை வருவித்துக்கொண்டான்.

திக்லாத்பிலேசார் 19ஆம் ஆண்டபின் ஆகாசின் 14ம் வருஷத்தில் கி. மு. 729ல் தோபீத் ஆகமத்தில் எனிமேசர் என்றும், ஓசே. 40: 14ல் ஷால்மோன் என்றும் சொல்லப்பட்ட சல்மனேசர் இராஜனாகி, இஸ்ரவேல் இராஜ்யத்துக்கு ஓசேயாவைக் கப்பங்கட்டும்படி நியமித்து, எரோபெயாம் செய்த பொற்கன்றுக்குட்டியைப் பேத்தேலில் எடுத்து, இஸ்ரவேலில் அநேகரைச் சிறைபிடித்துப்போனான்.

கி. மு. 727ல் ஆகாஸ் தன் 36ம் வயதில் மரித்தான். துன்மார்க்கத்தினிமித்தம் அவனுக்கு முன்னிருந்த யோராம், யோவாஸ் இராஜாக்களைப் போலவும், அவனுக்குப் பின்னுள்ள மனாசே, ஆமோன் இராஜாக்களைப் போலவும் இராஜாக்களின் கல்லறைகளில் அவன் பிரேதத்தை அடக்கஞ்செய்யவில்லை. இது அவர்களுக்கு நிந்தையான காரியம்.

13 எசேக்கியா. (கர்த்தர் பெலனாயிருக்கிறார்.) கி. மு 726. 2 நாளா 29-32. 2 இரா. 18-20. ஏசா. 36-39 அதிகாரங்கள்.

எசேக்கியா 25 வயதில் இராஜாவாகி 29 வருஷம் அரசாண்டான். ஆகாஸ் வியாதியாயிருந்த காலத்தில் எசேக்கியா இராஜாங்க வேலையை நடத்தினாலும், தகப்பன் செய்த அருவருப்புகளை வெறுக்கவனாயிருந்து, அவன் மரித்தவுடனே, இராஜ்யத்திலும் மார்க்கவிஷயத்திலும் நல்ல சீர்திருத்தங்கள் செய்தான்.

கி. மு. 726ல் தகப்பன் அடைத்துப்போட்ட தேவாலயக் கதவுகளைத் திறந்து பழுதுபார்த்தான். லேவியரையும் ஆசாரியரையும் வருவித்து அவர்களுடைய கடமைகளைச் செய்யப் புத்திசொல்லி, தேவாலயத்தைச் சுத்திகரிக்கச்செய்தார். இவர்கள் நீசான்மாதம் முதல் தெய்திமுதல் 16ம் தெய்திவரையும் ஆகாஸ் இராஜாவாலுண்டான சகல விக்கிரகங்களையும், பலிபீடங்களையும் அப்புறப்படுத்தி சுத்திகரித்தபின்பு, எசேக்கியா இராஜா, லேவி. 4: 13, 14ல் ஜனங்களுடைய அறியாமையால் செய்த பாவத்துக்கு ஒரு காளையைப் பாவநிவாரணப் பலிக்குப் பலிசெலுத்தவேண்டியிருக்க, இங்கே இராஜாவும் ஜனங்களுமாய்ச் செய்த அநேக பாவங்களுக்காக (7) காளைகளையும் இராஜாவுக்காகவும், தேவாலய அசுத்தங்களுக்காகவும், ஜனங்களுக்காகவும் பாவம்போக்கும் பலியும், சமாதான பலியும் செலுத்தினர். இராஜாவும் ஜனங்களும், முந்தின அரசாட்சியின் பாவங்களுக்காகத் துக்கப்படுவதும் போதாது. சீர்திருத்தம் அடைவதும் போதாது. நமக்குப் பாவப்பலியாயிருக்கிற கிறிஸ்து இரக்ஷகரால் பாவமன்னிப்பு அடையவேண்டியது அவசியம். ஒரு ஆட்டுக்கிடாய்க்குப் பதிலாக அவர்களுடைய பாவத்திரட்சியினிமித்தம், 7 கிடாய்களைப் பாவநிவாரணப்பலிகளாகச் செலுத்தினார்கள். லேவி. 16: 15. எண். 15: 24 சர்வாங்கதகனப் பலிக்கும் 7 காளைகளைச் செலுத்தினார்கள். தங்களை முழுவதும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறோமென்றுகாட்ட இந்தப் பலியைச் செலுத்தினார்கள். பலிகள் செலுத்தப்படும்போது, தாவீது, ஆகாப் முதலானவர்கள் பாடிவைத்த பாடல்களை லேவியர் பாடினார்கள் 1 நாளா. 23: 5. 25: 1. 32: 12. ஆசாரியரிலும் லேவியர் இந்த விஷயத்தில் வைராக்கியரானதால் (லேவி. 1: 5, 6.) சட்டத்துக்கு விரோதமாய் அவசியத்துக்குத்தக்கபடி, லேவியர் பலிகளுக்கடுத்த விஷயத்தில் உதவிசெய்தார்கள். தடைப்பாரின்றி சடுதியாயும், உற்சாகமாயும், விசுவாசத்தோடும், நல்ல உடன்படிக்கையோடும், பலிகள் செலுத்தப்பட்டதால் இராஜாவும் ஜனங்களும் சந்தோஷப்பட்டார்கள்.

நீசான் மாதம் 14உ பஸ்கா ஆசரிக்கவேண்டியதிருக்க தேவாலயமும், ஆசாரியரும், ஜனங்களும் சுத்திகரிக்கப்படாததாலும், எருசலேமுக்கு ஜனங்கள் கூடிவரக் காலமில்லாததாலும், 2 நாளா. 30: 3 நியாயப்பிரமாணத்தின்படியே 2ம் மாதம் 14உ பஸ்காவை ஆசரிக்கும்படி எசேக்கியா திட்டஞ்செய்தார். (எண். 9: 10, 11.) மனாசே எப்பிராயீம் முதலிய 10 கோத்திரத்திலுள்ளவர்களும் அழைக்கப்பட்டார்கள். ஓசேயாவும் இஸ்ரவேல் இராஜாக்களுக்குரிய முறைப்படி தடுக்கவுமில்லை 2 இராஜா 17: 2. ஏராளமான கூட்டமாய்ச் சாலொமோன் காலத்துக்குப்பின கெம்பீரமாய் 7 நாளுக்குப் பதிலாக 14 நாள் ஆசரித்தார்கள். பஸ்காவை ஆசரிக்குமுன்னும் பின்னும் விக்கிரகங்களை உடைத்து, மெய்த்தேவனைப் பற்றிக்கொண்டவர்களாகக் காட்டினார்கள். சபையில் அநேகர், சடங்காசாரப்படி தீட்டுள்ளவர்களாயும், இஸ்ரவேலிலிருந்து வந்தவர்கள் உண்மையோடும் விசுவாசத்தோடும் பண்டிகை ஆசரியாதவர்களுமாயிருந்ததினாலே அவர்களுக்காக எசேக்கியா மன்றாடினார். 30: 18, 19, 20. புளிப்பில்லாத அப்பப்பண்டிகை ஆசரிக்கப்பட்டபோது, சமாதானப் பலிகள் ஏராளமாய்ச் செலுத்தப்பட்டன. நல்ல ஜெபங்களும் துதிகளும் தேவனுக்குச் செலுத்தப்பட்டன. லேவியரும் (உபா. 33: 10.) தங்கள் கடமைப்படி ஜனங்களுக்குக் கர்த்தரை அறியும் அறிவைப் போதித்தார்கள். எல்லாரும் சந்தோஷமாய்ப் பண்டிகை ஆசரித்தார்கள். கடைசியாக



லேவியரான ஆசாரியர் ஜனங்களை ஆசீர்வதித்து அனுப்பிவிட்டார்கள். எண். 6: 22, 23.

மோசே வனாந்தரத்தில் நிறுத்தியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை ஜனங்கள் வணங்கினார்கள். எசேக்கியா அதை உடைத்து நிகுஸ்தான் அல்லது வெண்கலத் துண்டென்றான். ஒரு கலச மன்னாவும் ஆரோனுடைய கோலும் எப்படி தேவதயவுக்குரிய அற்புதத்துக்கு அடையாளமாயிருந்ததோ, வெண்கல சர்ப்பமும் அப்படிப்பட்டதுதான். 2 இரா. 18: 4. காரியமிப்படியிருக்க அந்த வெண்கல சர்ப்பம் மிலானில் அம்புரோஸ் கோவிலில் வைக்கப்பட்டிருப்பதாக பாப்புமார்க்கத்தார் தங்கள் மார்க்கத்தாரை வஞ்சிக்கிறார்கள்.

2 இரா. 17: 4ல் சொல்லப்பட்ட சோ என்பவனே எகிப்தை ஜெயித்து அதின் இராஜாவாகிய போக்காரீஸ் என்பவனைச் சிறைபடுத்தி உயிரோடே சுட்டெரிக்கச்செய்த எத்தியோப்பியனாகிய (Sabacon) சபாக்கோன். இஸ்ரவேலின் இராஜாவாகிய ஓசேயா அசூரியாவின் நுகத்தடியை உதறிப்போட்டு, சல்மனேசரோடே செய்த உடன்படிக்கையை மீறி எகிப்தின் இராஜாவோடே உறவாடினதால் சல்மனேசர் சமாரியாவுக்கு விரோதமாய் எசேக்கியாவின் 4ம் வருஷத்தில் வந்து (3) வருஷ முற்றிக்கைபோட்டு கி. மு. 721ல் அநேகரைச் சிறைபிடித்து திக்லாத்பிலேசர் முந்திக் குடியேற்றின மேதியா தேசத்தின் ஆவா, ஆபோரின் பட்டணங்களில் குடியேற்றுவித்தான். 2 இரா. 18 அதி. இந்தச் சிறையிருப்பில்தான் நப்தலி கோத்திரத்தில் திஸ்பி பட்டணத்தானாகிய தோபீத்தும் அவன் பெண்சாதி அன்னாளும் அவன் மகன் தோபியாவும் அசூரியாவுக்குச் சிறைபட்டுப்போனார்கள். இக்காலத்தில்தான் மோவாபியரை ஜெயித்து அதின் (2) பட்டணங்களைப் பிடித்து அரசாக்கினான். ஏசா. 15: 16. இந்தக் காலத்தில்தான் மெரோதாக் பாலாதான் பாபிலோனுக்கு இராஜனானான். ஏசா. 39: 1.

சல்மனேசர் சமாரியாவை முற்றிக்கைபோட்டிருக்குங் காலத்தில் எசேக்கியா, தன் தகப்பன் காலத்தில் பெலிஸ்தர் பறித்துக்கொண்ட யூதாவின் பட்டணங்களைத் திரும்பக் கட்டிக்கொண்டு 2 இரா. 18: 8. பெலிஸ்தரை தாழ்த்திப்போட்டான்.

கி. மு. 720. எசேக்கியாவின் 8ம் வருஷத்தில் சல்மனேசர் ஆகாஸ் செய்த உடன்படிக்கையின்படி எசேக்கியாவிடத்தில் கப்பங்கேட்டனுப்பினான். எசேக்கியா தேவன்மேல் நம்பிக்கை வைத்துக்கொண்டு கப்பங்கொடுக்கவில்லை. 2 இரா. 18: 7. அவன் தீரியரோடே சண்டைசெய்வதில் தலையிட்டதால் எசேக்கியாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்துவரத் தடைப்பட்டான்.

எசேக்கியாவின் 9ம் வருஷத்தில் எகிப்தின் இராஜா சாபாக்கோன் மரித்தான். சல்மனேசர் 14வரு ஆண்டபின் கி. மு. 714ல் மரிக்க எசேக்கியாவின் 14ம் வருஷத்தில் சனகேரிப் வந்து (8) வருஷமாண்டான். இவனுக்கு சார்கோன் என்றும் பேர். (ஏசா. 20: 1.) சனகெரிப் எசேக்கியாவிடத்தில் பகுதிகேட்டனுப்ப, எசேக்கியா மறுத்ததால் (2 நாளா. 18. 2 நாளா. 32.) யுத்தத்துக்கு எழும்பிவந்தான்.

கி. பி. 714ல் எசேக்கியாவின் 14ம் வருஷத்தில் மரணத்துக்கேதுவான வியாதியால் வருத்தப்பட்டபோது, ஜெபத்தினால் 15வரு ஆயுளோடிருக்கக் கிருபைபெற்றார். 2 இரா. 20 அதி. 2 நாளா. 32, 24. ஏசா. 38 அதி. இவருடைய அதிசயமான விடுதலையினாலும், பாபிலோனிலுள்ள

சூரிய கடியாரத்தில் காணப்பட்ட மாறுதலுக்குக் காரணமின்னதென்று அறியவும் சனகெரிப்போடே சண்டைசெய்வதற்குக் கூட்டாளியாயிருக்கவும் நோக்கமாகத் தானாபதிகளை பாலாதான் அனுப்பினான். எசா. 39 அதி. சனகெரிப் எசேக்கியாவின் 14ம் வருஷத்துக் கடைசியிலே யூதாவின் அரணான பட்டணங்களுக்கு விரோதமாய் வந்தான். 2 நாளா. 32: 1. தேவன் அவனுடைய மார்க்கசீர்திருத்தத்தையும், தேவவைராக்கியத்தையும் பார்த்திருந்தும் இன்னும் துன்ப துயரங்களினால் அவரைப் பரிக்ஷிக்கவும், அவரைத் தாழ்த்தி கனஞ்செய்யும்படிக்கு தேவன் சித்தமானார். 2 இரா. 18: 13. தமது ஜனங்களின பாவங்களுக்குத் தண்டிக்கவும், தமக்கு மகிமையுண்டாக்கவும், சனகெரிப்பின் பெருமையினால் அவனுக்கு அழிவுண்டாக்கவும் சித்தங்கொண்டு, தேவன் துவக்கத்தில் அவனுக்கு ஜெயம் கொடுத்தார். லாகீஸ் பட்டணத்தை முற்றிக்கைபோட்டிருக்கையில் எசேக்கியாதன்னைக் காபந்துசெய்வதற்குரிய எல்லா முயற்சிகளையும் செய்தான். 2 நாளா. 32: 3—8. யோவகாஸ் இடித்த மதிலைக் கட்டினான். (25: 22.) இதோடே எகிப்தின் இராஜாவின் ஒத்தாசையையும் தேடினான். அதற்காகக் கண்டிக்கப்பட்டான். (எசா. 30: 31.) தேவனை நம்பியிருக்கவும் புத்திசொன்னான்.

சனகெரிப் எசேக்கியா செய்த ஆயத்தங்களையெல்லாம் கேள்விப்பட்டு, பலமுள்ள பட்டணத்தைப் பிடிப்பது வருத்தமென்று யோசித்து சமாதானத்துக்கு எசேக்கியா அனுப்பின 300 தாலந்து வெள்ளியையும் 30 தாலந்து பொன்னையும் (135090+216000=351000 ரூபாய்க்கு மேலானது.) வெகுமானமாக வாங்கிக்கொண்டு வழக்கமான கப்பஞ்செலுத்துவேனென்ற உடன்படிக்கைசெய்துகொண்டான். சனகெரிப் பணம்பெற்றபின்பு தன் உடன்படிக்கையை மீறி, எருசலேமுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய ஆரம்பித்து தன் படைத்தலைவரில் தர்த்தான், ரப்சாரீஸ், ரப்ஷாக்கே என்பவர்களை, பெருமையும் நிந்தையும் தூஷணமுமான வார்த்தைகளைப் பேச முன்னாடி அனுப்பினான். 2 இரா. 18: 17—28. 2 நாளா. 32: 9, 10. எசா. 36: 4, 5. இது கி. மு. 710ல் எசேக்கியாவின் 18ம் வருஷத்தில் நடந்தது. எலியாக்கீம் (எசா. 22: 20) முதலான எசேக்கியாவின் தானாபதிகளுக்கும் ஜனங்கள் கேட்கும்படி எபிரேய பாஷையிலே யூதமார்க்கத்தைவிட்டுப்போன ரப்சாக்கே வீம்பான வார்த்தைகள் பேசினான். இப்படிப் பேசினவன் சிறைப்பட்டுப்போன இஸ்ரவேலனாயிருக்கலாம்.—உத்தியோக முறையில் ரப்சாக்கே, இராஜாவின் பானம் வார்க்கிற தலைவனாம். இவர்கள் திரும்ப சனகெரிப்பண்டைக்குப் போகையில் அவன் லாகீசை முற்றிக்கைபோட்டிருப்பதைவிட்டு லீப்னாவுக்கு விரோதமாய்ப்போய் அங்கிருந்து எசா. 18, 20 அதிகாரங்களில் எகிப்துக்கும் எத்தியோப்பியாவுக்கும் விரோதமாய்ச் சொல்லிய தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி சனகெரிப் எத்தியோப்பியரை ஜெயித்து திரும்பவும் எசேக்கியாவுக்கு நிந்தையான ஒரு நிருபம் அனுப்ப எசா. 37 அதி. 2 இரா. 19 அதி. 2 நாளா. 32 அதி. தேவன் எசேக்கியாவின் ஜெபத்தைக்கேட்டு, அசூரியரின் பாளையத்தில் 185000 பேரைச் சங்கரிக்கவே, சனகெரிப் பயந்து நினிவேக்கு ஓடிப்போய் வெட்கமாகவும், கனவீனமாயுமிருந்து செத்தான். இந்தக் காலத்துக்குப்பின் எசேக்கியா (7) வருஷம் சமாதானமாயும், செல்வமாயும், கனமாயுமிருந்து, தேவதயவும் மனிததயவும் பெற்று வாழ்ந்தான்.

எசேக்கியாவுக்கு வந்த வியாதி அவருடைய 14ம் வருஷ ஆளுகையில் சனகெரிப்பின் சேனை அழிவதற்குமுன் சம்பவித்தது. 2 இராஜா 20: 6ல் அசூரியாவின் அழிவுவருங் காரியமாய்ச் சொல்லியிருக்கிறது.—(2) அவர் 29வருஷம் ஆண்டிருப்பதால் முன்னாடியே சம்பவித்த காரியம்—(3) ரப்சாக்கே நிந்தித்தபோது எசேக்கியா சுகமுள்ளவர். தேவாலயத்தில் போய் ஜெபித்தார். 2 இரா. 19: 14. வீட்டிலும், இராஜாங்கத்திலுமுள்ள காரியங்களைத் திட்டம்பண்ண இராஜாவுக்கு உத்தரவு பிறந்தது. பட்டத்துக்கு குமாரன் இன்னும் பிறக்கவில்லை. மனாசே இதற்கு 3 வருஷத்துக்குப்பிற்பாடு பிறந்தான். 2 இரா. 20: 6. 21: 1 ஒத்துப்பார். தான் பெற்ற சுகத்துக்காக தோத்திரம்பாடினார். 38: 9, 20.

கி. மு. 712ல் மெரோதாக்பாலதான் அனுப்பின தானாபதிகளிடத்தில் பெருமையினால் தேவனுக்குக் கனம்தேடாமல் தன் ஆஸ்தியைக் காண்பித்ததற்கு தண்டனையாக சாபம் கூறப்பட்டது. 2 இரா. 20: 17, 18. பாபிலோனை நம்பி, அவனோடே சமாதான உடன்படிக்கைபண்ணினதற்கும் தண்டனை வந்தது. அது யோயாக்கீமின் காலத்தில் நிறைவேறிற்று. தானி. 1: 2.

எசேக்கியாவின் 19ம் வருஷத்தில் சனகெரிப் தன் சேனை இறந்துபோனதால் வெறிகொண்டு நினிவேக்குப்போய் யூதரையும் இஸ்ரவேலரையும் கொடுமையாய் நடத்தி அவர்களில் சிலரைக் கொன்று வீதிகளில் எறிந்துவிட்டான். தனக்கு ஜெயமும் வாழ்வுங் கிடைக்கும்படி தன் மூத்த மக்களிருவரையும் தன் தேவனுக்கு நரபலியிடுவதாக நேர்ந்துகொண்டதை அறிந்து அவர்களிருவரும் அவனைக் கொன்றுபோட்டார்களாம். எசர்காதோன் கி. மு. 706ல் எசேக்கியாவின் 22ம் வருஷத்தில் பட்டத்துக்கு வந்தான்.

எசேக்கியா கி. மு. 699ல் 29 வருஷம் ஆண்டபின்பு மரித்து வெகு கனமாய் இராஜாக்களின் கல்லறையில் அடக்கஞ்செய்யப்பட்டான். 2 நாளா. 32: 23. எசேக்கியா சேர்த்த நீதிமொழிகள் 25—29 அதி. சங். 42—72.

## கேள்விகள்.

1. ஆகாஸ் இராஜா செய்த அக்கிரமங்களும் அதினால் அவனுக்கு வந்த தண்டனையுமென்ன?

2. எசேக்கியாவுடைய புத்தியுள்ள செய்கைகளென்ன? எந்தெந்த சமயங்களில் எப்படி ஜெபித்தார்? அவருடைய ஜெபம் எப்படிக் கேட்கப்பட்டது.

2. ஆகாஸ் எசேக்கியா காலங்களில் எசாயா தீர்க்கதரிசி உரைத்த தீர்க்கதரிசனங்களெவை? அவைகளில் உடனே நிறைவேறினதெவை?

4. உரியா, எலியாக்கீம், ரப்சாக்கே, செப்னா, தர்த்தான் இவர்களைப் பற்றித் தெரிந்ததை எழுதும்.

5. அசூரின் இராஜாக்களில் திக்லாத்பிலேசா, சல்மனேசர், சனகெரிப், எசர்காதோன் இவர்கள் நடப்பித்த செய்கைகள் எவை?

## 14. மனாசே. (மறக்கிறவன். ஆதி. 41: 51.) கி. மு. 798.

மனாசே 12 வயதில் இராஜாவாகி 55 வருஷம் அரசாண்டான். 2 நாளா. 33. இவன் மகா துன்மார்க்கனும், பொல்லாதவனுமானவன். எசேக்கியாவுடைய மார்க்கசீர்திருத்தத்தைப்பற்றி வெறுப்படைந்த பிர

புக்களும் மனாசேயை ஆதரித்தவர்களும் எல்லாவகை அவபக்திகளையும் கொடுமைகளையும், அக்கிரமங்களையும் நடப்பித்தார்கள். ஆகாசுடைய விக்கிரகாராதனையைப் பார்க்கிலும் மனாசே மிஞ்சிய வகையாய் நடந்தான். ஆகாஸ் தேவாலயத்தை அடைத்தான். இவனோ அதை விக்கிரகங்களால் நிரப்பினான். அநேக கொலைபாதகங்களும் நடந்தன. இவனைக் கண்டிக்கும்படி அனுப்பப்பட்ட ஏசாயாவை வாளால் அறுத்தான். எபி. 11: 37ல் சொல்லிய துன்பங்களும் இக்காலத்தில் நடந்தன. அதினிமித்தம் தேவன் தமது தீர்க்கதரிசியைக்கொண்டு எருசலேமை அழித்துப்போடுவதாகச் சபித்தார். 2 இரா. 21: 13. ஏசா. 34: 11. ஆமோ. 7: 7, 8. தேவனுக்குக் கோபம் அதிகமாயிருக்கும்படிக்கு மனாசேயின் பாவங்கள் மிச்சமாயிற்று. 2 இரா. 23: 26. 24: 3.

கி. மு. 680. மனாசேயின் 19ம் வருஷத்தில் எஸ்றா 4: 10ல் அஸ்நாப்பார் என்று சொல்லப்பட்ட எசர்காதோன் பாபிலோனைத் திரும்பப் பிடித்து 13௵ ஆண்டான். கி. மு. 677ல் மனாசேயின் 22ம் வருஷத்தில் எசர்காதோன் பெலன் அடைந்து தன் தகப்பன் காலத்தில் இழந்துபோன தேசங்களைத் திரும்பக் கட்டிக்கொள்ளும்படிக்கு சேனையுடன் வந்து, ஏசா. 7: 8ல் சமாரியாவைப்பற்றிச் சொல்லிய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றவே, எப்பிராயீம் 65 வருஷத்துக்குள் ஜனமாயிராது என்ற வசனம் முற்றுப் பெற்றது.-அங்குள்ள ஜனங்களைச் சிறையாகக்கொண்டுபோனதால் தேசம் பாழாகாதபடிக்கு பாபிலோன், கூத்சா, ஆவா, ஆமாத், செப்பர்வாயீம் தேசங்களிலிருந்து ஜனங்களை சமாரியாவில் குடியேற்றினான். 2 இரா. 17: 24. எஸ். 4: 2, 10. இப்படியாகப் பிரிந்துபோன இஸ்ரவேல் இராஜ்யம் முற்றிலும் அழிந்தது.

கி. மு. 677ல் எசர்காதோன் ஒரு சேனையை மனாசேக்கு விரோதமாய் அனுப்பும்போது அவன் முன் இஸ்ரவேலர் 1 சாமு. 13: 6ல் செய்ததுபோல அசூரியருக்குப் பயந்து முட்செடியில் ஒளித்திருக்கும்போது, அவனைப் பிடித்து விலங்கிட்டு, சமாரியாவிலிருந்த இராஜன் அண்டைக்குக் கொண்டுபோக அவனைப் பாபிலோனுக்கு அனுப்புவித்தான். இப்படி அங்கே நெருக்கப்படுகையில் தன் பாவங்களை நினைத்து தன்னைத் தாழ்த்தி, தேவனை நோக்கி ஜெபம்பண்ண, தேவன் எசர்காதோனுக்கு நல்ல மனதைக்கொடுத்து அவனை விடுவித்துத் திரும்பவும் தன் இராஜ்யத்துக்குத் திரும்பவரப்பண்ணினார். 2 நாளா. 33: 11–14. திரும்பிவந்தபின்பு சகல விக்கிரகாராதனையையும் அழித்து, தன் தகப்பன் காலத்திலிருந்தபடி மார்க்கசீர்திருத்தல்செய்து கர்த்தரைச் சேவித்தான்.

இந்தக் காலத்தில்தான் ஏசா. 22: 15—25. செப்னா தாழ்த்தப்படவும் எலியாக்கீம் உயர்த்தப்படவும் சொல்லிய தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மனாசே பாவஞ்செய்யும்படிக்கு பிரதான மந்திரியாகிய செப்னாவும் துணையாயிருந்ததினால் அவனும் மனாசேயோடே சிறையாக்கப்பட்டு, மீட்கப்படாமல் பாபிலோனில் சாகுமட்டும் இருந்தான். (ஏசா. 22: 17, 18) மனாசே திரும்பிவந்தபின் அவனுடைய கனமான உத்தியோகத்தை எலியாக்கீமுக்குக் கொடுத்தான். இவன் ஞானமும் பக்தியுமுள்ளவனானதால் ஜனங்களுக்கு நன்மையும் வாழ்வுமுண்டாக நன்றாய்ச் சீர்திருத்தஞ்செய்தார். ஆகையால் அவர் எருசலேமின் குடிகளுக்குப் பிதா (ஏசா. 20: 21) என்னப்படத்தக்கவர். ஓர்வேளை இவர் பிரதான ஆசாரியனாயுமிருக்கலாம். யூதித் ஆகமத்தில் யோயாக்கீம் அல்லது எலியாக்கீம் இக்காலத்தில் பிரதான ஆசாரியனென்று சொல்லியிருக்கிறது. மனாசே திரும்பிவந்தபின்பு,



உடன்படிக்கையின்பேரில் இஸ்ரவேல் இராஜ்யமும் அவனுக்குக் கிடைத்திருக்கலாம். இதினால்தான் பின்பு யோசியா அங்கெல்லாம் சீர்ப்பாடுகள் செய்தார்.

மனாசேயின் 44ம் வருஷத்தில் கி. மு. 655 மேதியா அரசனாகிய அர்பகசாத்து தன் படைத்தலைவனாகிய (Holofernes) ஒலோபர்னீஸ் என்பவனை 120,000 காலாட்களோடும், 12000 குதிரைப்படையோடும் மேல்திசைக்கு அனுப்ப, அவன் யூதேயாவைச்சேர்ந்த பெத்தூலியா பட்டணத்தை முற்றிக்கைபோட்டிருக்கையில் கொல்லப்பட்டான். யூதித். 1 அதி. மனாசே இறந்தபோது அவன் செய்த பாவங்களினிமித்தம் இராஜாக்களின் கல்லறையிலல்ல அவன் தோட்டத்தில் அடக்கஞ்செய்யப்பட்டான்.

---

1885௵ ஜூலாய்மீ 14உ மகாகனம்பொருந்திய டாக்டர் சார்ஜென்று அத்தியக்ஷரவர்களுடைய திவ்வியபணிவிடை யூபிலி உற்சவம்கொண்டாடினபோது வாசிக்கப்பட்ட

## திருநெல்வேலிச் சபையின் விர்த்தாந்தம்.

(தொடர்ச்சி.)

நம்முடைய அத்தியக்ஷரவர்கள் திருநெல்வேலிக்குத் திரும்பிவந்தபோது, அவர்கள் சுவிசேஷபுரம் சேகரத்தை ஒப்புக்கொண்டு 1850௵ வரையும் அந்த இடங்களிலுள்ள இளந்தைச் சபையை ஏறக்கட்டும்படி அரும்பிரயாசப்பட்டார்கள். பின்பு பாளையங்கோட்டைக்கு வந்து அந்தச் சேகரத்தை விசாரித்துவந்ததுடன், பல சேகரங்களிலுமிருந்து குருப்பட்டத்திற்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்குப் படிப்பித்தார்கள். அவர்களால் படிப்பிக்கப்பட்டவர்களில் ஐந்துபேர் பட்டாபிஷேகம்பெற்றார்கள்.

1848௵ கனம் கிளார்க்கு ஐயரவர்கள் திருநெல்வேலிக்கு வந்து 20 வருஷம் பரிசுத்த கடமையைச் சுறுசுறுப்போடே நிறைவேற்றினபின்பு இலங்கைக்கு மாற்றப்பட்டார்கள்.

1852௵ பாளையங்கோட்டையில் வேதவித்தியாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. நமது அத்தியக்ஷரவர்கள் இருபத்தைந்து வருஷகாலமாய் அதற்கு முதலாளியாயிருந்து, சர்ச்சுமிஷியோனைச் சேர்ந்த திருநெல்வேலிச் சபையில் இப்பொழுது வைதிக உத்தியோகம்செய்துவருகிறவர்களை அந்தப் பணிவிடைக்கென்று வளர்த்துவந்தார்கள். சிறந்தோங்கி வளர்ந்துவந்த அந்தக் கல்விச்சாலையில் ஏறக்குறைய 500 வாலிபர் சுயபாஷையிலே வேதசாஸ்திரம் கற்றுத் தேறி வெளியேறியிருக்கிறார்கள். நமது அத்தியக்ஷரவர்கள் நாடோறும் வகுப்பில் படிப்பித்ததுடன், மாணாக்கருக்கு உபயோகமாக உபதேசங்களுக்கும் வியாக்கியானங்களுக்கும் வேத உதாரணங்களுக்கும் அடுத்த புஸ்தகங்களையும் தத்துவசாஸ்திரத்தையும் எழுதிப் பிரசித்தம்செய்திருக்கிறார்கள். இந்த எல்லாக் கிரியைகளோடும், ஆவியானவரால் நடத்தப்பட்டாலொழிய தெய்வீக பணிவிடையை ஒருவரும் செம்மையாய்ச் செய்யக்கூடாதென்று அவர்கள் உணர்ந்து, மாணாக்கன்யாருடைய குணப்படுதலையும் ஆத்தும வளர்ச்சியையுங் குறித்து அதிகக்

கவலையோடே முயற்சிசெய்துகொண்டு வந்தார்கள். அவர்கள் மாணாக்கன்மாரை ஞானமாயும் பட்சமாயும் அநுதாபமாயும் நடத்திக்கொண்டுவந்த விதத்தை அவர்களில் அநேகர் கனிவோடே அருமையாக மதித்துத் தங்கள்பேரில் அவர்கள் பாராட்டின உத்தம பட்சத்தை இந்நாள்பரியந்தம் நன்றியறிதலோடே நினைத்தும் சொல்லியும் வருகிறார்கள். அவர்களில் அநேகர் குருப்பட்டம்பெற்று, இந்த நாட்டிலும், இலங்கை, சென்னபட்டணம், கள்ளிக்கோட்டை, தெலுங்கு நாட்டிலும் உத்தியோகஞ்செய்துவருகிறார்கள். அநேகர் இந்துதேசத்தின் பல பாகங்களிலும் உபதேசிமாராயும் உபாத்திமாராயும் உத்தியோகம் நடப்பித்துவருகிறார்கள்.

1854௵ வடதிருநெல்வேலியில் கனம் ரேக்லான்று ஐயரவர்கள் தேசாந்தரப் பிரசங்கம்செய்யத் துவக்கினார்கள். கனம் பென் ஐயரவர்களும், கனம் மெடோஸ் ஐயரவர்களும், கனம் எவ்வரி ஐயரவர்களும், கனம் பேரன்புருக் ஐயரவர்களும், மூன்று சுதேச சகோதரரும் அவர்களுக்கு உதவிசெய்தார்கள். அவர்கள் 7 வருஷம் பரிசுத்த பணிவிடையை உண்மையோடே நிறைவேற்றிவருகையில், அருமையும் பிரயாசமுமான அவ்வேலையின் மத்தியிலிருந்து 1858௵ அக்டோபர்௴ திடீரென பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள்.

கனம் ஜேம்ஸ் ஸ்பிராற் ஐயரவர்கள் மெஞ்ஞானபுரம், சுவிசேஷபுரம், பாளையங்கோட்டை சேகரங்களில் மிகத்திறமையோடும் சுறுசுறுப்போடும் பரிசுத்த பணிவிடைகளை நிறைவேற்றி நீதியின் கிரீடத்தைப் பெறும்படி 1854௵ பரலோகத்திற்கு அழைத்துக்கொள்ளப்பட்டார்கள்.

1855௵ கனம் டிப் ஐயரவர்கள் திருநெல்வேலிக்கு வந்து, பன்றிகுளம், டோனாவூர், பாளையங்கோட்டை, மெஞ்ஞானபுரம் சேகரங்களில் தைரியத்தோடும் உண்மையோடும் 21 வருஷம் உழைத்து வியாதியாய்ச் சுயதேசம்போய்ச் சேர்ந்த இரண்டாம்நாளில் மறுமைக்குள் மறைந்தார்கள்.

1856௵ திரோணிங் கல்விச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. அது ஏற்படுத்தப்பட்ட விசேஷித்த நோக்கத்திற்கிசைவாய்ச் செழித்தோங்கிக்கொண்டு வருகிறது. திருநெல்வேலி கிராமப்பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கிற முதல்தரமான உபாத்திமார் இந்தக் கல்விச்சாலையில் படித்துத் தேறினவர்களாயிருக்கிறார்கள்.

1859௵ ஆறு சுதேசிகள் உதவி மிஷனெரிகளாகக் குருப்பட்டம் பெற்றார்கள். 1860௵ சாராள்றக்கர் கல்விச்சாலை பெண்பிள்ளைகளை உபாத்திச்சி அலுவலுக்காக பயிற்றுவதற்காக ஸ்தாபிக்கப்பட்டது. அது கனம் லாஷ் ஐயரவர்கள் காலத்தில் மிகவும் முன்னுக்கு வந்ததுடன் தற்காலத்திலும் அப்படியே செழித்தோங்கி வருகிறது. அந்த வருஷத்திலே இந்நாட்டில் விசேஷித்த ஆவியின் எழுப்புதலும் உண்டாயிற்று.

1861௵ சுவிசேஷபுரம் சேகரத்தை விசாரித்துவந்த கனம் சாப்பிட்டர் ஐயரவர்கள் தங்கள் ஜீவஓட்டத்தை முடித்தார்கள். அவர்கள் திருநெல்வேலி சபையில் 34௵ உழைத்தவர்கள். பிதாவடைவான பட்சமுள்ள அவர்களுடைய குணம் இந்நாளிலும் நன்றியறிதலோடே நன்கு மதிக்கப்பட்டும் நினைவுகூறப்பட்டும் வருகிறது.

1866௵ முதலாவதாக மூன்று சுதேச பாஸ்ற்றர்மார்கள் குருப்பட்டம்பெற்றார்கள். அதற்கப்பால் பின்னும் அநேகர், அந்த வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 1869௵ ஆலோசனைச் சங்கம் நம்முடைய எட்டுச் சேகரங்களிலும் ஏற்படுத்தப்பட்டது. இப்போது அந்தந்தச் சேகரத்தார் அவரவர் தங்கள் காரியங்களைச் சிரத்தையோடே நடத்திக்கொண்டு வரு



கிறார்கள். 1874௵ டிசம்பர்௴ 10௳ முதலாவதாக ஜில்லா ஆலோசனைச் சங்கம் கூட்டப்பட்டது. அதிலே மிஷியோனுக்குரிய சாதாரண விஷயங்கள் பேசப்பட்டும் தீர்மானிக்கப்பட்டும் வருகின்றன.

1877௵ மார்ச்சு௴ 11௳ நமது அருமையான அத்தியக்ஷரவர்கள் கண்காணிப்பு பட்டாபிஷேகம்பெற்றார்கள். அது திருநெல்வேலிச் சபையின் சரித்திரத்தில், ஒரு புது காலாவதியாக இருக்கிறது. நமது அத்தியக்ஷரவர்கள் 1835௵ முதல் 1885௵வரையும் சபையின் ஆரம்பம், விர்த்தி, செழிமைமுதலியவற்றைக் காணும்படியான சலாக்கியத்தைப் பெற்றிருப்பதால், தற்காலத்திலே அவர்கள் சர்ச்சுமிஷியோன் திருநெல்வேலிச் சபைக்குப் பிதாவாயிருக்கிறார்கள் என்று சொல்வதற்கு ஐயமில்லை. அவர்கள் நம்முடைய அத்தியக்ஷரவர்களாய் இப்போது நம்மோடேகூட இருப்பதால், அவர்களுடைய நீண்ட அநுபவ சித்தியையும், முதிர்ந்த ஞானத்தையும், காரியங்களைத் திட்டவட்டமாய்க் கிரமப்படுத்தி நிர்வகித்து ஆளும் திறமையும், முக்கியமாய் நாமெல்லாரும் அவர்களை நேசிக்கும்படி அவர்கள் நடந்துவந்திருக்கிற பக்திக்குரிய அன்பான மேன்மையையுங் குறித்து, அவர்கள் சமுகத்துக்கு முன்பாக எடுத்துக்காட்டுவது தகுதியல்லவென்று விட்டுவிடுகிறேன்.

நாம் இப்போது மிஷனெரிமார் நடப்பித்த கிரியைகளினால் உண்டான பயனைக்குறித்துச் சுருக்கமாய்ப் பார்ப்போமாக. அந்தப் பலன் மிகுதியாகவே இருக்கிறது. வெளிப்படையாயிருக்கிற வைதீக நன்மைகளும் பயன்களாக அல்லாமல், பற்பல திரளான இதர லௌகீக நன்மைகளும் நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த இடங்களைப் பார்க்கும்படி வருகிறயாவரும் அதைப் பிரத்தியட்சமாய்க் கண்டு வியந்திருக்கிறார்கள். சுவிசேஷமார்க்கத்தை அங்கிகரித்திருக்கிற யாவரும், சன்மார்க்கத்தில் விர்த்தியடைந்துவருவதால், துன்மார்க்கங்கள் படிப்படியாய்க் குறைய, எண்ணிக்கைக்கடங்காத தீமைகள் தடுக்கப்பட்டுவருகிறது. மேலும் அது சிறுமையான ஸ்திதியிலிருந்த நம்முடைய ஸ்திரீ குலத்தாரை உயர்த்தி நம்மோடே சமமாயிருக்கும்படி செய்து, பிற்காலத்திலுள்ள அவர் சந்ததியாரின் சீர்திருத்தத்திற்குப் பலத்த கருவிகளாயிருக்கும்படி அவர்களை ஆயத்தப்படுத்தி வருகிறதையும் நாம் கவனித்திருக்கிறோம். ஜனங்களை இறுகப்பிடித்திருந்த பிராமணருடைய மார்க்கக்கட்டும் அதிகமாய்க் குலைந்துபோயிற்று. மிஷனெரிமாருடைய யூகமான ஆலோசனையினாலும் துன்பப்பட்டவர்களுக்காக அவர்கள் தலையிட்டுச்செய்த முயற்சிகளினாலும், லௌகீக விஷயத்தில் அநேக கிறிஸ்தவர்களுக்கு நீதிநியாயம் கிடைத்திருக்கிறது. கிராமங்கள் வாங்கப்பட்டும், குடியேற்றப்பட்டும், உங்கள் பார்வைக்கு நேர்த்தியாய்த் தோணும்படி வீடுகள் வரிசைவரிசையாய்க் கட்டப்பட்டுமிருக்கின்றன. வைத்தியசாலைகள் எல்லா மதஸ்தரின் பிரயோசனத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மிஷியோன் உத்தியோகஸ்தரின் விதவைகளுடைய ஆதரவுக்காகச் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மனதின் தேர்ச்சிக்கும் ஆத்தும வாழ்வுக்கும் அனுகூலமாய்ச் சுதேச பாஷைகளில் பற்பல வகையான புஸ்தகங்கள் பிரசித்தப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளுக்காகவும், பாலியருக்காகவும் போர்டிங் பள்ளிக்கூடங்களும், ஹைஸ்கூலும், காலேஜும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி பாலியரில் சிலர் சென்னபட்டணம் சர்வகலாசாலைக் கல்விப்பட்டம் பெற்றவர்களாயும், சிலர் அதற்கென்று ஆயத்தப்படுகிறவர்களாயுமிருக்கிறார்கள். இந்த விஷயங்களெல்லாம் யாவருக்கும் பகிரங்கமாய்த் தெரிந்தவை

ளாயிருக்கிறது. இப்படியாக நம்முடைய ஜனங்களுக்குள் காணப்பட்டிருக்கிற தேர்ச்சியானது சுவிசேஷம் நமக்குள் பலமாய்க் கிரியைசெய்ததினால் முக்கியமாய் உண்டாயிருக்கிறதென்று தைரியமாகச் சொல்லலாம்.

மேலும் திரளான பேர்கள் விக்கிரகங்களைத் தள்ளிவிட்டு, கர்த்தராகிய இயேசுவை வணங்கும் சீஷராயிருக்கிறார்கள். இம்மட்டும் நடந்துவந்திருக்கிற காரியங்களைச் சீர்தூக்கிப்பார்க்கையில், சிவனையும் விஷ்ணுவையும் சேவிக்கிற ஆயிரக்கணக்கான பேர், கிறிஸ்துவின் சிலுவைக்கு முன்பாகத் தாழவிழுந்து, தேவமனிதனாகிய அவருடைய மத்தியஸ்தத்தின்மூலமாய் ஒன்றான மெய்த்தேவனைப் பணிந்து வணங்குங்காலம் தூரமல்லவென்று எண்ணத்தகுமானதாயிருக்கிறது. இந்துக்களுடைய வீண்பக்தியானது இங்கிலிஷ் கல்விமுயற்சியினாலே வரவரக் குறைந்துகொண்டுவருகிறது. அதைப் பரிபாலித்துக்கொண்டுவந்த சிலருடைய மனதில் சுவிசேஷமானது இடம்பெறவே, அவர்கள் பரிசுத்தாவியானவருடைய சுத்திகரிப்பின் வல்லமையினால் தங்களைக் கர்த்தராகிய இயேசுவுக்குப் பிரதிஷ்டையாக்கியிருக்கிறார்கள். அஞ்ஞானிகளுடைய இரக்ஷணியத்திற்காகக் கிறிஸ்தவர்கள் கரிசனையைக் காட்டுவதும் பிரத்தியக்ஷமான காரியமே. தேறின கிறிஸ்தவர்கள் அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அவர்களுடைய தப்பான வழிகளிலிருந்து அவர்களைத் திருப்பப் பிரயாசப்பட்டு வருகிறார்கள். ஸ்திரமான கோவில் மாளிகைகளும், ஜெபவீடுகளும் அநேக இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளிலே காலைமாலை ஜெபங்களும், துதிதோத்திரப் பாடல்களும், ஒன்றான மெய்த்தேவனுடைய மகிமைக்குப் புகழ்ச்சியாகப் பரத்துக்கு ஏறிக்கொண்டிருக்கின்றன. ஓய்வுநாள் பொதுவாய்ச் சொல்லில் முற்காலங்களைவிட பரிசுத்தமாக ஆசரிக்கப்பட்டு வருகிறது. தேவனுடைய நித்திய சத்தியங்கள் கிரமமாய்ப் பிரசங்கிக்கப்பட்டும் வருகின்றன. ஜனங்கள் பூரண பரிசுத்த அலங்காரத்துடன் பரலோக ஆலயத்தில் மேலானவிதமாய் ஆராதனைசெய்யும்படியாகப் பக்குவப்படும்படி அநேக ஊர்களில் ஜெபக்கூட்டங்கள் தகுந்த மேரையாய் நடத்தப்பட்டு வருகின்றன. நம்முடைய பரிசுத்த புஸ்தகமாகிய வேதாகமம் அநேகருடைய கைகளில் இருக்கின்றன. அதை அவர்கள் தனிமையாயும் குடும்பத்திலேயும் வாசித்து, அதால் நிறைந்த ஆறுதலடைகிறார்கள். அவசியம் நேரிடுமாகில் திருநெல்வேலியில் திரளான பேர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தங்களுடைய அன்புள்ள தேவனும் இரக்ஷகருமாயிருக்கிறாரென்று அறிக்கையிட்டு, அவருக்காக இரத்தச்சாட்சிகளாய் மரிப்பதற்கும் ஆயத்தமாயிருப்பார்களென்று தைரிமாய்ச் சொல்லலாம். இங்கே கிறிஸ்துமார்க்கம் வந்தகாலமுதல் எத்தனையோ பேர்கள் மரித்து கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பூரணபிரவேசம் அடைந்திருக்கிறார்கள். மற்றப்படி அவர்களெல்லாரும் தேவனற்றவர்களாயும் இவ்வுலகத்தில் நம்பிக்கையில்லாதவர்களாயும் மரித்திருப்பார்களே.

சென்றகாலத்தில் நடந்தேறியிருக்கிற காரியங்களினால் நமக்கு இருக்கிற தெளிவைப்பார்க்கிலும் சத்தியம் எவ்விடத்திலும் ஜெயம்பெற்று வெற்றிசிறக்க இவ்வுலக இராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருடையதும் அவருடைய கிறிஸ்துவினுடையதுமான இராஜ்யமாகிய அவர் என்றென்றைக்கும் அரசாளுவார் என்று நாம் எதிர்நோக்குகையிலும் எங்களுக்கல்ல எங்களுக்கல்ல உமது கிரியையினிமித்தமும் உமது சத்தியத்தினிமித்தமும் உமது நாமத்துக்கே மகிமையுண்டாவதாக என்று நாம் சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆமென்.

---



# சமாசாரத்திரட்டு.

மதுரை ஸெஷன்கோர்ட்டிலிருந்து போடிநாயக்கனூர் ஜமீந்தாருடைய வக்கீலாகிய மிஸ்டர் நார்டன் அவர்களுடைய விண்ணப்பத்தின்பேரில் ஹைகோர்ட்டுக்கு மாற்றிக்கொள்ளப்பட்ட மேற்படி கேஸ் சென்ற மாசம் 28உ புதன்கிழமைத்தினம் ஹைகோர்ட்டு ஸெஷனில் சிரேஷ்ட நியாயாதிபதி முன்னிலையில் விசாரணைக்கு வந்து, ஒன்பதுநாள் விசாரணை நடந்தபிறகு சனிக்கிழமையதினம் 2-மணிக்கு முடிவாகி எல்லா கைதிகளும் எவ்விதத்திலும் குற்றவாளிகளல்லவென்று ஜூரிகளால் தீர்மானிக்கப்பட்டு அந்தப்படி ஜட்ஜியவர்களால் உடனே விடுதலைசெய்யப்பட்டார்கள். இந்த கேஸில் மொத்தக் கைதிகளான 14-பெயர்களில் 14-வது கைதிதான் போடிநாயக்கனூர் ஜெமீன்தார். 13-வது கைதி அவருடைய ஏஜண்டாகிய வெள்ளைய ராவுத்தன். மற்றக் கைதிகளனைவரும் அல்லது அவர்களில் பெரும்பாலார் ஜமீன்தாருடைய வேலைக்காரர்களென்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். சாயந்திரம் இரண்டு மணிக்கு ஜூரிகளில் முதலாயுள்ளவர் எழுந்திருந்து கைதிகள் குற்றவாளிகளல்லவென்று ஜூரிகள் தீர்மானிப்பதாகச் சொல்லியதும் கோர்ட்டில் நிறைந்திருந்த அத்தனை ஜனங்களும் பெருஞ்சப்தமிட்டுக் கைகொட்டிக் களித்து ஆர்ப்பரித்தார்கள். இச்சென்னையில் ஹைகோர்ட்டு ஸ்தாபனமான நாள்முதல் இதுவரையில் எந்நாளும் மேற்படி கோர்ட்டுமுன் விசாரணைக்கு வந்திராத அவ்வளவு பிரமாதமான இந்த கேஸ் நீதிமுறை பிறழாமல் எல்லாருக்கும் திர்ப்திகரமாய் இவ்வாறு முடிவுபெற்றது.

ஓர் இத்தாலிய சித்திரக்காரர் பம்பாய் வைத்தியசாலையில் மருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். திடீரென்று ஒருநாள் அவர் இறந்திருக்க ஓர் வேலைக்காரன் கண்டான். அப்புறம் வைத்தியசாலைத் தலைவர்கள் வந்து பார்வையிட்டு இறந்துபோனதாகச் சொன்னார்கள். அந்தச் சங்கதி கேட்டு அவருடைய சினேகிதர்கள் சவப்பெட்டி முதலானவைகள் சேகரஞ்செய்துகொண்டு வைத்தியசாலைக்கு வந்து இறந்தவருடைய விதியை நினைத்துப் புலம்பிக்கொண்டிருக்கையில் இறந்தவர் தூங்கி எழுந்தவர்போல எழுந்து உட்கார்ந்து என்ன இதெல்லாம் தயார்செய்திருக்கிறீர்களென்று கேட்டார். சவப்பெட்டி மாத்திரம் செய்திருந்தது. ஆனால் வீண்போகவில்லை. பின்னும் மூன்றுநாள் கழிந்தபின் இறந்தார். மேற்சொன்ன சவப்பெட்டி உபயோகப்பட்டது.

(சு—ன். மேமீ 10உ.)

---

## மேஷ மீ நாள்-31. சித்திரை மீ 20உ முதல், வைகாசி மீ 19உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | உ0 | யோசுவா கர்த்தர் தனக்குச் சொன்னபடி செய்தான. யோசு. 11: |
| ஞா | 2 | உக | ஒகின் எல்லையையும் சுதந்தரித்துக்கொண்டார்கள். 12:4. (9. |
| தி | 3 | உஉ | மீதியானின் பிரபுக்களையும் மோசேவெட்டிப்போட்டான். 18:21. |
| செ | 4 | உ௩ | கர்த்தர் என்னோடிருப்பாரானால்...அவர்களைத் துரத்திவிடுவேன் |
| பு | 5 | உ௪ | எபூசியரை யூதாப்புத்திரர் துரத்திவிடக்கூடாமற்போயிற்று. 15. |
| வி | 6 | உ௫ | யோசேப்பின் புத்திரருக்கு...அகப்பட்ட பங்கு வீதமாவது. 16: 1. |
| வெ | 7 | உ௬ | தென்னாடு எப்பிராயீமுடையது, வடநாடு மனாசேயினுடையது. |
| ச | 8 | உ௭ | கர்த்தருடைய ஆசாரியபட்டமே அவர்கள் (லேவியர்) சுதந்தரம். |
| ஞா | 9 | உ௮ | (யோசுவா) அவன் கேட்ட பட்டணத்தை அவனுக்குக்...கொடுத் |
| தி | 10 | உ௯ | பழிவாங்குகிறவன் கையினால் சாகாதபடிக்கு, ஓடிப்போய். 20: 9. |
| செ | 11 | ௩0 | இப்படியே கொலைசெய்தவனுக்கு அடைக்கலப்பட்டணம். 21:18. |
| பு | 12 | ௩க | கர்த்தரே தேவன் என்பதற்கு அந்தப்பீடம் நமக்குள்ளே சாட்சி. |
| வி | 13 | க | உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்டிருங்கள். 23: 8. |
| வெ | 14 | உ | அந்நிய தேவர்களைச் சேவித்தால்...உங்களை நிர்மூலமாக்குவார். |
| ச | 15 | ௩ | இஸ்ரவேலர்...கானானியரை...பகுதிகட்டப்பண்ணினார்கள். நியா. |
| ஞா | 16 | ௪ | அவர்கள் கர்த்தரைவிட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித் |
| தி | 17 | ௫ | இஸ்ரவேல் புத்திரர்.. மோவாபின் ராஜாவை...சேவித்தார்கள். |
| செ | 18 | ௬ | இஸ்ரவேல் புத்திரர்...கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். 4:13 |
| பு | 19 | ௭ | உன்னைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கிக்கொண்டுபோ. 5: |
| வி | 20 | ௮ | கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார். 6: 34. |
| வெ | 21 | ௯ | கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம். 7: 20. |
| ச | 22 | க0 | சேனைமுழுவதையும் கலங்கடித்தான். 8:12. |
| ஞா | 23 | கக | சிகேம் துருக்கத்து மனுஷரெல்லாரும் செத்தார்கள். 9:49. |
| தி | 24 | கஉ | கர்த்தருக்கு ஆராதனைசெய்தார்கள். 10:16. (11: 36. |
| செ | 25 | க௩ | உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும் |
| பு | 26 | க௪ | நீ ஷிபோலேத் என்று சொல். 12: 6. |
| வி | 27 | க௫ | என் நாமம்...அதிசயம் என்றார். 13: 18. |
| வெ | 28 | க௬ | பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது. 14: 14. (ஊயிட்டேர். |
| ச | 29 | க௭ | உமது அடியேன் கையினால் இந்தப்பெரிய இரட்சிப்பைக் கட்ட |
| ஞா | 30 | க௮ | தேவனே, பலப்படுத்தும். 16: 28. |
| தி | 31 | க௯ | கர்த்தர் எனக்கு நன்மைசெய்வார். 17:13. |

## விசேஷ நாட்கள்.

1. பரி. பிலிப்பு யாக்கோபு அப். திருநாள்.
2. ஈஸ்தர் பண்டிகைக்குப் பின்வரும் 1—ம் ஞாயிறு.
4. அமாவாசை.
9. ஈஸ்தர் பண்டிகைக்குப் பின்வரும் 2—ம் ஞாயிறு.
16 ஈஸ்தர் பண்டிகைக்குப் பின்வரும் 3—ம் ஞாயிறு.
19. பௌரணமி.
23 ஈஸ்தர் பண்டிகைக்குப் பின்வரும் 4—ம் ஞாயிறு.
30 ஈஸ்தர் பண்டிகைக்குப் பின்வரும் 5—ம் ஞாயிறு.

TL
Dron 24.M86
N24
161281

# நற்போதகம்

கூ. ஜூன்மீ. ௲அஅகூ ௵.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

**509.** மத் 28: 17. சிலர் சந்தேகப்பட்டதைக்குறித்து கவனிக்கவேண்டியதென்ன?

கர்த்தர் சமீபத்திலிருக்கும்பொழுதல்ல, அவரைத் தூரத்தில் கண்டபொழுதுதான் சந்தேகப்பட்டார்கள் என்பது தெளிவாயிருக்கிறது. மேலும் அவர்கள் சந்தேகப்பட்டது, கர்த்தர் உயிர்த்தெழுந்தாரோ அல்லவோ என்பதைப்பற்றியல்ல, ஆனால் தங்களுடன் இருக்கிறவர், உயிர்த்தெழுந்த கர்த்தர்தானோ அல்லவோ என்பதைப்பற்றித்தான் சந்தேகப்பட்டார்கள் என்பது பிரத்தியக்ஷம். இவர்கள் அவிசுவாசத்தினாலே சந்தேகப்படவில்லை. ஏனென்றால் நமது கர்த்தர் மற்றச் சமயங்களில் செய்தது போல, இப்பொழுது அவர்களைக் கடிந்துகொள்ளாமல், சமீபத்தில் வந்து அவர்களோடு பேசுகிறார்.

**510.** மத் 28: 18. இந்த அதிகாரம் என்ன?

சர்வலோகத்தையும் ஆளும்படி சம்பூரண அதிகாரம் கர்த்தர் உயிர்த்தெழுந்தபோது அவருக்கு அளிக்கப்பட்டது. அந்த அதிகாரத்தின் சர்வ சம்பூரணத்தைக் காட்டும்படி, இங்கே "சகல அதிகாரமும்" என்று சொல்லுகிறார். இந்த அதிகாரம், கர்த்தர் உயிர்த்தெழுந்தபொழுது அவருக்கு நூதனமாய் அருளப்பட்ட அதிகாரமாயிராமல், "பிதாவினால் அவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதும்" (11: 27), தாம் மனுஷாவதாரமெடுத்தபொழுது, தம்முடைய மனுஷத்தன்மையில் பெற்றுக்கொண்டதுமான அதிகாரமாயிருந்தது. ஆனால் அவர் உயிர்த்தெழுந்தபோது, இந்த அதிகாரம் உறுதிப்பட்டு அநுபவசித்திக்கு வந்தது. சகல அதிகாரமும் அவருக்குக் கொ

டுக்கப்பட்டது, தேவகுமாரனாக அநாதியாய் அவருக்கிருந்த மகிமையைப் புதுப்பிக்கிறதாயிருந்தது. இந்தச் சமயத்தில் கர்த்தர் சீஷரைப் பார்த்து: நான் எல்லையில்லாத ராஜ்யத்தின் சம்பூரண கையாக்ஷிக்குள் பிரவேசித்தி ருக்கிறேன்; ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் என்று சீஷர்களைத் தைரியப்படுத்தி அனுப்புகிற சம்பந்தத்தில் இந்த அதிகாரம் சொல்லப்படுகிறது.

**511.** வானத்திலே அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் என்ன?

பரலோகத்திலுள்ள சகல துரைத்தனங்கள், அதிகாரங்கள் ஆகிய இவற்றின்பேரிலுள்ள அதிகாரமாம். இரக்ஷிப்பைச் சுதந்தரிப்பவர்களுக்கு, தேவதூதர்கள் இதுமுதல் "பணிவிடை ஆவிகளாய்" இருப்பார்களாம். சபையானது ஆவிக்குரிய கூட்டமாக நிலையாய் வாசம்பண்ணுகிற இடம், பரலோகந்தான். ("உன்னதங்களில்" எபே 1: 3, 20—22. பிலி 2: 9, 16). அங்கே சமஸ்தமும் கர்த்தருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

**512.** பூமியிலே அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரமென்ன?

சபையானது வெளியரங்கக் கூட்டமாகத் தங்குகிற இடம் பூமியாம். இங்கே அந்தச் சபை, போராடுகிற சபையாயிருக்கிறது. பூமியிலே கிறிஸ்துநாதருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தினாலேதான், அந்தச் சபை யுத்தம்பண்ணிச் சித்தியடைகிறது.

**513.** மத் 28: 19. "ஆகையால்" என்ற வார்த்தை எதைக் காட்டுகிறது?

கிறிஸ்துநாதருக்குக் கொடுக்கப்பட்ட சர்வலோக அதிகாரமானது, அவருடைய சீஷர்கள் உலகத்தில் எங்கெங்கே அனுப்பப்பட்டாலும், அங்கங்கேயெல்லாம் சித்திபெறுவார்கள் என்ற நிச்சயத்தைக் காட்டுகிறது.

**514.** "சகல ஜாதிகளையும் சீஷராக்கி" என்பதின் அர்த்தமென்ன?

சகல ஜாதிகளையும் சீஷராக்குகிறதென்றால், சகல ஜாதிகளையும் சீஷரின் கூட்டத்துக்குள் கொண்டுவருகிறது என்றர்த்தம். சகல ஜாதிகளையும் மனந்திரும்பச்செய்து, சபைக்குள் சேர்க்கிறதற்குப் பண்ணுகிற வழிவகைகளும் இந்த வார்த்தைகளில் அடங்கியிருக்கின்றன. சகல ஜாதிகளும் என்பது, யூதர் புறஜாதியார் ஆகிய எல்லாரையுங் குறிக்கும் (மாற்கு 16: 15. "சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்)". சீஷராக்குவதற்கு நிபந்தனைகளும் வழிவகைகளும் என்னவென்றால், ஞானஸ்நானமும், அவர் கட்டளையிட்ட யாவையும் உபதேசம்பண்ணுவதுமாம்.



**515.** "நாமத்திலே" ஞானஸ்நானங்கொடுக்கிறதாவதென்ன?

நாமத்திலே என்றால், நாமத்திற்குள்ளாக என்றர்த்தம். நாமத்தினாலே என்றால், சர்வவல்லவருடைய நாமத்தினாலே, அதாவது அவருடைய அதிகாரத்தினாலும் கட்டளையினாலும் சபையின் குருக்கள் ஞானஸ்நானங் கொடுப்பதைக் குறிக்கலாம். நாமத்திற்குள்ளாக என்றால், ஞானஸ்நானம் பெறுகிற விசுவாசிகள், ஞானஸ்நானத்தினாலே ஒரு விசுவாசத்துக்குள் பட்டிருக்கிறார்களென்றும், அந்த நாமத்தையுடைய வஸ்துவே அந்த விசுவாசத்துக்கு ஆதாரமென்றும், அந்த விசுவாசம் அவர்களை அந்த வஸ்துவோடு ஐக்கியக்கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருகிறதென்றும் அர்த்தமாம். இங்கே நாமம் என்ற வார்த்தை, விரிவான ஆழ்ந்த கருத்துள்ளது. இது ஜீவனுள்ள சர்வவல்லபக் கடவுளைக் குறிக்கிறது. 2ம் கேள்வி சேர்த்து வாசி.

ஞானஸ்நானம்பெறுகிற பெரியோர், ஞானஸ்நானத்துக்கு முந்தி இந்த விசுவாசத்தை அறிக்கையிடவேண்டும். குழந்தைகள், ஞானத்தாய் தகப்பன்மாராலே இந்த விசுவாசத்தில் பயிற்றுவிக்கப்பட்டு, பின்னாலே அறிக்கையிடவேண்டும். இப்படியாக இது மெய்யான ஞானஸ்நானக் கட்டளையாகிறது.

**516.** 28: 20. "சகல நாட்களிலும்" என்றால் அர்த்தமென்ன?

1. கிறிஸ்துநாதர் தமது சபையைவிட்டுப் பிரிந்திருக்குங் காலம், ஒரு காலமுமில்லை; ஒருநாளும் தமது சபையைக் கைவிடுவதுமில்லை என்றர்த்தம்.

2. நீண்டகாலம் இதினாலே குறிக்கப்படுகிறது.

3. சபையுடனேகூடக் கிறிஸ்துநாதருடைய சமுகமும், அவருடைய ஆதரவும் இடைவிடாமல் எப்பொழுதுமிருக்குமாம்.

"நான்" என்ற வார்த்தை, சகல விசுவாசத்துக்கும் ஆறுதலுக்கும் வெற்றிக்கும் காரணமான வார்த்தையாக வருகிறது. "நான் உங்களுடனே கூட இருக்கிறேன்".

**517.** "உங்களுடனே" என்ற வார்த்தையில் அடங்கியிருக்கிறதென்ன?

நெருங்கின சம்பந்தமும் நிலையான ஆதரவும் இதிலடங்கியிருக்கிறது. உங்களுடனே என்ற வார்த்தை, விசேஷமாய் இம்மானுவேல் என்ற மகா நாமத்தைக் குறிக்கிறது.

**518.** "உலகத்தின் முடிவுபரியந்தம்" என்றால் அர்த்தமென்ன?

ஆயோன் (Aeon) அல்லது யுகத்தின் முடிவு என்றர்த்தம். இந்தக் காலத்தில், சபையானது ஆயத்தப்படுகிற வேலையை முடித்துக்கொள்ள வேண்டியது.

519. பரி. மத்தேயு சொல்லுகிறபடி, ஞானஸ்நானக் கட்டளையில் அடங்கிய முக்கிய விஷயங்களெவை?

1. கிறிஸ்துநாதருடைய சர்வலோக ராஜரீகம்.

2. சகல ஜாதிகளையும் தமது ராஜ்யத்துக்குள் கொண்டுவரவேண்டும் என்ற அவருடைய திருவுள நோக்கம்.

3. அவருடைய சபையில் சேர்வதற்கும், நிலைத்திருப்பதற்கும் அடுத்த நிபந்தனைகள்.

4. உபதேச விஷயமாயும், சன்மார்க்க விஷயமாயும், ஆவிக்குரிய விஷயமாயும், கர்த்தர் போதித்தவைகளைக் காட்டிய பூராச்சாதனங்கள்.

5. கிறிஸ்துநாதர் தமது சபையோடுகூட எப்போதும் நிலையாயிருந்து வருவதினால், அந்தச் சபை இடையில் நின்றுபோகாமல், வளர்ந்தேறிக் கொண்டேவரும் என்ற உறுதி.

பரி. மத்தேயு இந்தச் சத்தியங்களையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு தன் சுவிசேஷத்தை எழுதி முடிக்கிறார்.

## பரமேறினது.

520. கர்த்தர் பரமேறினதைப்பற்றி எங்கே சொல்லியிருக்கிறது?

கர்த்தர் பரமேறின சரித்திரத்தைப்பற்றி, மாற் 16: 19. அப் 1: 9–11ல் மாத்திரம் நேராய்ச் சொல்லியிருக்கிறது. ஆனால் அதின் குறிப்புகளை, யோ 3: 13. 6: 62. 20: 17. அப் 2: 3. 3: 21. எபே 4: 9, 10. 1 தீமோ 3: 16 ஆகிய இந்த வாக்கியங்களில் காணலாம். மேலும் இந்தச் சங்கதி, கிறிஸ்து தமது இரண்டாம் வருகையைப்பற்றிச் சொன்ன மகா தீர்க்கதரிசனத்திலும்(மத் 24 அதி), எபிரேயர் நிருபத்தில் காட்டிய முக்கிய நியாயப்போக்கிலும்(எபி 5 அதி. முதல் 10 அதிவரையும்), வெளிப்படுத்தின விசேஷத்திலும் (விசேஷமாய் அதி 1—5வரையும்) அடங்கியிருக்கிறது. பரி.மாற்கும் பரி.லூக்காவும் எழுதியதை வாசித்தால், பதினொருவருக்குக் கர்த்தர் காணப்பட்ட உடனே (லூக் 24: 36—48), அவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக நாம் நினைப்போம். ஆனால் அப் 1: 3னால் அவர் உயிர்த்தெழுந்த நாற்பதாம் நாளில், பரமேறினதாக அறிகிறோம்.

521. கர்த்தர் எந்த இடத்திலிருந்து பரலோகத்துக்குப் போனார்?

எந்த இடத்திலிருந்து பரலோகத்துக்குப் போனாரென்று, பரி. மாற்கு சொல்லவில்லை. "எருசலேமுக்குச் சமீபமாய், ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து" பரலோகத்



துக்குப்போனதாக பரி. லூக்கா சொல்லுகிறார் (அப் 1: 12). ஒலிவமலையின் கீழ்சரிவில், பெத்தானியிருந்தது. பெத்தானியிலிருந்து எருசலேமுக்குப்போகிற வழி, ஒலிவமலையைக் குறுக்கே ஊடறுத்துப்போகிறது. பெத்தானி "வரைக்கும்" என்றால், பெத்தானிக்குச் சமீபமாய் என்றுதான் அர்த்தம். பெத்தானி என்று லூக்கா சொல்லும்போது, பெத்தானி ஊரல்ல, பெத்தானியாவின் எல்லையென்று அர்த்தம்பண்ணவேண்டும். ஒலிவமலையின் மூன்று உச்சிகளில், கடல்மட்டத்துக்கு 2724 அடி உயரமும், பெத்தானிக்கு 921 அடி உயரமுமான பெரிய உச்சிமலையிலிருந்து கர்த்தர் பரமேறினாரென்றும், அந்த இடத்தில் எல்லேனாள் (Helena) சக்கரவர்த்தினி ஒரு கோவிலைக் கட்டினாளென்றும் சொல்லிய பாரம்பரை நிசமானதல்ல. பெத்தானிக்கும் எருசலேமுக்கும் இடையில், பெத்பகே இருந்தது. ஒலிவமலையின் பாகம், எந்த இடத்தில், பெத்பகே என்று அழைக்கப்படுவதைவிட்டு, பெத்தானி என்றழைக்கப்பட்டதோ, அந்த இடத்திலிருந்துதான் கர்த்தர் பரமேறினார் என்பது சரியான அபிப்பிராயம். இந்த இடம், லாசரு அவன் சகோதரிகள் ஆகிய இவர்கள் குடியிருந்த இடத்துக்கும், ஆறு வாரத்துக்குமுன் கர்த்தர் வியாகுலமடைந்த இடத்துக்கும் தூரமானதல்ல. இந்த இடம், பெத்தானிக்குச் சற்று அதிகத் தூரமாயும், எருசலேமுக்குச் சற்று அதிகச் சமீபமாயுமிருந்தது.

522. கர்த்தர் பரத்துக்கேறின சரித்திரமென்ன?

கர்த்தர் உயிர்த்தெழுந்தபிற்பாடு பலமுறை சீஷருக்குக் காணப்பட்டு, தாம் உயிர்த்தெழுந்த நிச்சயத்தைத் திருஷ்டாந்தப்படுத்தினார். சிலுவையில் அறையுண்டு மரித்த கர்த்தர் உயிரோடிருக்கிறதைச் சீஷர் கண்டதே, அவர் உயிர்த்தெழுந்ததற்கு அத்தாக்ஷி. ஆனால் அவர் பரமேறினதைப்பற்றிச் சாட்சியிடும்படி, அவர் பரமேறுதலை அவர்கள் பிரத்தியட்சமாய்க் காணவேண்டியதாயிருந்தது. ஆகையால் எம்மாவூருக்குப்போன சீஷர் திகைக்கத்தக்க விதமாய் கர்த்தர் மறைந்துபோனதுபோல இப்போது அவர் செய்யாமல், அவர்கள் நன்றாய்ப் பார்த்துக்கொண்டிருக்கையில் எடுத்துக்கொள்ளப்பட்டார். தமது கைகளை உயர்த்தி சீஷரை ஆசீர்வதிக்கையில் அவர் எடுத்துக் கொள்ளப்பட்டார். ஒரு தூதனாவது அல்லது ஒரு மேகமாவது அவரை எடுத்துக்கொள்ளவில்லை (அப் 1: 10 1 பேது 3: 22). அவர் தானாய்ப் பரலோகம்போனார். போகையில் அவருடைய சீஷரைவிட்டு அவர் மெள்ள மெள்ள உயர எழும்பினார். எழும்புகையில் அவருடைய கைகள் அவர்களை ஆசீர்வதிக்கிற மேரையாகவே இன்னும் உயர்ந்திருந்தன. அவருடைய உத்தம பக்தர்களுடைய கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் ஊடே வந்து, அவரை மறைக்கிறவரையும், அவருடைய கைகள் அப்படியேயிருந்தன! அப். 1: 9ல் "அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில்" என்ற வார்த்தைகளின் அர்த்தமும் இதுதான். யோ 6: 66ன் அர்த்தமும் இதுதான்.

"எடுத்துக்கொள்ளப்பட்ட" என்று திருப்பியிருக்கிற மூலவார்த்தை அப் 1: 2ல் வேறே. அப் 1: 9ல் வேறே. அப் 1: 9ன் மூலவார்த்தை, தரையைவிட்டு அவர் முதலாவது எழும்பினதைக் குறிக்கும். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் பரமேறுதலும், அவருடைய இரண்டு தன்மைகளையும் காட்டின அவருடைய மனுஷத்தன்மையின்படி, அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார் (மாற் 16: 19). அவருடைய தெய்வத்தன்மையினபடி, அவர் தானுய்ப்போனுர் (அப் 1: 10. 1 பேதுரு 3: 22). அப்படியே அவருடைய உயிர்த்தெழுதலும் இரண்டு தன்மைகளையும் காட்டின. எப்படியென்றால், தேவன் அவரை எழுப்பினதாக, அப் 2: 24, 32. 3: 15. 13: 33, 34. 17: 31 ஆகிய இந்த வாக்கியங்களில் சொல்லியிருக்கிறது. அவர் தம்மைத் தாமே எழுப்பினதாக, யோவான் 12: 19. 10: 18 பார்.

**523**. அப். 1: 9. இந்த மேகத்தைக்குறித்து கவனிக்கவேண்டியதென்ன?

ஒளியுள்ள மேகம் அடிக்கடி திவ்விய சமுகத்துக்கு அடையாளமாயிருந்தது (யாத்தி 40: 34. எண் 9: 15. 1 ராஜா 8: 10. மத் 17: 5. லூக் 2: 9 "கர்த்தருடைய மகிமை". எலியா சுழல்காற்றிலே பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுபோலல்ல, இப்பொழுது எல்லாம் அமைதலாயிருந்தது.

**524**. "எடுத்துக்கோண்டது" என்பதின் அர்த்தமென்ன?

அவரை மூடிக்கொண்டது என்ற அர்த்தமில்லை, ஆனால் அவரைத் தாங்கினது என்றர்த்தம் சங் 104: 3. ஏசா 19: 1 வாசி. அந்த மேகம் ஊடே வந்ததினால், மனுஷர் கண்களுக்கு அவரை மறைத்துக்கொண்டது. அவர் திடீரென்று காணமல்போனால், மகிமை அடைந்த அவருடைய மனுஷீகம் எடுத்துக்கொள்ளப்பட்டது பிரத்தியக்ஷமாயிராது. கிறிசொஸ்தம் சொல்லுகிறபடி, உத்தம பக்தர்கள், அவருடைய உயிர்த்தெழுதலில், துவக்கத்தையல்ல, முடிவைக் கண்டார்கள்; அவருடைய பரமேறுதலிலோ, முடிவை அல்ல, துவக்கத்தைக் கண்டார்கள்.

**525**. "இந்த இயேசுவானவர்" என்றதில் அறியவேண்டியதென்ன?

தேவத்துவம் மனுஷத்துவம் ஆகிய இரண்டு தன்மைகளும், ஒருக்காலும் பிரிக்கப்படாதபடி ஒரே பர்சனில் சேர்ந்திருக்கிறது. அவர் தமது சரீரத்தோடு பரமண்டலத்துக்கேறி, கடைசிநாளில் எல்லா மனுஷரையும் நியாயந்தீர்க்கத் தாம் திரும்பவரும் அளவும், அவ்விடத்தில் வீற்றிருக்கிறார்.



**526**. 1: 11. "அப்படியே வருவார்" என்றால் எப்படி வருவார்?

1. "வானத்து மேகங்களுடனே" (தானி 7: 13. மத் 24: 30. 26: 64. மாற் 14: 62. லூக் 21: 27).

2. கண்காண (வெளி 1: 7).

3. தூதரோடுகூட (மத் 25: 31. 1 தெச 4: 16).

4. மனுஷ வடிவத்தோடு வருவார். ஆகையால் "தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்! என்று இப்பொழுதும் நாம் விண்ணப்பம் பண்ணலாம்.

**527**. 1: 11. "வானம்" என்ற வார்த்தை இந்த வாக்கியத்தில் மூன்று விசை வருவதேன்?

கிறிஸ்துநாதர் பரமண்டலத்துக்கேறின நிச்சயத்தை வற்புறுத்திக் காட்டும்படி 3 விசை வருகிறது. பரத்துக்கேறின திருநாளுக்கும், அதற்கடுத்த ஓய்வுநாளுக்குமுரிய சுருக்கஜெபத்தில், திருச்சபை இந்த விஷயத்தை ஆதாரமாய் வைத்து ஜெபிக்கிறது.

**528**. 1: 12. "ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்தைப்"பற்றி என்ன தெரியும்?

இது ஏறக்குறைய ஒரு இங்கிலிஷ் மைலுக்குச் சரியாயிருக்கும். இது மோசே கட்டளையிட்ட ஏற்பாடல்ல. ஆனால் ஆசரிப்புக்கூடாரத்துக்கும் ஜனங்களுக்கும் இடையிலுள்ள தூரத்தையும் (யோசு 3: 4), லேவியருடைய பட்டணங்களின் மத்தியிலிருந்து வெளிப்புறம்வரைக்குமுள்ள தூரத்தையும் (எண் 35: 4, 5), கணக்கிட்டுப்பார்த்து, ரபிகள் யாத்தி 16: 29ஐ ஆதாரமாய் வைத்துக்கட்டின பாரம்பரையில் இப்படிச் சொல்லியிருக்கிறது.

**529**. அப் 1: 13. இந்த மேல்வீடெது?

இந்த மேல்வீடு தேவாலயத்திலிருந்ததாக, லூக் 24: 53ஐக்கொண்டு சிலர் உத்தேசிக்கிறார்கள். ஆனால் அந்த வாக்கியம், அப் 2: 46ஐப்போல, ஜெபவேளைகளில் அவர்கள் கிரமமாய் தேவாலயத்துக்குப்போவதைக் குறிக்கிறதாகப் பெரும்பாலும் அர்த்தம்பண்ணப்படும் (அப் 3: 1). "நாசரேத்தூர் இயேசுவின் அடியார், தேவாலயத்தில் ஒரு இடம்பெறவும், அங்கே ஆண்களும் பெண்களும் (அப் 1: 14) கூடியிருக்கவும் உத்தரவுபெறுவது கூடிய காரியமல்ல. மூலத்தில் அந்த (The) மேல்வீடென்றிருக்கிறதாக பூர்வத்தார் செய்த திருப்புதலை நாம் அனுசரித்து, பரிசுத்த நற்கருணை ஏற்படுத்தப்பட்ட இடமும்(மாற் 16: 15. லூக் 22: 12), கர்த்தர் உயிர்த்தெழுந்தபின் இரண்டு விசை தரிசனமான இடமும்(யோ 20: 19, 26), பெந்

தெகொஸ்தேநாளில் பரிசுத்தஆவி இறங்கின இடமுயான மேல்வீடென்று நாம் தாராளமாய் நினைக்கலாம் (அப் 1: 3).

**530**. அப் 1: 3ல் "பாடு" என்ற வார்த்தையின் அர்த்தமென்ன?

மரணம் என்றர்த்தம். அப்படியே (அப் 3: 18. மத் 26: 23. எபி 13: 12. 1 பேதுரு 3: 18) பார். அப்படியே நீசெயா விசுவாசப்பிரமாணத்தில்: "பாடுபட்டு அடக்கம்பண்ணப்பட்டார்" என்றும்; அதநாசி விசுவாசப்பிரமாணத்தில்: "நமக்கு இரக்ஷிப்புண்டாகப் பாடுபட்டு, பாதாளத்தில் இறங்கினர்" என்றும் சொல்லியிருக்கிறது.

**531** "அநேகந் தெளிவான திருஷ்டாந்தங்கள்" எவை?

பதினொரு விசை கர்த்தர் காக்ஷியளித்ததில், சீஷர் அவரைக் கண்டார்கள்; அவர் பேசினதைக் கேட்டார்கள்; அவரைத் தொட்டார்கள்.

**532**. "தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகள்" என்றல் அர்த்தம் என்ன?

சுவிசேஷ ஏற்பாட்டுக்குரியவைகள் என்றர்த்தம். கிறிஸ்துவின் அதிகாரம் (மத் 28: 18); அப்போஸ்தலன்மாரை அனுப்பினது (மத் 28: 19, 20. மாற் 16: 15); தம்முடைய சமுகம் சீஷருடனேகூட எப்பொழுதுமிருக்குமென்ற வாக்குத்தத்தம் (மத் 28: 20); பரிசுத்தஆவியானவர் பெந்தெகொஸ்தேநாளில் கொடுக்கப்படுவது (லூக் 24: 49); பரிசுத்தஆவியானவர் எப்பொழுதும் கிறிஸ்தவர்களுக்குள் நிலையாயிருந்து வருவது (யோவா 20: 22, 23) ஆகிய இந்த விஷயங்களும்; பெரும்பாலும் நினைக்கப்படுகிறபடி, கர்த்தருடைய நாளைக் குறித்த கட்டளையும் தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளில் அடங்கினவைகளாம்.

### பரிசுத்தஆவி இறங்கினது.

**533**. அப் 1: 5. பிதாவின் வாக்குத்தத்தமென்ன?

பரிசுத்தஆவியாம் (அப் 2: 33. யோவே 2: 28. மத் 10: 20. லூக் 12: 12. 24: 49. யோவா 14: 16, 26. 15: 26. 16: 7—16). சீஷர் எதிர்நோக்கியிருக்கவேண்டிய எல்லாவற்றையும், கர்த்தர் இந்த ஒரு காரியத்துக்குள் அடக்கிப்போட்டார். கிறிஸ்துவின் சபை பரிசுத்தஆவியினுலே தான் பரிபாலனமடையவேண்டியதாம்.



## II. நாளாகமம்.

(தொடர்ச்சி.)

### 15. ஆமோன். (இனத்துக்குரிய சூரிய தேவன்.) கி. மு. 643.

இவன் 22 வயதில் இராஜாவாகி, 2 வருஷம் ஆண்டான். 2 நாளா. 33: 21—25. மனசேயைப்போல கர்த்தருக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். மனசே உபா. 7: 5ல் சொல்லிய விக்கிரகங்களைச் சுட்டெரிக்காமல், எறிந்துபோட்டிருந்தான். ஆமோன் அந்த விக்கிரகங்களை நாட்டி அவைகளுக்குப் பலியிட்டான். தன் தகப்பனைப்போல சீரடையவுமில்லை. அவனுடைய துன்மார்க்கத்தினுல் அவன் ஊழியக்காரர் அவனைக் கொன்றுபோட்டார்கள். ஜனங்களோ அந்தக் கொலைபாதகரைக் கொன்று அவன் மகன் யோசியாவை இராஜாவாக்கினர்கள். நாகூம், நினிவேயின் அழிவைப்பற்றியும், ஆபகூக், யூதர் கல்தேயரால் அழிவதைப்பற்றியும் தீர்க்கதரிசனமுரைத்தார்கள்.

## கேள்விகள்.

1. மனசே செய்த கொடுமைகளும் அவபக்தியுமென்ன? அதினுல் அவனுக்கு வந்த தண்டனையென்ன?
2. மெய்யான மனந்திரும்புதலின் தன்மையையும், அதின் பலனுக்குரிய திருஷ்டாந்தங்களையும் காட்டும்.
3. ஆசாரியர், லேவியர், தாவீது காலத்தில் வகுக்கப்பட்ட முறையும் அவர்களுடைய ஏற்பாடுமென்ன? எலியாக்கீம் ஆர்?
4. மோசேயின் நியாயப்பிரமாணம் இராஜாக்கள் காலத்தில் காக்கப்பட்டு வந்ததற்கு உதாரணங்கள் சொல்லும்.

### 16. யோசியா. (கர்த்தர் குணமாக்குகிறர்.) கி. மு. 640. 2 இரா. 22, 23. 2 நாளா. 34, 35 அதி.

இவர் 8 வயதில் இராஜாவாகி 31 வருஷம் அரசாண்டார். இவர் 8 வருஷக்காலமாய் இளமையானதால் முந்தின அரசாட்சியின்படியே ஜனங்கள் விக்கிரகாராதனைசெய்து வந்தார்கள். இவருடைய அரசாட்சியின் 8ம் வருஷத்தில் அதாவது 16 வயதில் வாலிப இச்சைகளுக்கு இடங்கொடாமல், கர்த்தரைத் தேடினன். அவனுடைய 12ம் வருஷத்தில் 20 வயதாயிருக்கையில், மனசே ஆமோன் செய்த விக்கிரகங்களை அழித்தான். இவர் மனசே செய்தபடியல்ல, பலிபீடங்களை இடித்து விக்கிரகங்களை நொறுக்கினன். அந்தப் பொடிகளைப் பலியிட்டவர்களின் பிரேதக்குழிகளில் தூவி, பூசாசாரிகளின் எலும்புகளையும் அவர்களுடைய பீடங்களின்மேல் சுட்டெரித்தான். 1 இரா. 13: 4. இஸ்ரவேல் இராஜ்யமும் இவன் வசமானதால் சிலைகளை வெட்டி விக்கிரகங்களை நொறுக்கி எங்கும் சுத்திகரித்தான். இஸ்ரவேல் இராஜ்யத்தில் எல்லாரும் சிறைப்பட்டுப்போனுலும் புதிதாய் அங்கே குடியேற்றப்பட்டவர்களும் அவரைத் தடுக்கப் பெலமற்றவர்கள்.

கி. மு. 628. யோசியாவின் 13 ம் வருஷத்தில் எரேமியா யூதர் தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்பும்படிக்கு அவர்களுடைய பாவங்களைக் காட்டி அவர்களுக்கு விரோதமாய் வரும் தேவகோபாக்கினையைப் பற்றி தீர்க்கதரிசனமுரைத்தார். எரேமி. 1: 2. 25: 3. இப்படி 40 வருஷம் எச்சரித்தார்.

கி. மு. 623. 18 ம் வருஷமான 26 ம் வயதில் யோசியா தேவாலயத்தைச் சுத்திகரிக்க விசேஷித்த கவலை எடுத்தார்.—அதற்காகச் சேர்க்கப்பட்ட பணங்களை பிரதானஆசாரியனாகிய இல்க்கியாவுக்குக் கொடுக்க, அவன் தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையின்படியே தேவாலயத்தில் பழுதுபார்க்க அவசிய வேலையென்னவென்று பரிசோதிக்கையில் மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. மனாசேயின் காலத்தில் இது மறைக்கப்பட்டிருந்திருக்கலாம். இல்க்கியா, வேதபாரகனாகிய சாப்பானிடத்தில்கொடுத்து இராஜனுக்குக் காண்பிக்க அவருடைய உத்தரவுப்படி உபாகமம் 28 அதிகாரத்தை விசேஷமாய் 26 ம் வாக்கியத்தை வாசிக்க; இராஜன் தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, கர்த்தரை விசாரிக்கும்படி தேவஉத்தரவுக்காக உல்தாள் தீர்க்கதரிசியிடத்தில் ஆள் அனுப்ப, அவள் சொன்ன செய்திக்கு 2 நாளா. 34: 22—28 பார். உல்தாள் தீர்க்கதரிசியாயிருந்ததுபோல மீரியாம் (யாத். 15: 20.) தேபோராள் (நியாயாதி. 4: 4.) அன்னாள் (1 சா. 2 அதி.) எலிசபெத்து, கன்னிமரியாளும் (லூக். 1 அதி.) பிலிப்புவின் மக்களும் (அப். 21: 9) தீர்க்கதரிசிகளாம். அக்காலத்தில் செப்பனியாவும், எரேமியாவும் தீர்க்கதரிசிகளாயிருக்க இவளிடத்தில் கேட்ட முகாந்தரமென்னவென்றால், அவர்கள் தூரமான ஆனதோத் முதலிய இடங்களிலிருந்தபடியாலும், இவள் எருசலேமில் வாசமாயிருந்ததாலும், காரியம் அவசியமானதாலும், இவள் அவர்களுக்கு முந்தியே தீர்க்கதரிசனமுரைத்து அவர்களுக்குப் பழக்கமுள்ளவளானதாலும், அவர்கள் பிந்தி நூதனமாய்த் தோன்றினதாலுமே. எரேமி. 1: 1. செப். 1: 1. இதைக்கேட்டவுடனே இராஜா ஜனங்களெல்லாரையும் கூடிவரச்செய்து, நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசிக்கும்படிசெய்து அந்தப்படி நடக்க ஜனங்களோடே உடன்படிக்கைசெய்தார். இதற்குப்பின் பலபல விக்கிரகாராதனைகளை அழித்து, 1 இரா. 13 ல் சொல்லிய தீர்க்கதரிசனப்படி, பேத்தேலிலுள்ள பலிபீடத்தையும் இடித்து, அதின் பூசாசாரிகளின் எலும்புகளையும் சுட்டெரித்து, மற்றும் எந்தவகையான விக்கிரகாராதனையையும் அழித்துப்போட்டான். 2 இரா. 23 அதி.

விக்கிரகாராதனைகளையெல்லாம் அழித்தபின்பு அவனுடைய 26 ம் வயதில் எல்லா இஸ்ரவேலரும் யூதரும் கெம்பீரமாய் பஸ்காவை ஆசரித்தார்கள். சாமுவேல் காலமுதல் ஒரு இராஜாவும் இப்படி ஆசரிக்கவில்லை. யோசியா இப்போது செய்ததுபோல ஜனங்களும் ஆசாரியரும் இராஜாவும் ஒருக்காலும் உடன்படிக்கைசெய்யவில்லை. 2 நாளா. 35 அதி. நியாயப்பிரமாணத்தை வாசித்ததிலும், தேவாலயத்தைச் சுத்திகரித்ததிலும், விக்கிரகாராதனையை அழித்ததிலும் யோசியாவைப்போலொத்த இராஜனில்லை. யோசியா பக்தியோடே தேவனைத் தேடினாலும், ஜனங்கள் கெட்டவர்களும், மாயமாலக்காரருமாயிருந்தார்கள். 2 இரா. 23: 26. இதற்காகவே எரேமியா தீர்க்கதரிசியும் செப்பனியாவும் தீர்க்கதரிசனம் அவர்களுக்கு விரோதமாயுரைத்தார்கள்.

கி. மு. 610 ல் யோசியாவின் 31 ம் வருஷத்தில் நினிவேயை ஜெ-



யித்த பாபிலோனியர் மேதியரோடே சண்டைசெய்யும்படி பார்வோன் நேகோ யூதேயாதேசம் வழியாய்ப் போகவே; யோசியா, தன் பக்திக்குரிய பெருமையினாலோ, மனாசே காலமுதல் யூத இராஜாக்கள் பாபிலோன் இராஜாக்களுக்குக் கீழ்ப்பட்டவர்களானதால் அவர்களுக்கு விரோதமாய்ப் போகிறவனைத் தடைசெய்யவோ, யுத்தத்துக்குப்போய்க் காயப்பட்டுச் செத்தான். இக்காலத்தில் தாவீது சாலொமோன் காலத்திலிருந்ததுபோல தேசமுழுவதும் யோசியாவுக்கிருந்தது. ஆகையால் சண்டை மனாசேயிலுள்ள மெகிதோவில் நடந்தது. ஜனங்கள் பெரிய துக்கங்கொண்டாடினார்கள். சகரி. 12: 11. யோசியா, 2 நாளா. 34: 28 ல் சொல்லிய வாக்குத்தத்தங்களைத் தப்பாய்க் கருத்துப்பண்ணிக்கொண்டு துணிந்து சண்டைக்குப்போயிருப்பான். நேகோ சொன்ன தேவவாக்கைக் கவனியாமல் 2 நாளா. 35: 22, 23. சண்டைக்குப்போனது யோசியாவின்மேல் குற்றம்தான். நீதி. 3: 30. 25: 8. இக்காலத்தில் ஜனங்கள் துன்மார்க்கராயினும், இறந்துபோன பக்தியுள்ள இராஜாவுக்காகத் துக்கங்கொண்டாடினார்கள். எரேமியாவும் புலம்பல் பாடினார். (புல. 4: 20.) இந்தப் புலம்பலை எல்லாரும் படித்து, எருசலேம் பட்டணம், தேவாலயம், இராஜ்யம் அழிவுக்காக வருஷந்தோறும் புலம்புவதுபோல யோசியாவின் மரணத்துக்கும் புலம்புவார்கள்.

### 17. யோவாகாஸ். (கர்த்தர் தாங்குகிறார்.) கி. மு. 610.

பதிலுபகாரமென்றருத்தமுள்ள ஷல்லூமென்ற பேரை மாற்றி, முந்தின பேரை எடுத்துக்கொண்டான். இவனுக்கு முந்தின சகோதரர் பார்வோன் நேகோவுக்குப் பயந்து இராஜாவாக மனமில்லாததாலும், இவன் எசே. 19: 3 ல் சிங்கமென்னப்படுவதால் யுத்தஞ்செய்ய வீரனும் பலவானுமானதால் யோசியாவின் 4 ம் குமாரனை இராஜாவாக்கினார்கள். இவன் 22 வயதில் இராஜாவாகி (3) மாதம் அரசாண்டான். இவன் மனாசே, ஆமோனைப்போல் துன்மார்க்கன். 2 இரா. 23: 31–33. 2 நாளா. 36:1–5. தன்னை இராஜாவாக்கின ஜனங்களுக்குப் பிரியமாய் விக்கிரகாராதனை செய்தான். எரே. 22: 11. பார்வோன் நேகோ தன் உத்தரவும், சம்மதமுமில்லாமல் யோவகாஸ் தன்னை இராஜாவாக்கினதால், அவனை எகிப்துக்குச் சிறையாக்கி அனுப்பி அவன் தமையனை இராஜாவாக்கிப்போனான். யோவாகாஸ் எகிப்தில் மரித்தான்.

### 18. யோயாக்கீம். (தேவன் எழுப்புவார்.) கி. மு. 610.

இவன் 25 வயதாயிருக்கையில் இராஜாவாகி, (11) வருஷம் ஆண்டான். பார்வோன் நேகோ எலியாக்கீமென்ற யோசியாவின் 2 ம் குமாரனைத் தன் கீழ்ப்பட்ட இராஜனென்பதற்குப் பேர் மாற்றிப்போனான். இவன் துவக்கத்தில் சாதுவும், சமாதானமுள்ள பிரபுவாகக் காணப்பட்டாலும், துன்மார்க்கனும், அவபக்தனுமானவன். இவன் காலத்தில் பாபிலோன் சிறையிருப்புத் துவக்கம். எரேமி. 26: 1. எசே. 19: 5—9. [இதைப் பற்றி விவரமாய் 1884 ம் வருஷத்தில் நற்போதகத்தில் எழுதிவைத்த பாபிலோன் சிறையிருப்பு சரித்திரம் பார்க்கவும்.]

### 19. யோயாக்கீன். (கர்த்தர் ஸ்திரப்படுத்துகிறார்.) கி. மு. 599.

இவனுக்கு எகொனியா என்றும், நிந்தையாக கோனியா என்னும் அழைக்கப்பட்டான். 2 இரா. 24: 6. எசே. 19: 5, 9. எரே. 22: 24—30.

இவன் 18 வயதில் இராஜாவாகி (3) மாதம் 10 நாள் அரசாண்டான். இவன் பாபிலோனுக்குச் சிறையாக அனுப்பப்பட்டான். எரேமி. 24: 1. 2 நாளா. 25: 8. இவனும் பொல்லாதவன். இவன் காலத்தில் 2 ம் சிறையிருப்பு நடந்தது.

20. சிதேக்கியா. (எகோவா நீதியுள்ளவர்.) கி. மு. 599.
2 நாளா. 36: 11—21. 2 இரா. 24: 17. எரே. 23: 16-40.
29: 8—11. எரே. 28, 29 அதி. 51: 59—64. எசே. 13.

யோயாக்கீனுக்குப் பிள்ளையில்லாததால், நேபுகாத்நேச்சார், அவனுடைய சிற்றப்பனாகிய மத்தனியாவைப் பேர் மாற்றி, அவனைத் தனக்குக் கீழ் இராஜனாக நியமித்தான். இவன் 21 வயதில் இராஜாவாகி, (11) வருஷம் ஆண்டான். இவன் கலகக்காரனும், இருதயக்கடினமுள்ளவனும், தேவத்துரோகமுமுள்ளவன். இவன் காலத்தில் நேபுகாத்நேச்சார் (3 ம்) விசையாக எருசலேமை முற்றிக்கைப்போட்டுப் பிடித்தான். இந்த முற்றிக்கையினால் பஞ்சம் மிகுதி. எரேமி. 39: 2. 52: 6. புலம். 4. 10. எசே. 5: 10—12. அந்தரங்க வழியாய் ஓடிப்போன சிதேக்கியாவும் பிடிபட்டு கண்களும் பிடுங்கப்பட்டும், பிள்ளைகளைக் கொல்லப்பார்த்தும், பாபிலோனுக்கு (2) வெண்கல விலங்கிடப்பட்டுப்போனான். எரேமி. 32: 5. 34: 3. கி. மு. 588 ல் பாபிலோன் சிறையிருப்பு 3 ம் விசை நடந்தது. தேவாலயத்துக்குரிய பண்டம்பாடிகளெல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டது. தேவாலயமும் சுட்டெரிக்கப்பட்டது. பட்டயத்துக்குத் தப்பினவர்கள் பாபிலோனுக்குச் சிறையாய்ப்போனார்கள். இவ்விதமாய்த் தேசம் பாழாயின. சிறைப்பட்டவர்கள் புலம்பினார்கள். சங். 137: 1. செழிப்பும் மகிமையுமுள்ள தேசம் பாழாயின. தேவன் எரேமியாவைக்கொண்டு சொன்ன 70 வருஷம் முடியுமட்டும் பயிரிடாமல் தேசம் பாழாயிருந்தது. எரே. 25: 9—26. 29: 10. அது தன் ஓய்வு வருஷத்தை முடித்தது. லேவி. 26: 34 சொல்லியபடி ஓய்வு வருஷத்தை ஆசரியாததால் இந்தத் தண்டனையும் வந்தது. யூதர் 70 ஓய்வு வருஷம் ஆசரியாததற்கு 70 வருஷம் சிறையிருப்பு நேரிட்டதென்பார்கள். ஓய்வு வருஷத்தில் அடிமைகளை விடுதலைசெய்யாத குற்றத்துக்காகவும் சிறைகளானதாக எரேமி. 34: 13 ல் காண்க. தேசம் பாழாய்க் கிடந்ததாலும், வேறே ஜாதியாருக்குக் கொடுக்கப்படாததாலும் யூதர் லேசாய்த் திரும்பக் குடியேறுவதற்குச் சாவகாசமாயிற்று.

எரேமியாவின் தீர்க்கதரிசனம் எப்போது எப்படி நிறைவேறுமென்று காத்திருந்த யூதருக்கு ஆறுதலாக அவர்களுடைய விடுதலையைப்பற்றிய சங்கதியும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. பாபிலோனில் துன்பப்பட்ட யூதருக்கு நம்பிக்கையுண்டாகவும், சிறைப்பட்டவர்களுக்குத் தீர்க்கதரிசனமுரைத்த எசேக்கியேல் தானியேலுடைய வார்த்தைகள் நிறைவேறுதலடைந்ததென்றும் காட்ட பிற்பங்கு எழுதப்பட்டது. சிறையிருப்பைப்பற்றிய கேள்விகளைப் பார்.

## கேள்விகள்.

1. யூத இராஜ்யத்தில் ஆண்ட இராஜாக்கள் எத்தனை பேர் எவ்வளவுகாலம் ஆண்டார்கள்.—அந்த இராஜ்யம் முடிவானதற்கு நியாயங்களென்ன?



2. இதில் பக்தியுள்ள இராஜாக்கள் யார்? எப்படி? துன்மார்க்கமுள்ள இராஜாக்களால் தேசத்துக்கு வந்த பலனென்ன?

3. யோசியா, யோயாக்கீம் காலத்தில் தீர்க்கதரிசனமுரைத்தவர்களார்? எப்படி?

---

# THE SECOND COMING OF CHRIST.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

### II. சுவிசேஷம் சகல ஜாதியாருக்கும் சாக்ஷியாகக் கூறப்படும்.

மதேயு 24: 14.

(தொடர்ச்சி.)

"இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாக்ஷியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்."

இயேசுவானவர் தம்மிடத்தில் வினாவின தம்முடைய சீஷர்களிடத்தில் தம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளங்களைச் சொன்னதில், மேற்சொல்லப்பட்ட அடையாளங்கள் நடந்தாலும் உடனே முடிவு வராதென்றும், மத். 24: 6. இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பமென்றும் மத். 24: 8. அதாவது 15 ம் வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற பாழாக்குகிற அருவருப்புக்குத் தலைவனாகிய பூச்சக்கரமெங்கும் வரப்போகிற சோதனைக்குத் தலைவனால் நேரிடும் துன்பங்களுக்கு ஆரம்பமென்றும் சொல்லுகிறார். வெளி. 3: 10. ஆனால் அவர் இராஜபட்டம்பெற்று இவ்வுலகத்திற்கு வந்து ஆளுகிறதற்கும் அப்பால் சகல மனிதர்களும் செய்த அவரவர்களுள்டய கிரியைகளுக்குத்தக்க பலனை அடைந்து இவ்வுலகம் முடிவுபெறுகிறதற்கும் எற்றகாலம். இவ்வுலகமெங்குமுள்ள தேசம். நாடு, பட்டணம், கிராமம், பட்டிகுடிசைகளிலும், தீவு, மலை, வனாந்தரமுதலான வானத்தின்கீழ் பூச்சக்கரமெங்குமுள்ள இடங்களில் வசிக்கின்ற ஆதாமின் வம்சத்தாரான சகல ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் இராஜ்யத்தின் இந்தச் சுவிசேஷம் சாக்ஷியாக அறிவிக்கப்பட்டுத் தீர்ந்தவுடனே அவர் உன்னதத்திலிருந்து இவ்வுலகத்தில் இராஜ்யபாரம்பண்ண வருவாரென்று திட்டமான காலத்தைக் குறித்திருக்கிறார். இந்நிமிஷம்வரை நமது கிறிஸ்துமகா ராஜா தம்முடைய ஆசனத்திற்கு வராததினாலே எந்தத் தீவிலோ, குகையிலோ, தேசத்திலோ, பட்டணத்திலோ, குடிசையிலோ வசிக்கின்ற நரஜீவன்களுக்கு இந்த நற்செய்தியாகிய இரக்ஷிப்பின் ஒளி எட்டவில்லையென்று திட்டமாக அறிந்துகொள்ளலாம். தேவதூதன் மேய்ப்பர்களுக்கு இரக்ஷிப்பின் அதிபதியாகிய இந்த மகா ராஜாவின் உற்பத்திகாலத்தில் அறிவித்ததற்கும், இவர் தாமே தம்முடைய வருகையின் காலத்தைத் திட்டமாய்த் தம்மு

டைய சீஷர்களுக்கு வெளிப்படுத்தினதற்கும் வித்தியாசத்தைக் காண்கி
ரோம். தூதன் சகல ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்
நற்செய்தியை அல்லது சுவிசேஷத்தை அறிவிக்கிறேனென்றும், கிறிஸ்து
வானவரோ இராஜ்யத்தின் சுவிசேஷம் அல்லது நற்செய்தி சாக்ஷியாக
அறிவிக்கப்படவேண்டுமென்றும் "இராஜ்யத்தின்" என்ற வார்த்தையைக்
கூட்டிச்சொல்லியிருக்கிறார்.

இவ்விரு பேர்களுடைய அறிவிப்புக்கும் ஒரே அருத்தத்தையுடைய
ஒரே பேராம். நற்செய்தியாகிய சுவிசேஷமே. சர்வலோகத்தின் ஜனங்
களுடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கவந்தவராகிய கிறிஸ்து இரக்ஷகரு
டைய பிறப்பாகிய நற்செய்தியை தூதன் அறிவித்தான். கிறிஸ்துவானவ
ரோ தாம் இவ்வுலகத்தில் மனு அவதாரமெடுத்து சர்வ ஜனங்களின் பாவங்க
ளைத் தம்முடைய சரீரத்தி ் தாங்கி சிலுவையில் அறையப்பட்டு மரணம்
அடைந்ததின்மூலமாய் நிவிர்த்திசெய்து இப்பிரஜைகளைச் சிறையாக்கிக்
கொண்டிருந்த பசாசானவனுடைய தலையை நசுக்கி வெற்றிசிறந்து தாம்
இறங்கிவந்த உன்னதத்திற்கு ஏறித் தம்மைப் பின்பற்றின மனுஷர்களுக்கு
நித்திய மேன்மையையும் வாழ்வையும் கொடுக்கும்படியாகவும் தாம் மர
ணத்தின்மூலமாய் உண்டுபண்ணின இரக்ஷிப்பை அசட்டைசெய்து தம்
மைப் பின்பற்றாதவர்களுக்குத் தண்டனைகொடுக்கும்படியாகவும் இராஜ்
யபாரம்பெற்று இவ்வுலகத்திற்கு வந்து அரசாளுவாரென்று முன்னுரைக்
கப்பட்டபடி இராஜாவாக வருவாரென்று காட்டுகிற அல்லது அவரு
டைய வருகைக்கு எதிர்பார்த்திருக்கிறவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்
கிற இந்தச் சுவிசேஷம் சாக்ஷியாகக் கூறப்படவேண்டுமென்று சொல்
லுகிறார். இராஜ்யத்தின் சுவிசேஷம் என்ற வார்த்தையின் கருத்தாவது,
இராஜ்யத்தை அறிவிக்கிற நற்செய்தியென்று அர்த்தமாகும். நற்செய்தியா
வது ஒருவர் வேறொருவருக்கு அனுப்புகிற செய்தி. இதுவோ தேவன்
மனிதருக்கு அனுப்புகிற செய்தி. கிங்டம் என்பதே கிறிஸ்துவால் கூட்
டிச்சொல்லப்பட்ட வார்த்தை. கிங், இராஜா டம் டொமினியன் (இராஜ்
யம்) இரண்டும் சேர்ந்து இராஜாவின் இராஜ்யம். சுருக்கிச் சொல்லில்
இராஜ்யமென்றும் வழங்கப்படுகிறது. சுவிசேஷத்திற்கு நாலுவகைப் பே
ருண்டு. (1) விருத்தசேதன சுவிசேஷம். அதாவது யூதர்களுக்குரிய சுவி
சேஷம். இதில் நற்செய்திக்குக் காரணராகிய கிறிஸ்து இயேசு இரக்ஷக
ரைப்பற்றி வாக்குத்தத்தம் தீர்க்கதரிசனமாகவும், முன்னடையாளக் குறிப்
பாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. (2) புறத்தேசத்தாருடைய சுவிசே
ஷம். இது இவ்வுலகிலுள்ள சகல மனுஜாதிகளுக்கும் தகப்பனாகிய ஆதா
முக்கு அவனுடைய வித்தாராகிய சகல ஜனங்களையும் சிறையாக்கி தம்
முடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படுத்திக்கொண்ட பசாசானவனுடைய
தலையை நசுக்கி சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கும்படி ஸ்திரீயின்
வித்தானவர் தோன்றுவாரென்று ஆதி. 3: 15. 1. யோவா. 3: 8. உரைத்த
தேவவாக்குப்படி உலக ரக்ஷகர் தோன்றி தம்முடைய மரணத்தினாலே
பசாசின் தலையை நசுக்கினாரென்றும், இந்தச் செய்தியை உலகமெங்கும்
போய் சகல ஜனங்களுக்கும் அறிவித்து ஞானஸ்நானம்கொடுங்கள் விசு
வாசமுள்ளவனாகி ஞானஸ்நானம்பெற்றவன் இரக்ஷிக்கப்படுவான். விசு
வாசியாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவானென்று உரைத்தபடி
புறத்தேசத்தாருக்குக் கூறப்படுகிற சுவிசேஷம். மாற். 16: 15, 16. (3)
இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம். இது நம்முடைய ஆதித்தகப்பன் தாயா
கிய ஆதாம் ஏவாள் என்பவர்கள் முதல் சகல ஜனங்களும் எதிர்பார்த்தி



ருந்தவர் ஆதிவாக்குப்படி குறித்த காலத்தில் ஸ்திரீயின் வித்தில் பிறந்து
(கலா. 4: 5.) சகல ஜனங்களுடைய பாவங்களுக்காகத் தம்மையே தேவ
னுக்கேற்கும் பலியாக ஒப்புக்கொடுத்து பசாசின் தலையை நசுக்கின
வராய் வெற்றிசிறந்து உன்னதத்திற்கேறி சிறையாக்கினவைகளைச் சிறை
யாக்கி சங்கீதம் 68: 18. யூதனானாலும் புறத்தேசத்தானானாலும் யார் தம்
மைத் தனக்கு மத்தியஸ்தராக ஏற்றுகொண்டு விசுவாசித்திருக்கிறானோ
அவனுக்காக தேவனிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறாரென்று காட்
டுகிற சுவிசேஷம். (4) இராஜ்யத்தின் சுவிசேஷம். இது மூன்றாவதில்
சொல்லியபடிக்கு பசாசின் தலையை நசுக்கி, உன்னதத்திற்கேறினவர்
மறுபடியும் இவ்வுலகத்திற்கு வந்து பசாசின் அதிகாரத்தை முற்றிலும்
இவ்வுலகத்திலில்லாமல் அழித்து தம்மைப் பின்பற்றி விசுவாசித்தவர்க
ளுக்கு இராஜரீக மேன்மையைக் கொடுத்து தாமே இராஜாவாக இருந்து
ஆளுகைசெய்வாரென்பதைக் காட்டுகிறதே. இராஜ்யத்தின் சுவிசேஷம்,
இந்நாலு வகையுடைய சுவிசேஷம், நாம் கையாடிவருகிற இந்த ஒரே
சுவிசேஷமாம். இந்தச் சுவிசேஷமே இவ்வுலகமெங்குமுள்ள சகல ஜன
ங்களுக்கும் சாக்ஷியாகக் கூறப்படவேண்டும். இதினாலே சகல ஜனங்
களும் இந்தச் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றல்ல. இதி
லடங்கிய பொருளாகிய இயேசுகிறிஸ்துவாகிய உலக ரக்ஷகரைப்பற்றிக்
கூறப்படக் கேள்விப்பட்டிருக்கவேண்டும். இப்படியாக இவ்வுலகத்தி
லுள்ள சகல ஜனங்களுடைய செவிகளிலும் கிறிஸ்து ரக்ஷகரைப்பற்றிய
தொனி எட்டி, ரோமர் 10: 15 முடிந்தவுடனே நம்முடைய கிறிஸ்து மகா
ராஜா இவ்வுலகத்திற்கு வருவாரென்பதற்குக் குறிப்பாகும்.

திருஷ்டாந்தமாக, ஒரு பிரயாணி ஒரு பட்டணம்போய்ச் சேர்ந்து
தான் போகவேண்டிய வீடு இருக்கிற இடம் தெரியாமல் ஒரு சிநேகிதனி
டத்தில் இன்னாருடைய வீடு எந்த இடத்தில் இருக்கிறதென்று விசாரிக்
கையில் அச்சிநேகிதன் தான் நிற்கிற இடத்திலிருந்து ஒரு திசையைக்
காண்பித்து அவ்வழியாய்ப் போகச் சொல்லி தான் போகிற மார்க்கத்தின்
இடதுபுறத்தில் ஒரு பஞ்சு ஆபீசு காணப்படும். அதைக்கடந்து சென்றால்
வலதுபக்கம் புகைவண்டி ஸ்றேஷன் காணப்படும். அதையும் கடந்து
நேரேபோனால் இடதுகைப்புறத்தில் ஒரு பெரிய அச்சு அடிக்கிற ஆபீஸ்
இருக்கிறது. இதையும் கடந்து சற்றுதூரம் போனால் இடதுபுறத்தில் புத்
தகங்கள் விற்கிற ஒரு பெரிய கட்டிடமுண்டு. அந்தக் கேற்றுவாசலில்
ஒரு பெரிய தீபஸ்தம்பமும் அதோரத்தில் ஒரு உயர்ந்த கைகாட்டி மரமு
முண்டு. அது புத்தகசாலையிலிருந்து எதிரே நீட்டினதாயிருக்கும். அந்தக்
கைகாட்டிக்கு எதிராக இருக்கிற பெரிய கட்டிடமே நீ போகவேண்டிய
வீடு என்று சொல்ல பிரயாணி தைரியமாயும் சந்தேகப்படாமலும் போய்ச்
சேருகிறதுபோல இரக்ஷகர் சொன்ன இந்த அடையாளமும் அவருடைய
வருகையின் காலத்தைக் குறிப்பாகக் காட்டுகிறதென்பதற்குச் சந்தேக
மில்லை. இந்த ராஜ்யத்தின் சுவிசேஷமானது ஒரு சிறிய கடுகுவிதை
போலிருந்து உலகமெங்கும் படரத்தக்க பெரிய மரமாயிற்றென்று கிறி
ஸ்துவானவர் சொன்ன உவமைப்படிக்கு பிரபலியமாகி வருகிறது. மத்.
13: 31, 32.

I. அதைப்பற்றித் துவக்கமுதல் காலதிட்டத்தின்படி ஒழுங்காய்ப்
பார்ப்போம்.

(1) கடுகுவிதையைப்போன்ற சுவிசேஷ இராஜ்யத்திற்குக் காரண
ராகிய கிறிஸ்துநாதர் தாமே அவ்விராஜ்யத்தைக்குறித்து (3½) மூன்றரை

வருஷக்காலமாய் யூதேயா, சமாரியா, கலிலேயாமுதலான நாடுகளில் அலைந்து திரிந்து பிரசங்கம்பண்ணி தம்முடைய உபதேசத்தை மெய்ப்பித்து உறுதிப்படுத்தும்படியாக மனுஷரால் செய்யக்கூடாத அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் போதித்த ஞானோபதேசத்தைக் கேட்டவர்களாலும் அவர் செய்த அற்புதக் காக்ஷியைப் பெற்றவர்களாலும் கண்டவர்களாலும் பல இடங்களிலுமுள்ள ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(2) பெந்தெகோஸ்தேநாளில் தேவன் தமது சபையை வெளியரங்கமாய் ஸ்தாபிக்கவேண்டுமென்று கருதி பரிசுத்தஆவி சீஷர்கள்பேரில் இறங்கி ஜொலிக்கும்படி செய்தார். அக்காலத்தில் பேதுரு அப்போஸ்தலன் இரக்ஷிப்பின் நற்செய்தியாகிய சுசேஷத்தை அறிவிக்க பார்தியா, மேதியா, எலாமீத்தியா, மெசோப்பொத்தாமியா, யூதேயா, கப்பதோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சிரேனே, லிபியா, ரோமை, கிரேத்தா, அரபியாமுதலான தேசங்களிலுள்ள ஜனங்கள் கேட்டார்கள். அவர்களில் 3000 பேர் தாங்கள் கேட்ட நற்செய்திக்குப் பொருளாகிய கிறிஸ்துவை விசுவாசித்து வெளியரங்கமான கிறிஸ்து சபையானார்கள். அதற்குப்பின்பு அவ்வுபதேசத்தினாலே 2000 பேரும் ஆக 5000 பேர் கிறிஸ்தவர்களானார்கள்.

(3) 35ஆமாண்டில் உதவிக்காரரில் ஒருவனாகிய பிலிப்புவினால் சமாரியா நாட்டில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு அநேகர் விசுவாசித்தார்கள்.— எத்தியோப்பியாவிலுள்ள இராஜாவுடைய மந்திரிக்கும் அறிவிக்கப்பட்டு அவனும் விசுவாசித்தான். அவன்மூலமாய் அந்தத் தேசமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(4) 36 ல் பிலிப்புதவிர மற்ற சீஷர்கள்மூலமாய் செசாரியா, பித்தலோமே, தமஸ்குமுதலான இடங்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டில் பவுலும் குணப்பட்டு கிறிஸ்துவின் ஊழியக்காரனானான்.

(5) 41 ல் பவுல் அரபிதேசத்திற்கும் போய்ச் சுவிசேஷத்தை அறிவித்தான்.

(6) 43 ல் சீரியாதேசத்தின் அந்தியோகியா பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு பவுப்போஸ்தலன் போதித்து முதலாவது கிறிஸ்து சபை என்ற பேர் ஸ்தாபிக்கப்பட்டது. செசாரியாவிலுள்ள கொர்நேலியுவுக்கும் அவ்விடத்து ஜனங்களுக்கும் பேதுரு அப்போஸ்தலன் போதித்து சபையை ஸ்தாபித்தான்.

(7) 45 ல் பவுலும் பர்னபாவும் மாற்கும் சீப்புரு தீவுக்கும் சின்ன ஆசியாவின் தென்பாகமாயிருக்கிற பம்பிலியா, பிசிதியா, லிக்கோனியா, செலுக்கியா, சாலமிஸ் பாப்போஸ், பெர்கே, இக்கோனியா, லிஸ்திரா, தெர்பைமுதலான இடங்களில் சுற்றித்திரிந்து சுவிசேஷத்தை அறிவித்து சபையை ஸ்தாபித்தார்கள்.

அப். 13, 14 அதி. பவுலும் சீலாவும். அப். 13, 14 அதி.

(8) 50 ல் சீரியா, சிலுக்கியா, பிரிகியா, கலாத்தியா, மீசியா, துரோவா, பித்தினியா, சமோத்திரோகியா, நியாப்போலி, மக்கேதோனியாவின் பிலிப்பு பட்டணம், அம்பிப்போலி, அப்பலோனியா, தெசலோனிக்கே, பிரோயா, அத்தேனே, கொரிந்து, அகாயா, கெங்கெரியா, எபேசு, செசாரியாமுதலான இடங்களுக்கு இந்தச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து கிறிஸ்து சபையை ஸ்தாபித்தார்கள்.



பவுலும் தீமோத்தேயும். அப். 15: 36. 18: 22.

(9) மறுபடியும் அந்தியோகியாவிலிருந்து கலாத்தியா, பிரிகியா, எபேசு, மக்கதோனியா, கிரேக்கதேசம், கொரிந்து, அகாயா, பிலிப்பு, துரோவா, அஸ்ஸோஸ், மித்தலேனி, கையாஸ்தீவுகள், துரோகில்லியம், மிலேத்தேதீவுகள், கூஸ், ரோதுதீவுகள், பத்தாரா, தீரு, பித்தலோமி, எருசலேம்முதலான இடங்களில் சுவிசேஷத்தைக் கூறினார்கள்.

---

## கனம் ரேனியூஸ் ஐயரவர்கள் எழுதிய ஒரு காகிதம்.

*புதுப்பட்டியில் கிறிஸ்து சபையில் சேரவிருப்பமாயிருக்கிற சனங்களுக்கு கருத்தாவினுடைய ஆசீர்வாதமுண்டாக வாழ்த்தி யெழுதின உத்திரவு என்னவென்றால்,*

அவ்விடத்தில் யிரண்டு வீட்டுக்காரர் கருத்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் படித்தறிந்துகொள்ளவும் அதினாலே உங்களுடைய ஆத்தும ரட்சிப்பைத் தேடிக்கொள்ளுகிறதற்கேதுவான மெய்ஞ்ஞானத்தை யடையும்படிக்கு விருப்பமுள்ளவர்களாயிருக்கிறதாகவுங் கேள்விப்பட்டு சந்தோஷமடைந்து உங்களுக்கு இரட்சகருடைய கிருபையுண்டாகும்படிக்கு செபம்பண்ணுகிறோம். நீங்கள் உங்களுடைய அழிவில்லாத ஆத்துமாக்களுக்கு நித்தியமான பலனைத் தேடிக்கொள்ளுவதே யிவ்வுலகத்தில் உங்களுக்கு முக்கியமான அலுவல்யிருக்கவேண்டும். இந்த காரியத்துக்காகவே கருத்தர் உங்களுக்கு சீவகாலத்தை யனுக்கிரகித்திருக்கிறார். ஆகையால் உங்களுக்கு மெய்யான ஒரே தேவனாகிய பராபரனையும் அவர் பாவிகளாகிய நம்மை யிரட்சிக்கும்படிக்கு யிவ்வுலகத்திலனுப்பின இயேசுகிறிஸ்துவையுமறிந்து விசுவாசித்து ரட்சிப்படையும்படிக்கேதுவான சுவிசேஷ போதகங்களைப் படித்துக்கொள்ளும்படிக்கு யிந்த உத்திரவு கொண்டுவருகிற அருளப்பன் உபதேசியாரை யனுப்பியிருக்கிறோமானதால் நீங்களும் உங்களுடைய பெண்சாதிகளும் பிள்ளைகளும் நாடோறுங் காலைமாலையிலும் ஓய்வுநாள்களிலும் ஒரிடத்தில் சந்தோஷமாய் கூடிவந்து ஞானபோதகமுதலான தேவவசனங்களைப் படித்தறிந்து உங்களுக்கு பாவமன்னிப்பும் பரிசுத்தமான குணமும் பாக்கியமுமுண்டாகும்படிக்கு செபம்பண்ணி யிவ்விதமாய் மோட்ச மகிமைக்கு பாத்திரவான்களாகும்படிக்கு சாக்கிரதையாய் விரும்பி பிரயாசப்படுவீர்களாக.

௲௮௱௩௰௨௵<br>அகற்றோபர்௴ 1௳<br>முருகன்குறிச்சி } ஒப்பந்தம். C. T. Rhenius.

புதூரிலிருக்கிற சபைக்கு அனுப்பின நிருபம்.

சிரீவில்லிபுத்தூர் மாணிக்கம் அந்தோணி உபாத்தியாரிடத்திலிருந்து இதின் அசல் கடிதம் கிடைத்தது.

---

1885ஆு குலாய்ஸ்ரீ 14௳ மகாகனம்பொருந்திய டாக்ற்றர் சார்ஜென்று அத்தியக்ஷரவர்களுடைய திவ்விய பணிவிடை யூபிலி உற்சவம்கொண்டாடினபோது வாசிக்கப்பட்ட

## திருநெல்வேலிச் சபையின் விர்த்தாந்தம்.

(தொடர்ச்சி.)

சபைக் கணக்கு.

| | கிராமங்கள். | ஞானஸ்நானம் பெற்றவர்கள். | ஞானஸ்நானம் பெறுதவர்கள். | தொகை. | நற்கருணை சேர்ந்தவர்கள். | ஆசாமிகள். | | | | | பள்ளிக்கூடங்கள். | பள்ளிப்பிள்ளைகள். | | சந்தப்பணம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஐயன்மார். | உபதேசிமார். | உபாத்திமார். | உபாத்திச்சிமார். | தொகை. | | ஆண். | பெண். | |
| 1835 | 224 | | | 8693 | 11 4 | 1 | 103 | 80 | | 184 | 112 | 2257 | 147 | |
| 1885 | 1008 | 44039 | 12248 | 5628 7 | 11246 | 68 | 153 | 417 | 130 | 768 | 476 | 10693 | 2517 | 33057 11 3 |

கர்த்தர் அநுக்கிரகம்பண்ணின எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கே தோத்திரமுண்டாவதாக. ஆமென்.



# சமாசாரத்திரட்டு.

இந்தியாவில் புதிதாய் இருப்புப்பாதைகள் போடுவதற்காக இங்கிலாந்தில் கோடிபவுன் கடன் வாங்கும்படி இந்தியா மந்திரியவர்களுக்கு காமன்ஸ் சபையார் அதிகாரம் கொடுத்திருக்கிறார்களென்று லண்டனிலிருந்து வந்த நாளது ஸ்ரீ 7௳ தந்தி சமாசாரத்தால் தெரியவருகிறது.

கடன்வாங்கிக் கொடுக்கத் திராணியற்றவர்களைச் சிறையிலடைத்தல் தகாதென இல்பெர்ட் பிரபுவால் வாதிக்கப்பட்ட வாதம் அநுகூலமாகியது. அதனைக்குறித்துச் சட்டமொன்று புதிதாக அமைக்கப்படப் போகின்றதாம். இதனாற் கடன்கொடுத்தலும், வாங்குதலும், துன்பப்படுதலுமாகிய மூன்றுங் குறைந்துவிடுமென்பதில் ஐயமில்லை.

சமாசாரங்கொண்டு செல்லும் புருக்கள்:—பாரீஸ் நகரத்தை முற்றுகை செய்தபோது புருக்களைக்கொண்டு சமாசாரப் போக்கு வரவுகளைச் செய்துவந்தார்கள். அப்படியே இப்போதிராணுவ வகுப்பு மந்திரியாராளுகையிலே ஜர்மன் அரசாக்ஷியாரிடம் 350-புருவும், பிரான்சரசாட்சியாரிடம் 300-புருவும் அவ்வாறு பழக்கஞ்செய்து வருகிறார்களாம். அங்கிலேய அரசாக்ஷியாரவ்வாறு 2,000-புருக்களைப் பழக்கிவருகிறார்களாம். அதிலே 400-புருக்களை 200-மைல்வரையிலே பறந்தோடப் பழக்கஞ்செய்திருக்கிறார்களாம். ஆனால் குளிர்ந்த பனிக்காலத்திலே இந்தப் புருக்கள் ஒன்பதுக்கு ஆறு இறந்துவிடுகிறதாம். 1876-ம்ஞு பாரீஸ் நகரத்தை முற்றுகைசெய்தபோது புகைக்கூண்டு மார்க்கமாய்ப் பாரீஸிலிருந்தனுப்பிய ஒரு புரு ஜர்மன் தேசத்தாரிடம் அகப்பட்டுக்கொண்டது. அதை பிரெடிரிக்சார்ல்ஸ் என்னும் இராஜகுமாரர் தமது தாயாருக்கனுப்ப அப்பெருமாட்டி 2-வருஷம்வரையிலே வைத்திருந்தும், பின்பு அது தப்பியோடித் தனது இருப்பிடம் வந்து சேர்ந்துவிட்டது. இவ்விதப் புருக்கள் ஒருநாளிலே 40-மைல் பறந்தோடக் கூடுமாம்.

திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் டிஸ்திரிக்ட் முனிசீபாகிய ம-ா-ா-ஸ்ரீ கே. இராமசந்திர ஐயர் அவர்கள் ஸயிட் மஸ்டாபா சாஹிப் பஹதூர் அவர்களுக்குப் பதிலாக தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள வில்லியபுரம் டிஸ்திரிக்ட் முனிசீபாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சேலம் ஜில்லா கிருஷ்ணகிரி டிஸ்திரிக்ட் முனிசீபாகிய ம-ா-ா-ஸ்ரீ எஸ். பொன்னுசாமி முதலியார் அவர்கள் ம-ா-ா-ஸ்ரீ கே. இராமசந்திர ஐயர் அவர்களுக்குப் பதிலாக திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஸ்ரீவைகுண்டம் டிஸ்திரிக்ட் முனிசீபாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(க—ன். ஜுன் ஸ்ரீ 14௳.)

ஜூன்மீ நாள்-30. வைகாசிமீ 20உ முதல், ஆனிமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௨௰ | அந்த ஆசாரியன்: சமாதானத்தோடே போங்கள்...என்றான். |
| பு | 2 | ௨௧ | உன் குறைவுகளெல்லாம் என்மேலிருக்கட்டும். நியா. 19:20. |
| வி | 3 | ௨௨ | பினெகாஸ் அந்நாட்களில் அவருடைய சந்நிதியில் நின்றான். 20: |
| வெ | 4 | ௨௩ | அவர்களுக்குச் சமாதானம்கூற...மனுஷரை அனுப்பினார்கள். 21 |
| ச | 5 | ௨௪ | உம்முடைய தேவன் என்னுடைய தேவன். ரூத். 1: 16. (18 |
| ஞா | 6 | ௨௫ | உன்னை விசாரித்தவன் ஆசீர்வதிக்கப்படுவானாக. 2: 19 |
| தி | 7 | ௨௬ | மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக. 3: 10. |
| செ | 8 | ௨௭ | நீ...பெத்லெகேமிலே புகழ்பெற்றிருக்கக் கடவாய். 4: 11. |
| பு | 9 | ௨௮ | அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன். 1 சாமு. 1: 28. |
| வி | 10 | ௨௯ | அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார். 2: 9. |
| வெ | 11 | ௩௰ | சாமுவேலுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். 3: 21. |
| ச | 12 | ௩௧ | தேவன் பாளையத்தில் வந்தார். 4: 7. (5: 8. |
| ஞா | 13 | ௧ | தேவனுடைய பெட்டியை எடுத்துச் சுற்றிக்கொண்டுபோனார்கள். |
| தி | 14 | ௨ | குற்றநிவாரணக் காணிக்கையை எவ்விதத்திலும்...செலுத்தவேண் |
| செ | 15 | ௩ | அதற்கு எபெனேசர் என்று பேரிட்டான். 7: 12. (டும். 6: 3. |
| பு | 16 | ௪ | எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேணடும். 8: 19. |
| வி | 17 | ௫ | இதுவரைக்கும் இது உனக்காக வைக்கப்பட்டிருந்தது. 9: 24. |
| வெ | 18 | ௬ | கர்த்தர் தெரிந்துகொண்டவனைப் பாருங்கள். 10: 24. |
| ச | 19 | ௭ | எங்களோடே உடன்படிக்கைபண்ணும். 11: 1. |
| ஞா | 20 | ௮ | எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார். 12: 24. (22. |
| தி | 21 | ௯ | ஜனங்களில் ஒருவர் கையிலும் பட்டயம்...இல்லாதிருந்தது. 13 |
| செ | 22 | ௰ | தேவன் துணைநிற்க அவன் இன்று காரியத்தை நடப்பித்தான். 13: |
| பு | 23 | ௧௧ | இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய்சொல்லுகிறதுமில்லை. 15: |
| வி | 24 | ௧௨ | கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். 16: 7. (17: 47. |
| வெ | 25 | ௧௩ | கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல. |
| ச | 26 | ௧௪ | கர்த்தர் அவனோடே (தாவீதோடே) கூட இருந்தார். 18: 14. |
| ஞா | 27 | ௧௫ | பொல்லாத ஆவி சவுலின்மேல் வந்தது. 19: 9. |
| தி | 28 | ௧௬ | கர்த்தர் என்றைக்கும்...நடுநிற்கும் சாட்சி. 20: 42. |
| செ | 29 | ௧௭ | தாவீது கொன்றது பதினாயிரம். 21: 11. (பானே? 22: 7 |
| பு | 30 | ௧௮ | ஈசாயின் மகன்...உங்களெல்லாரையும்...அதிபதிகளுமாக வைப் |

## விசேஷ நாட்கள்.

2. அமாவாசை.
3. கர்த்தர் பரத்துக்கேறின திருநாள்.
6. பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.
11. பரி. அப். பர்னபாவின் திருநாள்.
13. பரிசுத்தாவியின் பண்டிகை.
16. பௌரணமி.
20. திரித்துவ ஞாயிறு.
27. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 1—ம் ஞாயிறு.
29. பரி. பேதுருவின் திருநாள்.

# நற்போதகம்.

௭. ஜூலாய்மீ. ௲௮௱௮௰௬ வரு.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணுக்கன்.

**537**. அப் 2: 3. "அக்கினிநாவுகளைப்" பற்றி என்ன தெரியும்?

அங்கே கூடிவந்திருந்த ஒவ்வொருவர்மேலும், ஒவ்வொரு அக்கினி நாவு வந்து அமர்ந்தது. இந்த நாவுகள்: மத் 3: 1 லூக் 3: 16 யோ 1: 33ன் நிறைவேறுதலாக, பரிசுத்தஆவியினாலும், அக்கினியினாலும் அவர்கள் ஞானஸ்நானம்பண்ணப்பட்டதைக் காட்டுகின்றன.

## பல கேள்விகள்.

**538**. சங்கீதம் 19: 2. "பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிற" தெப்படி?

ஒரு பகல் மறுபகலுக்கு வார்த்தைகளைப் பொழியத்தக்கதாக அத்தனை பொருளுள்ளதும், படிப்பினையுள்ளதுமாயிருக்கிறதென்றர்த்தம். அப்படியானால் நாளையத்தினத்துக்காக இன்றையத்தினம் நமக்குச் செய்த பிரசங்கங்களென்ன? படிப்பித்த பாடங்களென்ன என்று நாடோறும் ஆராயக்கடவோம்.

**539**. மாற்கு 1: 1ல் தேவனுடைய குமாரன் என்ற வார்த்தைகள் வருகிற சம்பந்தமென்ன?

கிறிஸ்துநாதர் உலகத்துக்கு என்ன சம்பந்தமாயிருக்கிறார் என்பதைக் காட்ட நோக்கமுள்ளவராய், பரி. மாற்கு இந்த வார்த்தைகளை எழுதுகிறார். என்ன சம்பந்தமாயிருக்கிறாரென்றால், இந்த உலகத்துக்கு அவர் சர்வ

சுதந்தர பாத்தியதையுடைய தேவகுமாரனுயிருக்கிறர் என்பதாம். ஆகவே 16: 15ல் ''சர்வ சிருஷ்டிக்கும்'' என்ற வார்த்தைகள், எத்தனை நியாய பலத்தோடு வருகிறதென்று கவனித்துக்கொள்ளவும்.

**540.** *மத் 3: 13—17. மாற்கு 1: 9—11. லூக் 3: 21, 22. யோவான் 1: 29—34 வாசி. கிறிஸ்துவானவர் ஞானஸ்நானம்பெற்றபொழுது, அவர் மேல் பரிசுத்தஆவி இறங்கினதைப்பற்றிக் கவனிக்கவேண்டியதென்ன? அதைப்பற்றி உண்டான கொள்கைகளென்ன?*

நமது கர்த்தர் மனுஷாவதாரஞ்செய்ததுமுதல், பரிசுத்தஆவியானவர் நமது கர்த்தருக்குள்ளும், கர்த்தரோடும், இடைவிடாமல் எப்பொழுதுமிருந்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் கர்த்தர் ஞானஸ்நானம்பெற்றபொழுது, அவருக்கு உத்தியோகத்தையும் அதிகாரத்தையும் அளித்து அபிஷேகம்செய்கிறவராக அவர்மேல் இறங்கினர். பெந்தெகொஸ்தே பண்டிகையிலும் அப்படித்தான் ஆவிக்குரிய வரங்களை நிறைவாய் அளிக்கிறவராக சீஷர்மேல் இறங்கினர். இந்தக் கிரியை, ஒருவனைப் பாவத்தினின்று சுத்திகரித்து, அவனைப் பரிசுத்தவானுக்கும்படி, பரிசுத்தஆவியானவர் செய்கிற கிரியைக்கு முற்றும் வித்தியாசமானது. இந்த வித்தியாசம் வேதத்தில் தெளிவாய்ப் போதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க, ஆதிகாலத்துப் பாஷண்டர்களான செரிந்தஸ் (Cerinthus), டோசிற்றி (Docetae) என்பவர்கள் இந்த வித்தியாசத்தைப் பகுத்தறியாமல், நமது கர்த்தர் ஞானஸ்நானம்பெற்றபொழுது பரிசுத்தாவியானவர் இறங்கினதை, இயேசுவுக்குள் வாசம்செய்யும்படி அவர்மேல் நித்திய கிறிஸ்து இப்பொழுது வந்திறங்கினர் என்று சாதித்தார்கள். இந்தக் கொள்கையை நவீன காலத்துச் சாஸ்திரிகளான ஸ்ட்ரூஸ் (Strauss), கோஸ்ட்லின் (Kostlin), வால்க்மர் (Volkmar), ஹில்ஜன்பீல்ட் (Hilgenfield), ஹால்ட்ஸ்மன் (Holtzmann) என்பவர்களும் அநுசரித்திருக்கிறார்கள். இது தப்பறை. மேலும் கிறிஸ்துநாதர் ஞானஸ்நானம்பெற்றபொழுதுதான் பரிசுத்தாவியானவர் முதலாவதாக அவருக்குக் கொடுக்கப்பட்டார் என்று எபியோனியர் (Ebionites) சொன்னதும்; அவர் ஞானஸ்நானம்பெற்றபொழுது, மனுஷனை இயேசுவோடு, லோகாஸ் (Logos) இணைக்கப்பட்டதென்று கினேஸ்த்திக்கர் (Gnostics) சொன்னதும் தப்பறையாம்.

**541.** *யோவான் 1: 31. ''நானும் இவரை அறியாதிருந்தேன்'' என்றல் அர்த்தமென்ன?*

இவரை மேசியாவாக அறியாதிருந்தேன் என்றர்த்தம் (வா 26 பார்). இந்த வாக்கியத்தில் ''நானும்'' என்ற வார்த்தையை, ஊன்றி வாசிக்க வேண்டும். யோவான்ஸ்நானன் தன் உத்தியோகத்தை ஆரம்பிக்கும்நாள் வரையும் வனாந்தரங்களிலே இருந்தான் (லூக் 1: 80). அவ்விடத்திலே



தான் தன் வேலைக்கு ஆயத்தப்பட்டான். பரி. லூக்காவின் சரித்திரநடையைப் பார்க்கும்போது, அவன் இதுவரையும் கிறிஸ்துநாதரை நேரே கண்டு பழகியிருந்தானே இல்லையோ என்பதைப்பற்றிச் சந்தேகமிருக்கிறது.

எலியா வந்து மேசியாவை அபிஷேகம்பண்ணுகிறவரையும், மேசியா ஒருவருக்கும் தெரியப்படாதிருப்பார் என்று யூதர் பொதுவாய் நம்பி வந்ததாக ஜஸ்ற்றின் சொல்லுகிறர்.

32. பரிசுத்தாவியானவர் புருவைப்போலிறங்கினதைக் கர்த்தர் கண்டதுமல்லாமல் (மத் 3: 16), யோவான்ஸ்நானனும் கண்டான். இந்தக் காட்சி, உருக்கத்துக்கும், குற்றமின்மைக்கும் (மத் 10: 16), சாந்தத்துக்கும் குறிப்பானது.

**542.** *யோவா 1: 32. ''தங்கினது'' என்ற வார்த்தையின் அர்த்தமென்ன?*

ஒருக்காலும் அவரைவிட்டு நீங்காமல் நிலையாயிருந்தது என்றர்த்தம் (ஏசா 11: 2). தீர்க்கதரிசிகளின்மேல் ஆவியானவர் ஓரோர்காலத்தில் மாத்திரம் இறங்கினர் (2 ராஜா 3: 15). ஆனால் கிறிஸ்துநாதரைவிட்டு அவர் ஒருநாளும் விலகாமல் நிலையாய் வாசம்பண்ணினர்.

**543.** *யோவா 1: 33ல் கவனிக்கவேண்டியதென்ன?*

யோவா 3: 5. மத் 3: 11 வாசி. உள்ளான சுத்திகரிப்பும், வெளியான சுத்திகரிப்பும் இணைக்கப்பட்டிருக்கிற விதத்தைக் கவனிக்கவேண்டும். இந்த வக்கணை யோவேல் 2: 28லிருந்து எடுத்தது.

**544.** *யோவா 1: 29—34ஐ முதல் மூன்று சுவிசேஷங்களோடே ஒத்துப் பார்த்து அறியவேண்டியதென்ன?*

(1) கர்த்தர் ஞானஸ்நானம்பெற்றதும், சோதிக்கப்பட்டதும், யோவா 1: 19க்கு முந்தி வரவேண்டும். கர்த்தர் ஞானஸ்நானம்பெற்றபொழுது தான் யோவான்ஸ்நானன் அவரை மேசியா என்று நிச்சயமாய் அறிந்தான் (யோ 1: 26, 33). கர்த்தர் ஞானஸ்நானம்பெற்ற உடனே சோதிக்கப்படப் போனர். அவர் ஞானஸ்நானம்பெற்றதற்கும், சோதிக்கப்பட்டதற்கும் இடையில் யாதொரு காலதாமதமிருந்ததில்லை (யோவா 1: 29, 35). கர்த்தர் சோதிக்கப்பட்டதைப்பற்றி, யோவான்ஸ்நானனுக்குத் தெரியாதென்றும், கர்த்தர் சோதிக்கப்பட்டுத் திரும்பினதை யோவா 1: 29ல் காட்டியிருக்கிறதென்றும் பெரும்பாலும் நிதானிக்கத்தகும்.

(2) முதல் மூன்று சுவிசேஷங்களில் யோவான் சாட்சியிட்டதைப்பற்றிச் சொல்லியிருக்கிற விபரம், கர்த்தர் ஞானஸ்நானம்பெற்றதற்கு முந்திய காலத்தில் நடந்தது. அந்தச் சாட்சி, பொதுவான ஜனங்களைப் பார்த்துச் சொல்லப்பட்டது. பரி. யோவான் சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிற சாட்சியோ, சனகிரீம் சங்கத்தார் விசேஷித்த வகையாய்

அனுப்பின தூதாள்களுக்கும், யோவான்ஸ்நானனுடைய சீஷருக்கும் சொல்லப்பட்டது.

(3) யோவான் எழுதுகிற சரித்திரத்தின் திட்டவட்டத்தையும், காலம், இடம், பார்வை, ஸ்திதி ஆகிய இவற்றை நுட்பமாய் எழுதுவதையும் பார்க்கும்போது, ஒரு கண்கண்டசாட்சியினுடைய வேலையை அவன் சொல்லுகிறதாக விளங்குகிறது.

(4) யோவான்ஸ்நானன் கொடுத்த சாட்சிதான், கிறிஸ்துநாதர் முதல்முதல் பகிரங்கமாய் வெளிப்பட்டதைச் சொல்லியது.

(5) கிறிஸ்துநாதர் ஞானஸ்நானம்பெற்றபொழுது பரிசுத்தஆவியானவர் இறங்கினது, யோவான்ஸ்நானனுக்குக் கிறிஸ்துநாதரைக் காட்டுகிற அடையாளமாயிருந்ததாக, யோவான் சுவிசேஷகன் சொல்லுகிறார். மற்றச் சுவிசேஷங்களை ஒத்துப்பார்த்தால், பரிசுத்தாவியானவர் இறங்கினது, கிறிஸ்துநாதர், யோவான்ஸ்நானன் ஆக இருவருக்கும் அடையாளமாயிருந்ததென்று தெரியவருகிறது. அப்படியே "என்னுடைய நேசகுமாரன்" என்று வானத்திலிருந்து உண்டான சத்தமும், இரண்டு கருத்துள்ளது. அந்தச் சத்தம்: மற்றவர்களைப் பார்த்துப் பேசுகிறதாக "இவர் என்னுடைய நேசகுமாரன்" (மத் 3: 17) என்றும், நம்முடைய கர்த்தரைப் பார்த்துப் பேசுகிறதாக "நீர் என்னுடைய நேசகுமாரன்" (மாற் 1: 11. லூக் 3: 21) என்றும் விளம்பினது. யோவான்ஸ்நானன் யாருக்கு வழியை ஆயத்தம்பண்ண வந்தானோ அவர் இப்பொழுது பகிரங்காய் வந்துவிட்டார். அவர் வந்தது, அவனுடைய வேலை முடிந்துபோயிற்றென்பதற்கு அவனுக்கு அடையாளமாயிருந்தது. அவர் வந்தபொழுது நடந்த விசேஷங்கள், கர்த்தர் தமது பகிரங்க ஊழியத்தைத் துவக்குகிற நேரம் வந்துவிட்டதென்பதற்கு, அவருக்கு அடையாளமாயிருந்தது.

**545**. யோவா 1: 35—51 பொருள் சுருக்கம் என்ன?

யோவான்ஸ்நானனுடைய வேலை இயல்பாய் கிறிஸ்துநாதருடைய வேலையாக வந்து முடிந்தது என்பதாம்.

**546**. யோவா 1: 29. "மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு" என்பதில் கவனிக்கவேண்டியதென்ன?

கிறிஸ்துநாதர் சோதனை முடிந்த உடனே நேராய் இப்பொழுது யோவான்ஸ்நானனிடத்தில் வந்தார் என்று, இந்த வார்த்தைகள் காட்டுகிறதாக பெரும்பாலும் நினைக்கப்படுகிறது.

**547**. யோவா 3: 30. "நான் சிறுகவேண்டும்" என்றால் அர்த்தமென்ன?

நான் காவலிலடைபடவேண்டும்; என் வேலை நிறுத்தப்படவேண்டும்; நான் இரத்தச்சாட்சியாகவேண்டும் என்றர்த்தம்.



**548**. 3: 14. வெண்கலசர்ப்பம், மன்னாமுதலிய பொருள்கள், கிறிஸ்துநாதருக்கு முன்குறிப்புகளாயிருந்தன என்று சொல்லுகிறோமே. எப்படித் தெரியும்? வெண்கலசர்ப்பம் எந்த முக்கிய விஷயங்களில் கிறிஸ்துநாதருக்கு முன்குறிப்பாயிருந்தது?

ஷை பொருள்கள் தமக்கு முன்குறிப்புகளாயிருந்தன என்று கிறிஸ்துநாதர்தாமே சொல்வதினால் தெரியும் (யோவா 1: 51. 6: 31—33. லூக் 24: 44).

1. வெண்கலசர்ப்பம் கிறிஸ்துநாதருடைய பாவமற்ற மனுஷத்தன்மைக்கு முன்குறிப்பாயிருந்தது. எப்படியென்றால் வெண்கலசர்ப்பம், சர்ப்பரூபமாயிருந்தாலும், அதற்குள் விஷமில்லை. அப்படியே கிறிஸ்துநாதர் "பாவமாம்சத்தின் சாயலாய்" இருந்தாலும் (ரோ 8: 3), அவரிடத்தில் பாவமில்லை. "அவர் பாவம்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" (1 பே 2: 22).

2. வெண்கலசர்ப்பம் உயர்த்தப்பட்டவகையில், அது கிறிஸ்துவின் சிலுவைமரணத்துக்கு முன்னடையாளமாயிருந்தது.

3. அது குணம் அளித்த விதத்தில், கிறிஸ்துநாதரை நோக்கிப் பார்ப்பதால் அதாவது அவரை விசுவாசிப்பதால் இரக்ஷிப்புண்டு என்பதற்கு முன்னடையாளமாயிருந்தது (யோ 3: 15, 16).

**549**. எந்த முக்கிய விஷயங்களில் கிறிஸ்துநாதருக்கு மோசே முன்னடையாளமாயிருந்தான்?

இஸ்ரவேலருக்கு மோசே மீட்பனும், நியாயப்பிரமாணிக்கனும், மத்தியஸ்தனும், வழிகாட்டியுமாயிருந்ததில் முன்னடையாளமாயிருந்தான்.—அவன் மத்தியஸ்தனாயிருந்ததில்தான் முக்கியமாய் அப்படியிருந்தான்.

**550**. யாக்கோபு கண்ட ஏணி, கிறிஸ்துநாதருக்கு முன்னடையாளமாயிருந்ததெப்படி?

1. இந்த ஏணி தேவனிடத்திலிருந்து மனுஷனிடத்திற்கு வரும் வழியாயிருந்தது.

2. மனுஷன் தேவனிடத்திற்கு ஏறிப்போகக்கூடிய வழியாயிருந்தது.

3. இதில் தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள்.

4. இந்த ஏணி திவ்ய ஆதரவுக்கும் பராமரிப்புக்கும் வழியாயிருந்தது யோ 1: 51. 14: 6.—அப்படியே கிறிஸ்துநாதருமிருக்கிறார்.

**551.** யோவா 4: 6. யாக்கோபின் கிணற்றைப்பற்றி என்ன தெரியும்?

1697ஸு மார்ச்சுமீ த்தில் இந்தக் கிணறு 105 அடி ஆழமாயிருந்தாலும், 15 அடி தண்ணீர் மாத்திரமிருந்தது. டிசம்பர்மீ த்தில் வெறும் சகதியே அல்லாது தண்ணீரில்லை. பெபுருவரிமீ கடைசியில் தண்ணீர் நிறையப் பெருகியிருக்குமாம். 1866ஸு மேமீ த்தில் அது 75 அடி ஆழமுள்ளதும், தண்ணீரில்லாமல் வறண்டதுமாயிருந்தது.

**552.** 4: 8. சமாரிய ஸ்திரீயைப்பற்றி என்ன தெரியும்?

இவள் ஆதரவற்றவளும் எளியவளுமாயிருந்திருக்கவேண்டும். பிற்காலத்து பாரம்பரையில், இவள் பேர் போத்தினு (Photina) என்று சொல்லியிருக்கிறது. யூதருக்கும் சமாரியருக்குமுள்ள விரோதம், தற்காலம்வரையும் நிலைத்திருக்கிறது.

**553.** யோவான் 5: 27. "மனுஷகுமாரனுயிருக்கிறபடியால்". இதிலிருக்கிற நியாயமென்ன?

மத்தியஸ்தனைப்போலவே நியாயாதிபதியும், தனக்குமுன் கொண்டுவந்து நிறுத்தப்படுகிறவர்களுடைய தன்மையை உடைத்தாயிருக்கவேண்டும். அவர்களுடைய தன்மை பெலவீனங்களை அறிந்திருக்கிறவருடைய தீர்ப்பே நீதியானது. "மனுஷகுமாரன்" (Son of man) என்ற வார்த்தை இந்த இடத்திலும், வெளி 1: 13. 14: 14லும் மாத்திரம் வருகிறது. "மனுஷகுமாரன் (The son of man) என்ற வார்த்தை, யோ 1: 51. 3: 13, 14. 6: 27, 53, 62லும், மற்றச் சுவிசேஷங்களிலும் வருகிறது.

**554.** யோவான் 17: 5. "உலகமுண்டாவதற்கு முன்னே" கிறிஸ்துநாதருக்குப் பிதாவிடத்தில் உண்டாயிருந்த மகிமை என்ன?

இந்த மகிமை கிறிஸ்துநாதருடைய தெய்வீகத்துக்குரிய மகிமையாம். கிறிஸ்துநாதர் தமது மனுஷத்தன்மையோடு பரமண்டலத்துக்கேறினதில், இந்த மகிமையினாலே அவர் மகிமைப்படுத்தப்பட்டார். கிறிஸ்துநாதருடைய மனுஷத்தன்மைக்கடுத்த மகிமையை, வ 22ல் வித்தியாசப்படுத்திப் பேசியிருக்கிறது பிலி 2: 9 வாசி.

**555.** உபாகமம் 18: 15ல் "தீர்க்கதரிசி" என்பது, இயேசுகிறிஸ்துவைக் குறிக்குமென்று ரூபகாரப்படுத்து?

(1) லூக் 24: 27. யோவா 1: 45. 5: 45—47. யோவா 1: 21, 45. அப் 3: 22. 7: 37 ஆகிய இந்த வாக்கியங்களில் அப்படிச் சொல்லியிருக்கிறது.



(2) மோசேயின் ஐந்தாகமங்களை மட்டும் ஒப்புக்கொண்ட சமாரியருங்கூட, உபா 18: 15—18 வாக்கியங்கள் மேசியாவைக்குறித்துச் சொல்லியதாக நம்பிவந்தார்கள் (யோவா 4: 25).

(3) பூர்வ பிதாக்களும், லூதரன் வியாக்கியானிகளும், ரோமான் குருக்களும், அங்கிலேய குருக்களும், இந்த வாக்கியம் இயேசுகிறிஸ்துவைக் குறிக்குமென்று சொல்லுகிறார்கள்.

(4) எல்லாவற்றுக்கு மேலாக நமது கர்த்தருடைய சாட்சி (யோ 5: 45—46). மோசே "என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே" என்று நமது கர்த்தர் சொன்னபோது, இந்த வாக்கியங்களை மனதில் வைத்துச் சொன்னாரோ அல்லாது, வேறே வாக்கியங்களைக் குறித்தாரென்று நினைக்க இடமில்லை.

இந்த நியாயங்களினாலே "தீர்க்கதரிசி" என்பது, இயேசுகிறிஸ்துவைக் குறிக்குமேதவிர வேறொருவனையுங் குறியாதென்று விளங்கும். இந்த வாக்கியம் மகமதுவைக் குறியாதென்பதற்கும், இந்த நியாயங்களே அத்தாக்ஷியாகும். மேலும் மகமது ஒரு அற்புதமும்செய்யவில்லை; செய்ததாகச் சொல்லவுமில்லை. பட்டயத்தினாலும், சிற்றின்ப உபதேசங்களினாலும் தன் மார்க்கத்தைப் பிரசித்தப்படுத்தினான். இது மோசேயைப்போலொத்த தீர்க்கதரிசியின் லட்சணமாகுமா?

9ம் நூற்றாண்டுபோலிருந்த யூதரபிமார்: (உபா 18: 15—18) இந்த வாக்கியங்கள், தீர்க்கதரிசிகளை மொத்தமாய்க் குறிக்குமென்றும், மேசியாவை முக்கியமாய்ச் சுட்டிப்பேசுகிறதில்லை என்றும் சொன்னார்கள். அவர்களுடைய நியாயங்களாவன:

(1) கானானில் நியமிக்கப்படப்போகிற லவுகீக வைதீக அதிகாரிகளைக்குறித்துப் பேசிவருகிற மத்தியில், (உபா 18: 15—18.) இந்த வாக்கியங்கள் வருகின்றன.

(2) மாயவித்தைக்காரர் முதலானவர்களை (9—12) விலக்குகிற சம்பந்தத்தில், இந்த வாக்கியங்கள் சொல்லப்படுகின்றன. ஆகையால் அப்படிப்பட்டவர்களை விலக்குங்கள்; நான் வேறே தீர்க்கதரிசிகளைக் கொண்டு காலாகாலத்தில் என்னை வெளிப்படுத்துவேன் என்று எகோவா சொல்லுகிறதாக இவ்வாக்கியங்கள் அர்த்தமாகுமல்லவா?

(3) இவ்வாக்கியங்களுக்குப் பிந்திய சம்பந்தத்தில், கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய காரியத்தைச் சொல்லுகிறார்.

(4) மோசே தனக்குப் பிந்தி எழும்பப்போகிற தீர்க்கதரிசிகளைக் குறித்துச் சொல்லாமல் விட்டுவிடுவாரா என்றும் சொல்லுகிறார்கள்.

இதற்கு உத்தரவு.

லூக் 24: 27. யோ 1: 21, 54. இந்த வாக்கியங்கள், உபா 18: 15–18ன் கருத்தை நேராய்க் குறிக்கவில்லை என்று வைத்துக்கொண்டபோதிலும், அப் 3: 22. 7: 37 இந்த வாக்கியங்கள், கிறிஸ்துநாதனை நேராயும் திட்டமாயும் குறித்தன என்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. இந்த வாக்கியங்களைக் கவனிக்கும்பொழுது, கிறிஸ்துமார்க்கம் ஆரம்பமான காலத்திலேயே இந்த வாக்கியங்கள் மேசியாவைக் குறிக்கிறதாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்று விளங்கும். இவ்வாக்கியங்கள் முதற் கருத்தாக, சமீபத்தில் வந்த யோசுவா முதலான தீர்க்கதரிசிகளைக் குறித்தாலும், முக்கியமான சிறந்த கருத்துப்படி, மேசியாவைக் குறித்ததென்றே திடச்சித்தமாய் அறிந்துகொள்ளவேண்டியது.

556. எண் 24: 17. பிலேயாம் சொன்ன தீர்க்கதரிசனம் இயேசுகிறிஸ்வைக் குறிக்குமென்று காட்டு?

இதைக் காட்டும்படி முன்பின் சம்பந்த வாக்கியங்களுக்கு வியாக்கியானம் சொல்லவேண்டும்.

எண் 23: 10. ஆதி 13: 16. 28: 14 இவ்வாக்கியங்களிற் சொல்லிய ஆசீர்வாதங்கள் நிறைவேறினதற்கு; ஷை ஆசீர்வாத வார்த்தைகளைக்கொண்டே சாட்சி பகருகிறான்.

"நீதிமான்" ஆபிரகாம் முதலிய முற்பிதாக்களைக் குறிக்கும். (ஏசா 41: 2).

"முடிவு" எபிரேயுவில் "கடைசிக் காணியாட்சி" என்றிருக்கிறது; அதாவது நீதிமானாகிய ஆபிரகாமுக்கு அவன் மரணத்தில் கிடைக்கும் பாக்கியமான நித்திய காணியாட்சி, பிலேயாமுக்கும் வேண்டுமாம்! நீதிமானுடைய பாக்கியத்தை விரும்புகிறவர்கள், நீதிமானுடைய நீதியை முந்த விரும்பவேண்டுமே. "அநீதத்தின் கூலியை" (2 பேது 2: 15) விரும்புவோருக்கு, பிலேயாமின் முடிவுதான் கிடைக்கும்.

11—13. "யாக்கோபின் தூளை எண்ணத்தக்கவன் யார்" என்று பிலேயாம் சொன்னதினாலே, இஸ்ரவேலருடைய ஏராளத்தைக் கண்ட காட்சியினாலே மருண்டுபோய் இப்படிச் சொல்லுகிறானென்று பாலாக் நினைத்து, இஸ்ரவேலருடைய கடைகோடிப் பாளயத்தை மட்டும் பார்க்கத்தக்க வேறொரிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோனான். இவ்விடத்தில் இஸ்ரவேலனைப்பற்றி, பிலேயாமுக்கு வித்தியாசமான மதிப்புண்டாகும் என்று நினைத்தான்.

---



# THE SECOND COMING OF CHRIST.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

### II. சுவிசேஷம் சகல ஜாதியாருக்கும் சாக்ஷியாகக் கூறப்படும்.

(தொடர்ச்சி.)

அப். 18: 22. 21: 33.

(10) 60ல் பவுல் ரோமாபுரிக்குப் போகும்போது அவனால் சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட இடங்கள். செசாரியா, சீதோன், சீப்புருதீவு, பம்பிலியா, சிலுசியா, லீசியாவிலுள்ள மீராபட்டணம், சின்னஆசியா, சினிதுதீவு, கிரேத்தாதீவு, சாலமோனேமுனை, வேயர்எவன்ஸ், பர்சியா, பெனிக்கே, கிளாடாதீவு, கிரேத்தாதீவு, மெலித்தா, மார்தாதீவு, சீராகூஸ், ரீகியம், இத்தாலி, புத்தியோலி, நெப்பிள், அப்பாபொராம், ரோமாபுரி இந்த இடங்களுக்குச் சுவிசேஷத்தைக் கூறி பவுல் மரித்தான்.

(11) அப்போஸ்தலனாகிய யோவான் மரிக்குமுன்னதாக, கானான் தேசம், சீரியா, சின்னஆசியா, சீப்புருதீவு, கிரேத்தாதீவு, மக்கதோனியா, அற்றிக்கா, பிலோப்பனீஸ், ரோமை, ஸ்பானியா, கால், பிரித்தானியா, எகிப்து, அரபியா, பார்சு, இந்தியாமுதலான தேசங்களில் சுவிசேஷம் கூறப்பட்டு பிரபலியமாயிருக்கிறது.

(12) பேதுரு அப்போஸ்தலன், பொந்து, கலாத்தியா, கப்பதோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களில் உள்ளவர்களுக்கு எழுத்தின்மூலமாய்ச் சுவிசேஷத்தை அறிவித்தான்.

### II. 2ம் நூற்றாண்டு.

II. (1) 106, 107ல் பித்தினியா நாட்டின் அதிபதியானவன் கிறிஸ்துமார்க்கமாகிய சுவிசேஷத்தைக்குறித்து இது ஒட்டுவியாதிபோல் எல்லாரையும் தொத்திக்கொண்டதென்றும், அது நாடுநகர்களில் வசிக்கிறவர்களை மாத்திரமல்ல, சிற்றூர்களிலுமுள்ள சமஸ்த ஜனங்களையும் பிடித்துக்கொண்டதென்றும், ஆகையால் இந்நாட்டில் கணக்கில்லாத எண்ணிறந்த ஜனங்கள் இந்தச் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாயிருக்கிறார்களென்றும் சாக்ஷிபகர்ந்திருக்கிறான்.

(2) ஆப்பிரிக்காக்கண்டத்தில் எகிப்துதேசத்தில் நீலநதியோரத்தில் மகா அலெக்சந்தர் ராஜாவால் கட்டப்பட்ட அலெக்சந்தரியா பட்டணம் கல்விப்பொருளில் பேர்பெற்றிருந்ததினிமித்தம் நாலா திக்கிலுமுள்ள ஜனங்கள் அவ்விடம்வந்து கல்விகற்றுக்கொள்ளுவார்கள். அந்தக் காலத்தில் மாற்கு என்ற சுவிசேஷகன் அவ்விடம்போய்ச் சுவிசேஷத்தை அறிவித்து சபையை ஸ்தாபித்தான்.

(3) 133ல் சமாரியா நாட்டில் நியாப்போலி பட்டணத்திலுள்ள ஜஸ்ற்றின் என்பவர் தேவகாக்ஷியால் போதிக்கப்பட்டு குணப்பட்டுத் தன்னைத் தேவனுக்கு ஊழியக்காரனாக ஒப்புக்கொடுத்து அநேக இடங்களி

லுள்ள ஜனங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்தார். அப்படியே போலிக்கார்ப் என்பவரும் போதித்தார்.

(4) 170-177ல் பிரான்சுதேசத்திலும் அதிலுள்ள வியன்னு, லையன்ஸ், கால் என்னும் பட்டணங்களில் ஆசியாகண்டத்திலிருந்து வந்த ஜனங்களால் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு கிறிஸ்தவர்கள் பெருகினார்கள்.

### III. 3ம் நூற்றூண்டு.

1. 246ல் கர்தாகோ பட்டணத்தில் சிக்கினியன் என்பவர் குருவாகயிருந்து ரோமாபுரிக்கு மேற்கேயுள்ள ஜனங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசித்தப்படுத்தினார்.

2. இந்த நூற்றூண்டின் கடைசியில் காலியா, அல்மானியா, பிரித்தானியா, திரோசியாமுதலான தேசங்களிலும் ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களிலுமுள்ள அநேக தேசங்களிலும் சுவிசேஷம் பிரபலியமாயிற்று. இதைப்பற்றி தெர்த்துல்லியன் என்பவர் பகருகிற சாக்ஷி கவனிக்கப்படத்தக்கது. "நாங்கள் நேற்றுண்டானவர்களல்ல, உங்களுடைய நாடுநகரங்களையும், கோட்டைகொத்தளங்களையும், தீவுதீவாந்தரங்களையும், நியாய சங்கங்கள் நீதிஸ்தலங்களையும், அரமனைகள் ஆஸ்தானங்களையும் சுவிசேஷத்தினால் நிரப்பிக்கொண்டோமென்று பிரஸ்தாபிக்கிறார்.

### IV. 4ம் நூற்றூண்டு.

முந்திய நூற்றூண்டுகளில் பிரசங்கிக்கப்பட்ட இடங்களில் மறுபடியும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வந்தது.

### V. 5ம் நூற்றூண்டு.

1. 430ல் பிராஞ்சுதேசத்தில் சுவிசேஷ ஒளி பிரகாசித்ததுபோல அதற்குச் சமீபத்திலுள்ள பிரித்தானியா தேசத்திலும் அதின் கதிர்கள் வீசும்படி தொடங்கின. இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் அஞ்ஞான இருளில் அமிழ்ந்தி நாகரீகமற்றவர்களாய் மிருகத்தின் தோலை உடுத்தி, சரீரமெங்கும் கரியைப் பூசி கந்த மூலங்களைச் சாப்பிட்டுக்கொண்டு வசித்தார்கள். ஆனால் முகரூபம் வெகு அழகாயிருந்தது. பிரான்சுதேசத்து இராஜ குமாரத்தியாகிய பொத்தா என்பவளை இங்கிலாந்துதேசத்து இராஜனாகிய எதல்பெர்ட்டு என்பவன் விவாகம்பண்ணினான். இராஜாத்தி கிறிஸ்தவளானதால் தனக்குப் போதிக்க ஒரு கிறிஸ்தமான குரு பிரான்சு தேசத்திலிருந்து வரவேண்டுமென்று கேட்க, கிரகொரி அகுஸ்தீன் என்ற குருவை அனுப்பினதினாலே அவரால் இராஜாவும் பிரஜைகளும் போதிக்கப்பட்டு கிறிஸ்தவர்களானார்கள். எதல்பெர்ட்டு இராஜாவின் குமாரத்தியை இங்கிலாந்தின் வடபாகத்திலுள்ள எட்வின் இராஜா விவாகம்பண்ணினதின் மூலமாய் அவ்விடத்திலும் சுவிசேஷம் பிரலியமாயிற்று. இவ்வாண்டுகளில் கால் தேசத்திலுள்ள ஆக்ஸா பட்டணத்துக் கண்காணியாகிய ஜெர்மன்ஸ் என்பவராலும் பிரித்தானியா தேசமுழுவதிலும் சுவிசேஷம் பிரபலியமாயிற்று. மேலும் ஸ்காட்லாந்து தேசத்திலும் ஐர்லாந்துதேசத்திலும் பல்லடியஸ் என்பவராலும் பற்றிக் என்பவராலும் சுவிசேஷம் பிரபலியமாயிற்று.

2. இந்த நூற்றூண்டிலேயே அலெக்சந்திரியாவிலிருந்து பன்றினஸ் என்பவனால் இந்துதேசத்திலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள்.

### VI. 6ம் நூற்றூண்டு.

இந்த நூற்றூண்டின் கடைசியில் பிரித்தானியாவில் சுவிசேஷம் பிரபலியமானதுபோல ஜெர்மன் தேசத்திலும் பிரபலியமாயிற்று.



### VII. 7ம் நூற்றூண்டு.

இந்த நூற்றூண்டின் கடைசியில் பார்சு, சீரியா, இந்தியா, சீனமுதலான தேசங்களிலுள்ள ஜனங்களுக்குள் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு கிறிஸ்தவர்களானார்கள்.

---

வடதிருநெல்வேலித் திருச்சபையின் அக்கிராசனபதியாகிய

## கனம் V. வேதநாயகம் ஐயரவர்களின் ஜீவிய விருத்தாந்தம்.

இதை நேசமாய் வாசிக்கும் எமது நண்பரே, திருநெல்வேலியின் வடபகுதியிலுள்ள கிறிஸ்தவத் திருச்சபையோருக்குத் தற்சமயமிருபக்கமுமுண்டான அரிதுபெரிதான கஷ்டநஷ்டத்தை எவ்வாறுரைசெய்வேன்.

வடதிருநெல்வேலியில் முப்பது வருஷம் மிக ஊக்கத்தோடும் ஜாக்கிரதையோடும் உழைத்து, கிறிஸ்துஇயேசுவுக்கென்றே பிழைத்து, கிறிஸ்தவர்களும் மற்றும் நானுவகுப்பினரும் செழித்தோங்க நன்மை பரிபாலித்து சத்திய வேதோபதேசஞ்செய்து நல்வாசனைகொடுத்து நற்கீர்த்தியெடுத்து சிறந்து விளங்கிய கர்த்தரின் உத்தம தாசனாகிய கனம் V. வேதநாயகம் ஐயரவர்கள் இச்சமயம் தமது பரம இளைப்பாறுதற்குட்பட்டுவிட்டனர்.

இவர் இடையன்குடிக்கருகே ஓர் அயல் கிராமத்தில் பிறந்து இளம்பிராயத்திலேயே இவரது ஜிரேஷ்ட சகோதரனால் கிறிஸ்துமார்க்கப் போதனையடைந்து திருச்சபையினோர் அங்கமாகி, பாளையங்கோட்டை வித்தியாசாலையிலும், அதன்பின்னர் பிஷப் கோரீஸ் கிருமர் ஸகூலிலும் கல்வி பயின்று, அறிவிலும் மெய்ப்பக்தியிலும் வரவர வளர்ந்து வந்தனர். 1849ஆ மீளவும் பாளையங்கோட்டை வித்தியாசாலைக்கு உபாத்தியாயராக நியமனம்பெற்று 54ம் வருஷம்வரை அவ்வேலையைச் சித்திபெற நடத்திவருகையில் 1854ஆ வடதிருநெல்வேலியில் தேசாந்தர மிஷனெரிகளாயிருந்த மெஸர்ஸ் ராக்லாண்டு, பென், பேரன்புரூக், எவரி, மெடோஸ், கிரோ என்ற ஐயன்மார்களது கூட்டத்தோடு சேர்ந்து கூடாரப் பிரசங்கஞ்செய்யும்படியாய் இவரும் கனம் சத்தியநாத ஐயரவர்களும், காலஞ்சென்ற கனம் கொர்நேலியு ஐயரவர்களும் அழைக்கப்பட்டனர்.

பாலியமுதலே இவர் இவ்வையன்மார்களுடன் வசித்து, தமது பரம எஜமானின் ஊழியத்திற்குத் தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்தனர். 1859ல் பிஷப் டெல்ற்றிரி அவர்களால் டீக்கன் பட்டமும், 1862ல் பிஷப் ஜெல் அவர்களால் குருப்பட்டாபிஷேகமும் பெற்று, முதலில் கனம் கிரோ ஐயரவர்களுக்கும் அதன்பின் கனம் மெடோஸ் ஐயரவர்களுக்கும் உதவியாக வாகைக்குளம் சேகரத்துக்கு நியமனமாகி, கருத்துடனே தமது கடமையை நிறைவேற்றினர். 1877ல் கனம் மெடோஸ் ஐயரவர்கள் சீமைக்குப் போனதின்பின் இவரே சுயாதீனமடைந்து வடதிருநெல்வேலி முழுவதையும் பொறுப்பாய் நடத்திவந்தனர். புரோவின்ஷியல் நேற்றிவ் சர்ச்சு கவுன்சலுக்கு செக்கிரற்றேரியாகவிருந்து மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்களுக்கு வலதுகரம்போலுதவினர். நமதருமை பெருமை

யான அத்தியக்ஷரவர்களது யூபிலி உற்சவத்தில் இவர் செய்த அருமையான பிரசங்கம் அச்சமயம் பிரசன்னமான யாவருக்கும் வியப்புறத்தக்கதாயிருந்தது. இவரது மலர்ந்த முகப்பார்வையும், பேசுபவரிடத்துப் புன்னகையோடு கூறுமினிய சொல்லும் எவ்விதக் கன்னெஞ்சரையும் மென்னெஞ்சராக்கத்தக்கதே. தமதிடம் வரும் கற்றோர், மற்றோர், பெரியோர் சிறியோர், நல்லோர் தீயோர், வலியார் மெலியார், பந்துக்கள் அன்னியர், யார் யாருக்கும் யாவுமாயிசைந்து, அவரவர்க்கிணங்க புத்திமதிசொல்லி எல்லோர் பாசத்தையும் இழுத்துக் கவரத்தக்க சித்தாகிய நற்குணமே மிகுந்திருந்தது.

எட்டியபுரம், சிவகிரி, ஊத்துமலை முதலான சமஸ்தானங்களில் இவருக்கிருந்த நன்குமதிப்பு இவ்வளவென்று கூறவும் முடியா. மெஸர்ஸ் பக்கில், பென்னிங்டன், லீவார்ணர் முதலிய கலெக்டர் துரைமார்களும், நாட்டிலுள்ள சகல கனதனவான்களுமிவர்கள்பால் பாராட்டி சீராட்டிய அருமையுரிமைக்களவுமில்லை. ஆயினுமிவற்றால் சுயபிரயோசனந் தேடாது தேவநாமமகிமையையே தேடினவராய்த் தமது சொற்சக்தியை அதற்கென்றே செலவுசெய்தனர். பெரியவர் விரோதம் வந்தபோதினும் ஒடுக்கப்படும் எழைக்கிறிஸ்தவர்கள் இடுக்கண்களைத் தவிர்க்கும்வண்ணம் முயற்சிசெய்வதே இவரது முக்கிய கருத்தாய் விளங்கினது.

இவர் மரித்தும் இவரால் ஸ்தாபகமான பென்னையர்புரமும், அதன் பெரிய தோட்டமும், வாகைக்குளம் கஸ்பாவிலுள்ள அநாதப் பாடசாலைகளும், மற்றுங் கட்டிடங்களும் இன்னும் இவரைக்குறித்துப் பேசுகின்றன. மெஞ்ஞானபுரத்தில் ஜீவித்த தமது சிரேஷ்ட சகோதரனைப் பார்க்கப் போய்த் திரும்பின ஒரு வாரத்துக்குப்பின் இவருஞ் சுகவீனமாகி வரவர பெலவீனப்பட்டு எட்டுவாரம்போல் மிக வேதனை அனுபவித்து கடைசியில் 86ம் வருஷம் ஏப்பிரல் ௴ 22௳ காலை 3-மணிக்கு அமரிக்கையாய் கருத்தருக்குள் நித்திரையடைந்தனர். இக்கொடிய வேதனை அனுபவிக்கின்ற காலத்துந் தம்மைச் சந்திக்க வருபவர்க்கு அவரவர்க்கேற்ற போதனையைத் தமது வாயினாற் பகரயேதுவில்லாதிருந்துஞ் சிலேற்றிலெழுதி வாசிக்கச்செய்வதுண்டு. தமது சுகவீன காலமுழுவதையும் ஞானாகாரமான பாடல்களையும் இனிய செய்யுட்களையும் தேவவசனங்களையும் இன்புடன் கேட்பதிலும், அனலுடன் ஜெபிப்பதிலும் செலவுசெய்தார். தமது மனவேதனை சரீரவேதனை யாவையும் விட்டு ஒய்ந்து தாம் எவ்வளவோ காலம் ஆசித்து நேசித்தடி பணிந்து தெண்டனிட்டுத் தொண்டுசெய்த கிறிஸ்திறைவனோடு தற்சமயம் அத்தியந்த நித்திய பேரின்ப வாழ்வைச் சுகித்துக்கொண்டிருக்கின்றனர்.

முற்கூறிய இவ்விருவரையும் தற்சமயமிழந்த நஷ்டத்தாற் கஷ்டப்படும் எமது நேச சகோதரர் யாவரும், முத்திக்கு வித்தும் முதன்மையுமாகிய திருச்சபையின் பரிசுத்த தலைவனான சாக்ஷாத் கிறிஸ்தேசுவின் திருக்கழல் பணிந்து இவ்வேழைகள்பால் கிருபை பரிபாலித்து துன்பந்தவிர்த்து இன்பம் பயக்கவும், கிறிஸ்தவர் குழாம் இன்னும் செழித்தோங்கி மகிழ்ச்சிபெறவும், சுத்த சுவிசேடம் எத்திசையும் பரவவும், பக்திவிர்த்தி வரவரப் பெருகவுந்தக்கதாய் ஊக்கத்தோடும் உட்கருத்தோடும் ஜெபிக்கும்படி பிரார்த்திக்கின்ற

E. S. N. P.

1886. ஜுன் ௴ 1௳ (ச—னி.)



# பிரசங்கங்கள்.

வெளி. 19: 6. சங். 93: 1.

"கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்."

தெய்வத்தில் தெய்வமும், சோதியில் சோதியும், மெய்த்தேவனில் மெய்த்தேவனும், பிதாவின் தன்மையை உடைய ஒரேபேறான குமாரனும், மகிமையின் இராஜாவுமாகிய மேசியாவின் ராஜரீகத்தைக்குறித்து; மோசே, தாவீது, பிலேயாம், சாலொமோன் முதலிய பெரியோரும், ஏசாயா முதல் மல்கியவரையுள்ள தீர்க்கதரிசிகளும் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். முன்தூதனாய் வந்த யோவாஸ்நானனும் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்களென்று வனாந்தரத்திலே சத்தமிட்டுக் கூப்பிடுகிறவனாயிருந்தான்.

இன்று அதிகாலையில் என் தேவனுடைய திருச்சமுகத்தின் பரிசுத்த சபையாகக் கூடிவந்த திருச்சபையின் வீட்டாரே, நம்முடைய பரம இராஜன் கொலுமண்டபத்தில் ராஜரீகஞ்செய்கிறாரென்று உங்களுக்குப் பரம கட்டியங் கூறுகிறேன். "இதோ உன் தேவன் ராஜரீகஞ்செய்கிறார்" என்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலையின்பேரில் எத்தனை அழகானவைகள். "கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் இருக்கிறார். பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருப்பதாக." கேரூபின்களின் மத்தியில் கிருபாசனத்தின்மேல் செக்கைனா என்கிற மேகத்தில் வீற்றிருந்த கர்த்தர் ராஜரீகம்பண்ணுகிறாரென்று சங். 91: 1ல் தெரியவருவதினால் மெய்யாகவே தேவன் எசூரனுக்கு இராஜாவாயிருக்கிறாரென்று அறியலாம். "கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார். பூமி பூரிப்பாகி திரளான தீவுகள் மகிழக்கடவது."

I. ராஜ்யபாரம்பண்ணுகிறவர் யார்? ஆதிக்கு முன்னான அநாதியான நாளிலே தமது பிதாவாகிய தேவனால் இராஜாவாக, ஆசாரியனாக, தீர்க்கதரிசியாக, அபிஷேகம்பண்ணப்பட்டவரே. அவர் இராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட நாளில் பரலோகமெங்கும் தேவஎக்காளம் தொனிக்கப்பட்டது. கேரூபின்களும், சேராபின்களும் கிறிஸ்துவே தேவரீர் மகிமையின் இராஜா என்று முழக்கமிட்டார்கள். தேவதூதர்கள் கெம்பீரித்துப் பாடினார்கள். பிதாவாகிய தேவனும் தமது ஆவியிலே களிகூர்ந்து, "நான் என் பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் நான் என்னுடைய இராஜாவை அபிஷேகம்பண்ணிவைத்தேன்" என்றார். ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உம்முடைய தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் என்று பரிசுத்தவான்களும் பாடினார்கள். நான் இராஜாவைக்குறித்துப் பாடின கவியைச் சொல்லுகிறேன். அவர் எல்லா மனுப்புத்திரரிலும் சௌந்தரியமுள்ளவர். அவருடைய உதடுகளில் அருள்பொழிகிறது. அல்லேலூயா கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்.

2. தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்ட இராஜன். யாக்கோபின் சமாதானக் கர்த்தரும் பிலேயாம் சொன்னபடி, யாக்கோபிலிருந்து தோன்றும் ஒருவரும், யூதாக்கோத்திர சிங்கமும் இவரே,

எசாயாவின் கர்த்தத்துவ புருஷனும், சீயோனின் இராஜாவும், எரேமியாவின் ஞானமுள்ள இராஜாவும், நீதியுள்ள கர்த்தரும் இவரே.

தானியேலின் நீண்ட ஆயுசுள்ள மேசியாவும், மீகாவின் இஸ்ரவேலின் பிரபுவும் இவரே. மல்கியின் நீதியின் சூரியனும், தாவீதின் சௌரியவானும் இவரே. தீர்க்கதரிசிகள் தங்களுக்கே கிடைத்த தீர்க்கதரிசன ஆவியால் தூரதிருஷ்டிக் கண்ணாடியில் அவனை அறிந்தார்களேயல்லாது அவர்கள் அவரைப் பார்க்கவில்லை. "அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும் காணாமலும் கேளாமலும் போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

3. புகழ்பெற்ற இராஜன். பெத்லகேம் தொழுவத்தில் தூதர் போற்றிய தேவன், எருசலேமில் சாஸ்திரிகள் தேடிய இராஜன், பேதுருவால் நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கையிடப்பட்ட மேசியா நாத்தான்வேலால் நீர் இஸ்ரவேலின் இராஜாவென்று சொல்லப்பட்ட தேவனுடைய குமாரன். "இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா" என்னும் சிறந்த நாமம் அவருடைய வஸ்திரத்தின்பேரிலும் அவருடைய தொண்டையின்பேரிலும் அவருடைய நெற்றி பட்டயத்தின் பேரிலும் எழுதப்பட்ட புகழ்பெற்றவர்.

4. அவர் மனுஷீகத்தில் இகழப்பட்டு உயர்த்தப்பட்ட இராஜன். பரியாசமாக யூதருடைய இராஜனென்று முள்ளின் முடிசூடி சிவப்பங்கி தரித்து மூங்கிற்கோல்பிடித்துத் தன்னை யூதருடைய இராஜாவென்று சொன்னதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பிலாத்து துரைமுன் கைகட்டி நின்ற இராஜன். "நீ யூதருடைய இராஜாவா என்று பிலாத்து கேட்க நீர் சொல்லுகிறபடி இராஜாதான்என்றார்." அவர் குற்றமற்ற பரிசுத்தராயிருந்தும் அவர் சிலுவையில் அறையப்பட்டபோது அதின்மேல் "நசரேயனாகிய இயேசு யூதருடைய இராஜாவென்று எழுதியிருந்தது." எபி. 2: 9.

5. வெற்றிசிறந்த இராஜன். பிசாசின் தலையை உடைத்து அதிகாரங்களை உரிந்துகொண்டு வெளியரங்கமான கோலமாக்கி, பகையாக நின்ற நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்திலே ஒழித்து சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி மரணத்தை ஜெயமாக விழுங்கி, நரகவாசலை அடைத்து மோக்ஷவாசலைத் திறந்து ஜீவவிருக்ஷத்தின்மேல் அதிகாரமுள்ளவராய் தேவாதி தேவனுடைய வலதுபாரிசத்தில் தேவனும் மனிதனுமாக வீற்றிருக்கிறார். இனி உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க சிறந்த மகிமையோடே திரும்ப வருவார். அவருடைய ராஜ்யத்திற்கு முடிவில்லை "சகல ஜனங்களே கைகொட்டி தேவனுக்குமுன்பாக கெம்பீர சத்தமாக ஆர்ப்பரியுங்கள்."

II. யார்யார்பேரில் இராஜரீகஞ்செய்கிறார். "அவர் சகலத்தையும் ஆளுகிறவர்."

1. பரலோகத்தில் இராஜரீகம்பண்ணுகிறார். வானமும் வானாதி வானமும் அவருடைய கட்டளைகளின்படி செய்யும் தேவதூதாட்களும் அவருடையவர்கள்: அகந்தையுள்ள தூதர்களைத் தமது நீதியின்படி தண்டித்து நித்திய சிறைகளாக நரகத்தில் அடைத்து ஆகாயமண்டலத்திலுள்ள சகல ஆண்டசராசரங்களிலும் தம்முடைய ஆளுகையைச் செலுத்திவருகிறார். பரலோகமும் அவருடைய பார்வைக்குச் சுத்தமுள்ளதல்ல என்று காண்



கிறார். "சூரிய சந்திரரே, சகல நக்ஷத்திரங்களே, வானாதி வானங்களே, கர்த்தருடைய தூதர்களே, நம்முடைய இராஜாவைத் துதியுங்கள்."

2. பூமியில் இராஜரீகஞ்செய்கிறார். "பூமியும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதின் குடிகளும் கர்த்தருடையது." ராஜ்யங்களை நடுகிறார், பிடுங்குகிறார். எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்தி சிங்காசனங்களிலிருந்து தள்ளி மாடுகளோடே புல்மேயவும் செய்கிறார். "இராஜாக்களின் இருதயங்கள் அவர் கையில் நீர்க்கால்களைப்போலிருக்கிறது." பழைய உலகமும், சோதோமும், பார்வோனும், கானானியரும், சனகெரிப்பின சேனையும், நேபுகாத்நேச்சாரும், எருசலேமும், அவர் நீதியுள்ள இராஜாவென்று பூமியின் குடிகளுக்குத் தெரியக்காட்டும் அடையாளங்களாயின. "கர்த்தர் பூமியின் மீதெங்கும் மகத்துவமான இராஜாவாயிருக்கிறார்" "அவர் பூமியின் கடைசிமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார். வில்லை முறித்து ஈட்டியை ஒடிக்கிறார். ரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்." ஆவியின் பிரகாரம் பரிசுத்தஆவியைக்கொண்டு விசுவாசிகளின்இருதயத்தில் அந்தரங்கமாய் அரசாளுகிறார்.

3. நியாயத்தீர்ப்பில் ராஜ்யபாரம்பண்ணுவார். "இதோ ஒரு இராஜா நீதியாக அரசாளுவார், பிரபுக்களும் நியாயமாகத் துரைத்தனம்பண்ணுவார்கள்." தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, கருக்குள்ள பட்டயத்தைத் தமது அரையில் கட்டியிருக்கிறார். அவருடைய நாள் அக்கினியைப்போலவும், வண்ணானுடைய சவுக்காரத்தைப்போலவும் இருக்கும். அவர் நீதிமான்களை ஆடுகளைப்போலவும் அநீதிமான்களை கடாக்களைப்போலவும் பிரித்து நீதிசெலுத்துவார். அவர் ஜீவனையும் மரணத்தையும் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் மோக்ஷத்தையும் நரகத்தையும் அவனவன் கிரியைகளுக்குத்தக்கதாக அருளுகிறவராக ராஜரீகம்பண்ணுவார். "அவருடைய நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர்." "அவருடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது, நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர்." அவருடைய நாட்களில் நீதிமான செழிப்பான்.

III. அவருடைய ராஜ்யபாரத்தின் தன்மை. உலக ராஜ்யங்கள் அவருடையது, பரலோக ராஜ்யமும் அவருடையது, சுவிசேஷ ராஜ்யமும் அவருடையதே.

1. நித்தியமுள்ள ராஜ்யபாரம். இராஜாக்கள் ராஜ்யபாரம்பண்ணினார்கள். முடிமன்னர் அரசுபுரிந்தார்கள். கிரீடாதிபதிகள் செங்கோல் செலுத்தினார்கள். புரபுக்கள் துரைத்தனஞ்செய்தார்கள். பட்டணங்கள் இராஜதானிகளாயின. ஆனால் அவர்கள் ராஜ்யம் நிலைகுலைந்தது. கிரீடங்கள் விழுந்துபோயின. சிங்காசனங்கள் கவிழ்ந்தன. செங்கோல் முறிந்துபோயிற்று. இராஜதானிகள் ஊராயிராமல் பாழாயின. கர்த்தரோ என்றென்றைக்கு இராஜரீகஞ்செய்கிறார். "கர்த்தரோ ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர். அவருடைய ராஜ்யம் அழியாதது, அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தம் நிலைநிற்கும். அவருடைய ராஜ்யபாரம் தலைமுறைதலைமுறையாக நிற்கும்."

2. நீதியுள்ள ராஜ்யபாரம். கர்த்தர் பட்சபாதமுள்ளவர் அல்ல. பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதில்செய்வேன் என்கிறார். அவர் ஜனங்களை நீதியோடும் ஏழைகளை நியாயத்தோடும், விசாரிப்பார். மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும். அவருடைய நீதி பட்டப்பகலைப்போலவும்

அவருடைய நியாயம் சூரியனைப்போலவும் பிரகாசிக்கும்வரை அமராமல் நீதிசெய்வார்.

3. கிருபையுள்ள ராஜ்யபாரம். அவர் தமது கிருபாசனத்தில் வீற்றிருக்கிறார். அவருடைய கிருபையின் பொற்செங்கோல் நீட்டப்பட்டிருக்கிறது. வருத்தப்படுகிறவர்களை வருந்தி அழைக்கிறார். அவருடைய கிருபை இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. "ஆதலால் நாம் இரக்கத்தைப பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்." எஸ்தர், ஆகாஸ்வேருவின் பொற்செங்கோலைத் தொட்டதுபோல ஜெபத்தோடும் விசுவாசத்தோடும் தைரியத்தோடும் கிறிஸ்துவின் கிருபையுள்ள திருஇரக்கத்தினிடத்திற்கும் திருக்காயங்களிடத்திற்கும் சேரக்கடவோம். "நீதியின் கிரியை சமாதானமும் நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம். என் ஜனம் சமாதான தாபரங்களிலும் நிலையான வாசஸ்தலங்களிலும் அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்." இதுவே அவருடைய குடிகளின் பாக்கியம்.

படிப்பினை. இராஜாக்களே! பிரபுக்களே! நியாயமாய்த் துரைத்தனம் பண்ணுங்கள். கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்.

2. சுவிசேஷ பணிவிடையாட்களே! சுவிசேஷ எக்காளத்தை விடாமுயற்சியாய் ஊதுங்கள். உங்கள் பரம இராஜன் இராஜரீகம்பண்ணுகிறார். அவருக்காக உண்மையாய் ஸ்தானாபத்தியஞ் செய்யுங்கள்.

3. "என் நியாயம் கர்த்தரிடத்தில் வந்து எட்டாமல்போகிறது" என்கிறவர்களே! கர்த்தர் இராஜ்யபாரம்பண்ணுகிறார். "சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ."

4. ஏழைகளே! கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார். ஏழைகளின் வழக்கையும் திக்கற்றவர்களின் நியாயத்தையும் விசாரிக்கிறவர் அவரே.

5. பாவிகளே! கர்த்தர் இராஜரீகஞ்செய்கிறார். பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள். குமாரன் கோபங்கொள்ளாமலும் நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படி அவருடைய பாதத்தை முத்திசெய்யுங்கள்.

6. விசுவாசிகளே! நம்முடைய இராஜாவைப் போற்றிப்பாடுங்கள் பாடுங்கள். தேவனே பூமியனைத்திற்கும் இராஜா. தர்ஷீசின் இராஜாக்களும் தீவுகளின் இராஜாக்களும் காணிக்கைகொண்டுவருவார்கள். ஷேபாவின் இராஜாக்களும் சேபாவின் இராஜாக்களும் வெகுமானங்களைக் கொண்டுவருவார்கள். சகல இராஜாக்களும் அவரைப் பணிந்துக்கொள்ளுவார்கள். சகல ஜாதிகளும் அவரையே சேவிப்பார்கள். நீயும் அவருக்குள் பூரண மகிமையுள்ளவள். உன் உடை இனிப் பொற்சரிகையாயிருக்கிறது. வானமே மகிழ்ந்து பாடு ஆறுகள் கைகொட்டி பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது.

"கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளுகிறார். சீயோனே உன் தேவன் தலைமுறைதலைமுறையாக இராஜரீகம்பண்ணுகிறார் அல்லேலூயா."

P. A.

---



## சர்ச்சுமிஷன் சங்கத்தைச்சேர்ந்த சுரண்டைச் சேகரம் பட்டறைகட்டிக் கிராமம் ஆனரேரி முத்துசுவாமி உபதேசியாருடைய ஜீவிய விர்த்தாந்தம்.

"குமாரனை உடையவன் ஜீவனையுடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." 1 யோவா. 5: 12.

இங்கிலாண்டின் மகா ராணியவர்கள் சிம்மாசனமேறிய 1837ம் ஷூ ஜூன்மாசத்தில் மேலக்கலங்கல் கிராமத்தில் இந்துமதானுசாரிகளான மறவர்குலப் பெற்றோரிடம் பிறந்து, சிறுபிராயத்தில் தாம் அனுசரித்திருந்த இந்துமார்க்கத்தில் பற்றுதலுடையவராய், திருச்செந்தூர் சுப்பிரமணியத்தின்மேல் பாடப்பட்டிருக்கும் பாடல்களை விருப்பமாய்ப் படித்து, விபூதியுமெய்யில் வேண்டியமட்டும் அணிந்து நித்தமும் சூரிய நமஸ்காரம் செய்து சாப்பிடுகிற வழக்கமுடையவராயிருந்தார். 17 பிராயமவரை படிப்புத் தொடங்கவில்லை. தமிழ் 1029ம் ஆண்டுக்கு கி. பி. 1854ம் ஷூத்தில் இவரும் இவரைச் சேர்ந்தவர்களுமாக நடுவக்குறிச்சி மாஜி ஜமீன்தாரவர்கள் அனுமதியின்பேரில் நடுவக்குறிச்சித் தோப்புக்குச் சமீபத்தில் ஒரு கிராமம் கட்டி அந்த இடத்தில் முன் ஷை ஜமீன்மேல்வாரநெல் அம்பாரங் கட்டப்பட்டிருந்த ஏதுவால் பட்டறைகட்டியென்ற பேரும் தரித்து, ஷை யூரில் இவர் வசித்து விபசாயப்பருவம் நடத்தி இவருக்கு 18 அல்லது 19 வயதாகையில், வேலைவிட்டிருக்கின்ற மதியவேளைகளில், ஷை ஜமீன் உபாத்தியாயர் திருமலைமுத்து ஆசானிடம் கல்விகற்று சற்றே வாசிக்கவும் கணக்கு எழுதி வரவும் பழகினார்

இப்படியிருக்கையில், இவர்களுக்கு மிகவும் அனுகூலஞ்செய்துவந்த ஜமீன்தாரவர்கள் தேகவியோகமானதின்பேரில், ஷை ஜமீன் வகையருக்களும் சுற்றுக்கிராமத்தாரும் இவர்களைக் குடியோட்ட எத்தனித்து பலவித இடுக்கண்செய்ய ஆரம்பித்தார்கள். இத்தாலிவர்கள் மெத்தவும் சித்தம்வருந்துங்கால், தருமத்தூரணி இடையர் குலத்தானொருவன் ஆலங்குளத்தில் வேதம் வந்திருக்கிறதென்றும் வேதத்திலிறங்கிக்கொண்டால் வேதக்காரர் சகாயஞ்செய்வார்களென்றும், சமயோசிதமான ஒரு ஆலோசனை சொல்ல, அப்பிரகாரம் ஆலங்குளத்தில் அக்காலம் தேசிகராயிருந்த மாசிலாமணி உபதேசியாரிடம் போகவே, அவர் அப்போது மிஷனரியாயிருந்த கனம் பிக்வோர்ட் ஐயரவர்களிடமிட்டுக்கொண்டுபோனதில் ஷை ஐயரவர்கள் இவர்கள் மறவரானதால் நம்பக்கூடாது. இவர்கள் தங்கள் சொந்தச்செலவால் கோவில்கட்டுகிறதாயின் இவர்களை ஏற்றுக்கொள்ளலாம் என்றதால், அவ்விதமே கோவிலுங் கட்டி கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்தார்கள். அவர்களுக்கு இவரே தலைவனாயிருந்தார். கிறிஸ்துமார்க்கத்தில் வந்தபின்னும் அஞ்ஞானிகளால் பலவித வியாச்சியங்கள் நடத்தப்பட்டாலும் இவரே ஜெயம்பெற்றார். மேய்ப்பர் வகையரா ஒருவனால் ஆடுகளின் பெரிய மேய்ப்பரண்டை சேருவதற்கு இவர்களுக்கு அனுகூலங் கிடைத்தது. இந்திய அரசாட்சி ஈஸ்ற்று இந்திய கம்பேனியார் வசத்தினின்று மகா ராணியவர்கள் ஆட்சிக்குள்ளான 1858ம் ஷூத்தில் ஆகஸ்துமாசம் இவர்கள் அஞ்ஞான இருளினின்று சுவிசேஷ ஒளியண்டை சேர்ந்தார்கள்.

இவர்கள் கிறிஸ்தவர்களாகவே, இவர்களைச் சேர்ந்த மேலக்கலங்கலி

லுள்ளவர்களும் மார்க்கத்தை அனுசரிக்கவே 1861ம் ஸு ஜனுவரிமீ 16உ இவரும் இவருடைய பெற்றோரும் சகோதரரும் ஞானஸ்நானம்பெற்று கனம் வால்பி ஐயரவர்களால் சபையில் சேர்க்கப்பட்டார்கள். மேலக்கலங்கலில் கோவில் கட்டப்படாததால் இவருடைய வீட்டுச்சாவடியில்தான் ஜெபஆராதனை நடத்தப்பட்டது. ஆனதால் இவருடைய வீட்டுக்கொல்லையில் கோவில் கட்ட முளைப்பிடிக்கவே அந்தக் கிராமத்து மறவர்கள் மகாஸ்ரீ ஊற்றுமலைத் துரையவர்களிடத்தில் சூதாய்த் தெரியப்படுத்தி அவர்களுடைய அனுமதிபெற்று முளைகளைப் பிடுங்கி எறிந்ததால், வியாச்சியம் ஆரம்பித்து இவர் வாதியாக ஏற்பட்டு வழக்கு நடத்தவே ஷை கொல்லை ஜமீன் மேல்வாரநெற்களமேதவிர, வாதியினுடைய கொல்லையல்லவென்று படாந்தரமான பொய்க்கணக்குகள், பொய்ச்சாட்சிகள், எதிரிகளால் உண்டுபண்ணப்பட்டாலும், தேவானுக்கிரகத்தாலும் கனம் டிக்சன் ஐயரவர்களுடைய பேருதவியாலும், கனம் கிளார்க் ஐயரவர்கள் சாட்சியத்தாலும், அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட்டாரால் ஷை நிலம் வாதியினுடைய கொல்லைதானென்று சித்தாந்தப்பட்டது. இந்த வியாச்சியங்கள் நடக்கும்போது வழிமறித்துக் கொல்லவும், மோசடிசெய்யவும் இவருக்கு விரோதமாய்ச் சத்துருக்கள் செய்த சூழ்ச்சி மிகுதி. எல்லா இக்கட்டிலும் அருமை இரக்ஷகர் கூடவிருந்து காப்பாற்றி ஜெயம்தந்தாரென்பதே உறுதி. இவர் மகா தைரியசாலி. முன்பின் ஆராய்ந்து, காலமறிந்து கருதிய கருமமுடிக்கும் விவேகி. இவர் வியாச்சியம் நடத்திய உத்தேசம் 4 வருஷக் காலங்களில் இவர்கூட அலைந்து மிகவும் அனுகூல துணைவராயிருந்து ஸ்ரீ வி. உப. இராயப்ப பிள்ளையவர்கள் செய்த பேருதவி மறக்கத்தக்கதன்று. ஷை வியாச்சியம் அனுகூலமானதின்பேரில் மகாஸ்ரீ ஊற்றுமலை ஜமீன்தாரவர்கள் கோவில்கட்ட வேறொரு வசதியான இடமுங் கொடுத்து பனைகளுங் கொடுத்து உதவிசெய்ததால் கோவில் கட்டப்பட்டு 1866ல் கனம் ஹானிஸ் ஐயரவர்களால் பிரதிஷ்டைசெய்யப்பட்டது. இதற்குள்ளாக ஷையார் வாசிப்பில் தேறினவரானார்.

1867ல் ஹானிஸ் ஐயரவர்கள் காலத்தில், தருமத்தூரணிக்கு உபாத்தியாயராகவும், பின்னால் மேலக்கலங்கலுக்கு உபாத்தியாயராகவும் நியமிக்கப்பட்டு, அப்பால் 1870, 71ம் வருடங்களில் ஊத்தன்குளம் பெரிய சுவாமிபுரம் கிராமங்களுக்கு உபதேசியாராக ஏற்படுத்தப்பட்டார். 1872ல் மிஷன் வேலையைவிட்டு கோம்பை, கம்பம், மலையாளம், திருநெல்வேலி முதலான இடங்களில் சுயபிரசங்கியாக ஆவியின் எழுப்புதலினால் உபதேசித்து வந்தார். 1875ல் மறுபடியும் மிஷன் வேலையில் அமர்ந்து 1879 கடைசிவரை மேலக்கலங்கல், நொச்சிகுளம், சில்லிகுளம் கிராமங்களில் உபாத்தியாயராகவும், உபதேசியாராகவும் அலுவல்பார்த்து, 1880ம் ஸு ஜனுவரிமீ முதல் ஆனரோரி உபதேசியாராக அலுவல் நடத்த சம்மதித்து, மகாகனம் அத்தியக்ஷரவர்கள் உத்தரவின்பேரில் பட்டறைகட்டியிலிருந்துகொண்டு ஷை உத்தியோகம் நடத்திவந்தார். இக்காலத்தில் தாயுமானார் பாடல்போன்ற அநேகங் கண்ணிகளை நம்முடைய இரக்ஷகப் பெருமான் பேரில் கனிவாகப் பாடியிருப்பதோடு, சீர்கருணைமாலை, பேரின்ப காதல், வேண்டுதல் அம்மானை, பள்ளிப்பிள்ளைகளுக்குச் சனி எண்ணெய்க் கவிதை, வேதப்பொருள் கும்மி (முடிவாகவில்லை.) முதலான பாவினங்களும் பாடியிருக்கிறார். வேதம் வாசிக்கத் தெரிந்ததுமுதல் வேதம் வாசியாமலும் தனிச்செபஞ்செய்யாமலும் இருந்திருப்பது அபூர்வம். நித்தம்



மூன்றுவேளை ஜெபிக்கிறதோடு இராக்காலத்தில் விழிக்கும் நேரமெல்லாம் ஜெபிக்கிறதும் இவருக்குச் சகஜம்.

(இன்னும் வரும்.)

## சமாசாரத்திரட்டு.

இங்கிலாந்தில் சில தினங்களுக்குமுன்னே ஒரு பிரபு நித்தியமும் சூதாடி தோல்வியடைந்து வந்தார். முடிவில் பெருந்தொகை வைத்துச் சூதாடித் தோற்ற வெட்கத்தினாலே வெடியினால் சுட்டுக்கொண்டு இறந்துபோனார். அவருடைய பெண்சாதியும் என்னத்தையோ சாப்பிட்டு இறந்துவிட்டாள்.

உலகத்தின் ஜெனன மரணக் கணக்கு.—ஒரு வருஷத்தில் மரிப்போர் தொகை மூன்று கோடியே தொண்ணூறு லட்சம் என்றும், ஒருநாளில் மரிப்போர் ஒருலட்சத்து ஆறாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது என்றும், ஒரு மினிற்றில் மரிப்போர் எழுபத்துநாலு என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

பம்பாய்.—இவ்விடத்திலே ஒருவன் ஒரு கடுதாசிக்குள் நெருப்புக்குச்சி ஒன்றை மாதிரிக்கு வைத்து அனுப்பினான். இச்செய்தியை அரசாட்சியார் அறிந்து விசாரணைசெய்து 50 ரூபாய் அபராதம் இட்டார்கள். அற்ப ஆசை கொடிய தரித்திரமல்லவா?

போடிநாய்க்கனூர் ஜமீந்தார்.—போடிநாய்க்கனூர் ஜமீந்தார் மீது போலீசார் சொல்லைக் கேட்டுக் குற்றஞ்சாட்டி, சிறையிடுவித்து விசாரணைசெய்வித்து பொருள் நஷ்டமுண்டுபண்ணி அவமானப்படுத்திய கவர்ன்மெண்டார்பேரில் அவர் மூன்று லட்ச ரூபாய்க்கு மானநஷ்ட வழக்குத் தொடுக்க எண்ணியிருப்பதாக வதந்தி உலாவுகின்றது.

தெய்வீக மரணம்.—சென்ற மீ 28உ இரவில் லாகோரில் உள்ள பன்ஹைஸ்கூலின் பள்ளியறையிலே படுத்திருந்த பிள்ளைகளின்மேல் பள்ளியறையின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்தமையால் மூன்று பிள்ளைகள் உயிர் நீங்கினார்கள். மற்றவர்கள் பிழைத்தார்கள். கட்டிடமோ 1883ம் வருஷத்திலே கட்டப்பட்டதாயிருந்தும், மேற்றளவாடம் 2 அடி கனமுள்ளதாயும், அதன் கனத்தைத் தாங்குவதற்கு விட்டங்கள் போதாததாயும் இருந்தமையால் இப்பழுது நேர்ந்தது என அறிகிறோம்.

மூவேந்தர் நேசம்.—ருஷியா, துருக்கி, பெர்ஷியா இம்மூன்று தேசத்து வேந்தர்களுக்குள் நேசம் உண்டாகுமென்று தோன்றுகிறது. ஒருவேளை நேச உடன்படிக்கை ஏற்படுமாகில் ருஷியா கான்ஸ்டாந்துநோபிலை எப்படியாவது கைப்பற்றிக்கொண்டு, துருக்கியைத் துரத்தும். ருஷியாவுக்கும் துருக்கிக்கும் முன் யுத்தம் மூண்டபோது இங்கிலாந்தும், பிரான்சும் சேர்ந்து துருக்கிக்கு உதவிசெய்து ருஷியரைத் துரத்தியதை துருக்கி சுல்தான் மறப்பாரோ? கருங்கடலில் ருஷியர் மறுபடி தம்முடைய துறைமுகத்தை உண்டாக்கி பலப்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள். அது இங்கிலாந்துக்கு அல்லலை விளைவித்தபடியே இருக்கும் என்றெண்ணப்படுகின்றது.

(தி—னி, ஜூன்மீ 21உ.)

ஜூலைமீ நாள்-31. ஆனிமீ 19உ முதல், ஆடிமீ 17உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௧௯ | நீர் இஸ்ரவேலின்மேல் இராஜாவாயிருப்பீர். 1 சாமு. 23: 17. |
| வெ | 2 | ௨௰ | கர்த்தர் என்னைக் காப்பாராக 24: 6. |
| ச | 3 | ௨௧ | உம்முடைய அடியாளை நினைப்பீராக. 25: 31. (டுத்தார். 26: 8. |
| ஞா | 4 | ௨௨ | தேவன் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக்கொ |
| தி | 5 | ௨௩ | என்றைக்கும் அவன் என் ஊழியக்காரனாயிருப்பான். 27: 12. |
| செ | 6 | ௨௪ | தேவனும் என்னைக் கைவிட்டார். 28! 15. |
| பு | 7 | ௨௫ | இப்போது சமாதானத்தோடே திரும்பிப்போய் விடு. 29: 7. |
| வி | 8 | ௨௬ | ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொ |
| வெ | 9 | ௨௭ | சவல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான். 31: 4. (ண்டான் |
| ச | 10 | ௨௮ | அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே. 2 சாமு. 1: 21. (கள். 2: 7 |
| ஞா | 11 | ௨௯ | உங்கள் கைகளைத் திடப்படுத்திக்கொண்டு நல்ல சேவகராயிருங் |
| தி | 12 | ௩௰ | நான் இன்னும் பலவீனன். 3: 39 (தர். 4: 9. |
| செ | 13 | ௩௧ | என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த் |
| பு | 14 | ௩௨ | தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான். 5: 10. (தார்கள் 6: 15. |
| வி | 15 | ௧ | கர்த்தருடைய பெட்டியை கெம்பீர சத்தத்தோடும்...கொண்டுவந் |
| வெ | 16 | ௨ | இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? 7: 23. (6 |
| ச | 17 | ௩ | சீரியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங்கட்டினார்கள். 8: |
| ஞா | 18 | ௪ | என்னை நீர் நோக்கிப்பார்க்கிறதற்கு உமது அடியான் எம்மாத்தி |
| தி | 19 | ௫ | இஸ்ரவேலரோடே சமாதானம்பண்ணி அவர்களைச் சேவித்தார் |
| செ | 20 | ௬ | உரியா என்னும் ஏத்தியனும் செத்தான். 11: 21. (கள். 10: 19. |
| பு | 21 | ௭ | பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும். 12: |
| வி | 22 | ௮ | தாவீது.. தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான். 13: |
| வெ | 23 | ௯ | நாம் மரிப்பது நிச்சயம். 14: 14: (37. |
| ச | 24 | ௰ | இராஜா, கீதரோன், ஆற்றைக் கடந்தான். 15: 23. |
| ஞா | 25 | ௧௧ | இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய். 16: 8. |
| தி | 26 | ௧௨ | கர்த்தர் அப்சலோமின்மேல் பொல்லாப்பை வரப்பண்ண. 17: 14 |
| செ | 27 | ௧௩ | எல்லாரின் கைக்கும் உம்மை நீங்கலாக்கி நியாயஞ்செய்தார். 18: |
| பு | 28 | ௧௪ | என் தகப்பன் வீட்டார் எல்லாரும் சாவுக்கு ஏதுவாயிருந்தார்கள். |
| வி | 29 | ௧௫ | தாவீதின் பட்சத்தில் இருக்கிறவன் எவனோ? 20: 11. (28. |
| வெ | 30 | ௧௬ | நான் செய்யவேண்டிய பிராயச்சித்தம் என்ன? 21: 3. ( 6. |
| ச | 31 | ௧௭ | உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர். 22: |

## விசேஷ நாட்கள்.

1. அமாவாசை.
4. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 2—ம் ஞாயிறு.
11. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 3—ம் ஞாயிறு.
16. பௌரணமி.
18. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 4—ம் ஞாயிறு.
25. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 5—ம் ஞாயிறு.
29. பரி. அப். யாக்கோபின் திருநாள்.
31. அமாவாசை.

# நற்போதகம்.

௮. ஆகஸ்துமீ. ௧௮௮௯ வருடம்.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணக்கன்.

21. "அக்கிரமம்—குற்றம்". இந்த வார்த்தைகள், சங்கீ 10: 7. 90: 10 வாக்கியங்களிலும் வருகின்றன. இவைகள் அக்கிரமத்தையும் அதின் பலனாகிய துன்பங்களையும் குறிக்கும்.

"ஜெயகெம்பீரம்". ஜூபிலி பண்டிகையின் சத்தம்போல.

23. உலக வகையான உபாயங்கள் உதவாதென்றும், தேவன் இஸ்ரவேலரோடுகூட இருக்கிறாரென்றும் பிலேயாம் நன்றாய்க் கண்டுகொண்டான். குறிசொல்லுதல் (யோசு 13: 22).

28. "பேயோரின் கொடுமுடி". பிஸ்காவுக்கு வடபுறத்திலிருந்தது உபா 34: 6.

24: 1. "வனாந்தரம்". அதாவது இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருந்த மோவாபின் சமனான வெளி. இஸ்ரவேலரைச் சபிக்கும்படி நிமித்தம் பார்த்து இப்போ சடைத்துப்போனான். இப்பொழுது நேராய் இஸ்ரவேலின் கோத்திரங்களைப் பார்த்து ஏமாந்து, இவ்வாக்கியங்களை உரைத்தான்.

3. "கண் திறக்கப்பட்டவன்". ஞானதிருஷ்டியின் கண்ணும். மனுஷருடைய சரீரக்கண்ணுக்கு மறைக்கப்பட்ட காரியங்களை அறிய இப்பொழுது இவனுக்கு ஞானதிருஷ்டி உண்டாயிற்று.

6. "தோட்டங்களை" ஐபிராத் நதியோரமான அழகிய தொங்கு தோட்டங்களை ஞாபகத்தில் வைத்துப் பேசுகிறான்.

"கர்த்தர் நாட்டின" பரதீசை ஞாபகத்தில் வைத்துச் சொல்லுகிறான் (ஆதி 2: 8). சந்தனமரம், வாசனைக்கும்; கேதருமரம், மகத்துவத்துக்கும் குறிப்பாம்.

7. "நீர்ச்சால்கள்". ஐபிராத் நதிக்கடுத்த நிலங்களுக்குத் தண்ணீர் கொண்டுபோக, நீர்ச்சால்களை நிரப்பி, காவட்டுப்போட்டுக்கொண்டுபோவார்கள். கீழ்தேசங்களில் எல்லாச் செழிப்புக்கும் காரணம் தண்ணீர் தான். இஸ்ரவேலருக்குச் செழிப்பின் ஆசீர்வாதத்தைக் கூறி இதைச் சொல்லுகிறான்.

"ஆகாக்" அமலேக்கிய பிரபுக்களுக்கு இது பாரம்பரியப் பட்டப்பேர் (1 சாமு 15 அதி). இந்த வார்த்தைக்கு "உயர்வு" என்றர்த்தம். ஆமான் (எஸ்தர் 3: 1) இந்த வம்சத்தைச் சேர்ந்தவனென்று தோன்றும். இந்தக்காலத்தில் அமலேக்கியர் வல்லமையுள்ள ஜாதியாராயிருந்தார்கள் (20 வா). இருந்தாலும் இஸ்ரவேலர் பிற்காலத்தில் அடைந்த வல்லமைக்கு நிகரல்ல. சவுல் இவர்களை ஜெயித்தபின் (1 சாமு 15 அதி), இவர்கள் தலையெடுக்கவில்லை. தாவீது இராஜா காலத்தில் சத்துராதிகளாக வந்தாலும் (1 சாமு 27 அதி. 30 அதி), கடைசியாக அவர்களில் மீந்திருந்தவர்கள், எசேக்கியா இராஜாவின் காலத்தில் அழிக்கப்பட்டார்கள் (1 நாளா 4: 43).

17—19. பிலேயாம் ஞானதிருஷ்டியினால் காண்பதைச் சொல்லுகிறான். எபிரேயு பாஷை நடையை, "அவர் இப்பொழுது இராவிட்டாலும் அவரைப் பார்க்கிறேன்; அவர் சமீபத்தில் இல்லாவிட்டாலும் அவரைத் தரிசிக்கிறேன்" என்றும் திருப்பலாம்.

"அவரை". நக்ஷத்திரம் என்றும், செங்கோல் என்றும் சொல்லப்படுகிறவரை. வரப்போகிறவர்களைக்குறித்துப் பேரில்லாமல், அவரை என்று சொல்லுவது வழக்கந்தான்.

"நக்ஷத்திரம்". இது இராஜவல்லமைக்கும் சிறப்புக்கும் அறிகுறியாக, எல்லாத் தேசத்தாருக்குள்ளும் வழங்கியது. இனி எழும்பப்போகிற பிரபலமான இராஜாக்களுடைய பிறப்பையும் மகிமையையும் முன்னறிவிக்கும்படி, நக்ஷத்திரங்களாவது வால்வெள்ளிகளாவது முன்தூதன் போல் தோன்றுமென்று பூர்வத்தார் நம்பிவந்தார்கள். அதை வேதத்திலும் காணலாம் (ஏசா 14: 22. தானி 8: 10. வெளி 1: 16, 20. 2: 1. 9: 1). யூதருக்குள் இந்த எண்ணம் பெரும்பாலுமிருந்ததென்பதும், விசேஷமாய் மேசியாவின் வருகைக்கு அடையாளமாக இப்படி எண்ணப்பட்டு வந்ததென்பதும், ஆதிரியான் இராயன் காலத்தில் எழும்பின பிரபலமான கள்ள மேசியா, தனக்கு பார்கோகாப் என்று பேரிட்டுக்கொண்டதினால் தெரியவரும். பார்கோகாப் (Bar-cochab) என்பதற்கு, நக்ஷத்திரப்புத்திரன் என்றர்த்தம்.



"சேத் புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும்", அல்லது "கலக புத்திரர் எல்லாரையும் கவிழ்த்துப்போடும்". கலக புத்திரர் என்பது, மோவாபின் யுத்தவீரரைக் குறிக்கும். இவர்களுடைய பராக்கிரமத்தையும் மூர்க்கத்தையும் யாத்தி 15: 15. ஏசா 15: 4. 16: 6 வாக்கியங்களில் காண்க. "சேத்" என்ற வார்த்தையை, எரேமி 48: 45ல் "சீகோன்" என்ற வார்த்தையோடு சேர்த்திருக்கிறது. அவ்வாக்கியத்தில், "கலகஞ்செய்கிறவர்கள்" (அல்லது மார்ஜினிற் கண்டபடி "கூக்குரலின் புத்திரர்) என்று திருப்பியிருக்கிறது சரியே. இந்த வாக்கியத்தில், "சேத்" என்பது ஒரு மோவாபிய இராஜாவின் பேரென்று இரண்டொரு நவீன காலத்துச் சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இந்த அபிப்பிராயத்துக்கு அவர்கள் சொல்லுகிற நியாயம், செப்ற்றியுஜின்று திருப்புதலிலும் மற்றும் திருப்புதல்களிலும், "சேத்" என்பது ஒரு ஆளின் பேரைக் குறிக்கிறதென்கிறார்கள்.

யூதருடைய அபிப்பிராயம் என்னவென்றால், சேத் என்பது ஆதாமின் மகனும்; சேத் புத்திரர் என்பது, மனுஷ ஜாதியார் யாவருமாம். "அவர்" அதாவது இஸ்ரவேலிலிருந்து எழும்பப்போகிற ஆண்டவர் (Ruler) மனுஷ ஜாதியார் யாவரையும் ஆளுவார் என்பது, இந்த வாக்கியத்தின் தாற்பரியம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த வினைச்சொல்லானது ஆளுகைசெய்கிற அர்த்தத்தைக் கொடுக்கமாட்டாது. மொத்தத்தில் பார்த்தால், இந்த வாக்கியத்தை மேற்கோளாக வைத்துச் சொல்லிய எரேமியாவின் தீர்க்கதரிசனத்திற் காட்டிய அர்த்தமே சரியானதென்று காணப்படுகிறது.

"சேயீர்" மோவாபுக்குத் தெற்கும், அராபா வனாந்தரத்துக்குக் கிழக்குமாக, எதோமியர் குடியேறின மலைத்தேசத்துக்குப் பழய பேராம் (ஆதி 36: 8. உபா 2: 1). இதின் தென்பாகம், நாளதிலும் எஷ்ஷேரா என்று அழைக்கப்படுகிறது. பழயபேர் கெடுதலாகி இப்படி மாறியிருக்கலாம்.

"மீதியானவர்களை". முன்னாலே அழிக்கப்பட்டதில், தப்பித் தவறி மீதியாயிருக்கும் பட்டணங்களையெல்லாம் அழிப்பார் என்றர்த்தம். இந்த வார்த்தைகள், யாக்கோபிலிருந்து தோன்றுகிறவரை வெற்றிவேந்தனென்று காட்டுகின்றன. எப்படியென்றால் இந்த வெற்றிவேந்தன் முதலில் யுத்தத்தில் சத்துருக்களைத் தோற்கடித்தபின், யாராவது தப்பித் தவறியிருக்கிறார்களா என்று தேடிப்பார்த்து அழிப்பாராம்.

• பிலேயாம் சொன்ன தீர்க்கதரிசனங்கள், ஜெயவீரனான தாவீதில் ஒருவாறு நிறைவேறியது (2 சாமு 8: 2, 13, 14. 1 இரா 11: 15, 16. சங் 60: 8). என்றாலும் தாவீதாவது அவனுக்குப்பின் வந்தவர்களாவது, எதோமியரையும் மோவாபியரையும் பூரணமாய் ஜெயிக்கவில்லை (நியா 3: 12. 1 சாமு 14: 27). உம்றி காலத்தில், மோவாபியர் ஜெயிக்கப்பட்டு, அவ

னாலும் அவனுக்குப் பின்வந்தவர்களாலும் (40) ௵ ஒடுக்கப்பட்டதாக மோவாப் தேசத்திலுள்ள ஒரு கல்லில் எழுதியிருக்கிறது.—2 இராஜா 1: 1. 3: 4, 5 ஆகிய இந்த வாக்கியங்களில் சொல்லியபடி, மேஷா மருளவிழுந்ததினால், அவன் அடைந்த சித்தியைக்குறித்தும் ௸ கல்லில் எழுதியிருக்கிறது. மேலும் மோவாபியரைப்பற்றி 2 இரா 3: 21. 13: 20 பார். கடைசியாக கி. மு. 129௵ யோவான் இற்கானுவினால் அவர்கள் பூராவாய் ஜெயிக்கப்பட்டு யூதரோடு சேர்ந்துபோனார்கள். ஏதோமியரைப் பற்றி: 1 இரா 11: 14. 2 இரா 8: 20. 14: 7. 2 நாளா 28: 17 வாசி. மோவாபைப்பற்றி ஏசா 15: 16: 1—5. 25: 10. ஆமோஸ் 2: 1. செப் 2: 8. ஏதோமைப்பற்றி: ஏசா 34: 5. 63: 1–3. எரே 49: 7. புல 4: 21, 22. எசே 25: 12. ஆமோ 9: 11, 12. ஒபதி 17 வா. இருவரையும்பற்றி ஏசா 11: 14.

பிலேயாம், இவ்விருவரையும் சேர்த்துச் சொல்லுகிறான். தீர்க்கதரிசிகளும் அப்படியே சொன்னார்கள். இதில் கவனிக்கவேண்டியதென்னவென்றால், இவ்விரு ஜாதியாரும் இஸ்ரவேலருக்கு விரோதிகளாயிருந்ததில், தேவனுடைய ஆளுகைக்கும் விரோதிகளாயிருந்ததினாலே (24: 8), எல்லா அஞ்ஞான ஜாதியாரையும் குறிக்கும்படியாக முக்கியமான இவ்விரு ஜாதியாருடைய பேரை பிலேயாம் சொல்லுகிறான். ஆகவே இந்த இரண்டு ஜாதியாருடைய பேரைச் சொன்னது, சகல அஞ்ஞானிகளையும் சேர்த்துச் சொன்னதற்குச் சரியாம். தீர்க்கதரிசனங்களில், யாக்கோபின் வித்தார், மேசியாவின் ராஜ்யத்தாராகச் சொல்லப்படுவதுபோல, ஏதோமும் மோவாபும் மேசியாவின் ராஜ்யத்துக்குச் சத்துராதிகளாகச் சொல்லப்படுகிறார்கள். இவர்களுக்கு ஆக்கினை கூறினது, தேவனுடைய ராஜ்யத்துக்கு விரோதிகளான எல்லாருக்கும் ஆக்கினை கூறினதுக்குச் சரியாம்.

மேற்காட்டியபடி ஆதிரியான் இராயன் காலத்தில் யூதர் செய்த கடைசிக் கலகத்தை நடத்தினவன், தனக்கு நக்ஷத்திரப்புத்திரன் என்ற பேரை வைத்துக்கொண்டதைக் கவனிக்கும்போது, யூதர்கள் அக்காலம்வரையும் பிலேயாம் சொன்ன இந்த மகத்தான தீர்க்கதரிசனம் நிறைவேறக் காத்திருந்தார்களென்பதற்குப் போதுமான அத்தாக்ஷியாயிருக்கிறதே. அப்போது மோவாபியர் இல்லை. அவர்கள் இற்கானுவினால் அழிக்கப்பட்டுப்போனார்கள். இப்படியெல்லாமிருக்கக் கொள்ள, மோவாபியரை நொறுக்கிப்போடுகிற நக்ஷத்திரத்தின் நிறைவேறுதலுக்கு, யூதர் ஆதிரியான் காலம்வரையும் எதிர்நோக்கியிருந்தார்களே. ஆகையால் நக்ஷத்திரம் என்பது மேசியாவையும், மோவாப் ஏதோம் என்பது, அவருடைய சத்துருக்களெல்லாரையும் முக்கியமாய்க் குறிக்கும் என்றறியவும். 14 வா–ல் "கடைசிநாட்களில்" என்பதும் இதைக் காட்டுகிறது. தானி 10: 14. மத் 2: 2ல் கிழக்கத்திச் சாஸ்திரிகள், பிலேயாமைப்போன்றவர்களாயும், ஒரே தேசத்திலுள்ளவர்களாயுமிருந்தார்கள் மத் 2: 2. எண் 23: 7.



ஆட்சேபனை. இந்தக் கள்ளத்தீர்க்கதரிசி மேசியாவின் நாட்களை விரும்பி, அவருடைய மகத்துவத்தைக்குறித்து எப்படி தீர்க்கதரிசனம் உரைப்பான்?

உத்தரவு. உண்மையுள்ள பரிசுத்த தீர்க்கதரிசிகள் முதலாய் பரிசுத்த ஆவியானவர் தங்களுக்கு வெளிப்படுத்தினவைகளின் பொருளை முற்றும் அறியாமல் பேசினார்களே (1 பேது 1: 11) அப்படியிருக்க இருதயத்தில் விரும்பாத காரியத்தை தன் உதட்டினால் விளம்பின பிலேயாம், தான் உரைத்த தீர்க்கதரிசனங்களின் பொருளை அறியாதிருப்பது ஆச்சரியமல்ல. ஆகையால் இவன் உரைத்த தீர்க்கதரிசனங்களுக்கு, பரிசுத்த தீர்க்கதரிசிகள் கொடுக்கும் அர்த்தமே சரியானதென்று நாம் நினைத்து நடக்கவேண்டியது.

20. "பார்த்து" நக்ஷத்திரத்தைப் பார்த்ததுபோல, ஞானதிருஷ்டியினாலேதான் அமலேக்கைப் பார்த்தான்.

அமலேக்கியர் ஏதோமியரிலிருந்துண்டானவர்கள். இவர்களுடைய முற்பிதா, ஆதியிலேயே ஏதோமியரைவிட்டுப் பிரிந்து, வேறொரு பலத்த ஜாதியானான். இவர்கள் குடியிருந்த இடமானது, யூதாவின் மலைத்தேசத்துக்குத் தெற்கே காதேஸ்வரையும் எட்டியிருந்தது (எண் 13: 29. 14: 43, 45). கல்அரபியின் வடபாகமுழுவதிலும், ஆவிலா துவக்கி எகிப்தின் கரையோரமான சூர்வரையும் இவர்கள் பரவியிருந்தார்கள் (1 சாமு 15: 3, 7). இவர்களில் ஒரு கோத்திரத்தார், கானானின் மத்தியில் குடியேறியிருந்தார்கள் (நியா 12: 15).

21. "கேனியன்". ஆதி 15: 19ல் முதலாவதாகச் சொல்லப்படுகிறார்கள். நியா 1: 26ல் அவர்கள் யூதாப் புத்திரரோடு சேர்ந்து காரியங்களை நடத்தினதாக வாசிக்கிறோம். மோசேயின் மாமன், கேனியன் என்று சொல்லப்படுகிறான் (நியா 4: 11). மோசேயின் மாமன் மீதியான் தேசத்துதுரை அல்லது ஆசாரியனாயிருந்ததினாலே (யாத்தி 2: 16), கேனியர், மீதியானியராலே உண்டானவர்களாயும், ஆபிரகாமுக்குக் கேத்தூராளாலே உண்டான சந்ததியாராயுமிருக்கவேண்டும் (ஆதி 25: 2). இவர்கள் இஸ்ரவேலரோடு எப்போதும் சிநேகமாயிருந்ததாகத் தோன்றும் (1 சாமு 15: 6. 27: 10).

ஆனால் ஆதி 15: 19ல் சொல்லிய கேனியர் வேறே என்று தோன்றுகிறது. இவர்கள் கானானிய ஜாதியார். கெயின் (Kain) என்ற ஒரு பட்டணத்தின் பேராலே இவர்களுக்கு இந்தப் பேர் வந்தது. இவர்களைக் குறித்துதான் பிலேயாம் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான்.

"உன் கூட்டை கன்மலையில் கட்டினாய்". கூடு என்பதற்கு, எபிரேயு வார்த்தை கென் (Ken). கேனியர் குடியிருந்த ஸ்தலத்துக்கு கெ

யின் (Kain) என்பார்கள். (பிலேயாம் ஒரு வார்த்தையிலிருந்து இன்னொரு வார்த்தைக்குத் தாவுகிறான்). இது ஒருவேளை எங்கேதியைக் குறிக்கலாம். இதற்குத் தெற்கே 10 மயில் தூரத்தில் சவக்கடலின் மேல்கரையில் மலைத் துண்டுகள் செங்குத்தாய் எழும்பியிருக்கிறது. இதின்மேல் ஒரு பட்டணமிருந்தது. (பிற்காலத்தில் மசடா என்ற பட்டணம் இதில் கட்டப்பட்டது). இதைக்குறித்துதான் பிலேயாம் சொல்லுகிறதாகப் பெரும்பாலும் நினைக்கப்படும்.

23. இஸ்ரவேலருக்கு உடன்படைகளாயிருந்த கேனியரை அசூரியர் சிறைப்பிடித்துக்கொண்டுபோவது, பூமியிலே ஆறுதலும் அமைதலுமில்லாமற்போவதுபோல பிலேயாமுக்குக் காணப்பட்டது. கேனியரோ அழிந்துபோகும்போது, வேறே எவன் உலகத்திலிருப்பான் என்கிறான்.

24. "சித்தீம்" இது சீப்புரு (Cyprus) தீவாம். மேற்கேயுள்ள தீவுகளிலெல்லாம் இதுதான் சமீபமானது; இதொன்றுதான் பலஸ்தீனாவிலிருந்து பார்க்கக்கூடியது. மெதித்திராணியா பக்கமாயுள்ள மற்றெல்லாத் திசைகளுக்கும் பதிலாக, பிலேயாம் இதை வைத்துக்கொண்டான். கிழக்குத் திசையிலுள்ள பெரிய ராஜ்யங்களை ஜெயிக்கும் ஜெயவீரர், ஷி கடல்வழியாய் வருவார்களாம் (எசா 23: 1, 12. எரே 2: 10).

தானியேல் 11: 30ல் சித்தீம் என்பது, இத்தாலியைக் குறிக்கும்.

"ஏபேர்". வல்கெற்றிலும், LXXலுமிருக்கிற வார்த்தை, எபிரேயரைக் குறிக்கமாட்டாது. இந்த வார்த்தை, சேமின் சந்ததியாரைப் பொதுவாய்க் குறிக்கும். இவர்களில் அசூர் ஒருவன் (ஆதி 10: 21, 22).

"அவனும்" என்பது, மெதித்திராணியாக் கடலை உருவிவந்து, அசூரையும் ஏபேரையும் அழிக்கிற வெற்றிவேந்தனைக் குறிக்கும். மற்றப்படி அவன் என்பது, அசூரையாவது ஏபேரையாவது குறியாது. சித்தீமின் துறையிலிருந்து ஜெயிக்கவரும் ராஜ்யத்தார் இன்னதென்று வெளிப்படுத்தப்படவில்லை. சித்தீமின் கப்பல்கள் வந்தது, மக்கப்பெயர் காலத்துக்கடுத்த சங்கதியாம். இதற்கடுத்த விபரங்களை வியாக்கியானப்படுத்துவது லேசல்ல. பிலேயாமின் தீர்க்கதரிசனங்கள் அத்தனை கருகலாயிருக்கின்றன.

"தன் இடத்திற்கு". தன் சொந்த தேசத்துக்குத் திரும்பினான் என்றர்த்தமல்ல. பாலாக் இருந்த இடத்திலிருந்து பிலேயாம் வேறோரிடத்திற்குத் திரும்பினான் என்றுதான் என்றர்த்தம் (ஆதி 18: 33. 31: 55. 1 சாமு 26: 25. 2 சாமு 19: 39). பிலேயாம் இன்னம் மீதியானியருக்குள்ளிருந்துகொண்டு, இஸ்ரவேலரை அழிக்கும்படி நூதன வழிவகைகளை யோசித்து, கடைசியாக அவன் பாவத்திலேயே அழிந்துபோனான் (31: 8, 16).



**557.** லூக் 15: 11—32. கெட்டகுமாரன் உவமையைப்பற்றிச் சில குறிப்புகளைச் சொல்லு?

இந்த உவமை மற்ற உவமைகளுக்கெல்லாம் சிரேஷ்டமானது. இதில் முக்கிய உபதேசங்களுண்டு. இந்த உவமையில், தாமும் தேவனும் ஒன்று என்று ஏசுநாதர் பேசுகிறார். பாவிகளைத் தேடுகிறவரும் ஏற்றுக்கொள்ளுகிறவரும் தேவனே; ஆனால் பாவிகளைத் தேடி ஏற்றுக்கொள்வது, இந்த உவமையைப் பேசுகிறவருடைய கிரியையாக மற்ற இடங்களிலும் (மத் 15: 24. 18: 11. லூக் 19: 10), இந்த அதிகாரத்தின் உவமைகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இருவருடைய செய்கையும் ஒரே செய்கையாகப் பேசப்படுகிறது.

11. "இரண்டு குமாரர்". இந்த உவமை: புறஜாதியார் அழைக்கப்படுவதைப்பற்றிச் சொல்லப்பட்டதென்பது, உவமையின் நடைக்கு அவ்வளவாய்ப் பொருந்தவில்லை.. இந்த உவமை: மனந்திரும்புகிற பாவிகளைத் தேவன் சந்தோஷமாய் அங்கிகரிப்பதைக் குறிக்குமென்கிற வியாக்கியானம், மூத்த குமாரனுடைய பொறுமைக்குச் சமாதானம் சொல்லவில்லை. ஆனால் நியாயப்பிரமாணத்தைக் கண்டிப்பாய்க் கைக்கொண்டுவந்த வேதபாரகர் பரிசேயருக்கும், ஏசுவினிடத்திற்கு வந்த, வா 1ன் பாவிகள் புறம்பாக்கப்பட்டவர்கள் ஆகிய இவர்களுக்குமுள்ள சம்பந்தத்தை இவ்வாக்கியம் குறிக்கிறதாக வியாக்கியானம்செய்வது, இயல்பாயும் சரியாயுமிருக்கிறது. இந்த உவமை இரண்டு பிரிவுள்ளது.

(1) கெட்டகுமாரனுடைய சரித்திரம் (வா 11—24).

(2) தகப்பன் இவனை ஏற்றுக்கொண்டதற்காக மூத்தகுமாரன் பொறுமைகொண்டது (வா 25—32). பாவிகளையும் ஆயக்காரரையும் நமது கர்த்தர் ஏற்றுக்கொண்டதை நியாயமென்று முதற்பிரிவு காட்டுகிறது. 2ம் பிரிவு: கர்த்தருடைய விரோதிகள் (பரிசேயர், வேதபாரகர்) சொன்ன ஆக்ஷேபனைகளைக் கண்டிக்கிறது.

12. இளையவன் கேட்ட காரியம், பாவத்திற்கெல்லாம் மூடு. இது ஆதிப்பாவத்தை ஒட்டியது (ஆதி 3: 5). அதாவது இளையவன், தேவனை விட்டுப் பிரிந்து சுயாதீனமாயிருக்க விரும்பினான். தகப்பன் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தது, தேவன் மனுஷரைத் தங்கள் இஷ்டத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறதைக் காட்டுகிறது.

"தன் ஆஸ்தி" என்பது, தேவஊழியத்தை விரும்புகிற அல்லது அல்லது வெறுக்கிற சத்துவமாகிய சுயாதீன சித்தமாம். இதைத் தேவன் ஒவ்வொரு மனுஷனுக்குங் கொடுத்திருக்கிறார்.

13. "தூரதேசம்". பரமபிதாவையும் அவருடைய நியாயப்பிரமாணம் முதலானவைகளையும் வெறுத்து, இவ்வுலகத்தில் தேவனற்றவனாகக் கெட்டகுமாரன் தன்னிஷ்டப்படி ஜீவித்த நிலைமையாம்.

14. "கோடிய பஞ்சம்". பாவப்பழக்கத்தினால் இயல்பாயுண்டாகிற சோர்பும் அரோசிப்புமாம். புறம்பான சந்தர்ப்பங்களினால் இந்தச் சோர்பும் அரோசிப்பும் அதிகப்பட்டது.

"குறைவு". இருதயமானது எல்லாவற்றையும் சுகானுபோகங்களுக்குக் கொடுத்துவிட்டதினால், அது முற்றிலும் வெறுமையாகிவிட்டது. இனிமேல் அனுபவிக்கிறதற்கு, கஷ்டமேயல்லாமல் வேறொன்றுமில்லை.

15. "ஒட்டிக்கொண்டான்". சுயாதீனத்தை விரும்பினவனுக்கு நல்ல கூலி.

"தேசத்துக்குடி". கெட்டகுமாரனுடைய சுயாதீன சித்தத்தை அடக்கி, அவனைக் கொடூரமாய் ஆண்டதில் பாவத்திற்குக் குறிப்பாயிருந்தான். பன்றிகளை மேய்த்தது முழு அடிமைத்தனத்திற்குக் குறிப்பு.

16. "தவிடுகள்". இந்த வார்த்தை கலபிரியாவிலுள்ள (Calabria in Italy) காரோப் (Carob) என்ற ஒரு மரத்தின் பழங்களைக் குறிக்கும். இவை ஸ்பானியாவிலும் ஆப்பிரிக்காவிலும் லிவான்றிலும் (Levant) கிடைக்கும்.

இவற்றை ஏழைஜனங்கள் சாப்பிடுவார்கள். இவை அற்பக் கிரயத்திற்கு விற்கப்படும். முக்கியமாய் வீட்டுமிருகங்களுக்கு வாங்கிப்போடுவார்கள். தவிடுகளென்பது ஆவிக்குரிய அடிமைத்தனத்தின் கடைசியான நிர்ப்பந்த நிலைமையைக் குறிக்கிறது.

"ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை". முற்றிலுமாய்க் கெட்டுப்போன பாவிகளை உலகமும்கூட அவமதிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

17. "புத்திதெளிந்தபோது". தன்னை மறந்துதிரிந்தவன், தன் முந்திய நிலைமையை நினைப்பது, குணப்படுதலுக்கு ஆரம்பமாம்—எங்கே ஓடுவேன்! பாதகனானேன்!

18. "பாவஞ்செய்தேன்" உம்மை விட்டுவிட்டதினால்.

20. "தூரத்தில்". கெட்டகுமாரன் எப்போ திரும்பிவருவானென்று தகப்பன் வழிபார்த்து நிற்கிறார். பாவிகளின்பேரிலுள்ள தேவனுடைய உருக்கமான அன்புதான், பாவிகள் தம்மண்டை வரும்படி அவர்களைத் திருப்புகிற ஏதுவாம்.

---



# THE SECOND COMING OF CHRIST.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

### II. ராஜ்யத்தின் சுவிசேஷம் உலகமெங்கும் சாக்ஷியாகக் கூறப்படவேண்டும்.

(தொடர்ச்சி.)

தாம் இவ்வுலகத்தை ஆளும்படி வருமுன்னதாக தம்முடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் உலகமெங்கும் சாக்ஷியாகக் கூறப்படவேண்டுமென்று கிறிஸ்துவானவர் சொன்னது நூதனமுமல்ல ஆச்சரியமுமல்ல. ஏனென்றால் பூர்வீகத்தில் தேவன் ஜனங்களுடைய கீழ்ப்படியாமையினிமித்தம் அவர்களைத் தண்டிக்கச் சித்தமான காலத்தில் நோவாவைக்கொண்டு அவர்கள் பொல்லாப்பைவிட்டுத் திரும்பும்படியாக 120 வருஷக்காலமாய்ப் போதிக்கும்படி கட்டளையிட்டார். நோவாவும் தேவனால் குறித்த காலம்வரைக்கும் பிரசங்கித்தான். அவர்களுக்குச் சாக்ஷியாக மாத்திரம் கூறப்பட்டது. மோசேயும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவனுடைய பிரமாணங்களையும் அவருடைய சித்தத்தையும் கூறினான். அவர்களோ கேளாததினிமித்தம் அநேகர் வனாந்தரத்திலே கொல்லப்பட்டார்கள். மற்றவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானான்தேசத்தைவிட்டுத் துரத்தப்பட்டார்கள்.

மேலும் அவர்களுக்கு தீர்க்கதரிசிகளைக்கொண்டும் பிரசங்கித்தார். அப்படியிருந்தும் கேட்க மனமற்றவர்களாயிருந்தார்கள். கடைசியாக தேவகுமாரனாகிய இயேசுவானவரும் தம்மைக்குறித்தும், தேவனுடைய சித்தத்தைக்குறித்தும் பிரசங்கித்தார். அவர்களோ ஏற்றுக்கொள்ளமாட்டோமென்றார்கள். யோ. 1: 11. கடைசியாக பூர்வீக ஜனங்கள் நோவாவைப் பரியாசம்பண்ணினதுபோலவும், மோசேயையும் தீர்க்கதரிசிகளையும் தூஷணித்ததுபோலவும், கிறிஸ்துவையும் தூஷணித்து அவமானப்படுத்தி அடித்துக் கொலைசெய்தார்கள். இதினிமித்தமே எருசலேம்பட்டணம் அழிந்து தேவாலயமும் இடிக்கப்பட்டுப்போயிற்று. மத். 21: 33—41வரை. லூக். 20: 9—16. இந்த உவமையின்படிக்கு கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த ஜனங்களாகிய யூதர்களைக்கொண்டு தம்முடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை சாக்ஷியாகக் கூறும்படி செய்யவேண்டியதிருக்க, அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்ததினிமித்தம் அந்தச் சிறந்த உத்தியோகத்தைவிட்டு அவர்களை நீக்கி, அவர்களால் அற்பமாய் எண்ணப்பட்டவர்களாகிய அப்போஸ்தலர்களாலும் புறத்தேசத்தாராலும் கூறப்படும்படி அவர்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குத் தம்முடைய ராஜ்யத்தைப் பிரசங்கிக்கிற உத்தியோகத்தைக் கொடுத்திருக்கிறார். அந்தப்படியே இக்காலத்தில் ராஜ்யத்தின் சுவிசேஷம் புறஜாதியாரால் கூறப்பட்டு வருகிறது.

## III. சிதறுண்ட யூதர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்துச் சொல்லப்பட்ட துவக்கத்தில் 1884-ம் ௵ ஆகஸ்து௴ நற்போதகம் 155 ம் பக்கத்தில் கிறிஸ்துவின் வருகைக்குமுன் சம்பவிக்கவேண்டிய சம்பவங்களில் ஒன்றாகிய முந்தின ஜூன்மாசத்து சஞ்சிகையில் சொல்லியபடி உலகமெங்கும் ராஜ்யத்தின் சுவிசேஷம் சாக்ஷியாகக் கூறப்படவேண்டுமென்ற குறிப்புக்குப்பின், சிதறுண்ட யூதர்கள் சேர்க்கப்படவும் எருசலேம் தேவாலயம் திரும்பக் கட்டப்படவும் வேண்டுமென்று காட்டப்பட்டபடி இங்ஙனம் கூறுகிறேன்.

கிறிஸ்து மகாராஜா வரத் தாமதமாயிருக்கிறாரென்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறாரென்று உரைக்கப்பட்டபடி (2 பேது. 3: 9.) ஒருவன் மனந்திரும்பவேண்டுமானால் ஒன்றான மெய்த்தேவனை அறிந்து தொழுதுகொண்டு அவரனுப்பிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். (யோ. 17: 3.) விசுவாசிக்கிறதற்குப் பிரசங்கமும், பிரசங்கத்திற்கு அனுப்பப்படவும் வேண்டும். (ரோ. 10: 14, 15) சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து இரக்ஷிப்பைப் பிரச்சித்தப்படுத்தி உன் தேவன் இராஜரீகம்பண்ணுகிறார் (பண்ணுவார்) என்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகள்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன என்று (ஏசாயா 52: 7.) விளம்பியபடிக்கு ராஜ்யத்தின் சுவிசேஷம் கூறப்பட்டு முடிகிற சமயத்தில் அவ்விராஜ்யத்திற்குச் சொந்தமான சிதறிப்போயிருக்கிற யூத ஜனங்கள் தங்களுடைய சிறையிருப்பின் முடிவுகாலமாகிய அந்திநேரத்தில் தங்கள் ஸ்தானமாகிய கானான்தேசத்தில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

எதுபோல என்றால் முந்தின யுகத்தில் தேவன் ஜனங்களுடைய அக்கிரமங்களினிமித்தம் பூமியையும் அதிலுள்ள சகல ஜீவஜெந்துக்களையும் ஜலத்தினால் அழிக்கத் துவக்கினபோது தேவனால் குறிக்கப்பட்ட ஜெந்துக்களாகிய மிருகம், ஊர்வனம், பறவைமுதலான ஜீவனுள்ள பிராணிகளை அததற்குக் குறிக்கப்பட்ட ஸ்தானத்தில் குறிக்கப்பட்ட காலத்தில் தானாய் வந்தடையும்படி செய்ததுபோலவும், சகல ஜீவஜெந்துக்களும் பகலில் தங்களுக்கு ஆகாரம் தேடி அதது தன்தன் போசனத்தை முடித்து அந்திநேரமாகிய தங்களுடைய இளைப்பாறும் நேரத்தில் அதது தானாய்த் தன் தன் ஸ்தானத்தில் சேர்ந்து இளைப்பாறுவதுபோலவும், தங்களுடைய குற்றங்களுக்குத் தண்டனையாகத் தங்களுடைய ஸ்தானத்தைவிட்டுத் துரத்தப்பட்டுச் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலர் என்று சொல்லப்பட்ட யூதர்கள் அலைசடிப்பட்டு வருத்தத்தையும் துன்பத்தையும் அனுபவித்து அந்திநேரமாகிய இளைப்பாறுகிற காலத்தில் தாங்கள் விட்டுப்போன ஸ்தானமாகிய வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானான்தேசத்திற்கு வந்து சேர்வார்கள்.

முந்தின சஞ்சிகைகளில் சொல்லப்பட்டபடி கிறிஸ்துவின் வருகைக்குமுன் கூறப்பட்ட ஏழு அடையாளங்கள் நடந்தாலும் முடிவு உடனே வராமல் வேதனைகளுக்கு ஆரம்பமென்றும் ராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகம் எங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாக்ஷியாகப் பிரசங்கிக்கப்பட்டு முடிந்த உடனே முடிவு வருமென்று வரப்போகிற மேசியா உரைத்ததுபோல் சிதறுண்ட யூதர்கள் சேர்க்கப்படவேண்டுமென்று கிறிஸ்து மகாராஜா வெளியரங்கமாகச் சொல்லாவிட்டாலும் (மத். 24: 14.) அடுத்த 15ம் வாக்கியத்தில் "பாழாக்குகிற அருவருப்புக்குத் தலைவனைக்குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். அதை பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக்காணும்போது" என்று காட்டி இருப்பதால் "பரிசுத்த ஸ்தலம்" என்பது எருசலேம் தேவாலயத்தையே குறிக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. தானி. 9: 27ல் "அவர் ஒருவாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி அந்தவாரம் பாதிசென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணுவார். அருவருப்பான செட்டைகளோடு பாழாக்குகிறவன் இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்." இந்தப் புத்தகத்திற்கு உரையாக வெளிப்படுத்தின விசேஷம் 11ம் அதிகாரத்தையும் 1 தெசலோனிக்கேயர் மூதலான நிருபங்களையும் ஒத்துப்பார்த்தால் அதின் பொருள் திட்டமாய் விளங்கும். (பின்பு பாழாக்குகிறவனைப்பற்றிச் சொல்லப்படும்.) இதில் பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவாரென்றும் பாழாக்குகிறவன் இறங்குவான் என்றும் சொல்லியிருப்பதால் (மத். 24: 15.) நீங்கள் அதை, அதாவது பாழாக்குகிற அருவருப்பானவனைக் காணும்போது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைக்கு ஓடிப்போகக் கடவர்கள் என்றும் (மத். 24: 16)ல் சொல்லியிருப்பதால் யூதர்கள் எருசலேமில் அல்லது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானான்தேசத்தில் வந்திருந்திருக்கவேண்டுமென்பதற்குச் சந்தேகமில்லை.

"மேலும் இஸ்ரவேலரெல்லாரும் இரக்ஷிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவாரென்றும், நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. ரோ. 11: 26, 27. எரே. 31: 31. ஏசா. 59: 20 பார்க்க.

க. மெய்ப்பத்தர்களே! கேளுங்கள்
மெய்வேதம் பெற்ற யூதர்கள்
பூர்வீகத்தில் யெகோவா தாம்
தெரிந்துகொண்ட ஜனமாம்.

உ. என்றாலும் வந்த யேசுவை
வெறுத்துக்கொன்ற பாவத்தை
செய்ததினால் எத்திக்கிலும்
சிதறிப்போனார் யாவரும்.

௩. போனாலும் கர்த்தர் மீளவே
உடன்படிக்கைப்படியே
ஆபிரகாமின் வம்சத்தார்
திரும்புவார்கள் என்கிறார்.

௪. திரண்ட கூட்டங்கூட்டமாய்
பற்பல தேசவழியாய்
சீயோனில் வந்துசேருவார்
கர்த்தாவின் பக்தர் ஆகுவார்.

ரு. மரத்தில்மாண்ட யேசுவே
மெய்யான மேசியா என்றே
மாகளிப்பாகச் சொல்லுவார்
நம்பிக்கையோடும் பணிவார்.

சு. கர்த்தாவின் மேன்மை ஜோதியும்
உலகம் எங்கும் நிறையும்
எங்கெங்குமுள்ள தேசத்தார்
தேவாபிஷேகம் பெறுவார்.

யூதஜனங்களைக்குறித்து விசாரிப்போம்.

I. அவர்கள் இன்னாரென்று வேதத்தில் காட்டப்பட்டிருக்கிறதாவது.
(1) அவர்கள் தேவனுடைய ஜனங்கள்.
(2) வாக்குத்தத்தத்தின் புத்திரர்கள்.
(3) தேவஜாதிகள்.

II. யூதர்களுக்கு நேரிட்ட தண்டனையாகக் கானான்தேசத்தைவிட்டுத் துரத்தப்பட்டதற்குக் காரணம்.
(1) தேவகட்டளையை மீறினது.
(2) கிறிஸ்து மகாராஜாவைச் சிலுவையிலறைந்தது.
(3) புறஜாதியார் குணப்படும்படியாக.

III. யூதர்களுடைய மீட்பு.
(1) மீட்ப்பில் இருவகையுண்டு. (1) பாபிலோன் சிறையிருப்பிலிருந்து மீட்கப்பட்டதற்கும் (2) உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டதிலிருந்து மீட்கப்பட்டதற்குமுள்ள வித்தியாசங்கள்.
(2) கானான்தேசத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
(3) எருசலேம் தேவாலயம் கட்டப்படவேண்டும்.
(4) தேவாலயமும் எருசலேம் பட்டணமும் புறஜாதியாரால் கொஞ்சக்காலம் மிதிக்கப்படவேண்டும்.
(5) யூதர்களுடைய குணப்படுதல்.
(6) அவர்கள் கிறிஸ்துவோடு ஆளுவார்கள்.

I. யூதர்கள் தேவனுடைய ஜனங்களாக அழைக்கப்படுகிறார்கள் என்று வேதவாக்கியங்களைக்கொண்டு காட்டுகிறோம்.

எகிப்திலே இஸ்ரவேலர் அடிமைப்பட்டு ஒடுக்கப்பட்ட காலத்தில் தேவன் மோசேயைக்கொண்டு பார்வோன் கையிலிருந்து அவர்களை மீட்கச் சித்தமான காலத்தில் பார்வோனைப் பார்த்து எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனத்தை விடு என்று கேட்கச் சொல்லியிருக்கிறார். யாத். 5: 1. 7: 16. 8: 1. 10: 3. தேவன் இஸ்ரவேலரை நோக்கி நீங்கள் என்னுடைய கட்டளைகளின்படி நடந்தால் நான் உங்களைச் சகலத்திலும் ஆசீர்வதிப்பேன. நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் என்று உடன்படிக்கைபண்ணினார். லேவி. 26: 12. தேவன் சாமுவேலைப் பார்த்து இஸ்ரவேலருடைய விருப்பத்தின்படி அவர்களுக்கு சவுலை அபிஷேகம்பண்ணச் சொன்னபோது, என் ஜனமென்று அழைக்கிறார். 1 சாமு. 9: 16. 2 சாமு. 3: 18. 7: 8, 10. 14: 13. 2 இராஜா 20: 5. 1 நாளா. 17: 6. 2 நாளா. 1: 11. 6: 5, 6. 7: 14.

| சங்கீதம் | எசாயா. | | |
|---|---|---|---|
| 50: 7. | 1: 3. | 40: 12. | 53: 8. |
| 68: 33. | 5: 13. | 43: 20. | 58: 1. |
| | 10: 24. | 47: 6. | |



| | | | |
|---|---|---|---|
| 78: 12. | 26: 20. | 51: 16. | 63: 8. |
| 81: 11, 13. | 32: 18. | 52: 4, 6. | 65: 18, 19. |

எரேமியா.

| | | | |
|---|---|---|---|
| 2: 13. | 11: 3. | 27: 32. | 50: 6. |
| 5: 26. | 15: 7. | 30: 22. | 51: 45. |
| 7: 23. | 23: 2. | 31: 14. | |

எசேக்கியேல்.

| | | |
|---|---|---|
| 13: 9, 10, 19, 21. | 37: 12. | 45: 8, 9. |
| 14: 8, 11. | 38: 14, 16. | 46: 18. |
| 34: 30. | 44: 23. | |

ஓசியா.

1: 10. இதில் என் பிள்ளைகள்.
4: 12.
11: 7.

யோவேல் 3: 2, 3. ஆமோஸ். 9: 10. ஒபதி. 13.
மீகா. 1: 9. 3: 3. செப்பனி. 2: 8, 9.
2: 4, 8, 9. 6: 3, 5.
சகரி. 8: 7. 13: 9. ரோ. 4: 26. எபி. 4: 9. 1 பேது. 2: 10.

மேற்காட்டிய வாக்கியங்களினாலே தேவன் தாமே இஸ்ரவேலரை என் ஜனங்கள் என்று அழைத்திருக்கிறார். மற்றவர்களால் சொல்லப்படும்போதும் தேவனுடைய ஜனங்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

---

## பிரசங்கம்.

பரி. மத். 6: 24.

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலுங் கூடாது."

உலகில் மனுஷர் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்கிறதினால் அவர்களுக்குண்டாகிற கோபமும் வேலைகளுக்குண்டாகிற நஷ்டமும் எவ்வளவென்று உங்களுக்கு நன்றாய்த் தெரியுமே.

இந்த வாக்கியத்தில் கண்டிருக்கிற இரண்டு எஜமான்களும் யார்? ஒன்று தேவன். மற்றது மம்மோன. மம்மோன் என்பது சீரியாக் பாஷை வார்த்தை. அதற்கு உலகம் என்று அர்த்தம். ஆம், தேவனுக்கும் உலகத்துக்கும் ஊழியஞ்செய்ய ஒருவனாலுங் கூடாது. மனுஷர் எதைப் பிரதானமாய்த் தேடுகிறார்களோ அதுவே அவர்களுடைய பிரதான எஜமானாயிருக்கும். மனுஷருடைய விருப்பமும் வாஞ்சையும் எப்பொருளைச் சார்ந்து நிற்குமோ, அவர்களுடைய செய்கைகளும் குணங்களும் அப்பொருளையே சார்ந்து நிற்கும்.

உலகில் பலருக்குப் பல எஜமான்கள் உண்டு. சிலருக்குத் தங்களுடைய வயறே எஜமானாயிருக்கும். சிலருக்குச் சோம்பலும், சிலருக்குப் பெருமையும், சிலருக்குப் புகழ்ச்சியும், சிலருக்குச் சிற்றின்பமும், சிலருக்குக் குடியும் இன்னும் சிலருக்குப் பணஆசையுமே தங்களுடைய எஜமானாயிருக்கும்.

அநேகர் இவ்விரண்டு எஜமான்களுடைய கட்டளைப்படி நடந்து அவர்களுடைய தயவைப்பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். இவர்கள் பக்தியேதுமற்ற மாயசாலக்காரர். உலகத்திலும் பரலோகத்திலும் பொக்கிஷம் இருக்க விரும்புகிறவர்கள். ஒளியையும் இருளையும் ஒன்றாக்கப் பிரயாசப்படுகிறவர்கள். மோக்ஷத்தையும் நரகத்தையும் சம்பந்தப்படுத்த முயலுகிறவர்கள். கிறிஸ்துவையும் பேலியாளையும் ஒப்புரவாக்க வாஞ்சையுள்ளவர்கள், இது கூடியதோ, கூடியதல்லவே. இருதோணியில் கால் வைக்கிறவன் சமுத்திரத்தில் விழுவானே.

சாலொமோன் இராஜாவுக்குத் தமது அரசாட்சியின் துவக்கத்தில் ஒரு வழக்கு வந்தது. அதற்கு முடிவாக, உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து இரண்டு ஸ்திரீகளுக்கும் கொடுக்கக் கட்டளைகொடுத்தார். அப்போது ஒருத்தி சம்மதித்தாள். வேறொருத்தியோ சம்மதிக்கவில்லை. அப்படியே உலகமும் தனக்குப் பாதிகொடுக்கவேணும் என்று கேட்கிறது. பிள்ளையைப் பிளந்தால் முடிவென்ன? செத்துப்போகும். அதற்கு உயிர் இராது. அப்படியே நமது இருதயம் பகுக்கப்பட்டால் அது செத்துப்போனதுக்குச் சரியே. செத்தபின்பு அது தேவனுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது. நம்மை உண்டாக்கிப் பராமரித்துவருகிற நமது பரம தகப்பனுக்கு அரைவாசி, முக்கால்வாசியென்றல்ல, முழுவதையும் அவருக்குப் படைக்கவேண்டும்.

பிரியமான சபையாரே! நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்? கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அவனைப் பினபற்றுங்கள். உங்கள் இருதயம் பகுக்கப்பட்டிருக்குமானால், உங்களுக்கு இரக்ஷிப்பின் சந்தோஷமில்லை. கிறிஸ்துவின் புண்ணியங்களில் பங்கு கிடைக்கமாட்டாது. நீங்கள் பெரும்பாதாளத்தின் ஓரத்தில் நிற்பீர்கள். இருள் மூடிய படுகுழி ஓரமாய் இருந்து உங்கள் ஆத்துமா தத்தளிக்கும். நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியது ஒன்றுதான். ஒன்றே தேவை. அதை மரியாள் தெரிந்துகொண்டாள். தன்னைவிட்டு எடுபடாத பங்கையே தெரிந்துகொண்டாள். அந்தப் பங்கை நீங்களும் பெறும்படி பிரயாசப்படுங்கள். "நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்" என்று யோசுவா சொன்னது போல, நீங்களும் உங்கள் வீட்டாரும் இதுமுதல் அவரையே சேவியுங்கள். அவர் நமது மெய்யான எஜமானாயிருப்பதால், நாம் உண்மையுள்ள ஊழியக்காரராய் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய பாதம் பணிந்து, அவரைக் கனம்பண்ணி நன்றியறிந்த மனதுடனே போற்றுவோமாக. நாம் நமது ஜீவநாட்களில் அவருக்கே ஊழியஞ்செய்தோமானால், நாட்களின் முடிவிலே நமது எஜமானுடைய சந்தோஷத்துக்குட்படுவோம். தூதர் சங்கம் அணிவகுத்து நிற்க, கேரூபின்கள் சேராபின்கள் பரம கீதங்களை முழங்க, நமது எஜமான் ஜீவகிரீடத்தை எடுத்துத் தமது கையினாலே நமது சிரசில் அணிவார்.

ஞானக்கண் ஜேம்ஸ்.

Gnanakan James,

Idaiyangudi.

---



## சர்சுமிஷன் சங்கத்தைச்சேர்ந்த சூரண்டைச் சேகரம் பட்டறைகட்டிக் கிராமம் ஆனரேரி முத்துசுவாமி உபதேசியாருடைய ஜீவிய விர்த்தாந்தம்.

(தொடர்ச்சி.)

1883ம் ஹு நவம்பர்மீ முதல் க்ஷயரோகம் ஆரம்பித்து 1884ம் ஹு ஜனுவரியில் சுகமாகி 3 மாதம்வரை ஆரோக்கியமாயிருந்தார். திரும்பவும் வியாதி ஆரம்பித்துக் கொஞ்சக்காலம் வருத்தப்படுத்துகிறதும், கொஞ்சக்காலம் குணந்தோன்றுகிறதுமாகவிருந்தது. இப்படியிருக்கையில்தானே 1884ம் ஹு செப்தெம்பர்மீ பட்டறைகட்டியில் சற்று பெரிதான கோவில் ஒன்று கட்ட சபையாரை ஏவி உத்தேசம் ரூ 70 வரை சபையாரே செலவுசெய்து கட்டிமுடிக்க ஏற்பாடுசெய்து, டிசம்பர்மீ 1௳ கோவில் பிரதிஷ்டைசெய்யவும் முயற்சித்தார். அப்போ வியாதி சற்று இலகுவாயிருந்தது. இனிமேலாக சுகத்துக்கு வருமென்று எல்லாரும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனாலோ காரியம் வேறு. எப்படியெனில் 1885ஹு பெபுருவரியில் வியாதி அதிகரித்து சுவாசகாசமாக ஆரம்பித்து ஷை மீ 25௳ இரவுதொடங்கி படுக்கைக்கு இடங்கொடாமல் இருப்பிலே வைத்துவிட்டது. அந்த ரோகத்தின் கொடுமையால் அவர் பட்ட அவதி மிச்சம். எவ்வளவு வருத்தமிருந்தபோதிலும் ஏசுஇரக்ஷகர்பேரில் விசுவாசமும் நம்பிக்கையும் அதிகரித்ததேதவிர குன்றவில்லை. மரிக்கிறதற்குச் சில தினங்களுக்குமுன் பக்கத்திலிருந்த தம்முடைய தம்பி ஜே. சுவாமிதாசன் உபாத்தியாயரைப் பார்த்து தாம் பிழைக்கிறது கூடாத காரியம் என்றும், ஏசுசுவாமி தம்மை எடுத்துக்கொள்ளச் சித்தமாயிருக்கிறாரென்றும் வெளியிடவே ஷை உபாத்தியாயர் அது தேவசித்தம். நீங்கள் விசுவாசத்தில் ஸ்திரமாயிருக்கவேண்டுமென்று சொல்ல, அப்போது அவர் "குமாரனையுடையவன் ஜீவனையுடையவன், குமாரனில்லாதவன் ஜீவனில்லாதவன்" என்ற வாக்கியத்தையும்; "ஒருவன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" என்ற வசனத்தையுஞ் சொன்னார்.

பின்னொருநாள் பேசுகிறதற்குத் திராணியில்லாமல், தம்முடைய தம்பி கிறிஸ்தியான் தேவரைப் பார்த்து, "கர்த்தர் எனக்குச்செய்த" என்ற வாக்கியத்தைச் சொல்லென்க, கர்த்தர் எனக்குச்செய்த உபகாரங்களுக்காக என்று சொல் என்பதாய் எல்லா என்கிற வார்த்தையை ஊன்றிச் சொன்னார். மார்ச்சுமீ 1௳ ஞாயிற்றுக்கிழமையில் கிறிஸ்துநாதருடைய பேரன்பையும் அவர் சம்பாதித்த இரக்ஷிப்பைப்பற்றியும் கொஞ்சநேரம் வேப்பன்குளம் ஞானப்பிரகாசம் உபதேசியார் ஷையாருக்கு ஆறுதலாகச் சொல்ல அதை இன்பமாய்க் கேட்டு, தலையை அசைத்துக்கொண்டேயிருந்தார். மார்ச்சுமீ 4௳ புதன்கிழமை அந்தி $4\frac{1}{2}$ மணிக்கு இருகையையும் வானத்துக்கு நேராக விரித்து ஜெபசிந்தையோடு தம்மை யாட்கொண்ட அருமை இரக்ஷகரிடம் 48 வயதில் கர்த்தருக்குட்பட்டவராய்ச் சமாதானத்தோடே தம்முடைய ஆவியை ஒப்புவித்தார்.

புதன்கிழமை வாரத்தினாட்களில் நடுநாள், அந்த நடுநாளில் தேவனுக்கும், மனிதருக்கும் நடுநின்றவரும், ஏழு விளக்குத்தண்டுகளின் நடு

வில் உலாவுகிறவரும், இரண்டுபேர் மூன்றுபேர் ஒன்றித்து ஜெபஞ்செய்யுங்கால் அவர்கள் நடுவில் வருபவரும், மூவரில் நடுவருமான நடுநாயகரண்டை உபத்திரவங்களின் நடுவினின்று இம்மையைவிட்டுப் பிரிந்தனர். புதவாரமாகிய நாலாம் நாளில் சந்திர சூரிய தாரகாகணங்களான வெளிச்சங்கள் உண்டாக்கப்பட்ட நாளானதால், ஒருவருங் கிட்டிச்சேராத ஒளியினிடத்தில் வாசம்பண்ணுகிற உன்னதரண்டை இவர் செல்லுகிறதற்கு அந்தநாள் ஏற்றநாளாயிருந்ததென்கலாம். அந்திப்பலி செலுத்தி முடிவாகிற நேரத்தில் இவரும் தம்முடைய அந்திய காலத்தை முடித்தார்.

"குடம்பைதனித்தொழியப் புட்பறந்தற்றே,
உடம்போடுயிருடைநட்பு'' என்ற குறளுக்கேற்பவும்,

"சேக்கைமரனொழியச் சேணீங்குபுட்போல,
யாக்கைதமர்க்கொழிய நீத்து'' என்ற நாலடியார்க்கேற்பவும் மண்

ணாலான யாக்கையை மண்ணுக்கொப்புவிக்கத் தம்முடலையும், தம்மிடத்தில் விளங்கிய அரியபொறுமையையும் சிறந்த விசுவாசமுமாகிய நற்குணங் தெரிந்தொழுகத் தம்முடைய நன்மாதிரியையும் பின்வைத்து, கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென்றலறவும், தக்கசோதரர் சோதரிகள் தவித்தழவும், மக்கள்மனைவி மறுகிவாடவும், மிக்கபந்துளோர் விம்மிப் புலம்பவும், ஒக்கல்மீக்கம் கண்ணீர் உகுக்கவும், இம்மையைப்பிரிந்து மறுமையில் சிறந்தனர். இம்மையின் கஷ்டங்கள் இதோபோகிறோமென்றோடவும், மறுமையின் சந்துஷ்டியால் மங்களம்பாடவும், மனுவேலிடஞ் சென்றனர்.

"இந்தப்பொய்வாழ்வை யேற்றிருந்தேன் நான்பாவி
அந்தமெய்வாழ்வை யடைவதினியெக்காலம்.''

"இந்தப்பொய் வஸ்திரத்தையேற்றிருந்தேன் நான்பாவி
அந்தநீதிவஸ்திரத்தை யணிவதினியெக்காலம்''

என்பதாய்த் தாம் பாடிய எக்காலக் கண்ணியில் கண்டிருக்கிற பிரகாரம், மெய்வாழ்வடைய, நீதியின்வஸ்திரத்தை யணியச்சென்றனர்.

மறுநாளாகிய மார்ச்சுமீ 5உ வியாழக்கிழமை ஷெயார் சகோதரர் சீனிவாசகத் தேவர் ஷெயாரிடத்தில் கேட்டு, அவர் சம்மதித்தபடிக்கு, ஷெ கிராம ஊர்க்கிணற்றின் தென்புறத்தில் ஷெயார் தோட்டத்தில் உடலைப் பல்லக்கில் வைத்துக்கொண்டுபோய், ஸ்ரீ வி. உப. இராயப்ப பிள்ளையவர்கள் பிரேதச்சேம ஜெபங்கள் வாசிக்க, உடலைப் பெட்டியில் வைத்துச் சேமிக்கப்பட்டது.

யாருக்கும் நல்லவராயும், யாவராலும் நன்குமதிக்கப்பட்டவராயுமிருந்தாரென்பது அன்றையத்தினம் கூடிய கூட்டத்தின் மிகுதியாலும், எல்லார் முகத்திலும் தோன்றிய துக்கத்தாலும் தெரியவந்தது. இந்தக் குடும்பத்துக்கு இவரே தலைவன். இவருடைய இனத்தாருக்கு இவரால் கிடைத்திருக்கும் மேன்மையும் மரியாதையும் மிகுதி. இவருடைய மரணம் இந்தக் குடும்பத்துக்கு மிகவும் நஷ்டமே. எல்லாவற்றையும் நன்மைக்கென்று செய்துவருகிற திரியேக தெய்வம் அவர்களெல்லாரையும் ஆறுதல்படுத்தி நித்தியஜீவனுக்கு ஆளாக்குவாராக.

கர்த்தருக்குட்பட்டு மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

---



## சமாசாரத்திரட்டு.

### திருநெல்வேலித் தீக்கொள்ளை.

திருநெல்வேலி வடக்குரதவீதியிற் சுவாமி நெல்லையப்பர் **கோவி**லுக்குப் பாத்தியப்பட்டதாய் அவ்வாலயத்தின் வடக்குக் கோபுரவாயிலை யொட்டி அதன் முன்னாகச் சிறிய காலிமனையொன்றிருக்கிறது. அதைக் கோவிலார் வண்டிப்பேட்டையென வைத்துக்கொண்டு குத்தகைக்குக் கொடுக்கிறதும், குத்தகைக்கு ஏற்கிறவன் அதிற் கட்டப்பட்டிருக்கிற குச்சுகளிற் பப்ளிக்வியபிசாரிகளைக் குடிவைத்தும், மீத இடத்தில் நாடகம், கூத்துமுதலிய வேடிக்கைகள்செய்ய இடங்கொடுத்தும் திரவியம் சம்பாதிப்பது சில வருஷங்களாய் நடந்துவருகிற வழக்கமாயிருக்கிறது. அவ்வழக்கப்படி உத்தரதேசத்திலிருந்து வந்திருக்கிற சில பிராமண ஜாதி நாடகர் அந்த இடத்தை வாடகைக்கு வாங்கிப் பலமான மூங்கிற்றண்டாயங்களாலும், பனையோலைகளாலும், கொட்டகை போடுவித்தும், சுற்றுப்பக்கங்களில் வெளியே நின்று பார்ப்பவர்களுக்குத் தெரியாமலிருக்கும்பொருட்டு நான்கு பக்கங்களிலும் அவ்விதமே நிரசல்போட்டும் சுமார் ஒருமாசக்காலமாய் நாடகமாடி வந்ததில், நாளதுமீ 26உ சோமவாரதினம் இராத்திரி சுமார் 11—மணிக்கு ஆட்டம் நடந்துகொண்டிருக்கும்போது அக்கொட்டகையில் நெருப்புப் பற்றியெரியவே நாடகசாலைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரே வாயிலும் பந்தனஞ்செய்யப்பட்டிருந்ததினாலே அதிற் கூடியிருந்த சுமார் ஆயிரம் ஜனங்களும் அல்லோலகல்லோலப்பட்டுத் தப்பியோடுவதற்கு மார்க்கமின்றித் தட்டழிந்து வெகு பிரயாசையின்பேரில் அநேகர் மேல்பக்கம் கீழ்பக்கம் வீடுகளின் உயர்ந்த சுவர்களைத் தாண்டிக் குதித்தும் பக்கத்திலுள்ள கோபுரத்தின்மீதேறித் தட்டொட்டிவழியாய்ச் சென்றும் பிழைத்துப்போயினர். ஏனையோருள் கோபுரத்தின்மேலேறினவரிற் சற்றுப் பிந்தியவர், வீசிய சுவாலையினால் எரிந்துசோர்ந்து எரியும் அக்கினிக்குள் தலைகீழாய் விழுந்து மாண்டனர். கீழ்பக்கம், மேல்பக்கம் சுவர்களைத் தாண்டிப்போகப் பிரயத்தனப்பட்டவர்களிற் சிலரைப் பின்வந்தவர்கள் ஆத்திரத்தோடு கைகால்களைப் பற்றிக்கொண்டதினால் உன்னியேற சாத்தியப்படாமல் அப்படியே கீழேவிழுந்து பொசுங்கினர். கொட்டகையின் தளம் சமமாயில்லாமல் மத்தியில் நாற்காலிபோடுவதற்குக் கெடுபள்ளமாகவும், ஆடுகிற தளம் மிகமேடாகவும், சுற்றிப்பெஞ்சுகள் போடுகிற தளம் இரண்டுக்கும் பேதமாகவுமிருந்ததினாலும் சுவாலையினாலும் புகையினாலும் வெளிவர மார்க்கமின்றி ஒருவர்மேலொருவர் விழுந்து அக்கினிக்கிரையாயினர். வாயிலை நாடிவந்த ஜனங்கள் கதவு பந்தனம்பண்ணப்பட்டிருந்ததினால் திறக்கமார்க்கமின்றி அப்படியே யெரிந்து விழுந்தனர். குற்றுயிராய்க் கிடந்த சிலரும் அவரவர் வீட்டுக்குக் கட்டில்களின்மேற் றூக்கியெடுத்துக் கொண்டுபோகப்பட்டு வேண்டும் சிகித்சைகள் செய்யப்பட்டதிலும் குணத்துக்கு வராமல் உயிர்துறந்துவிட்டனர். இவ்விதமாகப் பிராணச்சேதமடைந்தவர் சுமார் முந்நூற்றுக்கு மேலிருக்குமென மதிக்கப்படுகிறது. இதில் மூன்றில் இருபாகம் பிராமணரும், மற்ற ஒரு பாகம் வேளாளர், வடுகர், மகமதியர் முதலியோரும். இவ்விதம் மரணமடைந்தவர்கள் திருநெல்வேலி நகரவாசிகள் மட்டுமல்ல. இந்நாடக

வேடிக்கை பார்க்கவென்றே சுமார் 20 மயிலுக்கப்பால் முதலிருந்து வந்த
வர்களும் ஜில்லாவுக்குப் பிரதான நகரமானதினாலே பலவிடங்களினின்
றும் பல ஜோலிகளை முன்னிட்டு வந்தவர்களும் சேர்ந்தே நாடகக்கார
ரில் ஒருவருக்காவது உயிர்ச்சேதமில்லை. வேறு துன்பமுமில்லை.

நாடகக்கொட்டகை பற்றியெரியுங்கால் ஜனங்கள் அதினின்றும்
தப்பிப்பிழைக்க வகைதேடி அவதிப்பட்டும் ஸாத்தியப்படாமல் மாண்ட
காக்ஷியும், அப்பால் பிணக்குவியல்களின் காக்ஷியும், அவைகள் அடை
யப்பெற்றிருந்த குரூர ரூபக்காக்ஷியும், குற்றுயிராய்க் கிடந்த ஜீவர்களின்
காக்ஷியும், மாண்டுபோனவர் காயப்பட்டவர்களுடைய பெண்டு பிள்ளை
களின் அழுகைக் காக்ஷியும், எப்படிப்பட்ட வன்னெஞ்சரும் சகிக்கத்
தகாதனவாயிருந்தன. நெருப்பினால் தகிக்கப்படுங்கால் அவ்வுயிர்கள்
என்னதுடி துடித்தனவோ! என்ன வதை வதைத்தனவோ! என்ன பாடு
பட்டனவோ! சர்வஞ்ஞருக்குத்தான் தெரியும்.

அக்கினியெரிந்து அநேகமாய்த் தணிந்தபின்னர் மேஜிஸ்திரேட்டு
அதிகாரிகளாலும் போலீசார்களாலும் கதவு திறக்கப்பட்டுப் பிணங்களும்
உயிர் கிடந்த சரீரங்களும் எடுக்கப்பட்டு வீதியில் வரிசையாய்க் கிடத்தப்
பட்டன. ஜனங்கள் தீவெட்டி, லாந்தல் முதலியவைகளுடன் போய்
ஒவ்வொரு சரீரத்தையும் அடையாளம் பார்த்துத் தத்தமக்குரிய பிரேதங்
களை யெடுத்து அடக்கம்பண்ணக் கொண்டுபோயினர். உயிர் கிடந்தவை
களைத் தந்தம் வீடுகளுக்குக் கொண்டுபோயினர். அடையாளங்கள் தெரிய
மார்க்கமில்லாமல் அங்கப்பழுதாய்ப்போன பிரேதங்களை இனத்தார் இரவு
அடையாளங் கண்டுபிடிக்க மார்க்கமின்றி விடிந்தபின் தெரிந்தெடுத்துக்
கொண்டுபோயினர். பள்ளத்துக்குள்ளும் சாம்பலுக்குள்ளும் புதைந்து
கிடந்த அநேக பிரேதங்கள் மறுநாட் காலையிற்றான் வெளியாக்கப்பட்
டன. இனமே துலங்காத அநேகம் பிரேதங்கள் சர்க்காரால் எடுத்துப்
புதைக்கப்பட்டன.

அன்றிரவு திருநெல்வேலி பட்டபாட்டைச் சொல்லவும் எழுதவும்
வாயுங் கையும் நடுங்குகின்றன. மனமுந் திடுக்கிடுகிறது பட்டணத்தி
லுள்ள இருபத்தையாயிரம் ஜனங்களுக்கும் அன்றிராத்திரி இமைப்பொழு
தும் நித்திரை கிடையாது. எங்குபார்த்தாலும் அழுகை, எங்குபார்த்தாலும்
கூக்குரல், எங்குபார்த்தாலும் திரள்திரளாய் ஜனங்கள் கூடிக் காயப்பட்
டவர்களையும் இறந்துபோனவர்களையும் கட்டில்களின்பேரில் தூக்கிக்
கொண்டுபோதல், இத்தியாதி பரிதாபக் காக்ஷிகளாகவேயிருந்தன. குற்
றுயிராய்க் கிடந்தவர்கள் ஒருவர்பின்னொருவராய் மடிந்துகொண்டு வரு
வதினாலே அழுகையுங் கூக்குரலும் இன்னும் அடங்கவில்லை. ஏகபுத்திர
னையுடையவரும், சந்ததியில்லாது விருத்தாப்பிய தசையில் புத்திர ஸ்வீ
காரஞ்செய்துகொண்டவருமாய் அப்புத்திரனையே தம் குடும்ப விர்த்திக்
கும், தம் ஏராளமான ஐசுவரியத்தை ஆண்டனுபவிப்பதற்கும் ஆதாரமெ
னக்கொண்டிருந்து இப்பொழுது அப்புத்திரனைக் கொள்ளை கொடுத்து
விட்டுத் தம்குடி க்ஷணநேரத்திலிப்படி அடியோடு கெட்டுப்போனதை
நினைத்து எக்கமுற்றுத் துன்பக்கடலிலாழ்ந்திருக்கும் மாதாபிதாக்கள் சிலர்.
தம் இகபர சம்ரக்ஷணார்த்தத்துக்குப் புத்திரனையே தாரகமாய் எண்ணியி
ருந்து இப்பொழுது அபுத்திரவானாய்விட்ட விதந்துத் தாய்மார் சிலர். புத்
திரனை இழந்துவிட்டமையால் உதரபோஷணத்துக்கு மார்க்கமின்றிப்
பரிதபிக்கும் விருத்தாவயசுடைய ஏழைத் தாய்தந்தையர் சிலர். அதிரூப
லாவன்னியராகவும், பாலிய யௌவன வயசுடையராகவும், சர்வாபரணா



லங்கிருதராகவும், பாக்கியசாலிகளாய் மஹா லெக்ஷிமியைப்போன்ற சுமங்
கிலிகளாயிருந்து நிமிஷத்துக்குள் அவ்வளவும் மாறிச் சொப்பனத்திலுஞ்
சிந்தியாதகரிக்கோலமாகிய நித்திய அமங்கிலிய தசையையடைந்து உலக
இன்பங்களை யொருங்கே இழந்து நெருப்பிற்பட்ட புழுப்போற்றுடிக்கும்
நிர்ப்பாக்கிய ஸ்திரீகள் பலர். இச்சீரழிந்த கோலத்தையும், படுதுயரத்தை
யுங் கண்ணுற்று அழுதழுது புலம்பிவருந்தும் பெற்றோர் சுற்றத்தார் மித்
திரர் முதலியோர் அனந்தம். இவ்வாறு பட்டணம் படுந்துயரத்துக்கு அள
வுசங்கையில்லை. பட்டணத்துள் எங்குநோக்கினும் வாட்டமுகமே. எந்
தத் திக்கிலும் முகமலர்ச்சியே கிடையாது. இக்கொடுந் துயரமான நிலை
மையில் இந்நகரமாவது மற்றெந்நகரமாவது எக்காலத்திலும் இருந்திருக்க
மாட்டாது. பரிதாபம்! பரிதாபம்!!

அஸிஸ்டாண்டுக்கலெக்டர் ம-ா-ா-ஸ்ரீ வரதராவ் அவர்களும் தாசில்
தார் ம-ா-ா-ஸ்ரீ அனந்தநாராயண ஐயரவர்களும் அடைக்கப்பட்டிருந்த
கதவைத் திறந்து துன்பமடைந்து கிடந்த ஜனங்களையும் பிரேதங்களையும்
தக்ஷணமே வெளியாக்குவதிலும், வெளியாக்கியபின் ஜீவனிருந்தவர்க
ளுக்கு வேண்டும் சிகித்ஸைசெய்விப்பதிலும் விசேஷ பிரயாசையெடுத்
துக்கொண்டனர். மறுநாள் அஸிஸ்டாண்டு கலெக்டரவர்கள் துன்பமடை
ந்து ஜீவனோடிருந்தவர்கள் வீடுகள்தோறும்போய் அவர்களுடைய சரீர
ஸ்திதியைப் பார்த்தும் விசாரித்தும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போகும்படிக்
கும் போகும்பக்ஷத்தில் தக்க சிகித்ஸைசெய்விக்கப்படுமென்பதையும் வற்
புறுத்திப் பேசினர். மொத்தம் மேற்குறித்த இரண்டாபீசர்களும் துன்ப
மடைந்தவர்கள் விஷயமாய்க் கூடிய யாவத்சகாயமுஞ் செய்தனர். இது
மிகச் சிலாகிக்கத்தக்கதே.

ஆனால் இந்தக் கெடுதிவராமலே முன்கூட்டித் தடுப்பதற்கு மார்க்க
மிருந்ததா? ஜனங்களுடைய சரீரங்களுக்கு இப்படிப்பட்ட அபாயங்கள்
நேரிடாது காப்பாற்றவேண்டிய பொறுப்புதார்களான மியூனிஸிப்பல்
கவுன்ஸிலர்கள், போலீசார், மேஜிஸ்திரேட்டார், அபாயம் நேரிட்ட ஸ்த
லத்துக்குடைய தேவஸ்தானத்தார், இவர்களொவ்வொருவரும் செய்யவே
ண்டிய கடமைகளைச் சரியாய்ச் செய்தனரா? செய்யத்தகாத காரியத்தைச்
செய்யாது விலக்கினரா? என்ற அம்சங்களைப்பற்றிப் பரியாலோசிக்க
வேண்டுவது அத்தியாவசியமாயிருப்பதால் அடுத்த முறை விஸ்தரித்துப்
பேசுவோம்.

மேற்கண்டபடி நெருப்புப் பற்றினது கைப்பிழைபாடாய் நடந்ததெ
ன்று நினைக்க எவ்வளவும் ஹேஷ்யமில்லை. எந்தப் பாதகனோ வேண்டு
மென்றே செய்திருக்கிறானென்று யாவத் ஜனங்களும் ஒரே வாக்காய்ச்
சொல்லுகிறார்கள். அவன் இன்னானென்பதைக் கண்டுபிடிக்காத விஷயத்
திற் போலீஸாருக்கு என்ன பெருமையிருக்கிறது. இந்தக் கேசில் உண்
மையான குற்றவாளி இன்னானென்பதைத் துலக்கித் தண்டனைக்குக் கொ
ண்டுவரப் போலீசாரும், மேஜிஸ்திரேட்டாரும் தக்க ஏற்பாடுசெய்வாரென
நம்புகிறோம்.

(1886ளு ஜூலைமீ 29உ. சுஜனமனோ ரஞ்சனி.)

ஆகஸ்துமீ நாள்-31. ஆடிமீ 18௳ முதல், ஆவணிமீ 17௳ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | ௧௮ | அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது. 2 சா. 23: 2. |
| தி | 2 | ௧௯ | அவருடைய இரக்கங்கள் மகா பெரியது 24: 14. |
| செ | 3 | ௨௰ | ராஜாவாகிய சாலொமோன் வாழ்க. 1 ராஜா 1: 34. |
| பு | 4 | ௨௧ | சாதோக்கை அபியத்தாரின் ஸ்தானத்திலும் வைத்தான். 2: 35. |
| வி | 5 | ௨௨ | நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள். 3: 5. |
| வெ | 6 | ௨௩ | சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது 4: 30. (கிறேன். |
| ச | 7 | ௨௪ | கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று இருக் |
| ஞா | 8 | ௨௫ | ஆலயம் ஒருபங்கும் குறையாமல் கட்டித்தீர்ந்தது. 6: 38. |
| தி | 9 | ௨௬ | தூண்களை தேவாலய வாசல்மண்டபத்தில் நிறுத்தினான். 7: 21. |
| செ | 10 | ௨௭ | இந்த ஆலயத்தின்மேல் உம்முடைய கண்கள் திறந்திருப்பதாக. |
| பு | 11 | ௨௮ | என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கே இருக்கும். 9: |
| வி | 12 | ௨௯ | உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள். 10: 8. (11: 4. |
| வெ | 13 | ௩௰ | அவனுடைய இருதயம்...கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை |
| ச | 14 | ௩௧ | என்றாலே இந்தக் காரியம் நடந்தது. 12: 24 (ன் 13: 6. |
| ஞா | 15 | ௧ | கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தி விண்ணப்பஞ்செய்தா |
| தி | 16 | ௨ | உனக்குப் புறம்பே என்னைத் தள்ளிவிட்டாய். 14: 9. (14: |
| செ | 17 | ௩ | (ஆசா) அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருந்தது. 15: |
| பு | 18 | ௪ | ஆகாப்...கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தா |
| வி | 19 | ௫ | பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவந்தது. 17: 22. (ன். |
| வெ | 20 | ௬ | பாகாலே...எங்களுக்கு உத்தரவு அருளும் என்று.. கூப்பிட்டார் |
| ச | 21 | ௭ | எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றார். 19: 9. (கள் |
| ஞா | 22 | ௮ | (கர்த்தர்) பள்ளத்தாக்குகளின் தேவனாயிராமல்...மலைகளின் தேவ |
| தி | 23 | ௯ | நாபோத் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான். 21: 13. (னயிரு |
| செ | 24 | ௰ | நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள் |
| பு | 25 | ௧௧ | ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல், சாகவேசாவாய். 2 ரா. 1: 4. |
| வி | 26 | ௧௨ | ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டு |
| வெ | 27 | ௧௩ | யோசபாத்தின் முகத்தைப் பாராதிருந்தால் . உம்மைப் பார்க்க |
| ச | 28 | ௧௪ | நீ சுகமாயிருக்கிறாயா?...பிள்ளை சுகமாயிருக்கிறதா? 4: 26. |
| ஞா | 29 | ௧௫ | அவன்: சமாதானத்தோடே போ என்றான். 5: 19. (3. |
| தி | 30 | ௧௬ | நான் இனிக் கர்த்தருக்காகக் காத்திருக்கவேண்டியது என்ன? (6: |
| செ | 31 | ௧௭ | அந்தப் பிரகாரமாகத்தானே அவனுக்கு நடந்தது. 7: 20 |

## விசேஷ நாட்கள்.

1. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 6—ம் ஞாயிறு.
8. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 7—ம் ஞாயிறு.
14. பௌரணைமி.
15. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 8—ம் ஞாயிறு.
22. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 9—ம் ஞாயிறு.
24. பரி. அப். பர்த்தொலோமேயுவின் திருநாள்.
29. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 10—ம் ஞாயிறு.
,, அமாவாசை.


# நற்போதகம்.

௯. செப்தெம்பர்மீ. ௲௮௮௯ வரு.


## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

22. தகப்பன் ஆநந்த பரவசமானதினால், தன் மகனுக்குப் பதில் கூடச் சொல்லாமல், தன் மகன் திரும்பிவந்ததைப்பற்றிச் சந்தோஷம் கொண்டாடும்படி, தன் ஊழியக்காரருக்கு உடனே கட்டளைகொடுத்தான். மனந்திரும்புகிறவர்களுக்குத் தேவன் பூரணமான மன்னிப்பைக் கொடுத்து, ஒரு பாவமுஞ்செய்யாத நீதிமான்களைப்போல் அவர்களைத் தம்மிடத்தில் மறுபடியும் சேர்த்துக்கொள்ளுவதை இந்த வாக்கியம் குறிக்கிறது.

“மோதிரமும் பாதரக்ஷைகளும்”. சுயாதீனமுள்ளவன் தரித்துக்கொள்ளுகிறவைகளாம்.

28. இப்பொழுது பரிசேயனைத் தேவன் கிறிஸ்துவுக்குள் அழைத்தார்.

29. “இத்தனை வருஷக்காலமாய்”. மூலபாஷையின்படி, அடிமைவேலையைக்குறித்து இப்படிப் பேசப்படும். தேவனுக்குச் செய்கிற வேலை, அடிமைவேலை என்பதாக பரிசேயர் எண்ணிக்கொள்வார்கள்.

“ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறவில்லை”. பரிசேயர் இப்படித்தான் சொல்லுவார்கள். இந்த வார்த்தைகளில் எவ்வளவேனும் அன்பில்லை. இளையகுமாரனுடைய தாழ்மையான அறிக்கையில், அன்புள்ள விசுவாசமிருக்கிறதென்று காட்டி, பரிசேயனைக் கர்த்தர் கண்டிக்கிறார் (18: 11, 13).

30. “உம்முடைய குமாரன்”. என் சகோதரன் என்று சொல்லவில்லை. அன்பில்லாமல் நிந்தையாய்ப் பேசுகிறான்.

32. "உன் சகோதரன்". உம்முடைய குமாரன் என்றதற்கு எதிரிடையாகச் சொல்லப்பட்டது. முன் எப்படியிருந்தபோதிலும் இப்பொழுது உன் சகோதரன்தான் என்று தகப்பன் சொல்லுகிறார்.

**558.** நாலாம்சுவிசேஷத்தை எழுதினவன் பரிசுத்த யோவான்தானென்று ரூபி?

முதலாவது, இதற்கு அநுமான அக உதாரணமாவது:

I. இந்தச் சுவிசேஷத்தை எழுதினவன் யூதனாயிருக்கிறான்.

1. இவன் யூதக்கொள்கைகளை அறிந்து பழகினவனாயிருக்கிறான் (1: 21. 4: 25. 6: 14. 7: 22, 40. 12: 34. 18: 28).

2. சுவிசேஷத்தின் நடை யூதனுடைய நடையாயிருக்கிறது.

"வெளிச்சம்", "இருள்", "மாம்சம்", "ஆவி", "ஜீவன்", "இவ்வுலகம்", "தேவனுடைய ராஜ்யம்", "மேய்ப்பன்", "ஜீவத்தண்ணீர்", "ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம்".

3. இவன் பழயஏற்பாட்டை ஆதாரமாக வைத்து எழுதுகிறான்.

மனுஷாவதாரம்செய்த வார்த்தையானவருக்கு யூதேயாநாடு வீடாயும் (16: 32ஒடு 19: 27); யூதேயாநாட்டின் ஜனங்கள் அவருடைய சொந்த ஜனங்களாயுமிருந்தார்கள் என்று சொல்லுகிறான் (1: 11)

பழயஏற்பாட்டு முன்னடையாளங்களாகிய வெண்கலசர்ப்பம் (3: 14), மன்னா (6: 32), கன்மலையின் தண்ணீர் (7: 37), அக்கினிஸ்தம்பம் (8: 12) ஆகிய இவை தம்மை முன்குறித்தன என்று, கிறிஸ்துநாதர்தாமே சொல்லுகிறார்.

ஆபிரகாம் அவருடைய நாளைக் கண்டான் (8: 56). வேதவாக்கியமும் தவறாததாயிருக்க (10: 35). தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே (6: 31, 45). மோசே என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே (5: 46ஒடு 1: 45). வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக (13: 18ஒடு 17: 12). முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்களென்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் (15: 25).

பழயஏற்பாடு திவ்ய அதிகாரமுள்ளதாக நெடுகப் பேசியிருக்கிறது (யோ 5: 39. 12: 14, 37. 19: 23, 28, 36, 37). (20: 31. 1: 47). (4: 22). (4: 45. 6: 15. 7: 40. 12: 12. 12: 29, 34). யூதமார்க்கஆசாரம் (1: 19. 2: 18. 19: 38. 5: 10ஒடு 1: 31). (6: 41, 52ஒடு 6: 22—40). 7: 11-13. 8: 31. 8: 59. 10: 31). யூதமார்க்க வைராக்கியம் (8: 59. 10: 31. 18: 12, 14, 31, 36, 38. 19: 7, 12, 14). யூதஆசாரியரும், சங்கத்தாரும் (7: 32, 45. 11: 47, 57. 18: 3ஒடு 7: 26, 48. 12: 42. 11: 47). பரிசேயரை யூதருடைய பிரதிநிதிகளாகச் சொல்லியிருக்கிறது (1: 19, 24. 9: 13, 18, 22. 12: 42. 8: 13. 12: 42. 12: 11. 18: 35. 19: 6, 21). யூதருடைய ராஜா (19: 14).



II. நாலாம்சுவிசேஷத்தை எழுதினவன் பலஸ்தீனாவிலுள்ள யூதனாயிருக்கிறான். அது மாத்திரமல்ல முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீனாவிலிருந்த யூதனாயிருக்கிறான்.

1. மார்க்காசாரத்துக்கும், தேசாசாரத்துக்குமுரிய குறிப்புகளைச் சொல்லுகிறான். திருஷ். "கலிலேயாவிலுள்ள கானாவூர்" (2: 1, 11. 4: 46. 21: 2). "யோர்தானுக்கு அக்கரையிலுள்ள பெத்தானி" (1: 28). இந்த இடம் ஓரிஜன் காலத்தில் அறியப்படவில்லை. 11: 18ன் பெத்தானியை வித்தியாசப்படுத்த இப்படிச் சொல்லுகிறான். "வனாந்தரத்துக்குச் சமீபமான" எப்பிராயீம் (11: 54). இது 1 சாமு 13: 17ன் ஒப்ராவாயிருக்கலாம்.-(3: 23). (6: 19ஒடு மாற் 6: 47). (4: 35, 20). (4: 11). (4: 5). 5: 2). (11: 7). 18: 1). (19: 17, 20, 41). (19: 13). (2: 14-16). (2: 20). 7 அதி). 8 அதி). (10: 22).

2. பழயஏற்பாட்டிலிருந்து இந்தச் சுவிசேஷத்தில் எடுத்துக் காட்டியிருக்கிற வாக்கியங்கள் இதற்குச் சாட்சி. அவன் மூலபாஷையாகிய எபிரேயுபாஷையில் பழகினவனென்று அந்த வாக்கியங்கள் காட்டுகின்றன.

(1) சுவிசேஷகன் எடுத்தெழுதுகிற வாக்கியங்கள்: (2: 17. சங் 69: 9). 12: 14, 15. சகரி 9: 9). (12: 38. ஏசா 53: 1). (12: 40. ஏசா 6: 10). (19: 24. சங் 22: 18). (19: 36. எண் 9: 12. சங் 34: 20). (19: 37. சகரி 12: 10. வெளி 1: 7).

(2) கர்த்தருடைய பிரசங்கங்களில் வருகிற ஒத்தவாக்கியங்கள்: (6: 45. ஏசா 54: 13). (10: 34. சங் 82: 6). (13: 18. சங் 41: 9). (15: 25. சங் 34. 19. 68: 5).

(3) வேறே ஒத்தவாக்கியங்கள்:

யோவான்ஸ்நானனால் (1: 23. ஏசா 40: 3). கலிலேயரால் (6: 31. சங் 78: 24).

3. "வார்த்தை"யைப்பற்றிய உபதேசம் இதற்குச் சாட்சி.

வார்த்தையானவரை "ஒரேபேறானவர்"என்றும்; "ஆதியிலே வார்த்தையிருந்தது"...."அந்த வார்த்தை மாம்சமாகி" என்றும் சொல்லியிருக்கிறது. இது பலஸ்தீனாவிலுள்ள யூதனுடைய நடை.

III. நாலாம் சுவிசேஷத்தை எழுதினவன் தான் எழுதுகிறவைகளைக் கண்ணால்கண்டவனாயிருக்கிறான். ஆட்கள், காலம், இடம், லக்கம், ஆசாரம் ஆகிய இவற்றை மகா நுட்பமாய் எழுதுகிறான்.

1. ஆட்கள். (6: 5, 7ஒடு மத் 14: 14). 12: 21. 14: 5, 8, 22. 13: 25. 3: 1. 7: 50. 19: 39. 11: 1. 12: 1. 6: 71. 12: 4. 13: 2, 6. 18: 13, 26.

2. காலம். (2: 13, 23). (5: 1). (6: 4). (7: 2). (10: 22). (1: 29, 35, 43. 2: 1. 12: 1, 12. 19: 31. 20: 1). (20: 26. 11: 6, 17, 39). (4: 40, 43. 6: 22. 7: 14, 37). (1: 40. 4: 6, 52. 19: 14. 13: 30. 18: 28. 20: 1. 21: 4. 6: 16. 28: 19. 3: 2).

3. இடம். (வா 1: 28. 3: 23ஒடு 10: 40). (4: 46). (5: 14) (10: 40). (11: 30, 54, 56). (6: 59). (8: 20). (10: 23). (18: 1).

4. லக்கம். (1: 35). (2: 6). (6: 9). (6: 19). (19: 23ஒடு அப் 12: 4). (21: 8). (21: 11). (4: 18). (5: 5). (12: 5ஒடு மாற் 14: 5). (19: 39).

5. ஆசாரம். (1: 35–51). (13: 1–20). (18: 15—27). (21: 1–14).-(6: 9ஒடு 13). (11: 32) (12: 3). (12: 13). (13: 30). (18: 3). (19: 23). (20: 7). (21: 17). (13: 24. 18: 6. 19: 5. 21: 20).

*இந்த விபரங்களை ஒருவன் தன் யுக்தியினால் எழுதலாமே என்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். சுவிசேஷ சரித்திரம் மனோபாவனையாக எழுதப்பட்டதல்ல. அதற்கு யாதொரு திருஷ்டாந்தமில்லை. மேலும் யுக்தியினாலே எழுதக்கூடாத விபரங்களுமிருக்கின்றன* (1: 41) (2: 12). (3: 23). (6: 22). (11: 54). (14: 31). (1: 21ஒடு மத் 11: 14)-(3: 24ஒடு மத் 4: 12). *ரகசியமான சங்கதிகளை வெளியாக்காமல் சில இடங்களில் விட்டிருக்கிறது. முன் நடந்ததும், எழுதப்பட்டிராததுமான சங்கதிகளின் தொடர்ச்சியாய்ச் சிலவற்றை எழுதியிருக்கிறது* (1: 29ஒடு 6: 36. 12: 34). (1: 46). (1: 48).-*ஒன்றுக்கொன்று ஒவ்வாததுபோல் பிரத்தியக்ஷமாய்த் தோன்றுகிற சிலவற்றை விளக்காமல் விட்டிருக்கிறது* (5: 31ஒடு 8: 14). (13: 36 ஒடு 16: 5). (14: 19. ஒடு 16: 19).-*விளக்கம் வேண்டாததற்கு விளக்கம் சொல்லியிருக்கிறது* (13: 11).

IV. *நாலாம்சுவிசேஷத்தை எழுதினவன் அப்போஸ்தலனாயிருக்கிறான்.*

1. *இவன் எழுதுகிற சங்கதிகளின் சம்பந்தக் குறிப்பினாலே இது தெரியவரும். முதல்முதல் சீஷனை அழைத்தது* (1: 19—34). *சமாரியா வழியாய்ப் பிரயாணஞ்செய்தது* (4 *அதி*). 5000 *பேரைப் போஷித்தது* (6 *அதி*) *திரும்பத் திரும்ப எருசலேமுக்குப் போனது* (7 *அதி*. 9 *அதி*. 11 *அதி*). *கர்த்தருடைய பாடுகள், உயிர்த்தெழுதல் ஆகிய இவற்றை எழுதுகிற சம்பந்தத்திலும், அப்போஸ்தலன் என்ற குறிப்பு வருகிறது.*

2. *சீஷரோடு நெருங்கின பழக்கமுடையவனாயிருப்பதினால் தெரியவரும்.*



(1) *மலைவான சமயங்களில் சீஷருடைய எண்ணங்களைச் சொல்லுகிறான்* (2: 11, 17, 22. 4: 27. 6: 19, 60. 12: 16. 13: 22, 28. 21: 12 ஒடு லூக் 24: 8. மத் 26: 75).

(2) *சீஷர் தங்களுக்குள் பேசிக்கொண்ட வார்த்தைகளை எடுத்துரைக்கிறான்* (4: 33. 16: 17. 20: 25. 21: 3, 5). *கர்த்தருக்கடுத்ததாக* (4: 31. 9: 2. 11: 8, 12. 16: 29).

(3) *சீஷர் வழக்கமாய்ப் போய்வருகிற இடங்களை அறிந்திருக்கிறான்* (11: 54. 18: 2. 20: 19).

(4) *துவக்கத்தில் திட்டமாய் அறியாதிருந்து பிற்பாடு தெரியவந்த சங்கதிகளைச் சொல்லுகிறான்* (2: 21. 11: 13. 12: 6. 13: 28. 20: 9. 21: 4).

(5) *எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தருக்குச் சமீபத்திலேயே இவனிருந்தான் என்பது தெளிவாயிருக்கிறது.*

2. *கர்த்தருடைய உருக்க சிந்தையை அறிந்திருக்கிறான்* (11: 33. 13: 21).

*கர்த்தருடைய கிரியைகளுக்கு முகாந்தரஞ்சொல்லுகிறான்* (2: 24. 4: 1. 5: 6. 6: 15. 7: 1. 16: 19).

*கர்த்தருடைய நோக்கத்தை அறிந்தவனாய்ப் பேசுகிறான்* (6: 6.) (6: 61). (6: 64). (13: 1, 3). (13: 11). (18: 4). (19: 28).

V. *நாலாம்சுவிசேஷத்தை எழுதினவன் அப்போஸ்தலனாகிய யோவானாயிருக்கிறான்.*

*இதை எழுதினவன் இன்னானென்று முடிவுரையில் சொல்லியிருக்கிறது* (21: 24) *இவன் "ஏசுவுக்கு அன்பாயிருந்தவனாம்". இந்தக் குறிப்பு: கர்த்தருடைய பாடுகளின் சரித்திரத்தில் இரண்டு விசையும்* (13: 23. 19: 26); *பிற்பாடு இரண்டு விசையும்* (21: 7, 20); *பேதுருவின் சம்பந்தத்தில் ஒரு விசையும் வருகிறது* (20: 2). *பிரதானஆசாரியனுக்கு அறிமுகமானவன்* (18: 15). *இவன் பேதுருவுக்கு நெருங்கிய சிநேகிதன்* (13: 24. 20: 2. 21: 7ஒடு 18: 15. அப் 3 *அதி*) 21ம் *அதி–ன் காக்ஷியில் இவனுங்கூட இருந்திருக்கிறான்* (21: 2ஒடு 1: 35). *ஆகையால் இவன் செபெதேயுவின் குமாரரில் ஒருவனாக, அல்லது விபரஞ்சொல்லாத வேறே இரண்டு சீஷர்களிலொருவனாக இருக்கவேண்டும்.*

*முதல் மூன்று சுவிசேஷங்களில், பேதுருவும், செபெதேயுவின் குமாரரான யாக்கோபும் யோவானுமாக மூன்று பேர்கள் கர்த்தராலே விசேஷிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இந்தச் சுவிசேஷத்தை எழுதினவன் அவர்களிலொருவனாயிருக்கவேண்டும். பேதுரு அல்ல என்பது பிரத்தியக்ஷம். செபெதேயுவின் குமாரர் இருவரில், பரி. யாக்கோபு கொஞ்சக்*

காலத்திற்குள்ளாக இரத்தச்சாக்ஷியானதால் (அப் 12: 2), அவன் இந்தச் சுவிசேஷத்தை எழுதவில்லை என்பது தெளிவாம். பரி. யோவான்தான் எழுதியிருக்கவேண்டும்.

ஆட்சேபனை. இந்தச் சுவிசேஷத்தை பரி. யோவான் எழுதினனென்ருல், ஏசுவுக்கு அன்பான சீஷனென்று தன்னை மற்றவர்களுக்கு மேலாக உயர்த்திப் பேசமாட்டான். விசேஷமாய்த் தன் சிநேகிதனுன பேதுருவுக்கு மேலாகத் தன்னை மேன்மைப்படுத்திப் பேசமாட்டான். ஆகையால் பரி. யோவான் இதை எழுதவில்லையென்று ஆக்ஷேபிக்கிருர்கள்.

உத்தரவு. பரி. பேதுருவுக்கு மேலாக சுவிசேஷகன் தன்னை உயர்த்தினன் என்ற ஆக்ஷேபனைக்கு முதலில் உத்தரவு சொல்லுவோம். பரிசுத்த இராப்போஜனத்தில் கர்த்தருடைய மார்பிலே சாய்ந்திருந்ததையும் (13: 24), பிரதானஆசாரியனுடைய வீட்டிலும் சிலுவையின் பக்கத்திலும் நடந்த காக்ஷிகளையும் ஆதாரமாக வைத்து இந்த ஆக்ஷேபனை சொல்லப்படுகிறது. இதற்கு உத்தரவு தெளிவாயிருக்கிறது. எப்படியென்ருல் தான் கர்த்தருக்கு நெருங்கிய இனத்தானுயிருந்த முகாந்தரத்தினுலே பரி. யோவான் இந்த விபரங்களைச் சொல்லுகிருனே அல்லாது, தன் உத்தியோகத்தை மேன்மைப்படுத்துகிற வகையாய்ப் பேசவில்லை. பரி. யோவான், கர்த்தருடைய தாயாரின் சகோதரி மகனுயிருந்தான். அல்லாமலும் இவன் பேதுருவை மேன்மைப்படுத்தி பேசியிருக்கிருன் (21: 21. அப் 3: 1) (13: 23). (1: 42) (6: 68). (13: 6). (18: 10, 16). (20: 2). (20: 7). (21: 2). (21: 7, 11). (21: 15)

முதல் ஆக்ஷேபனைக்கு உத்தரவு. பரிசுத்த இராப்போஜனப் பந்தியில், கர்த்தர் தம்மைக் காட்டிக்கொடுப்பவனைப்பற்றி பரி. யோவானுக்கு அறிவித்தார். இவன் தனக்குக் கிடைத்த கிருபைகளை நன்றியறிதலோடும் பக்தியோடும் நினைத்து எழுதுகிற சம்பந்தத்தில், இந்த வார்த்தைகளைச் சொல்லுகிருன் (12: 24 கேள்வி 327 வாசி). இதில் மற்றவர்களுக்கு மேலாகத் தன்னை மேன்மைப்படுத்துகிற அர்த்தமில்லை. மேலும் கிறிஸ்துநாதர் எல்லாரையும் நேசித்ததாக இந்தச் சுவிசேஷகன் எழுதுகிருனே (13: 1, 34. 15: 9).

## இரண்டாவது, நேரான அக உதாரணம்.

இதை எழுதினவன் இன்னனென்றும், அவனுடைய நிலைமை இன்னதென்றும், இந்தச் சுவிசேஷத்திலுள்ள மூன்று வாக்கியங்கள் நேராய்ச் சாட்சியிடுகின்றன (1: 14. 19: 35. 21: 24).

I. (1: 14.) "அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினர் (கூடாரம்போட்டார்), அவருடைய மகிமையைக் கண்டோம்."



இந்த வாக்கியத்தில் "நாங்கள் கண்டோம்" என்ற வார்த்தைகளை எந்தக் கருத்தாக அர்த்தம்பண்ணவேண்டும் என்பது முக்கியமான கேள்வியாம். கிறிஸ்துநாதருடைய ஜீவகாலத்தில் அவரைக் கண்டதாக பரி. யோவான் சொல்லுகிருனே? அல்லது எக்காலத்திலுமுள்ள எல்லா விசுவாசிகளுக்கும் கிடைக்கிற ஆவிக்குரிய தரிசனத்தைப்பற்றிச் சொல்லுகிருனே?

கிறிஸ்துநாதருடைய ஜீவகாலத்தில் அவரைக் கண்ணல் கண்டு கைகளினுல் தொட்டதைக்குறித்துத்தான் பேசுகிருன் என்பது 1 யோ 1: 1ஞல் தெளிவாயிருக்கிறது. மகிமை என்பது சுவிசேஷத்தில் சொல்லிய அவருடைய அற்புதம் முதலிய நடபடிகளில் விளங்கிய மகிமைதான்.

"நமக்குள்ளே" என்ற வார்த்தை அப்போஸ்தலன்மாரை மட்டும் அல்ல, எல்லாக் கிறிஸ்தவர்களையும் பொதுவாய்க் குறிக்கும் (லூக் 1: 1) என்று ஆட்சேபிக்கப்படுகிறது.

உத்தரவு. "நமக்குள்ளே" என்ற வார்த்தை, அப்போஸ்தலன்மாரையுங் குறிக்குமென்பது, நம்முடைய நியாயத்துக்குப் போதும். மேலும், மனுஷாவதாரமான வார்த்தையையும், அவருடைய ஜீவகால நடபடியையும் கண்டதாகச் சொல்வது, இவ்வாக்கியத்தின் முக்கிய நோக்கமாம். சுவிசேஷத்தை எழுதுகிறவர், கிறிஸ்துநாதர் செய்த பணிவிடையைக் கண்ணுரக் கண்டான்.

II. (19: 35 வாசி). இரத்தமும் ஜலமும் புறப்பட்டதைக் கண்டவன், இந்தச் சுவிசேஷத்தை எழுதினவன்தானு? என்பது முக்கிய கேள்வி. வ 26, 27ஞல் இந்தச் சுவிசேஷத்தை எழுதினவன்தானென்று விளங்கும். மேலும் இந்த வாக்கியத்திலேயே இதற்கு அத்தாக்ஷியிருக்கிறது. "சாக்ஷிகொடுக்கிறன்" என்ற வார்த்தைகளும், முக்கியமாய், "அவனுடைய சாக்ஷி மெய்யாயிருக்கிறது"..."நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு" என்ற வார்த்தைகளும், இதற்கு அத்தாக்ஷியாம். இங்கே கண்டவனும் எழுதுகிறவனும் ஒருவன்தானென்று விளங்குகிறது.

III. (21: 24 வாசி). இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறவன் இந்தச் சுவிசேஷத்தை எழுதினவன்தானு? என்பது கேள்வி இந்த முடிவுரை (21 அதி) எழுதிச்சேர்க்கப்படுமுன், இந்தச் சுவிசேஷம் பிரசித்தமாக்கப்பட்டதற்கு யாதொரு அத்தாக்ஷியில்லை. ஆகையால் இவன் பரி. யோவானென்பதற்குச் சந்தேகமில்லை (கேள்வி 491 வாசி).

## மூன்ருவது, புற அத்தாக்ஷி.

ஐரேனியுஸ், அலக்சந்திரியா கிளமெந்து, தெர்த்துல்லியானுகிய இவர்கள், நாலு சுவிசேஷங்களையும் எழுதினவர்கள் இன்னின்னுரென்று சொல்

வியிருக்கிறார்கள். போலிக்கார்ப், பப்பியாஸ் முதலானவர்களும் அப்படியே சாக்ஷியிடுகிறார்கள்.

559. பரி. யோவானின் சரித்திரத்தைச் சொல்லு?

இவன் தகப்பன் செபெதேயு தாய் சலோமே. இவன் தமையன் யாக்கோபு (மாற் 15: 40 16: 1ஒடு மத் 27: 56) யோ 19: 25னால் தெரிய வருகிறபடி, இந்த சலோமே, கர்த்தருடைய தாயாரின் சகோதரியாயிருந்தாள். கர்த்தருக்கும் மற்ற அப்போஸ்தலன்மாருக்கும் யோவான் வயதில் இளையவனாயிருந்தான். இவன் கர்த்தருக்கு நெருங்கின இனத்தானாயிருந்ததினாலும், இளமைப்பிராயத்துக்கடுத்த பக்திவைராக்கியத்தினாலும், கர்த்தர் பக்கத்திலேயே இருந்து விசேஷித்த பேர் வாங்கியிருக்கிறான். செபெதேயு, பெத்சாய்தாவில் அல்லது அதின் பக்கத்தில் குடியிருந்து (யோ 1: 41), மீன்பிடிக்கிறவனாயிருந்தான். இவனுக்கு மீன்பிடிக்கிற கூலியாட்களிருந்தார்கள் (மாற் 1: 20). பின்னிட்டுத் தங்கள் ஆஸ்திகளால் கர்த்தருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த ஸ்திரீகளில், சலோமே ஒருத்தி (மாற் 15: 40ஒடு லூக் 8: 3). யோ 19: 27னால் பரி. யோவானுக்கு ஜீவனாதத்திற்கு வழியிருந்ததென்பது தெளிவாயிருக்கிறது.

யூதாஸ்காரியோத்து ஒருவன்தவிர, மற்ற அப்போஸ்தலன்மாரெல்லாரும் கலிலேயராயிருந்ததுபோல, பரி. யோவானும் கலிலேயனாயிருந்தான். கலிலேயருக்குரிய வைராக்கியம் இவனிடத்திலுமிருந்தது (மாற் 3: 17). அப்போஸ்தலன்மாரில் பரி. யாக்கோபு, முதல்இரத்தச்சாக்ஷியானதினாலும், பரி. யோவான், வெளிப்படுத்தின விசேஷத்தையெழுதினதினாலும் "இடிமுழக்கமக்கள்" என்ற பேரில் கர்த்தர் குறித்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று (வெளி 6: 10). மேலும் (1 யோ 4: 1. 2 யோ 10). பரி. யோவானுடைய பலத்தையும் பலவீனத்தையும்பற்றி மத் 20: 20ஒடு மாற் 10: 35 வாசி. சலோமேயும் அவள் குமாரரும் லௌகிக நோக்கமாய்ச் செய்த மன்றாட்டுக்கு: சலோமேயும், யோவானும் கிறிஸ்துநாதருடைய சிலுவையின் பக்கத்தில் காத்துநிற்கும் பாக்கியத்தை (யோ 19: 25), அவர்களுக்குக் கர்த்தர் கொடுத்ததினால், அம் மன்றாட்டின்படி உத்தரவு அருளப்பட்டது.

அவர் முகத்தைப் பார்த்து நில்,
அவர் புயத்தில் சாய்ந்து நில்;
அவர் பக்கத்தருகில் நில்,
அவர் பாதத்தண்டையில் நில்.

கர்த்தரால் விசேஷிக்கப்பட்ட மூன்று அப்போஸ்தலன்மாரில், இவன் ஒருவன் (லூக் 8: 51. 9: 28. மாற் 14: 33). கர்த்தர் விசாரிக்கப்பட்டபோதும், அவர் மரித்தபோதும் இவன்கூட இருந்தான் (யோ 18: 15. 19: 26). இவனிடத்தில் கர்த்தர் தமது தாயாரை ஒப்புவித்தார் (19: 27).



முதல் மூன்று சுவிசேஷகர் எழுதுகிற சங்கதிகளை அறிந்தவராய் பரி.யோவான் குறிப்பிடுகிற வாக்கியங்களாவன:

| பரி.யோவான். | பரி. யோவான். |
| --- | --- |
| 1: 19. யோவான்ஸ்நானன் செய்த பிரசங்கத்தினால் பொதுவாயுண்டான பலன் (மத் 3: 5). | 3: 24. யோவான் காவலில் வைக்கப்பட்ட காலம் (மத் 4: 12 ஒடு யோ 4: 43). |
| 32. கர்த்தருடைய ஞானஸ்நானத்துக்கடுத்த சம்பவங்கள் (மத் 3: 16). | 6: 3. மலையில் தங்கினது. |
| 40. சீமோன் பேதுரு நன்றாய் அறியப்பட்டவன். | 62. பரத்துக்கெழுந்தருளியது. |
| 1: 46. கிறிஸ்துநாதர் சிறுபிராயத்தில் வளர்ந்த இடம் நாசரேத் (மத் 2: 23). | 67. "பன்னிருவர்" (யோ 6: 13, 70. 20: 24). |
| 2: 12. பிற்காலத்தில் கர்த்தர் கப்பர்நகூமில்வசித்துவந்தது. | 11: 1, 2. மரியாள், மார்த்தாள். |
| ,, கிறிஸ்துவின் குடும்பம் (6: 42. 7: 3. 19: 25). | 18: 33. "யூதருடைய ராஜா" என்ற பட்டம். |
| 2: 19. கள்ளச்சாட்சி (மத் 26: 61). | 18: 40. பரபாஸ். |
| | 19: 25. ஊழியம்செய்த ஸ்திரீகள் (மத் 27: 55). |
| | 13: 16. லூக் 6: 40. |
| | 5: 8. மாற் 2: 9. |
| | 8: 52: மாற் 9: 1. |
| | 12: 5. மாற் 14: 5. |

இன்னும் மிகுதியான வாக்கியங்கள் உண்டு.

மேலும் முதல்மூன்று சுவிசேஷகரும் பரி.யோவானும் அடியிற்கண்ட சங்கதிகளையும் ஒத்துச்சொல்லுகிறார்கள்.

(1) கிறிஸ்துநாதர் மனுஷாவதாரமான காலத்தில், பெரியவர் ஒருவர் உலகத்தில் தோன்றுவாரென்று சகல ஜாதியாரும் எதிர்பார்த்திருந்தார்கள் (மத் 3: 5. யோ 1: 41, 19, 20. 3: 26. 4: 25).

(2) கிறிஸ்துவின் வருகையைப் பிரசித்தப்படுத்தும் அடையாளங்கள் (மத் 16: 1. யோ 6: 30). எலியா வந்து ஆயத்தப்படுத்துவது (மத் 11: 14. 17: 10. யோ 1: 21), கிறிஸ்து சடுதியாய் வருவது (மத் 24: 26. யோ 7: 27).

(3) அவர் வந்தபோது அவரை அநேகர் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள் (சிமியோன், லூக் 2: 25. அன்னாள் 36. பிலிப்பு, யோ 1: 45. நாத்தானுவேல் 49).

மேலும் கிறிஸ்துநாதர் தமது மரணத்தைத் துவக்கத்திலேயே உபமானங்களால் முன்னறிவித்ததையும் (மத் 9: 15. யோ 3: 14); ஓய்வுநாளைப்

பற்றிய பாரம்பரையை அதிகாரத்தோடு கண்டித்ததினிமித்தமும் (மத் 12: 13. யோ 5: 16), தமக்கு திவ்விய இலக்ஷணங்களிருக்கிறதென்று சொன்னதினிமித்தமும் (மாற் 2: 6. யோ 5: 18) விரோதமுண்டானதையும் ஒத்துச்சொல்லுகிறார்கள்.

**566** கர்த்தருடைய பர்சனைப்பற்றி பரி யோவான் சுவிசேஷத்துக்கும், முதல்மூன்று சுவிசேஷங்களுக்குமிருக்கிற சம்பந்தமென்ன?

பரி யோவானைப்போலவே முதல்மூன்று சுவிசேஷகரும், கிறிஸ்துநாதருடைய பர்சனை முக்கியபொருளாக மனதில் வைத்து எழுதுகிறார்கள் (மத் 20: 28). முதல்மூன்று சுவிசேஷங்களில் கிறிஸ்துநாதர் தம்மைப் பற்றிச் சொல்லியவைகளை வாசித்தால், இது விளங்கும். திருஷ்டாந்தமாக:

மத் 7: 22. உமது நாமத்தினாலே.
9: 2 உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன.
10: 39. என்நிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன்.
11: 27 சகலமும் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.
13: 41. மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்.
18: 20. இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருப்பார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருப்பேன் (செக்கினாவைப்போல்).
20: 28. அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனை.

இன்னும், மத் 21: 37. 22: 45. 25: 31. 26: 28. 28: 20. லூக் 21: 15. லூக் 24: 49 வாசி.

**567** வெளிப்படுத்தின விசேஷமானது, முதல்மூன்று சுவிசேஷங்களையும், யோவான் சுவிசேஷத்தையும், உபதேச விஷயத்தில் இணைக்கிறதாயிருக்கிறது எப்படி?

பரி.பவுலின் காலத்திற்குப் பிற்பாடு வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டது. பழயஏற்பாட்டு உபமானங்களை எடுத்துச்சொல்லுவதில், வெளிப்படுத்தின விசேஷமானது எபிரோயர் நிருபத்திற்கு ஒத்துவருகிறது. வெளிப்படுத்தின விசேஷம் எருசலேமின் அழிவுக்குமுன்னும், நாலாம் சுவிசேஷம் அதற்குப் பின்னுமாக எழுதப்பட்டது. வெளிப்படுத்தின விசேஷத்தில் கிறிஸ்துநாதர் வரப்போகிறாரென்றும், அந்த வருகை இன்னபடியிருக்குமென்றும் உபமானங்களால் காட்டியிருக்கிறது. சுவிசேஷத்திலோ: அந்த வருகையை விஸ்தரித்துக் காட்டியிருக்கிறது. 2 புஸ்தகங்களுக்குமிருக்கிற அடியிற்கண்ட ஒற்றுமைகளையுங் கவனிக்கவேண்டும்.



மனுஷாவதாரஞ்செய்த கிறிஸ்துவின் மரணத்தினால் வந்த ஜெயம். கிறிஸ்துநாதர் தாவீதின் குமாரன் (வெளி 5: 5. 22: 16) குத்தப்பட்டார் (1: 7), சிலுவையிலறையப்பட்டார் (11: 8), உயிரோடெழுந்தார் (1: 5 ஒடு கொலோ 1: 18), மீட்கப்பட்டவர்களைக் கிரயத்திற்கு வாங்கினார் (5: 9. 14: 3); அவருடைய இரத்தம் அவர்களுக்கு விடுதலையையும் (1: 5), சுத்திகரிப்பையும் (8: 14), ஜெயத்தையும் (12: 11), கொடுக்கிறது.

கிறிஸ்து தமது கிரியையை முடித்தபின் பரலோகம்போனார். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி மகிமைக்கு உயர்த்தப்பட்டார் (5. 9, 12) தேவனுடைய ஏழு ஆவிகளும் கிறிஸ்துநாதருடைய ஆவிகள் (5: 6 3: 1ஒடு 1: 4. யோ 15: 26). பரலோக பரிசுத்தஸ்தலத்தில் அவர் திவ்ய பிரதான ஆசாரியராகவும் (1: 12—17ஒடு 2: 9. 10: 5), மனுஷகுமாரனாகவும் (1: 13. 14: 14), ஜீவனுள்ளவராகவும் (1: 17ஒடு யோ 5: 26) விளங்குகிறார். அவர் திவ்ய ஞானி (2: 2, 9, 13, 19, 23ஒடு எபே 11: 20); திவ்ய வல்லமையுடையவர் (11: 15 12: 10. 17: 14. 19: 16); திவ்ய வணக்கத்தை ஏற்றுக்கொள்ளுகிறார் (5: 8 20: 6); தேவனோடு ஐக்கியமானவர் (3: 2. 5: 13. 6: 16). 7: 10 14: 4. 21: 22. 22: 1, 3ஒடு யோ 5: 20, 23); திவ்ய லக்ஷணங்கள் அவருக்குச் சொல்லப்படுகிறது (1: 7. 3: 7. 19: 11ஒடு 6: 10 3: 14ஒடு எசா 65: 16); தேவனும் கிறிஸ்துவும் ஒன்று (11: 15. 20: 6. 22: 3). இப்படியாக நாலாம்சுவிசேஷத்திற்கும் வெளிப்படுத்தின விசேஷத்துக்கும் ஒற்றுமையைக் காண்கிறோம். இந்தச் சத்தியங்கள் முதல்மூன்று சுவிசேஷங்களிலும் போதிக்கப்பட்டிருப்பதால், வெளிப்படுத்தின விசேஷம் முதல்மூன்று சுவிசேஷங்களையும் நாலாஞ் சுவிசேஷத்தையும் இணைக்கிறதாயிருக்கிறது.

நாலாவது சுவிசேஷம் எழுதப்பட்ட காலம் திட்டமாய்த் தெரியாது. ஆசியாநாட்டில் வழங்கின ஒரு பாரம்பரையை ஐரீனியஸ் எடுத்துச்சொல்லுகிறார். அதாவது பரி யோவான், "திராயான் ராயன் காலம்வரையும் உயிரோடிருந்தான்" என்பதே. இந்த ராயன் கி. பி. 98முதல் 117வரை இருந்தவன். ஆகையால் பரி.யோவானின் அந்தியகாலத்தில் அல்லது 1ம் நூற்றாண்டின் கடைசியில் தன் சுவிசேஷத்தை எழுதினானென்று நிதானிக்கலாம்.

**568**. யோவான் 1: 13ஐ விஸ்தரி?

திவ்விய அருளால் விசுவாசிக்கப் பாத்தியமான (1: 12. 5: 27. 10: 18. 17: 2 19: 10, 11. வெளி 2: 26) புதிய ஜீவன், முழுவதுமாய்த் தேவனிடத்திலிருந்தே ஆரம்பிக்கிறதென்று சுவிசேஷகன் நேராய்ச் சொல்லுமுன், அது எதினால் ஆரம்பிக்கிறதில்லையென்று, மூன்று எதிர்மறைகளை முந்திச் சொல்லுகிறார். அந்தப் புதியஜீவனின் ஆரம்பம்: இரத்தங்

களாகிய சடப்பொருட்களின் சேர்க்கையாலமைந்த (Combination of material elements) நம்முடைய இயல்பான தேகத்திலிருந்துமல்ல; பிராணிகள் ஜெனிப்பதற்குக் காரணமான மாம்ச இச்சையிலிருந்துமல்ல (Nor in the natural instinct, in obedience to which beings are reproduced); பகுத்தறிவுள்ள மனுஷனுடைய சித்தத்திலிருந்துமல்ல (Nor in the will of the rational man); ஆனால் தேவனிடத்திருந்தே ஆரம்பிக்கிறது. மேலும் இந்த மூன்று வாக்கியஉறுப்புகளுக்கும் ஆவிக்குரிய அர்த்தமும் உண்டு. அதாவது : புதுப்பிறப்பானது, வம்சவிசேஷத்தினாலாவது, மாம்ச இச்சையினாலாவது, மனுஷவல்லமையினாலாவது உண்டாகிறதில்லை.

“இரத்தம். “மூலபாஷையைத் திட்டமாய் மொழிபெயர்த்தால், “இரத்தங்கள்” (Bloods) என்றிருக்கவேண்டும். இரத்தங்களாகிய சடப்பொருட்களின் சேர்க்கையினால் தேகமானது பல அளவாய் உருவாகிறது அந்தச் சடப்பொருட்களை வற்புறுத்திக் காட்டும்படி, “இரத்தங்கள்” என்று பன்மையில் வழங்கியிருக்கிறது. ஆகையால் “இரத்தத்தினாலாவது” என்றால், இரத்தத்தினாலுண்டான நம்முடைய சடதேகத்தினாலாவது என்றர்த்தம்.

“மாம்ச சித்தம்”...“புருஷனுடைய சித்தம்” ஆகிய இந்த இரண்டுக்கும், இரத்தமென்பதற்கும் வித்தியாசமென்னவென்றால், இரத்தமென்பது, ஜீவனின் ஆரம்பத்தையும் ; மற்ற இரண்டும், ஷை ஆரம்பமானது ஒரு நோக்கத்தையிட்டுச் செல்லுகிறதென்பதையும் குறிக்கின்றன (These two clauses differ from the former by referring the beginning of life to purpose). மாம்சசித்தம் புருஷனுடைய சித்தம் ஆகிய இந்த இரண்டும், ஷை நோக்கத்தில் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றன. எப்படியென்றால், “மாம்ச சித்தம்” என்பது, மாம்சசுபாவத்திலிருந்து வருகிற நோக்கத்தையும் (Purpose which comes from the animal nature); “புருஷனுடைய சித்தம்” என்பது, பகுத்தறிவுள்ள மேலான மனுஷசுபாவத்திலிருந்து வருகிற நோக்கத்தையும் (That which comes from the higher human nature) குறிக்கும்.

“தேவனாலே பிறந்தார்கள்” என்பதைத் திட்டமாய் மொழிபெயர்த்தால், 1 யோ 2: 29. 3: 9. 4: 7. 5: 14, 18லிருக்கிறபடி “தேவனாலே ஜெனிப்பிக்கப்பட்டார்கள்” என்றிருக்கவேண்டும் இங்கே இந்த வார்த்தை, புதியஜீவனின் முதல்ஆரம்பத்தைக் குறிக்கிறது. ஒருவன் ஜீவபிராணியாக உலகத்தில் உதிப்பதைக் குறியாது. “தேவனாலே ஜெனிப்பிக்கப்பட்டார்கள்” என்ற வார்த்தைகள்: “ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ” என்ற வார்த்தைகளுக்குச் சம்பந்தமான ஒத்தவாக்கியமாயிருப்பதால், ஷை கருத்து வெளியாகிறது. தேவன் தம்முடைய சாயலை ஒருவனுக்கு அளிப்பதும், அவன் அதை ஏற்றுக்கொள்வதுமாக இரண்டும் ஒருமைப்படுவதே புதுப்பிறப்பாம்.



பரி. யோவான்: புதியஜீவன் அருளப்படுவதைப்பற்றி முக்கியமாய்ப் பேசுகிறார். பரி.பவுலோ, புதியமேன்மையும் புதியசம்பந்தமுமாகிய வரத்தைப்பற்றிப் பேசுகிறார் (ரோ 8: 15. கலா 4: 5. எபே 1: 5) கிறிஸ்தவனுடைய புதியதன்மையை பரி.பவுல் எடுத்துப்பேசும்போது, அவனைப் “புதுச்சிருஷ்டி” என்கிறார் (கலா 6: 15. 2 கொரி 5: 17). பரி.யாக்கோபு (1: 18), பரி.பேதுரு (1 பேது 1: 3, 23) ஆகிய இவர்கள் பேசுகிற வக்கணை, பரி.யோவான் எழுதியதற்கு ஒத்துவருகிறது.

**569.** யோவான் 11: 25ன் அர்த்தமென்ன ?

உயிர்த்தெழுதலானது ஒரு உபதேசமல்ல, ஒரு சம்பவமென்றும் ; அது வருங்கால சம்பவமல்ல, தற்சமயத்தில் இருக்கிற நிகழ்காலசம்பவமென்றும் ; ஜீவன் படிப்படியாய் பக்குவமடைகிற பற்பல நிலைமைகளில் உயிர்த்தெழுதல் ஒன்றென்றும் கிறிஸ்துநாதர் போதிக்கிறார். “நானே உயிர்த்தெழுதலாயிருக்கிறேன்” என்கிறார். இனிமேல் உயிர்த்தெழுதலாயிருப்பேனென்று சொல்லாமல், லாசரு மரித்துப்போயிருந்த காலத்திலும், தமது சிலுவையின் மரணத்தை தாம் எதிர்நோக்கியிருந்த காலத்திலும், “நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்” என்று நிகழ்காலமாய்ச் சொல்லுகிறார். உயிர்த்தெழுதலுக்கு வாக்குக்கொடுக்கிறேன், அல்லது அதைச் சம்பாதிக்கிறேன், அல்லது அதைக் கொண்டுவருகிறேன் என்று சொல்லாமல், உயிர்த்தெழுதலாயிருக்கிறேன் (“I am”) என்கிறார் இதின் கருத்தென்னவென்றால், மனுஷத்தன்மையைச் சேர்த்துக்கொண்ட கிறிஸ்துநாதர் தெய்வீகபர்சனானதால், அவர் எப்பொழுதும் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார் என்பதே (8ம் பக்கம் வாசி). மேலும் மனுஷன் நிலையான தனியேகவஸ்து என்பதையும், அவனுடைய ஜீவாத்துமா மரணத்தோடு அழிந்துபோகாமல், அதற்குப் பின்னும் நிலைக்கக்கூடியதென்பதையும், அவர் மனுஷத்தன்மையைத் தரித்துக்கொண்டதினால் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் அவரோடு ஐக்கியமாயிருக்கிறவர்களுக்கு மாத்திரம்தான் இந்த நித்தியஜீவநிலைமை கிடைக்கும். இப்படியாக இரண்டு காரியங்கள் பிரத்தியக்ஷமாகின்றன. அதாவது (1) உயிர்த்தெழுதலில் நமக்கிருக்கும் ஜீவன், தற்சமயத்திலிருக்கிற ஜீவன்தான். (2) இந்தஜீவன், கிறிஸ்துநாதராகிய தெய்வீக பர்சனுக்குள்ளிருக்கிற ஜீவனும்.--கிறிஸ்துநாதர் எப்படி ஜீவனாயிருக்கிறாரென்றால், அவர் ஒவ்வொரு விசுவாசிக்கும் தம்மோடே ஐக்கியத்தையும், தம்மில் நிலைத்தலையும் அருளுவதினாலேதான். பரி.பவுல் இந்தக் கருத்தாகத்தான் பேசுகிறார் (ரோ 6: 11. கொலோ 1: 17).

லாசருவின் மரணத்திலிருந்து இந்தப் போதனை ஆரம்பித்ததால், உயிர்த்தெழுதல் என்ற வார்த்தை முந்தி வருகிறது.

"என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றால், உயிரோடிருக்கையிலும், மரணமாகிய மாறுதலிலும், மரணத்திற்குப்பிற்பாடும் அவன் இடைவிடாமல் பிழைப்பான் என்றர்த்தம். அவனுடைய ஜீவனை, மரணத்தில் இழந்துவிட்டு, அதற்குப்பின் ஒரு காலத்தில் அந்த ஜீவனைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவானென்றர்த்தமல்ல "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவனாய்" எப்பொழுது அவரை ஏற்றுக்கொள்ளுகிறானோ, அப்பொழுதுமுதல் அந்த ஜீவன் இம்மையிலேயே ஆரம்பிக்கிறதென்றும் (யோ 1: 12. 5: 24), அப்படி ஆரம்பித்த ஜீவன், அவனுடைய மரணத்தில் அற்றுப்போகாமல் என்றும் நிலைத்திருக்குமென்றும் அர்த்தமாம்

**570**. யோவா 16: 9—11ஐ விஸ்தரி.

9. கிறிஸ்துவை விசுவாசியாதிருப்பது, சகல பாவங்களுக்கும் மூடாம்.

10. கிறிஸ்துநாதர் சம்பாதித்த நீதி, பிதாவினாலே பூரணமாய் அங்கிகரிக்கப்பட்டதென்பதற்குக், கர்த்தர் பரத்துக்கேறினது அத்தாக்ஷியாம்.

"நீதி" என்ற வார்த்தை, யோவான் சுவிசேஷத்தில் இந்த ஒரு இடத்தில்தான் வருகிறது.

11 கிறிஸ்துநாதர் தமது சிலுவைப்பாடுகளினாலும் மரணத்தினாலும், இந்த உலகத்தின் அதிபதியை (12: 31. 14: 30) ஜெயித்து நியாயந்தீர்த்தார் (448 கேள்வி பார்).

**571** பாவிகளுக்காகப் பிராயச்சித்தஞ்செய்தவர் தேவனாயிருக்கவேண்டிய அவசியமென்ன?

1. தேவநீதிக்குத் திர்ப்திசெய்யவும்.
2. அந்தப் பிராயச்சித்தம் எல்லோருக்கும் பலிக்கவும்.
3. உலகத்தார் அதில் நம்பிக்கைவைக்கவுமே.

**572.** அப் 7: 2. ஆபிரகாமுக்கு மகிமையின் தேவன் எப்படித் தரிசனமானார்?

அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமாகிய (கொலோ 1: 15) கிறிஸ்துநாதர்மூலமாய்த் தரிசனமானார் பழயஏற்பாட்டில் சொல்லிய திவ்விய தரிசனங்களெல்லாம் இப்படித்தான் நடந்தன. "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை" (யோ 1: 18).



இந்த விசேஷித்த தரிசனத்தைப்பற்றி ஆதி 11: 31ல் சொல்லவில்லை. ஆனால் முந்தியகாலத்தில் ஆபிரகாமுக்குக் கொடுத்த கட்டளை, ஆதி 15: 7ல் அடங்கியிருக்கிறது. இதைப்பற்றி யோசுவா 24: 2, 3. நெகேமியா 9: 7ல் காணலாம். ஆபிரகாம் இரண்டுவிசை அழைக்கப்பட்டதாக பைலோ, யோசேப்புஸ் இந்த இரண்டுபேரும் ஒத்துச்சொல்லுகிறார்கள். (1) ஊர் என்ற கிராமத்திலிருக்கும்பொழுது, தன் தேசத்தையும் இனத்தையும்விட்டுப் புறப்படும்படி அழைக்கப்பட்டான். (2) ஆரானிலிருக்கும்பொழுது அழைக்கப்பட்டான். ஊர் என்ற கிராமத்தைவிட்டு ஆரானுக்குப் புறப்படும்பொழுது, தேராகும் கூடவந்தான். ஆனால் ஆபிரகாம் 2ம் விசை அழைக்கப்படும்முன்னதாக தேராகு காரானில் மரித்துப்போனான்.

பழயஏற்பாட்டை எழுதினவர்கள் விட்டுவிட்ட பல சங்கதிகளை புதியஏற்பாட்டை எழுதினவர்கள் கூட்டி எழுதியிருப்பதுண்டு. அவற்றில் இது ஒன்றாம். இன்னும் அப்படிப்பட்ட திருஷ்டாந்தங்களாவன:

ஏனோக் சொன்ன தீர்க்கதரிசனம் (யூதா 14)

எகிப்தின் மந்திரவாதிகளுடைய பேர்கள் (2 தீமோ 3: 8).

ஈசாக்கை பலியிட்டதில் ஆபிரகாமுக்குள்ளிருந்த நம்பிக்கை (எபி 11: 19).

மோசே பயந்து நடுங்குகிறேனென்று ஒத்துக்கொண்டது (எபி 12: 21).

பார்வோனின் அரண்மனையை மோசே விட்டுவிடும்படி அவனைத் தைரியப்படுத்தி ஏவின நோக்கம் (எபி 11: 24: 25).

அவன் எகிப்தைவிட்ட நோக்கம் (எபி 11: 27).

எலியாவின் ஜெபம் (யாக் 5: 17).

**573** அப் 7: 2ல் மெசொப்பொத்தாமியா என்பது எதைக்குறிக்கும்?

ஐபிராத்துநதிக்கு அப்பாலுள்ள தேசமுழுவதையும் குறிக்கும். ஐபிராத்துநதி, இஸ்ரவேல்தேசத்துக்கு எல்லையாக எண்ணப்பட்டது. மெசொப்பொத்தாமியாவில், கல்தேயா அடங்கியிருந்தது. கல்தேயாவிலுள்ள ஊர் என்ற கிராமம் (ஆதி 11: 31), கல்தேயாவில் வடகிழக்காயிருந்தது. ஆரானுக்கு (ஆதி 12: 5), கிரேக் பேர், காரான்.

காரானை ரோமர், கரேய் (Carrhai) என்று அழைத்தார்கள். கிராசுஸ் (Crassus) என்பவன் இவ்விடத்தில் முறியடிக்கப்பட்டான். விருத்தசேதனம், பலி, தேவாலயம் ஆகிய இவைகள் ஏற்படுத்தப்படுமுன், தேவாராதனைசெய்யப்பட்டுத் தேவனால் அங்கிகரிக்கப்பட்டதென்றும்; எரியுண்ட

முட்செடிக்குச் சமீபமாயிருந்த நிலமும், அங்குமிங்கும் சென்ற ஆசரிப்புக்கூடாரமும் பரிசுத்தஸ்தலங்களாயிருந்தன என்றும் காட்டுவது ஸ்தேவானுடைய் நோக்கமாம்.

**574.** 7: 4ன் கருகலைத் தெளிவாக்கு ?

தேராகு 205 வயதாய் ஆரானில் மரித்தான் (ஆதி 11: 32). ஆனால் ஆதி 11: 26னால் ஆபிரகாம் பிறந்தபொழுது, தேராகுக்கு 70 வயதுக்கு அதிகமில்லை என்று சொல்லியிருக்கிறது. ஆபிரகாம் ஆரானைவிட்டுப் புறப்படும்பொழுது 75 வயதாயிருந்ததால், அவன் புறப்பட்டதற்குப் பின்னும் தேராகு 60 வருஷம் உயிரோடிருந்தானா (70+75+60=205) என்ற கேள்வி வரும். இதற்கு உத்தரவு: ஆபிரகாம் தேராகின் மூத்தமகன் என்று ஓரிடத்திலும் சொல்லியிருக்கவில்லை. அவன் கடைசிமகனாயிருந்தானென்று ரபிகள் சொல்லுகிறார்கள் ஆபிரகாம் விசுவாசிகளுக்குத் தகப்பனும், தேவனுடைய சிநேகிதனுமாயிருந்தபடியினாலே, அவன் பேரை ஆரானுக்கு முந்திச் சொல்லியிருக்கிறது (ஆதி 11: 26). அப்படியே நோவாவுக்குக் கடைசிமகனான சேமின் பேர் முந்தி வருகிறது (ஆதி 9: 18. 10: 21). ஈசாக்கின் பேர் (1 நாளா 1: 28). யூதாவின் பேர் (1 நாளா 4: 1. 5: 1, 2) மோசேயின் பேரும் அவன் மூத்தசகோதரனான ஆரோனுக்கு முந்தி வருகிறது. ஆகையால் ஆதி 11: 26ல் மூத்தமகனான ஆரான் பிறந்தபொழுதான் தேராகுக்கு வயது 70 என்றர்த்தம்.

---

## THE SECOND COMING OF CHRIST.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

### யூதர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

(தொடர்ச்சி.)

#### வாக்குத்தத்தத்தின் புத்திரர்.

தன் சொந்த குமாரன் எதாவது ஆபத்துக்குள்ளகப்பட்டால் தகப்பனானவன் தன் சொந்த இரத்தமானதால் ஆபத்தினின்று விடுவிக்கும்படியாகவேண்டிய பிரயத்தனங்கள்செய்வது, இயல்பானதுபோல் தேவனும் தமது சொந்த ஆவியையுடைய மனிதன் கட்டளையை மீறினதின் நிமித்தம் தண்டனைக்கு எதுவானவனாய் ஒரு இரக்ஷகரை வாக்குத்தத்தம்பண்ணினார். அவர் ஸ்திரீயின் வித்தானவர் என்றும் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனத்திற்குள் தோன்றவேண்டுமென்றும் தீர்மானித்து தேவன் தமக்கென்று ஒரு சந்ததியைத் தெரிந்தெடுத்தார். முதலாவது ஸ்திரீயின்



வித்திலிருந்து சேத்தையும் ஏனோக்கையும் நோவாவையும் தெரிந்தெடுத்
தார். இவன் காலத்தில் ஜனங்கள் பெருகி தேவனுக்குக் கோபம் மூட்
டும்படியாக நடந்ததினிமித்தம் அவர்களை ஜலப்பிரளயத்தினால் அழித்து,
நோவாவையும் அவன் குமாரர் மூன்றுபேரையும் இரக்ஷித்து அவர்களில்
சேமையும், ஏபேரையும் தேராகையும் தெரிந்தெடுத்தார். தேராகுக்கு,
ஆரான், நாகோர், ஆபிராம் என்ற மூவரில் ஆபிராமைத் தெரிந்தெடுத்து
அவனுக்கு இரண்டு குமாரர் இருக்க ஈசாக்கைத் தெரிந்தெடுத்து, அவனு
டைய இரண்டு குமாரரில் யாக்கோபைத் தெரிந்தெடுத்து, இந்த யாக்கோ
பின் பிள்ளைகள் எல்லாரையும் இவர்கள் வம்சத்தாரையும் தம்முடைய
ஜனங்களாகவும் ஜாதியாராகவும் தெரிந்துகொண்டார். இவர்களைத் தகப்
பனடைவாய் நடத்திவந்தார். அவர்கள் குடியிருக்கும்படி ஒரு தேசத்தை
யும் வாக்குத்தத்தம்பண்ணினார். அந்தப்படிக்குத் தம்முடைய ஜனங்களா
கிய இஸ்ரவேலரை வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தில் கொண்டுபோய்ச்
சேர்த்தார். அவர்களுக்குத் தகப்பனடைவாய் ஒவ்வொரு சிறிய காரியத்
திற்கும் கட்டளைகொடுத்து நடத்திவந்தார் என்பதை திருவசனத்தின்
மூலமாய் அறிந்துகொள்ளலாம்.
தேவன் ஆபிராமை அவன் இனத்தையும், ஜனத்தையும், ஊரையும்
விட்டுப் புறப்படும்படி அழைத்து தாம் காண்பிக்கிற தேசத்துக்குப் போ
கும்படி செய்து உன்னைப் பெரிய ஜாதியாக்குவேனென்றும் உன்னை
ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதித்து, சபிக்கிறவர்களைச் சபிப்பேனென்றும்
உன்னில் பூமியின் வம்சம் எல்லாம் ஆசீர்வதிக்கப்படுமென்றும் வாக்குத்
தத்தம்பண்ணி அவன் புறப்பட்டு கானான்தேசத்துக்கு வந்தவுடனே இந்
தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுப்பேனென்றும் வாக்குத்தத்தம்
பண்ணினார். ஆதி. 12: 1, 3, 7. தேவன் ஆபிராமைப் பார்த்து நீ இருக்கிற
இடத்திலிருந்து வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் நோக்கிப் பார். நீ
பார்க்கிற இந்தப் பூமிமுழுவதையும் உனக்கும் உன் சந்ததிக்கும் என்
றென்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன். உன் சந்ததியை பூமியின்
தூளைப்போல் பெருகப்பண்ணுவேன். பூமியின் தூளை எண்ணக்கூடுமா
னால் உன் சந்ததி எண்ணப்படும் என்றும் நீ நடக்கிற இந்தத் தேசத்தை
உனக்குத் தருவேன் என்றும் வாக்குத்தத்தம்பண்ணினார். ஆதி. 13: 14–17.
ஆபிரகாம் பிள்ளையில்லாதிருந்த காலத்தில் அவனை நோக்கி தேவன்
உன் சந்ததியார் அந்நிய தேசத்தில் நானூறு வருஷம் பரதேசிகளாய்த்
தங்கி அவர்களைச் சேவிப்பார்கள். நான் அவர்கள் சேவிக்கும் ஜாதியாரை
நியாயந்தீர்ப்பேன். பின்பு மிகுந்த பொருள்களுடன் நாலாந்தலைமுறை
யார் புறப்பட்டு இந்தத் தேசத்துக்கு வருவார்கள் என்றும் வாக்குத்தத்தம்
பண்ணினார். ஆதி. 15: 13—16.
தேவன் ஆபிராமை நோக்கி நீ பரதேசியாய்த் தங்கும் கானான்தேசம்
முழுவதையும் உனக்கும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுப்
பேன் என்று வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார். ஆதி. 17: 3.
தேவன் ஆபிராமைப் பார்த்து உனக்கும் உன் சந்ததிக்கும் கானான்
தேசத்தை நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேனென்று வாக்குத்தத்தம்பண்
ணினபடியினாலே, நித்தியம் என்கிற வார்த்தை சதாகாலமாய் என்று
குறிக்கும். ஆனால் ஆபிராமும் அவன் சந்ததியும் கொஞ்சக்காலமாத்திரம்
கானான்தேசத்தில் வாசம்பண்ணினார்கள். இப்போதும் அந்தத் தேசத்தில்
ஆபிரகாம் வம்சத்தார் எல்லாருமில்லை. அநேகரும் ஆபிரகாமும் இறந்தும்
போனார்கள். மற்றத் தேசங்களில் சிதறியுமிருக்கிறார்கள். ஆபிரகாமும்

அவன் சந்ததியாரும் கானான்தேசத்தில் நித்தியகாலமாய் வாசம்பண்ணவில்லை. ஆகையால் அவர்கள் நித்திய சுதந்தரமாக வாசம்பண்ணவேண்டிய காலம் இன்னமும் இருக்கிறது. அந்தக்காலம் கிறிஸ்துவின் ராஜரீகமான காலமுதல் என்றென்றைக்கும் சஞ்சரிக்கிறதைக் குறிக்கிறது.

இந்தத் தேசத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் கொடுப்பேன் என்றும் உன் தகப்பன் ஆபிரகாமுக்குப் பண்ணின வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவேன் என்றும் ஈசாக்குக்கும் தேவன் வாக்குத்தத்தம்பண்ணினார் ஆதி. 26: 1—5. தேவன் ஈசாக்கைக்கொண்டு யாக்கோபை ஆசீர்வதித்தபோது நீ பரதேசியாய்த் தங்கும் தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ளும்படி தேவன் ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருள்வாராக என்று சொன்னதுமல்லாமல் தேவன் தாமே யாக்கோபு ஒண்டியாய்த் தன் சகோதரனுக்குப் பயந்து பதான் ஆராமுக்கு ஓடிப்போகிறபோது, நீ படுத்திருக்கிற இந்தப் பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேனென்றும் உன் சந்ததியை பூமியின் தூளைப்போல் பெருகப்பண்ணுவேன் என்றும் வாக்குத்தத்தம்பண்ணினார். ஆதி. 28: 1—15. யாக்கோபின் சந்ததியின் திரளைப்பற்றி தேவன் சொன்னபடிக்கு இவன் சந்ததியாராகிய இஸ்ரவேலர் சீக்கிரத்தில் பெருகிப்போனார்கள். அப்படியே, யாக்கோபின் வம்சத்தார் கானான்தேசத்திலிருந்து எகிப்திற்கு 75 பேர் மாத்திரம் வந்தார்கள். உத்தேசம் 215 வருஷங்களுக்குள்ளாக ஆறு லட்சம் புருஷர் அதாவது இருபது வயதுக்குமேற்பட்டவர்கள் முதல் கணக்கிடப்பட்டிருக்கிறது. பெண்பிள்ளைகளையும் குழந்தைகளையும் சேர்த்தால் எத்தனையோ லட்சமிருக்கும் என்று பாருங்கள். இவ்வளவு காலத்திற்குள்ளாக இத்தனைத் திரளான ஜனங்கள் பெருகும்படி தேவன் செய்திருக்கிறார். மேலும் தேவன் யாக்கோபுடைய பேரை இஸ்ரவேலென்று மாற்றி, நீ பலுகிப்பெருகுவாய், பற்பல ஜாதிகளின் கூட்டம் உன்னிலிருந்துண்டாகும். இராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள் என்றார். ஆதி. 35: 10—12. அந்த வாக்குத்தத்தத்தின்படி இராஜாக்கள் அவனுடைய வம்சத்திலிருந்து தோன்றினதைப் பார்க்கிறோம். தேவன் இஸ்ரவேலைப் பார்த்து சிவந்த சமுத்திரம் துடங்கி பெலிஸ்தியரின் சமுத்திரம் அதாவது மெதித்திராணியா கடல்வரைக்கும் வனாந்தரம் துவக்கி நதி அதாவது ஐபிராத்து நதிவரைக்கும் உன் எல்லையாயிருக்கும்படி செய்வேன் என்றார். யாத்தி. 23: 31. எண். 34 அதி. உபா. 11: 24. 34: 1—4. யோசு. 1: 2—6. 1 இராஜா 4: 21.

தேவன் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் பண்ணின வாக்குத்தத்தின்படிக்கு கானான்தேசத்தில் எல்லாரும் பிரவேசியாமல் வனாந்தரத்தில் மரித்துப்போனார்கள். இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் கோபம்மூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதிருங்கள். வனாந்தரத்தில் கோபம்மூட்டினவர்கள் இறந்துபோனார்களே. எபி. 3: 15—19. அப்படிப்பட்டவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்றும் சொல்லியிருக்கிறபடியால், இன்று என்று சொல்லும்போது பின்னும் ஒருநாளைக் குறித்திருக்கிறார். அந்தநாளிலேயே சகல இஸ்ரவேலரும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தில் நித்தியகாலமாக இளைப்பாறுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. சங். 95: 7—11. எபி. 3: 14—18. 4: 5—10.



## சமாசாரத்திரட்டு.

சில வருஷங்களுக்குமுன்னே பேர்போன லண்டன் வைத்தியர் ஒருவர் “ஹைட் பார்க் என்ற இடத்துக்குப்போய் ஒரு பெஞ்சுப்பலகையிலுட்கார்ந்தார். அவர் ஓரத்தில் 80 பிராயங்கொண்ட ஒரு அஷ்டதரித்திரனுமுட்கார்ந்தான். பண்டிதர் அவனோடு சம்பாஷிக்கத் தொடங்கி முந்தி உம்முடைய தொழிலென்னவென்று கேட்டார். அதற்கவன் என் வேலை தச்சவேலை என்றான். வைத்தியர் ஆகா! மிகவும் நல்ல தொழில்தான்; நல்லது நீர் இந்த வயசில் இந்த அஷ்டதரித்திரத்துக்கு ஆளானதெப்படி? குடிப்பழக்கமுடையவராயிருந்தீரோ என்றார். வயோதிபன் சற்றென்கிலுமல்ல. தினசரி முக்காற்படி சாராயந்தான் அருந்திவந்திருக்கிறேன். (சொற்பந்தான்) நாள் 1-க்குக் கால்ரூபாய்க்குமேல் செலவிட்டதில்லையென்று சொன்னான். அப்புறம் வைத்தியர் ஒரு துண்டுக்காகிதமும் பென்சிலும் எடுத்துக்கொண்டு நல்லது தினசரி முக்காற்படி சாராயமாக எவ்வளவு காலம் குடித்துவந்திருக்கிறீர் என, வயோதிபன் இப்போது எனக்கு வயது எண்பது, கூடக்குறைய அறுபது வருஷங்களாக மேற்படி பழக்கமுடையவனாயிருந்திருக்கிறேனென்றார். வைத்தியர் மெத்த நல்லது, இப்போது கணக்குப்போட்டுப் பார்ப்போம் என்று சொல்லி நாளொன்றுக்குக் கால் ரூபாயாக 60 வருஷங்களுக்கும் கூட்டுவட்டியோடு 32,260 ௹-யெனக் கண்டு கிழட்டுத் தச்சனை நோக்கி சிநேகிதனே! நீர் தரித்திரனாயிருக்கிறதற்குப்பதிலாக இந்த நிமிஷத்தில் 32,260 ௹பாய் சொத்துள்ளவராயிருக்கவேணும். ௵ 1-க்கு 1500 ௹ அல்லது வாரமொன்றுக்கு 30 ரூபாய் மிச்சம்பிடித்திருக்கவேணும். தினசரி, கூட ஒருமணி நேரமாவது வேறு வேலையாவது செய்யாதபடிக்கே நீர் சாராயத்துக்கென்றே செலவழித்த தொகை அவ்வளவாகும் என்றார். அப்பிரயோஜனத்தையும் அவமானத்தையும் எவ்விஷயத்திலும் கஷ்டநஷ்டங்களையும் நாசமோசங்களையும் வருவிக்கின்ற மதுவில் தினந்தினம் நாள்விட்டுநாள் அரை, கால், அரைக்கால், மாகாணியெனப் பணத்தைக்கொட்டுகிற மதுப்பிரியரோ! நீங்கள் இதுவரை மதுவுக்கென்று செலவிட்டு வந்திருக்கிறவற்றைத் தொகையிட்டுப் பாருங்கள்!

நாகபாம்புக்கடிக்கு நல்ல மருந்து. தும்பைச்செடி. இந்தச் செடியின் சமூலத்தை இடித்து ரசமெடுத்து அதில் அரைவீசம்படி நல்லெண்ணெயைச் சேர்த்து நாகபாம்பினாற் கடிக்கப்பட்டு விஷமேறிய ஆடு, மாடு முதலான கால் நடைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்க, உடனே அரைமணிக்கெல்லாம் விஷம் நீங்கிவிடும். மேற்படி ரசத்தில் வேலிப்பருத்தியின் ரசம், சம அளவாகவும் காய்ந்த புகையிலை ரசம் சம அளவாகவும், எருக்கம் பழுப்பு இலை ரசம் சம அளவாகவும் சேர்த்து மனுஷர்களுக்குக் கொடுக்க அரைமணிக்கெல்லாம் விஷந்தீரும்.

(சு.—னி. செப்தெம்பர் ௴ 8வ.)

செப்தெம்பர்ீ நாள்-30. ஆவணிீ 18உ முதல், புரட்டாசிீ 16உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
| --- | --- | --- | --- |
| பு | 1 | ௧௮ | நான் இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா? 2 ராஜா 8:8. |
| வி | 2 | ௧௯ | சமாதானமா என்று கேட்கச் சொல். 9:17. (10:16 |
| வெ | 3 | ௨௰ | கர்த்தருக்காக எனக்கு இருக்கிற பக்திவைராக்கியத்தைப் பார். |
| ச | 4 | ௨௧ | அத்தாலியாள்...துரோகம் துரோகம் என்று கூவினாள். 11:14. |
| ஞா | 5 | ௨௨ | ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும் என்றான். 12:5. (தான். 13: |
| தி | 6 | ௨௩ | அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந் |
| செ | 7 | ௨௪ | நீ.. பொல்லாப்பைத் தேடிக்கொள்வானேன்? 14:10. (கி 15:37. |
| பு | 8 | ௨௫ | கர்த்தர்...ரேத்சீனை...யூதாவுக்கு விரோதமாக அனுப்பத் தொடங் |
| வி | 9 | ௨௬ | நான் உம்முடைய அடியானும் உம்முடைய குமாரனுமாயிருக்கி |
| வெ | 10 | ௨௭ | அவன்...தேவனுடைய காரியத்தைப் போதிக்கக்கடவன். 17:27. |
| ச | 11 | ௨௮ | வெண்கலச் சர்ப்பத்தை (எசேக்கியா) உடைத்துப்போட்டான். 18: |
| ஞா | 12 | ௨௯ | நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன். 19: |
| தி | 13 | ௩௰ | உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும். 20:1 (27 |
| செ | 14 | ௩௧ | குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாகச் சிந்தினான். 21:16. |
| பு | 15 | ௧ | நம்மேல் பற்றியெரிந்த கர்த்தருடைய உக்கிரம் பெரியது. 22:13. |
| வி | 16 | ௨ | கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரியுங்கள். 23:22. |
| வெ | 17 | ௩ | கர்த்தர் கல்தேயரின் தண்டுகளை...அவன்மேல் வரவிட்டார். 24:2 |
| ச | 18 | ௪ | யூதா ஜனங்கள்...சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். |
| ஞா | 19 | ௫ | (பேலெகு) அவன் நாட்களில் பூமி பகுக்கப்பட்டது. 1 நாளா. 1:19 |
| தி | 20 | ௬ | கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனானபடியால்...கொன்றுபோ |
| செ | 21 | ௭ | கட்டுண்ட எகொனியாவின் குமாரர் சலாத்தியேல். 3:17. (ட்டார். |
| பு | 22 | ௮ | பூர்வத்திலே காமின் சந்ததியார் அங்கே குடியிருந்தார்கள். 4:40. |
| வி | 23 | ௯ | ராஜாதிபத்தியம் (யூதா) அவன் சந்ததியில் உண்டானது. 5:2. |
| வெ | 24 | ௰ | சூப்...இவன் இல்க்கானாவின் குமாரன். 6:35. |
| ச | 25 | ௧௧ | செலோப்பியாத்திற்குக் குமாரத்திகள் இருந்தார்கள். 7:15. (29. |
| ஞா | 26 | ௧௨ | எரோகாமின் குமாரர்...எருசலேமிலே குடியிருந்தார்கள். 8:27. |
| தி | 27 | ௧௩ | கோராகியர்...வாசஸ்தலத்து வாசல்களைக் காத்துவந்தார்கள். |
| செ | 28 | ௧௪ | சவுலும்...அவன் வீட்டுமனுஷரனைவரும் கூடச் செத்துப்போனார் |
| பு | 29 | ௧௫ | தாவீது இஸ்ரவேலனைத்தோடுங்கூட.. எருசலேமுக்குப்போனான். |
| வி | 30 | ௧௬ | உம்முடைய தேவன் உமக்குத் துணைநிற்கிறார். 12:18. (11:4 |

## விசேஷ நாட்கள்.

5. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 11—ம் ஞாயிறு
12. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 12—ம் ஞாயிறு.
13. பௌரணமி.
19. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 13—ம் ஞாயிறு.
21. பரி. அப். மத்தேயுவின் திருநாள்.
26 திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 14—ம் ஞாயிறு.
27. அமாவாசை.
29. பரி. மிகாவேல் முதலான தேவதூதர்களின் திருநாள்.

# நற்போதகம்.

௰. அக்டோபர்ீ. ௲௮௮௯ ௵.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

இவரைப்பற்றிப் பாரம்பரை சொல்லுகிறதாவது: கிறிஸ்துநாதர் மெய்யாய் மனுஷாவதாரம்செய்யவில்லையென்று சாதித்த பாஷண்டனான செரிந்தஸ் இருக்கிறகூடாரத்தின் கீழிருக்கப்படாதென்பதைப்பற்றி: "சத்திய விரோதியான செரிந்தஸ் உள்ளே இருப்பதால், ஸ்நானக்கட்டிடம் நம்மேல் விழுந்துவிடாதபடி ஓடிப்போகக்கடவோம்" என்று சொன்னாராம். இந்த மகாத்துமா விருத்தாப்பியராய் எபேசுவிலிருக்கும்போது, அவருடைய சீஷர்கள் இவரைத் தங்கள் கைகளில் ஏந்திக் கோவிலுக்குக் கொண்டுபோவார்களாம். இவர் அதிகம் பேசத்திராணியில்லாமல், "சிறுபிள்ளைகளே! ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள்" என்று மாத்திரம் எப்போதும் சொல்வாராம். ஜெரோம் சொல்லுகிறபடி, அவரருகேயிருந்த அவருடைய "சீஷரும் பிதாக்களும்: இந்த வார்த்தைகளையே அவர் திரும்பத்திரும்பச் சொல்வதைக் கேட்டுச் சலிப்படைந்து கடைசியாக அவரைப் பார்த்து, ஐயா! இந்த வார்த்தைகளையே ஏன் ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கிறீர் என்று கேட்டார்களாம். அவர் அதற்கு உத்தரவாக, "இதுவே கர்த்தருடைய கட்டளை. நீங்கள் இதை மாத்திரம் கைக்கொண்டுவந்தால் போதும்" என்று சொன்னாராம். இவர் 1ம் நூற்றாண்டின் கடைசியில் எபேசுவில் மரித்தார்.

அவர் மரணமடையாமல், கிறிஸ்துநாதர் வருமளவும் தன் கல்லறையில் நித்திரைசெய்கிறாரென்றும், இவருடைய சுவாசத்தினால் கல்லறையின் மேல்மண் அசைவுகொடுக்கிறதென்றும் சொல்லிய பாரம்பரை, நம்பப்படத்தக்கதல்ல என்று அகுஸ்தீன் சொல்லுகிறார். யோ 21:21ன் பேரில் வியாக்கியானம் எழுதுகிறபோது, அகுஸ்தீன் இந்தப் பாரம்பரியத்தை எடுத்துப்பேசுகிறார்.

**560** பரி. யோவான் சுவிசேஷத்தின் பிரிவுகளைச் சொல்லு.

முதலாவது, முகவுரை 1: 1—18.

வார்த்தையானவர் தாமேயிருக்கிறவர், அநாதிநித்தியர், சிருஷ்டிகர்.

இரண்டாவது, சரித்திரம் 1: 19—21: 23.

இந்த உலகத்திற்கும், தமது சீஷருக்கும் கிறிஸ்துநாதர் தம்மைத்தாமே வெளிப்படுத்தினது.

I. இந்த உலகத்திற்குக் கிறிஸ்துநாதர் தம்மை வெளிப்படுத்தினது (1: 19—12: 50).

1. விளம்பரம் (Proclamation) (1: 19—4: 54).
   (1) கிறிஸ்துவைப்பற்றிய சாக்ஷி (1: 19—2: 11).
      a. யோவான்ஸ்நானனால் (1: 19—34).
      b. சீஷரால் (1: 35—55).
      c. அடையாளங்களால் (தண்ணீர் ரசமானது) (2: 1—11)
   (2) கிறிஸ்துவின் கிரியை (2: 13—4: 54).
      a. யூதேயாவில் (நீக்கொதேமு) (2: 13—3: 36).
      b. சமாரியாவில் (சமாரிய ஸ்திரீ) (4: 1—42)
      c. கலிலேயாவில் (இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் குணமானது (4: 43—54).
2. போராட்டம் (The conflict) (5: 1—12: 50).
   (1) போராட்டத்திற்கு ஆரம்பம் (5அதி, 6அதி).
      a. எருசலேமில் (38வருஷ வியாதிக்காரனை ஓய்வுநாளில் குணமாக்கினது (அதி 5). குமாரனும் பிதாவும்
      b. கலிலேயாவில் (5000 பேரைப் போஷித்தது (அதி 6) கிறிஸ்துவும் ஜனங்களும.
   (2) பெரிய தர்க்கம் (The great controversy) (அதி 7—அதி 12).
      a. விசுவாசமும், அவிசுவாசமும் வெளிப்பட்டது (அதி 7—அதி 10).
         கூடாரப்பண்டிகை (அதி 7. அதி 8).
         பிரதிஷ்டைப் பண்டிகை (ஓய்வுநாளில் குருடனைக் குணமாக்கினது) (அதி 9 அதி 10).
      b. முடிவான தீர்ப்பு (அதி 11. அதி 12).
         கடைசி அடையாளமும் அதின் பலனும் (லாசருவை எழுப்பினது (அதி 11).



கிறிஸ்துவின் வெளியரங்க ஊழியத்தின் முடிவு (அதி 12).

II. தமது சீஷருக்குக் கிறிஸ்து தம்மைத்தாமே வெளிப்படுத்தினது (அதி 13—அதி 21).

1. அன்பின் கடைசிஊழியம் (அதி 13—அதி 17).
   (1) அன்பின் கடைசிக் கிரியைகள் (13: 1—30).
   (2) கடைசிப் பிரசங்கங்கள் (13: 31—16: 33).
      a. மேல்வீட்டில் (13: 31—14 அதி).
      b. வழியில் (அதி 15, அதி 16)
   (3) பிரதிஷ்டை ஜெபம் (அதி 17).
2. மரணத்தின்மூலமாய் அடைந்த ஜெயம் (அதி 18—20 அதி).
   (1) காட்டிக்கொடுக்கப்பட்டது (18: 1—11).
   (2) மார்க்காசார, தேசாசார விசாரணைகள் (18: 12—19: 16).
   (3) மரணம் (19: 17—42).
   (4) உயிர்த்தெழுதல் (அதி 20).
3. முடிவுரை (அதி 21).
   (1) கர்த்தரும் சீஷரின் கூட்டமும் (மீன்அற்புதம் 21: 1—14).
   (2) கர்த்தரும் தனித்தனிச் சீஷரும் (21: 15—23).
   (3) கடைசி அறிவிப்பு (21: 24, 25).

**561.** முகவுரையின் (1: 1—18) பிரிவுகளைச் சொல்லு?

I. வார்த்தை, தானேயிருக்கிற சுயாதீன அநாதிநித்திய வஸ்து (வா 1).
   1. காலம் உண்டாவதற்குமுன் இருந்தார்.
   2. தேவனோடு ஐக்கியமான பர்சனாக இருந்தார்.
   3. தன்மையில் தேவனாக இருந்தார்.

II. வார்த்தைக்கும் சிருஷ்டிப்புக்கும் இருக்கிற சம்பந்தம் (வா 2-18).
   1. முக்கிய சங்கதிகள் (வா 2—5).
      (1) சிருஷ்டிப்புக்கு ஆதாரம்.
         திவ்ய ஆலோசனையில் (வா 2).
      (2) சிருஷ்டிப்பின் கிரியை (வா 3).
         வார்த்தை சிருஷ்டி கர்த்தா—"அவர்மூலமாய்". இவருக்குத் தெரியாமல் யாதொன்றும் உண்டானதில்லை (வா 3, 2ம் பங்கு).

(3) சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களின் உற்பத்தி (வா 4, 5).

a. திவ்ய ஆலோசனையில் (வா 4).

உலகத்தையும் மனுஷனையும்பற்றி.

b. மானுஷிய சரித்திரத்தில் (வா 5).

ஒளிக்கும் இருளுக்கும் போராட்டம்.

2. பொதுவாய் வார்த்தை வெளிப்பட்ட சரித்திரம் (வா 6—13).

(1) யோவான்ஸ்நானனை முன்குறித்த தீர்க்கதரிசனச் சாக்ஷி (வா 6—8).

a. யோவான்ஸ்நானன் இன்னான் (வா 6).

b. அவன் அனுப்பப்பட்ட நோக்கம் (வா 7).

c. அவனுடைய தன்மை (வா 8).

(2) வார்த்தை மனுஷாவதாரஞ்செய்யுமுன் அதின் வெளிப்படுதல்கள் (Manifestations) (வா 9, 10).

a. விசேஷித்த வெளிப்படுத்தல்களினால் (Special revelations) (வா 9).

b. திவ்ய சமுகத்தினால் நேராய் (வா 10).

(3) தெரிந்துகொள்ளப்பட்ட சனங்களிடத்திற்கு, வார்த்தையானவர் மனுஷாவதாரஞ்செய்தபோது வந்தார் (வா 11—13).

a. யூதஜாதியார் பொதுவாய்க் காண்பித்த அவிசுவாசம் (வா 11).

b. தனித்தனியாக சிலர் விசுவாசித்தது (வா 12, 13).

3. மனுஷாவதாரத்தைப் பரீட்சையினால் கண்டுகொண்டது (வா 14—18).

(1) கண்கண்ட சாக்ஷி (வா 14).

a. மனுஷாவதாரமான வார்த்தையைக் கண்டார்கள்.

b. இவரைக் கவனித்து ஆராய்ந்தார்கள்.

c. இவருடைய திவ்விய தன்மையை அறிந்தார்கள்.

(2) தீர்க்கதரிசனச் சாக்ஷி (வா 15).

a. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கிறிஸ்துவாக.

b. அவருடைய திவ்ய மகத்துவத்தைப்பற்றி.

(3) வெளிப்படுத்தலின் தன்மை (வா 16—18).

a. விசுவாசிகளின் பரீட்சையில்.

b. நியாயப்பிரமாண சம்பந்தத்தில்.

c. வெளிப்படுத்தல் கடைசியாக வந்தவகையில்.



**562.** யோவான் சுவிசேஷத்திற் சொல்லிய காலக்குறிப்புகளெவை?

வசந்தகாலத் துவக்கத்தில் கர்த்தர் முதல்சீஷரை அழைத்தார் (1: 19—2: 11).

முதல் பஸ்கா ... ... (எப்பிரல்) 2: 13—3: 21. 3: 22—4: 54.

புதுவருஷப் பண்டிகை (செப்றெம்பர்) 5அதி.

இரண்டாம் பஸ்கா ... (எப்பிரல்) 6அதி.

கூடாரப்பண்டிகை ... (அக்றோபர்) 7அதி 8அதி.

பிரதிஷ்டைப் பண்டிகை (டிசம்பர்) 9அதி 10அதி.

மூன்றாம் பஸ்கா... ... (எப்பிரல்) 13அதி—20அதிவரை.

**563.** கிறிஸ்துநாதருக்கு ஏழு சாட்சிகளுண்டு. அந்தச் சாட்சிகளைச் சொல்லு?

1. பிதா கொடுத்த சாட்சி (5: 34, 37). (5: 31ஒடு 8: 14). (8: 18).

2. கிறிஸ்துநாதர் தாமே தம்மைக்குறித்துக் கொடுத்த சாட்சி. "நானும் பிதாவும் ஒன்று" (10: 30) என்று கர்த்தர்தாமே சொல்வதாலும், திவ்ய காரியங்களை எல்லாம் நேராய் அறிந்தவரானதாலும் (3: 11, 32), பிதாவினிடத்திலிருந்து வந்தவரானதாலும் (8: 14ஒடு 55), அவருடைய சாட்சி உறுதியானதுதான். இந்தக் கருத்தாகத்தான் கர்த்தர் பேசுகிறார் (8: 14), (18: 37). இந்தச் சாட்சியின் பலன் (1 யோ 5: 10). இது அகச் சாட்சியாம்.

3. அவருடைய கிரியைகள் கொடுத்த சாட்சி (5: 36 வாசி). அந்தக் கிரியைகள் அவருக்கும் பிதாவுக்குமிருக்கிற பூரண ஐக்கியத்தை வெளிப்படுத்தின (5: 17). அந்தக் கிரியைகள் அவருடைய மெய்யான தன்மைக்கும், அதிகாரத்துக்கும் அத்தாட்சிகளாயிருந்தன (10: 25ஒடு 14: 11. 15: 24). அவருடைய கிரியைகள் இப்பொழுதும் அவரைக்குறித்துச் சாட்சியிடுகிறதென்பதற்கு கிறிஸ்தமான கூட்டம் இப்பொழுதிருப்பதே, அத்தாட்சியாம் (14: 12).

4. வேதச்சாட்சி (5: 39, 40). (5: 46. 1: 45).

5. முன்தூதன் கொடுத்த சாட்சி (1: 7), (5: 35. 1: 8), (5: 33).

6. சீஷர் கொடுத்த சாட்சி (5: 27), 19: 35), (21: 24ஒடு 1 யோ 1: 2. 4: 14).

7. எல்லாவற்றுக்குமேலாக பரிசுத்தஆவியானவர் கொடுத்த சாட்சி. முந்திய சாட்சிகளுக்கெல்லாம் இவர் அர்த்தம் சொல்லுகிறவர் (15: 26), (16: 14), (1 யோ 5: 6).

முதல் இரண்டு சாட்சிகளும், அகச்சாட்சிகளாம். 3ம் 4ம் சாட்சிகள் சரித்திர சாட்சிகளும் புறச்சாட்சிகளுமாயிருக்கின்றன. 5ம் 6ம் சாட்சிகள்: பரீட்சைக்குரிய நேரான சாட்சிகளாம். 7ம் சாட்சி: விசுவாசிக்குத் திடநம்பிக்கையும், சத்தியத்துக்கு அச்சாரமுமான சாட்சியாம்.

**563**. யோவான் சுவிசேஷத்தில் கிறிஸ்துநாதர் ஏழுவிசை "நானே" என்று தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். அதைச் சொல்லு?

6: 35 நானே ஜீவஅப்பம்.
8: 12. நானே உலகத்துக்கு ஒளி.
10: 7. நானே ஆடுகளுக்கு வாசல்.
10: 11. நானே நல்ல மேய்ப்பன்.
11: 25. நானே உயிர்த்தெழுதலும், ஜீவனும்.
14: 6. நானே வழியும், சத்தியமும், ஜீவனும்.
15: 1. நானே மெய்யான திராக்ஷச்செடி.

முதல் ஐந்தும், அவருடைய வெளியரங்க ஊழியத்திலும், கடைசி இரண்டும், அவருடைய கடைசிப் பிரசங்கங்களிலும் வருகின்றன.

**564**. பரி. யோவான் சுவிசேஷத்துக்கும், அவன் எழுதின 1ம் நிருபத்துக்குமுள்ள ஒற்றுமைகளெவை?

| சுவிசேஷம். | 1ம் நிருபம். | சுவிசேஷம். | 1ம் நிருபம். |
|---|---|---|---|
| 3: 11. ... | 1: 1—3. | 12: 35. ... | 2: 11. |
| 5: 32. ... ... | 5: 9. | 13: 34. ... | 3: 23. 4: 11. |
| 5: 24. .. ... | 3: 14. | 15: 10. ... | 4: 16. |
| 5: 38. ... ... | 2: 14. | 15: 18. ... | 3: 13. |
| 6: 56. ... ... | 4: 15. | 16: 24. ... | 1: 4. |
| 8: 29. ... ... | 3: 22. | 16: 33. ... | 5: 4. |
| 8: 44. ... ... | 3: 8. | 4: 22. ... | 5: 20. |
| 8: 46. ... .. | 3: 5. | 6: 69. ... | 4: 16. |
| 8: 47. ... .. | 4: 6. | 8: 35. ... | 2: 17. |
| 10: 15. ... ... | 3: 16. | | |

முகவுரை வாக்கியங்களுக்கும் ஒற்றுமைகளுண்டு.

| | | | |
|---|---|---|---|
| 1: 1. ... | 1: 1, 2. 5: 20. | 13. ... ... | 6: 1. |
| 9. .. ... | 2: 8. | 14. ... ... | 4: 2. |
| 5. ... ... | 2: 8. | 14. ... ... | 1: 1. |
| 12. ... | 3: 1. 5: 13. | 18. ... ... | 4: 12. |



**564**. பரி. யோவான் சுவிசேஷத்துக்கும், முதல் மூன்று சுவிசேஷங்களுக்கும் இருக்கிற வித்தியாசங்களென்ன?

கர்த்தருடைய உபதேசத்தின் பொருள், அது சொல்லப்பட்ட காலம், இடம், ஒழுங்கு ஆகிய இவற்றில் வித்தியாசங்களிருக்கின்றன.

முதல் மூன்று சுவிசேஷங்கள் மாத்திரம் நமக்கிருந்தால், கிறிஸ்துநாதர் செய்த பணிவிடை, ஒரே ஒரு வருஷத்தில் முற்றுப்பெற்றதென்றும்;—கிறிஸ்துநாதர் கடைசிப் பஸ்காகாலத்தில் எருசலேமுக்கு வந்து தமது ஊழியத்தை முடிக்கிறவரையும், அவர் கலிலேயாவிலேயே இருந்து பணிவிடைசெய்தார் என்றும்;—தெளிவான உவமை ஒப்பனைகளினாலே பெரும்பாலும் எளியவர்களுக்கு மாத்திரம் போதித்தார் என்றும் நினைக்கவேண்டியது வரும். பரி. யோவான் சுவிசேஷத்தைப் பார்த்தால் இவற்றைப் பற்றி வித்தியாசங்களிருக்கின்றன. ஒரு பஸ்காப்பண்டிகைக்குப்பிரயாணம்போன சமயத்தில் தமது பணிவிடையை முடித்ததுபோல, இன்னொரு பஸ்காப்பண்டிகைக்குப்பிரயாணம்போன சமயத்தில் அதை ஆரம்பித்தாரென்றும்;—இந்த இரண்டு பிரயாணங்களுக்கும் இடையில், வேறொரு பஸ்காப்பண்டிகை வந்ததென்றும்;—அடிக்கடி எருசலேமுக்குப் போய், தம்மை மேசியா என்று (எளியோருக்கு மாத்திரமல்ல) பெரியோருக்கும் ரூபகாரப்படுத்தினார் என்றும்;—கருகலான உன்னத உபதேசங்களையும் போதித்தாரென்றும் தெரியவருகிறது. கர்த்தருடைய பாடுகளையும், உயிர்த்தெழுதலையும் சொல்லுமுன், ஐயாயிரம் பேரைப் போஷித்த ஒரு சங்கதியை மாத்திரம், நாலு சுவிசேஷகரும் ஒத்துச்சொல்லுகிறார்கள். மற்ற அநேக சங்கதிகளில் வித்தியாசங்களிருக்கின்றன. இதற்கு இரண்டே திருஷ்டாந்தங்களைச் சொல்லுவோம் லாசருவை உயிரோடெழுப்பினதை முதல்மூன்று சுவிசேஷகரும் சொல்லவில்லை. முதல் மூன்று சுவிசேஷகரும் விபரமாய் எழுதுகிற பரிசுத்த நற்கருணைஏற்பாட்டைப் பற்றி பரி. யோவான் எழுதவில்லை.

கர்த்தர் திருப்பணிவிடைசெய்த காலம் எத்தனை வருஷம் என்று கணிக்கிறதற்கு நமக்குப் போதுமான ஆதாரமில்லை. லூக் 3: 1ல் யோவான் ஸ்நானன் தன் ஊழியத்தை ஆரம்பித்த காலக்குறிப்பைச் சொல்லியிருக்கிறது. ஆனால் பிலாத்து என்பவன் அதிபதியானஎந்தவருஷத்தில், கிறிஸ்துநாதருடைய ஊழியம் முடிந்ததென்று சொல்ல ஏதுவில்லை. பிலாத்து கி. பி. 36ல் வேலையைவிட்டுப்போனான். ஏரோது கி. பி. 39ல் சிறைப்பட்டுப்போனான். பிலாத்து அதிபதியானஎந்தவருஷத்தில், இவ்விரண்டு பேரும் எருசலேமில் சந்தித்தார்களோ தெரியாது. பிலாத்து அதிபதியாயிருந்த கடைசிக்காலமவரையும், காய்பா உத்தியோகத்திலிருந்தான். அன்னா மரித்தகாலம் நமக்குத் தெரியாது. ஆனால் அவன் விருத்தாப்பியனாயிருந்

திருக்கிறான். இந்தக் குறிப்புகளைப் பார்க்கும்போது, மேற்படி காலத்தைத் திட்டமாய்க் கணிக்க வகையில்லை. முதல் மூன்றுசுவிசேஷகர்களும் தம் தம் சரித்திர சங்கதிகளை, ஒரு வருஷத்துக்குள் நடந்த பாவனையாய் எழுதுகிறார்கள். பன்னிருவரும், எழுபது பேரும் அநுப்பப்பட்டு நடத்தின ஊழியமும், கர்த்தருடைய வெவ்வேறான பிரயாணங்களும், ஒரு வருஷத்துக்குள் முடியமாட்டாது. பரி. யோவான் மூன்று பஸ்காப்பண்டிகைகளைச் சொல்லுகிறார். ஆனாலும் கர்த்தர் திருப்பணிவிடைசெய்த காலத்தில் வந்த ஒவ்வொரு பஸ்காவையும் சொல்லுகிறார் என்பதற்குத் தெளிவான குறிப்பில்லை. இப்படியாக கர்த்தர் வெளியரங்கமாய் 3½ வருஷக் காலம் பணிவிடைசெய்தாரென்பதைத் திட்டவட்டமாய்க் கணிக்க நமக்குப் போதுமான விபரம் சுவிசேஷங்களில் எழுதப்படவில்லை.

**565** பரி. யோவான் சுவிசேஷத்துக்கும் முதல் மூன்று சுவிசேஷங்களுக்குமிருக்கிற ஒற்றுமைகளெவை?

பின்வரும் சங்கதிகளில் அந்த ஒற்றுமைகளைக் காணலாம்.

1. யோவான் கொடுத்த ஞானஸ்நானம். இதில் லேவியரையும் (1: 19), 1: 20ன் கேள்விகளையும், இடம் பெத்தானி என்பதையும் (1: 28), கிறிஸ்துவின்மேல் ஆவியானவர் தங்கினதையும் (1: 32), பிற்பாடு கிறிஸ்துநாதரைக்குறித்துச் சாட்சியிட்டதையும்பற்றி (1: 26) பரி. யோவான் கூட்டி எழுதுகிறார்.

2. ஐயாயிரம் பேரைப் போஷித்தது. பஸ்காப்பண்டிகைச் சமீபமாயிருந்ததென்ற காலக்குறிப்பையும் (6: 4), பிலிப்பு, அந்திரேயா இந்த இரண்டு பேரையும்(6: 5, 8), மீதியானவைகளைச் சேர்க்கச் சொன்ன உத்தரவையும் (வா 12), வா 14ஐயும் பரி. யோவான் கூட்டி எழுதுகிறார்.

3. கடலில் நடந்தது. தூரத்தையும் (6: 19), சீஷருடைய எண்ணத்தையும் (வா 21), அற்புதம் விளைவித்த பலனையும் (வா 21), பரி. யோவான் சொல்லுகிறார்.

4. பெத்தானியில் தைலாபிஷேகம். “பஸ்காவர ஆறுநாளைக்கு முன்” என்று காலத்தையும் (12: 1), மரியாள் (வா 3ஓடு மத் 26: 7. மாற் 14 3) யூதாஸ்(வா 4: 6) ஆக இந்த இரண்டு பேரையும், கிரியையின் விபரங்களையும் (வா 3), பரி. யோவான் சொல்லுகிறார்.

5. கெம்பீரமான பவனி. “மறுநாளிலே” என்று காலத்தையும் (12: 12), லாசருவைப்பற்றியும் (18), பரிசேயருடைய அபிப்பிராயத்தையும் (வா 19), பரி. யோவான் சொல்லுகிறார்.



கி. மு. 1910. ஆபிரகாம் கானான்தேசத்திற்கு வந்து, 10௵மானபின் இஸ்மவேல் பிறந்தான் (ஆதி 15 அதி). இஸ்மவேல் பிறந்து 13௵மானபின், அல்லது ஜலப்பிரளயமுண்டாகி 451௵த்திற்குப் பின், சோதோமும் கொமோராவும் அழிந்தன (ஆதி 18: 19).

இதற்கடுத்த வருஷம் ஆபிரகாம் 100 வயதானபோது, ஈசாக்கு பெயெர்செபாவில் பிறந்தான் (ஆதி 21). ஆபிரகாம் 137 வயதும் ஈசாக்கு 37 வயதுமானபோது, சாராள் மரித்தாள். ஆபிரகாம் 140ம் வயதில் கேத்தூராளைக் கலியாணம்செய்து, 175ம் வயதில் மரித்தான்.

1870 இஸ்மவேல் 137ம் வயதில் மரித்தான். ஈசாக்கின் 60ம் வயதில், ஏசாவும் யாக்கோபும் பிறந்தார்கள். ஈசாக்கின் 137ம் வயதிலும், யாக்கோபின் 77ம் வயதிலும், யாக்கோபு ஆசீர்வாதத்தைத் தந்திரமாய்ப் பெற்றுக்கொண்டு ஓடிப்போனான் (ஆதி 27). எப்படியென்றால் பார்வோனுக்குமுன் நின்றபொழுது யோசேப்புக்கு வயது 30 (ஆதி 41: 49). அதற்கப்பால் செழிப்பான 7௵ வந்தன (ஆதி 41: 47—53); இப்பொழுது யோசேப்புக்கு வயது 37. இதன்பின்வந்த ஏழுவருஷப் பஞ்சத்தின் 2ம் வருஷத்தில், யாக்கோபு எகிப்துக்கு வந்தான் (ஆதி 45: 6); இப்பொழுது யோசேப்புக்கு வயது 39; யாக்கோபுக்கு வயது 130. ஆகையால் யோசேப்பு பிறந்தபொழுது யாக்கோபுக்கு வயது 91. ராகேலுக்காக லாபானுக்கு யாக்கோபு 2ம் தடவை ஊழியஞ்செய்த 7ம் வருஷக் கடைசியில் யோசேப்பு பிறந்தபடியால் (ஆதி 30: 25, 26), 91 விருந்து 14ஐக் கழிக்க, தகப்பன் வீட்டைவிட்டுப் புறப்பட்ட பொழுது யாக்கோபுக்கு வயது 77 என்று தெரியவரும். யாக்கோபு பிறந்தபொழுது ஈசாக்கின் வயது 60. ஆகையால் இப்பொழுது ஈசாக்குக்கு வயது 137.—யாக்கோபு கானானுக்குத் திரும்பிவந்த பிற்பாடு, தகப்பன் வீட்டில் 20௵ இருந்திருக்கிறான்.

1728 17 வயதில் யோசேப்பு விற்கப்பட்டு எகிப்திற்குப்போனான் (ஆதி 37: 2).

1716 ஈசாக்கு 180 வயதாய் மரித்தான் (ஆதி 35: 28).

1715 யோசேப்பு 30ம் வயதில் எகிப்துக்கு அதிபதியானான் (ஆதி 41: 46).

1708 யாக்கோபு 130ம் வயதில் எகிப்துக்குப்போனான் (ஆதி 47: 9).

1689 யாக்கோபு 147 வயதில் மரித்தான் (ஆதி 47: 28).

1635 இசரவேலர் எகிப்தைவிட்டதற்கு 144௵த்துக்குமுன், யோசேப்பு 110 வயதாய் மரித்தான் (ஆதி 50: 26). லேவி 137 வயதி

லும், கோகாத் 133 வயதிலும், அம்ராம் 137 வயதிலும் மரித்தார்கள் (யாத்தி 6: 16, 18, 20).

1574 யாக்கோபு மரித்ததற்கு 115௵த்திற்குப்பின், ஆரோன் பிறந்தான் (யாத் 7: 7).

1571 இசரவேலர் எகிப்தைவிட்டதற்கு 80௵த்திற்குமுன், மோசே பிறந்தான் (யாத் 7: 7).

1631 மோசே 40ம் வயதில் ஓடிப்போனான் (யாத் 2: 15, 22).

1491 ஆபிரகாம் அழைக்கப்பட்டதற்கு, 430 வருஷத்திற்குப்பின் இசரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டார்கள் (யாத் 12: 41).

1 ராஜா 6: 1ஐயும் அப் 13: 20ஐயும் சரிப்படுத்துவதில், சாஸ்திரிகளுக்குள் தர்க்கமுண்டு. இதற்குப் பெரும்பாலும் இரண்டு வியாக்கியானங்கள் சொல்லப்படும்.

(1) இசரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதுமுதல் 1ம் தேவாலயம் கட்டப்பட்டதுவரையும், 592௵ என்று யோசேப்புஸ் சொல்லியதும், யூதருக்குள் வழங்கிவந்ததுமான காலக்கணக்கை வைத்து, பரி. பவுல் 450௵மென்று சொல்லுகிறார் என்பதாம். எப்படியெனில்:

| | | | | |
|---|---|---|---|---|
| இசரவேலர் வனாந்தரத்தில் அலைந்த காலம் வருஷம். | | | | 40 |
| யோசுவாவினால் நடத்தப்பட்ட காலம் | | ... | ... | 18 |
| நியாயாதிபதிகளுக்குள்ளிருந்த காலம் | | ... | ... | 450 |
| சாமுவேல், சவுல் இவர்களுக்குள் | | ... | ... | 40 |
| தாவீதுக்குள் | .. ... | ... | ... | 40 |
| சாலொமோன் ஆண்ட 4ம்௵ | .. | ... | ... | 4 |
| | | | ஆக | 592௵ |

கவனிப்பு. சவுல் ஆண்ட காலம் 40௵ என்று பழையஏற்பாட்டில் சொல்லவில்லை (அப் 13: 21). சாமுவேல் உயிரோடிருந்த காலத்தில் 18௵மும், அவன் மரணத்திற்குப்பின் 22௵மும் சவுல் ஆண்டான் என்று யோசேப்புஸ் சொல்லுகிறான்.—சவுல் இராஜாவாக அபிஷேகம் பெற்றபொழுது பாலியனாயிருந்தான்; சவுல் மரித்தபொழுது அவனுடைய கடைசிமகனுக்கு 40 வயது (2 சாமு 2: 10).

(2) அப் 13: 20ஐ, "ஏறக்குறைய 450 வருஷக்காலமாய் அவர்களுடைய தேசத்தைச் சுதந்தரமாய்ப் பங்கிட்டுக்கொடுத்தார். அதன்பின்பு சாமுவேல் தீர்க்கதரிசிவரைக்கும் நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார்" என்று மொழிபெயர்க்கிறார்கள். இந்த மொழிபெயர்ப்புக்கு, லத்தீன் திருப்புதலும் அநுசரணையாயிருக்கிறது. இதினால், ஈசாக்குப் பிறந்ததுமுதல், இசரவே



லர் கானான்தேசத்தைப் பங்கிட்டு முடித்தகாலம்வரைக்கும், 450௵ என்று தெரியவருகிறது. இந்த வியாக்கியானத்தின்படி, இந்த வாக்கியம் 1 ராஜா 6: 1க்கு விகற்பமாகாது. ஏனெனில் 2 வாக்கியங்களும், 2 வெவ்வேறான காலக்கணக்கைச் சொல்லுகின்றன.

**576**. அப் 7: 7. "இவ்விடத்திலே எனக்கு ஆராதனைசெய்வார்கள்" என்று ஆதி 15: 13, 14ல் சொல்லியிருக்கவில்லை. யாத்தி 3: 12ல் நீங்கள் "இந்த மலையில் (அதாவது ஓரேபில்) தேவனுக்கு ஆராதனைசெய்வீர்கள்" என்று சொல்லியிருக்கிறது. ஆகையால் ஸ்தேவானுடைய ஞாபகத்தில் இந்த இரண்டு வாக்கியங்களும் குழம்பிப்போயிருந்ததென்று சிலர் சொல்லுகிறார்கள். இதற்கு உத்தரவென்ன?

இது எப்படியிருந்தாலும், வாக்குத்தத்ததேசத்தில் தேவாலயம் அல்லது தேவாலயக்கூடாரம் கட்டப்படுமுன், அத்தேசத்தின் எல்லைகளுக்குப் புறம்பே முற்பிதாக்கள் செய்த ஆராதனையைத் தேவன் அங்கீகரித்திருக்கிறாரென்பதே ஸ்தேவானுடைய நியாயதோரணையாம் (யாத்தி 3: 18. 7: 16 வனாந்தரத்தில்).

**577**. அப் 7: 8. "விருத்தசேதன உடன்படிக்கை" என்றால் அர்த்தமென்ன?

விருத்தசேதனமானது: முத்திரையும், அடையாளமும் அத்தாட்சியுமாயிருக்கிற உடன்படிக்கை என்றர்த்தம் (ஆதி 17: 11 அல்லது அடையாளம் ரோமர் 4: 11). வம்சபாரம்பரையையும் கானான்தேசத்தையும்பற்றிய வாக்குத்தத்தம், விருத்தசேதன ஏற்பாட்டுக்கு முந்திக் கொடுக்கப்பட்டது.

**578**. 7: 14. 75 பேருக்குக் கணக்குச்சொல்லு?

எப்பிராயீமுடைய மூன்று குமாரரையும், மனாசேயின் ஒரு குமாரனையும் ஒரு பேரனையும் கூட்டி 75 பேராம். (ஆதி 46: 27. யாத்தி 1: 5).

**579**. 7: 16ன் கருகலைத் தெளிவி?

ஆபிரகாமின் பேரை பிற்காலத்தில் நுழைத்தெழுதியிருக்கிறதென்று பேர்போன அநேக வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இதை ஒப்புக்கொண்டால் கருகலில்லை. ஆபிரகாமின் பேரைத்தான் ஸ்தேவான் சொன்னான் என்றால், 120வருஷங்களுக்கு முன்னும்பின்னும் நடந்த இரண்டு சம்பவங்களையும், அவனுடைய விரைவான சுருக்கப் பிரசங்கத்தில் அவன் சேர்த்துச்சொல்லுகிறதாக நினைக்கவேண்டும். எப்படியென்றால், எத்புத்திரரிடத்திலிருந்து, ஆபிரகாம் வாங்கினான் (ஆதி 23: 13—20). ஏமோரின் புத்திரரிடத்திலிருந்து, யாக்கோபு வாங்கினான் (ஆதி 33: 19. யோசு

24: 32). முதல்சம்பவத்தில், விற்றவன் பேரைச் சொல்லாமல் வாங்கின வன் பேரைச் சொல்லியிருக்கிறது. இரண்டாம் சம்பவத்தில், வாங்கினவன் பேரைச் சொல்லாமல், விற்றவன் பேரைச் சொல்லியிருக்கிறது.

**580.** அப். 7: 18. "வேறொரு ராஜா" என்றால் அர்த்தமென்ன?

வேறொரு வம்சத்தைச் சேர்ந்த ராஜா என்றர்த்தம். மேய்ப்பர் ராஜாக்கள் துரத்தப்பட்டபின் வந்த எகிப்திய சுதேச ராஜவம்ச வரிசையில், இவன் முதல்வன்.

**581.** அப் 7: 21. பார்வோனுடைய குமாரத்தி"யைப்பற்றி என்ன தெரியும்?

இவள் பேர், தெர்மியுத்திஸ் (Thermuthis) என்றும், பார்வோனுக்கு இவள் ஒரே மகளென்றும், இவள் கலியாணஞ்செய்து வெகுகாலமாகியும் இவளுக்குப் பிள்ளையில்லை என்றும் யோசேப்புஸ் சொல்லுகிறார்.

**582.** அப். 7: 22. எகிப்தியருடைய சாஸ்திரங்களெவை?

தத்துவசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், வானசாஸ்திரம், அளவுசாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களாம். நிலங்கள் நீல் (Nile) நதியின் ஜலப்பிரவாகத்தால் முங்கிப்போயிருக்கும்பொழுது, நில அளவுகளை அறியும்படி, அளவுசாஸ்திரம் அவசரமாயிருந்தது. எகிப்தியருடைய சாஸ்திரங்கள் பழமொழியாய்ப் பேசப்பட்டன (1 ராஜா 4: 30. ஏசா 19: 11, 12).

**583.** அப் 7: 23. "நாற்பது" வயதென்று ஸ்தேவானுக்கு எப்படித் தெரியும்?

இந்தக்காலத்தில் மோசே 40 வயதாயிருந்தானென்று வேதசரித்திரத்தில் சொல்லவில்லை (யாத்தி 2: 11). ஒரு நிச்சயமான பாரம்பரையை வைத்துச் சொல்லுகிறான். பார்வோனிடத்தில் மோசே முதல்முதல் பேசினபொழுது, அவனுக்கு 80 வயது (யாத்தி 7: 7). அவன் மரித்தபொழுது அவனுக்கு 120 வயது (உபா 34: 7). இப்படி அவனுடைய ஜீவகாலம் மூன்று சமபங்குகளாகிறது.

**584.** அப் 7: 30. "சீனாய்மலை"யைப்பற்றி என்ன தெரியும்?

யாத்தி 3: 1ல் "ஓரேப்" என்றிருக்கிறது. இந்த மலைத்தொடருக்கு சீனாய் என்றும், ஓரேப் என்றும் பேர் வழங்கியிருக்கிறது. ஏனென்றால் அந்த மலைத்தொடரில் சீனாய், ஓரேப் இந்த இரண்டும், சிகரங்களாயிருந்தன (உபா 4: 10. 33: 2).



**585.** அப். 7: 33. "பாதரட்சைகளைக் கழற்றிப்போடு". இந்தக் கட்டளையைப்பற்றி அறியவேண்டியதென்ன?

யாத்தி 3: 5ல் இந்தக் கட்டளை, தேவனுக்கும் முற்பிதாக்களுக்குமிருந்த சம்பந்தத்தைச் சொல்லுமுன்னதாக வருகிறது. கீழ்தேசத்தாருக்குள் இது வணக்கத்துக்கும், மரியாதைக்கும் அடையாளமான செய்கையாம் (யோசு 5: 15 உன் 5: 1) யூதஆசாரியர் ஆசரிப்புக்கூடாரத்திலும் தேவாலயத்திலும் பாதரட்சையில்லாமல் வெற்றுக்காலோடு போய் ஊழியஞ்செய்து வந்தார்கள். அவர்களுடைய பாதரட்சையில் ஏதாவது அசுத்தம் ஒட்டிக்கொண்டிருக்குமென்று நினைத்து அப்படிச் செய்தார்கள். பள்ளிவாசல்களில் பிரவேசிக்கும்பொழுது, மகமதியருக்குள்ளும் இப்படிப்பட்ட வழக்கமுண்டு.

**586.** அப் 7: 36ல் "எகிப்துதேசம்" என்பது எது?

விசேஷமாய் சோவான் (Zoan) வெளியைக் குறிக்கும் (சங் 78: 12). சோவான் என்பது, அதிபூர்வ பட்டணம். இதில் நியாயஸ்தலங்கள் கட்டப்பட்டு, ராஜாங்கம் நடந்துவந்தது (ஏசா 19: 11, 13). பிற்காலத்தில் இந்தப் பட்டணத்திற்கு, டானிஸ் (Tanis) என்று பேர் வழங்கினது. தேவனுடைய வல்லமையும் நன்மையும் வெளிப்பட்ட இடம், கானான்தேசமட்டுமல்ல என்பது கருத்து (கேள்வி 576).

**587.** அப் 7: 38. எப்படி "ஜீவவாக்கியங்கள்"?

ஜீவனுள்ள தேவன் அருளிய வாக்கியங்களானதினாலும், இவற்றின்படி செய்வது ஜீவனானதினாலும் (லேவி 18: 5. உபா 4: 40. 32: 47. எசே 20: 11. லூக் 10: 28. யோ 6: 63), இவைகள் மோசேயின் மரணத்தோடு நின்றுபோகாமல், அவன் மரணத்திற்குப்பின்னும் என்றும் நிலைக்கத்தக்கவைகளானதினாலுமே.

இவைகள் ஜீவனைக்கொடுக்கிறவைகளல்ல, ஆனால் ஆவிக்குரியவைகள் (ரோ 7: 14). ரோமர் 12: 1ல் "புத்தியுள்ள ஆராதனை", "ஜீவபலி" என்றிருக்கிறது. ஜெபபுஸ்தகத்தில் போராட்டச் சபைக்காகப் பண்ணுகிற ஜெபத்தில்: "சத்தியமும் ஜீவனுமுள்ள உமது வசனம்" என்றிருக்கிறது.

**588.** 7: 56. "வானங்கள் திறந்திருக்கிறதை". இதைப்பற்றி என்ன தெரியும்?

மத் 3: 16வாசி. இது மிகவும் உன்னதவானங்களைக் குறிக்கும். பரி. பவுல் மூன்றாம் வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் (2 கொரி 12 அதி). பரி. ஸ்தேவான் அதற்குமேலாக ஒருவரும் சேரக்கூடாத ஒளியைக்

கண்டான் (1 தீமோ 6: 16). மகிமை அடைந்திருக்கிற கிறிஸ்துவின திருச் சரீரத்தைக் காணச் சலாக்கியம்பெற்றுன்.

ஆவிக்குரிய உலகம் எப்பொழுதும் நமக்குக் கிட்டியிருக்கிறது. தேவனுக்குச் சித்தமாகும்பொழுதெல்லாம், அதின் காட்சி கிடைக்கும். அப்படியே எலிசாவின் வேலைக்காரனுக்கும் (2 ராஜா 6: 17); ஏசாயாவுக்கும் (6 அதி); எசேக்கியேலுக்கும், பத்மு தீவில் பரி.யோவானுக்கும் இந்தத் தரிசனம் கிடைத்தது. கிறிஸ்துநாதருடைய மகிமையடைந்தமனுஷத்தன்மையின் காட்சி, இப்பொழுது ஸ்தேவானுக்குக் கிடைத்தது. இது அவனுக்குக் கிடைக்கக்கூடிய எல்லா ஆதரவிலும் பெரிய ஆதரவாயிருந்தது. இதுவே அவனை இந்தச் சமயத்தில் தாங்கினது பரி.ஸ்தேவானுடைய திருநாள் சுருக்கஜெபத்தில், கிறிஸ்துநாதர் நின்றதையும் செய்ததையும் சொல்லியிருக்கிறது.

“மனுஷகுமாரன்” என்ற பேர், தானி 7: 13, 14லிருந்து வந்தது. புதியஏற்பாட்டில் இந்தப்பேர் 82 விசை வருகிறது. இந்த 82 விசையும் நம்முடைய ரக்ஷகர் தம்மைக்குறித்தே சொல்லுகிறார். கிறிஸ்துநாதர் பரத்துக்கேறினபின், மனுஷகுமாரன் என்ற பேர், இந்த ஒரு இடத்தில்தான் வருகிறது.

**589** அப் 7: 58. என் நகரத்துக்குப் புறம்பே தள்ளிக்” கல்லெறிந்தார்கள்?

பரிசுத்த நகரமானதால் அதில் ரத்தம் சிந்தப்படாதென்று அப்படிச் செய்தார்கள் (லேவி 24: 14). அப்படியிருக்க தேவாலயத்தில் நமது கர்த்தர்மேல் கல்லெறியும்படி (யோ 8: 59) என் பிரயத்தனப்பட்டார்களென்றால்; கர்த்தர் மேலிருந்த பகை அளவுக்கு மிஞ்சிப்போனதால் மூர்க்க வெறிகொண்டு இதை மறந்துவிட்டார்கள். நமது கர்த்தரை “நகரவாசலுக்குப் புறம்பே” (எபி 13: 12) சிலுவையில் அறைந்தார்கள். அப்படியே நாபோத்தை, யெஸ்ரயேலுக்கு வெளியே கொண்டுபோய்க் கல்லெறிந்தார்கள் (1 ராஜா 21: 13).

**590.** அப் 7: 59ல் கவனிக்கவேண்டியதென்ன?

(1) பரிசுத்தஆவியினலே நிறைந்த ஸ்தேவான் கிறிஸ்துநாதரைப் பார்த்து ஜெபித்தான். இது அவருடைய தேவத்தன்மைக்கு ஒரு அத்தாக்ஷியாம்.

(2) இயேசுவின் நாமத்தைச் சொல்லி ஜெபிக்கிறது கிறிஸ்தவர்களுக்கு லட்சணம் (அப் 9: 14, 21. 22: 16. 2: 21. 1 கொரி 1: 2),

(3) முதல் ரத்தச்சாட்சி தன் ரக்ஷகருடைய மாதிரியைப் பின்பற்றி (லூக் 23: 46), “என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்” என்று விண்ணப்பம்பண்ணினன். அப்படியே போலிக்கார்ப், பாசில், பெர்னுட், உஸ், கொலம்பஸ், லூதர், மிலாங்தன் ஆகிய கிறிஸ்தவர்கள் சங்கீதம் 35: 5ன் வார்த்தைகளை, தங்கள் மரணசமயத்தில் வழங்கியிருக்கிறார்கள்.



(4) கர்த்தருடைய மாதிரியைப்பின்பற்றி (லூக் 23: 34), ஸ்தேவான் தன்னைக் கல்லெறிந்தவர்களுக்காக வேண்டிக்கொண்டான். வீயன், லையன்ஸ் ஆகிய இந்தப் பட்டணங்களில், மரித்த ரத்தச்சாட்சிகள் தங்களை வாதித்தவர்களுக்காக, ஸ்தேவானுடைய வார்த்தைகளைச் சொல்லி ஜெபித்து நித்திரையடைந்தார்கள்.

(5) ஸ்தேவான் “நித்திரை அடைந்தான்”. அப்படியே 13: 36. யோ 11: 11. 1 கொரி 11: 30. 15: 6, 18, 51. 1 தெச 4: 13 இதினலே கிறிஸ்தவர்களுடைய சமாதிக்கு, சிமெட்ரி (Cemetery) என்று பேரிருக்கிறது. இந்த வார்த்தைக்கு, நித்திரைசெய்கிற இடம் (Sleeping place) என்றர்த்தம்.

**591.** பரி.ஸ்தேவான் கொலைசெய்யப்பட்ட காலத்தைப்பற்றித் தெரிந்ததைச் சொல்லு?

கி. பி. 37ம வருஷம் மேமீ துவக்கத்தில் வந்த பெந்தெகொஸ்தே பண்டிகைக்குச் சற்றுப்பின, பரி ஸ்தேவான் கொலைசெய்யப்பட்டதாகப் பெரும்பாலும் நினைக்கப்படுகிறது. அக்காலத்தில் ரோம அதிபதி ஒருவனவது யூதேயாவில் இல்லை. கி. பி. 36ஞு கடைசியில் பிலாத்து அதிபதி தள்ளப்பட்டுப்போனன். அவனுக்குப் பின்வந்த அதிபதி: தேயோப்புலு பிரதானஆசாரியனை காலம்வரையும் வந்து சேரவில்லை. அனேனஸ் என்பவனுடைய ஐந்து குமாரரில், தேயோப்புலு ஒருவனயிருந்தான் (கேள்வி 309). இவன் கி. பி. 37ம் ஞு பெந்தெகொஸ்தே பண்டிகையின் காலத்தையடுக்கப் பிரதானஆசாரியனனன். புதிய அதிபதியானவன்: ராஜதானியாகிய செசரியாவில் கொஞ்சக்காலம் பின்னிட்டபிற்பாடுதான், எருசலேமுக்குப் போவான்.

**592.** அப் 9: 2. எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தும்படி என் நிருபங்களை வாங்கவில்லை?

அப்படி வாங்கி துன்பப்படுத்தினல், ரோமசேனை தடுக்கும்.

எருசலேமுக்கு வடகிழக்கே 160 மைல் தூரத்தில், தமஸ்கு இருந்தது. இது அதிபூர்வ பட்டணம். பேயேல்பெக், பால்மைரா இந்தப் பட்டணங்கள் கட்டப்படுமுன்னமே அது கட்டப்பட்டு, இவை அழிந்த பின்னும் அது நிலைத்திருந்தது. சேமின் பேரனை ஊஸ் இதைக் கட்டினனென்று, யோசேப்புஸ் சொல்லுகிறார். ஆப்னு, பர்பார் என்ற நதிகளால் இது நீர்வளம் பொருந்தியது (2 ராஜா 5: 12). இது சீரியாவுக்குப்

பூர்வ ராஜதானி (2 சாமு 8: 6. ஏசா 7: 8). கி. மு. 64ல் பொம்பி என்பவன் இதை ரோமருக்குள்ளாக்கினான். ஆனால் பரி.பவுல் அரபியிலிருந்த காலத்தின் கடைசியில், அரேத்தாவின் கைக்குள்ளானது (2 கொரி 11: 32). ஏரோது அந்திப்பாவை, அரேத்தா ஜெயித்ததின்பேரில் இதைத் தன் கையாட்சைக்குள்ளாக்கிக்கொண்டான். இந்தக்காலத்தில் திபேரியு ராயன் மரித்த செய்தியைக் கேட்டு, சீரியதுரையான விற்றெல்லியஸ் என்பவன் தன் நாட்டைவிட்டு ரோமாபுரிக்குப்போயிருந்தான். தமஸ்குவில் 30 அல்லது 40 ஜெபஆலயங்களிருந்தன. இங்கே 40,000 யூதர்கள் குடியிருந்தார்கள் ஒருமணி நேரத்துக்குள்ளாக 10,000 பேர் கொலைசெய்யப்பட்டதாயும், நேரோ ராயன் காலத்தில் 20,000 யூதர் தங்கள் மனைவி பிள்ளைகளோடு கொலைசெய்யப்பட்டதாயும் யோசேப்புஸ் சொல்லுகிறார். ஆனால் சவுல் துன்பப்படுத்தின காலத்தில், தமஸ்குவின் அதிகாரிகள் யூதரோடு பட்சமாயிருந்திருக்கவேண்டும் (வா 14, 24). சனகிரீம் சங்கத்துக்குள்ளான யூதர், கிறிஸ்தவர்களைப் பிடித்துத் தண்டிக்கலாமென்று ரோமர் இடங்கொடுத் திருந்தார்கள்.

பரி.பவுல் குணப்பட்ட இடம் இன்னதென்று பாரம்பரை சொல்லுகிற இடத்துக்கு, வருஷந்தோறும் ஜனுவரியீ 25ம் தேதியில் கிறிஸ்தவர்கள் ஊர்க்கோலம்போய், அப்போஸ்தலர் நடபடியிலிருந்து பரி.பவுல் குணப்பட்ட சரித்திரத்தை வாசித்துவருகிறார்கள். அந்தச் சமயத்தில் அவர்களுக்குத் துணையாக காவலாளனா பாத்சா (Pacha) அனுப்புவார்.

**593.** பரி.பவுலின் சரித்திரக்குறிப்புகளைக் காலமுறைப்படி சொல்லு?

**கி. பி. 34—37.** 1. பரி.பவுல் குணப்பட்டது (அப் 9: 1—19). அரபிக்கும் (கலா 1: 17), தமஸ்குக்கும் போனது.

**39.** "அநேக நாட்களுக்கு" * (அப் 9: 23) அதாவது "3 வருஷத்துக்குப்பின்பு" (கலா 1: 8. 1 ராஜா 2: 38, 39), தமஸ்குவிலிருந்து தப்பி எருசலேமுக்குப்போய், பேதுருவையும் யாக்கோபையுங் கண்டு (கலா 1: 18, 19. அப் 9: 26, 27), கிரேக்கரோடு தர்க்கஞ்செய்தது. 15 நாள் அவ்விடத்தில் தங்கியிருக்கும்பொழுது, அந்த கிரேக்கர் அவனைக் கொல்ல எத்தனித்ததினாலே, சகோதரர் அவனைத் தர்சுப் பட்டணத்திற்கு அனுப்பிவிட்டது (அப் 9: 30).

---

* அரேத்தா என்ற பேர், பெட்ருமுதல் வடஅரபியை ஆண்ட ஒரு வம்சத்தரசர்களுக்குப் பட்டப்பேர். அவனுக்குக் கீழாக தமஸ்குவில் அதிகாரியாயிருந்த "சேனைத்தலைவன்" (Ethnarch) உடைய அநுமதியின்பேரில், பவுலைக் கொலைசெய்ய யூதர் பதிவிருந்தார்கள் (அப் 9: 23—25).



## No. 2635.

## CIRCULAR ON OBJECT LESSONS.

*To*

*The Managers of Girls' Schools.*

In schools in which Object Lessons form an Optional Subject not less than fifteen objects must be brought up in the Infant Standard, and these objects should be selected from the familiar animals, plants and substances of the neighbourhood in which the school is situated. Previously to the examination of the school a list of the object lessons given throughout the year should be submitted to the Inspectress.

2 In the first, second, and third standards, not less than twenty objects should be brought up, selected, as in the first standard, from the familiar animals, plants, and substances of the neighbourhood in which the school is situated. In each successive standard, however, a more advanced knowledge should be shown.

MADRAS,<br>
*7th August* 1886

E. CARR.<br>
*Ag Inspectress of Girls' Schools,*<br>
*Northern Southern and Central Ranges.*

பெண்பள்ளிக்கூட மானேஜர்கள் அறியவேண்டியது.

இஷ்டமானால் படிக்கத்தக்க பாடங்களில் பொருட்பாடங்கள் ஏற்பட்டிருக்கிற பள்ளிக்கூடங்களில் பாலகர் வகுப்புக்கு 15 பொருட்களுக்குக் குறையாமல் பாடஞ்சொல்லி வைத்திருக்கவேண்டியதுமல்லாமல், அந்தப் பொருட்களை சாதாரணமாய்த் தெரியக்கூடிய ஜீவஜெந்துக்களிலும், செடிகளிலும், பள்ளிக்கூடம் கட்டியிருக்கிற இடத்திற்குச் சமீபத்திலிருக்கிற வஸ்துக்களிலும் தெரிந்துகொள்ளவேண்டியது. பள்ளிக்கூடம் பரீக்ஷை ஆவதற்கு முந்தியே அந்த வருஷமுழுவதிலும் படிப்பித்திருக்கிற பொருட்பாடங்களுக்கு ஜாபிதா ஒன்று தயார்செய்து பெண்பள்ளிக்கூடங்களின் இன்ஸ்பெக்சடருக்கு அனுப்பிவைக்கவேண்டியது.

2. சாதாரணமாய்த் தெரியக்கூடிய ஜீவஜெந்துக்களிலும் செடிகளிலும், பள்ளிக்கூடம் கட்டியிருக்கிற இடத்திற்குச் சமீபத்திலிருக்கிற வஸ்துக்களிலும் 1வது ஸ்டாண்டார்டுக்குத் தெரிந்துகொள்வதுபோலவே 1ம், 2ம், 3ம் ஸ்டாண்டார்டுகளுக்கும் 20க்குக் குறையாமல் பொருட்களைத் தெரிந்து பாடஞ்சொல்லி வைக்கவேண்டும். அப்படிச் சொல்லி வைப்பதில் வகுப்பின் உயர்ச்சிக்குத்தக்கதாக அதிக அறிவுத்தேர்ச்சியும் இருக்கவேண்டும்.

---

## சமாசாரத்திரட்டு.

ஒரு சப்மாஜிஸ்திரேட்டும், குஸ்தி வித்தையும்—திருநெல்வேலியில் விருதுபட்டி சப்மாஜிஸ்திரேட்டு குஸ்தி வித்தையில் தேர்ந்த ராமநாடான் என்பவனையும், ஒரு மகமதியனையும் கைக்குத்துச் சண்டையில் தோல்வி கெலிப்பு அறியும்படி சண்டையிட உத்தரவுகொடுத்து, அக்காலத்தில் பிரஜைகளை வருவித்து, டிக்கட்டுகளை விற்று 100 ரூபாய் சேகரித்ததாகவும், அந்தச் சண்டையில் ராமநாடான் கெலிக்க, அவனுக்கு அத்தொகையைக் கொடாமல், தோல்வியடைந்த மகமதியனுக்கு வெகுமதிகொடுத்து, ராமநாடானை அடித்துத் துரத்தியதாகவும், தன் பொருட்டு ஸ்ரீவில்லிப்புத்தூர் சப்மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் ராமநாடான் பிராது செய்திருப்பதாகவும், சப்மாஜிஸ்திரேட்டு கோர்ட்டிலிருக்கும் கேசை யூரோப்பிய மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்பதாகவும், ராமநாடான் சென்னை ஐக்கோர்ட்டில் நீதியதிபர்முன் அப்பீல்செய்து கொண்டதாகவும் அறிகிறோம். நீதியதிபர்கள் வாதி வக்கீல் சொன்ன விஷயங்களையும் பப்ளிக் பிராசிக்யூடர் சொன்னவற்றையும் கவனித்து கேசை நிறுத்திவைக்க உத்தரவுகொடுத்தார்கள். சப்மாஜிஸ்திரேட்டு அவர்கள் ஏன் இச்சண்டை வேலையில் தலையிட்டுக்கொள்ளவேண்டும். சுதேசிகளிலே துரைத்தன அதிகாரம்பெற்றவர்கள் பரோபகாரமான காரியங்களைச் செய்யக்கூடாதா! மல்யுத்தக்காட்சியாலே என்ன மாட்சி!

அமேரிக்காதேசத்தில் வாண்டர் பில்ட் என்று ஒருவர் இருக்கிறார். அவர் சத்தியசீலர், சாந்தமுள்ளவர், அடக்கமுடையவர், அவரைவிட பணக்காரர் அத்தேசத்தில் ஒருவரும் இல்லை. இவருக்கு தொண்ணூறு கோடி பவுன் ஆஸ்தியிருக்கிறதாம் இவருக்கு ரண்டாவதாக மாக்கே என்ற ஒருவர் இருக்கிறார். இவருக்கு 45 கோடி பவுன் ஆஸ்தி. வேறு அமேரிக்கர் 11 பேர் சகோதரர்கள். அவர்களுக்கு 197 கோடி பவுன் ஆஸ்தியிருக்கிறது. ஷை பதினொரு பேர்களில் 5 பேர்கள் உத்தியோகத்திலிருக்கிறார்கள். இருவர் வியாபாரிகள், இருவர் வி...



குடித்தன கணக்கு வகையரூப் பார்க்கப்பட்டவர்கள். வட்டியைச் சேர்க்காமல் மிஸ்டர் வாண்டர்பில்டு தமது ஆஸ்தியை மினிட்டு ஒன்றுக்கு இரண்டு பவுன் விழுக்காடு செலவுசெய்துகொண்டு வந்தாலும் அவர் ஆஸ்தி செலவழிந்துபோக ஐஞ்னூற்றியெழுபது வருஷம் செல்லும். இப்பிரபுவுக்கு இரண்டு மனைவிகளும் ஒன்பது குமாரர்களும் இருக்கிறார்களாம். இவருடைய கோச்சுவண்டியின் விலை 91 லட்சம் ரூபாயாம். நமது தேசத்துக்கும் அமேரிக்காவுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். நவகோடி நாராயண செட்டியாரென்று நமது தேசத்தில் சொல்லக்கேட்டிருக்கிறோம் அமேரிக்காவில் அதைவிட எவ்வளவோ பெருத்த ஆஸ்திக்காரர்கள் இருக்கிறார்கள். முயற்சியும் வியாபாரமுமல்லவா இவ்வளவு பெருத்த தனத்துக்கு ஆதாரமாயிருக்கிறது. நமது தேசத்திலுள்ள இந்துக்களில் யாருக்காவது கையில் ஆயிரம் ரூபாய் இருந்துவிட்டால் சம்பன்னனென்றும், பிரபுவென்றும், பிரமாதப்படுகிறதுமல்லாமல் கைவீச்சென்ன மெய்ப்பூச்சென்ன வாய்ப்பேச்சென்ன சொல்லவேண்டுவதில்லை. அதிலும் மாதவாரி ஐந்து ரூபாய் சம்பளம் ஏற்பட்டுவிட்டால் கட்குடித்த மட்கடம்போல தள்ளித்துடித்து கறுப்புச்சட்டையும், கில்ட்டுக் கடிகாரமும், சோட்டாத்தடியும், மொட்டைக் குல்லாவும், கண்ணாடிக்கல் கடுக்கனும் தடபிடலாய்ப் போகிறது. கூப்பிட்டால் காது கேட்குமோ? முதுகெலும்பு இரும்புத்தடிபோல் வளையாது, கண்தெரியாது.

வருகிற மாரிகாலத்தில் சீமையிலிருந்து பேர்போன அனேக இராஜதந்திர நிபுணர்கள் இந்தியாவுக்கு விஜயம்செய்ய வருகிறார்கள். அவர்களில் மிஸ்டர் கிளாட்ஸ்தன் மந்திராலோசனைச் சபையில் பரதேச விஷயங்களுக்கு மந்திரியாகவிருந்த ரோஸ்பரி பிரபு அடுத்த மாதம் முதல்வாரத்தில் லண்டனைவிட்டு பிரயாணமாகிறார். இன்னும் ஹார்டிங்டன் பிரபு முதலான அனேக பார்லிமெண்டு மெம்பர்களும வருவார்கள். அன்றியும் இப்போது இந்தியா உதவிமந்திரியாக இருக்கும் ஸர். ஜெ. இ. கார்ஸ்ட் அவர்களும் இம்மாரிகாலத்தில் இத்தேசத்துக்கு விஜயம்செய்ய வருவாரென்று சொல்லப்படுகிறது. இவர்கள் இத்தேசத்துக்கு வந்து இத்தேச விஷயங்களை நேரில் அறிந்துகொள்வதால் இந்தியாவுக்குப் பின்னுக்கு அதிக நன்மை விளையுமென்று நம்புகிறோம்.

(தி.—னி. அக்டோபர்மீ 1௳.)

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | ௧௭ | தேவனுடைய பெட்டியை நதிருப நம்மிடத்துக்குக் கொண்டுவரு |
| ச | 2 | ௧௮ | தேவனை உணக்கு முன்னே புறப்பட்டிருப்பார். 1 நாளா. 14:15 |
| ஞா | 3 | ௧௯ | உங்களை.. பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள். 15:12. |
| தி | 4 | ௨0 | கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக 16:10. |
| செ | 5 | ௨௧ | கர்த்தாவே...தேவரீருக்கு நிகரானவர் இல்லை 17:20. (தான். 14: |
| பு | 6 | ௨௨ | தாவீது தன்னுடைய ஜனத்திற்கெல்லாம் நியாயமும் நீதியும்செய் |
| வி | 7 | ௨௩ | அவர்கள் தாவீதோடே சமாதானம் பண்ணி அவனைச் சேவித்தார் |
| வெ | 8 | ௨௪ | யோவாப் ரப்பாவை அடித்துச் சங்கரித்தான் 20:1. (கள். 19:19. |
| ச | 9 | ௨௫ | நான் கர்த்தருடைய கையிலே விழுவேனாக 21:13. (22:19. |
| ஞா | 10 | ௨௬ | உங்கள் இருதயத்தை...கர்த்தரைத் தேடுகிறதற்கு நேராக்குங் |
| தி | 11 | ௨௭ | கர்த்தர் தமது ஜனத்தை இளைப்பாறியிருக்கப்பண்ணினார். 2 :25 |
| செ | 12 | ௨௮ | எட்டாவது (சீட்டு) அபியாவின் பேர் வழிக்கு (விழுந்தது.) 24:10 |
| பு | 13 | ௨௯ | சிலரை...தேவாலய...ஊழியத்திற்கென்று பிரித்துவைத்தார்கள். |
| வி | 14 | ௩0 | ஆலயத்துப்பொக்கிஷங்களை விசாரிக்கிறவர்களாயிருந்தார்கள்.26 |
| வெ | 15 | ௩௧ | அர்கியனை ஊஷாயி ராஜாவின் தோழனாயிருந்தான். 27:33. |
| ச | 16 | ௧ | அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார். 28:20. |
| ஞா | 17 | ௨ | ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது. 29:12 |
| தி | 18 | ௩ | நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார். 2 நாளா. 1:7. |
| செ | 19 | ௪ | ஞானமுள்ள குமாரனை...கட்டளையிட்டார். 2:12. |
| பு | 20 | ௫ | கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்துவக்கினான். 3:1. |
| வி | 21 | ௬ | வெண்கலக் கடல்தொட்டியையும் வார்ப்பித்தான். 4:2. |
| வெ | 22 | ௭ | தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. 5:13. (6:18 |
| ச | 23 | ௮ | தேவன் மெய்யாக மனுஷரோடே பூமியிலே வாசம்பண்ணுவாரோ |
| ஞா | 24 | ௯ | என் நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றைக்கும் இருக்கும். 7:16 |
| தி | 25 | ௧0 | கர்த்தருடைய ஆலயம் கட்டித்தீர்ந்தது. 8:16. (ள்கள் 9:7 |
| செ | 26 | ௧௧ | உம்முடைய ஞானத்தைக் கேட்கிற... ஊழியக்காரரும் பாக்கியவா |
| பு | 27 | ௧௨ | தாவீதோடே எங்களுக்குப் பங்கேது? 10:16. (கள். 11:16 |
| வி | 28 | ௧௩ | கர்த்தரைத் தேடுகிறதற்குத் தங்கள் இருதயத்தை நேராக்கினவர் |
| வெ | 29 | ௧௪ | அவர்களை அழிக்கமாட்டேன் 12:7. (12 |
| ச | 30 | ௧௫ | தேவன் எங்கள் சேனாதிபதியாய் எங்களோடேகூட இருக்கிறார். 13: |
| ஞா | 31 | ௧௬ | கர்த்தாவே நீர் எங்கள் தேவன். 14:11. |

## விசேஷ நாட்கள்.

8. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 15—ம் ஞாயிறு
10. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 16—ம் ஞாயிறு.
13. பௌர்ணமி.
17. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 17—ம் ஞாயிறு.
18. பரி. லூக்கா சுவிசேஷகன் திருநாள்.
24 திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 18—ம் ஞாயிறு.
27. அமாவாசை.
28 பரி அப். சீமோன், யூதா திருநாள்.
31. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 19—ம் ஞாயிறு


# நற்போதகம்.

கக. நவம்பர்மீ. ௲௮௱௯௰.


## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

கி. பி. 33-37 அப் III அதிகாரமுதல், VIII அதிகாரம்வரையுமுள்ள சங்கதிகள் நடந்தன.

36 ஏழு டீக்கன்மார் நியமிக்கப்பட்டார்கள். 36ஆம் கடைசியில், பிலாத்து தள்ளப்பட்டான்.

37 பெந்தெகொஸ்தே பண்டிகைக்குச் சற்றுப்பின், அதாவது கி. பி. 37ன் மேமீ துவக்கத்தில், பரி.ஸ்தேவான் இரத்தச்சாக்ஷியானான். இக்காலத்தில் ரோம அதிபதியில்லை (கேள்வி 591 வாசி).

37 பெந்தெகொஸ்தே பண்டிகைக்குச் சிலகாலத்துக்குப் பின், பரி.பவுல் குணப்பட்டார் (அப் 9 அதி).

40—44 சபைகள் வளர்ந்தேறின. பரி.பவுல் தர்சு பட்டணத்தைப் பிரதான ஸ்தலமாக்கிகொண்டு சீரியாவுக்கும், சிலிஷியாவுக்கும் போய்ப் பிரசங்கித்தது.

43 தர்சு பட்டணத்திலிருந்து அந்தியோகியா பட்டணத்திற்குப் பவுலை பர்னபா கூட்டிக்கொண்டு வந்தது (அப் 11: 26). அந்தியோகியாவில் 1ஆம் தங்கினது (அப் 11 26) இங்கேதான் சீஷர் பரியாசமாக முதல்முதல் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டார்கள். இதற்கு 20ஆம் துக்குப்பின் அப் 26: 28.—பிருபத்தில் 1 பேது 4: 1( இந்த மூன்றே இடங்களில் மாத்திரம் இந்தப் பேர் வருகிறது.

43, 44 அகபு சொன்ன தீர்க்கதரிசனத்தின்படி (அப் 11: 27—30) கிலவுதியுவின் 4ம் ஞு நேரிட்ட பஞ்சத்தில், யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக, அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர்கள், பவுல் பர்னபா என்பவர்களிடத்தில், தர்மப்பணத்தைக் கொடுத்தனுப்பினது. (அடியபினி Adiabene நாட்டு இராஜாத்தியாகிய ஹெலினள் Helena எகிப்திலிருந்து தானிய தவசங்களையும், சீப்புரு தீவிலிருந்து அத்திப்பழங்களையும் யூதேயாவுக்கு அநுப்பி, வெகுவாய் இந்தப் பஞ்சத்தை நிவர்த்திசெய்தாள்).–பவுலும் பர்னபாவும், யோவான் மாற்குவோடு அந்தியோகியாவுக்குத் திரும்பினது.

45—47 பவுலும் பர்னபாவும் அந்தியோகியா பட்டணத்தில் தேவஊழியத்திற்கென்று நியமிக்கப்பட்டது.

45—47 II. பவுல் அப்போஸ்தலன் பிரசங்கிக்கப்போன முதலாம் பிரயாணம் (அப் 13ம் 14ம் அதி).

சீப்புரு தீவுக்குப்போனது. ரோம அதிபதியாகிய செர்கியுபவுலுக்குக் கனமாக, அவ்விடத்தில் சவுல் என்ற பேரை பவுல் என்று மாற்றிக்கொண்டது(விவேகமுள்ள மனுஷனாகிய இந்த அதிபதி, பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து, தேவவசனத்தைக் கேட்க விரும்பி அப் 13: 7, கடைசியாய்க் குணப்பட்டான் வா 12. வா 13ல் தான் சவுல் என்ற பேர், முதல்முதல் பவுல் என்று வருகிறது). சீப்புரு தீவிலிருந்து, பம்பிலியா நாட்டிலுள்ள பெர்கே பட்டணத்திற்கும், (பிசீதியா நாட்டிலுள்ள) அந்தியோகியாவுக்கும் போனது. அந்தியோகியா பட்டணத்திலுள்ள ஜெபஆலயங்களில் பவுலும் பர்னபாவும் பிரசங்கித்ததும், அவ்விடத்தைவிட்டு இக்கோனியாவுக்கும், லீஸ்திராவுக்கும், லிக்கவோனியாவிலுள்ள தெர்பை பட்டணத்திற்கும்போய், திரும்பி பம்பிலியா வழியாய் அந்தியோகியாவுக்கு வந்து, அவ்விடத்தில் சீஷர்களோடு அநேகநாள் தரித்திருந்தது (அப் 14: 28).

49 குணப்பட்ட புறஜாதியார், சடங்குப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்று, குணப்பட்ட பரிசேயர் சொன்னதைப்பற்றி, அந்தியோகியாவில் தர்க்கமுண்டானது(அப் 15:1, 2). இதைத் தீர்க்கும்படி, பவுலும் பர்னபாவும் மற்றுஞ் சிலரும், அந்தியோகியாவிலிருந்து



எருசலேமிலிருக்கிற "அப்போஸ்தலன்மாரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும்" அநுப்பப்பட்டது(அப் 15: 2, 3).

49—50 எருசலேமில் சங்கம் கூடினது (அப் 15: 6—29). பவுலும் பர்னபாவும், அந்தியோகியாவுக்குத் திரும்பி, இங்கே சிலகாலம் தங்கினது (அப் 15: 35, 36). விருத்தசேதனத்தையிட்டு வந்த தர்க்கத்தில், பேதுருவைப் பவுல் கண்டித்தது அந்தியோகியாவில்தான் (கலா 2: 11). பவுலுக்கும் பர்னபாவுக்கும் மனஸ்தாபமுண்டாகி, ஒருவரைவிட்டொருவர் பிரிந்தது(அப் 15: 39).

50 அல்லது III. பரி.பவுல் பிரசங்கிக்கப்போன 2ம் பிரயா
51—52 ணம்.

அந்தியோகியாவிலிருந்து கொரிந்துக்குப் போனது.

(பவுல் சீலாவையும் அப் 15: 40, லீஸ்திராவில் தீமோத்தேயுவையும் அப் 16: 1 கூட்டிக்கொண்டு),

(1) பிரிகியா கலாத்தியா வழியாய், மிசியாவிலுள்ள துரோவா பட்டணத்திற்குப்போனது (அப் 16: 6, 8).

(2) பவுலும் சீலாவும் லூக்காவும் (பவுல் ஒரு தரிசனத்தினல் அழைக்கப்பட்டான்). மக்கெதோனியாவுக்கும், பிலிப்பிக்கும் (அப் 16: 12), (பிலிப்பியிலிருந்து தென்மேற்கே 100 மயிலுக்கும், அப்பலோனியாவிலிருந்து 37 மயிலுக்கும் தூரமான) தெசலோனிக்கேக்கும் (அப் 17: 1), பெரோயாவுக்கும் (அப் 17: 10), அத்தே
52 னேக்கும் (அப் 17: 15), கொரிந்துக்கும்போனது. கொ
ரிந்துவில் பவுல் ஒரு வருஷமும் ஆறுமாசமும் தங்கினது(அப் 18: 1, 11).

54 வசந்த காலத்தில் பவுல் (கொரிந்துவுக்குச் சமீபமான) கெங்கிரேயாவிலிருந்து எபேசுக்குக் கப்பலேறினது.

எபேசுவிலிருந்து பண்டிகைக்காக எருசலேமுக்குக் கப்பலேறிப்போனது. இந்தப் பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை என்று தோன்றும்(அப் 18: 18, 19, 22). திரும்பவும் அந்தியோகியாவுக்குப்போய் சிலகாலம் தங்கினது (அப் 18: 23).

54—57 IV. பரி.பவுல் பிரசங்கிக்கப்போன 3ம் பிரயாணம்.

பவுல் மறுபடியும் கலாத்தியாவுக்கும் பிரிகியாவுக்கும்போய், உத்தேசம் 3ஸ்க்காலமாய் சபைகளைத் திடப்படுத்திக்கொண்டு வந்தான். அப் 18: 23 இங்கேதான்

2 கொரி 11: 23-33 சொல்லிய பாடுகளில் சிலவற்றைச் சகித்ததாகத் தோன்றும். இவ்விடத்திலிருந்து எபேசுக்குப்போய், 3௵ தங்கினான் (அப் 20: 31). ஜெபஆலயத்தில் 3௴க்காலமாய்ப் பிரசங்கித்து வந்ததும் (அப் 19: 8), திறன்னு என்பவனுடைய வித்தியாசாலையில் 2௵க்காலமாய்ச் சம்பாஷித்துக்கொண்டு வந்ததும், இந்த மூன்று வருஷத்திற்குள் அடக்கம். அவ்விடத்தைவிட்டு மே௴ துவக்கத்தில் மக்கெதோனியாவுக்குப்போய் (அப் 20: 1) நவம்பர்௴வரையும் அவ்விடத்தில் பின்னிட்டதாகத் தோன்றும் (ரோ 15 :19. 2 கொரி 10: 14—16). இவ்விடத்தைவிட்டு, கிரேக்கையின் தென்பாகம் அல்லது அகாயாவுக்குப்போய், 3 மாசம் தங்கினது (அப் 20: 3). சீரியாவுக்குப்போக நினைத்திருந்த பயணத்தை, யூதருடைய சர்ப்பனைக்கு விலகும்படி நிறுத்தி, 58ன் துவக்கத்தில், மக்கெதோனியாவுக்குத் திரும்பினான்.

58 எருசலேமில் வறுமைப்பட்டிருந்த பரிசுத்தவான்களுக்காக, ஆசியாவிலும் கிரேக்கு நாட்டிலும் சேகரமான தர்மங்களையும் காணிக்கைகளையும் வாங்கிக்கொண்டு, கொரிந்துவைவிட்டுப் புறப்பட்டு (ரோ 15: 25, 26 அப் 19: 21. 20: 3), மக்கெதோனியா மார்க்கமாய்ப்போய் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை (Easter) ஆசரிக்க பிலிப்பிப்பட்டணத்தில் தங்கினது (அப் 20: 6). இவ்விடத்தில் லூக்கா மறுபடியும் வந்து சேர்ந்துகொண்டான் (அப் 20: 5). பரி பவுல் பிரசங்கிக்கப்போன பிரயாணங்கள் இத்தோடு முடிகின்றன. இதின்பின் வருகிற பிரயாணத்தின் நோக்கத்தை அப் 20: 22ல் காண்க.

58 மார்ச்சு௴ கடைசிமுதல் மே௴ மத்திவரையும் பிலிப்பியிலிருந்து, எருசலேமுக்குப் பிரயாணம்பண்ணினது.

பிலிப்பியிலிருந்து மிசியாவிலுள்ள துரோவாவுக்குப் போய் (அப் 20: 6), மிலேத்துவில் இறங்கி, எபேசு சபையின் மூப்பரை வரவழைத்து, அவர்களிடத்தில் வழியனுப்பிக்கொண்டு (அப் 20: 17), தீரு பட்டணத்திற்கு வந்து (அப் 21: 3), செசரியாவில் இறங்கி (அப் 21: 8), அநேக வருஷங்களுக்குப்பின் (அப் 24: 17), பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்க எருசலேமுக்கு வந்து சேர்ந்தது (அப் 20: 16. 21: 17).



எருசலேம் தேவாலயத்தில் ஜனங்கள் அவனைப் பிடித்து (அப் 21: 28), செசரியா பட்டணத்திற்குக் கொண்டுபோனது (அப் 23: 23—33).

58—60 V. பவுல் செசரியாவில் காவலிலிருந்தது முதலான விபரம். அவன் 2 வருஷம் செசரியாவில் காவலிலிருந்தான் (அப் 24: 27).

60 கடல்மார்க்கமாய்ப் பவுலை ரோமாபுரிக்கு பெஸ்து அனுப்பினதும் (அப் 27: 1), மழைகாலத்தில் மால்ற்று தீவில் பவுல் தங்கினதும் (அப் 28: 11).

61 வசந்த காலத்தில், பவுல் ரோமாபுரிக்குப்போனதும், அங்கே முதல்விசை காவலில் வைக்கப்பட்டதும்.

62, 63 பவுல் ரோமாபுரியிலிருந்தது. இங்கேயிருந்து, எபேசியருக்கும், கொலோசேயருக்கும், பிலெமோனுக்கும், பிலிப்பியருக்கும் நிருபங்களை எழுதினது. (பிலெமோனுக்கெழுதிய நிருபத்தில், பவுல் தம்மைக்குறித்து, முதிர்வயதுள்ளவனென்றெழுதுகிறார் (பிலெ 8) பவுல் "2 வருஷம் முழுதும்" ரோமாபுரியில் காவலிலிருந்தது (அப் 28: 30). நடபடி ஆகமத்திலடங்கிய சரித்திரம் 63ம் ௵ மார்ச்சு௴த்தோடே முடிகிறது. ஆகையால் நடபடி ஆகமம் 30௵த்துக்கு அதிகமான காலச்சரித்திரத்தைச் சொல்லியது. நடபடி ஆகமச் சரித்திரம் முடிந்து ஏகதேசம் 18௴த்துப்பின், நேரோ இராயன் துன்பம், கி. பி. 64௵ ஜூலை௴ 19௳ ஆரம்பித்தது.

(அடியிற் கண்ட சங்கதிகள்: பிலெமோன், தீமோத்தேயு, தீத்து ஆகிய இவர்களுக்கு எழுதிய நிருபங்களிலிருந்து எடுத்தெழுதியிருக்கின்றன. வருஷங்கள் திட்டமாய்த் தெரியாது).

63—66 ரோமாபுரியில் பவுல் முதல்விசை விடுதலையானது. இவ்விடத்திலிருந்து ஸ்பானியாவுக்குப்போனாரென்று தோன்றும்.

தாம் கொடுத்திருந்த வாக்குப்படி (பிலி 2: 24), பிலிப்பியைப் பார்க்கும்படி, மக்கெதோனியாவுக்கும் போனாரென்று தோன்றுகிறது. அவர் தீத்தவை கிரேத்தாவுக்குக் கண்காணியாகவும், தீமோத்தேயுவை எபேசுக்குக் கண்காணியாகவும் நியமித்து விட்டுப்போனது (1 தீமோ 1: 3). எப்பிரசி (Epirus)லுள்ள நிக்கொப்போலியில்,

மாரிகாலத்தைப் பின்னிட்டது (தீத் 3: 12). கொரிந்துவுக்குப்போனதொன்றும் தோன்றும். அவ்விடத்துச் சபையை எரஸ்துவின் வசத்தில் ஒப்புவித்து, ஆசியாவுக்கு வந்து, மிலேத்துவில் துரோப்பீமுவை வியாதிப்பட்டவனாக விட்டுப்போனது (2 தீமோ 4: 20). பவுல் பிடிபட்டது. அவர் பிடிபட்டது பெரும்பாலும் நினைக்கப்படுகிறபடி, மிலேத்துவுக்குச் சமீபத்திலென்று தோன்றும். திரும்பவும் ரோமாபுரிக்குக் கைதியாக அநுப்பப்பட்டார். வழியிலே துரோவா பட்டணத்தில் இறங்கி, அவ்விடத்தில் தன் மேலங்கியையும், புஸ்தகங்களையும் தோல்சுருள்களையும் கார்ப்பு வசத்தில் விட்டுப்போனது (2 தீமோ 4: 13).

66 நேரோ இராயன் ஆண்ட 12ஆம் அதாவது கி. பி. 65ன் அக்ற்றோபர்மீத்திற்கும் 66ன் அக்ற்றோபர்மீத்திற்கும் ஊடே, பரி.பவுலும், பரி பேதுருவும் ரோமாபுரியில் இரத்தச்சாக்ஷியாக மரித்தார்கள்.

**594**. பரி பவுல் எழுதின நிருபங்களின் விசேஷக் குறிப்புகளைக் கால முறைப்படி சொல்லு?

நிருபங்கள் கி. பி. — எவ்விடத்திலிருந்து என்ன சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டன.

52, 53 தெசலோனிக்கேயருக்கெழுதின 1ம் 2ம் நிருபங்கள். — கொரிந்துவிலிருந்து எழுதப்பட்டன. மக்கெதோனிக்குத் தலைநகரியான தெசலோனிக்கே பட்டணத்தில் தாம் சற்றுமுன் ஸ்தாபித்திருந்த சபைக்கு 2 நிருபங்களை எழுதினார் (தெசலோனிக்கேயின் பழய பேர், தெர்மா Therma. மகா அலெக்சந்தருடைய ஒரு சகோதரியின் பேரால் தெசலோனிக்கே என்ற பேர் வந்தது. இவள் தகப்பன் தெசலி நாட்டில் அடைந்த ஒரு ஜெயதினத்தில், இவள் பிறந்தாள். இந்தப் பட்டணத்தை மறுபடி கட்டின Cassander கசந்தருக்கு இவள் கலியாணஞ்செய்யப்பட்டாள். தற்காலத்தில் அந்நகரத்தின் குடிகள், 78000. இதில் ஏகதேசம் பாதிப்பேர் யூதர்).

53 கலாத்தியர் — தன் அப்போஸ்தலப் பட்டத்தைப்பற்றிப் பொறாமைகொண்ட சத்துராதிகளை அப்போஸ்தலன் எதிர்க்கிறார். 1ம் 2ம் அதிகாரங்களில், தாம் அப்போஸ்தலனாக



அழைக்கப்பட்டதைப்பற்றிப் பேசி, தமது அப்போஸ்தல அதிகாரத்தை ஸ்தாபிக்கிறார்.

57 1 கொரிந்தியர் — 57ன் துவக்கத்தில், இதை எபேசுவிலிருந்து எழுதினார்.

2 கொரிந்தியர் — 57ன் கடைசியில், மக்கெதோனியாவிலிருந்து எழுதினார்.

பரி.பவுல் கொரிந்துவிலிருந்து எபேசுக்குப்போயிருந்தார். சற்றுமுன் தாம் கொரிந்துவில் ஸ்தாபித்த சபைக்கு இப்பொழுது 2 நிருபங்களையும் எழுதினார்.

58 ரோமர் — கொரிந்துவிலிருந்து அல்லது கொரிந்துக்குக் கீழ் துறைமுகமாகிய கெங்கிரேயாவிலிருந்து இந்த நிருபத்தை எழுதினார்.—மக்கெதோனியா (தெசலோனிக்கே தலைநகரி) அகாயா (கொரிந்து தலைநகரி) என்ற இரண்டு பெரிய ரோம நாடுகளின் தலைநகரிகளான 2 பெரிய பட்டணங்களுக்கு எழுதினபின், உலகத்தின் தலைநகரிக்கு எழுத நினைத்து, ரோமாபுரிச் சபைக்கு ஒரு நிருபத்தை எழுதினார்.

62ம் 63ம் ஆம் எபேசியர், கொலொசெயர், பிலெமோன், பிலிப்பியர். பரி.பவுல் காவலிலிருந்தபோது இந்த நிருபங்களை எழுதினார் என்பதற்கு அத்தாட்சியாக எபே 3: 1. 4: 1. கொலோ 4: 3, 10. பிலே 9. பிலி 1: 13 பார். — "ஏசுகிறிஸ்துவின் நிமித்தம் கட்டுண்டவராக" அப்போஸ்தலன் ரோமாபுரியில் முதல்விசை காவலிலிருந்தபொழுது, இந்த நிருபங்களையெல்லாம் எழுதினார். கீழ்திசையிலிருந்த தன் சிநேகிதர்களுக்கு இவைகளை எழுதினார்.

(1) ஆசியாவின் தலைநகரியான எபேசு சபைக்கு.

(2) பிரிகியாவிலுள்ள கொலோசெக்கு.

(3) கொலோசெயில் தனக்குச் சிநேகிதனாயிருந்த பிலேமோனுக்கு, ஷை நிருபத்தோடுகூட ஒரு நிருபம்.

(4) ரோமரால் குடியேற்றப்பட்டிருந்த பிலிப்பிக்கு.

63 எபிரேயர் — பரி.பவுல் ரோமாபுரியில் காவலிலிருந்து முதல்விசை விடுதலையான பிற்பாடு இதை எழுதினார்.

65, 66 1 தீமோத்தேயு, தீத்து, 2 தீமோத்தேயு. — விசுவாசத்தில் தனக்குப் பிரியமான பிள்ளைகளாயிருந்த தீமோத்தேயுக்கும் தீத்துக்கும், பரி.பவுல் கடைசியாய் எழுதின புத்திமதிகள் இந்த நிருபங்களிலடங்கியிருக்கின்றன. பரி.பவுல் ரோமாபுரியில் 2ம் விசை காவலிலிருந்தபொழுது, கி. பி. 66ல் தாம் இரத்தச்சாட்சியாக மரிப்பதற்குச் சற்றுமுன், தீமோத்தேயுக்கு இரண்டாம் நிருபத்தை எழுதினார் 2 தீமோ 1: 8 பார்.

**595.** விசுவாசப்பிரமாணத்தில் எந்தக் கருத்தின்படி, தேவனைப் பிதா என்று சொல்லியிருக்கிறது?

மனுஷருக்குத் தேவன் பிதாவாயிருக்கிற பொதுக் கருத்தின்படியல்ல, இயேசுகிறிஸ்துவைத் தேவன் அநாதியாய் ஜெனிப்பித்ததினாலே, இயேசுகிறிஸ்துவுக்குப் பிதாவாயிருக்கிற சிறந்த கருத்தின்படி, அவரைப் பிதா என்று சொல்லியிருக்கிறதென்றறிக (கேள்வி 479 வாசி).

**596** கீழ்திசைச் சபைக்கும், மேல்திசைச் சபைக்கும் உண்டான பிரிவினைக்குக் காரணமென்ன?

பிதாவிலிருந்தும், குமாரனிலிருந்தும் பரிசுத்தாவியானவர் புறப்படுகிறவரென்று, லத்தீன் சபைப்பிதாக்கள் ஆதிகாலமுதல் போதித்துவந்தார்கள். கிரேக் சபைப்பிதாக்களோ: பரிசுத்தாவியானவர், "பிதாவிலிருந்து புறப்படுகிறவருமாய், குமாரனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவருமாய்" என்று சொன்னார்கள். குமாரனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவர் என்ற வார்த்தைகளுக்கு, குமாரனிடத்திலிருந்து பரிசுத்தாவியானவர் தமது தன்மையைப் பெற்றுக்கொண்டார் என்று லத்தீன சபையார் அர்த்தம்பண்ணினார்கள். "புறப்படுகிறவர்" என்ற வார்த்தைக்கும் அதே அர்த்தம்சொன்னார்கள்.

தியாடரட் (Theoderet) என்பவர், சிறில் (Cyril) என்பவருக்கு விரோதமாய் எழுதினதில்: குமாரனிடத்திலிருந்து பரிசுத்தாவியானவர் தமது தன்மையைப் பெற்றுக்கொள்ளவில்லையென்று சொன்னார். ஆனால் தியாடரட் எழுதினது நிராகரிக்கப்பட்டது. பிற்பாடு சில கிரேக்கர்: குமாரனிலிருந்து பரிசுத்தாவியானவர் புறப்படவில்லை என்று சொன்னார்கள். இதைக்குறித்து பல தர்க்கங்களுண்டானபின், கொன்ஸ்தந்திநோபுரி விசுவாசப்பிரமாணத்தில்: "குமாரனிலிருந்தும் புறப்படுகிறவருமாய்" என்ற வார்த்தைகளைக் கூட்டினார்கள். இதை எடுத்துபோடவேணுமென்று, கிரேக் சபையார் வாதாடினபோது, லத்தீன் சபையார் மறுத்ததினாலே, இரண்டு சபைகளுக்கும் பிரிவினையுண்டாயிற்று.

நீசெயா பட்டணத்தில கூடின பொதுவான சங்கத்தார் எழுதின விசுவாசப்பிரமாணத்தில்: "பரிசுத்தஆவியையும் விசுவாசிக்கிறேன்" என்ற வார்த்தைகளை மட்டும் எழுதியிருந்தது. பரிசுத்தாவியானவர் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பர்சன் என்று சொன்ன பாஷண்டனான மக்கேதோனியுவின் கொள்கையைக் கண்டிக்க, கொன்ஸ்தந்திநோபுரியில் கூடின பொதுவான சங்கத்தார்: "கர்த்தருமாய், ஜீவனைக்கொடுக்கிறவருமாய், பிதாவிலிருந்து புறப்படுகிறவருமாய்" என்ற சத்தியங்களைக் கூட்டி எழுதினார்கள். "குமாரனிலிருந்தும்" என்ற வார்த்தையை, பிற்பாடு லத்தீன் சபையார் எழுதிக் கூட்டினார்கள் (5 கேள்வி சேர்த்து வாசி).

---



# THE SECOND COMING OF CHRIST.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

### யூதர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

(தொடர்ச்சி.)

#### வாக்குத்தத்தத்தின் புத்திரர்.

இஸ்ரவேலர் வாக்குத்தத்தத்தின் புத்திரராயிருக்கிறதுமல்லாமல் தேவ ஜாதியாராயுமிருக்கிறார்கள். ஏசா. 51: 4. என் ஜாதியாரே எனக்குச் செவிகொடுங்கள் என்கிறார். முந்தின பாகத்தில் தேவனுடைய ஜனங்கள் என்று அநேக வேதவாக்கியங்களை எடுத்துக் காட்டியிருக்கிறேன.

II. யூதர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலிருந்து பல இடங்களுக்குச் சிதறடிக்கப்பட்டதற்குக் காரணம் (1) தேவகட்டளையை மீறினது ஒரு காரணம். தேவன் இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து நீங்கள் எனக்குச் செவிகொடாமலும் என் கற்பனைகள்எல்லாவற்றின்படியும் செய்யாமலும் என உடன்படிக்கையை மீறிப்போடுவீர்களாகில் உங்கள் தேசத்தைப் பாழாக்குகிற ஜாதிகளுக்குள்ளே உங்களைச் சிதறடித்து உங்களை நிர்மூலமாக்குவேன் என்கிறார். லேவி. 26: 14—39.

மோசே இஸ்ரவேலரைப் பார்த்து நீங்கள் தேவனுடைய சட்டளையை மீறி, மனுஷருடைய கைவேலையாகிய விக்கிரகங்களைத் தொழுதுகொண்டால் நீங்களும் உங்கள் பிள்ளைகளும், வாசம்பண்ணும்படியாக கொடுத்த தேசத்திலிருந்து சிதறடிக்கப்படுவீர்கள் என்று சொல்லியிருக்கிறார். உபா. 41: 22—28.

தேவன் இஸ்ரவேலரைப் பார்த்து இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைக்கும் எல்லா கற்பனைக்கும் செவிகொடாதேபோனால் இங்கே சொல்லப்படுகிற சாபங்கள் எல்லாம் உன்னைப் பிடிக்கும். நீயும் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டுபோவாயென்றும் எச்சரித்திருக்கிறார். உபா. 28: 15, 25–44. எரே. 15: 4.

தேவன் மோசேயைப் பார்த்து நான் இந்த ஜனங்களின் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த பாலும் தேனும் ஓடும் தேசத்தில் பிரவேசித்தபிற்பாடு அவர்கள் புசித்து திருப்தியாகி கொழுத்துப்போயிருக்கும்போது அவர்கள் என்னைவிட்டு வேறே தேவர்களிடத்தில் திரும்பி அவர்களைச் சேவித்து எனக்குக் கோபமூட்டுவார்கள். நான் அவர்களைப் பல இக்கட்டுகளும் தீங்குகளும் தொடர்ந்துபிடிக்கும்படிசெய்து எல்லாத் தேசங்களிலும் சிதறிப்போகும்படி செய்வேன் என்றார். உபா. 31: 16—30. தேவனே இஸ்ரவேலருக்கு இராஜாவாயிருந்து ஆண்டு நியாயமாய் நடத்திவர, அவர்கள் சகல ஜாதிக்குள்ளும் இருக்கிறபடி எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு ஒரு இராஜாவை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டார்கள். 1 சாமு. 8: 6—9. இப்படியாக தேவகட்டளையை மீறி, அவருக்குக் கோபமூட்டினதினிமித்தம் அவர்கள் குடியிருக்கிற தேசம் அந்தகாரமும் பாழும் சாபமுமாய்ப்போயிற்றென்றும் சொன்னார். எரே,

44: 16—23. யூதாஇராஜாவாகிய மனாசே தேவனுடைய ஜனங்களெல்லாரையும் பாவத்தில் விழுந்து விக்கிரகத்தைத் தொழுதுகொள்ளும்படி ஏவினதினிமித்தம் யூதர்களையும் அந்தத் தேசத்தையும் பகைஞரின் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்கிறார். 2 ராஜா 21: 11—16. 24: 3—7.

எசேக்கியாவின் குமாரனும் யூதாவின் இராஜாவும் ஆகிய மனாசே செய்த பாவங்களினிமித்தம் யூதர்களை பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலையப்பண்ணுவேன் என்றார். எரேமி. 15: 4. இந்தப்படிக்கு யூதர்கள் தேவகட்டளையை மீறி விக்கிரகங்களைத் தொழுதுகொண்டு வந்ததினிமித்தம் தேவன் இஸ்ரவேலரை தேசத்திலிருந்து சிதறடித்து தேசத்தைப் பாழாக்கிவிட்டார்.

2. குற்றமில்லாத கிறிஸ்து மகாராஜாவை சிலுவையில் அறைந்ததினிமித்தம் சிதறடிக்கப்பட்டார்கள். எஜமான் தன் தோட்டத்தை நாட்டி அதை தோட்டக்காரரிடத்தில் ஒப்புக்கொடுத்து கனிகேட்கிறபோது கனிகொடாமல் கேட்கவந்த வேலைக்காரரைத் துன்பப்படுத்திக் கொலைசெய்ததுமல்லாமல் சுதந்தரவாளியாகிய ஒரே குமாரனையும் கொன்றுபோட்ட தோட்டக்காரரை அழித்துத் தோட்டத்தைப் பிடுங்கி அந்நியன் கையில் ஒப்புக்கொடுத்துவிட்டார். மத். 21: 33-44. இந்த உவமையும், இராஜகுமாரனுடைய கலியாண உவமையில் விருந்துக்கு அழைத்தவர்களை அழைக்கப்பட்டவர்கள் பிடித்து அவமானப்படுத்தி கொலைசெய்ததினிமித்தம் இராஜா தமது ஊழியக்காரரை அனுப்பி அவர்களை அழித்து அவர்கள் பட்டணத்தைச் சுட்டெரித்தாரென்ற உவமையும் இதைக் குறிக்கும். மத். 22: 1—7. பிலாத்து என்ற துரை யூதர்கள் கிறிஸ்துவை சிலுவையில் அறைய வேண்டுமென்று கூக்குரலிட்டுச் சொன்ன சத்தத்தைக் கேட்டுத் தண்ணீரை அள்ளி தன் கைகளைக் கழுவி இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் எல்லாரும் இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னபடிக்கும் அவர்கள்மேல் தேவகோபமிறங்கிற்று.

அப்படியே ஒரு கிறிஸ்தவ புலவர் பாடுகிறதாவது:—

1. என்னுடைய உயர்த்துணைவன் தன்னை வதைசெய்கின்ற
எருசலேம் பட்டணமே கேளாய் நீ சிறப்பாய் வாழாய்.
2. உன்னுடைய கொடுமையுயர் பொன்னுலகில் எட்டியது,
ஒரு கல்லின்மேல் ஒருகல்லிராமல், அது உடைபடும்தனையறியாமல்.
3. அன்னாவே காய்பாவே அநியாயப்பிரியரோ (து.
என்னாண்டவரைக்கொல்லநடுவேது. பழியானதினிஉங்களைவிடா
4. இந்நாளில் உங்கள் கனமும் புகழுங் குருமுறையும்
பிரபலமும் சீக்கிரத்திலொழியும், பலிபீடமும், ஆலயமும் அழியும்.
5. பொந்தியுபிலாத்துவென்னும் அந்தகனே என்னுடைய
புண்ணியனைக் கொலைக்களத்தில்நீயே, இப்போபோவதற்கு விடை
(யருளினாயே.
6. இந்தவினையாலினிநீ இந்தஇடம் நீங்கிமற்ற
இடத்திலேசிறையாகப்போவாய் இங்கிராதங்கே நீமாழவாய்.
7. என்னுடைய கண்ணீரும் எனதிறைவன் கண்ணீரும்
இம்மலையில் ஓடியதுபோல், ஜனம்எருசலேமில் கூடும் ஒருகாலம்.

3. புறஜாதியார் குணப்படும்படிக்கும் யூதர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.



அதாவது நமது இரக்ஷகரைப்பற்றி யோவான் அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கிறபடி, யோ. 1: 11. இயேசுவானவர் தாமே இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்குண்டு. அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும். அப்போது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகுமென்று உரைத்திருக்கிறார். யோ. 10: 16.

தொழுவமாகிய யூதசபையில் இல்லாதவர்கள் புறஜாதியாரோ. அவர்களையும் திருச்சபையில் சேர்க்கும்படியாக யூதர்களுக்குக் கடின இருதயம் உண்டாயிற்று. அப்படியே தேவன் தீர்க்கதரிசியைப் பார்த்து நீ போய் இந்த ஜனங்களை நோக்கிக் காதாரக்கேட்டும் உணராமலும், கண்ணாரக் கண்டும் காணாமலும் இருங்கள் என்றும் அவர்கள் கண்களை மூடிக் காதுகளை மந்தப்படுத்திப்போடுவோமென்றும் உரைத்தார். எதுவரைக்கும் இப்படி அவர்கள் இருக்கவேண்டுமென்று கேட்டதற்குப் பட்டணங்கள் குடியில்லாமல் வெறுமையாய்ப் போகும்வரைக்கும் என்று உரைத்திருக்கிறார். ஆனால் அடிமரம்போல் கொஞ்சம் மீதி பரிசுத்த வித்தாயிருக்குமென்று உரைத்தார். எசா. 6: 9—13. யோ. 12: 37—41.

சங்கீதம் 69: 22, 23.

யூதர்களுடைய கடினஇருதயத்தையும் புறஜாதியார் கிருபையைப் பெற்றுக்கொள்ளுகிறதையும் குறித்து அப்போஸ்தலன் திட்டமாய்ச் சொல்லுகிறதாவது, இஸ்ரவேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்களே அதை அடைந்திருக்கிறார்கள். மற்றவர்களோ இன்றையத்தினம்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள். இதில் மற்றவர்களோ என்று சொல்வதில் அடுத்த வாக்கியத்தையும் ஏசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட வார்த்தைகளையும் கவனித்தால் யூதர்களையே குறிக்கிறதென்று விளங்கும். ரோ. 11: 7—12. யூதர்கள் இடறினது புறஜாதியாருக்கு இரக்ஷிப்புக் கிடைக்குபடியாகவே என்று பரிசுத்தஆவியானவர் பவுல் அப்போஸ்தலனைக்கொண்டு பேசுகிறார். இந்த அதிகாரம் முழுவதும் பார்த்தால் திட்டமாய்த் தெரியவரும்.

ஆகையால் யூதர்கள் தள்ளப்படுதல் உலகத்தார் தேவனோடே ஒப்புரவாகுதலுக்கு ஏதுவாயிருக்கிறதென்றும், புறஜாதியாருடைய நிறைவுண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமனதுண்டாகுமென்று தேவாவியானவர் பவுல் அப்போஸ்தலனைக்கொண்டு சொல்லியிருப்பதால் ரோமர் 11: 14—25. புறஜாதியாரைக்குறித்து தேவனால் குறிக்கப்பட்ட தொகை நிறைவாகும்வரைக்கும் வெளி. 6: 11. இஸ்ரவேலர் குணப்படாமல் கடினமாயிருக்கவேண்டும். ஆனால் இஸ்ரவேலர் எவ்வளவு கடினமாயிருந்தாலும் ஒருவரும் தப்பாமல் எல்லாரும் இரக்ஷிக்கப்படுவார்கள். ரோ. 11: 26.

---

## IX. நூற்றாண்டு. (சூலாய்மீ தொடர்ச்சி.)

826ல் தென்மார்க்கு, சுவிடன், ருஷியா என்னும் தேசங்களில் அனஸகாரியஸ், அதபர்ட் என்னும் இரண்டு சன்னியாசிகளால் சுவிசேஷம் பிரபலியமாயிற்று.

861ல் பல்கேரியாவில் அத்தேசத்து இராஜாவின் சகோதரியால் முதலாவது சுவிசேஷம் பரம்பி, பின்பு சிரில், மெதோடியுஸ் என்பவர்களால் பிரஸ்தாபமாக்கப்பட்டது.

## X. நூற்றுண்டு.

912, 933ல் நார்வே தேசத்திலும் பெர்னுட் என்னும் இங்கிலாந்திலுள்ள போதகராலும் அத்தேசத்து இராஜாவாகிய ஆர்கென் என்பவரால் இங்கிலாந்திலிருந்து கண்டிக்கப்பட்ட போதகன்மாராலும் தென்மார்க்குத் தேசத்து இராஜாவாகிய சுவே என்பவராலும் இத்தேசத்திலும் சுவிசேஷம் பிரபல்லியமாயிற்று. இந்த நூற்றுண்டின் மத்தியில் ஹங்கெரியர் சுவிசேஷ ஒளிக்குள் அழைக்கப்பட்டார்கள்.

987ல் ருசியா தேசத்திலும் அதிகமதிகமாய்ச் சுவிசேஷம் பரம்பிற்று. அத்தேசத்துக்கு அரசியாயிருந்த அழகாள் என்பவளாலும் அவளுடைய பேரனுகிய உலாடிமர் என்பவனுல் விவாகம்பண்ணப்பட்ட அன்னுள் என்பவளாலும் அதிகமதிகமாய்க் கிறிஸ்துவிலுண்டான இரக்ஷிப்பு பிரபல்லியப்பட்டது. அநேக தேசங்களில் பெண்பிள்ளைகளினுலே இரக்ஷிப்பின் ஒளி பரம்பியிருக்கிறதைப் பார்க்கிறோம்.

## XI. நூற்றுண்டு.

இந்த நூற்றுண்டில் ஹங்கேரி தென்மார்க், நார்வே, சுவீடன் முதலான ஐரோப்பாக்கண்டத்தின் வடதேசங்களில் சுவிசேஷ ராஜ்யம் பிரபல்லியமாயிருக்கிறது.

---

# பிரசங்கம்.

உபா. 32: 47.

"இது உங்கள் ஜீவனுயிருக்கிறது."

வானங்களே செவிகொடுங்கள், நான் பேசுவேன். பூமியே என் வாய்மொழிகளைக் கேட்பாயாக; மழையானது இளம்பயிரின்மேல் பொழிவதுபோல என் உபதேசம் பொழியும். பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல என் வசனம் இறங்கும். கர்த்தருடைய நாமத்தைப் பிரசித்தம்பண்ணுவேன். நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள்." இந்தப்பாட்டு வேதப்பிரமாணிக்கனுன மோசே தன் அந்திய காலத்தில் மோவாபின் சமனுன வெளியில் இஸ்ரவேலருக்குச் சொன்ன புத்திமதிகளடங்கிய கீர்த்தனமாயிருக்கிறது. இவ்வாக்கியத்தில் "இது" என்பது இந்த அதிகாரத்தில் அடங்கிய பாட்டையும், இந்த உபாகமத்தையும் மோசேயால் எழுதப்பட்டு இஸ்ரவேலருக்கு ஒப்புவிக்கப்பட்ட பஞ்சாகமங்களையும் குறிப்பதோடு, பரிசுத்தாவியின் ஏவுதலால் எழுதப்பட்டு நமக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற பரிசுத்த வேதாகமம் முழுவதையும் குறிக்கும். ஆதலால் வேதம் உங்களுக்கு ஜீவனுயிருக்கிறது.

வேதாகமத்தின் பொருளும் சாரமுமாகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஞான ஜீவனுயிருக்கிருர். அவரோ மேய்ப்பனும் மேய்ச்சலுமாயிருக்கிருர். "நானே நல்ல மேய்ப்பன்." "ஜீவ அப்பம் நானே." என்கிருர்.



வேதம் பாவபாரத்தால் நொந்துபோனவர்களுக்கு ஆறுதலளிக்கும் சஞ்சீவி; மரித்துக் கிடக்கிற பாவிக்கு உயிரளிக்கும் அமிழ்தம்; நித்திய திக்ஷத்துக்குப் பங்காளிகளாகிய நமக்கு ஓயாத களிப்பையும் நித்திய மகிழ்ச்சியையும் தருகிற நற்செய்தி; பசாசின் கையில் சிறைகளான நமக்கு விடுதலையைக் கூறி அறிவிக்கும் ஜுபிலி எக்காளம்; மோட்சபிரயாணிக்கு வழிகாட்டும் நக்ஷத்திரம்; பரமதேசத்தை விபரித்துக் காட்டும் தூரதிஷ்டி கண்ணுடி; பரிசுத்தவான்களின இராக்காலக் கீதம்; மரணநிழலின் பள்ளத்தாக்கின் பாதையில் நடக்கிறவர்களுக்கு கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. இது பேதைக்கு ஞானமாயும் ஞானிக்குத் தியானமாயுமிருக்கிறது. இது பாலகருக்கு ஞானப்பாலாகவும் புருஷருக்கு ஞான ஆகாரமாயுமிருக்கிறது. வேதம் ஏழைக்குப் பொக்கிஷம் நிறைந்த பொற்கேணி; பசாசோடு போராடுகிற ஒவ்வொரு விசுவாசிக்கும் இது இருபுறமும் கருக்குள்ள ஆவியின் கட்கம். இதினுல் அரசனுகிய தாவீது "கர்த்தருடைய வேதம் குறையற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருககிறது. கர்த்தருடைய சாக்ஷி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும்...கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. இது பொன்னிலும் மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூண்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்கிறது" என்கிருர் பரி. பவுல், தேவனுடைய வார்த்தையானது "ஜீவனும் வல்லமையுள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் யோசனைகளையும், நினைவுகளையும் வகையறுக்கிறதாயுமிருக்கிறது" என்கிருர். இதின் விலை மனுஷருக்குத் தெரியாது. இதற்கீடாகத் தங்கத்தைக் கொடுக்கவும் வெள்ளியை நிறுக்கவும் கூடாது. ஓப்பீரின் தங்கமும் விலையேறப்பெற்ற கோமேதகமும் இந்திரநீலக் கல்லும் இதற்கு ஈடல்ல. எத்தியோப்பியாவின் புஷ்பராகம் இதற்கு நிகரல்ல, பசும்பொன்னுபரணங்களுக்கு இதை மாற்றக்கூடாது. இது தேவபெலனும் வாக்கியத்தில் சொல்லியபடி ஜீவனுயுமிருக்கிறது. இதினுல் இராஜாக்கள் ஆளுகிருர்கள். பிரபுக்கள் துரைத்தனம்பண்ணுகிருர்கள். இது விலையேறப்பெற்றதாயிருக்கிறதோடு அருமையானதாயும், இது தித்திப்பாயிருப்பதோடு தேவபெலனுகவும் இது போதனையாயிருப்பதோடு ஜீவனுகவுமிருக்கிறது.

பரிசுத்த வேதமே விலைபெற்ற செல்வமே
நீயே வேதபுஸ்தகம் நீயே தேவபொக்கிஷம்.

"வேதம் ஜீவனுயிருக்கிறது." நாஸ்திகனைத்தவிர சகல மதஸ்தரும் கடவுள் உண்டு என்று ஒப்புக்கொண்டாலும் கடவுளை சரிவர அறிந்து போற்றமாட்டாதவர்களாயிருக்கிருர்கள். ஆகையால் தேவன் தமது திவ்விய மகத்துவம் விளங்கவும் பாவி தன் ஆத்தும ஈடேற்றத்தையறிந்து போற்றவும், தம்மை இயல்வேதமாகிய சிருஷ்டிப்பாலும் அருள்வேதமாகிய திவ்விய மறையாலும் வெளிப்படுத்தியிருக்கிருர். தேவன் ஜீவனுள்ளவராயிருப்பதுபோல அவருடைய தன்மை இலக்ஷணங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட பரிசுத்த வேதாகமும் நமக்கு ஜீவனுயிருக்கிறது, இந்த ஜீவவாக்கியங்களைப் பெற்றிருக்கிற நாம் நித்திய ஜீவனுக்குப் பங்காளிகளாக இது காட்டிய வழிகளில் வலது இடதுபுறம் விலகாதிருப்போமாக. அற்ப ஆயுசுள்ள மனிதனை நித்திய ஜீவனுக்கு வழிநடத்துவதால் வேதம் ஜீவ

னுள்ளது. இயேசு, வேதவாக்கியங்களை ஆராயந்து பாருங்கள். "அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவனுண்டு என்று எண்ணுகிறீர்களே. என்னைக் குறித்து சாக்ஷிகொடுக்கிறவைகளும் அவைகளே." "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன." என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைபபான் என்பதால், ஜீவனாகிய கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்துகிறது. இவரை நம்பி விசுவாசிக்கிறவர்களுக்கு நல்ல வாக்குத்தத்தங்கள் அடங்கிய பொக்கிஷமாக இருக்கிறது. ஆகையால் இதைக் கண்டுபிடிக்கிறவாகளுக்கெல்லாம் ஜீவனும் ஆரோக்கியமுமாம். நீதி. 4: 22 கட்டளையே, விளக்கு, வேதமே வெளிச்சம், போதக சிச்சையே ஜீவவழி யென்று ஞானி சொல்லுகிறார்.

இது யாருக்கு ஜீவனாயிருக்கிறதென்றால் தேவதூதருக்கல்ல, கேருபீன், சேராபீனகளுக்கல்ல; கெட்டுப்போன தூதர் சங்கமாகிய சாத்தானின சேனைகளுக்குமல்ல அக்கிரமங்களாலும் பாவங்களாலும் மரித்தவர்களாயிருக்கிற உங்களுக்குத்தான் வேதம் ஜீவனாயிருக்கிறது; உயிரற்ற எலும்புக் கூட்டங்களுக்குத்தான் இதைக்கொண்டு உயிரடைய தீர்க்கதரிசனம் உரைக்கச் சொல்லுகிறார். ஆகையால் ஜீவனை இழந்து சாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற நமக்குத்தான இது ஜீவனாயிருக்கிறது. இதினால் தாவீதரசன் இதுவே என் சிறுமையில் என் ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது என்கிறார். வேதாகமமானது நம்முடைய ஆத்தும ஜீவனுக்கும், மறுபிறப்புக்கும் கருவியாயிருந்து நம்மை உயிர்ப்பிக்கிறது. இதினால் யாக்கோபு அபபோஸ்தலன் அவர் சித்தங்கொண்டு அவருடைய சிருஷ்டிகளில் முதல்பலன்களாவதற்கு சத்திய வசனத்தினாலே ஜெனிப்பித்தாரென்றும் பேதுரு "தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்றும் சொல்லுகிறார்.

பரிசுத்தஆவியானவரும் தேவவசனத்தின்மூலமாய் நமக்குள்ளே கிரியைசெய்வதால் மறுபிறப்பு உண்டாகிறது, இவ்வகையாய் நாம் உயிர்ப்பிக்கப்படுவதால் வேதம் ஜீவனாயிருக்கிறது.

தேவதாசரே வேதம் உங்கள் ஜீவனும், ஜீவனமுமாயிருக்கிறதே. அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறாரே. இதினால் உங்கள் சரீர ஜீவனம் நடக்கிறது போதாது. உங்கள் ஆத்துமாக்களுக்கும் பிறர் ஆத்துமாக்களுக்கும் ஜீவாகாரமாகத்தக்கதாக நாடோறும் கர்த்தருடைய வசனத்தை வாசித்து தியானித்து உட்கொள்ளுங்கள்.

சகோதரரே, "தேவனுடைய வாக்கியங்கள் நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே." வெளிப்படுத்தப்பட்டவைகள் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் உரியவைகளானதால் இவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும் மி. எழுந்திருக்கிறபோதும் இவைகளைக் குறித்துப் பேசி உன் கைகளின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக. இவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாயிருக்கக்கடவது. இவைகளை உன் வீட்டுநிலைகளிலும் உன் வாசல்களிலும் எழுதுவாயாக. இது உங்களுக்கு ஜீவனாயிருக்கிறது.

இதை நம்புகிறவன் இவைகளால் பிழைப்பான். "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்."



"இது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு அதின் மறுமுனைவரைக்கும் சுற்றி ஓடுகிறது. அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை." ஆதலால் நாம் ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு வந்து யெகோவா அருளிய வேதம் என் பெலனும் என கீதமும் என் ஜீவனும் என்று சொல்லி இரக்ஷிப்பின் ஊற்றாகிய இயேசுவில் மகிழ்ச்சியோடே ஜீவதண்ணீரை மொண்டுகொள்வோமாக. "ஒருவன் இந்தத் தீர்க்கதரிசனப் புஸ்தகங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்."

பிரியமானவர்களே, நித்திய ஜீவனுக்கு நம்மைப் பக்குவப்படுத்தும் இந்தத் திருவசனத் தோல்சுருளை நாம் இழந்துவிடாதிருப்போக.

இயேசுவே நீர் வரும்நாளில்
நானும் உயிரடைந்து சாவாஜீவனைப்பெற
உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான்
பார்க்க என் புத்தியின் கண்களைத் திறந்தருளும், ஆமென்.

Perianayagum.

# NOTICE.

1. Applications for aid under the Results System during the year 1887-88 should be submitted to the proper Authorities so as to reach them not later than the 30th November 1886.

2. Applications for admission to or continuance on the Standing list should be made in form E 2, and those for admission to the Annual list in form E 1.

3. The several columns should be filled up strictly in accordance with the instructions on the back of the forms, which may be had on application to the Dy. Inspectors of schools and Inspecting Schoolmasters.

4. Applications for aid on account of boys of the Infant standard and standards I, II and III should be addressed to the President of the Taluk Board of the Local Fund Taluk in which the schools are situated. Applications for aid on account of boys of all the standard of schools in Municipalities should be addressed to their respective chairman; and those on account of boys of the IVth and higher standards in the

Local Fund Circle and of girls of all standards in Mixed schools in the Local Fund Circle as well as in Municipalities should be addressed to the Inspector of schools 5th Division, Kodaikanal, Madura District. Applications for the same school sent to different authorities should be true copies of each other in all particulars.

5. Schools applying for admission to or continuance on the Standing List, should fulfil the following conditions:—

(*a*) If in a Municipal town, they should be teaching the standards up to the IV inclusive; if in a Local Fund Circle, standards up to the III inclusive.

(*b*) They should have during three successive years passed pupils in each standard, such passes being not less than 50 per cent of the total No. presented taken as a whole.

(*c*) (1) They should be provided with a fairly sufficient and efficient teaching staff.

(2) They should be properly organized.

(3) They should have suitable accommodation, furniture and apparatus.

(4) They should comply with the provisions of the School fee Notification.

(*d*) They should have at least one certificated teacher.

(*e*) They should ordinarily have, in a Municipal town, an average daily attendance of at least 30 pupils and in a Local Fund Circle of at least 20 pupils.

6 Schools which do not fulfil the above conditions should apply for admission to the Annual list in form E 1.

7. Managers are requested to attach an addressed post card or a half anna stamp to their applications as otherwise the notice under Article 5 of chapter III of the Grant-in-aid-code, regarding the acceptance of the applications, will be sent "service-bearing".

---



1887-88௵த்திற்காக திரவியசகாயம் வேண்டும். ரிசல்ட் பாடசாலைகளுக்கு நாளது 1886௵ நவம்பர்௴ 30௳-க்குள் அடியில் கண்டபடி சரியான அதிகாரிகளுக்குப் போய்ச்சேரும்படி மனு அனுப்பவேண்டும்.

2. ஸ்திரமான ஜாபிதாவில் சேர்க்கவாவது, வைத்துக்கொள்ளவாவது அனுப்பப்படும் மனுக்கள் E 2 பாரத்திலும், வருஷாந்தர ஜாபிதாவில் சேர்க்க அனுப்பப்படும் மனுக்கள் E 1 பாரத்திலும் எழுதவேண்டும்.

3. ஷை பாரங்களை ஸ்கூல் டிப்டி இஸ்ஸ்பெக்டர்களிடத்திலும் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல்மாஸ்டர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். அந்தந்த பாரத்தின் பின்பக்கத்தில் கண்டிருக்கிற கவனிப்புகளை அனுசரித்துத் திட்டமாய் கலங்களில் பதிவுகள் செய்யவேண்டும்.

4. பாலகர், I, II, III வகுப்பு ஆண்பிள்ளைகளுக்கு அந்தந்த தாலூகா போர்டு பிரசிடெண்டுக்கும், முனிசிபாலிட்டியில் எல்லா வகுப்பு ஆண்பிள்ளைகளுக்கும் அந்தந்த சேர்மனுக்கு, லோக்கல்பண்டு ஸர்க்கிளில் உள்ள 4-வது வகுப்பிலும் மேல்வகுப்புகளிலுமுள்ள ஆண்பிள்ளைகளுக்கும், லோக்கல்பண்டு ஸர்க்கிளிலும் முனிசிபாலிட்டியிலுமுள்ள கலப்புப் பாடசாலைகளிலுள்ள எல்லா வகுப்புப் பெண்களுக்கும் மதுரை ஜில்லா கொடைக்கானலிலிருக்கும் 5-வது டிவிஷன் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும் மனு அனுப்பவேண்டியது. ஒரே பாடசாலைக்காக பல அதிகாரிகளுக்கு மனுக்கள் அனுப்புகிற பக்ஷத்தில் அந்த மனுக்கள் ஒன்றுக்கொன்று சரியான நகலாகவிருக்கவேண்டும்.

5. ஸ்திரமான ஜாபிதாவில் சேர்த்துக்கொள்ளவாவது வைத்துக்கொள்ளவாவது மனு அனுப்பும் பாடசாலைகள் அடியில் கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்கவேண்டும்:—

(*a*) முனிசிபாலிட்டியிலிருந்தால், பாலகர்முதல் 1, 2, 3, 4 ஸ்டான்டார்கள் படிப்பிக்கவேண்டும்; லோக்கல்பண்டு சர்க்கிளிலிருந்தால் பாலர்முதல் 1, 2, 3 ஸ்டாண்டார்கள் படிப்பிக்கவேண்டும்.

(*b*) துயர்ச்சியாய் சென்ற மூன்று வருஷங்களில் மேற்கண்ட ஒவ்வொரு வகுப்பிலும் பரிக்ஷைக்குப் பிள்ளைகள் விடப்பட்டு ஒப்பேறியிருப்பதுமன்றி அப்படி விடப்பட்ட பிள்ளைகளின் மொத்தத் தொகையில் பாதியாவது ஒப்பேறியிருக்கவேண்டும்.

(*c*) (1) கூடியமட்டும் போதுமானவும் தகுதியானவும் உபாத்தியாயர்களிருக்கவேண்டும்.

(2) தக்கபடி ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

(3) தகுந்த கட்டடமும் சாமான்முதலிய உபகரணங்களுமிருக்கவேண்டும்.

(4) ஒழுங்குப்படி பிள்ளைகளிடத்தில் சம்பளம் வாங்கி கணக்கும் வைத்திருக்கவேண்டும்.

(*d*) குறைந்தபக்ஷம் நார்மல் (Normal) அல்லது ஆர்டினெரி (Ordinary) சர்டிபிகேட்டுபெற்ற ஒரு உபாத்தியாயராவது இருக்கவேண்டும்.

(*e*) சாதாரணமாய், முனிசிபாலிடியிலிருந்தால் சராசரி தினசரி ஆசர்தொகை 30 பிள்ளைகளும் லோக்கல்பண்டு சர்க்கிளிலிருந்தால் 20 பிள்ளைகளுமிருக்கவேண்டும்.

6. மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றாத பள்ளிக்கூடங்களுக்கு வருஷாந்தர ஜாபிதாவில் சேர்க்க E 1 பாரத்தில் மனு அனுப்பவேண்டும்.

7. மனு அங்கீகாரமான விபரம் தெரிவிக்க மேல்விலாசம் மாத்திரமெழுதி போஸ்டுகார்டாவது, பல பள்ளிக்கூடங்களுக்கு ஒரே மானேஜராயிருந்தால் அரை அணா தபால் முத்திரையாவது மனுவுடன் அனுப்பவேண்டும். அப்படி அனுப்பாவிட்டால் ஷை விபரம் "பேரிங்காய்" அனுப்பப்படும்.

Printed at the Hidu Desa Abimani Press *Near Ry Post Office Tinnevelly*.

## நோட்டீஸ்.

மிஷன் விசாரணை உபாத்திமாருக்கும் உபாத்திச்சிமாருக்கும்.

பள்ளிக்கூடம் சோதனையாகும்போது இன்ஸ்பெக்ற்றர்களிடத்தில் உபாத்திமார் ஒப்புவிக்கும் ஒவ்வொரு டாப்பும், அசல் பிரதியாயிருக்க வேண்டுமேயல்லாது, சுத்தப் பிரதிசெய்த நகல் பிரதியாயிருக்கக்கூடாது.

13. October 86.
Palamcottah.

E. Sargent D. D. Bishop,
Manager.



## சமாசாரத்திரட்டு.

(தி.—னி. 1886ளு அக்டோபர்ஸ்ரீ 20உ)

கப்பல்கள்.—1885-ம் ளு கணக்கின்படி உலகமெங்குமோடி வியாபாரம் நடத்திவருகிற பாய்க்கப்பல்கள் 43,692. புகைக்கப்பல்கள் 8,394. அங்கிலேயரே யுத்தக்கப்பல்களில் பெருத்தவர்கள். அவர்களுக்கு 4,852 புகைக்கப்பல்களும் 149,309 பாய்க்கப்பல்களும் உண்டு. பிரான்சியருக்கு 505 புகைக்கப்பல்களும் 3,173 பாய்க்கப்பல்களும் உண்டு. ஜெர்மனியாருக்கு 509 புகைக்கப்பல்களும் 2,424 பாய்க்கப்பல்களும் உண்டு.

ஐரோப்பாவில் புருஷரைவிட பெண்பாலர் 45 லட்சத்து 79 ஆயிரம் பெயர்கள் அதிகம்.

பிரான்சில் ஓர் பெண்பிள்ளை ஆறுமாதத்தில் 3 பிள்ளைகளும், மறு ஆறுமாதத்தில் 3 பிள்ளைகளும் பெற்றாள். ஆறும் க்ஷேமமாயிருக்கின்றனவாம். ஒரு வருஷத்தில் இருமுறை கெர்ப்பமாகி ஆறு பிள்ளைகளைப் பெற்றது அதிசயத்திலும் அதிசயமே.

ஆபரணங்களால் உயிருக்கு நஷ்டம்.—சென்னை கோவிந்தப்ப
நாயக்கன் வீதியிலிருக்கும் வர்த்தகர் ா. ஸ்ரீ பார்த்தசாரதி செட்டியாரு
டைய 14-வயதுள்ள ஆத்மராம் என்னும் சிறுவன் காணாது தப்பியிருக்கின்
றான். காரணம் அச்சிறுவன் அணிந்திருந்த 500-ரூபாய் மதிப்புள்ள
காப்புகளும், கடுக்கண்களுமாகிய பொற்பூஷணங்களேயன்றி மற்றல்ல.
பிள்ளையை மயக்கிக்கொண்டுபோனவர் எவரோ என்பதும், எங்கே கொ
ண்டுபோகப்பட்டானென்பதும் பிறவும் விளங்கவில்லை. பெற்றோரே!
உங்கள் மக்களை பூஷணங்களால் அலங்கரித்து கண்குளிரப் பார்த்து
அவர்களுக்கு நீங்களே காலர்களாக இருப்பதை ஒரே தடவையிலொழித்து
கல்விமுதலியவற்றால் அலங்கரித்து மனக்குளிர்ச்சியடைந்து மக்கள்
வாழ்வுக்குக் காரணமாக உங்களுக்கு மனமில்லையோ? பொன் ஆட்கொ
ல்லி என்பதை நீங்கள் அறியீர்களா! கல்விச்சாலைக்குச் சென்று திரும்பி
வீடுநோக்கி வந்த ஒரு சிறு பரத்திப்பெண்ணின் மீதிருந்த 300-ரூபாய்
மதிப்புள்ள பூஷணங்களைக் கண்டு ஒரு தூர்த்தன் அந்தப் பெண்ணை
மயக்கி இவ்வாரத் துவக்கத்தில், மைலாப்பூருக்கு அழைத்துப்போய் லா
கிரி வஸ்துவை யூட்டி நகைகளைப் பறித்துக்கொண்டேகினன். தேடுகை
யில் பெண் ஒரு வீட்டுத்திண்ணையில் மயக்கத்தோடு நித்திரையாயிருக்கக்
கண்டு அழைத்துவந்தார்கள். பெற்றோரே! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!!

லண்டன் பட்டணத்தில் சிறு பயலொருவன் காரமுள்ள புகை
யிலைச் சுருட்டுப் பிடித்து மயங்கி வாந்தியெடுத்து செத்துப்போனான்.
நெப்போலியன் போனப்பார்ட் என்பவர் நாசிப்பொடியை மிகுதியாய்
உபயோகித்ததினிமித்தம் எமனுக்கு இரையானார். ஜெனரல் கிராண்ட்
புகைக்குடியின் தாக்கலினால் இறந்தனராம். புகைக்குடியரே? இனியே
னும் இவ்விஷயத்தை சற்று ஆழ்ந்தாலோசித்து எச்சரிக்கையாயிருப்பீராக.

பூகம்பம்.—அமேரிக்காக் கண்டத்தில் ஐக்கிய நாட்டின் கீழ்கரை
யில் அலபாமா மாகாணமுதல் நீயூயார்க் நகரம்வரை பூகம்பம் நேரிட்டதா
யும், தென்பாகத்தில் சார்லிஸ்டன் என்னும் நகரம் முக்கால் பங்குவரை
அழிந்துபோய்விட்டதென்றும், வீடுகள் விழுந்ததினால் அறுபது ஜனங்கள்
மடிந்துபோனார்களென்றும், இந்தச் சம்பவத்தால் வெகு ஜனங்கள் அவ
திப்படுகிறார்களென்றும் மின்சமாச்சாரத்தால் தெரியவருகிறது.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| நவம்பர்மீ நாள்-30. ஐப்பசிமீ 17உ முதல், கார்த்திகைமீ 16உ வரை. | | | |
| தி | 1 | கஎ | அவரை விட்டீர்களேயாகில் அவர் உங்களை விட்டுவிடுவார். 2 நா. |
| செ | 2 | கஅ | கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. |
| பு | 3 | க௯ | அவருடைய கற்பனைகளின்படி நடந்துகொண்டான். 17:4. (16:9. |
| வி | 4 | உ0 | இஸ்ரவேலர்...சிதறப்பட்டதைக் கண்டேன். 18:16. |
| வெ | 5 | உக | உத்தமனுக்குக் கர்த்தர் துணை. 19:11. |
| ச | 6 | உஉ | கர்த்தர் எங்களோடே இருக்கிறார். 20:17. (செய்தான் 21:6. |
| ஞா | 7 | உ௩ | (யோராம்) அவன் கர்த்தரின் பார்வைக்குப்பொல்லாப்பானதைச் |
| தி | 8 | உச | ஆகாப் குடும்பத்தாரின் வழிகளில் நடந்தான். 22:3. (யாயிற்று. |
| செ | 9 | உரு | அத்தாலியாளைப் பட்டயத்தால் கொன்றபின்பு நகரம் அமரிக்கை |
| பு | 10 | உசு | நீங்கள் கர்த்தருடைய கற்பனைகளை மீறுகிறதென்ன ? 24:20. |
| வி | 11 | உஎ | ஒத்தாசைசெய்யவும் விழப்பண்ணவும் தேவனாலே கூடும். 25:8. |
| வெ | 12 | உஅ | (உசியா) தேவனைத்தேட மனதிணங்கியிருந்தான். 26:5. |
| ச | 13 | உ௯ | ஜனங்கள்...தங்களைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள். 27:2. |
| ஞா | 14 | ௩0 | கர்த்தருக்கு விரோதமான குற்றங்கள் உங்களிடத்திலும் இல்லை |
| தி | 15 | க | கர்த்தருக்கென்று உங்களைப் பரிசுத்தம்பண்ணினீர்கள். 29:31. |
| செ | 16 | உ | அவர் தம்முடைய முகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை. 30:9. |
| பு | 17 | ௩ | சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாய்க் கொடுத்தார்கள். 31 |
| வி | 18 | ச | அவனுக்கு (எசேக்கியாவுக்கு) ஒரு அற்புதத்தைக் கட்டளையிட் |
| வெ | 19 | ரு | தேவனுக்குமுன்பாக மிகவும் தன்னைத் தாழ்த்தினான். 33:12. (டார் |
| ச | 20 | சு | எனக்குமுன்பாக அழுதபடியினால் நானும் உன் விண்ணப்பத்தைக் |
| ஞா | 21 | எ | நான் துரிதிக்கவேண்டுமென்று தேவன் சொன்னார். 35:21. (சேட் |
| தி | 22 | அ | அவருடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினார்கள். 36:14. |
| செ | 23 | ௯ | கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன். எஸ்றா. 1:3. |
| பு | 24 | க0 | அதற்காக மனஉற்சாகமாய்க் காணிக்கைகளைக் கொடுத்தார்கள் |
| வி | 25 | கக | கர்த்தர் நல்லவர், இஸ்ரவேலின்மேல் அவருடைய கிருபை என்று |
| வெ | 26 | கஉ | தேசத்துஜனங்கள் யூதாஜனத்தின் கைகளைத் தளரப்பண்ணினார் |
| ச | 27 | க௩ | இடன்சொல்ல தேவனுடைய தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள். 5: |
| ஞா | 28 | கச | புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை...சந்தோஷத்துடனே ஆசரி |
| தி | 29 | கரு | அந்தப் பிரமாணங்களை அறியாதவர்களுக்கு...உபதேசிக்கக் கட |
| செ | 30 | கசு | எங்கள் தேவனுடைய தயையுள்ள கரத்தின்படியே. 8:18. (வாய். |

## விசேஷ நாட்கள்.

1. சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
7. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 20—ம் ஞாயிறு.
11. பௌரணமி.
14. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 21—ம் ஞாயிறு.
21. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 22—ம் ஞாயிறு.
25. அமாவாசை.
28. அட்வெந்து நாட்களில் 1—ம் ஞாயிறு.
30. பரி. அப். அந்திரேயாவின் திருநாள்.

# நற்போதகம்.

கஉ. டிசம்பர்மீ. ௲அ௱௯௰ ௵.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

**599.** *பரிசுத்தஆவியானவர் போதிக்கிறார், சாக்ஷியிடுகிறார், வருகிறார், கண்டித்துணர்த்துகிறார், வழிநடத்துகிறார், கேட்கிறார், பேசுகிறார், ஏற்றுக்கொள்ளுகிறார், அறிவிக்கிறார் என்று சொல்லியிருக்கிற கிரியைகள், ஒரு பர்சனுக்குரிய கிரியைகள் என்பதற்குச் சந்தேகமில்லையே (எபே 4: 30. ரோ 8: 26. 1 கொ 2: 10. 12: 11. அப் 10: 19. 13: 2. யோ 14: 26. 15: 26, 27. 16: 7, 8, 13, 14). இந்த நியாயத்தை சொசினியர் எப்படிப் புரட்டுகிறார்கள்? அதற்கு என்ன உத்தரவுசொல்லுவாய்?*

1 கொரி 13: 4—7ல் அன்பு என்ற பண்புப்பேருக்கு, ஒரு பர்சனுக்குரிய கிரியைகளிருக்கிறதாக எப்படிச் சொல்லியிருக்கிறதோ, அப்படியே பரிசுத்தாவியானவருக்கும் ஒரு பர்சனுக்குரிய கிரியைகளிருக்கிறதாகச் சொல்லியிருக்கிறதென்றும், அந்தக் கிரியைகள்: வாஸ்தவத்தில், பிதாவாகிய தேவனுடைய குணம், சக்தி, கிரியை ஆகிய இவற்றைக் குறிக்குமேயல்லாமல், பிதாவுக்கு அலாதியான ஒரு பர்சனிருக்கிறதாகக் குறிக்கமாட்டாதென்றும், ஷெ கிரியைகளைப் பிதாவாகிய தேவன் தமது சக்தியினால் நடப்பிக்கிறாரென்றும், அந்தச் சக்தியைத்தான் பரிசுத்தாவியானவரென்று பேசியிருக்கிறதென்றும் புரட்டுகிறார்கள். இது பாஷண்டம். ஏனென்றால் பிதாவாகிய தேவனுக்குச் சொல்லக்கூடாதவிதமாய், பரிசுத்தாவியானவருக்கு ஒரு பர்சனுக்குரிய லக்ஷணங்களிருக்கிறதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது. இதைத் தாராளமாய் ருசுப்படுத்தலாம்.

திருஷ்டாந்தமாக, தேற்றரவாளன் பிதாவினிடத்திலிருந்து கிறிஸ்துநாதரால் அநுப்பப்படுகிறார் (யோ 15: 26) என்றும்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசமாட்டார் (யோ 16: 13) என்றும், பரிசுத்தாவியானவரைப்

பற்றிச் சொல்லியிருக்கிறது. அவர் பேசுவாரென்றும், தம்முடைய சுயமாய்ப் பேசமாட்டாரென்றும் சொல்லியிருப்பதை, பிதாவின் கிரியையாகச் சொல்லக்கூடாதே. பிதாவானவர் சுயமாய்ப் பேசமாட்டாரா?

மேற்படி நியாயத்தைப் புரட்டும்படி, சொசினியர் இன்னொரு வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அதாவது வேதத்தில் ஒரு பர்சனுக்குரிய எந்த லக்ஷணமாவது பரிசுத்தாவியானவருக்குச் சொல்லப்படும்பொழுது, அந்த இடத்தில், தேவனுக்கு அல்லது ஆவியானவர் கிரியைசெய்கிற மனுஷனுக்குப் பதிலாக, ஆவியானவர் என்று வழங்கியிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இது பாஷண்டம். எப்படியென்றால், யோவான் 16: 14ல் பரிசுத்தாவியானவரைப்பற்றிக் கிறிஸ்துநாதர் பேசும்போது, "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்" என்று சொல்லுகிறார். இங்கே பிதாவானவருக்குப் பதிலாக, பரிசுத்தாவியானவரை வைத்துப் பேசியிருக்கக்கூடாது. ஏனென்றால் பிதாவானவர், இன்னொருவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிறவரல்லவே.—அல்லது பரிசுத்தாவியானவரைப் பெற்ற ஒரு அப்போஸ்தலனுக்குப் பதிலாக, பரிசுத்தாவியானவரை வைத்துப் பேசியிருக்கவும் கூடாது. ஏனென்றால், குமாரனுடையதில் எடுக்கிறவர், அப்போஸ்தலன்மாருக்கு அறிவிப்பார் என்று சொல்லியிருக்கிறது.

**600.** யாத்தி 34: 34ஐ சொசினியர் எப்படிப் புரட்டுகிறார்கள்?

2 கொரி 3: 15—17ல் அப்போஸ்தலன் செய்கிற வியாக்கியானத்தைப் பார்த்தால், யாத்தி 34: 34ன் கர்த்தர், ஒரே யெகோவா என்பதற்குச் சந்தேகமில்லை. நித்தியரான ஒரே கடவுளைப்பற்றித்தான், "கர்த்தரோ ஆவியானவர்" என்று பேசுகிறார். அப்படியிருக்க, "கர்த்தர்" என்பது, (தெய்வமல்ல என்று தாங்கள் மறுக்கிற) கிறிஸ்துநாதரையும்; "ஆவி" ("The spirit") என்பது, நியாயப்பிரமாணத்தின் மறைபொருளையும் குறிக்குமென்று சொசினியர் புரட்டான வியாக்கியானம்பண்ணுகிறார்கள். யாத்தி 34ம் அதிகாரத்தை வாசித்தால், "கர்த்தர்" என்பது, கிறிஸ்துநாதரைக் குறியாதென்று பிரத்தியக்ஷமாய் விளங்கும். 2 கொரி 3: 17னால் "ஆவி" என்பது, நியாயப்பிரமாணத்தின் மறைவான கருத்தைக் குறியாதென்று விளங்கும். நியாயப்பிரமாணத்தின் கருத்தை, கர்த்தருடைய ஆவி என்று வேதத்தில் ஒருக்காலும் வழங்கியிருப்பதில்லை.

**601.** காயீனுடைய பலியைக் கர்த்தர் அங்கிகரியாததற்கும், ஆபேலுடைய பலியை அங்கிகரித்ததற்கும் முகாந்தரமென்ன?

தன்னைப் படைத்து ஆதரித்துவந்த தேவன்மேல், காயீன் ஒருவிதப் பற்றுதலுள்ளவனாயிருந்தானென்பதற்குச் சந்தேகமில்லை. அதினாலேதான் தன் நன்றியறிதலைக் காட்ட அவருக்குக் காணிக்கைகொண்டுவந்தான்.



ஆனால் தன் பாவநிலைமையை அறிந்துணரவில்லை. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட இரக்ஷகரை விசுவாசிக்கவில்லை; பிராயச்சித்தமில்லாமல் தேவனைச் சேரலாம் என்றெண்ணி, இரக்ஷகரை முன்குறித்த பலியைக்கொண்டுவரவில்லை. இரக்கத்திற்காகக் கெஞ்சாமல், தான் யாதொரு பாவமும்செய்யாத நீதிமான்போல், தன் சுயநீதியை நம்பி, பரிசேயனைப்போல் ஸ்தோத்திரஞ்செலுத்துகிற பாவனையாய் வந்தான். இப்படியாக அந்தப் பழயக் கணக்குப்படி, தன் பெற்றோர் ஆதியில் நடந்துவந்த பிரகாரம் கிரியை உடன்படிக்கையைச் சார்ந்தவனாய் வந்தபடியினாலே, கர்த்தர் அவனையும் அவன் காணிக்கையையும் அங்கிகரிக்கவில்லை (ரோமர் 3: 20 வாசி).

ஆபேலோ, "விசுவாசத்தினாலே காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியைத் தேவனுக்குச் செலுத்தினான்". வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட இரக்ஷகர்பேரில் விசுவாசமுள்ளவனாய் பலிசெலுத்தினான். தானும், தன் வகையறாவும் நிர்ப்பந்த பாவிகளாகி பரதீசைவிட்டுத் தள்ளப்பட்டிருப்பதையும், இனிமேல் ஸ்திரீயின் வித்து (ஆதி 3: 15) மூலமாய் மாத்திரம் இரக்ஷிப்படையக்கூடுமென்பதையும் உணர்ந்தான். அதினாலே தான் கிறிஸ்துவின் பிராயச்சித்தத்திற்கு முன்குறிப்பாகத் தேவன் நியமித்த பலியைக் கொண்டுவந்து, ஆயக்காரனைப்போல், தன் தாழ்மையையும் விசுவாசமுள்ள கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்தினான். இப்படியாக வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஸ்திரீயின் வித்துமூலமாய், புதியஉடன்படிக்கையின் இரக்கத்துக்காகக் கெஞ்சினபடியினாலே, "அவனையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்" (ரோமர் 3: 28). வழக்கப்படி வானத்திலிருந்து அக்கினி வந்து பலியைத் தகனித்ததென்று நினைக்கலாம் (லேவி 9: 24. நியா 6: 21. 1 ரா 18: 38. 1 நாளா 21: 26. 2 நாளா 7: 1).

**602.** எபிரேயர் நிருபத்தின் பொழிப்புரையைச் சொல்லு?

I. கிறிஸ்துநாதர் தேவதூதர்களுக்கு மேலானவர் (1: 4—13). நம்முடைய மனுஷத்தன்மையைத் தேவதூதருடைய தன்மைக்கு மேலாக உயர்த்தியிருக்கிறார் (2: 5—18).

II. மோசே அல்லது யோசுவாவைப் பார்க்கிலும், கிறிஸ்துநாதர் அதிக மகிமையானவர் (3: 1—4: 13).

III. கிறிஸ்துநாதர் ஒன்றான நித்திய பிரதானஆசாரியராயிருக்கிறார். சங் 110: 4ல் சொல்லிய தவறாத ஆணை அவரில் நிறைவேறியிருக்கிறது (7 அதி).

லேவியர் முறைப்படி வந்த ஆசாரியத்துவத்துக்குரியவைகளும் முன்னடையாளங்களுமாயிருந்த ஆசீர்வாதங்கள், இவராலே கிடைக்கிறது (8: 1—10: 25).

ஆகையால் நாம் அவருடைய வசனத்தை எவ்வளவு ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும் (2: 1—4. 3: 7—15. 4: 1, 2, 11. 12: 5—29).

அவர் அருளின வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்படி பொறுமையான விசுவாசத்தோடு காத்திருக்கவேண்டும் (6: 12—20. 10: 36—12: 3. 13: 7, 8).

அவருடைய உருக்க இரக்கத்தைப்பற்றி நிச்சயமாயிருக்கவேண்டும் (2: 17, 18. 4: 14—16. 5: 7—9. 6: 20. 7: 25. 10: 22. 12: 2, 24).

அவர் அருளுகிற கிருபையை ஜாக்கிரதையாய் ஆதாயப்படுத்திக்கொள்ளவேண்டும் (6: 1-12. 10: 23-35. 12: 3-17, 28, 29. 13: 1-17).

---

## பேலி (Paley).

**603.** *கிறிஸ்துமார்க்க உதாரணங்களை அறிகிறது அவசியமா? அவசியம் என்று காட்டுகிற ஒரு வேதவாக்கியம் சொல்லு?*

அவசியந்தான். எந்த மார்க்கமும் சரிதானென்றும், எல்லா மார்க்கங்களும் மனுஷருடைய ஏற்பாடுகளேயல்லாமல், ஒரு மார்க்கமாவது தேவனால் அருளப்படவில்லை என்றும் அநேகர் சாதிக்கிறபடியினாலே, கிறிஸ்துமார்க்க உதாரணங்களை அறிகிறது அவசியம்.

"உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து, உங்களிடத்தில் விஜாரித்துக் கேட்கிற யாவருக்கும், சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல, எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1 பேதுரு 3: 15).

**604.** *முக்கியமாய் எந்த விஷயத்தைக்கொண்டு, கிறிஸ்துமார்க்கமே தேவனாலுண்டான மெய்மார்க்கமென்று பேலி ஐயர் ரூபிக்கிறார்?*

அற்புதத்தைக்கொண்டு.

**605.** *கிறிஸ்துமார்க்க அற்புதங்களுக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளெவை? அவற்றுக்கு உத்தரவுசொல்லு?*

1. "அற்புதம் மெய்யாய் நடப்பது பரீட்சைக்கு விரோதம்; சாட்சியம் பொய்யாய்ப் போகிறதோ, பரீட்சைக்கு விரோதமல்ல" என்பது யூம் (Hume) துரையுடைய முக்கிய ஆட்சேபனை.—உத்தரவு: அற்புதம் நடந்த காலத்திலிருந்தவர்களுடைய பரீட்சையை இவர் எப்படி அறியக்கூடும்.

2. "சுபாவமுறை மாற்றப்படுவது கூடாத காரியம்".—

உத்தரவு: சுபாவமுறையை ஏற்படுத்தினவர், அதை ஏன் மாற்றக்கூடாது.



3. "அற்புதங்கள் முற்காலத்தில் நடந்திருந்தால், இக்காலத்தில் ஏன் நடக்கவில்லை.—உத்தரவு: அற்புதங்கள் எப்பொழுதும் நடந்துகொண்டிருந்தால், அவை அற்புதங்களாயிராமல், இயல்பான சங்கதிகளாகிவிடுமே. ஒரு நூதன மார்க்கம் ஸ்தாபிக்கப்படுங்காலத்தில் அது நடக்கவேண்டியது அவசியந்தான். மேலும் கிறிஸ்துமார்க்கம் விசுவாசத்தை முக்கியப்படுத்துகிற மார்க்கமாம்.

4. "சில அற்புதங்கள் ஏலாத காரணங்களால் நடந்ததாகச் சொல்லியிருக்கிறது" என்கிறார்கள்.—உத்தரவு: இந்தக் காரணங்கள் அற்புதம்செய்தவர் இன்னொன்று காட்டுகிற குறிப்புகளாயிருந்தவைகளேயன்றி, இவற்றால் அந்த அற்புதங்கள் நடக்கவில்லை.

**606.** *கிறிஸ்துமார்க்க அற்புதங்கள் நடந்த காலத்திலுள்ள விரோதிகள், அற்புதசங்கதிகளை ஆட்சேபித்த வகைக்கும், தற்காலத்திலுள்ள விரோதிகள் அவற்றை ஆட்சேபிக்கிற வகைக்கும் வித்தியாசமென்ன?*

கிறிஸ்துமார்க்க அற்புதங்கள் நடந்த காலத்திலுள்ள விரோதிகள்: நடந்த அற்புதசங்கதிகளை மறுக்கமாட்டாமல், அவை உள்ளபடி நடந்தன என்று ஒத்துக்கொண்டு, அவைகள் கண்கட்டுவித்தையினாலும் மாந்தரியத்தினாலும் நடந்தன என்று சொன்னார்கள் (மத் 12: 24). தற்கால விரோதிகளோ: கண்கட்டு வித்தையினாலும் மாந்தரியத்தினாலும் அவ்வகையான அதிசயங்கள் நடக்கமாட்டாதென்றறிந்து, ஷை அற்புதசங்கதிகள் நடக்கவே இல்லையென்று சொல்லத் துணிகிறார்கள்.

**607.** *எந்த இரண்டு விஷயங்களை ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்கு பேலி ஐயருடைய நியாயங்கள் செல்லும்?*

தேவனுண்டு, மறுமையுண்டு.

**608.** *தேவனுண்டென்றும், மறுமை உண்டென்றும் ஒத்துக்கொள்வது, எந்த அற்புதத்துக்கும் போதுமான அத்தாட்சியாகாதே. அப்படியிருக்க பேலி ஐயர் இந்த இரண்டு காரியங்களையும், தாம் சொல்லுகிற உதாரணங்களுக்கு ஆதாரமாகச் சாதிக்கவேண்டியதென்ன?*

அற்புதம் சாத்தியமாகக் கூடிய காரியமல்ல என்று சிலர் சாதிக்கிறபடியினாலே, தேவனுண்டென்பதும் மறுமை உண்டென்பதும், சாத்தியமாகக் கூடிய காரியங்களென்றால், அற்புதமும் சாத்தியமாகக் கூடிய காரியமாயிருக்கலாமே என்று காட்டும்படியாக மாத்திரம் அவற்றைச் சாதிக்கிறார்.

**609.** *தேவன் தம்மை வெளிப்படுத்துவார், அல்லது வெளிப்படுத்தத்தக்கதென்று காட்ட, பேலி ஐயர் 8 நியாயங்களைச் சொல்லுகிறார். அவைகளெவை? அவர் அவைகளைச் சொல்லுகிற நோக்கமென்ன?*

கிறிஸ்துமார்க்க உதாரணம் 3ம் பக்கம் வாசி.

அற்புதமானது, நடக்கக்கூடிய காரியமென்று காட்ட நோக்கமாய் இவைகளைச் சொல்லுகிறார். எப்படியென்றால் தேவன் தம்மை வெளிப்படுத்துவாரானால், அற்புதத்தினாலேயன்றி வேறே வகையாய்த் தம்மை வெளிப்படுத்த ஏதுவில்லை. அவர் வெளிப்படுகிறதே அற்புதமாயிருக்குமே.

**610.** பேலி ஐயர் ஒன்றை ரூபியாமல் விட்டுவிடுகிறார். அதென்ன? ஏன் விட்டுவிடுகிறார்?

மனுஷருக்கு வேதம் வெளிப்படுத்தப்படவேண்டிய அவசியத்தை ரூபியாமல் விட்டுவிடுகிறார். ஏனென்றால் வேதம் வெளிப்பட்டிருக்கும்போதே மனுஷருக்குள் இத்தனை அறிவீனம் இருக்குமானால், அது வெளிப்படுத்தப்படாதிருந்தால் எப்படியிருக்கும் என்கிறார்.

**611.** கிறிஸ்துமார்க்கம் தேவனால் அருளப்பட்டதல்ல என்று சாதித்தால், மற்றெந்த மார்க்கமும் தேவனால் அருளப்படவில்லை என்று தீர்த்துப்போடவேண்டுமென்று பேலி சொல்லுகிறார். அதற்கு அவர் சொல்லுகிற நியாயமென்ன?

கிறிஸ்துமார்க்கம் தேவனால் அருளப்பட்டதென்பதற்குத் திர்ப்திகரமான உதாரணமில்லை என்று இதைத் தள்ளுகிறவன், மற்றெந்த மார்க்கத்திலும், இதற்குச் சமமான உதாரணங்களைக் காணமாட்டான் என்பது நிச்சயமென்று பேலி சொல்லுகிறார்.

**612.** கிறிஸ்துமார்க்கமே மெய்மார்க்கமென்று திருஷ்டாந்தப்படுத்தும்படி, பேலி ஐயர் சொல்லுகிற இரண்டு பிரமாணங்களெவை?

10ம் பக்கம் வாசி.

**613.** ஆதிச்சாட்சிகள் பிரயாசப்பட்டிருக்கவேண்டும் என்பதற்கு, பேலி ஐயர் சொல்லுகிற அநுமான நியாயமென்ன?

கிறிஸ்துமார்க்கம் தற்காலத்தில் உலகத்தில் இருக்கிறது என்பதே.

**614.** ஆதிச்சாட்சிகள் துன்பப்பட்டிருக்கவேண்டுமென்பதற்கு, பேலி சொல்லுகிற அநுமான நியாயமென்ன?

கிறிஸ்துமார்க்கத்தின் தன்மையே விரோதத்திற்கேதுவானது என்கிறார்.

**615.** கிறிஸ்துமார்க்கத்தை யூதர்கள் ஏற்றுக்கொள்ளாததற்கு முகாந்தரமென்ன?

1. மகிமைபொருந்திய உலக ராஜாவாய் மேசியா வருவாரென்று, யூதர் எதிர்பார்த்திருந்த எண்ணத்திற்கும்;



2. தாங்களே தேவனுக்கு உகந்தவர்களென்றும், மற்றெல்லா ஜாதியாரும் புறக்கணிக்கப்பட்டவர்களென்றும், அவர்கள் பிடிவாதமாய்ப் பாராட்டிவந்த ஜாதிவித்தியாசத்திற்கும்;

3. புறம்பான சடங்காசாரங்களை நிறைவேற்றினால் போதுமென்று சாதித்த அவர்களுடைய கொள்கைக்கும், ஆதிச்சாட்சிகளுடைய போதனைகள் விரோதமாயிருந்ததினாலேதான்.

**616.** கிறிஸ்துமார்க்கத்தை அஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ளாததற்கு முகாந்தரமென்ன?

1. எந்த மார்க்கமும் சரிதானென்பது, பொதுவான ஜனங்களுடைய கொள்கை. மேலும் அவர்களுடைய ஆராதனைகளில் அநேக துன்மார்க்கங்கள் நடந்துவந்தன.

2. அவர்களுக்குள்ளிருந்த சாஸ்திரிகள்: எல்லா மார்க்கங்களும் பொய்யென்று நம்பிவந்தார்கள்.

3. அஞ்ஞான அதிகாரிகள்: (1) தங்களுடைய ஆளுகைக்கு எந்த மார்க்கம் அனுகூலமாயிருக்குமோ, அதைத்தான் விரும்புவார்கள். (2) கிறிஸ்துநாதரை இராஜா என்று கிறிஸ்தவர்கள் சொன்னது, அவர்களுக்குச் சமுசயத்தைக் கொடுத்தது (லூக் 23: 2. யோவான் 18: 33. அப் 17: 7). இப்படியாகக் கிறிஸ்துமார்க்கத்தின் தன்மையும் போதனையும், யூதர் புறஜாதியாராகிய எல்லாருடைய விரோதத்திற்கும் ஏதுவாயிருந்தன.

**617.** ஆதிச்சாக்ஷிகள் துன்பப்பட்டார்களென்பதற்கு, நேரான சரித்திர சாக்ஷிகளெவை?

2—5 அதிகாரங்களை வாசி.

**618.** ஆதிச்சாக்ஷிகள் துன்பப்பட்டுப் போதித்த சங்கதிகள், அற்புத சங்கதிகளாயிருக்கவேண்டுமென்று எப்படித் தெரியும்?

1. ஆதிச்சாக்ஷிகள் தங்கள் போதனையைச் செலுத்திச் சித்தியடைவதற்கு, அற்புதத்தைத்தவிர வேறே ஆதாரம் அவர்களுக்கிருந்ததில்லை. செல்வாக்கில்லை, சேனைதளமில்லை.

2. பிற்காலத்துக் கிறிஸ்தவர்கள் தங்களுக்கு அற்புதஞ்செய்யத்தக்க வல்லமையிருந்ததாகப் பாராட்டி வந்தார்கள். மெய்யான அற்புதங்கள் நடந்திருந்ததினாலேதான் இப்படிப் பாராட்ட நேரிட்டது.

**619.** ஆதிச்சாக்ஷிகள் மெய்ப்பித்த அற்புதசங்கதி, இப்பொழுது நமக்குள் வழங்குகிற வேதாகமத்திலுள்ள சங்கதிதானென்பதற்கு அநுமான நியாயங்களென்ன?

82ம் பக்கம் வாசி.

**620.** புதியஏற்பாட்டுக் கனோனை ஸ்தாபிக்க (அல்லது புதியஏற்பாட்டு ஆகமங்கள் மெய்ப்பொருளடங்கிய ஆகமங்களென்று ரூபிக்க) பேலி ஐயர் எழுதுகிற 11 நியாயசூத்திரங்களெவை?

குருப்பட்ட மாணுக்கன், IX பக்கமுதல் வாசி.

**621.** "கனோனிக்கல் புஸ்தகங்கள்" என்றால் அர்த்தமென்ன?

குரு. முகவுரை XI பக்கம் வாசி.—இப்படியாகக் கிறிஸ்துமார்க்கம், அற்புதங்களினால் சாட்சியிடப்பட்டிருப்பதால், அது தேவனாலுண்டானதென்று ருசுவாகிறது. ஏனென்றால் அற்புதம் தேவனாலே மாத்திரம் நடக்கக் கூடிய காரியம்.—கிறிஸ்துமார்க்கமானது தான்மாத்திரம் தேவனாலுண்டானதென்று ரூபிக்கிறபடியால், கிறிஸ்துமார்க்கம் ஒன்றுதவிர, மற்றெல்லா மார்க்கங்களும் பொய்மார்க்கங்களென்று தீர்க்கிறோம்.

**622.** அற்புதங்கள் கிறிஸ்துமார்க்கத்திற்கு அத்தாட்சியாகிறதுபோல, இந்துமார்க்கத்துக்கு ஏன் அத்தாட்சியாகாது?

1. இந்துக்களில் யாராவது, தங்கள் மார்க்கத்தின் உண்மையை ஸ்தாபித்து உறுதிப்படுத்துவதற்கு அத்தாட்சியாக அற்புதஞ்செய்யவில்லை; அப்படிச் செய்ததாகச் சொல்லவுமில்லை.

2. யாதொரு அற்புதசங்கதிக்காக அவர்கள் தங்கள் ஆதாயத்தை இழந்துவிடவுமில்லை, துன்பப்படவுமில்லை.

3. இந்துமார்க்க அற்புதங்கள் நம்பப்படத்தக்கவைகளும் அல்ல.

**623.** இந்துக்களில் சிலர், தங்கள் மார்க்கவிஷயமாய்க் கொடிய துன்பப்படுகிறார்களே! அந்தத் துன்பங்கள் அவர்கள் மார்க்கத்துக்கு அத்தாட்சியாகாதா?

ஆகாது. ஏனென்றால்,

1. அற்புதசங்கதிக்காக அவர்கள் துன்பப்படவில்லை; அதாவது அற்புதசங்கதிகளைக் கண்டு சாட்சியிட்டதற்காக அவர்களுக்குத் துன்பம் வரவில்லை.

2. அவர்கள் அநுபவிக்கிற துன்பங்கள், பெரும்பாலும் மற்றவர்களாலே அல்ல, தங்களைத் தாங்களே வருத்துகிறதினால் உண்டான துன்பங்களாம். ஆனால் கிறிஸ்தவர்கள், துன்பத்துக்கு விலகியிருக்கும்படி, தங்கள் மார்க்கத்தை மறுதலிக்கிறதே போதுமானதாயிருந்தது.

---



# Rev: F. E. WIGRAM'S VISIT

## TO TINNEVELLY.

லண்டன் நகரியில் சர்ச்சுமிஷன் சங்கத்துக்குப் பிரதான செக்ராற்றேரியாகிய

## கனம் உய்கிரம் ஐயரவர்கள்

### திருநெல்வேலிச் சபைகளைச் சந்தித்தல்.

திருநெல்வேலியில் சர்ச்சுமிஷன் சங்கத்தார் தங்கள் வேலையை ஆரம்பித்ததுமுதல் இங்கிலாந்திலிருந்து இரண்டாவதாக இவ்விடத்திற்கு வந்த செக்ராற்றேரியார் கனம்பொருந்திய உய்கிரம் ஐயரவர்களே. அவர்கள் மிஷன் சம்பந்தமான காரியங்களில் அதிகப் பிரீதியுள்ளவர்களும் அவ் வகைக்கு பலவித சகாயம்செய்கிறவர்களுமாம். அவர்கள் உலகத்திலெங்கு மிருக்கிற பல சர்ச்சுமிஷன் சேகரங்களைப்பார்க்க விரும்பி, சீமைக்கமிற் றிமாரிடத்தில் விடைபெற்று, தம்முடைய சிரேஷ்ட குமாரர் ஸ்ரீ உய்கிரம் துரையவர்களுடன் ஏறக்குறைய மூன்றுவாரம் யாத்திரைசெய்து, அக்ற் றோபர்மீ கடைசியில் இலங்கைத்தீவில் இறங்கி, அவ்விடத்துச் சபை களை விசாரித்து, நவம்பர்மீ 3வ புதன்கிழமை தூத்துக்குடியில் கரைசேர்ந்து பகல் 12 மணிக்கு அவ்விடத்திலிருந்து புகைவண்டியேறி, 3 மணிக்குத் திருநெல்வேலி ஸ்டேஷனில் இறங்கி, பாளையங்கோட் டைக்கு வந்துசேர்ந்து, கோவிலின சந்தோஷமணி தொனிக்க, மிஷன் கம்பவுண்டு பிரதான வாசலண்டையில் மகாகனம்பொருந்திய சார்ஜெனறு அத்தியக்ஷரவர்களாலும், அவர்கள் வருகைக்காகக் காத்திருந்த மிஷியோ னெரிமார்களாலும் வெகு உபசரணையாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஷை வாசல்முதல் பங்களாவரை இருவரிசையாக கைகளில் கொடிகள் பிடித்து சிறப்பாய நின்ற கல்விச்சாலை மாணுக்கமார், மிஷியோன் உத்தியோக ஸ்தர்களால் வாழ்த்தப்பட்டு, அவர்கள் நடுவாக பங்களாவுக்கு நடந்து வா வே, பந்தலுக்குள் கைகளில் கொடிபிடித்துக்கொண்டு, அகமகிழ்ந்து, முகமலர்ந்து கீர்த்தனை பாடிக்கொண்டு நின்ற போர்டிங் பெண்பிள்ளை களைக் கண்டு சந்தோஷப்பட்டு, பங்களாவில் பிரவேசித்து, மிஷியோ னெரிமார்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர்.

மாலை 7 மணிக்கு, பாளையங்கோட்டைச் சபையின் பிரதானமான வர்களில் ஒருவராகிய வக்கீல் அப்பாசாமிபிள்ளை வீட்டின் கம்பவுண்டுக் குள் போடப்பட்டிருந்த பந்தலில், இந்துக்களுக்கு உபதேசிமாரால் பிர சங்கம்செய்யப்படுகிற வகைகளில் ஒன்றாகிய பஜனைப் பிரசங்கம் நடந் தது. ஏராளமான இந்துப்பிரபுக்கள் கூடிவந்தார்கள். அக்கூட்டத்துக்கு அத்தியக்ஷரவர்களும், கனம் உய்கிரம் ஐயரவர்களும், ஸ்ரீ உய்கிரம் துரை யவர்களும் வந்திருந்து சந்தோஷப்பட்டதின்பேரில், செக்ராற்றேரியாரவர் கள் கூடிவந்தவர்களுக்கு எழுப்புதலாக சில நற்போதனைகளைச் சொன் னார்கள்.

4௳ வியாழக்கிழமை காலை 7½ மணிக்கு கோவிலில் விசேஷித்த ஆராதனை நடந்தது. அப்போது சுதேச குருமாருக்குள் முதலில் பட்டம் பெற்றவராயிருந்த கனம் ஏசுதாசன் யோவான் ஐயரவர்களால் 1 கொரி 1: 23ல் எழுப்புதலான பிரசங்கம் செய்யப்பட்டது.

பகல் 12 மணிக்கு, அவர்கள் சந்திப்புக்கென்று அலங்காரமாக எடுப்பிக்கப்பட்டிருந்த பந்தலில் கூடிவர ஏதுவில்லாமல் மழைபெய்துகொண்டிருந்தமையால், தெற்குக்கல்விச்சாலையின் பெரிய அறையில் பாளையங்கோட்டை, சுவிசேஷபுரம், டோனாவூர், பண்ணைவிளை, பன்றிகுளம், நல்லூர், சுரண்டை, வடதிருநெல்வேலி என்ற சேகரங்களிலுள்ள எல்லா சுதேச ஐயன்மார்களும், ஆலோசனைச் சங்கத்து மெம்பர்களும், சபைகளின் பிரதானமானவர்களில் அநேகரும், மிஷியோன் ஆசாமிகளும் வந்து கூடினார்கள். மகாகனம்பொருந்திய சாரஜென்று அத்தியக்ஷரவர்கள் அச்சமயத்திக்கு வேண்டிய ஆசீர்வாதத்துக்காக ஜெபித்தார்கள். பின்பு செக்ரற்றேரியாரவர்களுக்கென்று எழுதப்பட்டிருந்த வந்தனோபசாரப்பத்திரம் கனம் ஏசுதாசன் யோவான் ஐயரவர்களால் வாசிக்கப்பட்டது. அதைக் கேட்ட செக்ரற்றேரியாரவர்கள், திருநெல்வேலிச் சபையாரைத் தாம் வந்து கண்டுகொண்டதோடு தமக்குண்டான சந்தோஷத்தை வெளியிட்டு, அன்பும் சந்தோஷமும் நிறைந்த பிரதிவந்தனம் சொன்னபின், 2 தீமோ. 4: 1—5 வரை வாசித்து, போதகர்கள் தங்கள் ஊழியத்தில் ஜாக்ரதையும், விடாமுயற்சியும், பொறுமையுமுடையவர்களாயிருந்து, கிறிஸ்து இரக்ஷகரின் இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்டிருக்கிற சபைகளை தேவபக்தியின வழியில் வளரச்செய்யவேண்டுமென்று அன்புடன் புத்திமதிசொன்னார்கள். அதன்பின் ஒவ்வொரு சேகரத்து ஐயன்மார், உபதேசிமார், தனித்தனியே வந்து கண்டுகொள்ள அவரவர்களுடைய வேலை விவரங்களை விசாரித்துக்கொண்டு ஒவ்வொருவருக்கும் ஏற்ற நல்லாலோசனை சொன்னார்கள். பின்பு செக்ரற்றேரியாரவர்கள் கூடிவந்தவர்களுடன் சபையின் பொதுவான விஷயங்களைப்பற்றி, சம்பாஷித்தபின் அத்தியக்ஷரவர்கள் ஆசீர்வாதம்சொல்ல கூட்டம் கலைந்தது.

அவர்கள் இன்னும் பத்துமாசங்களுக்குள் பிரிட்டிஷ் இந்தியாவில் சர்ச்சுமிஷனுக்குரிய பிரதான ஸ்தானங்களையும், அதற்கப்பால் சீனா, ஜாப்பான், குடகோளார்த்தத்திலிருக்கிற உத்தரபசிப்பிக மிஷன்களையும் போய்ப்பார்க்கத் தீர்மானித்திருக்கின்றமையால், அவர்கள் திருநெல்வேலியிலிருக்கிற எல்லாச் சேகரங்களுக்கும்போக ஏதுவில்லை.

மகாகனம்பொருந்திய நமது அத்தியக்ஷரவர்களும், கனம் உய்கிரம் ஐயரவர்களும், அவர்களோடு வந்திருந்த அவர்கள் சிரேஷ்ட குமாரரும் இராவிலே பாளையங்கோட்டையிலிருந்து புறப்பட்டு 5௳ காலை 7–மணிக்கு மெஞ்ஞானபுரத்திற்கு வந்துசேர்ந்தார்கள். அவ்வாரத்தில் இரண்டு மூன்று நாட்களாய் அடைமழை வருஷித்துக்கொண்டிருந்த வானம், அன்று அதிகாலையில் வெளிவாங்க, சூரியன மேகமாகிய திரைகளினின்று வெளிப்பட்டு, தன் காந்தியான முகத்தைக் காட்டினதால், அதுவும் அவர்களுடைய வருகைக்கு ஆவலாய் எதிர்பார்த்தாற்போலிருந்தது. மெஞ்ஞானபுரம் சபையார் அவர்களுடைய வருகைக்காகத் தெருக்களில் தோரணங்கள் கட்டியும், வாழைகள் நாட்டியும், ஆலயத்தின் முகப்பில் ஓர் பூப்பந்தல்போட்டுமிருந்தார்கள். மேலும் மெஞ்ஞானபுரம் பங்களா கம்பவுண்டு வாசல்களில் ஒன்றின்மீது, 'மெஞ்ஞானபுரம் வாழ்த்தல்' என்றும், மற்றதின்மேல், **'எங்கள் அருமையுள்ள சர்ச்சுமிஷன் சங்கத்து கண்ய பிரதிநிதி**



**வாழ்க'** என்றும் எழுதிவைக்கப்பட்டிருந்தன. ஐயன்மார்கள் குறித்தநேரத்
தில், ஆலயமுகப்பில் எடுப்பித்திருந்த பந்தலின் கீழும், உபதேசிமார்,
உபாத்திமார் யாவரும் ஒரு வரிசையாகவும், இவர்களுக்கு எதிரே போர்
டிங் ஆண்பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் இனிய ராகங்களை வாத்தியத்து
டன் பாடிக்கொண்டு இன்னொரு வரிசையாகவும் நிற்க; சபையாரில்
அநேகரும் அங்கங்கே கும்புகும்பாய் வந்திருக்க; அத்தியக்ஷரவர்களும்,
செக்ரற்றேரியாரும், உய்கிரம் துரையும் சந்தோஷமாய் நடந்துவந்தார்
கள் எல்லாரும் அகமகிழ்ந்து முகமலர்ந்து அவர்களுக்கு வந்தனஞ்செய்
கையில், அவர்களும் உள்ளங் கனிந்து பிரதிவந்தனம்சொல்லி அப்படி
யே ஆலயத்துக்குள் சென்றார்கள். அப்புறம் அவர்கள் கனம் தோமாஸ் அம்
மாளவர்களையும், மிசி அம்மாளவர்களையும் பார்க்கப்போனார்கள். அன்று
முற்பகலில் அத்தியக்ஷரவர்களும், செக்ரற்றேரி ஐயரவர்களும் 18 சுதேச
ஐயன்மாரும் பந்தியிருந்தனர். பத்தரைமணிக்கு பொதுவான சந்திப்பு
நடக்கப்போதுமான விஸ்தாரமுள்ள வேறு இடமில்லாததினாலே கோவி
லில் நடந்தது. சமயத்துக்கென்று செய்திருந்த "ஏசுராஜனே! அருள்புரி
ஏகதேவனே" என்ற கீர்த்தனை பாடி கூட்டம் தொடங்கினது. அத்தி
யக்ஷரவர்கள் அவ்வேளை தேவபிரசன்னம் விளங்கும்படி சுருக்கமாய்ப்
பிரார்த்தித்தார்கள். கனம் யோசேப்பு தாவீது ஐயரவர்களால் ஒரு வந்தனப்
பத்திரம் வாசிக்கப்பட்டது. அதற்கு செக்ரற்றேரியாரவர்கள் இங்கிலி
ஷில் மறுமொழி உரைத்தார்கள். அதின் வரலாறாவது,
கிறிஸ்துவுக்குட்பட்ட சகோதரரே! உங்கள் அன்பான வாழ்த்தலுக்காக
அனந்தம் வந்தனம். என்ஜனன தேசத்திலிருக்கையில் திருநெல்வேலிச்
சபையைப்பற்றியும் விசேஷமாய் மெஞ்ஞானபுரம் சேகரத்தைப்பற்றியும்
அடிக்கடி வாசித்தும் கேட்டும் இருக்கிறேன். இங்கே தேவன்செய்திருக்
கும் மகத்துவமான காரியங்களை நேற்றைத்தினம் பாளையங்கோட்டையில்
என் கண்களாற் பார்த்தேன். பாளையங்கோட்டையில் கூடிவந்த கிறிஸ்த
வர்களோடு பேசினபோது நான் கவனித்தபடியே, தேவன் இங்கே நடப்
பித்திருக்கும் எல்லாக் காரியங்களுக்காகவும் அவருக்கு ஸ்தோத்திரம்செ
லுத்துகிறேன். நான் இவ்வூருக்கு வந்த பாதையிலிருக்கிற தேரிமணலுக்கு
இப்பால், இம்மகத்தான ஆலயத்தையும், இத்திசைகளில் கர்த்தர் நாட்டி
யிருக்கிற சபையையும், கண்ணுறுகையில், நான் முக்கியமாய் அப்படிச்
செய்யவேண்டும். தோமாஸ் அம்மாளவர்களுடைய பங்களாவிலிருந்து
பெரிய பங்களாவிற்குப்போகையில் ரோட்டினருகில் எம்நாட்டுச்செடி
யொன்றைக் கண்டேன். (அது சீமைக்கொய்யா.) அவ்வேளையில் இந்த
வசனம் என் ஞாபகத்தில் வந்தது. "முட்செடிக்குப்பதிலாக தேவதாரு
விருட்சம் முளைக்கும். காஞ்சொறிக்குப்பதிலாக மிருதுச்செடி எழும்பும்."
"அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தர வெளியை
கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார். துதியும் கீதசத்தமும்
அதில் உண்டாயிருக்கும்" என்பதே. நான் வெளியரங்கமாய்ப் பார்த்தா
லும் ஆவிக்குரிய பிரகாரமாய்ப் பார்த்தாலும் பெரிய மாறுதல் உங்களில்
நடந்திருக்கிறது. நீங்கள் எழுதிய வந்தனப்பத்திரத்திற் கண்டிருக்கிறபடி
தேவபக்தியுள்ள ஐயன்மார் உங்கள் நடுவில் உழைக்க கர்த்தர் கிருபைசெய்
திருக்கிறதற்காக அவருக்கு ஸ்தோத்திரம். கர்த்தருக்குள் உங்களை பிதாப்
போல நடத்திவரும் உண்மையுள்ள போதகர்களைக்கொடுத்து வருகிறது
யார்? தேவன்தாமே. அவரே இன்னமும் நடத்துவார். இத்தேசத்தில் தேவன்
தமக்கென்று ஏற்படுத்தியிருக்கும் தேவஊழியக்காரர் வசம் தமது கிரியை

யை ஒப்புவித்திருக்கிறார். சர்ச்சுமிஷன் உங்களுக்குத் தாய்ச்சங்கம் என்பது மெய்தான். ஒரு தகப்பன் தன் குமாரன் பிராயமாகிறதைப் பார்த்துச் சந்தோஷப்படுவானே ஆம். ஆனால் அந்த மகன் ஒரு தொழிலிற் பிரவேசித்து அதில் க்ஷேமமடைகிறான் என்பதை அறிந்தாலோ எவ்வளவோ சந்தோஷப்படுவான். திருநெல்வேலி சபையைப்பற்றி சர்ச்சுமிஷன் கமிற்றிமார் அவர்கள் சுயாதீனத்திற்கு வந்துவிட்டார்கள் என்று மேன்மைபாராட்டத் துணியார்கள். ஆனாலும் உங்களைப்பற்றி நாங்கள் தேவனுக்கு நன்றிசெலுத்துகிறோம். அவருக்குள் உங்களைப்பற்றி தைரியங்கொள்ளுகிறோம். உங்களுக்காக ஜெபம்பண்ணுகிறோம் நீங்கள் சுயாதீனமாய் நடக்கத் துவக்கியிருக்கிறீர்கள். கர்த்தர் உங்களுக்குத் தந்திருக்கும் அருமையுள்ள அத்தியக்ஷரவர்களின் மேல்விசாரணைக்காகவும், அவர்களுடைய அன்பான ஆலோசனைச்சாகவும், நாங்கள் அவர்களுக்கு நன்றியறிதலாயிருக்கிறோம். அவர்களுடைய ஜீவகாலத்திலேயே நீங்கள் உங்கள் சபையை சுயதாபரிப்பில் கொண்டுவரப் பிரயாசப்படுவீர்களென்று நம்புகிறோம்.

தேவஊழியக்காரராகிய உங்களோடு பேசுகிறேன். நீங்கள் தேவனுடைய தோட்டத்தைச் சாகுபடிசெய்கிறவர்கள்போலிருக்கிறீர்கள். இதைப்பற்றி பவுல் சொல்லுகிறதாவது 1 கொரி. 3:9 "நாங்கள் தேவனுடைய உடன்வேலையாட்களாயிருக்கிறோம். நீங்கள் தேவனுடைய பண்ணையும் தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்" என்பதே. தேவன பலவீனமான மனிதரைத் தமக்கு உடன்வேலையாட்களாயிருக்கும்படி செய்கிறார். பவுல் அப்படியே இருந்தார். தேவனோடே உடன்வேலையாட்களாயிருத்தல் கனமும், பொறுப்புமான வேலையென்று அறிவீர்களாக. என் சகோதரராகிய பாஸ்றர்மாரே ! நீங்கள் தேவனுடைய சபையை எழுப்பிக் கட்டவேண்டியவர்களாயிருக்கிறீர்கள்; உபதேசிமாரே, நீங்கள் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். இளைஞருக்குப் படிப்பிக்கிறவர்களே, நீங்களும் தேவனுடைய பண்ணையை விசாரிக்கிறவர்கள் என்பதை மறந்துவிடாதேயுங்கள். இங்கே வந்திருக்கிற பள்ளிப்பிள்ளைகளைப் பார்ப்பது மற்றெல்லாப் பிள்ளைகளையும் பார்த்தாற்போலிருக்கிறது இளைஞருடைய இருதயத்தில் நித்தியஜீவ விதையை நீங்கள் ஊன்றவேண்டும். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளை என்ன? "பிள்ளையானவன் அவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." நம்முடைய ரக்ஷகர் சிறுவரைத் தம்மிடத்தில் வரவழைத்தார் என்று சொல்லியிருக்கிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு உத்தரவாதிகளாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் உத்தரவாதம் முழுமையும் உங்கள்மேல் பொறுக்கவிடுவது சரியல்ல. கர்த்தருக்கேற்ற சிக்ஷையோடும், போதகத்தோடும், நடத்த நீங்களும் அவர்களுக்கு உதவிசெய்ய அவர்கள் கேட்கலாம். அவர்கள் அதை யேன்பராக்காய் விட்டுவிட்டால் நீங்களே அந்த உத்தரவாசத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வண்ணமாகத் திருப்பணிவிடைசெய்ய அழைக்கப்பட்டிருக்கிற எல்லாரும் தாங்கள் பெற்றிருக்கிற அறிவுக்கும், திறமைக்கும்தக்கதாக உங்கள் உடன்கிறிஸ்தவர்களுக்கும், மறுதலித்துப்போயிருக்கிறவர்களுக்கும் தேவனுடைய அன்பை அறிவிக்கக் கேட்கிறேன். நீங்கள் அன்புள்ள பரமபிதாவைச் சேவிக்கிறவர்களென்று அவர்கள் அறிவார்களாக. உங்கள் பக்தியுள்ள நடக்கையால் அவர்களை ஆதாயமாகப்பெறப் பாருங்கள்; அவர்களுக்காக இடைவிடாமல் பிரயாசப்படுங்கள்; விண்ணப்பம்பண்ணுங்கள்.



அப்படியானால் தீர்க்கதரிசி சொல்லியபடி உங்கள் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்குவீர்கள். அப்போஸ்தலன் திருச்சபையை வேறொரு காரியத்திற்கும் உவமித்திருக்கிறார். நீங்கள் தேவனுடைய மாளிகையாயிருக்கிறீர்கள்என்பதே. பவுல் அடுத்த வாக்கியத்தில் எனக்கு அருளப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன் என்கிறார். ஆம்; போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவையல்லாமல் வேறு அஸ்திபாரம் இல்லை இந்தச் சபைக்கு அஸ்திபாரம்போட்டவர்கள் ஞானமாய் அஸ்திபாரம்போட்டார்கள் என்று தெளிவாயிருக்கிறது.

சபையின் அஸ்திபாரம் இயேசுகிறிஸ்துவே,
ஓரோஸ்நானத்தினாலே யாவரையும்இணைக்கும்.
சபைவெற்றிசிறந்து நிற்கும்நன்னாளிலே,
நாங்களும்லோகம் வென்றுநிற்க அருளுமே.

நீங்கள் இந்த அஸ்திபாரத்தின்மேல் எதைச் சேர்த்துக்கட்டுகிறீர்கள் என்பதைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள். ஒருவன் அதின்மேல் மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைச் சேர்த்துக்கட்டினால் அக்கினியானது பரிசோதிக்கும்நாளில் அவை வெந்துபோகும். பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் இவற்றைக்கொண்டு அதின்மேல் கட்டுகிறவன் எவனோ அவனுடைய வேலை நிலைநிற்கும். நீங்கள் எப்படிக் கட்டுகிறீர்கள் என்பதை யோசியுங்கள். தேவஊழியத்தைச் செய்வதற்கு அநேக காரியங்களை நாம் வெறுக்கவேண்டியதாயிருக்கும். அதை நிறைவேற்றுவதில் பல வருத்தங்கள் நேரிடும். அவ்வூழியத்தை நடப்பிக்கிறவர்களுக்குள் இருக்கவேண்டிய முக்கியமான லட்சணம் அன்பே. இஃதின்றி அவ்வேலை பலமாயும் நன்மையாயும் முடியாது கிறிஸ்துவுக்காகப் பிழைக்கிறவர்களுக்குள்ளும் அவருக்காக உழைக்கிறவர்களுக்குள்ளும் அந்த அன்பு நிலைத்திருக்கும். மேலும் நாமே முதலாவது அந்த அஸ்திபாரத்தைச் சேர்ந்திருக்கவேண்டும். ஓரிடத்தில் "நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகலால் நாம் நமது முழு இருகயத்தையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். உங்களுக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்த கிறிஸ்துஇயேசுவின் அன்பைப்போல அவருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிற நீங்களும் பிறர்மேல் வைக்கும் அன்பால் நெருக்கப்படுகிறவர்களாயிருக்கவேண்டும். அவ்வகை அன்பு தங்களில் இல்லை, உண்டானால் தங்களிடத்தில் பலவீனமாயிருக்கிறது என்று சிலர் சந்தேகப்படுவார்கள். அவர்கள் "வல்லமை தேவனுடையது" என்று அறியக்கடவர்கள். நாம் இந்த வல்லமையை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் தேவன் உங்களோடிருந்து தம்முடைய கிரியையை நடத்துவாராக. நான் வந்து உங்களெல்லாரையும் கண்டது எனக்குச் சந்தோஷம் உங்களோடே இவ்வார்த்தைகளைப் பேசினதும் எனக்கு மிக ஆனந்தம் என்று சொல்லி முடித்தார்கள்.

அப்பொழுது சுதேசசபைஆலோசனைச்சங்கத்துப் பிரதிநிதிகள் எழுந்துநின்று அவர்களை நோக்கி; கனம்பொருந்திய செக்றற்றேரியாரவர்கள் இவ்விடம்வரையும் வந்து தங்களனைவரையும் சந்தித்ததற்காக அத்தியந்த வந்தனஞ்செலுத்தினதுமல்லாமல், அவர்களும் அவர்கள் மூத்த புதல்வரும் தாங்கள் நினைத்த காரியத்தை முடித்துச் சிந்தாயாத்திரைசெய்து சுகமே வீடுபோய்ச் சேரவும் விரும்புகிறோமென்று, சபையாருடைய நாமத்தினால் அறிவித்தார்கள். பின்பு கூடிவந்த ஜனங்கள் அத்தியக்ஷரவர்களோ

டேயும் செக்ரற்றேரியவர்களோடேயும் சேகரத்திற்குரிய பொதுவான காரியங்களைக்குறித்துச் சம்பாஷித்தபின்பு கூட்டம் கலைந்தது.

சாயந்தரத்தில் போர்டிங் பெண்பிள்ளைகள் செக்ரற்றேரி ஐயரவர்களைக் கண்டுகொண்டார்கள். பின்பு தகப்பனும் மகனும் ஆண்பள்ளிக்கூடத்திற்கு வந்தார்கள். வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானமான ஏற்ற வார்த்தைகளைப் பையன்களுக்கு ஐயரவர்கள் சொன்னதுமல்லாமல், உய்கிரம் துரையும் சில நற்போதகங்களைத் திருஷ்டாந்தங்களுடனே பேசி இளமையில் இயேசுவைச் சிநேகிக்க வென்றார். பின்பு செக்ரற்றேரியாரவர்கள் தங்கள் அம்மாளவர்களுடைய படத்தையும், அவர்கள் அருமைப்பிள்ளைகளுடைய முகப்படங்களையும் பள்ளிப்பிள்ளைகளுக்கும் உபாத்திமார்களுக்கும் காண்பித்து,

உவப்பத்தலைக்கூடி யுள்ளப்பிரித
லனைத்தே புலவர்தொழில்,

என்ற குறளுரைப்படி அவர்களை வழியனுப்பிக்கொண்டார்கள்.

சாயந்தரம் ஐந்துமணிக்கு கனம் உய்கிரம் ஐயரவர்கள் கனம் தோமாஸ் மிசியம்மாளவர்களுடனே ஊரைப்பார்க்கப் போயினர். அச்சமயத்தில் இரண்டொரு வீடுகளுக்கும்போய் அங்கிலேயருடைய வீடுகளுக்கும் சுதேசிகளுடைய தொட்டிக்கட்டு வீடுகளுக்குமுரிய பேதாபேதங்களைச் சுட்டிப்பேசினார்கள். அவர்கள் ஊருக்குள்போகுமுன் அநேகநாளாய் ஆசித்த ஒரு காரியம் நடந்தது. என்னவெனில், ஆலயத்துப் பிரதான தெருச்சந்தியில் ஓர் தீபஸ்தம்பம் வைக்கவேண்டுமென்று ஜனங்கள் நினைத்து அவ்வாறே ஓர் பெரிய விளக்கும் வாங்கி, அத்தியக்ஷரவர்கள் வந்தபின் அத்தீபத்தை ஏற்றவேண்டுமென்று ஆயத்தமாக வைத்திருந்தார்கள். அத்தியக்ஷரவர்களும் அவ்விளக்கு வைக்கப்படும் இடத்திற்கு வந்து அதை ஏற்றும்படி கனம் உய்கிரம் ஐயரவர்களையே கேட்டுக்கொண்டார்கள். அப்படியே இவர்கள் சற்றூண்மீது அத்தீபக்கூண்டை வைத்து அதற்கு "உய்கிரம் விளக்கு" என நாமகரணமிட்டு, இதனால் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் என்றும் மெஞ்ஞானபுரத்தை நினைத்துக்கொள்ளக்கூடும் என்றும் இதை இங்கே ஏற்றும்படி விரும்பினவர்கள் இதைப் பார்க்கும்போதெல்லாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளக் கவலைப்படவும், சூழ இருக்கிற ஜனங்களுக்கு விளக்கைப்போல பிரகாசிக்கவும் பிரயாசப்படவேண்டுமென்று புத்திசொல்லிக் கீழே இறங்கினார்கள். உடனே அங்குநின்றவர்கள் யாவரும் 'சந்தோஷமாய்' ஆர்ப்பரித்தார்கள்.

கொஞ்சநேரம் சென்றபிறகு மாலைஆராதனைக்கு மணிச்சத்தம் கேட்டது. மழை தாரைதாரையாய்ப் பெய்தும் அதை ஒருபொருட்டாக எண்ணாமல் ஜனங்கள் கோவில்நிறையக் கூடினார்கள். ஆராதனை ஜெபங்கள் வாசிக்கப்பட்டது. கனம் உய்கிரம் ஐயரவர்கள் "விசுவாசத்தின் கிரியை, அன்பின் பிரயாசம், நம்பிக்கையின் பொறுமை" இவைகளைக்குறித்து (1 தெச. 1: 2) மிகத்தெளிவோடும் அன்போடும் பிரசங்கித்தது கேட்பவர் மனதில் பதியத்தக்கதாக தமிழ்ப்படுத்திச் சொல்லப்பட்டது. பிரசங்கம் முடியவே மகாகனம்பொருந்திய அத்தியக்ஷரவர்கள் தேவாசீர்வாதம் கூற, சபையார் அன்று தேவன் தங்களுக்கு அருளிய கிருபைக்காக அவரை மகிமைப்படுத்தி, தத்தம் வீடுகளுக்குத் திரும்பினார்கள். அத்தியக்ஷரவர்களும் செக்ரற்றேரியாரவர்களும் அவர்கள் குமாரரும் இராத்திரி பத்துமணிக்கு சில நிமிஷங்களுக்குமுன் பிரயாணப்பட்டு மறுநாள் காலையில் மணிக்குப் பாளையங்கோட்டைக்கு வந்துசேர்ந்தார்கள். சனிக்கிழமை



அன்றுபகலில் பாளையங்கோட்டையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கல்விச்சாலைகளைச் சந்தித்து, வாலிபருக்கு ஏற்ற புத்திமதிகள் சொன்னார்கள். 8உ யாகிய திங்கள்காலையில் $7\frac{1}{2}$ மணிக்கு ஆலயத்தில் நடத்தப்பட்ட விசேஷித்த ஆராதனையில் செக்ரற்றேரியாரவர்கள் 1 யோவா. 4: 16ல் அன்பின் மாட்சிமையையும், அதைப்பற்றி கிறிஸ்தவர்களின் கடமைகளையும் வெகு தெளிவாய், உள்ளக்கனிவோடு பிரசங்கித்தார்கள். திங்கள்கிழமை பகலில் திருநெல்வேலி C. M. S. காலேஜிக்குப்போய் அவ்விடத்தில் கலாப்பியாசம் செய்யப்படுவதைப் பார்த்துக்கொண்டு 9உ சாயந்தரம் 4 மணிக்கு செக்ரற்றேரியாரவர்கள், தம் குமாரர் சகிதம் திருவனந்தபுரத்துக்குப் புறப்பட்டார்கள்.

அவர்கள் போகிற இடமெங்கும் கர்த்தர் கூட இருப்பாராக. அவர்கள் சந்திக்கும் சபைதோறும் அவருடைய ஆவியானவரும் இருப்பாராக.

---

## THE SECOND COMING OF CHRIST.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

(தொடர்ச்சி.)

### XII, XIII. நூற்றாண்டுகள்.

1179, 1270ல் லியோன் பட்டணத்தானாகிய பேதுரு, வால்டோ என்பவர், மூன்றும் அலெக்சந்தர் என்ற பாப்புவினால் துன்பப்படுத்தப்பட்டு, ஜீவனைதப்ப ஓடிப்போகும் இடங்களில் எல்லாம் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். ஐரோப்பாக்கண்டத்தின் வடபாகங்களிலும் அலப்பிஸ் மலையின் அடிவாரத்திலிருந்த பிர்மாண்ட மலைஅடிவாரமென்று பேர் விளங்கிய சார்டினியா தேசத்து இராஜாவின் கைவசத்திலிருந்த இரஸ்தா, சூசா, ஸ்தாரு, லூசேனு, அங்கிராகினு என்ற இந்த இடங்களிலும், வால்டோ என்பவராலும் அவருடைய உபதேசத்தைக் கேட்டவர்களாலும் சுவிசேஷம் பிரபல்லியமாயிற்று.

### XIV. நூற்றாண்டு.

1390ல் ஜான் உவிக்களிவ் என்பவர் சத்தியவேதமுழுவதையும் இங்கிலீஷ் பாஷையில் திருப்பி பிரஸ்தாபம்செய்தார். அதுமுதல் உலகமெங்கும் இதுகாலம்வரைக்கும் பல பாஷைகளில் அச்சிடப்பட்டு பிரசித்தமாயிருக்கிறது.

### XV. நூற்றாண்டு.

போர்த்துக்கீஸ்க்காரர் ஆப்பிரிக்காவிலுள்ள கால்கோ ராஜ்யத்திலும் இந்தியாவிலும் சுவிசேஷ ராஜ்யத்தைப் பிரசித்தப்படுத்தினார்கள்.

### XVI. நூற்றாண்டு.

1518ல் சுவிங்கிலி என்பவர் சுவிச்சர்லாந்து தேசத்தில் சூரிச் பட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசித்தப்படுத்தினார்.

1530ல் ஜெனிவா பட்டணத்தில் வேரல் என்பவரும், பேதுரு வீரற்று என்பவரும் சுவிசேஷ ராஜ்யத்தைப் பிரபல்லியப்படுத்தினார்கள்.

1541ல் ஸ்ற்ருஸ்பர்க்கு பட்டணத்திலும் கல்வீன் என்பவர் சுவிசேஷ ராஜ்யத்தைப் பிரபல்லியப்படுத்தினார்.

1572ல் பிரான்சுதேசத்திலும் முதலாம் பிரான்சிஸ் என்ற அரசனுடைய சகோதரி, மார்கிறேற் என்பவரால் சுவிசேஷ ராஜ்யம் உறுதியாய்ப் பிரச்சித்தமாயிற்று. இந்த வருஷங்களில் சுவீடன், தென்மார்க்கு, ஹங்கேரி, இத்தாலி, ஸ்பானியா, நெதர்லாந்துமுதலான தேசங்களில் பரவியிருந்த மார்க்கபேதங்கள் நீங்கி சீர்திருத்தமாயின.

1555ல் பல இடங்களிலும் சுவிசேஷ ராஜ்யத்திற்குப் பொருந்தாத சீர்கேட்டினின்றும் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்ட துன்பங்களிலுமிருந்தும் நீங்கும்படியாக ஆகஸ்பர்க் பட்டணத்தில் சங்கம் கூடி இனி கிறிஸ்தவர்கள், பாப்புவின் கோட்பாடுகளுக்கு நீங்கினவர்கள் என்றும் கிறிஸ்தவர்கள் தங்கள் சபை ஒழுங்குகளுக்கும் தேவாராதனைகளுக்கும் ஏற்ற ஏற்பாடுகள் தாங்களே ஏற்படுத்திக்கொள்ளலாமென்றும் மார்க்கத்தின் நிமித்தம் துன்பப்படுத்துகிறவர்களுக்குத் தண்டனை வருமென்றும் சமரசசித்தாந்தம் என்ற பெயரால் ஒரு உடம்படிக்கை 1555ஆ செப்றெம்பர்மீ 25உயில் உண்டாயிற்று. இதுமுதல் மேற்காட்டிய தேசங்கள்தவிர போர்த்துக்கல், பெல்ஜியம், நார்வே, புருஷியா, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐயர்லாந்து, போலாந்து, ஜெர்மனிதேசங்களிலும் சீர்திருத்தமுண்டாயிற்று.

## XVII. நூற்றூண்டு.

இந்த நூற்றூண்டில் அமேரிக்காவிலும் அதற்கடுத்த மேல்இந்தியாவிலுள்ள காட்டு ஜனங்களுக்கும், இந்தியரின் அப்போஸ்தலன் என்று பெயர் விளங்கிய யோவான் எலியட் என்பவரால் சுவிசேஷ ராஜ்யம் பிரபல்லியமாகி அந்தப் பாஷையில் எழுத்துண்டாக்கி வேதாகமும் அச்சிட்டுப் பிரசுரஞ்செய்யப்பட்டது இதைக் கேள்விப்பட்ட இங்கிலாந்து பக்திமான்கள் சிலர் ஏற்பட்டு பல தேசங்களுக்கும் இலங்கைக்கும் போதகன்மாரை அனுப்பி சுவிசேஷ ராஜ்யத்தைப் பிரபல்லியப்படுத்தினார்கள். 1692ல் கிறிஸ்துமத கல்வி அபிவிர்த்தி சங்கம் ஏற்பட்டு, புத்தகங்களாலும் போதகராலும் சுவிசேஷ ராஜ்யத்தைப் பிரச்சித்தப்படுத்தினார்கள்.

## XVIII. நூற்றூண்டு.

1732ல் மேல்இந்தியாவுக்கு இரண்டு போதகன்மார்கள் அனுப்பப்பட்டார்கள்.

1733. கிரீன்லாந்து தீவுக்குச் சிலரும்,

1734. வடஅமேரிக்காவிலுள்ள இந்தியருக்கு சில போதகன்மாரும்,

1735. தென்அமேரிக்காவுக்கும்,

1736. தென்ஆப்பிரிக்காவுக்கும் மேல்இந்தியா தீவுகளுக்கும், லாப்லாந்து தீவுக்கும் இலங்கைக்கும் நீக்கப்பார் தீவுகளுக்கும் இந்துதேசத்திலுள்ள தரங்கன்பாடி முதலான இடங்களுக்கும் போதகன்மார் போய்ச் சுவிசேஷ ராஜ்யத்தைப் பிரச்சித்தப்படுத்தினார்கள்.

1701ல் புறதேச சுவிசேஷ பரிபாலன சங்கம் ஏற்பட்டு அவர்களால் பிரபல்லியமாகி வருகிறது.

ஜான் வெஸ்லி. இவர் 1703ல் பிறந்து 1729ல் ஆகஸ்போர்ட் பட்டணத்து சர்வகலாசாலைக்கு ஆசிரியராயிருந்து, பக்தியில் தேறி மெதோ



டிஸ்ற்று "ஒழுங்குள்ளவர்கள்" என்ற கூட்டத்திற்கு முதன்மைக்காரராகி இவரோடே சார்ச் வெஸ்லி என்ற தம்முடைய சகோதரனும் உபிற்பீலட் என்பவரும் முக்கியஸ்தராயிருந்தார்கள்.

அமேரிக்காவுக்குப்போய்ச் சுவிசேஷ ராஜ்யத்தைப் பிரபல்லியப்படுத்தி இங்கிலாந்துக்கும் வந்து வெஸ்லியன் என்ற மிசியோனையும் ஏற்படுத்தி, அவர்கள்மூலமாய்ப் பல இடங்களிலும் ராஜ்யத்தின் சுவிசேஷம் கூறப்பட்டு வருகிறது.

1792ல் Baptist Mission. } இவ்வருஷத்தில் பாப்திஸ்தர் என்ற ஒரு வகுப்பார் கீழ்இந்தியா தேசத்தில் சுவிசேஷ ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படியாக ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார்கள். இவர்களைச் சேர்ந்தவர்கள் அநேக இடங்கள் தீவுகளிலும் சுவிசேஷ ராஜ்யத்தை பிரபல்லியமாக்கியிருக்கிறார்கள்.

1795ல் லண்டன் மிசியோன் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தார் தென்சமுத்திர தீவுகளிலுள்ள காட்டு ஜனங்களுக்கும் மற்றும் உலகமெங்குமுள்ள ஜனங்களுக்கும் பிரசங்கிக்கிறார்கள்.

1796ல் ஸ்காட்சு மிசியோன் ஸ்தாபிக்கப்பட்டது.

1797ல் நெதலாண்டு மிசியோன் ஸ்தாபிக்கப்பட்டது.

1799ல் சர்ச்சுமிசியோன் சங்கம் ஏற்படுத்தப்பட்டு, ஆசியா, ஐரோப்பா, அமேரிக்கா, ஆப்பிரிக்காக் கண்டங்களிலும், சீனு, பர்மா, இந்தியா தேசங்களிலும் இலங்கை, நூசிலாந்து, மாரீஸ் மற்றும் தென்சமுத்திரம் பசிப்பிக் சமுத்திரம் ஆகிய இவைகளிலுள்ள இந்துசமுத்திர தீவுகளிலும் பிரபல்லியப்படுத்தியிருக்கிறார்கள்.

## XIX. நூற்றூண்டு.

1804ல் ஐயர்லாண்டைச்சேர்ந்த உவேல்ஸ் நாட்டில் தோமாஸ் சூார்ள்ஸ் என்ற ஒரு பக்தியுள்ள குருவானவர் 1802ல் லண்டன் பட்டணத்துக்குப்போய் ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களுக்கு வேதபுத்தகமில்லாததினாலே அச்சிட்டு பிரச்சித்தம்பண்ணும்படியாக ஒரு சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று சொன்ன நல்ல ஆலோசனை 1804ல் சித்திபெற்று ஒன்று ஏற்படுத்தி அதற்குப் பிரித்தானியா அந்நியதேச வேதாகம சங்கம் என்று பெயர்கொடுத்து ஸ்தாபித்தார்கள். உலகத்தில் 3,000 பாஷைகள் உண்டு. அவைகளில் 1200 பாஷைகள் அமேரிக்காவிலும் 278 பாஷைகள் ஆப்பிரிக்காக் கண்டத்திலும் 545 பாஷைகள் ஐரோப்பாக்கண்டத்திலும் 977 பாஷைகள் ஆசியாக்கண்டத்திலும் வழங்கிவருகிறதாம். இதில் சத்திய வேதம் சுமார் 200 பாஷைகளில் பிரச்சித்தமாயிருக்கிறது.

1800ல் சன்மார்க்கபுத்தக சங்கமென்று ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டு சுமார் ஒரு வருஷத்துக்கு ஒரு கோடி புத்தகங்கள் பிரச்சித்தமாகி இது காலம்வரை சுமார் 85 கோடி புத்தகங்கள் பிரச்சித்தமாகியிருக்கிறது. இது மூலமாகவும் சுவிசேஷ ராஜ்யம் பல இடங்களிலும் பலருக்குள்ளும் பிரபல்லியமாயிருக்கிறது.

தேவன் தம்முடைய சுவிசேஷ ராஜ்யத்தைப் பிரஸ்தாபப்படுத்தி பல மிசியோன் சங்கத்தாரை எழுப்பி அவர்களைக்கொண்டு உலகமெங்கும் தம்முடைய ராஜ்யம் பிரபல்லியமாகும்படி செய்திருக்கிறார்.

| | |
|---|---|
| 1. டேனிஷ் மிசியோன். ... ... ... | 1705ஆத்தில் |
| 2. பாப்றிஸ்து மிசியோன். .. ... | 1792. ,, |
| 3. லண்டன் மிசியோன். ... ... ... | 1795. ,, |

4. அமேரிக்கன் போர்டு மார்தே மிசியோன். ... 1810. ,,
5. ஷை மதுரை மிசியோன். ... ... 1834. ,,
6. ஷை ஸ்கடர் மிசியோன். ... ... 1836. ,,
7. சர்ச்சுமிசியோன். ... ... ... 1799. ,,
8. எஸ். பி. ஜி. மிசியோன். }
வெப்பேரி தஞ்சாவூர் மிசியோன். } ... 1701. ,,
9. வெஸ்லியன் மிசியோன். ... ... 1813. ,,
10. ஜெனரல் அல்லது பொதுபாப்பிஸ்ற் மிசியோன். 1816. ,,
11. ஸ்காட்டுலொண்டு மிசியோன். ... ... 1796. ,,
12. பிரிச்சர்ச்சு ஸ்காட்லாண்டு மிசியோன். ... 1843. ,,
13. அமேரிக்கன் பிரஸ்பிற்றேரியன் மிசியோன். 1834. ,,
14. பாசில்இவாஞ்ஜெலிக்கல் மிசியோன். ... 1815. ,,
15. அமேரிக்கன் பாபறிஸ்ற்று மிசியோன். ... 1814. ,,
16. அமேரிக்கன் பிரிபேப்றிஸ்ற்று மிசியோன். 1834. ,,
17. காஸ்நேர்ஸ் மிசியோன். ... ... ... 1836. ,,
18. லிப்சிக் லூதரன் மிசியோன். ... ... 1819. ,,
19. ஐரிஷ்பிரஸ்ப்பிற்றிரியன் மிசியோன். ... 1815. ,,
20. அமேரிகன் இவாஞ்செலிக்கல் லூதரனு மிசி. 1836. ,,
21. உவெல்ஷ், கால்வனிஸ்ற்றிக் மெதோடி }
ஸ்ற்று மிசியோன். } ... 1840. ,,
22. ஆர்க்காட்டு மிசியோன். ... ... 1851. ,,
23. மொரோவியன் மிசியோன். ... ... 1855. ,,
24. சீல்கோட் மிசியோன். ... ... ... 1858. ,,
25. அமேரிக்கன் மெதோடிஸ்ற்று மிசியோன். 1819. ,,
26. கல்விஅபிவிருத்தி மிசியோன். ... ... 1858. ,,
27. இராஜபுத்ரூன் மிசியோன். ... ... 1860. ,,
28. டேனிஷ்இவாஞ்செலிக்கல் லூதரன் மிசியோன். 1826. ,,
29. எர்மன்பர்க் லூதரன் மிசியோன். ... 1865. ,,
30. இந்தியன் ஓம்சந்தால் மிசியோன்.... ... 1867. ,,
31. ஜேர்மன் இவாஞ்செலிக்கல் மிசியோன். ... 1866. ,,
32. கோதாவரி டெல்ற்று மிசியோன்.... ... 1838. ,,
33. ஸ்றிறிக்ற்று பாப்றிஸ்ற்று மிசியோன். ... 1860. ,,
34. அலஸரம் சுரச்சார் மிசியோன். ... ... 1868. ,,
35. கன்னடியன் பாப்ற்றிஸ்ற்று மிசியோன். ... 1868. ,,
36. சியோனே மிசியோன். ... ... ... 1871. ,,
37. எலிச்சபூர் மிசியோன். ... ... ... 1872. ,,
38. கோபால்க்வச் மிசியோன். ... ... 1874. ,,
39. பெத்தேல் மிசியோன். ... ... ... 1844. ,,

MH6



161281

## சமாசாரத்திரட்டு.

அரசிறைக் கம்மிட்டியார் இப்பொழுது செய்திருக்கிற செட்டுமான ஏற்பாடுகளினால் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு வருஷத்தில் 5 அல்லது 6 கோடி ரூபாய் லாபமுண்டாகுமென எண்ணப்படுகிறது.

டில்லியில் ஓர் கலகம்.—அதில் ஒரு துலுக்கன் கொல்லப்பட்டான். பதினாறு பெயர்கள் காயப்பட்டார்கள். 12 பெயர் நன்றாய்ப் புடையலுண் டார்கள். இப்பொழுதுதான் ஷாப்புகளெல்லாம் திறக்கப்பட்டன. ஊரொ ங்கும் சமாதானப்பட்டது. சென்ற மாசம் 12௳ ஒரு மீட்டிங்கு நடந்தது. துலுக்கரை அடக்கும்பொருட்டே. அந்தக் கலகத்தில் நேர்ந்த நஷ்டம் மூன்று லட்சத்துக்கு கவர்ன்மெண்டார்பேரில் பிராதுசெய்யப்படுமாம். இந்துக்கள் டிப்டி கமிஷனருக்கு துலுக்கர்கள் செய்த கொடுமையை அறி வித்தும் கேளாமலிருக்க அதைப்பற்றி கவர்ன்மெண்டாருக்கு அநேக தந்தியடித்ததும் பதிலில்லை.

சென்ற அக்டோபர்௴ 17௳ விடியற்காலம் 5 மணிக்குக் குற்றால நாதர் தரிசனத்துக்காகச் செங்கோட்டையிலிருந்து 10 ஸ்திரீகள் போகும் போது மேற்படி ஊரிலிருந்து 3 மயிலுக்குச் சமீபத்தில் 6 திருடர்கள் வந்து விதவைஸ்திரீகளை நையப்புடைத்து ஷை மங்கிலிகளிடத்திலிருந்த சுமார் தொகை 500 ரூ பெறுமான நகைகளைப் பிடுங்கிக்கொண்டு எல்லா ளையும் ஒன்றுபோல தாலிகளை அறுத்துவிட்டான். ஸ்திரீகளுக்குத் தங்கள் நாயகரைத்தவிர வேறு தெய்வம் இல்லையென்ற எண்ணத்தைவிட்டுப் புரு ஷன்கூடப் போகத்துணியாத நேரத்திற் புறப்பட்டதின் பலனைப் பாருங் கள். புருஷர்கள் இருக்கும்போதே அவர்களுக்குப்பின் அறுக்கவேண் டிய தாலிகளை அறுத்துவிட்டார்கள். அதில் உத்தேசம் 1,000 ரூ ஆபர ணங்கள் போட்டுக்கொண்டிருந்த ஒரு ஸ்திரீ மாத்திரம் விதவை வேஷம் போட்டுக்கொண்டு தப்பினாள்.

விதவை விவாகம்.— திருநெல்வேலி ஜில்லா வண்ணார்பேட்டை யில் ஒரு புனர்விவாகம் நடந்ததாகக் கேள்விப்படுகிறோம். மணமகளுக்கு வயசு 12. மாப்பிள்ளைக்கு முதல்தாரம் சீவித்துப்போனதாகத் தெரியவரு கிறது. இருதிறத்தாருக்கும் செல்வம் உண்டென்றும் கேள்வி.

லூயி நெபோலியன்.—சென்னைக்கு இவ்வருஷம் முதலில் வந்து கவர்னருடைய விருந்தினராயிருந்த லூயிநெப்போலியன் என்னும் பிரா ன்சு அரசகுமாரன் சீனாவுக்குப்போய் அங்கிருந்து சென்ற பிரான்சிஸ் கோ என்னும் இடத்துக்குப்போயிருக்கிறதாக அறிகிறோம்.

ஒரு விநோத மணம்.— நூரம்பர்க் என்னுமிடத்திலே புகழ்பெற்ற சித்திரவேலைக்காரனான இரண்டு கைகளும் அற்ற பிராலின் ஆஸ்மான் என் பவனுக்கும், அவனையொத்த அங்கவீனமுள்ள ஹார் ஆஸ்சில்டு என்னும் மாதுக்கும் சிலநாட்களுக்குமுன் விவாகம் நடந்ததாம். விவாகவுடன் படிக்கையில் மணமகள் தன் பாதங்களினாற் கையொப்பஞ்செய்தனளாம். விவாகத்திலே அவனுக்கு வலதுபாதத்தின் நாலாவது விரலிலே மோதிரம் அணியப்பட்டதாம். நல்ல வேடிக்கை.

(தி.—னி. 1886௵ நவம்பர்௴ 20௳.)

## டிசம்பர்ஸ்ரீ நாள்-31. கார்த்திகைஸ்ரீ 17உ முதல், மார்கழிஸ்ரீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
| --- | --- | --- | --- |
| பு | 1 | கஎ | இந்நாளில் இருக்கிறதுபோல நாங்கள் தப்பி மீந்திருக்கிறோம். |
| வி | 2 | கஅ | நம்முடைய தேவனோடே உடன்படிக்கை பண்ணக்கடவோம். |
| வெ | 3 | ககூ | நீர்... கற்பித்த கட்டளைகளை ...கைக்கொள்ளாதேபோனோம். (2:18 |
| ச | 4 | உ0 | என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறது. நெ. |
| ஞா | 5 | உக | பிரபுக்களோ...ஆண்டவருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தைக் |
| தி | 6 | உஉ | அவரவர் ஒரு கையினாலே வேலைசெய்து மறுகையினாலே ஆயுதம் |
| செ | 7 | உந | நீங்கள் நம்முடைய தேவனுக்குப் பயந்து நடக்கவேண்டாமா? 5:9. |
| பு | 8 | உச | எனக்குப்பயமுண்டாக்கப்பார்த்த மற்றத் தீர்க்கதரிசிகளையும் நினை |
| வி | 9 | உரு | காவலாளர் அவரவர் தங்கள் காவலிலே... நிறுத்தப்படவேண்டும். |
| வெ | 10 | உசு | நியாயப்பிரமாணப் புஸ்தகத்துக்குக் கவனமாய்ச் செவிகொடுத்தார் |
| ச | 11 | உஎ | உம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றினீர்; நீர் நீதியுள்ளவர். |
| ஞா | 12 | உஅ | எங்கள் தேவனுடைய ஆலயத்தைப் பராமரியாமல் விடுவதில்லை. |
| தி | 13 | உகூ | எருசலேமிலே குடியிருக்க...சம்மதித்த மனுஷர்களை...வாழ்த்தி |
| செ | 14 | க | எருசலேமின் களிப்பு தூரத்திலே கேட்கப்பட்டது 12: 43. (13: 31. |
| பு | 15 | உ | என் தேவனே, எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும் |
| வி | 16 | ந | அவன்...தன்னுடைய பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் விருந |
| வெ | 17 | ச | இரண்டு பிரதானிகள்...ஆகாஸ்வேருவின்மேல் கைபோட வகை |
| ச | 18 | ரு | ராஜாவின் ஊழியக்காரர்...ஆமானை வணங்கி நமஸ்கரித்துவந்தா |
| ஞா | 19 | சு | (மொர்தெகாய்)...தன் ஜனங்களுக்காக...மன்றாடச் சொன்னான். |
| தி | 20 | எ | எஸ்தர் ராஜாத்தியே...ராச்சியத்தில் பாதிமட்டும் கேட்டாலும் |
| செ | 21 | அ | அவன் யூதகுலமானால் நீர்...அவனுக்கு முன்பாகத் தாழ்ந்துபோவ |
| பு | 22 | கூ | என் வேண்டுதலுக்கு என் ஜீவனும் என் மன்றாட்டுக்கு என் ஜன |
| வி | 23 | க0 | சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருந்தது. 8: 15: (ங்களும். 7. |
| வெ | 24 | கக | மொர்தெக்காய்...மென்மேலும் பெரியவனானான். 9: 4. (யிருந்தான் |
| ச | 25 | கஉ | தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசுகிறவனுமா |
| ஞா | 26 | கந | யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான். யோபு |
| தி | 27 | கச | யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை 2:10. (1:1. |
| செ | 28 | கரு | துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஒய்ந்திருக்கிறது 3:17. |
| பு | 29 | கசு | மனுஷன் தேவனைப்பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ? 4:17. |
| வி | 30 | கஎ | ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார். 5:19. |
| வெ | .31 | கஅ | என் முடிவு எப்படிப்பட்டது? 6:11. |

## விசேஷ நாட்கள்.

5. அட்வெந்து நாட்களில் 2—ம் ஞாயிறு.
11. பௌரணமி.
12. அட்வெந்து நாட்களில் 3—ம் ஞாயிறு.
19. அட்வெந்து நாட்களில் 4—ம் ஞாயிறு.
21. பரி. அப். தோமாவின் திருநாள்.
25. கிறிஸ்து ஜனன திருநாளாகிய கிறிஸ்மஸ் பண்டிகை.
 ,, அமாவாசை.
26 கிறிஸ்து ஜனன திருநாளுக்குப் பின்வரும் 1—ம் ஞாயிறு.
 பரி. ஸ்தேவான் ரத்தச்சாட்சி திருநாள்.
27. பரி. அப். யோவான் சுவிசேஷகன் திருநாள்.
28. குற்றமில்லாப் பாலகர் திருநாள்.